# KŌLĀCALA STALAPURĀṆAM

WITH COMMENTARY

CRITICALLY EDITED WITH INTRODUCTION

BY

Dr. M. A. DURAIRANGASWAMY, M.A., M.O.L., Ph.D.,

*Senior Lecturer in Tamil, University of Madras.*

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY

MADRAS

1956

Price: Rs. 4-12-0

# கோலாசல ஸ்தலபுராணம்

## பொருளடக்கம்


| அத்தியாய எண் | | பக்கம் |
|---|---|---|
| | பொதுப் பதிப்பாசிரியர் நூன்முகம் ... | i |
| | பதிப்பாசிரியர் முகவுரை ... | xi |
| | காப்பு ... | 1 |
| | வாழ்த்து ... | 1 |
| | நூற்பயன் ... | 2 |
| | கடவுள் வாழ்த்து ... | 3 |
| | அவையடக்கம் ... | 6 |
| | முதனூல் வழிநூல் செய்த காரணம் ... | 7 |
| | புராண சங்கிரகமணி ... | 7 |
| 1. | நைமிசாரணிய வத்தியாயம் ... | 10 |
| 2. | வராகக்ஷேத்திர வத்தியாயம் ... | 16 |
| 3. | மூர்த்திவிசேஷ முரைத்த வத்தியாயம் ... | 23 |
| 4. | இந்திர னரசாட்சி ... | 31 |
| 5. | இந்திர னுக்கு நாரத னுபதேசித்த வத்தியாயம் ... | 45 |
| 6. | சோமுக னுற்பத்தி யத்தியாயம் ... | 58 |
| 7. | எக்கிய வராகத் திருவவதார வத்தியாயம் ... | 70 |
| 8. | சேனாதிபதிகள் யுத்த வத்தியாயம் ... | 90 |
| 9. | சோமுகன் சமர் புரிந்த வத்தியாயம் ... | 97 |
| 10. | வராகநதி யுற்பத்தி யுரைத்த வத்தியாயம் ... | 106 |
| 11. | சோமுகன் சரணாகதி யடைந்த வத்தியாயம் ... | 112 |
| 12. | சம்பரன் சரணாகதி யடைந்த வத்தியாயம் ... | 121 |
| 13. | மார்க்கண்டேயர் சரணாகதி யடைந்த வத்தியாயம் ... | 133 |
| 14. | விச்வ சொரூப வத்தியாயம் ... | 143 |
| 15. | சிங்கவர்த்தனன் யுத்த முரைத்த வத்தியாயம் ... | 151 |
| 16. | சுப்பிரமணியர் சரணாகதி யடைந்த வத்தியாயம் ... | 161 |
| 17. | கோலாசல வரலா றுரைத்த வத்தியாயம் ... | 167 |
| 18. | சம்பீர விருட்ச வரலா றுரைத்த வத்தியாயம் ... | 176 |

பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 19. | வடவரையைத் தணந் திந்திரன் மீண்ட வத்தியாயம் | ... | 184 |
| 20. | இந்திரன் நாடு கண்ணுற்ற வத்தியாயம் | ... | 193 |
| 21. | இந்திரன் நகர் கண்ணுற்ற வத்தியாயம் | ... | 200 |
| 22. | இந்திரன் சரணுகதி யடைந்த வத்தியாயம் | ... | 214 |
| 23. | நாரதர் காலநேமியைக் கண்ணுற்ற வத்தியாயம் | ... | 223 |
| 24. | காலநேமி சமர் குறித்த வத்தியாயம் | ... | 234 |
| 25. | சயந்தன் சமர் புரிந்த வத்தியாயம் | ... | 247 |
| 26. | இந்திர னமர் புரிந்த வத்தியாயம் | ... | 253 |
| 27. | அரங்கநாயகர் மந்திரத் தலைவர் யுத்த வத்தியாயம் | ... | 260 |
| 28. | காலநேமி சமர் புரிந்த வத்தியாயம் | ... | 279 |
| 29. | துர்க்கை வரலாறுரைத்த வத்தியாயம் | ... | 286 |
| 30. | காலநேமி வதை யத்தியாயம் | ... | 293 |
| 31. | தீர்த்த விசேட முரைத்த வத்தியாயம் | ... | 312 |
| 32. | திருக்கலியாண தீர்த்த வத்தியாயம் | ... | 327 |
| 33. | திருக்கலியாண வத்தியாயம் | ... | 342 |
| | செய்யுள் முதற் குறிப் பகராதி | ... | 367 |

# INTRODUCTION

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in defferent languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May 1948. Important Manuscripts' Libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts' Library, Madras, were carefully examined and a tentaive selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-10, Education, dated 4th April 1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts' Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following were the members of the Committee:—

1. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L.
2. ,, R. P. Sethu Pillai, B.A., B.L.
3. ,, C. M. Ramachandran Chettiar, B.A., B.L.
4. ,, R. Krishnamoorthy (Kalki).
5. Dr. N. Venkataramanayya, M.A., Ph. D.
6. Sri M. Ramanuja Rao Naidu, M.A.
7. ,, V. Prabhakara Sastri.
8. ,, N. Venkata Rao, M.A.
9. ,, H. Sesha Ayyangar.
10. ,, Masti Venkatesa Ayyangar.
11. ,, M. Mariappa Bhat, M.A., L.T.
12. Dr. C. Achyuta Menon, B.A., Ph. D.
13. ,, C. Kunhan Raja, M.A., D. Phil.
14. ,, A. Sankaran, M.A., Ph. D., L.T.
15. Sri Polakam Rama Sastri.
16. ,, S. K. Ramanatha Sastri.
17. Dr. M. Abdul Huq, M.A., D. Phil. (Oxon.)
18. Sri Afzul-ul-Ulama Hakim Khader Ahamed.
19. ,, P. D. Joshi.
20. ,, S. Gopalan, B.A., B.L.
21. ,, T. Chandrasekharan, M.A. L.T., Curator.

**With the exception of Sri Masti Venkatesa Ayyangar, and Dr. C. Kuhan Rajah, the above members continued to be members of the Expert Committee for 1950-51 also to which the following gentlemen were added in Government Memos. No. 7297-E/50-3, Education dated 19th May 1950, and 15875-E/50-4, Education, dated 7th September 1950:—**

1. Dr. A. Chidambaranatha Chettiar, M.A. Ph. D.
2. Sri S. Govindarajulu, B.A., B.L., LL.B., Bar-at-Law.
3. Capt. G. Srinivasamoorthy, B.A., B.L., M.B. & C.M.
4. Dr. Muhammad Hussain Nainar, M.A., Ph. D.
5. Sri T. V. Subba Rao, B.A. B.L.
6. Principal, College of Indigenous Medicine, Madras.

In Government Memorandum No. 18947-E/52-2, Education, dated 7th August 1952, a few changes were made in the personnel of the Expert Committee.

The names of the following members were deleted:—

1. Sri V. Prabhakara Sastri.
2. ,, C. Achyuta Menon.
3. ,, M. Abdul Huq.

The following gentlemen were included as members of the Expert Committee:—

1. Sri M. Somasekhara Sarma.
2. Dr. V. Raghavan, M.A., Ph. D.
3. ,, R. Nagaraja Sarma, M.A., Ph. D.
4. ,, S. Krishnan Nayar, M.A., Ph. D.
5. Prof. S. A. Bukhari, M.A.

**In G. O. Ms. No. 1819 Edn., dated 8-11-1955, the Government reconstituted the Expert Committee with the following members:—**

SANSKRIT

1. **Dr. A. Sankaran, M.A., Ph. D., L.T.**
2. **Sri P. S. Rama Sastri.**
3. **Dr. V. Raghavan, M.A., Ph. D.**
4. **,, R. Nagaraja Sarma, M.A., Ph. D., L.T.**
5. **Sri K. Balasubramania Iyer, B.A., B.L., M.L.C.**

TAMIL

6. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L., M.L.C.
7. „ R. P. Sethu Pillai, B.A., B.L.
8. „ C. M. Ramachandran Chettiar, B.A., B.L.
9. „ T. P. Meenakshi Sundaram Pillai, M.A., M.O.L.
10. Dr. A. Chidambaranatha Chettiar, M.A., Ph.D.
11. Sri N. T. Viswanathan, B.A., B.L.

KANNADA

12. Captain G. Srinivasamurthi, B.A., B.L., M.B. & C.M.
13. Sri M. Mariappa Bhat, M.A., L.T.
14. „ H. Sesha Iyengar.

MALAYALAM

15. Dr. S. Krishnan Nayar, M.A., Ph. D.

MARATHI

16. Sri P. D. Joshi.

ISLAMIC LANGUAGES

17. Professor S. A. W. Bukhari Sahib, M.A., L.T.
18. Dr. Mohammed Abdul Huq, M.A., D. Phil (Oxon).
19. Sri S. M. Fazlullah, MA., L.T.

OTHERS

20. Sri S. K. Ramanatha Sastri, Sanskrit & Malayalam.
21. „ T. V. Subba Rao, B.A., B.L., Music in all languages.
22. The Principal, College of Indigenous Medicince, Madras-10. medicine in all languages.
23. Sri S. Gopalan, B.A., B.L. Sanskrit, Tamil and Telugu.
24. „ T. Chandrasekharan, M.A., L.T., In all languages (Secretary of all the Committees).

The members of the Committee met at Madras and at Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government and they decided to call these publications as the ‘ MADRAS GOVERNMENT ORIENTAL SERIES ” and appointed the Curator, Government Oriental Manuscripts Library Madras, as the General Editor of the publications under this series.

The following manuscripts were taken up for publication till now:—

## "A" FORM THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

### TAMIL

1. Kappal Sāttiram.
2. Anubhava Vaiddiya Muṛai. Vols. I and II.
3. Āttānakōlāhalam.
4. Upadēśa Kāṇḍam.
5. Cōlan Pūrva Paṭṭayam.
6. Sivajnāna Dīpam.
7. Daṭcanāyanār Vaiddiya Aṭṭavaṇai.
8. Vaiddiya-k-Kaḷanciyam.
9. Anubhava Vaiddiya Muṛai, Vol. III.
10. Saptariṣināḍi. Vol. I, Mēṣa Lagna.
11. Karnāṭakarajākkaḷ Savistāra Carittiram.
12. Bharata Siddāntam.
13. Piḷḷai-p-piṇivākaṭam Vol. I.
14. Anubhava Vaiddiyamuṛai Vol. IV.
15. Māṭṭuvākaṭam.
16. Saptariṣināḍi. Vol. II—Viruṣabha Lagna.
17. Temple Inscriptions of South India. Vol. I.
18. Saptariṣināḍi. Vol. III, Mithuna Lagna.
19. Temple Inscriptions of South India. Vol. II.
20. Piḷḷai-p-piṇi vākaṭam (on infantile Disease) Vol. II.
21. Saptariṣināḍi. Vol. IV. Kaṭaka Lagna.
22. Pērūr-k-Kōvai.
23. Siddhāntaviḷakkam.
24. Sāmudrikālakṣaṇam.
25. Ānandaranga-k-Kōvai.
26. South Indian Temple Inscriptions, Vol. III, Part I.
27. Saptariṣināḍi, Vol. V (Simha Lagna).
28. Māghasnānapurāṇa Ammānai.
29. Kōlācala Stala Purāṇam.
30. Dina Kavitai.
31. South Indian Temple Inscriptions Vol. III. Part II.

## SANSKRIT

1. Viṣṇunārāyaṇīyam (Tantrasārasangraha).
2. Bhārgava Nāḍikā.
3. Hariharacaturangam.
4. Brahmasūtravṛtti—Mitākṣarā.
5. Nyāyasiddhānta Tattvāmṛtam.
6. Ārogyacintāmaṇi.
7. Tattvasāra with Ratnasāriṇī.
8. Sūtrārthāmṛta Laharī.
9. (a) Ratnadīpikā.
   (b) Ratnaśāstra.
10. Devakeraḷam-Candrakalā Nāḍi, Vol. I.
11. Pātanjala Yogasūtra Bhāṣya Vivaraṇa by Srī Sankarācārya.
12. Nyāyaratnam with the commentary Dyutimālikā.
13. Cikitsātilakam.
14. Nṛttaratnāvali.
15. Daivajnābharaṇa.
16. Ābhoga—Kalpatāru-Vyākhyā.
17. Aumāpatam.
18. Mahābhāskarīyam.
19. Devakeraḷam—Chandrakalā Nāḍi, Vol. II.
20. Nayadyumaṇi.
21. Bhāvabodha—Tattvaprakaśikā-Vyākhyā.

## TELUGU

1. Auṣadhayōgamulu.
2. Vaidyanighaṇṭuvu.
3. Dhanurvidyāvilāsamu.
4. Yogadarśanaviṣayamu.
5. Khaḍgalakṣaṇaśirōmaṇi.
6. Saivācārasangrahamu.
7. Anubhavavaidyamu.
8. Abhinayadarpaṇamu.
9. Brahmavidyāsudhārṇavamu.
10. Rāgatāḷacintāmaṇi.

11. Vaidyacintāmaṇi.
12. Kumārarāmunikathā.
13. Kāṭamarājukathā.
14. Sārīramu.
15. Bharataśārasangraha.
16. Bobbiliyuddhakathā.
17. Haidarcaritramu.
18. Āryabhaṭīya Siddhāntam.

MALAYĀLAM

1. Garbha Ciktisā.
2. (a) Vāstulakṣaṇam.
   (b) Silpaviṣayam.
3. Mahāsāram.
4. Kaṇakkusāram.
5. Kriyākramam.
6. Kaṇakkusāram (Bālaprabōdham).
7. Asvacikitsā.
8. Phalasārasamuccaya.
9. Kiḷivaṇḍusaṁvādam.
10. Advaita Vēdāntam.
11. Bārhaspatyasūtra with Malayāḷam commentary.
12. Karaṇapaddhati.
13. Vidyāmādhavīyam.
14. Sarvasādhāraṇa Cikitsā.
15. Viṣacikītsā and Viṣappāṭṭusāram.
16. Jnānapīyūṣam.
17. Vetāḷapancaviṁśati.
18. Yudhiṣṭhiravijayam.
19. Kathakaḷimanjari.
20. Vaidyagrantham.

KANNADA.

1. Lōkōpakāram.
2. Raṭṭamatam.
3. Aśvaśāstram.

4. Vividhavaidyaviṣayagalu.
5. Saṅgītaratnākara.
6. Sūpaśāstra.
7. Vaidyasārasangraham, Vol. I.
8. Sadgururahasyam.
9. Vaidyasārasangraham, Vol. II.
10. Manmathavijayam.
11. Abhidhānaratnamālā.
12. Vyavahāragaṇitam.
13. Jīvasambōdane.
14. Kāmandakanītisāra.

## ISLAMIC LANGUAGES:

### PERSIAN

1. Jami-Al-Ashya.
2. Tibb-E. Faridi.
3. Tahqiq-Al-Buhran.
4. Safinat-Al-Najat.
5. Baharistan-i-Sukhan.
6. Nuskha-E-Shajahani.
7. Tufa-E. Khani.
8. Ruqa'at-e-Walajahi.

### ARABIC

1. Shawakil-Ul-Hur.

## "B" FORM THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY, TANJORE.

### TAMIL

1. Sarabhēndra Vaiddiya Murai (Diabetes).
2. do. (Eyes).
3. do. (Anaemia).
4. do. (Svāsakāsam).
5. Agastiyar 2000.
6. Konkaṇarśarakku Vaippu.
7. Tirucciṛṛambalakkōvaiyar with Padavurai.

8. Tāḷasamudram.
9. Bharatanāṭyam.
10. (a) Pāṇḍikēḷi Vilāsa Nāṭakam.
    (b) Purūrava Cakravarti Nāṭākam.
    (c) Madana Sundara Vilāsa Nāṭakam.
11. Percy Macqueen's Collection of Folklore in the Madras University Library.
12. Ramaiyan Ammānai.

TELUGU

1. Kāmandakanītisāramu.
2. Tāladaśāprāṇapradīpikā.
3. Raghunātha Nāyakābhyudayamu.
4. Rājagōpāla Vilāsamu.
5. Rāmāyaṇamu by Kaṭṭa Varadarāju.

MAHRĀTHI

1. Nātyaśastra Sangraha.
2. (a) Book of Knowledge.
   (b) Folk Songs.
   (c) Dora Dārun Vēṇi Paddhati.
   (d) Aśvāsa Caṭula Dumāṇi.
3. (a) Pratāpasimhendra Vijaya Prabandha.
   (b) Sarabhendra Tīrthāvali.
   (c) Lāvaṇi.
4. Devendra Kuravanji.
5. Bhakta Vilāsa.
6. Sloka Baddha Rāmāyaṇa.

SANSKRIT

1. Aśvaśāstra with Tricolour Illustrations.
2. Rājamṛgānka.
3. Ānandakandam.
4. Āyurvedamahodadhi.
5. Gīta Govinda Abhinaya.
6. (a) Colacampū.
   (b) Sahendra Vilāsa.

7. Dharmākūtam-Sundra Kāṇḍa.
8. Jātakasāra.
9. Viṣṇutattvanirṇaya Vyākhyā.
10. Sangīta Darpaṇa.

The Government in their G.O. Ms. No. 1820, Education, dated 4th August 1952, sanctioned a grant of Rs. 9,000 to the Dr. V. Swaminatha Aiyar's Tamil Library, Adyar, towards the publication of the following manuscripts as part of the "Madras Government Oriental Series":—

1. Tiruvācaka Vyākhyānam.
2. Mahābhārata Cūḍāmaṇi.

It is hoped that the pubication of most of the important manuscripts will be completed within the next few years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The editors have, however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets. When different readings are found, they have been given in the foot-notes except in the case of a few books in which the correct readings have been given in the foot-note or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the Press. The various Presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

The present edition Kōlācala Stalapurāṇam is based on a single Palm-leaf manuscript Preserved in the Government Oriental Manuscripts Library, Madras and described under No. 84 of the Triennial Catalogue of Tamil Manuscripts Vol. I.

The size of the Volume is $14\frac{5}{8} \times 1\frac{3}{8}$ inches, Foll 397. lines: 7—9 on a Page: condition fair. There is a Restored copy of the manuscript described under R. No. 1537.

This work deals with the greatness and sanctity of the shrine dedicated to Lord Ranganātha at Kōlācala near Gingee. This work is said to be a Tamil rendering of Adhyāyas 101—132 of the Samskrit Lingapurāṇa.

This manuscript was puchased in 1911—12 from Sri Arunachala Aiyar of Mylapore, Madras.

Madras,
2nd February 1956.

T. CHANDRASEKHARAN,
*General Editor,*
*Madras Govt., Oriental Series.*

# முகவுரை

**கோலாசல ஸ்தலபுராணம்** என்னும் இந் நூல், திருமாலின் பெருமையை விரிவாய் உணர்த்துகின்றது. திருவரங்க நாயகியாரோடு திருவரங்க நாயகர் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் தலமே கோலாசல ஸ்தலமாகும். "இத் தலம் காசியைவிட மிகச் சிறந்தது. இத் தலத்திற்குச் சென்று திருவரங்க நாயகியாரையும் திருவரங்க நாயகரையும் அன்புடன் வழிபடுவோர், இம்மையில் மெய்யறிவாம் செல்வமும், அதனால் புகழும், அரசு திருவும் எய்துவர்; மறுமையில் பரமபதத்தில் நித்திய சூரியராய் வாழ்வர்; என்றும் இடையறாத இன்பம் துய்த்திருப்பர்:" இதனை,

"வாரணவா சியையடைந்து வதிந்திடுவோர்க் கதிகமிந்த
வண்மை யான
தாரணியோர் புகழ்பெறுகோ லாசலமாந் தலமதனைச்
சார்ந்த பேர்கள்
பூரணஞா னச்செல்வப் புகழுடைந்து பூபதியாய்ப்
பொருந்தி என்றும்
நாரணனூர் பதமடைந்து நித்தியசூ ரியராகி
நயந்து வாழ்வார்" (பாடல் 13)

என இப் புராண ஆசிரியர் உணர்த்துவது காண்க.

புராணங்களுக்கு இயல்பான மரபில், இப் புராணமும் தேவேந்திரன் முதலாகிய தேவர்கள் அசுரர்களால் துன்பமடைவதும், பதவியிழப்பதும், கோலாசலத்தை யடைந்து திருமாலை வழிபடுவதும், திருமால் அவ்வசுரர்களை யழித்துத் தேவர்களுக்கு இழந்த பதவி முதலியன அருளித் துன்பம் போக்குவதும் முதலானவற்றைக் கூறுகின்றது.

சிவபுராணங்கள் சிவபெருமானுக்குத் தலைமை கூறி ஏனைய தேவர்களெல்லாம் அவனால் தோற்றுவிக்கப்பட்டவர்கள்என்று மொழிதல்போன்று, விஷ்ணுபுராணமாகிய இது திருமாலுக்குத் தலைமை கூறி அவனுடைய உந்திக் கமலத்திலிருந்து நான்முகன் தோன்றினன் என்றும், அவனால் சிவபெருமான் முதலிய தேவர்கள் படைக்கப்பட்டனர் என்றும் கூறுகின்றது. கடவுள் ஒருவரே யாதலால், சிவபுராணம் கூறும் சிவபெருமானும், விஷ்ணு புராணம் கூறும் திருமாலும் பெயரளவில் வேறுபோல் தோன்றினும் பொருளளவில் ஒருவரேயாவர் என்பதை இவ் விருவகைப் புராணங்களையும் விருப்பு வெறுப்பின்றி ஓதுவார் உணரலாம்.

இப் புராணத்தின் சுருக்கமான பொருளைப் புராண சங்கிரகமணியி னுலேயே தெரிந்துகொள்ளலா மாதலால், ஈண்டு அது தேவையில்லை என்று தரப்படவில்லை.

இப் புராணத்தில் வரும் பாடல்களெல்லாம் எளிய இனிய நடை யுடையன. பாடலென்றவுடனே "விளங்காதே அஃது" என்ற அச்சம் ஏற்படாதிருக்க, ஒவ்வொரு பாட்டிற்கும் உரையும் தரப்பட்டுள்ளது. பாடியவரும், உரை எழுதியவரும் ஒருவரேயான நூலாசிரியர் பெயர் அறியமுடியவில்லை. பாடிய இவரே உரையும் எழுதியிருத்தலால், பாடல் களின் முழுக்கருத்தையும் தம் உரையில் தெளிய உணர்த்தியுள்ளார். பாட்டில் அடக்கிவிடமுடியாத கருத்துக்களை உரையில் பெய்து நிறை வித்தல் இவ் வாசிரியருடைய தனித்திறனாகும்.

இவ் வாசிரியர், சமயப் பற்றுடைய பரமபாகவதராகத் திகழ்கிறார். வைணவ சமயத்தைச் சார்ந்தவரான இவர், விஷ்ணு பரத்துவம் கூறுவ தோடு, சிவபெருமானையோ மற்றத் தேவர்களையோ பற்றிக் கூறுமிடங் களில் அவரவர்கட் கியல்பான மதிப்புத் தந்திருக்கிறார். இஃது ஆசிரிய ருடைய உயர் பண்பினை விளக்குகின்றது.

இலக்கண இலக்கிய அறிவுடையவரே யன்றிச் சிறிதே அறிவுடைய எல்லோரும் நூலையும் உரையையும் படித்து நாரணன் அருளுக்கு ஆளாக வேண்டும் என்ற எண்ணங்கொண்டவர் ஆசிரியர் என்பதை இவருடைய பாடலும் உரையும் தெற்றெனக் காட்டுகின்றன. பேச்சு நடையில் சொற்களையாளுவது, பேச்சுநடையில் தொடர்களை யாளுவது, இடையீடு இல்லாமல் ஒரே கோவையாக உரை வாக்கியங்களைப் பிணைத்துக் கூறுவது, இது கருதி இலக்கண விதிகளையும் பொருட்படுத்தாதிருப்பது போன்றவை, இந் நூலும் உரையும் பாமரர்கட்கே பெரிதும் பயன்பட வேண்டும் என்று ஆசிரியர் உறுதி கொண்டமையைத் தெற்றென விளக்கும். பண்டிதராயினும் அவற்றைத் திருத்திப் பயில்வர் என்று ஆசிரியர் உறுதியாகக் கருதியிருத்தல், பாடலையும் உரையையும் நோக்கு மிடத்துத் தெளிவாகிறது. காலக்ஷேபம் செய்யும் பாகவதர்களுக்கு இந் நூல் பெரிதும் பயன்படவேண்டும் என்று ஆசிரியர் துணிந்திருக்க வேண்டும் என்பதும் விளங்குகிறது. எனவே, இவ் வாசிரியர் துணிவு மிகவுடைய புரட்சிக் கவிஞர் என்றுகூடக் கூறிவிடலாம்.

போற்றி, வெற்றி, தோற்றம், ஒப்பற்ற, அகற்றி, வீற்றிருந்தாள், காற்றுப்போன்ற சொற்கள், பேச்சுநடையில், முறையே, போத்தி, வெத்தி, தோத்தம், ஒப்பத்த, அகத்தி, வீத்திருந்தாள், காத்து எனவே ஆளப் படுதலைப் பாமரர்களே யன்றிப் பண்டிதர்களும் பேசும் பேச்சில் கேட்கிறோம்.

புகழ்ச்சியும் மகிழ்ச்சியும், முறையே புகட்சியும், மகிட்சியுமாகவே கேட்கப்படுகின்றன.

கேள்வியைக் கேள்வியாகவும், ஏத்துதலை ஏற்றுதலாகவும் கூறக் கேட்கிறோம்.

அந்தவிடம் என்ற தொடர் அந்தயிடம் என்றும், காற்று இல்லை என்ற தொடர் காற்றுயில்லை என்றும் காதில் விழுகின்றன.

தர்மத்தைத் தற்மமாகவும், பிரமாணத்தைப் பிறமாணமாகவும், பிரம்மாவைப் பிறம்மாவாகவும் பாமரர் எழுத்தில் பார்க்கிறோம். ரகர றகர வேறுபாட்டால் பொருள் வேறுபாடு, பாமரர் எழுத்து வழக்கில் இல்லை. எப்படி எழுதினாலும் எளியநடைமட்டும் இருப்பின் எழுத்து மாற்றமோ சந்திமாற்றமோ பாமரர்க்குப் பொருள் உணர்ந்துகொள்ள முட்டுப்பாடளிப்பதே கிடையாது. 'பிரமணர் சிற்றுண்டிச்சாலை'யைச் சென்னையில் யாரே அறியாதார்?

இத்தகைய பேச்சு வழக்கை ஆசிரியர் நன்கு கடைப்பிடித்துக் கல்வியறிவைவிட, இறைவன் நற்றாளைத் தொழுதலில் மக்கள் ஈடுபட வேண்டும் என்ற அருளுள்ளத்தோடு நூலையும் உரையையும் எழுதியிருக்கும் நுட்பத்தை உணராதார், ஆசிரியர்க்கு இலக்கண அறிவு இல்லையோ என்று ஐயுறுவர்.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்ற திருவள்ளுவர் வாக்கினைப் பொன்னேபோற் போற்றி, நூலறிவினும் சிறந்தது பகவானுடைய திருக்கலியாண குணங்களில் ஆழ்வதென்னும் நோக்கம்பற்றி, இலக்கண விதிகளைக் கடந்து நிற்கும் பரமபாகவதரான ஆசிரியர்பால் அறியாமையைக் காண்பார் தீவினைக்கே உள்ளாவார்.

எனினும், இலக்கண இலக்கிய உணர்வால் முனைப்புற்று நிற்கும் பண்டிதர்கட்கென, முதல் நூறுபக்கங்கள்வரையில் அடிக்குறிப்பால் அவர்கட்குரிய சொற்களும் சொற்றொடர்களும் இப் பதிப்பில் உணர்த்தப் பட்டுள்ளன.

ஆசிரியர் நோக்கத்தை உணர்ந்து, உரைக்கிடையில் முற்றுப்புள்ளி முதலியன ஆளாது ஒரே மூச்சில் உரையைப் படித்துக்கொள்ளுமாறு அப்படியே விட்டுவிட்டிருப்பது ஆசிரியர் நோக்கத்தைக் கெடுக்காமல் இருப்பதற்கேயாகும்.

இந் நூலையும் உரையையும் பயில்வார் திருவரங்க நாயகியாருடன் உறையும் திருவரங்கநாயகருடைய அருளுக்கு ஆளாவார் என்பது திண்ணம்

கோலாசலம் எனவும், சிம்மபுரம் எனவும், சஞ்சீவிபுரம் எனவும் வரும் ஆட்சிகளையும் பிறவற்றையும் நோக்குமிடத்து, ஆசிரியர் கருதும் தலம் இக் காலத்துச் செஞ்சிக்கோட்டை என்று வழங்கும் செஞ்சியோ என்று கருத இடந் தருகிறது. ஆண்டு அரங்கநாயகர் கோயில்கொண்டிருத்தல் இக் கருத்திற்கு அரணாகும்.

இந் நூலையும் உரையையும் பதிப்பித்தல் வாயிலாகத் திருவரங்க நாயகியார்க்கும் திருவரங்க நாயகர்க்கும் எளியேனை ஆட்படுத்திய கையெழுத்து நூல்நிலையத் தலைவர் உயர்திரு சந்திரசேகர சாஸ்திரியார் அவர்கட்கும் நூல்தேர் குழுவினர்க்கும் என் உளமார்ந்த நன்றியை உரிமையாக்குகிறேன்.

ஏடு படிப்பதில் வல்லவராய், கையெழுத்து நூல்நிலையத்தில் படி எழுதும் பணியாற்றிவரும் திரு. மொ. ரா. சிவப்பிரகாசம் பிள்ளையவர்கள் இஃது அச்சாகும்போது ஒப்பு நோக்க உடனிருந்து உதவியதற்குக் கைம்மாறாக யாது தரினும் அது நிறைவுடையதாகாது. வித்வான் முதலிய பட்டமின்றியும் புலமை நிரம்பினவராய்ப் பணியாற்றுவதில் சிறிதும் சோர்வு கொள்ளாதவராய் இலங்கும் இவரைக் கையெழுத்து நூல்நிலையம் தனக்குப் பணியாற்ற வாய்க்கப் பெற்றிருப்பது அது செய்திருக்கும் தவமென்றே கூறவேண்டும். அரங்க நாயக நாயகியர் அவருக்கு எல்லா நலனும் அருளுவாராக!

இதனைக் கண்கவரும் வனப்புடையதாய் அச்சிட்டுதவிய ஜமாலியா அச்சகத்தாரை என்றும் மறத்தல் இயலாது. காசு கருதியே பணியாற்றும் சில அச்சகத்தார்போன்றிராது, தமக்கும் இதில் பெயரும் புகழுமுண்டு என்று ஆற்றிய தொண்டே, விரைவில், அழகாக இந் நூல் வெளிவருதற்கு அடிப்படையாயிற்று. அச்சகம் சிறியதேயெனினும் பெருநூலையும் விரைவில் அச்சியற்றித்தரும் ஆற்றலை இது பெற்றிருப்பது போற்றத்தக்கது. இவ்வச்சக உரிமையாளர்க்கு என் நன்றி உரியதாகுக.

இந் நூலையும் உரையையும் போற்றிப் பயனடையுமாறு அரங்க நாயக நாயகியர் தமது திருவருளை அனைவர் உள்ளத்திலும் நின்று உணர்த்தியருளுவாராக!

இதனால் ஊதியம் ஏதாவது வரின், அது சமூகப் பணிக்கே உரிமையாகும்.

வாழ்க கோலாசல ஸ்தலபுராணம்!

சென்னை-5,
12-1-56.

மொ. அ. துரை அரங்கசாமி.

ஸ்ரீ ராமஜெயம்

## சஞ்சீவிபுரமாகிய சிம்மபுரம்

# கோலாசல ஸ்தலபுராணம்

ஹரிஓம்: நன்றாக! குரு வாழ்க! குருவே துணை!

### காப்பு

#### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

i. ஆனைமுத லானவனை யழைக்கவரு பரம்பொருளுக்
கடிமை யான
வானவர்கோ னயனரனும் வந்துநெருக் குறும்வேலை
மகுட கோடி
தானுரைந்து மேருவெனத் தனிப்பொடிக ளுதிரவொளிர்
தங்க வேத்ர
சேனைமுத லியர்கமலத் திருவடியே தஞ்சமெனச்
சிந்தை செய்வாம். i

### வாழ்த்து

#### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ii. விண்ணவர்கோ னயனரன்மா முனிவர் தேவர்
விரிமறைநூ லறம்வேள்வி மேன்மை ஞான
மண்ணவர்கள் பெருஞ்செல்வ மரசு செங்கோன்
மனுகுலத்தோ ரருணெறியும் வளர்ந்து வாழத்
தண்ணமிர்தக் கோலவரை துயில ரங்கன்
சரிதைதனை வியாசமுனி சாற்றச் சூதர்
புண்ணியனை மிசர்க்குரைக்க மகிழ்ந்தா ரந்தப்
புகழ்துதிப்போர் பாற்கடல்போற் பெருகி வாழ்வார். ii

## நூற்பயன்

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

iii. கல்வியுஞ் செல்வ மோங்குங்
கருதிய தெல்லாங் கூடுஞ்
சொல்வளம் பெருகும் ஞானச்
சுகாநந்த வீடு மெய்தும்
பல்வளம் பொருந்துங் கோல
வரைதுயி லரங்கன் பாதஞ்
சொல்பவர் படிப்போர் கேட்போர்
சொற்படி யெழுது வோர்க்கே. iii

## கடவுள் வாழ்த்து

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

iv. திருநன் மகுட குண்டலமுந்
திகழு மூர்த்வ புண்டரமுங்
கருவி லெனையாட் கொண்டதிருக்
கருணை விழியு மலர்வாயு
மருவைம் படைசேர் புயநான்கு
மலர்மா மகளூரன் மணிமார்பி
னுருவுங் கனக விடைப்பதமு
முற்றே னருளைப் பெற்றேனே.

*எ - து:*—ஸ்ரீ லக்ஷ்மீபதியாகிய திருவரங்க [1]நாயகருடைய திருமுடியி னிரத்தின மகுடமானது விளங்கிப் பிரகாசிக்கவுந் திருச்செவிகளிலே மகர குண்டலங்களான [2]திலங்கித் தோன்றவுந் திருமுக மண்டலத்தி னூர்த்வ புண்டரந் [3]திகழுதொளிராநின்ற வுமது கிருபையாற் கருத் தரிக்கின்ற [4]கெற்ப உற்பத்தியாகிய காலத்தின் அபக்குவனென்று நினையாமற் பக்குவி யாகும் பொருட்டா யடியேனை யாட்கொண்ட சிறந்த கருணையைப் பொழியா நின்ற தாமரைக்கண்களுங் குமுதமலர்போன்ற திருப்பவள [5]வாயினையும் பஞ்சாயுதஞ் சேர்ந்திலங்காநின்ற [6]சதுற்புயங்களுஞ் செந்தாமரைக் கமலத் தின் [7]வீத்திருக்காநின்ற ஸ்ரீ மகாலட்சுமித்தவியும் [8]அபையப்பிறதான வஸ்தமுஞ் சிறந்த திருமார்பி னணிகின்ற முப்புரிநூலுங் கவுத்துவா பரணமுந் திருவரையிற் றுலங்காநின்ற பீதாம்பர உடையு முபயசரணார விந்தங்களு மிகுந்த கருணையாலே என் [9]இதைய கமலத்தின் வீற்றிருக்கப் பெற்று கிருபாநோக்க விசேடத்தா லுமது பேரின்பமாகிய திருவருளினைப் பெற்றே னென்றவாறு. iv

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

v. கரும்புயலிற் குழலாளைக் கதிர்மதிபோன் முகத்தாளைக்
கருணை வெள்ளப்
பெருங்கடலின் விழியாளைப் பேரருளா லுலகனைத்தும்
பெற்ற தாயை
மருங்கடருந் தனத்தாளை மலர்க்காந்தட் கரத்தாளை
மலர்மேல் வைகு
நெருங்குமிரு பதத்தாளை நெடுங்கோலா சலத்தாளை
நெஞ்சுள் வைப்பாம்.

---

[1] நாயகராகிய உம்முடைய. [2] வை இலங்கி. [3] திகழ்ந் தொளிரா நிற்கவும் நின்ற. [4] கர்ப்ப. [5] வாயும். [6] சதுர்ப்புயங்களும். [7] வீற்றிருக்கா நின்ற. [8] அபயப்பிரதான. [9] இதய கமலத்தில்.

எ - து :—காருண்ட மேகத்தை யொத்த வளகபாரத்தினையும் முத்தாரை யொப்ப பொழிகின்ற கிரண சமூகங்களையுடைய கனக ரசிதமான சோடச கலைகளா னிறைந்த பூரண சந்திரபிம்பம் போன்ற முகாரவிந்தந் தழகினை யுங் கருணையாகிய வெள்ளப் பெருக்கினையுடைய பெரும்புறக்கடல் போன்ற விருபா [1]நேத்திரத்தினையுந் தனது மிகுந்த காருணியத்தா லகில லோகங் களையு மீன்றெடுத்த லோகமாதாவை வல்லிசாதக் கொடிபோன்ற விடை துவளும்படியாய் நெருங்கிய விரண்டு தனபாரங்களை யுடையவளை யலர்ந்த செங்காந்தட் புஷ்பம் போன்ற வழகிய கராம்புய மலரை யுடையாவளை செந் தாமரைக் கமல பீடத்தி னெழுந்தருளிய உபய சரணாவிந்தத்தினையுடைய வளை செடிதாகிய கோலாசல மென்கின்ற [2]சொற்ன்ன பருவதத்திலே யனந்த விமான சேகரரா யோகநித்திரை செய்கின்ற வரங்க நாயகனுடைய திவ்விய திருமார்பி னெழுந்தருளிய ஸ்ரீ மகாலட்சுமி தேவியாகிய வரங்க நாயகியை [3]யடியே னிதய கமலத்தி னென்றும் [4]நிலைபெற்றருள்வா யென்றவாறு. v

## டி விருத்தம்

vi. மருக்கமழுந் திருத்துளபன் மலர்ப்பதமு மவர்புகழும்
வண்மை யாக
விருக்குமுத றருக்கலையி னுரைப்பொருளுங் கரக்கனிபோ
லிலங்கக் காட்டிக்
கருக்குழியை முருக்கிவினை யொருக்கியுயி ரிரக்கமொடு
கடத்து ஞானத்
திருக்குருகை புளிக்கிறையை யருட்கடலை விருப்பமொடு
சிந்தை செய்வாம்.

எ - து :—திவ்விய பரிமளங்களைக் கமழ்கின்ற வழகிய துளசிமாலா தரனாகிய ஸ்ரீ யரங்க நாதனுடைய திருவடிக் கமலங்களையும், [5]அவரிட வனந்த கல்யாண குணங்களையுஞ் சிருஷ்டியாதி ரூபமான திருவிளையாட் டினைப் பிரயோசனமாக உடையவரென்றுங் கருமாயத்தமான செனன மில்லாதவ ரென்றுஞ் சருவவஸ்துவிலு முள்ளும் புறம்பும் வியாபித்தவ ரென்று மிருக்வேத முதலாகிய வேதார்த்தங்களில் சொல்லுகின்ற பரத் துவப் பொருளையு முள்ளங்கைகளிலே விளங்கிய நெல்லிக்கனிபோல யாவ ருக்கு மறிவித் திவ்வுலகத்தாருடைய [6]கெற்பமாகிய நரகக்குழியினையு மதற் கேதுவாகிய நல்வினை தீவினையாகிய [7]பூறுவகற்மத்தினையு நீக்கி யாத் தும கோடிகளைப் பரமபதச் செல்வத்தை யடையும்படியான [8]கியான பூர்த்தியினை யருளிச்செய்த வருட்கடலாகிய நம்மாழ்வாரென்னுந் திருநாம தேயத்தையுடைய வழகிய குருகாபுரியில் அவதரித் தாதிசேஷனாகிய புளியமரத்தடியி னெழுந்தருளிய பரமபுருஷனுடைய திவ்யதிருவடிகளை மிகுந்த விருப்பமாகிய வன்பினாலே சருவகாலங்களினுந் துதிசெய்வா மென்றவாறு. vi

---

[1] நேத்திரத்தினையும் உடையாளைத். [2] சொர்ண. [3] அடியோம். [4] நிலைபெற் றருளச்செய்வோ மென்றவாறு. [5] அவருடைய. [6] கர்ப்பமாகிய. [7] பூர்வகர்மத்தினையும். [8] ஞான.

### வாழ்த்து

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

vii. பொய்கைபேய் பூதன் மழிசைமன் மாறன்
புகழ்மது ரக்கவி சேரன்
வையமென் பட்டர் பிரான்றிருக் கோதை
வாழ்த்தடி யாரடிப் பொடியார்
மையறு பாணன் வாட்கலிக் கன்றி
வாழ்த்துவோர் மனமல மறுக்குஞ்
செய்யபங் கயமாந் திருவடித் துணையே
துணையெனக் கொண்டுசே விப்பாம்.

எ - து :—பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வா ரென்ற முதலாழ்வார் மூவர், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், அழகிய சூடிக்கொடுத்த நாச்சியார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் முதலாகிய நித்யசூரியர்களுடைய திவ்யதிருவடிகளை நிர்மலமான மனதினு லுபாசித்துத் துதிசெய்கின்ற பரம[1]பாகவதாளுடைய வுபயதிருவடிகளைத் துணையாகக்கொண்டு ஸ்ரீ ரங்கநாதனுடைய திருவவதார சரித்திரங்களைச் சேவிப்போ மென்றவாறு. vii

### கட்டளைக் கலித்துறை

viii. வேதஞ் சிலைகுணம் பத்திசொல் லம்புகொண் டேவிதண்ட
வாதஞ் செயுமக் குறும்பரை வாட்டெதி ராசன்மலர்ப்
பாதந் துணைவருங் கோலா சலத்தின் பரந்தஉச்சி
மீதிற் றுயிலு மரங்கன் புகழை விளம்புதற்கே.

எ - து :—[2]வேதங்களானது வில்லாகவு மிருந்த வயிராக்கியமாகிய பக்தியை யதற்கு நாரியாகவுந் தம்முடைய திருவாக்காகிய வமிர்தமொழிகளே அஸ்திரமாகவும் தொடுத்து விதண்டாவாதஞ்செய்யும் புறமதத் துவேஷிகளை விசயஞ்செய்து ஆத்துமகோடிகள் பரமபத செல்வத்தை யடையத் தக்கதாகிய ஞானபூர்த்தியினைத் தருகின்ற வெதிராச சிகாமணி யென்னும் எம்பெருமானுடைய திவ்யசரணாரவிந்தமே கோலாசல மென்னும் புண்ணிய பர்வதத்திலே யனந்த விமான சேகரனு யோகநித்திரை செய்கின்ற ஸ்ரீ ரங்கநாதனுடைய திவ்யகுணானுபவங்களைத் துதிசெய்ய வடியேனுக்குத் துணையாக வருமென்றவாறு. viii

ix. [3]சறுவ தந்திர சுதந்திர னெனும்பெயர் தரிக்கும்
பொறியி னல்லருட் பெற்றவ னரங்கனைற் பொறித்த
நெறிய டைந்தவே தாந்ததே சிகனடி நிழலாற்
பொறிய டக்கிமெய் மனதினும் வாக்கினும் புகழ்வாம்.

---

[1] பாகவதர்களுடைய. [2] வேதங்களானவை. [3] சர்வ.

எ - து :—வேதமுதலாகிய வறுபத்து நான்கு [1]கலைக்கியான வுணர்ச்சியீந்திடுவீன்முலே சர்வதந்திர சுதந்தரிகளென்கிற காரணப் பெயரைத் தரித்தவ ளொப்பற்ற ஸ்ரீமகாலட்சுமி தேவியினுடைய வனுக்கிரக பரிபூரண விசேடத் தினாலே யரங்கநாயகர் கடாக்ஷ கருணையினாலே [2]யுபைய சரணாரவிந்தத்தைத் திருமுடியிற் சூட்டுந் தவப்பிரயோஜன நன்மார்க்கமாகிய விதிவாத வர்த்த வாத மந்திரவாத நாமதேயமாகிய விதியினை யனுஷ்டிக்காநின்ற வேதாந்த தேசிகருடைய திருப்பாத கமலத்தி னிழலின் [3]வீற்றிருக்காநின்ற கிரியை யினாலே யைம்பொறிகளையும் அடக்கி மெய்யினாலே யட்டாங்கமாகத் தெண் டன் சமர்ப்பித்து மனதினா லுபாசித்து வாக்கினாற் புகழ்ந்துருகுவா மென்ற வாறு. ix

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

---

## அவையடக்கம்

x. சீதர னடியார் தீர்த்தமுஞ் சிரசிற்
சிந்தையி லவன்றிரு நாம
மோதர னயனு மிந்திரன் முதலா
ருரைத்தடங் காப்புக ழுரைத்த
லாதரம் பெருக வண்டத்தைச் சுண்ட
னளப்பதொத் திடுவதா யினுமென்
றீதறக் கோலா சலத்துறை யரங்கன்
திருவடி துதிப்பது கடனே.

எ - து :—ஸ்ரீலக்ஷ்மீபதியாகிய வரங்க [4]நாதரிட திவ்யதிருவடிக்கமலத்தி னின்றும் பெருகாநின்ற ஸ்ரீபாத தீர்த்தமானது சிரசில் பரம பவித்திரமாகத் தரித்துஞ் சிந்தையி னெப்பொழுதும் இடைவிடா துபாசிக்காநின்ற பரம சிவன் பிரம்மதேவ னிந்திரன் முதலாகிய தேவர்களும் மகா விருடியர்களுந் துதிசெய்வதற் கரிதாகிய பெரும்புகழை யடியேன் சொல்லத் [5]துடங்கிய தெப்படியென்றால் [6]பிறமாண்டத்தினுடைய [7]பிறதாபப் பிறமாணத்தை யொரு மூஞ்சூறுன தளவுகாண்போ மென்றதுபோல வடியேனிட பூர்வ கர்மமானது நிவிர்த்தியாகும்படி கோலாசல மென்னும் புண்ணிய பர்வதத்தி னனந்த விமான சேகரரா யோகநித்திரை செய்கின்ற வரங்கநாதருடைய திவ்விய சரணாரவிந்தத்தைத் துதிப்பது கடமை யென்றவாறு. x

xi. ஆதி மூலமென் றோதிய வானைமுன்
வேதை தீரவி ளங்கிய மெய்ப்பொருள்
பாத மன்றிப் பணியும் பணியிலார்
பாத மன்றிப் பணியும் பணியிலேன். xi

---

[1] கலைஞான. [2] உபய. [3] வீற்றிருக்காநின்ற. [4] நாதருடைய: இவ்வாறே பின் வருமிடங்களிலெல்லாம் படித்துக்கொள்க. [5] தொடங்கிய. [6] பிரமாண்டத்திலுடைய. [7] பிரதாபப் பரிமாணத்தை.

ஸ்ரீ ராமஜெயம்

## முதனூல் வழிநூல் செய்த காரணம்

xii. ஆதியின் வியாதன் சொல்ல வருமறை தெரிந்த ஞானச்
சூதரு முரைத்தார் நேமி வனத்துளோர்க் கென்னுஞ் சூழ்ச்சி
யோதிய விலிங்கி யத்தில் நூற்றொன்று மத்தி யாயக்
காதையே ழுலகோ ருய்யத் தமிழினாற் கழற லுற்றேன்.

எ - து :—இந்தக் கோலாசல புராணமான தாதிகாலத்தின் ரிஷிகளுக்கெல்லாஞ் சிரேஷ்டராகிய வியாசரானவர் சமஸ்தமாகிய வேதவேதாந்தங்களு முணர்ந்த சூதபுராணிகருக்கு உரைத்தபடி யவரும் நைமிசாரணியத்தாருக் கருளிச்செய்த வரலாற்று முறைமையாகிய காதையை இலிங்க புராணத்தில் நூற்றொன்று மத்தியாயந் தொடங்கி [1]முப்பத்திரண்டா மத்தியாயமாகக் கூறுகின்ற திருவவதார சரித்திரங்களை மூன்றுலகத்திலுள்ளாரும் உய்யும்பொருட்டுத் தேன் மொழியாகிய தமிழினாலே கூறுகின்றேனென்றவாறு. xii

---

### புராணசங்கிரகமணி

xiii. ஆதியின் முனிவோ ரயனருள் தன்னா
னடைந்திடு நைமிச வனத்தில்
நீதிநான் மறையோ னவதரித் ததுவு
நேயமா மறைமொழி யதனை
வேதியர்க் குலகின் விதித்தது மூவா
றாகிய புராணத்தி னிலிங்க
மோதிய வராகத் தலத்தின்முச் சிறப்பு
முரைத்திடும் பரத்துவப் பொருளும்.

எ - து :—ஆதிகாலத்தின் முனிவர்களாகிய நைமிசாரணிய வாசிகளானவர்கள் [2]பிரும்மாவி னனுக்கிறகத்தால் நைமிச மடைந்ததுவும் சூத புராணிக ரங்ஙன மெழுந்தருளியது [3]மவர்தன்னாசார்யராகிய வியாதர் [4]வரலாறினைக் கூறியது மதன் பின்பு நான்கு வேதத்தை நான்கு முனிவர்க் கருளியது மூவாறு பதினெண் புராணத்திற் சிறந்த விலிங்கத்திற் கூறுகின்ற வராகத் தலத்தினது தலவிசேட [5]மூர்த்திவிசேடங் கூறியதும் பரத்வ நிருபணங் கூறியது மென்றவாறு. xiii

---

[1] முப்பத்திரண்டத்தியாயமாக. [2] பிரம்மாவி னனுக்கிரகத்தால். [3] அவர்தம் மாசார்யராகிய. [4] வரலாற்றினைக் கூறியதும். [5] தீர்த்தவிசேடம்.

xiv. பூருவங் கால நேமியின் றவத்தாற்
புகழ்பெறு மமரர்கண் மிகுந்தக்
காருல கலைந்து கடல்பெரும் புவிசூழ்
கானகக் கடுவனங் கடந்து
மேருவி னடைந்த விதங்களை யுணர்ந்த
மேன்மைசேர் நாரதன் மொழியாற்
பேருல களந்தோன் பொன்னடி யடைந்த
புகழினை யிளம்பிய திறனும்.

எ - து :—பூர்வகாலத்தி னிந்திர மகாராசனானவன் [1]பிறதோட காலத்தைக் குறித்துத் தேவசமூகத்துடன் கயிலைக்குச் சென்றனான் றீசன் றனது [2]பிறமதகணங்களுடன் வனவேடராயெதிர்ந்தவரைக் கண்ட விந்திர [3]னிழிஞ்ஞராகத் தம்மை யெண்ணிய வெண்ண முணர்ந்த வேடராச னிந்திரன் சிரத்திற் புடைத்தபோ தவ்விந்திரன் வெகுண் டப்[4]பழிக்கி மறுபழி செய்வேனென்றெண்ண வவ் வெண்ணத்தை யுணர்ந்த வேடராசன் அவ் வுருவத்தை நீங்கிச் சிவனுருவாயி யிப் பழியை யிந்திர [5]மகாருசனே துவாபரயுகத்தின் பாண்டு புத்திரனாகிய வர்ச்சுனனா யவதரித் திதைத் [6]தீத்துக்கொள்ளுவாயென்றவனைத் தேவக்கூட்டங்களுடனே யனுப்பிய பின்பு காலநேமியென்னு மசுரனைத் [7]தோற்றிவித்தா ரந்த வசுரன் செய்த தவத்தால் [8]புகட்சியினையுடைய தேவக்கூட்டங்க ளானவர்கள் அடிபட்டு முறிபட் டோடிவந்து மேகந்தங்கிய [9]உலகங்க ளெல்லா மலைந்துங் கடலின்கட் சென்று வருந்தியுந் தீவு [10]தீவாந்திரங்ளெல்லா மலைந்துங் காடு சூழ்ந்த வாரணியங்களி னலைந்து மேருகிரியை அடைந்து சஞ்சலப்படுகின்ற விதங்களையு முணர்ந்த மேன்மையாகிய ஞானமே உருவமாகிய நாரதமுனிவரானவ ரிந்திரன் முதலாகிய பேர்களைத் தெளிவிக்கத் தெளிந்து கோலாசலத்தின் வந்தோங்கி யுலகளந்து வுத்தமன் றிருவடிக்காட்பட்டு மகிழ்சிறந் திருந்த வரலாறு மென்றவாறு. xiv

xv. ஆதியின் வராக மாயவ தரித்தங்
கழகிய கங்கையாட் கருளிச்
சோதிசேர் சம்பீ ரத்தினுற் றுணித்துச்
சோமுகன் றனக்கரு ளியதும்
நீதிமார்க் கண்டர்க் கருள்புரிந் ததுவும்
நீள்பத மடைந்தநற் குகன்றன்
வேதனை தவிர வெற்பதாய்த் தோன்றி
விமலனுங் கவர்க்கருள் செயலும்.

---

[1] பிரதோட. [2] பிரமத. [3] விழிஞராக. [4] பழிக்கு. [5] மகாராசனே. [6] தீர்த்து [7] தோற்றுவித்தார். [8] புகழ்ச்சி. [9] மலைகள் நிறைந்த உலகங்கள். [10] தீவாந்தரங்கள்.

எ - து:—ஆதிகாலத்திலே வராகஸ்வாமியானவர் [1]தன்னைக் குறித்துத் தவஞ் செய்தவரது பாதத்தின் கங்கையுதித்து வராகநதியாக வருளளித்ததும் மத்தளராசன் [2]நாருயணன் துரோகத்தினுலே எலுமிச்ச விருட்சமாய்ச் சோமகனது உத்தியானவனத்தில் முளைத்திருந்தவனைப் பிடுங்கி வாளாக்கி வராகமூர்த்தியானவர் சோமகனைத் தடிந்து மீட்டு மவன் சரணுகதியடைய வவனுக்கருளியது மூழிக்காலத்தில் மார்க்கண்டர் சரணுகதியடைய வவரைப் பாதுகாத்ததுஞ் சுப்பிரமணியர் சரணுகதியடைய வவர்க்காகக் கோலாசல மாகவந் தருள்கொடுத்து வேதனை தவிர்த்துச் சிங்கவதனனை வெற்றி பெற்றது மென்றவாறு. 2

4. அண்டர்க டுயர மகன்றிடக் கால
நேமியா மசுரனை மடித்துப்
புண்டரீ கக்கண் ணருளிற னமரர்
பொன்னுல கடைந்தநற் புகழூங்
கொண்டல்சூழ் கோல வரையினிற் றவஞ்செய்
கோதையைத் திருமணம் புணர்ந்த
மண்டல மளந்தோ னருளிறற் சூதன்
மாமறை சவுனகர்க் கறைந்தான்.

எ - து:—தேவக்கூட்டங்களானவர்கள் சரணுகதியடைய வவரது துன்பந்திரக் காலநேமி யென்னும் அசுரபிரானை வதைத்துத் [3]தனது தாமரைக் கண்ணுக்கத்தால் பொன்னுலகத்தி னவர்களைக் [4]குடியேத்திவைத் திந்திர மகாராசனுக்கு மகுடாபிஷேகஞ் செய்ததுந் திருப்பாற்கடலைத் தணந் தூடலினுலே கோலாசலத்தின்கண் பிராட்டி தவஞ் செய்ததற்கிரங்கிச் சகல தேவர்களுங் கண்களி [5]கூறத் திருமணஞ் [6]செய்தன் முதலாகிய கதாப்பிரசங்கத்தைச் சூதபுராணிகரானவர் ரங்கனுயகர் பாதபங்கயத்தைத் தொழுது சவுனகாதிக ளாகிய நைமிசாரணிய விருடியர்க்குத் திருவாய்மலந்தருளினு ரென்றவாறு. 4

புராணசங்கிரகமணி முற்றிற்று.

---

1 தம்மை. 2 நாராயணன். 3 தமது. 4 குடியேற்றிவைத்து. 5 கூர. 6 செய்ததும்.

# முதலாவது: நைமிசாரணிய வத்தியாயம்

1. ஆதியிற் சிறந்த வருந்தவ நிதிக
ளாகிய முனிவர ரியாருஞ்
சோதியாம் பரனைத் தொழுவதற் குரிய
தூயநின் மலமன துளராய்
நீதிநான் மறைநூ னெறியறம் வேள்வி
நிறைதவ மிழைத்திட நினைந்து
வோதிய வீரே ழுலகினு மிகுந்த
வுயர்மனோ வதிநக ரடைந்தார்.

எ - து :—ஆதிகாலத்திலே ஞானத்தினுற் சிறந்த வரிதாகிய தவத்தினைச் செய்கின்ற தவத்திரவியமாகிய முனிவர்க ளியாவருங் கூடிச் சோதிமயமாகிய பரப்பிரமத்தைத் தொழுவதற் குரித்தாகிய சுத்த [1]பவுத்திர நின் மலமாகிய வந்தக்கரணத்தினை யுடையவர்களாய் நீதியாகிய வேதநூல் விதிப்படி [2]தன்மாற்த காம மோட்ச மென்று சொல்லுகின்ற சதுர்வித புருடார்த்தங்களிலு முசிதமாகிய பலப்பிரயோஜனத்தை யடையும்படியான வேதவேள்விகளு நிறைந்த தவங்களுஞ் செய்யத்தக்கதாக நினைந்தவர் களாய்ப் பதினுன் குலகத்திலு மிகுந்த சிலாக்கியமான மனோவதி யென்னுஞ் சிறந்த நகரத்தை யடைந்தார்க ளென்றவாறு. 1

2. சத்திய வுலகிற் சரோருகக் கிழவன்
முனினைத் தாழ்ந்தடி பணிந்து
நித்திய மாகுந் தவமதை யியற்ற
நிமலமா நிலையருள் கென்ன
வெத்திசேர் தருப்பைத் திகிரிய தாக
விதித்திது தங்கிடு மிடத்திற்
புத்திசேர் முனிகாள் தவம்புரிந் திடுவீர்
புனிதமாந் தவமெனப் புகன்முன்.

எ - து :—மனோவதியாகிய சத்திய உலகத்தின்கண் வாசஞ் செய்கின்ற தாமரைப் பீடத்தி னெழுந்தருளிய சிருஷ்டி [3]கற்தாவாகிய [4]பிறமதேவ னுடைய வுபைய சரணரவிந்தத்தை முனிவர் கூட்டங்களெல்லாம் வந்தனை செய் தியாங்கணித்தியமாகிய தவயோக யாகாதிகள் செய்யத்தக்கதாய நின் மலமாகிய தலத்தை யருளிச்செய்யக் கடவீரென்று விண்ணப்பஞ் செய்ய வரு ளிச் செய்கின்றார்: வாரீர் முனிவர் கூட்டங்களே [5]புனித வெத்தியானது சேர்ந்த தருப்பையினலே சக்கரமொன் றுண்டாக்கி விடுகின்றோம். அந்தச்

1 பவித்திர. 2 தர்மார்த்த. 3 கர்த்தா. 4 பிரம தேவனுடைய வுபய.
5 புனிதவடிவம்.

சக்கரமான துருண்டோடி எந்தத் தலத்திலே வசிக்குமோ வந்தத் தலமானது பரம [1]பவுத்திர மாகையா லந்த [2]யிடங்களில் தவமியோக முதலாகிய யாகாதிகளைச் செய்து தபோ பலங்களை யடைந்து வைதிக விதிகளை [3]வளத்து சுகமாக வாழக்கடவீர் என் றனுக்கிரஞ் செய்து தருப்பைச் சக்கரத்தைப் [4]பிறயோகஞ் செய்துவிட்டார் [5]பிறம்மா வென்றவாறு. 2

3. அதிபெரும் புகழோ னளித்திடுந் திகிரி
யடைந்ததவ் வனத்தினி னழகார்
முதியதோர் நைமி சாரண்ய மென்ன
முனிவரர் மொழிந்தவ ணிருந்து
கதிபெறும் வேள்வித் தவமியோ கங்கள்
களிப்பிலா துநற்றியே கழித்துப்
புதியதா மறையோன் றுளிணை வழுத்தப்
புகுந்தனன் சூதமா முனிவன்.

எ - து:—அளவிடப்படாத பெரும்புகழினைப் பெறுகின்ற [6]பிறமதேவ னனுக்கிறகஞ் செய்தருளிய சக்கரமான துருண்டோடித் தங்கிடும்படியாகிய வந்த வாரணியத்தினை யழகு நிறைந்த நைமியஞ் சார்ந்த காரணப் பெயரினுல் நைமிசாரண்ய மென்று நாமகரணஞ் செய்வித்து முனிக் கணங்க ளவ்விடத்தி னிருந்து வேள்விகள் தவங்க ளியோகங்க ளௌவிறந்தன செய்து திவ்ய பரிமளங்கள் கமழாநின்ற தாமரைப் பீடத்தி னெழுந்தருளிய மேலவனுடைய வுபய சரணாரவிந்தத்தை வேதவாக்கியத்தால் புகழ்கின்ற [7]கிரிகையினுலே யங்ஙனம் [8]பிறவேசித்தார் சூதபுராணிகரென்று முனிபுங்கவ ரென்றவாறு. 3

4. முனிவரன் பாத பங்கய மிறைஞ்சி
நைமிசர் மொழிகுவ ரெமக்குத்
தனியதா மூவா றுகிய புராண
மதனின்மால் தலச்சிறப் புரைத்தற்
கனியென வெமக்கிங் குரைத்தருள் புரிதி
யென்றலுங் கருதியோன் றுரைப்பா
னினியதா முலகின் மோகநூ லதனுல்
வைதிக நிலமைநீங் கிற்றுல்.

எ - து:—அந்த நைமிசாரணியத்தி லெழுந்தருளிய சூதமுனிவர்க்கு [9]வற்கபாத்திய [10]வாசமன்னிய முதலானதுங் கொடுத்து முனிவர் கூட்டங்களெல்லாம் அவரது பாதபங்கயங்களிலே இறைஞ்சி ஒரு வார்த்தை கூறுகின்றுர்கள் [11]வொப்பத்த புராணம் பதினெட்டுக்குள் திருமால் சிறந்

1 பவித்திரம். 2 விடங்களில். 3 வளர்த்துச் சுகமாக. 4 பிரயோகம். 5 பிரம்மா. 6 பிமதேவன் அனுக்கிரகம். 7 கிரியை. 8 பிரவேசித்தார். 9 அர்க்கிய பாத்திய. 10 ஆசமனியம். 11 ஒப்பற்ற.

திருளிய தலத்தினது பெருமையை முக்கனியினது ரசத்தைப்போல் யாங்க ளுண்டு களிக்க [1]வனுக்கிரகம் பண்ணவேணுமென் றன்பினுடனே கேட்க வதை யூகித் தாலோசனை செய்து திருவாய் மலர்ந்தருளுகின்றார்: பூர்வகாலத்திலே வேதவொழுங் கமைந்த [2]யிவ்வுலகத்தின்கண் ணுயிர்கள் செய்த பாவமிகுதியால் மோகநூல் [3]விற்தித்தவதனால் வேத [4]மார்க்கத்தினின் பங்களெல்லாந் தலையெடுக்காமல் மயங்கிற் றென்றவாறு. 4

5. தருமயோ கங்க ளறம்பொருள் வேள்வி
தவறினை யடைந்ததிவ் வுலகின்
அருமறை யோது முனிவரர் சிறந்த
வரனய னமரர்க டுதிக்குங்
குருபர ளுகி அரியபாற் கடலிற்
குலவி [5]வீத் திருந்திடும் பரமன்
சரணினைப் புகழ்ந்து மோகநூன் [6]மாற்கஞ்
சாற்றியே தாழ்ந்தடி பணிந்தார்.

எ - து:—அப்படி வேதமார்க்க வைதிக வாசார நீங்கிய காரணத்தினாலே தருமங்களும் யோகங்களுந் [7]தற்மார்தங்களும் பதினெண் வகையாயுள்ள வேள்விகளும் [8]விரதியாம [9]லபவிற்றியடைந் தரிய வேதங்களைப் பாராயணம் பண்ணுகின்ற முனிவர்களுஞ் சிறப்புற்ற சிவன் [10]பிற்மா முதலாகிய தேவர் களுந் துதிக்கா நின்ற குருபர [11]முகுற்தமாய்த் திருப்பாற்கடலின் யோக நித்திரை செய்கின்ற பரம்பரனுடைய [12]வுபைய சரணாரவிந்தத்தை யந்தத் திருப்பாற் கடலிற் போய்ப் புகழ்ந்து மோகநூன் மார்க்கத்தினாலே சற்கரு மங்களெல்லாங் கிலமாய்ப் போனதைக் கூறி வந்தித்தார்கள் திரிலோகத்தி னுள்ள முனிவர் கூட்டங்க ளென்றவாறு. 5

6. நாரண னருளான் மோகநூல் [13]மாற்க
நலிந்திடக் கருதியொன் றுரைப்பா
னாரண முனிவி ரென்கலை வியாத
மாமுனி யெனவவ தரித்துப்
பூரண ஞான மாம்பொருள் வேள்விப்
புனிதமா முனிவரர் மரபுந்
தாரணி தன்னிற் றழைத்தினி தோங்கு
மென்னவே தயைபுரிந் தனனால்.

எ - து:—இவ்விதமாகக் கூறிய முனிவர் கூட்டத்தி னிடரினை [14]யகத்த நாராயணமூர்த்தியானவர் [15]தனது கடாட்ச பரிபூரண கிருபையினாலே யூகித்து ஒரு வார்த்தை கூறுகின்றார்: வேதபாராயணஞ் செய்கின்ற முனிவர்

1 அனுக்கிரகம். 2 இவ். 3 விர்த்தித்த. 4 மார்க்கத். 5 வீற்றிருந்திடும். 6 மார்க்கம். 7 தர்மார்த்தங்களும். 8 விர்த்தியாமல். 9 அபவிர்த்தி. 10 பிரம்மா. 11 மூர்த்தமாய்த் 12 உபய. 13 மார்க்கம். 14 அகற்ற. 15 தமது.

கூட்டங்களே! எனது கலையானது வியாத முனிவனு மிவ்வுலகத்தின் அவ தரித்துப் பரிபூரண ஞானங்களுந் [1]தற்மார்த்த முதலானது மியாகங்களும் புனிதமாகிய முனிவர் [2]வற்கங்களு மிவ்வுலகத்தின்கண் டழைத்தோங்கும் படியாய்த் திருவவதாரஞ் செய்கின்றோமென்று திருவாய்மலர்ந்தருளினு ரென்றவாறு. 6

7. வறியவன் செல்வம் பெற்றது போலுங்
கண்ணிலான் வண்மைய தான
குறிதிகழ் விழிகள் விளங்குதல் போலு
முனிவர ருளங்குளிர்ந் திருந்தார்
நறியதா மறையோன் மரபினி னுதித்த
வதிட்டனுர் புத்திரர் நலமாஞ்
செறிவறி வுடைய சத்திய புத்ரர்
பராசராய்ச் செறிந்திடு முனிவர்.

எ - து :—அப்படி நாராயண மூர்த்தியானவர் அனுக்கிரகஞ் செய்தருள முனிவர் கூட்டங்கள் தரித்திரனுனவன் மிகுந்த செல்வமடைந்ததுபோலுங் குருடனுனவன் கண்ணிணையைப் பெற்றதுபோலும் முனிவரர்க ளுளங் குளிர்ந் திறும்பூ துற்றூர்கள். திவ்விய பரிமளங்களைக் கமழ்கின்ற தாமரைக் கோயிலை யாதனமாகவுடைய [3]பிறமாவினது மரபிற் பிறந்த வதிட்டருடைய புத்திரராய் மெய்ஞ்ஞான வறிவினையுடைய சத்திய ரவருடைய புத்திரர் பராசரரென்று கூறுவார்க ளென்றவாறு. 7

8. புண்ணிய நதியின் பொருந்திய ஓடம்
புகுந்தனர் பரிமள கந்தி
யெண்ணமோ டமர்ந்தா ரிருவருங் கூடி
யின்பமுற் றனர்புக ழீசன்
கண்ணிய கலையி னோர்கலை வியாதர்
கமழ்தரு முனிவனு யுதித்து
நண்ணிய வந்நான் மறைகளுந் தழைக்க
நாடியே நதிவனங் கடந்தார்.

எ - து :—அந்தப் பராசரரானவர் புண்ணிய தீர்த்தமாகிய வொரு நதியிலே வோடமேற் புகுந்தா ரவ்வோடத்தின்கண்ணே யெண்ணிய வெண்ண நிறைவெய்தப் பரிமளகந்தியானவ [4]ளமந்து வீற்றிருந்தா ளந்தக் காலத்தி னவளழகினைக் கண்டு பராசரர் மோகித்தா ரப்போது இரண்டு பேரும் சரச சல்லாப சையோகஞ் செய்யும்போது நாராயணமூர்த்தியினுடைய கண்ணிய கலைசமூகங்களி லொரு கலையானது ஞானமணங்களைக்

1 தர்மார்த்த. 2 வர்க்கங்களும். 3 பிரமாவினது. 4 அமர்ந்து.

கமழாநின்ற வியாதமுனிவனாய் அவதரித் திவ்வுலகின்கண் தர்மார்த்த காம மோட்சங்களை விதிவிதித்துரைக்காநின்ற வேதங்களுந் தழைத்தோங்கும் பொருட்டா யெண்ணி யந்த நதியைக்கடந் தனேக வாரணியங்களை யெல்லாங் கடந்துவந்தா ரென்றவாறு. 8

9. வதிரிகாச் சிரமம் புகுந்தன னதனால்
வாதரா யணப்பெயர் விளங்கப்
பதியதா யோதா துணர்ந்தனன் வேத
சாகைகள் காண்டங்கள் பரித்த
விதியினைப் பயில வப்பெயர் முதலாய்
விளங்குநான் மறையவர்க் கிசைத்தான்
மதியினால் வேதார்த் தங்களெழு வாறு
புராணமா யுரைத்தனன் மகிழ்வால்.

எ - து:—அந்த வாரணிய நதிகளெல்லங் கடந் தந்தப் பராசர புத்திர ரானவர் வதிரிகாசிரமமென்று மாசிரமத்திற் புகுந் தங்கே வாசஞ் செய்த காரணப்பெயரினால் அவருக்கு வாதராயண னென்கின்ற பெயரானது உலகப் பிரசித்தமாய் விளங்கத்தக்கதாகத் தாமே ஈஸ்வரனாக ஒரு குருவினிடத்திற் கேட்டல் சிந்தித்தல் முதலாகிய காரண மில்லாமே லோதா துணர்ந்தார் வேதசாகைகள் காண்டங்களினுடைய விதிவாத முதலியதைப் பயிலவர், கண்ணுவர், வைசம்பாயனர், சுமந்தர் முதலிய நால்வர்க்கு நான்கு வேதத்தையும் அருளிச்செய் தந்த வேதத்தினுடைய நுட்பமாகிய நவரச அலங் காரத்தைப் பதினெண் புராணமாய் விரித் தடியேனுக் கனுக்கிரகஞ் செய் தருளினர் கிருபா பரிபூரணமூர்த்தியாகிய வாதராயண முனிவரென் றருளிச்செய்தார் சூதபுராணிக ரென்றவாறு. 9

10. ஐவகைப் பொருளு மருமறை நான்கு
மடைந்தறக் குணங்களு மறைசொற்
செய்வினை யிரண்டுஞ் செழுந்தவ முனிவர்க்
குரைத்தபின் சூதமா முனிவன்
பொய்யிரு ளகலப் பொருளறம் வேள்வி
புரிதரிற் கதிரென விளங்கக்
கைவள ராழிச் செங்கண்மா லருளாற்
கதிபெருந் தலத்தினைக் கழறும்.

எ - து:—வாரீர் சவுனகாதி இருடியர்களே யைவகை ஸ்தூல பூதங் களாகிய பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமும், சூக்ஷ்ம பூதங் களாகிய சத்த பரிச ரூப ரச கந்தமும், ஞானேந்திரியங்களைந்தும் கன்மேந்

திரியங்களைந்தும் ஞானேந்திரிய விடய மைந்துங் கன்மேந்திரிய விடய மைந்தும் அந்தக் கரண சதுஷ்டயமுமான இந்த இருபத்துநான்கு தத்துவத்தாலாகிய மாயாபாசக் கருவியாகிய சத்த தாதுக்களாற் பொத்திய குரம்பையைச் சூத்திரதாரியாய் நடத்தாநின்ற புருடனு மந்தப் புருட னிச்சையா லுண்டாகிய ராசத தாமத ஸாத்வீக மென்று கூறுகின்ற முக்குணங்களாலே சுழல்கின்ற மோகங்களைத் [1]தவித்து, சுத்த தத்துவ சாத்வீக ஞான சொரூபனு வாத்தும ரூபத்தில் கலந்த மெய்யறிவினை யுடையவனாய் விடய வாதனை கடந்து, பரமான்மாவை, பவசொரூப சுகநிஷ்டையை யுடையவன் வேதவிதிப்படி நல்வினை தீவினைகளாகிய பொன் னிரும்பாகிய விலங்கினைக் கடிந்து, சாட்சாத்கார மடைவ னவன் முன்படைந்த சென்மங்களிற் செய்த புண்ணியமாகிய காமக்குரோதாதிகளைக் கடிந் தியாக யோக தவ செப புண்ணியத்தினா லென் றருளிச்செய்த சூதமுனிவ ரெளியதாய்ப் பிறவித் துன்பத்தை நீக்காநின்ற வொருதலச் சிறப்பைச் சொல்லத் தொடங்கினா ரென்றவாறு.

நைமிசாரணிய வத்தியாயம் முற்றிற்று.

---

1 தவிர்த்து.

# இரண்டாவது: வராகக்ஷேத்திர வத்தியாயம்

11\. ஆகையா லான்மாக்க ளனைவர்களு முத்திநெறி
யடைதற் கேது
வோகையா னெளிதாக விகபரத்திற் செல்வமெலா
முருவ தாகச்
சாகையான் வேதங்க ளேத்தெடுக்கு முச்சிறப்புந்
தழைத்திங் கோங்கும்
வாகைபெருந் தலமதனை யெமக்குரைப்பா யெனச்சூதன்
வகுப்ப தானன்.

எ - து:—ஆகையினாலே யிந்தப் பூவுலகின்கண் செனித்த வான்மாக்க ளெல்லா முத்தி மார்க்கத்தை யெளிதா யடைவதற்கோ ருபாய [1]மாற்கத்தினாலே இகபரத்தினது செல்வத்தையெல்லா மடையத்தக்கதாய் வேத சாகையினாலே விளங்கித் தோத்தரிக்காநின்ற தலவிசேட மூர்த்திவிசேடந் தீர்த்தவிசேடமாகிய மூன்றுந் தழைத் திவ் வுலகினி னோங்காநின்ற [2]வெத்தியைப் பெறுகின்ற தல மகத்துவத்தை யருளிச்செய்ய வேணுமென்று முனிவர்கூட்டங்கள் கேட்கச் சூதபுராணிகர் கூறுகின்றா ரென்றவாறு. 1

12\. இலிங்கமா புராணத் திசைத்திடு மத்தி
யாய நூற் றொன்றினி லிசைக்குந்
கலிங்கமாங் காவித் [3]துயிலேயுங் கலைமான்
மேதையுங் கமண்டலந் தண்டும்
புலிங்கமா கியமுத் தழலையு மோம்பும்
புண்ணிய முனிவர்காள் புகலுந்
தலங்களின் மூன்று வகைச்சிறப் புளதாய்ச்
சார்ந்திடுங் கோலமால் வரையே.

எ - து:—வாரீர் சௌனகாதி மகாமுனிவர்களே யிலிங்க புராணத்திற் கூறுகின்ற வத்தியாய நூற்றொன்று முதலாகி யிசைக்காநின்ற காவி வத்திரங்களையுங் கலையையுடைய மானினது தோலினையுங் கமண்டலத்தினையு மியோக தண்டத்தினையு மக்கினிப் பொறிகளைச் சிதறாநின்ற வாகவனீயங் காருகபத்தியம் தெக்கிணாக்கினி யென்கின்ற முத்தழலினையும்

1 மார்க்கத்தினாலே. 2 வெற்றி. 3 துகிலே.

[1]வளத்துக் கைபடிந்த புண்ணிய புனித பாவன மடைந்த முனிக் கணங்களே! சொல்கின்ற தனந்தமாகிய தலங்களிலே மூன்று வகைச் சிறப்புஞ் சார்ந்தது சத்திய விரதமாகிய தொண்டமண்டலத்துக் கடுத்த கோலமால்வரை யென்னுஞ் சஞ்சீவி புரமானது தத்துவ பரிபூரண ஞானத்தினை யுணர்த்தி யதன்பின் பெரிதாய்ப் பரமபதத்தைக் கொடுக்கு மென்று பின்னுங் கூறுகின்றார் சூதபுராணிக ரென்றவாறு. 2

13\. வாரணவா சியையடைந்து வதிந்திடுவோர்க் கதிகமிந்த
வண்மை யான
தாரணியோர் புகழ்பெறுகோ லாசலமாந் தலமதனைச்
சார்ந்த பேர்கள்
பூரணஞா னச்செல்வப் புகழுடைந்து பூபதியாய்ப்
பொருந்தி யென்று
நாரணனூர் பதமடைந்து நித்தியசூ ரியராகி
நயந்து வாழ்வார்.

எ - து :—வாரணவாசியாகிய காசித்தலத்தை அடைந்து வாசம் பண்ணப்பட்ட பேர்க ளடைகின்ற பல னியோகப் பயிற்சியினது நிட்டையிந்த வுலகமெல்லாம் பிரசித்தமாய்ப் புகழ்கின்ற கோலாசல பருவதமாகிய தலவிசேடத்தினைச் சார்ந்த பேர்களானவர்கள், பரிபூர்ண மெய்யறிவாகிய தத்துவ ஞானச் செல்வப் புகழினை யடைந்து, சத்திரபதியாகிய ராச கண்டரவ சார்வபௌமராய்ச் செங்கோ னடாத்திச் சகல போக பாக்கிய செல்வங்களை யனுபவித்து நாராயண மூர்த்தியினுடைய பரமபக்தியிலே யதிக சிலாக்கியரா யதன்பின் பவருடைய பரமபதத்தில் நித்யசூரியர்களாய்த் தெரிசனஞ் செய்கின்ற வானந்த வைபவத்தின் [2]வீத்திருப்பார்க ளென்றவாறு. 3

14\. ஆயிரத்தெண் சிகரமுள வழகியமே ருவினுதித்தங்
கமைந்த மேலாம்
பாயிரமா மறைதுதிக்குங் கோலகிரி தனிற்பயிலும்
பரம யோக
ஞாயிறைக்கண் டுளமகிழும் வாலகில்லி யர்முதலோர்
நாடுங் [3]கெற்பத்
தாயினைப்போ லக்கிரியை வலம்வந்திங் கரங்கனடிச்
சார்வீ ரென்றான்.

---

[1] வளர்த்து. [2] வீற்றிருப்பார்கள். [3] கர்ப்பத்.

எ - து :—ஆயிரத்தெட்டுச் சிகரங்களோடுங் கூடிய மகாமேருவாகிய அழகு நிறைந்த கனக மலையி னுற்பவமாகிய சுபுத்ரனும் வாழ்கின்றதும் பாயிரத்தோடு பொருந்திய வேதங்களாலே துதிக்காநின்றது மாகிய கோலாசல கிரியிலே வாசஞ் செய்கின்றவர்கள் பரமயோக நிஷ்டையால் ஞானசூரியனை யறிவே சொரூபமாய்க் கண் டானந்த வைபவ மடைகின்ற வாலகில்லியர் முதலாகிய பேர்க ளவர்கள் வாசஞ் செய்கின்ற வந்தக் கிரியைக் [1]கெற்பவதிகளைப்போல் வலம்வந் தரங்கநாயகரது திவ்ய பாததாமரை களைத் தெரிசித்துச் சகல பாவங்களினின்றும் விடுபட்டுப் பரமபதத்தில் நித்திய சூரியர்களா யிருப்பா ரென்றவாறு. 4

15. பூதலத்தி லுண்டான தலங்கட் கெல்லாம்
புனிதமுறுங் கோலகிரிப் புவியின் மீது
மாதலத்தி லுண்டான முனிவர் தேவர்
மகிழ்சிறந்தா ரத்தலத்தின் வசித்து முன்னம்
பாதலத்தி லுண்டான கங்கை யன்னாள்
பணிந்துதவம் புரிந்துபத மடைந்தா ளங்஖ன்
போதமுறுந் தலமதனைத் தெரிசிப் போர்கள்
புண்ணியரா யரங்கனடி பொருந்தி வாழ்வார்.

எ - து :—பூவுலகிற் றங்கிய தலங்களுக் கெல்லாஞ் சிலாக்கியமாகிய புனித பாவனமா யுயர்ந்த தலமான தேதென்றால் கோலாசல மென்னு மகாமேருவி னுற்பத்தியா யெழுந்தருளிய சஞ்சீவி புரமாகிய தலேச்சர மானது தலங்களுக்கெல்லாம் புனித பாவன சிரேஷ்டத்தையுடைய தந்தப் [2]பிறதாபத்தால் மகத்தாகிய தலங்களிலே வசியாநின்ற முனிவர்கள் தேவர்கள் முதலாகிய பேர்களெல்லா மந்தத் தலத்திலே வாசஞ்செய்து [3]மகிட்சியை அடைந்தார்கள். முற்காலங்களிலே பாதலத்திலே வாசஞ் செய்கின்ற கங்கையானவ ளித்தலத்திலே வாசம்பண்ணித் தவம் புரிந்து வராகமூர்த்தியினது பாத கமலங்களிலே யுதிக்கப்பெற்று ளிப்படியாகிய ஞான போதத்தினையுடைய விந்தத் திவ்யமாகிய சஞ்சீவி புரத்தைத் தெரிசித்த பேர்கள் நித்ய சூரியர்களா யரங்க நாயகருடைய பொற்பாத கமலங்களினது நீழலிலே [4]எஞ்ஞான்றும் பொருந்தி வாழ்வார்க ளென்றவாறு. 5

16. ஆரணம் பெருக வகிலமா மூலகி
னனந்தமா யவதரித் தருளுங்
காரண மதனால் கண்டுரைப் பதற்குக்
கமலனுக் கரிதென விளங்கும்
பூரண மாகப் புகழ்பெறு கோலா
சலத்தினிற் புனிதபா வனமாம்
வாரணத் தரச னித்தல மடைந்து
மகிழ்சிறந் தரசுவீத் திருந்தான்.

---

[1] கர்ப்பவதிகள். [2] பிரதாபத்தால். [3] மகிழ்ச்சியை. [4] எந்நாளும்.

எ.-து:—வேத விதிக ளெல்லாந் தலையெடுத் தோங்கித் தழைக்கும் பொருட்டாய்த் தன திச்சையினலே மச்சாவதார முதலாகிய வனந்த திருவவதாரரா யவதரித்தருளுகின்ற வனந்த கல்யாண குண விக்ரக சொரூபத்தினது விளையாட்டினை ஒரு காரணத்தினலேயுங் கண் டளவை நூலாகிய நியாய சாத்திரத்தினலேயுஞ் சொல்லிமுடிக்கக் கமலபீடிகையி னெழுந்தருளிய நான்முகனுக்கு மரியதென்று கூறந்தக்கதாய் விளங்காநின்ற பரிபூர்ண மாகிய புகழினைப் பெறுகின்ற கோலாசலத்திலே பூரண வரங்கராய்த் திருவவதாரஞ் செய்தருளிய புகழினலே வாரணத் தரசனுகிய வயிராவத பாகனுகிய விந்திர மகாராச னவ னிந்தச் சிங்கபுர மாகிய தலத்தினை யடைந்த [1]பிறதாபத்தால் மகிழ் சிறந்தவ னுயிழந்துபோன வரசினை மீட்டும் [2]பெத் தரசாட்சி செய்து பஞ்சதாருவின் நிழலிலே [3]வீத்திருக்கப் பெற்ற னென்றவாறு. 6

17. அத்தலப் பெருமை யுரைத்திட வாதி
சேட னுக் கடங்கிடா ததனுன்
முத்தர்கள் சித்தர் வாலகில் லியர்கள்
முனிவர்ர் முடிவின்வே தாந்தப்
பத்தர்கள் வேதப் பயிற்சியை யுணர்ந்தோர்
பான்மைசே ரம்மலை வசிப்பா
ரெத்தலங் களினு மிதற்கிணை கூரு
ரிறைவனே யம்மலை யிசைந்தான்.

எ-து:—அந்தத் தலத்தினது பெருமையினைக் கூற வாதிசேட னுயிர நாவாலு மடங்கா தாகையால் சீவன்முத்தர்க ளொன்பது வகைச் சித்தர்கள் வாலகில்லியர்கள் முனிவர் கூட்டங்க ளெக்காலு மழிவின்றிய உபநிடத முப்பத்திரண்டினையு மாராய்ந்த வறிவினையுடைய பரம பாகவதர்கள் வேதத்தினது [4]பதக்கிறம் சடைகளை யோதி யுணர்ந்தவர்கள் பிரதாப சுந்தராஞ்சித தெய்வீகமாகிய வந்தக் கோலாசத்திலே பரமபதம்போல வாசம்பண்ணி மகிழ் சிறப்பார்க ளாகையினலே யிந்த லோகத்தில் தெய்வீகத் தல மனேக மாய் முனிவர்களுந் தேவாதிகளு மியக்கருங் கின்னரர்களுங் காந்தர்வர்களு மரக்கர் முதலாகிய பேர்களுக்கு மனுக்கிரக [5]முகுற்தமாகிய வெம்பெருமா னவர் நின்ற திருக்கோலமாயு மிருந்த திருக்கோலமாயும் [6]வீத்திருக்கா நின்ற தலங்களெல்லா மிதற் கிணையாகக் கூறமாட்டார்க ளாகையா லிந்தத் தலம் பூலோக பரமபத மென்றவாறு. 7

---

[1] பிரதாபத்தால். [2] பெற்றரசாட்சி. [3] வீற்றிருக்கப்பெற்ருன். [4] பதக்கிரம. [5] மூர்த்தமாகிய. [6] வீற்றிருக்காநின்ற.

18\. பிரயாகை தனிற்பிதுர்க்குப் பிண்டமிட்டுப் பெருங்கதியிற்
பெற்றோரெல்லா
நிறைவான வராகநதி தனிற்படிந்திங் கதிகபல
நிறைந்து வாழ்வார்
குறையாத விரசநதி குடைந்திடுநற் பலங்களெல்லாங்
கொடுக்கா நிற்கு
முறையாக முனிவர்பெறு முத்திதனி லெந்நாளு
முந்தி வாழ்வார்.

எ - து:—பிரயாகை யென்கின்ற நதியிலே பிதுர்க்களைக் குறித்துப் பிண்டமிட்டுப் பெருங்கதியிலே பெறுவார்க ளெல்லாம் நிறைந்த ஞான வொழுக்கத்தினையுடைய வராகநதியிலே படிந்த புனிதசீலர்க ளானவ ரதிகமாகிய பலன்களுடன் கூடி நிறைந்த சாந்த தத்துவத்துடன் கூடி வாழ்ந் திருப்பார்கள். குறைவில்லாத பரமபதத்திற் குடியாயிருந்து நிலையாய் வாழ்கின்ற விரசா நதியிலே சாஸ்திர விதிப்படி தீர்த்த மாடுகின்றவர்கள் பெறுகின்ற பேறெல்லா மொருங்கெய்தக் கொடுத்திடும் வேத முதலாகிய அறுபத்து நான்கு வித்தைகளையு முறையாக யூகித்த தனது பலப்பிராப்தியை யெல்லா மறிந்த முனிக்கூட்டங்கள் பெறுகின்ற முத்தியாகிய பரம பதத்திலே முதன்மையா யிருந்து வாழ்வார்க ளென்றவாறு. 8

19\. நான்முகனு மைமுகனு மறுமுகனும் படிந்துமதி
னலனுற் றோர்கள்
மேன்முறையா யிசைப்பதெனை விளங்குமதின்
மூழ்கினபேர் விபுத ராவர்
பான்மையினைப் பெரிதுவக்கும் பண்ணவரு முனிவர்களும்
பணிந்து போற்று
மான்மகிமைத் திருவருள்பெற் றெந்நாளு முத்திநெறி
வழங்கு மாதோ.

எ - து:—நான்கு திருமுகத்தினை யுடைய பிரமாவு மைந்து திருமுகங்களை யுடைய பரமசிவனு மாறு திருமுகங்களை யுடைய குமரகுருபர மூர்த்தியு மந்த நதியிலே தீர்த்தமாடித் தாங்க ளெண்ணிய வெண்ணமெலா மொருங்கெய்தப் பெற்றார்க ளென்று லிதற்குமேலே மேன்மையாகிய முறையினை யென் சொல்லக்கடவோ மிப்படிச் சிலாக்கியமாய் விளங்கிய வந்த நதியிலே மூழ்கின பேர்களெல்லாம் விபுதராகிய தேவத்தன்மை யடைவார்க ளவர்கள் பான்மையாகிய சிரமத்தை யறிந்த தேவலோகத்தி னிருக்கின்ற பழமையாகிய தேவ கூட்டங்களு முனிவ ரீட்டங்களு மவரது பாத பங்கயங்களிலே பணிந்து [1]போத்தி செய்வார்கள் திருமாலினால் மதிக்கப் பெற்றவரது திருவருளினாலே [2]யென்னாளும் பரமபதத்திலே நித்யசூரிய ராகிப் பரவாசுதேவனைத் தெரிசித் தானந்த வைபவத்தில் வாழ்வார்க ளென்றவாறு. 9

[1] போற்றி. [2] எந்நாளும்.

20. தந்தைதாய் குருவின் றெய்வநிந் தனையுந்
தலங்களை யிகழ்ந்திடு தாழ்வு
மந்தணர் பசுக்கள் கருவினை யழித்த
வருங்கொலை யாளர்க ளளித்தால்
நிந்தைசொல் புரிவோர் சந்திகள் தவிர்த்தோர்
நிலைதவிர்ந் துரைத்தபொய்ம் மொழியோர்
சந்தத மந்தத் தலத்தினை யடைந்தவ்
வரங்களைத் தொழுதிடிற் சாரா.

ஏ-து:—தனக் காதரவாநின்றும் வளர்ந்த தந்தையினையுந் தாயினையு மான்மாவினைப் புனிதமாக்கும்படியாகிய குருவினையு முத்தியினை யளிக்கும் படியாகிய தெய்வத்தையு நிந்தனை செய்கின்ற பஞ்சமா பாவிகளு மகா தலங்களை யெல்லா மிகழாநின்ற தாழ்வினை யுடையவர்களும் மகா பஞ்சமா பாதகமாகிய வந்தணராகிய சாத்வீக ஞானத்தினையுடைய பிராம்மணரையும் பசுக்களினையுங் கருவினையு மழித்தலாகிய கொலை செய்பவர்களுந் தன்னை ரக்ஷித்த பேர்க ளொருக்கா லில்லையென்ருல் நிந்தையாகிய வார்த்தையைக் கூறுகின்றவர்களுஞ் சந்தி வந்தனைகளைத் தவிர்த்த பேர்களு நிலைமையினை நீங்கிப் பொய்ம்மொழி கூறுகின்றவர்களு மிப்படியாகிய பாவியர்க ளெல்லா மெப்போது மிந்தக் கோலாசல மாகிய தலத்திலே வாசஞ்செய்து வராக நதியிலே தீர்த்தமாடி யரஙகன்ருள் திரிகாலமுந் தொழுது வணங்கிஞல் மேற்சொல்லிய பாவங்க ளெல்லா மவரைவிட்டு நீங்கிப் புனித பாவன மடைவார்க ளென்றவாறு. 10

தலவிசேட முற்றிற்று.

---

21. மங்கையர்க் கரசி வலப்புற மடைந்த
மால்வரை தலத்திடை மகிழ்வாய்க்
கங்கைமு வுலகின் வதிந்திடு நதிகள்
கமலைபொன் னடியினிற் பெருகச்
செங்கண்மால் பதத்திற் செனித்திடும் வராகத்
தீர்த்தத்தி னுயர்ந்திடு சிறப்பைப்
பங்கய னுரைப்ப தரிதெனச் சூதர்
பகர்ந்தனர் சவுனகர் தமக்கே.

ஏ-து:—மங்கையர்க் கரசியராகிய திரிபுவனத்தி னுள்ள விலக்கண நிறைந்த கன்னியர்களுக் கெல்லாம் ராசநாயகமாகி விளங்குகின்ற ஸ்ரீ மஹா லக்ஷ்மி தேவியானவள் பரவாசுதேவனது வலப்புறமாகிய வக்ஷத்திடையி

னெழுந்தருளிய வழகினையுடைய சொர்ணமயமாகிய கோலாசலத்தின்கண் மூவுலகிற் றங்கிய புண்ணியதீர்த்த சமுகங்களெல்லாந் திரண் டோர் வடிவாய்ப் பிராட்டியார் பாத கமலத்தி னுற்பவித்த விலக்குமியார் தீர்த்தம் வசியாநின்ற திருப்பதியி னனந்த கல்யாணகுண விபூதி விக்கிரக சொரூப ராகிய தாமரைக் கண்ணையுடைய வெம்பெருமானது திவ்விய திருவடிக் கமலத்தின்கண் ணுற்பவித்த வராக தீர்த்தத்தினை துயர்ந்த புனித பாவன மாகிய பலன்களைப் பிரமாவினது செந்தாமரைக் கமலம்விரிந் தரவாயின்கண் மருவிய வழகிய நாவிலுங் கூறிமுடியா தென்றார் சூதபுராணிக ரென்றவாறு. 11

22. தராதலம் புகழுங் கோலமால் வரையின்
தலச்சிறப் புரைத்திடத் தணியாச்
சராசர மனைத்துந் தழைத்தல்செய் முதல்வன்
றனிப்பெரும் புகழினைச் சார்ந்த
நிராமய மாகி நிறைந்தநின் மலனை
நீடுல கேழினுந் துதிக்கும்
பராபரப் பொருளாய்ப் பன்மறை புகழும்
பரமனை யருளெனப் பகர்ந்தார்.

எ - து :—இவ்விதமாய்க் கூறிய குரு பரம்பரனாகிய சூதபுராணிகரை யொன்று வினவுகின்றார்கள் சவுனகாதி முனிவர்க ளானவர்க ளிந்தப் பூமண்டல முதலியன வெல்லாந் துதித்துப் புகழ்கின்ற கோலாசல மகத்துவ மாகிய தலச்சிறப்பாகிய வமுதங் கலந்த தேனை யெங்கள் செவியாகிய வாய் பருகி இன்புறும்படியா யனுகியதனாலே யெங்க ளுள்ள முவரிநீ ருண்டவன் றாகந் தணியாது நன்னீர் வேட்டல்போல மூர்த்தி விசேடத்தை யினிமேல் தங்க டிருவாய் மலரவேண்டும் சராசரமாகிய வசையும் பொருள் அசையாப் [1]பொரு ளெவத்தினு மெள்ளுக்குள் [2]ளெண்ணைபோல் வியாபித்தருளுகின்ற முதல்வனாய வொப்பற்ற புகழெல்லாந் திரண் டோர் வடிவாகிய நிராமய மாகிய நிமலனை நீண்ட வுலகேழின்கண்ணுந் துதிக்காநின்ற பராபரப் பிரம பாவனைப் பொருளாய்ப் பலபல வேத காண்ட மத்தியாய வருக்க [3]முதலானதெல்லாந் தெளிவாய்க் கூறுகின்ற பரமபுருட விசேடத்தை யனுக்கிரகிக்கவேண்டு மென்றார்க ளென்றவாறு. 12

—◆—

[1] பொருளெவற்றினும். [2] எண்ணெய். [3] முதலான வெல்லாம்.

23. வாரீர் முனிவ ரந்தணரே
மாயை கடக்க மனமகிழ்ந்து
நாரீ பாகர்க் கெட்டாத
நாத னடியி னல்லன்பு
கூரு முங்கட் கிணையொருவர்
கூறத் தகுமோ குவலயத்தின்
யாரும் பரனை யறியார்க
ளறிவார் பவத்தை யகற்றுவரே.

எ - து:—வாரீர் மிகுந்த தவத்தையுடைய சவுனகாதி மாமுனிவர்களே! நாராயணனுடைய லீலாவிபூதி மாய்கைகளைக் கடக்கவேணு மென்று மனமகிழ்ந்தீர்க ளாகையால் பார்வதி தேவிக்கு நாயகராகிய பரம சிவனுக்கு மறியக்கூடாத பரவாசுதேவனுடைய திவ்ய சரணாரவிந்தங் களிற் பத்தி செய்யு முங்களுக்குச் சத்த சாகரஞ் சூழ்ந்த பூமண்டலங்களி னொருவரையு மொப்புச் சொல்லத் தகுமோ வப்படி யாராலு மறியக்கூடாத வந்தப் பரப்பிரமத்தை யறியப்பட்ட [1]மானுக்கள் பவமாகிய துக்க சாகரத்தைக் கடந்தவர்களாய்ப் பரமபதமான வைபவத்தை யடைவார்க ளென்று பின்னுங் கூறுகின்றார் சூதமுனிவ ரென்றவாறு. 1

24. உலகிற் சிலரப் பரம்பொருளை
யுணர்வோர் கேட்போ ருரைத்திடுவோ
ரலகிற் பவமாங் கடற்கடந்திங்
கழியாப் பரம பதமடைவர்
நிலையிற் பொறிக ளைந்தடக்கி
நிமிட மேக மனத்தினரா
யலையிற் பொலியும் பரன்சீர்த்தி
யறிந்த சிலநான் அறைகுவனால்.

எ - து:—இப்படி மிகுந்த சிலாக்கியமாகிய உலகத்தினிடத்திலே யந்தப் பரம்பொருளாகிய நாராயணனுடைய திவ்ய குணானுபவங்களைச் சர்வ காலங்களிலு மிடைவிடாது நினைக்கும் பரம பாகவதர்களாலே [2]கேழ்விசெய்த மாத்திரத்திலே யமுதபானம் [3]பண்ணதுபோல நித்தி யானந்தங்களை யடைந் தந்த நாமதேயத்தைத் தோத்தரித் தளவி னளவிடப் படாத செனனமாகிய கடலினைக் கடந் தழியாத பரமபதத்தை யடை

[1] மானுடர்கள்? மகான்கள். [2] கேள்வி. [3] பண்ணினது.

வார்களாகையால் நீங்களும் பஞ்சேந்திரியங்களை யுள்ளடக்கிச் சாத்வீக ஞானத்தை யடைந்தொரு நிமிடமாவது [1]கேழ்வி செய்வீர்களாகி லனந்த மான பலப் பிரயோசனத்தை யடைவீர்க ளாகையால் திருப்பாற் கடலி னனந்தவிமான சேகரரா யோகநித்திரை செய்கின்ற பரம புருஷனுடைய கீர்த்திலை யானறிந்த மாத்திரங் கூறக் கேட்பீராக வென்றவாறு. 2

25. உலகுதந் தானும் பல்வே றுயிர்கடந் தானு முள்ளே
யலகிற்பல் லுயிர்க டோறு மங்கங்கே யமரு வானும்
பலமறை சிரத்தி னிற்கும் பரமநா ரணனூர் தன்மை
சொலவறி யார்கண் மோக னத்தினிற் சுழல்வ ரன்றே.

எ - து:—வாரீர் சவுனகாதி முனிவர்களே யகிலமாகிய சராசரங்களை யெல்லாங் [2]கெற்பத்தின் வைத்துப் பாதுகாத் தூட்டு மவைகளைச் சிருட்டித் தும் நான்முகன் முதல் புல்லு பர்யந்தமாய சீவான்மாக்களுக்கெல்லா மந்தரி யாமியாயும் புஷ்பத்தின் வாசனையைப் போலவு மக்கினியிற் சூடு போலவு மெங்கும் பரிபூர்ணமாய் நிறைந்துநின்ற நாராயணனுடைய வனந்தமான கல்யாண குணங்களை யுணராமல் விருதாவான மோகன நூலை மெய்ம்மை யென் றறிந்து புத்தி சபலித்துத் தெளிவில்லாத மூடர்கள் பிறப்பாகிய சாகரத்தின் வீழ்ந் தந்தச் சுழியிலே யகப்பட்டு மூழ்குவார்கள பல பேர்க ளென்றவாறு. 3

26. அண்ட மளிக்கு மொருதெய்வ
மதனு ளடங்கு மனைத்துலகும்
புண்ட ரீக னதற்கிறையாய்ப்
பொருந்து மவன்றன் பேரருளாற்
கண்டங் கறைய சிவனுதிப்பன்
கழறு மிவனுற் கலைவேதம்
விண்ட ததுவும் சொலக்கேளு
மேலோ ருரைத்த படியென்றான்.

எ - து:—ஆதிகாலத்திலே நாராயண மூர்த்தியானவர் தமது மணி [3]வயத்திலே லோகாந்தரங்களை யெல்லா முள்ளே யடக்கி யிந்த வண்டங் களுக்குக் கர்த்தாவாகிய செந்தாமரைக் கமலம் போன்ற உந்திக் கமலத்தி னுற்பவித்த [4]பிறமாவானவர் சிருஷ்டி கர்த்தாவாகி யிருப்பா ரவருடைய கிருபையினாலே காளகண்ட திரிநேத்திரதாரி யாகிய பரமசிவ [5]னுர்பவிப்பா ராகையால் அவர்களுடைய வாயுசு [6]பிறமாணத்தை வேதசாஸ்திரங்களிற் சொல்கின்ற பிரமாணங்களினாலே பெரியோர்கள் கூறிய மார்க்கப்படி யானெடுத்துச் சொல்லுகின்றே னென்றார் சூதபுராணிக ரென்றவாறு. 4

[1] கேள்வி. [2] கர்ப்பத்தின். [3] வயிற்றிலே. [4] பிரமாவானவர். [5] உத்பவிப்பார்.
[6] பிரமாணத்தை.

27. அயற்கு மிரண்டா யிரஞ்சதுரி
யுகங்க ளொருநா ளாகுமது
வியற்கை முப்ப தாகிறிங்க
ளிசையு மதுவோர் பன்னிரண்டு
செய்ற்கை வருட நூறுகுஞ்
சிவனும் பலகாற் செனித்திறப்பன்
புயற்கும் வெண்மை யளித்தருளும்
பரமன் சிறிய நகைபுரிவான்.

எ - து :—ஆகையாற் சிருட்டி கர்த்தாவாகிய பிரம்மாவுக் கிரண்டாயிரஞ் சதுர்யுகஞ் சென்று லது ஒரு நாளா மந்த நாள் முப்பது சென்றால் ஒரு மாத மந்த மாதம் பன்னிரண்டு சென்றால் ஒரு வருடமா மந்த வருட நூறுசென்றால் [1]பிறமாவுக் கண்டத்துடனே லயம் வரு மாகையா லிவ ராயுசுக் குள்ளாய கயிலாய பதியாகிய பரமசிவனும் அனேக தரம் பிறந்திறப்பா ரந்த மஹாப் பிரளயங்களிலே மேகத்தினு மிகுந்த கரிய திருமேனியை யுடைய பரவாசுதேவ ரானவர் தமது செம்பவளம் போன்ற திருவாய் மலரிலே ஒருதரம் புன்சிரிப்புக் கொள்ளுவ ரென்றவாறு. 5

28. சொல்லு மயற்கு மரனுக்குந்
தொலையாச் சூர ருட்டர்பலர்
வெல்லு முலகிற் பவமிகுந்து
வினையை மிகவாய் விளைத்திடுநாட்
கல்ல வவரை யிச்சையினு
னறத்தைக் காப்பா னருட்கடவு
ளொல்லை யவதா ரங்கள்பல
வியற்றி யுலகை யளித்திடுவான்.

எ - து :—அப்படிச் சிருஷ்டி [2]கற்தாவாகிய நான்முகனுங் கயிலாய பதியாகிய பரமசிவனும் சுரர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத் தவர்களைச் செயிக்கத் தங்களால் முடியாம லிந்திரன முதலாகிய பேர்களுக்கு முனிவர்க ளந்தணர் முதலாகிய [3]வற்ணங்களுக்கு முசிதமாகிய [4]தற்மங்க ளயத்தை யடைந் [5]ததற்மங்களானது மிகுதியும் வளர்ந்து வருகின்ற சமயங்களிலே தம திச்சாமாத்திரத்தா லிந்த லீலாவிபூதியின் அவதாரங் களைச் செய்து பரம வைதீகமான [6]தற்மங்களைப் பரிபாலனஞ் செய்கின்றாகையினாலே அந்தப் பரம புருடனுடைய திவ்விய சரணாரவிந்தத்தினை யுபாசிப்பா மென்றவாறு. 6

---

[1] பிரமாவுக். [2] கர்த்தா. [3] வருணங்கள். [4] தர்மங்கள் லயம். [5] அதர்மங்கள். [6] தர்மங்கள்.

29. பரத்தி னவதா ரத்தைசில
பகர்வர் கணத்தோர் பங்கயனுஞ்

திலேயி னளவிற் சிறியோனும்
வரத்தின் பலத்தா னதிற்சிறிதிங்
கறைவன் கேளு மனமகிழ்ந்து
திரைத்தண் கடலி னுறைபரமன்
செகத்தை யளிப்பான் றிருக்கோலம்.

எ-து:—அந்தப் பரப்பிரம்மமாகிய நாராயணனுடைய வனந்த வவதாரங்களின் பெருமையினை வேதமுதலாகிய [1]வருபத்து நான்கு வித்தையை யுணர்ந்த பெரியோர்களுந் தாமரை மண்டப பீடத்தின் [2]வீத்திருக்காநின்ற சதுர்முகப் பிரம்மாவும் சடாமகுடத்திலே கங்கையைத் தரிக்காநின்ற பரம சிவனுங் கூறுதற் கரிய திவ்விய வவதார சரித்திரங்களைத் தினையைப் [3]பாற்கிலு மற்ப சிறியவனுன வடியே னரங்கநாயகனுடைய வரபலத்தினது வலியினுலே யறிந்த மாத்திரங் கூறுகின்றேன் [4]மகிட்சியாய்க் கேட்கக் கடவீர்க ளென் றருளிச்செய்கின்று ரலைகளையுடைய திருப்பாற்கடலிலே வாசஞ் செய்கின்ற பரமனுனவன் றன திச்சா மாத்திரத்தில் செய்த திரு வவதாரங்க ளெல்லாஞ் செகத்தை ரக்ஷிக்கும்படியாகிய திருக்கோல மென்று கூறிப் பின்னுங் கூறுகின்ருர் சூதமுனிவ ரென்றவாறு. 7

30. வராக மாகி முற்பரமன்
மலரா டிருவுக் கிதங்கொடுப்பான்
பராவுந் திருப்பாற் கடறணந்து
பரம பதம்போ லொளிதிகழும்
புராத னத்தாற் புகழிலகு
கோலா சலத்திற் பூரணமா
நிராம யத்த திருவரங்க
வுருவாய் நிறைந்தா னின்மலனே.

எ-து:—வாரீர் சவுனகாதி மகரிஷிகளே யாதி காலத்திலே மிகுந்த சிரேஷ்டமாகிய வெக்கிய வராகமாகத் திருவவதாரஞ் செய்தருளிய பரமனுகிய நாராயண மூர்த்தியானவர் பொன்னந் தாமரைக் கமலத்திலே வாசஞ்செய்கின்ற ஸ்ரீமகாலட்சுமி தேவிக் கிதங் கொடுக்கும்பொருட்டுத் திருப்பாற்கடலை விட்டு நீங்கிப் பரமபதத்தைப்போலப் பிரகாசிக்காநின்ற கோலாசல கிரியிலே பூரணமாகிய திருவவதாரஞ் செய்து நிராமயப் பரம்பொருளாகிய வரங்க நாயக வுருவாய் நிறைந் தெங்கும் வியாபித்திருக் கின்ரு னின்மல சொரூபியானவ னென்றவாறு. 8

[1] அறுபத்துநான்கு. [2] வீற்றிருக்காநின்ற. [3] பார்க்கினும். [4] மகிழ்ச்சி.

31. கேசவ னணிந்த மாலையு மூர்த்வ
புண்டரக் கிளர்ச்சியும் பெருகும்
வாசமார் துளப மாலையும் புயத்தி
னஞ்சனக் குறியின்வண் மைகளும்
பாசம தகன்ற பரமனுர் பாத
தீர்த்தமே பலமெனப் பொசித்த
தாசர்கள் பரம பதத்தின்வீற் றிருந்து
தழைப்பரென் றுரணஞ் சாற்றும்.

எ - து:—கேசவனுகிய திரிமூர்த்தி சொரூபமானவர் திருமுடி முதலாகிய வுறுப்புகளி லணிந்த திருமாலிகையினை யணிந்து மவனது துவாதச புண்டரத்தினை வைகானஸ பாஞ்சராத்திர விதிப்படி சிரமுதலாகிய வுறுப்புகளிலே யணிந்தும் சங்க சக்கரக் குறியினை இரண்டு திவ்யப் புயங்களிற் றுங்கியும் பாசபந்தத் [1]தடர்வை நீக்காநின்ற பரமனுருடைய திவ்விய தேசோமய மாகிய காந்தியையுடைய பாதபங்கயத் தீர்த்தத்தை திவ்வியமாய்ப் [2]பொசித்த பரம ஞானிகளாகிய பாகவதர்கள் பரமபதத்தில் நித்திய சூரியர்களாய் [3]வீத்திருந்து பரவாசுதேவனுடைய சுக சொரூப வரம்பி லின்பத்தைத் தெரிசனஞ்செய்து [4]வீத்திருப்பார்க ளென்று வேதஞ் சொல்லு மென்று சொல்லுவா ரென்றவாறு. 9

32. நித்தியமாய்த் திருவாரா தனஞ்செய் சேட
நிகழ்கமலப் பொன்னடியி னிகழுந் தீர்த்தம்
பத்திகமழ் திருமாலைத் துளப ஞானப்
பரிவட்டம் பரமனணி களபச் சாந்தம்
வெத்திபுனை யரனயன்மா தவர்விண் ணோர்கள்
விரும்பிமிகப் பெரும்புகழை யடைந்தா ரென்று
சத்தியமாய் வியாதமுனி யுரைத்தா ரந்தத்
தழைத்தமணிக் கரணிகையாந் தலத்தி னென்றுன்.

எ - து:—நித்யத் திருவாராதனஞ் செய்கின்ற [5]பிறசாதங்களும் பிரகாசித்து விளங்குகின்ற செந்தாமரைக் கமலம்போன்ற திவ்விய திருவடிச் சம்பந்தமாகிய தீர்த்தங்களும் திருமுடி முதலாகிய திருமேனியி னணிகின்ற பத்தி மாலையாகிய துளபமாலையு ஞானவிநோதமாகிய பரிவட்டமு மவரணிந்த களப கஸ்தூரி சாந்து சந்தனுதிகளாகிய பரிமள திரவியங்களும் சிவன் [6]பிறமா முனிவர் கூட்டங்கள தேவ கூட்டங்க ளுண்டு மணிந்துஞ் [7]சறுவ காலங்களிலு மவரிட சரணரவிந்தங்களைத் துதிசெய்தும் விரும்பியு மிகுந்த புகழினைப் பெற்றுர்க ளிந்தப் [8]பிறபல ஞான விநோத சாத்வீக

[1] தொடர்பை. [2] புசித்த. [3] வீற்றிருந்து. [4] வீற்றிருப்பார்கள். [5] பிரசாதங்களும். [6] பிரம்மா. [7] சர்வ. [8] பிரபல.

[1]சர்வஞ்ஞியராகிய ஸ்ரீமன் [2]காருபணனின் பரத்துவத்தின் முனிவர் கூட்டங்க ளெல்லாங் கேட்கத்தக்கதாக மணிகர்ணிகையாகிய காசித் தலத்தினின்று வியாஸமகரிஷியானவர் சந்தேக நிவிர்த்தி செய்யும்பொருட்டாய் [3]நிஷயமா யருளிச்செய்தா ரென்று சவுனகாதி மகாரிஷிகளுக்குச் சூதபுராணிக ருரைத் தருளினு ரென்றவாறு. 10

33. இருக்குவே தத்தி னட்டக மிரண்டி
னிரண்டதா மத்தியா யத்தின்
றிருக்கிள ரறுநான் காகிய வருக்கஞ்
செப்பிடு மிரண்டதா மறையின்
பெருக்கமாஞ் சாகை யதனினு மார
ணத்தினு மதர்வத்தும் பேசு
மருக்கமழ் துளவோ னூர்த்வபுண் டரமே
மறையவர்க் குரித்தென வகுக்கும்.

எ - து:—வாரீர் முனிக்கூட்டங்களே யிதற்குப் பிரமாணமாவது வேத பாராயண பண்டிதராகிய பிராம்மண சென்மத்துக் கேதுவாகிய திருமண் காப்பு விதியே யணிவது விகிதமென்று இருக்குவேத மிரண்டா மட்டக மிரண்டா மத்தியாயத்திற் கூறுவது. அதுவன்றியு மிரண்டாம் வேத மாகிய எசுர்வேத சாகையினு மாரணத்திலேயு மதர்வத்திலேயுந் திவ்விய பரிமளங்களைக் கமழுகின்ற துளப மாலாதரனுகிய வரங்கநாயகருடைய வூர்த்வ புண்டரமே யணிவது மறையவர்க் குரித்தா மென்று விதி விதித் துரைக்கு மிருதிகள சங்கிதைகள் முதலான தென்று பின்னு மருளிச்செய் கின்றூர் சூதபுராணிக ரென்றவாறு. 11

34. இரண்ட தாமறை யாதியாம் பருச்சமைந் திடத்துத்
திரம தாமனு வாகத்தின் வியாதன்சீர் செப்பும்
பரவு நாரதீ யப்பெயர் பாகவ தப்பேர்
விரவு விண்டுநற் புராணத்தும் பரத்துவம் விளம்பும்.

எ - து :—இரண்டாம் வேதமாகிய வெசுர்வேதத்திலே முதற் [4]பருச் சத்தி லேந்தா மனுவாகத்தில் வியாதனுடைய கீர்த்தியைச் சொல்கின்ற தப்படி யதிசிரேஷ்டராகிய மகாரிஷியானவ ரிந்த உலகத்திலே சகல தர் மார்த்தங்களும் விருத்தி யடையும்படியா யவரித்தருளிய நாரதீய புராணம் பாகவதம் விண்டுபுராணங் காருட முதலானதெல்லாம் ஸ்ரீமன் நாராயணன் பரத்வத்தை விளக்கு மென்றவாறு. 12

---

[1] சர்வஞ்ஞர். [2] நாராயணன். [3] நிச்சயமாய். [4] பரிச்சேதத்தில்.

35. உலக மியாவையும் படைத்தளித் தழிப்பவ னொருவ
னலகி லாப்புகழ் சேர்ந்திடு நாரண னாகிக்
குலவு நற்கரி கூப்பிடக் கராவினைக் கொன்றோன்
பலர்பு கழ்ந்திடு சமையகோ டிகளெலாம் படைப்போன்.

எ - து:—வாரீர் மஹா முனிவர் கூட்டங்களே யிந்த வகிலமான செகத்துக்குஞ் சாமியாயு மனந்த கல்யாண குணவிபூதி விக்ரக விசிஷ்டராயுஞ் சகலசீவகோடிகளையும் வகுத்து மவைகளை ரக்ஷித்தருளியும் அதன் பின்பு சர்வசங்காரஞ் செய்தருளிய பரப்பிரம்மமான ஸ்ரீமன் நாராயண னொருவனே பரமல்லது வேறில்லை என்னுகைக்குச் சக்கியமாகிய சர்வ மங்கள குண சாம்ராஜ்ய சாத்வீக பரத்துவத்தை யாதி காலத்திலே செந்தாமரை வெண்டாமரை செவ்வல்லி நீலோற்பல முதலாகிய புட்ப சமூகங்களையுடைய தடாகத்தின் வாசம் செய்கின்ற முதலையினுலே பீடிக்கப்பட் டிரங்காநின்ற கசேந்திர னென்கின்ற யானையான தாதிமூலமேயென்று கூப்பிட வந்த முதலையைச் சக்கரத்தினுலே யிருபிளவாகத் தடிந் தந்தக் கஜேந்திரனைப் பாதுகாத்தருளிய வாதிமூலமானவ ரிவ்வுலகத்தி னெச் சமயத்தாரும் புகழ்கின்ற சமயகோடிகளை யெல்லாம் வகுப்பவ னொருவனே இந்த உலகத்துக்குப் பரமாத்மாவாகிய முதல்வ னல்லது வேறில்லை யென்றார் சர்வ ரிஷிகளுக்கெல்லா மிகுந்த சிரேஷ்டராகிய வியாத முனிவ ரென்றவாறு. 13

36. சகல மங்கல குணத்தினுற் சார்ந்ததத் துவத்தோன்
அகில லோகநி யாமக னந்தரி யாமிப்
பகரு முந்தியிற் பரமனை யளித்தருள் பதியோ
னிகரி லாதபொன் னரங்கனே பரமென நுவன்றான்.

எ - து:—வாரீர் சவுனகாதி மகாரிஷிகளே அனந்த கல்யாண குண விபூதி விக்ரக விசிஷ்டராயும் சர்வ மங்கள குண வந்தனை யோக்கிய பாத்திரனுயும் சாத்வீக தத்துவ சொரூபராயும் அகில லோகநியாமகனுயும் அளவிடப்படாத ஞானசக்தி சம்பூர்ணராயும் ஸர்வ வஸ்துவிலும் உள்ளும் புறமும் வியாபித்தருளிய செந்தாமரைக் கமலம் போன்ற உந்திக்கமலத்திலே சதுர்முகனைப் படைக்காநின்ற சர்வதேவ சிகாமணியாகிய [1]வொப்பத்த பொன்னரங்கனே பரப்பிரம்மமாகிய உலகத்துக்கெல்லா மேக நாயக னென்று துணிவா யருளிச்செய்தார் வியாதமகாமுனிவ ரென்று சூதமகாரிஷியானவர் சவுனகாதி மகரிஷிகளுக்கு அருளிச்செய்தா ரென்றவாறு. 14

37. வானோர் கோவு மரனயனும் வளரு மறைக ளறம்வேள்வித்
தானு வறியாப் பரம்பொருளைச் சகல லோக தயாபரனைத்
தேனூர் கமலை மணவாள னென்றே சிந்தை சலியாது
பூனே ரடியைத் தினந்துதித்துப் புனித ராகிப் பொருந்துவிரே.

---

[1] ஒப்பற்ற.

எ - து:—இந்திரன் முதலாகிய தேவ கூட்டங்களும் பரமசிவனும் [1]பிற்மாவும் வேதங்களும் காணப்படாத பரம புருடோத்தமனைச் சகல ஜீவகோடிகளையும் தயைபுரிந்து ரக்ஷிக்கப்பட்ட தயாபர மூர்த்தியைத் தேனைச் சொரிந்து திவ்விய வாசனையை வீசாநின்ற செந்தாமரைக் கமலத்தின் வாசம் பண்ணப்பட்ட ஸ்ரீமகா லக்ஷ்மி தேவிக்கு நாயகனாகிய நாராயணனுடைய சாத்விக ஞானத்துக் குட்பட்டவரை இடைவிடாது நினைந் துபாசித் தவருடைய வனுக்கிரகத்தினாலே ஞான சௌபாக்கியத்தை யடைந்து நித்ய சூரியராய்ப் பரமபதத்திற் புகுவீர்க ளென்றார் சூதபுராணிக ரென்றவாறு. 15

38. சந்திர சேகரன் றாமத குணத்தினாற் சனித்து
வந்த சூரனால் வளம்பெறு தன்னுல கிழந்து
இந்தி ரன்முத லமரர்க ளித்தல மடைந்து
சந்த தம்புகழ் சசியுடன் பொன்னகர் சார்ந்தார்.

எ - து:—சடாமகுடத்திலே சந்திரிகையைத் தரித்த சந்திரசேகரனாகிய பரமசிவனானவ னிந்திரன்பேரிற் றாமத குணத்தினாலே பிறந்து வந்த காலநேமி யெனனும் சுரேந்திரனாலே காமதேனு கற்பகவிருக்ஷஞ் சிந்தாமணி சங்கநிதி பதுமநிதி இந்திராணி ஐராவதம் சயந்தன் ரம்பைகள் முதலாகிய வளத்தினைப் பெறுகின்ற தன்னுலகத்தை யவ் வசுரனானவன் [2]பத்திக் கொள்ளத்தக்கதாய்த் தானதை விட்டுப் பெயர்ந்து சசியாகிய விந்திராணி சயந்தமகாராசன் முதலாகிய தேவ கூட்டங்களுடனே இந்தக் கோலாசல கிரியிலே வந்து தவம்பண்ணி யரங்கநாயகருடைய கிருபையினாலே யவரது விச்வ சொரூபானந்த சேவையைத் தெரிசித் தானந்த வைபவத்தை யடைந் ததன்பின் பவராலே காலநேமியினைச் செயித் திந்திரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய் தனுப்பிவைக்கப் பட்டாபிஷேக பதியாய்ப் பொன்னுலகத்தைச் சார்ந் தரசாட்சி செய்து சக்கர நடாத்தி வாழ்ந்தா னென்று கூறினார் சூதபுராணிக ரென்றவாறு. 16

39. என்றபோ தருந்தவ ரிறைஞ்சி யெங்கட்கு
நன்றுநன் றுரைத்தனை நவையிற் கேட்டன
மன்றுல கெங்கணு மாளு மிந்திரன்
சென்றதென் காரணஞ் செப்பு வீரென்றார்.

எ - து:—இந்தப் பிரகார மிருடியர் சிரேஷ்டராகிய சூதர் சொல்ல வரிய தவசிகளானவர் கூறுகின்றார்: சுவாமி நன்மையனவாகிய கதாப் பிரசங்கத்தை யெல்லாம் வரன்முறையாய்ச் சொன்னீர் யாங்களும் [3]பவுத்திரமாய்க் கேட்டு ஞானத்தை அடைந்தோ மப்படியாகிய [4]திறிபுவனத்தை யாளுகின்ற ராசகண்டீரவனாகிய விந்திரனானவன் காலநேமியாற் றனது வளப்பங்களையெல்லா மிழந்து கோலாசல கிரியிலே வந்து தவஞ் செய்த காரண மெந்த வேதுவினாலே வந்த தந்தக் கதாப் பிரசங்கத்தைக் கூறுக வென்று கேட்கச் சூதபுராணிகர் சொல்கின்றா ரென்றவாறு. 17

மூர்த்தி விசேடமுரைத்த அத்தியாய முற்றும்.

---

[1] பிரம்மாவும். [2] பற்றிக்கொள்ள. [3] பவித்திரமாய். [4] திரிபுவனத்தை

40. ஆதியி னிந்திர னமர ரோடுதன்
சோதிமா மகுடமுந் துலங்க மேனகை
மாதொடு முருப்பசி வளமி குந்திடு
நாதமு நாட்டிய நயந்து காணவே.

எ - து:—பூருவ காலத்தி னிந்திர மகாராசனானவன் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிர மிருடியர் கூட்டங்க ளட்ட வசுக்கள் சத்த மருத்துக்கள் சூழத்தக்கதாய் மவுலி மகரகுண்டலம் புயத்தேறி அஸ்த கடகம் பதக்க முத்துமாலை மோகன ரத்தினமாலை முதலாகிய வாபரணங்கள் [1]பிறகாசிக்கத் தேவசபையிலே [2]வீத்திருக்கும்போ தரம்பை யுருப்பசி [3]திலோற்தமை முதலாகிய தேவகன்னியர்க ணடனஞ் செய்யவுந் தும்புரு நாரதர்கள் வீணைகள் வாசிக்கவும் முனிவர்க ளாசீர்வதிக்கவு மட்ட லட்சுமி மனோகரனாய் [4]வீத்திருந்தா னென்றவாறு. 1

41. விண்ணவரு முருப்பசியு மேனகையும்
பலபலவாய் வினோதங் கொண்டு
தண்ணுமையுங் கீதமொடு நாதவிசைத்
தாளமொடு சதங்கை மேவ
வண்ணல்முனே வீணைதொனித் தேனருவி
பொழியவரு வரிய ராகம்
பண்ணதரு நிழலுதிரும் பனிமலரு
மினியநறை பகரும் வேலை.

எ - து:—சகலமான தேவ கூட்டங்களும் ரம்பை யூர்வசி [5]திலோற்தமை முதலாகிய வழகினு னிறைந்த கன்னியர்கள் பலபல சங்கீத வினோதமாகிய பரதநாட்டியங்கள் செய்ய வந்த வாத்தியத் [6]தொனிகளானது திக்கு திகாந்தங்களெல்லாம் [7]பிறமிக்கவுஞ் சங்கீத ஸாம்ராஜ்ய ஸாயுஜ்யமானது தேனருவிபோலக் கர்ணாமிருதமா யிருக்கவு மிப்படியாகி வரம்பா ஸ்திரீகளுடைய [8]பிறதாபங்களைக்கொண்டு களிகூர்ந்த விந்திர மகாராசனானவன் கற்பக விருட்ச மலர்களான திதழ்கள் விரிந்து தேன்றுரைகளைத் துளிக்க வதனுடைய நிழலிலே [9]வீத்திருந்து சகல ஸாம்ராஜ்ய சுந்தர வைபவத்தோடுங் கூடி மனோகராஞ்சிதமாய் [10]வீத்திருந்தா னிந்திர மகாராச னென்றவாறு. 2

[1] பிரகாசிக்க. [2] வீற்றிருக்கும்போது. [3] திலோத்தமை. [4] வீற்றிருந்தான்.
[5] திலோத்தமை. [6] தொனிகளானவை. [7] பிரமிக்கவும். [8] பிரதாபங்களை. [9] வீற்றிருந்து.
[10] வீற்றிருந்தான்.

42. இரும்பருங்குங் குற்றுடைவா ளிலங்கப்பணி
யிலங்கதுங்க விழுளி காட்டப்
பெருங்குலிசப் படைமுதலி னிடைவிளங்கு
மின்னலெனப் பொலிவு காட்டத்
தரும்பிரச மலர்களென்னத் தாமரைக்கண்
ணுடலெங்குந் தழைத்துக் காட்டச்
சுரும்பிமிருந் தொடைமுடியிற் புலோமிசைசெம்
பஞ்சடிமென் சுவடு காட்ட.

'எ - து :—இப்படி யனேக [1]சம்பிறமத்துடனே ' கொலுவிருக்கின்ற விந்திர மகாராசனுடைய பெரிய விடைகளிலே கோடி சூரியப் [2]பிறகாச மாகிய வுடைவா ளாயுதமானது [3]பிறகாசிக்கவுஞ் சர்வாபரண [4]பூசித வலங்கார சொரூபனுய்த் தனது கராம்புயத்திலே விளங்காநின்ற வச்ராயுத மான இந்திர மேகத்தி னடுப் [5]பிறதேசத்திலே உண்டாகிய மின்னலைப்போல் தவளிக்கவு நீலகிரியைச செந்தாமரைக் கமல மூடிக்கொண்டதுபோல வவனுடைய தேகங்களெல்லா மாயிரங்கண் [6]மலர்களானது [7]பிறபலிக்கவும் [8]வண்டுகளானது [9]தேன்களையுண்டு [10]தெக்கிட்டலாகரியினுலே யிசைகளை மிழற்றுநின்ற திவ்விய பரிமளங்களைத் திக்கு திகாந்தங்களெல்லாம் வீசாநின்ற கற்பக மந்தார பாரிஜாத வரிசந்தன முதலாகிய புட்ப மாலையைத் தரித்த திருமுடியிலே யிந்திராணியினுடைய பாத தாமரையி னூட்டிய செம்பஞசானது [11]பிறகாசிக்க [12]வீத்திருந்தா னென்றவாறு. 3

43. கின்னரர்கிம் புருடர்விஞ்சை கருடகாந் திருவர்சித்த
குழாங்கள் சூழப்
பன்னகரும் வருதிக்குப் பாலகரஞ் சலிசெய்து
பார்வை நோக்க
முன்னவரு முனிக்கணங்க ளாசிபல மொழிந்துமிகு
வினையங் கூறத்
தன்னிகரி லிந்த்ராணி தரளகுரு நகைவிழியின்
சாயல் காட்ட.

எ - து :—கின்னரர்கள், கிம்புருடர்கள், விஞ்சையர்கள், வித்தியா தாரர்கள், கருட கந்தருவர் முதலாகிய தேவகூட்டங்கள் சூழ்ந்து துதிக்கவும் தனனையொழிந்த திக்குப்பாலகரானவர்கள் தெண்டன் சமர்ப் பித்துத் தன்னருகிற் சூழ்ந்திருப்பவு மகாவிருடிய கூட்டங்க ளாசீர்வதித் தினிமை மொழிகளைக் கர்ணமிர்தமாயக் கூறவு மிந்திராணியினுடைய

---

[1] சம்பிரமத்துடனே. [2] பிரகாசமாகிய [3] பிரகாசிக்கவும் [4] பூஷித. [5] பிரதேசத்திலே. [6] மலர்களானவை. [7] பிரதிபலிக்கவும். [8] வண்டுகளானவை. [9] தேனை. [10] தெவிட்டலாகையினுலே. [11] பிரகாசிக்க [12] வீற்றிருந்தான்.

செவ்வாம்பல் விரிந்தா லொத்த வாயினிடத்திற் [1]பிறகாசிக்காநின்ற தாவள்ய மாகிய வாணி முத்தினை யொத்த தந்த பந்திகளானது சசிதேவியினுடைய கண் [2]சாய்கையை யெல்லாங் [3]காட்டித் தென்றவாறு. 4

44. விரிந்துபுய மிரண்டினொடும் படர்ந்தவிச யத்திருவும்
விளங்கிக் காட்டப்
புரிந்தருளும் விழியினொடு சிவந்தபவ ளக்கனிவாய்
பொலிந்து காட்டச்
சரிந்தடைக்காய் குறுந்தொழுவர் தாங்கிமுனே கைநீட்டத்
தாம ரைத்தா
ணெரிந்தமுடி யமரர்களும் பெருந்துதிகள் பரவவவ
ணிகழ்ந்த வேலே.

எ - து :—மகாமேருவுக்குச் [4]சமைதையாகிய விரண்டு விரிந்த புயங்களி லும் [5]விசைய லட்சுமியானவள் மிகுந்த கிருபையோடும் [6]பிறகாசிக்கவும் நீலோற்பலம் போன்ற விரண்டு நேத்திரங்களுடனே செம்பவளம் போன்ற திருவாய மலரானது [7]பிறகாசிக்கவு [8]மடககாய [9]வெத்திலே வாசனையோடுங் கூடிய வேல லவங்க முதலாகியதை யடைப்பைக்காரர் தாங்கி முன்னே கைநீட்டிக் கொடுகக வாங்கி வாயமடுத்து 5 தாமரைக் கமலத்தினை யொத்த பாத பங்கயங்களிலே [10]கிறிகிடங்களோடு கிறிகிடங்கள் தாக்கி நெறியத் தக்கதாய்த் தேவாதிகள் தெண்டன் சமாப்பிக்கத் தக்கதாக [11]வீத்திருந்தா னிந்திர மகாராச னென்றவாறு. 5

45. கங்கைமுடி வைத்தசடைச் சங்கரனைத் தொழற்குரிய
கால மென்னத்
தங்கமரர் சங்கமொடு மிங்கிதமாங் கயிலாயத்
தடத்தை நோக்கி
மங்கலமாய் வெங்கயமேல் மங்கைசசி யிந்திரன்மா
தவர்கள் சூழப்
பொங்குகடல் தங்குநடு வங்கமிசைத் திங்களெனப்
பொலிவ தானன்.

எ - து :—கங்கையைச சடா மகுடத்திலே தரிக்காநின்ற சங்கரனாகிய பரமசிவனைத் தொழுதற குரிய மிகுந்த புண்ணிய காலமாகிய [12]பிறதோஷ காலம் வந்தபடியினாலே இந்திர மகாராச னானவன சகல தேவர்களும் முனிவர் கூட்டங்களுஞ் சூழ்ந்துவர விந்திராணி சமேதனாய் ஐராவதத்தின்மே

---

[1] பிரகாசிக்காநின்ற. [2] சாயலே [3] காட்டிற்று [4] சமதை [5] விசயலட்சுமி [6] பிரகாசிக்கவும். [7] பிரகாசிக்கவும். [8] அடைக்காய். [9] வெற்றிலே [10] கிரீடங்களோடு கிரீடங்கள். [11] வீற்றிருந்தான். [12] பிரதோஷகாலம்.

வாதிராகணிதமாய் மங்கள வாத்திய மாகிய பேரிகை, குடமுழா, சல்லரி, மல்லரி, தேவதுந்துபி, பணகவாத்தியம், கோமுகவாத்தியம், மண்டூக வாத்தியம், பம்பை, மத்தளம் முதலாகிய வாத்தியங்களு முழங்கத் தக்கதா யங்களினுலே பொங்கிப் [1]பிறகாசிக்கப்பட்ட சமுத்திர நடுப் பிரதேசத்திலே மிதக்காநின்ற கப்பலிலே பூரண சந்திர னேறி நடத்தினு லெப்படியோ [2]வத் தன்மையாய்க் கயிலை வரையைக் குறித்துப் போனு னிந்திர மகாராச னென்றவாறு. 6

46. இவ்வண்ண மிவனேக விலங்குகயி லைக்கிரிவீத்
திருக்குந் தேவன்
மையண்ணக் கிராதகனுய் வருபூத கணங்களொடு
வேட மாறிக்
கைவண்ணச் சிலையோடு கடல்திரண்டா லெனவழியிற்
காண வந்தான்
செய்வண்ண மொன்றறியான் றேவர்கோ னிதென்ன
செயலென் றெண்ணி.

எ - து :—இந்தப் [3]பிறகாரம் சர்வ மங்களங்களுடனே கூடிய தேவராச னுனவன் கைலாய மார்க்கத்தைக் குறித்துப் போகும்போது அந்தக் கயிலாய பதியாகிய சிவனுனவர் நீலகிரியைப் போன்ற கரிய திருமேனியை யுடைய வேட ரூபமாய் வடிவெடுத்துக் கையிலே தங்கிய காண்டீபமும் அதிற் பூட்டுகின்ற பாண சந்தானங்களுங் கடலைப்போலச் சூழ்ந்து வருகின்ற வேடக் கூட்டங்களும் வரும்படியாகிய காரணத்தைக் கண் டிதென்ன வாச்சரியமா [4]யிருக்குது; நாம் சிவனைப் [5]பாற்க வந்தவர்க ளிந்த வேடர்களைப் பார்க்க வச்ச மில்லாமலே எதிரிலே வரப்பட்ட வித மென்ன வென்று நினைத்துக் கோபித்தா னிந்திர மகாராச னென்றவாறு. 7

47. மதியாது வொதுங்காது வருவேடன் றிரட்சிகண்டு
மனதிற் கோப
முதிராகச் சினத்தோடு கண்சிவந்து மெய்விதிர்த்து
வெருட்ட நோக்கி
யெதிராக வருவேடர்க் கித்தனையோ வெனவுருக்கி
யிடியிற் றுக்கு
மதிரான மொழியுரப்பிக் கடிதான உத்தரமொன்
றறைவ தானுன்.

எ - து :—தேவதைகளுக் கெல்லாம் அரசனுகிய விந்திர னுனவன் மிகுந்த கோஷ்டத்துடனே வருகிறதைக் கண்ட வேட ரானவர்கள் [6]சத்து

[1] பிரகாசிக்கப்பட்ட. [2] அப்படியாய். [3] பிரகாரம். [4] இருக்கிறது. [5] பார்க்க வந்தவர்கள். [6] சத்ரும்.

மறியாமல் ஒதுங்காமல் வீரங்களை மதித்துக்கொண்டு வரும்போது தேவ ராசனுடைய விரண்டு கண்களும் [1]செம்மானம் போலச் சிவந்து புயங்களானவை துடிக்க வாயிலே அக்கினிப் பொறிகள் சிதற வாக்கிரமித்துக் [2]கெற்சித்தா னந்த சத்தமானது கோடைக் காலத்தின் மேகமாகிய விடிகளிடித்தது போலத் திரிலோகங்களுஞ் செவிடுபட்டுப் போகப் பின்னையுமிகுந்த கோபக் குரோதனாக வந்த வேடரைப் பார்த் தாங்காரப்பட்டுச் சிங்கத்தைப் போலச் சீறிப் பயங்கரத்தைச் செய்தலைக் குறித்த விந்திரனவன் நமக் கெதிர்ந்து வருகின்ற வேடக் கூட்டங்களுக் கித்தனை [3]கெற்வமோ வென் றவமதித்தவனுக் கொடூரமாகிய மொழியினாலே யுரப்பிக் காடண்ணியமா யந்த வேடரைப் பார்த் தொரு மொழி கூறுகின்று னென் றவாறு. 8

48. பாதிமதி கங்கையணி பரமனையாம் பணியவரும்
பாதை தன்னி
னேதுமிலாக் க்ரோதகரீ யெதிராக வருவதென்னிக்
கணத்தி னும்மைக்
காதுமுன்னே யோடியொளித் திடுமினென வுரைப்பவெதிர்
கால காலன்
வேதைதர முன்குதித்துக் கைவாளிற் சிரம்பொடிப்ப
விபுதர் கோமான்.

எ - து :—அர்த்த சந்திரனையுங் கங்கா பவானியையுந் தமது சடா பாரத்திலே தரித்தருளுகின்ற கயிலாய பதியாகிய சிவனை யான் சேவிக்க வருகின்ற [4]மாற்கத்திலே மிகுந்த விருளையுடைய வாரண்யத்திலேயு மலையிலேயு மிருககின்ற வேடர் குலத்தராகிய குகைகளிலே வாசம் பண்ணுகின்ற விழிஞர் நீங்கள் [5]சத்து மச்ச மில்லாம னமக்கு எதிராக வருகையினு லிந்த தற்காலத்திலே சின்ன பின்னமாகக் கண்டித்து விடுவேனதற்கு முனனே ஓடி யொளித்துப் பிராணனைத் தப்புவித்துக் கொள்ளுவீரென் றிந்திரன் கூறப் பூர்வ காலத்திலே மார்க்கண்டேயருக்காக [6]வெதுத்த வெமனை யுதைத் தவரைப் பாதுகாத்தருளிய வேட ரானவர் சீறித் தம்முடைய கையி லிருக்கின்ற வில்லினாலே யோங்கி யடித்தாரென் றவாறு. 9

49. சோதிமகு டந்தகர்ந்து முடியுடைந்து சோகமுறத்
துணையாம் வானோர்
வேதைசமுத் திரமூழ்கி மெய்மறந்தா ருய்வதற்கே
[7]வுபாய மெண்ணிப்
பாதிமதி யணிந்தவனைப் பணிந்துமனப் பூசையினாற்
பத்தி செய்யப்
போதவவ சந்தவிர்ந்து விழிதிறக்க வெதிரில்புராந்
தகனும் வேடன்.

[1] செவ்வானம். [2] கர்ச்சித்தா னந்த. [3] கர்வமோ. [4] மார்க்கத்திலே. [5] சற்றும்.
[6] எதிர்த்த. [7] யுபாய.

இ - து :—அந்தக் கயிலாய பதியாகிய வேட னானவன் அம்புகொண்டு ஓங்கியடித்த மாத்திரத்திலே மிகுந்த காந்தியையுடைய வயிரத்தின் கதிர் மாறிய கிரீடமான துடைந் திந்திரனது சிரமானது பிளந் துதிரப்பிரவாக மெடுப்ப [1]மூற்சித்தா னதைத் தேவர்கள் கண் டதிசயித்துத் துன்ப சாகரத்தி னழுந்தினார்கள். அந்தச் சமயத்தி லிந்திர மகாராச னானவன் [2]மூற்சை தெளிந்து கைலாய பதியைப் பிரதோஷ காலத்தைக் குறித்துச் சேவிக்க வந்த நமக் கிந்த வாபத்து வரவேண்டிய காரண மென்னவென் றவசரத் தியானித்துப் பஞ்சேந்திரியங்களை உள்ளடக்கி ஞான சொரூபனான வான்மாவை யறிவே சொரூபமாகக் கண்டவனாய் மனோபூசை செய்து பத்தி விசுவாசத்துடனே பார்க்கும்போதி னெதிரிலே நின்று தோன்றும் படியான திரிபுராந்தக னென்னும் வேட னென்றவாறு. 10

50. மெய்முழுதும் பூசைமல ரவயவங்க டோறுமொய்த்து
விளங்க நோக்கிக்
கைவிதிர்த்திந் திரனகன்று பலபலவோ சனைநிகழ்த்தக்
கால கால
னையமிலை வெருவேனின் னகமறிவான் புகுந்தனமென்
றறைந்து வன்போ
டுய்யகங்கை நீராட்டி மலர்க்கரத்தாற் றழுவிமிக
வினயஞ் சொல்வான்.

எ - து :—தேவ ராசனாகிய விந்திர மகாராசனை யடித்த வேட ராச னானவன மிகுந்த புசபல பராக்கிரமத்துடனே யெதிரிலே நிற்கப்பட்டவனை [3]யுத்துப் பார்க்கும்போ தவனுடைய சிரசு முதலாகிய உறுப்புகளில தான் மானத பூசையாகச செய்த வெணடாமரைக கமலஞ செந்தாமரைக் கமலஞ் செவவல்லி நீலோற்பல மந்தார பாரிசாத முதலாகிய புஷபங்க ணிறைந் திருக்கக் கண் டிவன் வேட னென்கின்ற வாசங்கைக தீரந்து கைலாய பதியே இந்த ரூபங்கொணடு சகல தேவாதிகளு மறிய [4]வவமரியாதை செயதா ரென்று நினைத் தாலகால விடத்தைப்போலச சீறிக் குரோதமா யிருப் பதனைக் கயிலாய பதியாகிய வேடரானவா கணடு, வாராய தேவராசனே! நீ சந்தேகப்பட வேணடா. நாமுனது பத்தி சோதிகக வந்தோ மாகையா லிப்படிச் செய்தோ மாகிலு முனது தேகத்தி லொரு வாதனை யில்லாமற் செய்கின்றோ மென்று தமது சடா மகுடத்தின விளங்கிய கங்கையினாலே யாட்டுவித் தின்ப மயமாக்கித தம் கையினாலே யவனது சரீரத்தைத் தடவிக்கொடுத்துப் பின்னுங் கூறுகின்றா ரென்றவாறு 11

[1] மூர்ச்சித்தான். [2] மூர்ச்சை. [3] உற்றுப பார்க்கும்போது [4] அவமரியாதை

**51.** ***வனவேட்டை தனிலெனக்கு வசப்படுங்கான் மிருகமனைத்து***
***வனத்தி னோடத்***
*தொனியாநீ யுரப்பினதாற் கைவாளிற் சிரம்புடைத்த*
*சோக மாறுய்*
*இனியேது மில்லைநிறை செல்வமதிற் சுகமாக*
*விருப்பா யென்னக்*
*கனியாது மனதுமிகச் சினமிகுந்தங் கிந்திர னுங்*
*கனன்று சொல்வான்.*

*எ - து:—வாராய்! இந்திர மகாராசனே! யான வனத்திலே வேட்டை யாடலாகிய தொழிலைக் கருதி மிகுந்த விச்சையுடனே நமது பூத கணங்க ளோடு வளைத்துக்கொண் டனேக மிருகங்களை வதைத்துவருகின்ற காலத்திலே, நீ எங்களைப் பார்த்துச் சீறிக் [1]கெற்சித்ததினாலே [2]மிரண்டு மிருகங்க ளாரணியங்களிலு மலைப்பக்கங்களிலுந் திக்கு திகாந்தங்களிலுந் தெரியாம லோடிப்போகச் செய்த காரணத்தினாலே உன்னைச் சீறி யெனது காண்டீபத்தினாலே, நீ துன்பப்படத் தக்கதாக வடித்தோ மாகிலு மந்த வபசாரத்தை யுனது மனத்தின்க ணினைக்கவேண்டா. உனது துன்ப மகல வொரு நிமிடத்தி னமது சடையினது சுர நதியினாலே நீக்கினோம். நீ நிறைந்த செல்வ மோங்கிய தேவ பட்டாபிஷேக பதியா யின்பத்தை யனுபவிக்கக் கடவை யென் றருளிச்செய்ய விந்திர னனவன கோபாக் கிராந்தனாகி வெகுண்டு மனம பொறும லொரு வார்த்தை கூறுகின்று னென்றவாறு.* 12

52. *பிரதோட காலத்தி னுன்சேவைக் காய்ப்புகுந்த*
*போதி னென்னைக்*
*கரவாக வனவேட னுருக்கொண்டு தேவர்குழாங்*
*கவலை யெய்தச்*
*சிரமீது புடைத்துநின்று யுனையும்வச்சி ராயுதத்தால்*
*சிதைத்துப் பின்னேன்*
*புரமீது போவனென நடுநடுங்கப் புராந்தகனும்*
*பேச லுற்றான்.*

*எ - து :—வாரீர், கயிலாய பதியே! பிரதோட காலமென் றுமைச் சேவிக்க வந்த வென்னைக் கொடூரமா யெதிர்த்துவந்து சகல தேவர்களு நகைபுரியத் தக்கதா யடித் தவமரியாதை செய்தீ ராகையால் தர்மந் தப்பிச் செய்த விந்த வபராதத்தைக் குறித் திந்த தற்காலத்திலே உம்மை,*

---

[1] கர்ச்சித்ததனாலே. [1] வெருண்டு.

யெனது வஜ்ஜிராயுதத்தினுலே கபாலமானது திறக்கும்படியா யடித் தல்லது நான் தேவ லோகத்துக்குப் போவே னென்று நீ ரெவ்வளவும் நினைக்க வேண்டா மென்று கூறக் கேட்டுச் சிவன் மீண்டுந் திருவாய்மலர்ந் தருளுகின்ற தென்றவாறு. 13

53. துவாபரத்திற் புவிபாரந் தீரநந்த நந்தனுய்த்
தோன்றுந் தேவ
னவாவுறுமப் பாண்டுமக்க ளைவர்நடு வருச்சுனனு
யவத ரித்து
உவாமதிபோற் பாசுபதம் பெறவென்னைத் தவமியற்றி
யுன்கை வில்லாற்
றவாசிரமுந் தகர்ந்துகீ புடைத்திந்தப் பழிதீரச்
சார்வா யென்ருன்.

எ - து :—இந்திர மகாராசன் கோபாக்கிராந்தனுகி வசனிப்பதைக் கேட்ட கயிலாய பதியானவர் கூறுகின்ருர் : வாராய், இந்திர மகாராசனே! நீ விருதாவாகக் கோபங் கொள்ளாதே அனேக காலங் கழிந்த பின்பு வரப்பட்ட மூன்ரு முகமாகிய துவாபர யுகத்திலே பூமிதேவி யானவள் முறையிடப் புவி பாரந் தீர்க்கத் தக்கதாயத் துஷ்ட சங்கார சிஷ்ட பரிபால னத்தைக் குறித்துக் கிருபையாகி வாசுதேவர் தேவகீ புத்திரனுய்க் கிருஷ்ண பகவானுய் அவதாரஞ் செய்து ஆயர்பாடியிலே நந்தகோபாலன் மனையிலே தேவகீ யசோதை மனங் களிகூரத் தவழ்ந்து விளையாடும் காலத்தில் சந்திர [1]வங்கிசபதியாகிய பாண்டு மகாராச புத்திரரா யவதரித்த பஞ்ச பாண்டவர்களின மத்தியில் நீ யர்ஜுனனு யவதரித்துப் பூர்ண சந்திர பிம்பம் போன்ற விபூதி தாளித னுகி நம்மைக் குறித்துத் தவஞ் செய்து பாசுபதம் [2]பெத்துக்கொள்ளும்படியாகிய காலத்திலே இந்த ரூபத்துடனே உனது தவச்சாலைக் கெழுந்தருளுவோ மப்போ துன் கை வில்லினுனே யெனது மண்டை கலங்க வடித் துனது பழியைத் தீர்த்துக்கொண்டு பாசுபதம் பெறுவா யென்ருர் கயிலாய பதி யென்றவாறு. 14

54. பின்னுநய வசனங்க ளிந்திரர்க்குப் பேசியியல்
வரங்கொ டுத்துப்
பொன்னுலக மடைந்தபினைப் புராந்தகனு மனப்புழுக்கம்
பொங்கப் பொங்கித்
தன்னைசிரம் புடைப்பனென்ற வாசவனைச் சிரம்புடைக்கத்
தான வேந்த்ரன்
முன்னுருவி னுதிக்கவெண்ணி நினைந்தளவி னுகாச
முட்டு மெய்யன்.

---

[1] வம்சபதி. [2] பெற்றுக்.

ஏ - து :—கயிலாய பதியானவர் பின்னு மனேகமாகிய வினிய சஞ்சித சொல்லினாலே பலபல விதமாகிய நய வார்த்தைகள் கூறி, வேண்டிய வரங்களைக் கொடுக்க, மனது கலக்கந் தீர்ந் திந்திர மகா ராசனானவன் சகல தேவ கூட்டங்களுடனே பொன்னுலகிற் புகுந்து பஞ்ச தாருவின் நிழலில் இன்புற்றிருந்தான். அதன் பின்பு வேடனாகி வந்த திரிபுராந்த காலகண்டனுக்குத் தன்னெதிரி யறியா திந்திர னிப்படி யாகித் துன்மார்க்க வார்த்தையினாலே உமது மண்டையைப் பதிலாக நானுடைக்கின்றே னென்று கூறிய மொழியை யாலோசிக்குங் காலமெல்லாந் தாமதம் பிரவேசிக்க வதினின்று மாலகாலம் போலும் பிரளய காலாக்கினி போலு மொரு வசுரனானவ னண்ட கடாகங்க ளெல்லாம் நடுநடுங்கவுற் பவித்து மகாமேருவைப் போன்ற புயங்கள் விளங்கிட வாகாயத்தைத் தீண்டா நின்ற சிரசுடனே கூடினவனு யகன்ற மார்பினையு முடையவனாகிப் பராக்கிரம சாலியா யுதித்து வந்தா னென்றவாறு. 15

55. கடல்பருகு குகைபகுவாய் இருகடையிற் பிறையெயிறு
காண வெங்கட்
புடைவடவை பொழியபுயம் வடகிரியி னொளிர்பெருக
பொங்கு காத்ரந்
திடமுடைய விருட்குழம்பு திரண்டதெனக் காலடிகள்
செகத்தை யொன்று
யடியளப்ப தெனமுதுகி னமர்ந்தமயிர் வனங்காட்ட
வருகின் வந்தான்.

எ - து :—பின்னையு மந்த வசுரேந்திர னானவ னெப்படித் தோற்றஞ் செய்தா னென்றால் சப்த சாகரங்களையும் பானம் பண்ணும்படியான குகைபோன்ற கடைவாய்களிலே யர்த்த சந்திரனைப் பிளந் திரண்டு பக்கங்களிலும் வைத்ததுபோலுங் கோரத் தந்தங்கள் பிரகாசிக்கவு மிரண்டு நேத்திரங்களு மிரண்டு மலை எரிவதுபோ லக்கினியைச் சொலிக்கவு மவனுடைய பெருமூச்சானது பிரசண்ட மாருதங்களை வீசவு மவனுடைய புசங்களானவை மகா மேருவைப்போல் பூரித்திருக்கவும் தேக காத்திரமானது நீலகிரியைப் போலத் தோற்றவு மவனது காலடிக ளானவை உலகத்தை யெல்லா மளக்கவு முதுகிலே தோன்று ரோமங்களானவை ஆரணியங்களைக் காட்டவு மந்தக் கயிலாய பதி முன் றோன்றினின்றா னென்றவாறு. 16

56. குருசரணந் தொழுதேத்தி யெமதுபணி யென்னவென்ன
விரக்க நீயப்
புரந்தரனு ருலகனைத்தும் புரக்கவர மளித்தமெனப்
புகழ்ந்து போனு
னிரந்தரமும் பெருவிரலை நிலமூன்றித் தவநிலையி
னின்றான் வேடங்
கரந்துசிவன் பரிவாரத் தொடுங்கயிலைக் கடிதேகிக்
கலந்தா னன்றே.

இ - ள்:—அப்படியா யவதரித்த வசுரேந்திர னுனவ னந்தக் கயிலாய பதியினுடைய விரண்டு திவ்ய சரணாரவிந்தங்களையு மட்டாங்க பஞ்சாங்க கிரியாங்க யோகாங்கமாய்த் தெண்டன் சமர்ப்பித் தடியேனை யுண்டாக்கிய காரணத்தினைக் குறித் தனுக்கிரகம் பண்ண வேணுமென் றிரந்து கூறச் சிவன் சொல்லுவார்: வாரா யசுரேந்திரனே! இந்த தற்காலத்திலே நீ யிவ ணீங்கிச் சத்திய லோக மாகிய மனோவதி நகரிடத்திலே மானத தீர்த்தத்தின் கரையிலே பிரம்மாவை நோக்கித் தவஞ்செய் தவர் வர பலத்தினாலே இந்திரனைச் செயித்து அந்த வரசாட்சியை யாளக் கடவா யென் றனுக்கிரகம் செய்து தமது கணங்களுடனே கயிலாயத்துக் கெழுந்தருளினர். அப்பொழு தந்த வசுரேந்திர னுனவன் சத்திய லோகத்துக்குப் போய்ப் பஞ்சாக்கினி நடுவிலே யிருந் தகோர மாகிய தவத்தினை யூர்த்த தம்பத்தி னுச்சியிலே பொரு காற் பெருவிரலை யூன்றித் தவஞ் செய்து ஞானேந்திரிய கன்மேந்திரியங்களைச் சேட்டிக்காம னிறுத்தி யந்தக்கரணத்தை யறிவிலே யொடுக்கி யான்ம தியான பரனுய் நிற்சல புத்தி யுத்தன யந்த நிர்மல சொரூப னுகிய பிரம்மாவைக் குறித் தரிதாகிய தவஞ் செய்யத் தொடங்கினன் காலநேமி யென்றவாறு. 17

57\. தவசிற் சூரன் றழன்மூலத்
தணலை மூட்டித் தானெங்கும்
அவசு முறப்போன் றுலகுமல
வறிந்திந் திர னுமமரர்நுமாம்
நவசுந் தரமே னகைகணிகை
மாதர் பலரை நடாத்தியவன்
டிவசம் பலவா யினவிடரைச்
செய்துஞ் சலியா திருந்தனனல்.

எ - து:—அப்படித் தவம் செயயப்பட்ட வசுர சூடாமணி யானவன் பஞ்சாக்கினி மத்தியி னின்று மரிதாகிய தவங்களைச் செய்ய வந்தத் தவாக்கினியினலே திரிபுவனமு மிருள் மூடிக்கொள்ளவுஞ் சூரியன் கிரணமு மறைந்து விட்டது லோக மெல்லா மூழிக்கால மிதுதானே வென்று திடுக்கிட்டார்க ளிந்தக் காரணத்தினை இந்திரன் முதலாகிய வமரர் கூட்டங்க ளாலோசித் தந்தத் தவத்தை விக்கினம் பண்ண வரம்பை திலோத்தமை யூர்வசி முதலாகிய தேவ கணிகைகளை யனுப்புவித் தனேக மாய்கைகளை செய்ய [1]வாக்கியாபித்தார்க ளவர்க ளுத்திரவின் பிரகாரம் அதிக வேகமாய்த் தவச் சாலையின் வந்து தமது லீலைகளை யெல்லாம் செய்து மவன் மனமானது சலியாமல் யோகக் காட்சியி னுவினுலே பிரணவத்தைத் தியானம் பண்ணிய பலத்தினலே மாய்கையாகிய விருளைத் துரத்திச் சூரியனைப் போலப் பிரகாசித்தா னென்றவாறு. 18

[1] ஆக்ஞாபித்தார்கள்.

58 அவனங் கறிந்து வமரரொடு
மயன்றன் னுலகத் தினையடைந்து
இவன்றன் றவத்தி னியற்கையெலா
மியம்பி இணைத்தாண் மலரேத்தச்
சிவன்றந் தையுமங் கவர்க்குவிடை
கொடுத்துத் தவஞ்செய் சிறுமைக்காய்ப்
புவன மிசையச் சூரன்முனந்
தோன்றி யினிமை புகலவவன்.

எ - து:—அந்த விந்திரனாலே அனுப்பிவைக்காநின்ற வரம்பையர்களுடைய மாய்கை யெல்லாம் காலநேமி தவத்தாலே யதமாய்ப் போன மாத்திரத்திலே திடுக்கிட லச்சையை யடைந் திந்திர மகாராசன் சமுகத்திலே நா மெப்படிப் [1]போறதென்று வெட்கமாய்த் தேவராசனைப பார்த்துக் கூறுகின்றார்க ளந்த வசுரன் றவாக்கினியினாலே நாங்க ளெரிந்துபோகாமல் பிராணனுடனே தப்பி வந்தது தேவானுகூலமா [2]யிருக்கு தென் றவனுடைய தவத்தினைப் புகழ்ந்து கூறினார்க ளப்போ தரசனவன் தேவர் கூட்டங்களுடனே பிரம லோகத்துக்குப் போய் அவர்க் கறிக்கை யிடத் தேவர்களுக்கு வரும் பிழைகளை யறிந்த பிதாமக னவன் வந்த தேவர்களுக்கு விடைகொடுத் தனுப்பிக் கைலாய பதிக்குப் பிதாவாகிய நான்முக ரானவ ரந்த வசுரன் செய்கின்ற தவத்தினுக் கிரங்கினவரா யன்ன வாகன ரூடராயக கலைமகள் மனோகரராய் எழுந்தருளி வந் தந்த வசுரேந்திரன செய்கின்ற தவ நிலையிலே நின்று உன் றவத்தை யனேக விதமாய் மெச்சினே முன்னைப்போலக் கலங்காத நிலையினின்றுந் தவம் செய்த பேர்க ளிந்தப் பதினன் குலகத்திலு மியாங் கண்டதில்லை யாகையா லுனக் கென்னாலே என்ன வரம் வேணு மென்றார் பிதாமக னென றவாறு. 19

59. இருதா ளயனைத் தொழுதேத்தி
யெந்தா யுய்ந்தே னினியொருவர்
பொருதா தெந்தப் பொருளாலும்
பொன்று வண்ணம் புரிந்தருளைத்
தருவா யெற்கு வரமென்னத்
தாழு மசுரன் தனைநோக்கிக்
கருதா வயனவ் வரமீந்து
கால மதனைக் கனித்தனனால்.

[1] போகிற. [2] யிருக்கிறதென்று.

ச - து:—அப்படியா யெழுந்தருளிய பிதாமகனை யசுரேந்திரனனவன் கண்டு தெண்டன் சமர்ப்பித்துத் தேவரீ ரிங்கே எழுந்தருள வடியேன் என்ன பாக்கியம் பெற்றேன் தேவர்கள் முனிவர்கள் காணப்படாத திவ்விய திருவடிகளைத் தெரிசிக்கப்பெற்ற எனக்கு மற்றொரு பொருளை இச்சிப்ப துண்டோ வாகிலு மிந்தப் பதினன்கு லோகாந்தரங்களிலு மிந்திரன் முதலாகிய பேர்களாலு மகா விருடியரர்களாலு முருட்டுகின்ற குத்துகின்ற வெட்டுகின்ற பிரயோகம் பண்ணுகின்ற வாயுதங்களாலே யிறப் பில்லாம லென்று மிந்திர பட்டாபிடேக போக பாக்கியங்களை யனுபவிக்கும்படியாய் அனுக்கிரகிக்க வேணு மென் றவரது திருவடிக் கமலங்களி னனேகந் தெண்டன் ஸமர்ப்பித்துக் கூத்தாடின னப்பொழு தவர் மகிழ் சிறந்து நீ கேட்ட வரமெல்லாங் கொடுத்தோ முனது தவாக்கினியினாலே யுலக மெல்லா மிருண்டபடியினா லுனக்குக் கால வளைவயினையுங் கொடுத்தோ மென்றார் பிதாமக னென்றவாறு. 20

60. கதிர்கள் பிறழக் காலொழியக்
ககன மிருளக் கதிர்வான்மீ
னுதிரக் கால முறைபிறழ
வுடற்றுந் தவத்தா லுனக்குப்பேர்
முதிருங் கால நேமியென
மொழிந்தா மென்று முகமலர்ந்து
சதுரா னனனு முற்போகத்
தான வேந்த்ரன் றவமொழிந்தான்.

ச - து:—இப்படியாய் வரங் கொடுத்த பிதாமக னனவ ரனுக்கிரகத் தினாலே வலியின லுயர்ந்தன னனவன் றவத்தினாலே சந்திர சூரியர் தங்கள் கதி தப்பிப்போக வாயு தேவன் மறைந்துபோக வண்டங்க ளெல்லா மிருள் மூடிக்கொள்ள வாகாய வீதியிலே பிரகாசிக்கப்பட்ட தாரா கணங்க ளெல்லாம் பலபல வென் றுதிரும்படியா யிரவு பக லென்று தோற்றாமல் செய்த தவ சிரேஷ்டத்தால் சுரேந்திரனே உனக்கு நாமகரணங் காலநேமியென் றியம்பினோ மாகையா லினிமேலாவ துனது தவத்தை விட்டு நீங்குவா யென் றியாக்கியாபனம் பண்ணி முகமலர்ச்சி யடைந்து நான்கு திருமுகங்களை யுடைய பிதாமக னனவர் நாமகள் மனோகரராகி யன்ன வாகனத்தி னாரோகணிதராய்த் தம துலக மாகிய மனோவதியாகிய நகரினைப் போய்ச் சேர்ந்தா ரதன்பின்பு சுரேந்திர னனவன் றனது வலியானது தனக்குத் தெரியாதவ னாகித் தவத்தைவிட் டந்தச் சாலையை நீங்கின னென்றவாறு. 21

61. கால நேமிப் பெயர்பெற்ற
கடுவல் லரக்கக் கண்டகனுங்
கோலம் பூண்ட வசுரர்குழாங்
கூடி நிவாத கவசரொடு
மால கால விடம்போலுந்
திரண்டாங் கமரர் பொன்னுலகின்
மேல தாகிப் போர்விளைக்க
விபுதர் குழுவின் மேலானன்.

எ-து:—இந்தப் பிரகாரம் பிதாமகனாலே கால நேமி யென்கின்ற திரு நாமத்தினைப் பெற்ற கடினமான புயபல பராக்கிரமத்தோடுங் கூடிய கண்டக னனவன் அனேக விபவங்களை யடைந்த வசுர கூட்டங்களும் நிவாத கவச காலகேயர்களுந் தன்னைச் சூழ்ந்துவர வாலகால விடம் போலப் பரந்து திரண்டுவர வமரர்களாகிய தேவ கூட்டங்கள் வாசஞ் செய்கின்ற பொன்னுலக மாகிய போக பூமியின்பேரில் மேலாகிய சமர்த் தொழிலைச் செய்து செயசாலியாகும் பொருட்டால் தேவ கூட்டங்களை வளைத்துக்கொண்டான் சதுரங்க தளத்துடனே யென்றவாறு. 22

62. இந்திரன் சயந்த னமரர்க ளெதிர்ந்தங்
கிளைத்திடர் தருஞ்சமர் புரிய
மந்தர கிரிபோல் வானவர் குழுவை
வதைத்தனன் வாசிறு லசுரன்
சந்திரன் வசுக்கள் மருத்துவர் முனிவர்
சசிமுதற் பொன்னக ரிழந்து
வந்தனர் கடல்போல் வனங்கள்சூழ்ந் திலங்கு
வரைதனிற் குகையிடம் வதிந்தார்.

எ-து:—ரத கெச துரக பதாதிகளாகிய நான்கு வகைச் சேனை களுடனே கால நேமியானவ னிந்திர புரியை வளைந்த மாத்திரத்திலே தேவராசனு மவனுடைய புத்திரனாகிய சயந்த மகாராசனு மமரர்களு மசுரர் கூட்டங்களை எதிர்த்தார்கள் வச்சிராயுதத்தாலே இந்திர மகராச னனவன் அரக்கரையெல்லாம் வதைத்தான் ஜயந்த மகாராஜனனவன் வில்லினாலே புங்கானு புங்கமாய்க் கரவேக சரோவேகமாய்க் கோடி கோடி குரூர கணைகளைப் பொழிய அணித் தலைவர், யூகத் தலைவர், பட்ட வர்த்தனர், சேனாதிபதிகள் முதலாகிய நான்கு வகைச் சேனைகளையும்

பிணக் குன்றம்பட விளைக்காதவனுக்கு குவித்தா னதைக் கண்ட காலநேமி யானவன் பிரளயகால ருத்திரனைப் போலச் சீறித் தேரினைவிட்டுக் குதித் திடசாரி வலசாரியாய்க் குலாலன் சக்கரம்போலச் சுழன்று மந்தர கிரி பாற் கடலைக் கலக்கினு லெத் தன்மையோ வத் தன்மைத்தாய் வாளினுலே தேவர் கூட்டங்களைக் கலக்கிப் பிணக் குன்றம்படக் குவித்தா னதனுல் பயந்து சந்திரனும் வசுக்களு மருத்துவர்களு முனிவர்களுஞ் சசி முதலாகிய பேர்களெல்லாம் பயந்தோடிப் பொன்னகரைக் கடந்து கடலைப் போலத் திரண்டு சூழ்ந்துவரத் தேவலோகத்தை விட் டனேக மலைக ளாறுகள் வனங்கள் நகரங்கள் எல்லாங் கடந்து குகைகளிலே புகுந் தொளித்தார்க ளென்றவாறு. 23

நான்கா மத்தியாயம்: இந்திர னரசாட்சி முற்றிற்று.

63. இந்திரன் குகையை விட்டங்
கிமையவர் வேட மாறிக்
கந்தமா வனங்க ளாறு
கழிக்கரை மணற்குன் றம்பொன்
சந்திர வாவி சோலை
சாலைநீ ருறுத டங்க
ளுறைந்தவ ரிருந்த பின்னர்
நோக்கிப்பொன் மலைக்க ணுற்றார்.

எ-து:—இந்திர மகாராசன் முதலாகிய பேர்களெல்லாம் பொன்னாட்டைக் காலநேமியினுக் கொப்பித்து மான நீங்கி மதிமயங்கிக் குகைகளிலே யனேக நாள் வாசஞ் செய் தந்த மலைத் துவாரங்களை விட்டு நீங்கி, தேவ ரூபத்தைக் கரந்து நானா விதமாகிய வேடங்களைத் தாங்கி, சுகந்த பரிமளங்களைக் கமழ்கின்ற நந்தன வனங்களிலேயும் புண்ணிய மா நதிகளிலேயுங் கழிக் கரைகளிலேயும் மணற் குன்றங்களிலேயும் பொன் மயமாகிய சந்திர காந்த வாவிகளிலேயும் பூஞ் சோலைகளிலேயும் முனிவர் வசியாநின்ற பன்னக சாலைகளிலேயும் [1]சல சமுற்றியாகிய தடாக பந்திகளிலேயும் நொந்து கலங்கித் தியங்கிச் செய்யுங் காரியங் [2]தவறுங் காரியம் தெரியாதவர்களாய் வெகு காலங் கழித் ததன்பின்பு யூக புத்தியால் மதித்துப் பொன்மலை யாகிய மகாமேருவை வந்து 1
சேர்ந்தார்க ளென்றவாறு.

64. சூரன்பின் செங்கோற் பற்றித்
திசைகளோ ரெட்டும் வென்று
பாரினில் வானிற் றன்பேர்
பரப்பின னமரர் தம்மை
வேரறக் களைக வென்று
வீரரைப் போக்கி வானிற்
சூரருந் தானும் மேலாய்ச்
சுகந்துய்த்திட் டிருந்த காலை.

எ-து:—அந்தக் காலநேமி யென்னும் சுரேந்திரனானவன் இந்திரன் முதலாகிய பேர்களை யெல்லாந் துரத்திவிட்டுத் தா னிந்திர பட்டாபி

---

[1] ஜல சம்ருத்தியாகிய. [2] தவிரும்.

டேனும், தேவ சிம்மாதனத்தி லிருந்து, செங்கோலினு லரசாட்சி செய் திந்திர னொழிந்த மற்றத் திக்குப் பாலகரை யெல்லா மெளிதாக வென்று திரி புவனத்திலும் [1]தன தாக்கியாபன சக்கர நடாத்தி யரசு செய்த பின்பு தனக்குந் தன் மரபுக்குஞ் சத்துருக்களாகிய தேவ கூட்டங்களை யெங்கே கண்டாலு மங்கேதானே கொல்லத் தக்கதாகிய வணித்தலைவர் யூகத் தலைவர் சேனாதிபதிகள் பட்டவர்த்தனர் முதலாகிய பேர்களை யனுப்பித் திக்கு திகாந்தங்களெல்லாந் தனது சேனைகளைக் காவல் வைத்துத் தேவ லோகமாகிய விந்திரன் போக பூமியிலே பஞ்சதாருவி னிழலிலே சந்திர வட்டக் குடை நிழற்ற, சுரபி சிந்தாமணி சங்கநிதி பதுமநிதி முதலானதுந் தன தேவல் கேட்ப, தனக் கொத்த வசுரராகிய சூராதி சூரர்களுடனே சுக மநுபவித்துக்கொண் டிருக்குங் காலத்தி னென்றவாறு. 2

65. சடைமுடியு மூர்த்துவபுண் டரநுதலுங்
கமண்டலமுங் கவி நூன் மார்பு
முடையபரன் றுளபமா வடமணியு
மோங்காரத் துயர்ந்த நாவு
நடையயில்வே தத்தியலா ரேகதண்டந்
தாங்கியநன் னளினக் கையுந்
தடைதவிலா மரவுரியுந் தான்றுங்கி
யிந்திரனைச் சார்ந்தா னன்றே.

எ-து:—இந்தப் பிரகாரம் பட்டாபிஷேக பதியாய்க் காலநேமி யாகிய வசுர சூடாமணி யானவன் றனது சேனைகள் தற்சூழ அரசாட்சி செய்யுங் காலத்திலே இந்திர மகாராச னானவன் திரி புவனங்களிலு முழன்று தங்கள் ரூபங்களை மறைத்து மகாமேருவில் வந்து களித்த காலத்திலே முனிவர்களுக் கெல்லாஞ் சிரேட்டமாகிய நாரத ரானவர் சடா பாரந் தாங்கிய திரு முடியுடைய பிரதாபமு மூர்த்வ புண்டரந் தரித்த நெற்றியினது ஞான விலாசமுங் கமண்டலந் தாங்கிய கராம்புய மலரு மொன்பது கொண்ட முப்புரி நூலாகிய காயத்திரி யணிகின்ற விரிந்த மார்பக முடையவனுகிப் பரமன் தரிக்காநின்ற துளப மாலையானது மார்பி னிருபுறமும் விளங்கி யொளிரவு மோங்கார மாகிய மந்திர சாலங்களுக் கெல்லா முயிராகிய பிரணவத்தை யுச்சரிக்காநின்ற நாவும் வேத விதியான விளங்கிய வேக தண்டத்தைத் தாங்குகிற மற்றொரு கராம்புய மலரு மரவுரியைத் தரிக்காநின்ற திருவரை யீருகிய சின்னங்களை யுடையவராய் வருத்த முற்று வேடமாறி மகா மேருவி லொளித் திருக்கா நின்ற விந்திர மகாராசனுடைய விருக்கையிலே கருணை கூர்ந்தவராய் வந்தா ரென்றவாறு. 3

[1] தன தாக்குரபன சக்கரம்.

66. வந்ததோர் முனிவன் றன்னை
மலரடி வணங்கி இந்த்ர
னெந்தையே யுய்ந்தோ மென்ன
வேதிவ ணடைந்த தென்று
வந்தநா ரதருங் கேட்க
வையநீ ரறியார் போல
வெந்தனை யறிய வந்தீ
ரென்றவவ் விமையோர் கோமான்.

எ - து:—அந்த மகாமேருச் சாரலிலே யிருந்த தேவேந்திர னானவன் முனிபுங்கவ ராகிய நாரத முனிவரைக் கண் [1]டின்புத் தெழுந்திருந்துபோயவரை வரவழைத்துக்கொண்டு வந் [2]தற்கிய பாத்திய வாசமனீயங் கொடுத் தாசனத்தி னெழுந்தருளப்பண்ணி யவருடைய தாமரை மலரை யொத்த விரண்டு திருவடிகளிலே சாஷ்டாங்கமாகத் தெண்டன் சமர்ப்பித் தென்னையனே உனது கிருபையினாலே யான் செய்த பாவமானது மலையா யிருந்த தனுவாய்ச் [3]சுருங்கித் தாகையா னன் [4]கிருதார்த்த னானே னென்று சொல்ல வுங்க ளுலகத்தை விட் டிடர்பட் டிங்கே வந்த வரலா றென்ன வென முனிவர் வினாவின வளவிலே யரசன் கூறுகின்றான். திரி காலக் கியானங்களை யெல்லாஞ் சர்வக்கியனைப் போலத் தெரிந்த தேவரீ ரொன்றுந் தெரியாதவரைப்போல வென்னைச் சோதிக்கையா லிந்தப் பதித னானவன் றெரிந்த வளவினாற் கூறுகின்றே னென்றான் றேவராச னென்றவாறு. 4

67. நிகழ்ந்த தெல்லாநெ டிதுவி ளம்பியே
புகழ்ந்து புங்கவன் றன்னைப்பு ணர்ப்பினன்
மகிழ்ந்தெ னக்குய்யு மாறொரு வண்ணநீ
திகழ்ந்த நல்லுணர் வாற்செப்ப வென்றனன்.

எ - து:—நாரத முனிவரைப் பார்த் திந்திரன் கூறுகின்றான் பிரதோடக் காலத்தைக் குறித்து, கயிலைக்குப் போனே னப்போது சிவன் வந்து வேடனு யடித்தா ரதன் பின்பு நானும் வெகுண் டந்த வேடனை யடிக்க நினைத்தே னப்போ தந்தப் பழியைத் துவாபர யுகத்திலே நா னுனக்குத் தருகிறே னென்று சொன்னார். நான் றிரும்பி வந்த பின்பு காலநேமியாகிய வசுரன் வந்து எனது வளத்தை யெல்லாங் கிரகித் தென்னை விரட்டி விட்டா னானு மனேக காலமா யிடர்பட் டிருக் கின்றே னெங்க ளிடர்தீர வோ ருபாயத்தைச் சொல்லிக் கடைத்தேற்ற வேணு மென்று மிகவும் புகழ்ந்த விந்திர மகாராச னானவ னொரு யூக

[1] இன்புற்று. [2] அர்க்கிய. [3] சுருங்கிற்று. [4] கிருதார்த்தன்.

புத்தியினு லியான் பிழைக்கத் தக்கதா யனுக்கிரக மொழியினுற் கூறித் தேவ லோகத்தை யீடேறச் செய்யவேணு மென்று னிந்திர னென்றவாறு. 5

68\. என்ற போதமு னிவனி ரங்கிமெய்
யொன்று சிந்தையி னுடனி னைந்துமக்
குன்ற வில்லிகொ டுமையும் வேரற
வென்றி சேரவவ் விண்ணவர்க் கோதுவான்.

எ - து:—இப்படியாக விந்திரனைவ னாரத மகாமுனி சரணார விந்தங்களிற் றெண்டன் சமர்ப்பித்து, சிரசிலே கைகூப்பி நிற்கின்ற தேவராசனைப் பார்த்துக் கருணை கூர்ந்த கிருபையினுலே ரட்சிக்கவேண்டி, தமது ஞான பூரணமான திருவுள்ளத்தில் யூகித்தவராய் மகாமேருவை வில்லாக வுடைய கைலாய பதியினுடைய தாமத குணத்தி னுதித்த கால நேமியாகிய வசுரேந்திரனுடைய கொடுமைக ளானது வேரோடே பறியும்படியாய்த் தேவேந்திர னைவன் பழையபடி தன் போகபாக்கியத்தை யடையத் தமது திரு வுள்ளத்தி னினைந் தனுக்கிரகஞ் செய்கிருர் நாரத முனிவ ரென்றவாறு. 6

69\. ஆழிகடைந் தமுதெடுத்த வன்றுபிறந் துனக்குச்செல்வ
மளிக்குந் தாயை
யூழிபல வாயினுந்தான் மறப்பர்களோ செய்ந்நன்றிக்
குதவி யுண்டோ
வேழுலக மீன்றளிக் கும் பெருந்திருவை யறம்வளர்க்கு
மிறைவி தன்னைத்
தாழுமவர் பகைகடிந்து வினைகடிந்து முத்தியினிற்
சார்வ ரன்றே.

எ - து:—வாராய் தேவராசனே! முற் காலங்களிலே யமுதத்திற் றிருவவதாரஞ் செயதருளிய ஸ்ரீமகாலக்ஷ்மியினுடைய கிருபா நோக்கங்களாலே நீ சகல பாக்கியங்களும் அடைந் தந்தச் செல்வத்தினது கர்வத்தினுலே யந்தத் தாயை மறந்தபடியினுலே மிகுந்த துன்பங்களை யிப்படி யனுபவித்தா யூழிகால மானபோதுந் தெரிந்த பெரியோர்கள செய்ந் நன்றியை மறவார்க ளாகையினுலே செய்ந் நன்றிக்குத் தகுதியாகிய பிரதியுபகாரஞ் செய்யாது கழித்தவர்க ளிவ்வுலகத் துண்டோ விந்த வேழுலகத்தையு மணி [1]வயத்தின் வைத்து ரக்ஷிக்கப்பட்ட கிருபா நேத்திரங்களையுடைய வந்த ஸ்ரீமகாலட்சுமியாய், தர்மத்தை யெல்லாம் வளர்க்காநின்ற லோகநாயகியினுடைய திருவடியை யடைவை யாகி லுன்னுடைய சத்துருக்களைச் செயித்து, சகல மங்கள சாம்ராஜ்ய பட்டாபிடேக பதியா யிருப்பா யென்று பின்னுங் கூறுகின்ருரென்றவாறு. 7

[1] வயிற்றின்.

70. மூவரவள் விழிக்கடையி னிமையுயர மூத்தொழிலு
        மியற்று வாரத்
    தேவதையி னருளகல மூவுலகு முடனகலுந்
        திருமா லுக்கு
    மாவியவ ளருட்பெறிலோ வனைத்துலகும் வெகுகால
        மாண்டு பின்னர்ப்
    பாவவினை பற்றறுத்து வழியாத பரமபதம்
        பயில்வ ரன்றே.

எ - து :—ஸ்ரீ மகாலட்சுமியினுடைய கிருபையைப் பொழிகின்ற கடைக் கண் ணருணோக்கப் பார்வையினாலே மும்மூர்த்திகளுஞ் சிருட்டி திதி சங்காரங்க ளாகிய முத்தொழில்களைச் செய்து பிரபல பிரதிட்டையை யடைவார்க ளிந்த உலகங்களி லவ ளருளால் தர்மமானது முத லுகத்தி னனகு பாதமு மிரண்டா முகத்தில் மூன்று பாதமு மூன்று முகத்தி லிரண்டு பாதமும நான்கா முகத்தி னொரு பாதமுமாய் நடக்கு மவ ளசை வில்லாமற் போனால் திரி புவனமுஞ் சித்திரப் பிரதிமைபோ லசை வில்லாம லடங்கு மிப்படி மிகுந்த கிருபா நிதியாகிய வரங்கநாத ருடைய திவ்விய திரு மார்பினின்றுந் திருவிளையாடலாய் நடக்ாநின்ற வவருக் குயிராய் விளங்கிப் பிரகாசிக்கும்படியாகிய வந்த வரங்க நாயகியி னுடைய கிருபையை யாதாமொருவர் பெறுவார்களோ வவர்கள சகல பாவங்களுந் தொலைந் தவர்க ளிக பர சவுக்கியங்களை யடைவ ராதலா லந்தத் தாயை யாதரவா யடைந்து நீயும் பொன் னுலகத்துக்குப் பட்டாபிடேக பதியாய் வாழக் கடவா யென் றாசீர்வதித்துப் பின்னும் பரமபதத்தை யடைவா யென்று கூறுவார் நாரத முனிவ ரென்றவாறு. 8

71. பொன்னனையு மண்ணனையு மார்பிடந்து மண்ணைமுனம்
        புரந்த வண்ணல்
    முன்னமறை தனைக்கவரு சோமுகனை வதைத்துமறை
        முனிவர்க் கீந்து
    பொன்னைதிரு டரக்கனையு மிலங்கைமலங் கத்தடியும்
        புயல்போல் வண்ணன்
    றன்னையிரு தாடொழுதால் தணியாத பகைதடிந்து
        தணிவா யென்றான்.

எ - து :—அப்படிச் சிலாக்கிய பரிபூரணமாகிய ஸ்ரீ மகாலட்சுமி தேவியார்க்கு நாயகனாகிய வரங்கநாயகர் துட்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன சகத் கர்த்தா வாகிய நியாமக னாகையால் பூர்வ காலத்திலே இந்தப்

பூ மண்டலங்களிலே யசுராள் மிகுதியாய் அகங்கரித்து, பிரம்மசாரியன், கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சன்யாசியாகிய வாசிரமங்களுக்கு வுரித்தாகி யாதரவாகிய வேத மார்க்கங்க ளயத்தை யடைந் ததர்மங்களை தலையெடுத்து மிகுதியாய் வளர்ந்த சமயங்களிலே தமது சங்கற்ப மாத்திரத்தா லீலா விபூதியைச் செய்ய வட்ட லக்ஷ்மி நாரசிம்மராயு மாதி வராக மூர்த்தியாயுந் திரு வவதாரங்களைச் செய் திரணிய னிரணியாக்க னாகிய வசுர சூடாமணிகளாகிய விரண்டு பே ரையும் வதை செய்தது மல்லாம லாதி காலத்தில் பிரம்மாவுக் குபதேசித்தருளிய நான்கு வேதங்களையுங் கிரகித்துக் கடலிலே ஒளித்த சோமுகாசுரனை மச்சாவ தாரஞ் செய் தவனை வதைத்தருளி மீட்டு மந்த வேதத்தை யன்ன ரூபமாய் ஒரு கிரியிலே பிதாமகனுக் குரைத்த காரணத்தினாலே யந்த வேத கிரி யென்று காரணப் பெயர ராச்சுது. பிராட்டி யாகிய சீதா தேவியை யெடுத் திலங்கையி னசோக வனத்திற் சிறை வைத்த ராவண கும்பகர்ண னிந்திரசித்து முதலாகிய பேர்களை யதப்படுத்திச் சீதையை மீட் டரசாட்சி செய்கின்ற லீலா விபூதியை யுடைய வரங்க நாயகருடைய திவ்விய சரணாரவிந்தங்களை யாதரவாய் அடையப் பெறுவையாகி னடங்காத புசபல பராக்கிரமசாலியாகிய காலநேமிப் பகையினை யெளிதாய் வென்று பட்டாபிஷேக பதியாய வாழ்வா யென்று பின்னுங் கூறுகின்றார் நாரத முனிவ ரென்றவாறு. 9

72 விண்ணவர்க்கு மண்ணவர்க்கும் வினைகடிந்து பகைகடிந்து
விளங்கு மூழிக்
கண்ணவர்க்கு மாய்கையி றற்கலந் திறு துரந்தையைப்போல்
காணு மூர்த்தி
பண்ணவர்க்கு மறியாத பரம்பொருளை யுலகனைத்தும்
படைக்குந் தேவை
நண்ணவர்க்கும் பவமொழிய நாட்கமலையா தவர்பதத்தை
நண்ணு வாரே.

எ – து:—வாராய், தேவராசனே! சிவன், பிரமா, தேவ ரிருடிகள், மனு, மாந்தாதா முதலாகிய சேதனாசேதனங்களிலு முண்டாகிய வான்மாக்களுடைய பூர்வ கர்மங்களை நீக்கி யவரவர்க் கிஷ்ட காமியங்களைக் கொடுத்து ரக்ஷிக்கப்பட்ட பிரளய காலத்திற் சகல ராசாக்களையுந் தமது மணி [1]வயத்தி னடக்கிச் சிறு குழந்தையைப்போல வோ ராலிலையிலே யோகநித்திரை செய்கின்ற வனந்தப் பரம[2]புருடனிட வவதார சரித்திரங்களைக் [3]க்யான பூர்ணராகிய உருத்திர மூர்த்திகளாலுங் கூறுதற் கரிய பரவாசு தேவரானவர் காரிய காரண வுபய சரீர இச்சா விசேஷத்தால் மறுபடியுஞ் சமஸ்த மாகிய பிரம்மா முதல் புல் பர்யந்தமாகிய பிரபஞ்சங்களைச் சிருட்டி செய்யும்படியாகிய திருவிளையாட்டினை லாலோசிக்கானின்ற

[1] வயிற்றின். [2] புருடனுடைய [3] ஞானபூரணராகிய.

[1]கற்தாவை யாதரவா யடைந்த பேர்கள் சென்ம சென்மங்கடோறுஞ் செய்த மகா பாதகங்க ளெல்லா நீரு மென்று மழியாத பரமபதத்திலே நித்ய சூரியர்களாய்த் தெரிசனஞ் செய் தானந்த வைபவ சுகுணத்தை யடைவார்க ளென்று பின்னுங் கூறுவார் நாரத முனிவ ரென்றவாறு. 10

73 இடராழி தனக்கோடம் பவவிருளுக் கோரிரவி
யிகலு வோரைத்
தொடராழி மிடிக்குவந்த பெருஞ்செல்வந் தொல்லைவினைக்
கருளுந் தெய்வம்
படராழித் தளிர்க்கரத்தோன் பதமலரை யனுதினமும்
பரவு நல்லோர்
திடராழி வையகத்திற் சேர்முத்தி வித்தாகித்
திகழ்வ ரன்றே.

எ - து:—உலகத்தாருடைய பிறவியாகிய துன்ப சாகரத்தைக் கடத்திவைக்கா நின்ற பெரிய கப்பல் போலவு மந்த துன்பத்துக் கேதுவாகிய சென்ம பாவ விருளை நீக்குதற் கதிகப் பிரகாசத்தினைத் தரும் ஞான சூரியனைப் போலவு மவருடைய திருவாய் மலர்ந்தருளிய மறைகளுக்கு மூவுலகத்தி னடங்கா நின்ற தர்மங்களுக்கும் விரோதமா யாணவ மலத்தாலே அகங்கரிக்கா நின்ற வசுரர் கூட்டங்கள முதலாகிய பேர்களைத் தொடர்ந்து சங்கரிக்கா நின்ற பெரிய சிஞ்சுமாரச் சக்கரமா யிம்மை மறுமையினது வறுமை நீக்கி இகபர சௌக்கியங்களைக் கொடுக்கும் பெரிய [2]கியான பூரண செல்வ மானவர் தேமாத் தளிர் போன்ற விரலை யுடைய கராம்புய மாகிய [3]ஒப்பத்த மலரிலை தரிக்கா நின்ற சக்கரத்தை யுடையவனது பாத தாமரையை யநுதினமு மிடைவிடா துபாசிக்கா நின்ற நல்லோ ரானவர்கள மேடுகளையுடைய விந்தச் சமுத்திரஞ் சூழ்ந்த உலகின்கண் சீவன் முத்தர்களா யிம்மையி னிருந்து மறுமையிலே பரமபதமாகிய நிலத்தில் விளையா நின்ற [4]விரையாகிய நித்ய சூரியர்களாய் வாழ்வார்க ளென்றவாறு. 11

74. உந்திமலர்ப் பிரமனையு மகிலவுல கங்களையு
முகந்த பின்னர்
அந்தவய னுற் சிவனு மமரரையும் படைத்துமவர்
சிரத்தி னூழி
தந்துகுறி யிட்டேவற் புரிந்தருளி மறைவழியிற்
றடுத்தாட் கொண்ட
வெந்தைதனை யடைந்தவரே யிடராழி கடந்துமுத்தி
யேறு வாரே.

---

[1] கர்த்தாவை. [2] ஞான. [3] ஒப்பற்ற. [4] விதை.

எ - து :—அந்த வரங்க [1]நாயகரிட திவ்விய குணனுடையவங்க ளொப்பற் றென்று வாதி காலத்திலே தம துந்திக் கமலத்தில் பிரமதேவ ரானவரை உற்பவிக்க வவராலே சகல லோகா லோகங்களையுஞ் சிருஷ்டித்து, சிவன் முதலாகிய தேவாதிகளையு முனிவர் கூட்டங்களையுஞ் சிருஷ்டித்து மவரது சிரங்களிலே தமது சக்கர முத்திரை தரித் தவர்களுக்குத் தகுதி யாகிய தொழில்களையு மருளிச்செய் தவரது ஏவற் பணிவிடையை விருப்பமா யுகந்தருளி வேத விதிப்படி யவர்களை யெல்லாந் தடுத் தாட்கொண்டருளிய கிருபா நிதியா யெந் தந்தையாகிய வரங்க நாயகனைச் சரணாகதியா யடைந்த பேர்கள் செனன மரணமாகிய துன்ப சாக ரத்தைக் கடந்து பரமபதச் செல்வ வைபவ சுக சொரூப வனந்த கல்யாண குணத்தினையுடைய நித்ய சூரியர்களா யிருப்பார்க ளென்று பின்னுங் கூறுவார் நாரத முனிவ ரென்றவாறு. 12

75. ஆரணனை யகிலபுவ னங்களையு மன்றுதவு
மமலன் றன்னை
நாரணனை நான்மறைக ளோதவயற் குவந்தருளு
நாதன் றன்னைப்
பாரணனை மண்ணேழும் விண்ணேழும் பரிந்தளிக்கும்
பரனை முத்திக்
காரணனைக் கைதொழுவா ரிழந்தபதம் பகைதடிந்து
கலப்ப ரன்றே.

எ - து :—வாரீர், தேவராசனே! ஆதி பரப் பிரம்ம சொரூபராகிய வந்த வரங்க நாயகரானவர் சகல வண்டாண்டங்களையுந் தமது [2]குட்சியி னடக்கி ரக்ஷித்ததுவு மன்றி, பிரம்மாவுக்குக் கிருபையொடு கொடுத்தருளிய வேதத்துக் குரிய பரம்பொருளாகிய வாதி மூர்த்தியைப் பதினன் குலகத் தினையுந் தந்து ரக்ஷிக்கும்படியான நாராயண னென்கின்ற நாமதேயத்தினை யுடையவனது காணப்படாத வுபய சரணாரவிந்தங்களைத் தியானஞ் செய்கின்ற பெரியோர்கள் சகல பாபங்களினின்றும் விடுபட் டென்று மழிவில்லாத நித்தியானந்தமாகிய பரமபத செல்வ சாம்ராஜ்ய சுகுணத்தை யடைவார்க ளாகையால் நீயுஞ் சகல சந்தேகங்களு நீங்கி யரங்க நாயகரை யாதரவா யடைந்தா லுனது பதவியைப் [3]பெத்துப் பட்டாபிடேக பதியாய் நீடூழி காலம் வாழ்வாயென் றருளிச்செய்தார் நாரத முனிவ ரென்றவாறு. 13

[1] நாயகருடைய. [2] குக்ஷி—வயிறு. [3] பெற்று.

76. ஆதியினிற் பூமிதனைப் பாயாகச் சுருட்டியொளி
    த்திரணி யாக்கன்
நீதகல மார்பிடந்து பேருலகை நிலைநிறுத்துந்
    தெய்வப் பன்றிச்
சோதிமுகத் தெழுந்தரும்பிக் கங்கையொரு பெண்ணுருவாய்த்
    தோன்றி முன்னம்
பாதமல ரிணைவணங்கித் தெய்வவரா கத்தின்முகம்
    பார்த்து நின்றாள்.

எ - து :—வாராய், தேவராசனே! ஆதிக்காலத்திலே யிரணியாக்க னென்கின்ற வசுர சூடாமணியானவன் றனது வலியினாலே வேத சாத்திர யாக யெக்கிய செப தப முதலாகியதைத் தன் பேராலே விளங்கச்செய்து பின்னு மிந்தக் குவலயத்தைப் பாயாய்ச் சுருட்டிக்கொண்டுபோய்ப் பாதாளத்திலே யொளித்த வந்த வசுரனை லோக துன்ப நீக்கிக் கருணை புரியக் கருதி நேத்திர முதலாகிய ஞானேந்திரியங்களுக்கும் வாக்கு முதலாகிய கனமேந்திரியங்களுக்கும் [1]தன் விடையங்களுக்கு மெட்டாத வரங்க நாயகரானவர் [2]தன திச்சா மாத்திரத்தா னாதி வராக ரூபமாய்த் திருவவதாரஞ் செய்தருளித் [3]தனது [4]கோரப் டல்லி னலவ னுடலைப் பிளந் தந்தக் குவலய மாகிய பூமி பரப்பையெல்லா மந்த வராகத்தினது தந்த பந்தியிலே துண்டுகள் போலத் தோன்றத்தக்கதா யெடுத்து வந்து பெரிய உலகத்தைப் பழையபடி தாபித்தா ரந்த வாதி வராக மூர்த்தியினுடைய பிரகாச தேசோ மயமாகிய திருமுக மண்டலங்களின் வேர்வைகளானது பெருகி மிகுந்த திவ்விய ஸ்த்ரீ ரூபமா யெதிரிலே நின்று அவருடைய சரணாரவிந்தங்களிலே யனந்த தெண்டன் சமர்ப்பித் தவரது கிருபா நோக்கத்தைக் குறிப்பாய்க் குறித் திருந்தாள் கங்கையாகிய புனிதவதி யென்றவாறு. 14

77. பார்த்திருந்த மடக்கொடியை யிருவிழியிற் கருணையுடன்
    பரிந்து நோக்கி
வார்த்தையொன்று லாரென்று முகமலர்ந்த விறைவனடி
    வணங்கி யேத்திச்
சேர்த்திருகை பணிந்தவளுங் கங்கையென்பேர் நின்முகத்திற்
    செனித்த வட்கோ
ரார்த்தியுள நின்னடியி லின்றெருக்கால் பெருகவர
    மருள்க வென்றாள்.

---

[1] அவற்றின் விஷயங்களுக்கும். [2] தமது. [3] தமது. [4] கோரை.

எ - து:—அப்படியாகத் தம்முடைய முகாரவிந்தத்தை நோக்கி நின்ற வல்லிசாதக் கொடிபோன்ற இடையினையுடைய மிகுந்த சௌந்தரியத்தோடு கூடி விளங்காநின்ற வந்தக் கங்காதேவியைக் கிருபா நோக்கத்தினாற் பார்த் தருள்கூர்ந்தவரா யருளிச்செய்கின்றார் : வாராய் பெண்ணே யிப்போது நீ இங்கே வரவேண்டிய காரண மென்ன வதை யறிக்கை யிடக்கடவா யென் [1]ருக்யாபனஞ் செய்தா ரப்போ தந்த வராக மூர்த்தியைப் பார்த்து வணங்கி, சிரத்திலே கைகூப்பிக் கூறுகின்றா ளதெப்படி யென்றா லடியேனானவ ளுமது திவ்விய சரணாரவிந்தத்திற் பூர்வம் அவதரித்த கங்கையாகிய வென்னை யசுரனைச் சங்கரித்த வவசரத்தினாலே திருமுக மண்டலத்திலே யவதரிக்க வருள் சுரந்தனை யாகையா லும்மை யென்றும் பிரியாது தேவரீர் திருவடிகளிலே யவதரித் திந்தத் தலத்திலே இருக்கத்தக்கதா யருள்செய்ய வேணு மென்றிரந்து கூறினா டேவ கங்கை யென்றவாறு. 15

78. என்றளவில் பெருங்கருணை விழியருளிற் கடைக்கனித்து
[2]யின்னுஞ் சின்னாள்
பொன்றபின்பு யானுமொரு காரணத்தால் வராகமதாய்ப்
போந்திப் பூமி
சென்றுசிங்க புரத்துறைகோ லாசலத்தின் வருவனவண்
சென்று நீயக்
குன்றமிசை தவமியற்று கென்றளவிற் குரைகழலைக்
குறித்துப் போனாள்.

எ - து:—இந்தப்படியா யுற்பவித்த கங்காதேவி யானவள் விண்ணப்பஞ் செயய வாதி வராக மூர்த்தியானவர் பெரிதாகிய கடலானது மடைதிறந் தொழுகினா லெத்தன்மைத்தோ வத்தன்மையனவாய பெருங் கருணை யானது விழியினின்று முவட்டெடுத் தோடக் கடைக்கண் ணாருணைக்கால் கிருபையினாலே கடாட்சித்தருளித் திருவாய்மலர்ந்தருளுகின்றா ரின்னமுஞ் சிலநாள் கழிந்த பின்பு நாமொரு காரண நிமித்தமாக [3]யெக்கிய வராகமாய் அவதரித் திந்தப் பூமண்டலத்திலே மிகுந்த சிலாக்கியமாகிய கோலாசல கிரியிலே யெழுந்தருளவேண்டிய காரண மிருக்கையா லந்தச் சஞ்சீவிபுர மென்றும் சிங்கபுரமென்றுங் கூறுகின்ற தலத்தினது மலையாகிய கேலாசலத்தினின்றும் நீ தவம் புரிகுவையாயி னீ நினைத்த காரணமான தீடேறு மென்று திருவுளம் பற்ற வப்படியே யவருடைய சரணார விந்தங்களைச் சேவித்து விடை பெற்றவளாய் நடந்தாள் கங்காதேவி யென்றவாறு. 16

---

[1] ஆக்ஞாபனம். [2] குற்றியலுகரம் முன்னால் யகரவுடம்படுமெய். [3] யக்ஞவராகம்.

79. [1]அன்றொடொட் டத்தேவன் வருமளவுந் தவமியற்றி
யந்தக் கங்கை
மின்னுளு மவரடியின் வரநதியிற் பெருக்கெடுத்து
விளங்குந் தெய்வப்
பொன்னுடும் [2]புகழ்ந்தேற்றும் வராகநதி யெனப்பெரும்பேர்
பெற்றிப் பூமி
யன்னோரைக் கடைத்தேற்றி யம்மலையி னுத்தரத்தி
னமர்ந்தா ளன்றே.

எ - து :—வாராய தேவராசனே யப்படி வராக மூர்த்தியினுடைய வனுக்கிரகத்தாற பெருக் கெடுத்து வந்த கங்காதேவி யானவள் அந்த [3]யெக்ஞ வராக மூர்த்தியானவர வருகிற பர்யந்த மந்தக் கோலாசல மென்னுந் திருமலையிலே தவஞ் செய்துகொண் டிருந்தா ளப்போது நாராயண மூர்த்தி யானவர் அவள் தவத்துக் கிரங்கி யுருகினவராய் அந்தக் கிரியிலே மீட்டும் வந் தெழுந்தருளின ரந்த [4]யெக்ஞ வராக மூர்த்தியினுடைய பாத தாமரையி னின்றும் அவ ரனுக்கிரகத்தினலே பரிசுத்தமான வாகாய கங்கையைப் போலப் பிரவாகமாய் விளங்கிப் பிரபலமாகிய தேவர்களெல்லாம் புகழ்ந்து துதிக்கும்படியாய் வராக நதி யென்று பெரிதாகிய நாமதேயத்தை யடைந்து உலகத்தாரை யெல்லாங் [5]கடைத்தேறச் செய்த வந்தத் திருமலையி னுத்தர பாகத்திற் பெருகா நின்றுள ளிருந்த பவித்திரமாகிய கங்கை யென்று பின்னுங் கூறுகின்றுர் நாரத முனிவ ரெனறவாறு. 17

80. செங்கமலத் திருவடியிற் றிகழ்ந்துதித்த வராகநதி
செயலைக் கூறப்
பங்கயற்கு மரிதாகும் பரம்பரனே யதன்பெருமை
பகரா ரிற்பர்
சங்கரனு மதிற்படிந்து தனதுகரப் பிரமகத்தி
தணந்தார் பொன்னின்
மங்கையதிற் படிந்தாடி யரங்கனுர் மார்பிலிடை
மகிழ்ந்து வாழ்ந்தாள்.

எ - து :—செங்கமல பதுமம் போன்ற [6]யெக்ஞ வராக மூர்த்தியி னுடைய திருவடியிலே பிறந்துதித்த புனித பவித்திரமாகிய வந் நதியினது புகழ்ச்சியின் பெருமையைச் சொல்லி முடிக்கப பதும மேலவ

[1] அந்நாள் [2] புகழ்ந்தேத்தும் [3] யகஞவராகமூர்த்தி. [4] யக்ஞவராகமூர்த்தி.
[5] கடைத்தேற [6] யக்ஞவராகமூர்த்தி.

ளுகிய சதுர்வேத பாராயண பண்டிதனுகிய பிதாமகனுக்கு மரிதாகு முதனது வதிகப் பிரபல பிரதாப வனந்த கல்யாண குணங்களைச் சொல்லத் தொடங்கினு லியாவராலே முடிபெய்து மென்றால் பரமனுகிய சுயம்பிரகாச சாந்த தத்துவத்தையுடைய நாராயண மூர்த்தியே கூறி முடிப்ப ரப்படியாய வந்த வராக நதி தீர்த்தத்திலே கயிலாய பதியாகிய சங்கர னுனவ ரதிலே தீர்த்தமாடிய பலத்தினுலே முற்காலத்தில் பிரமாவுடைய சிரச்சேதனம் பண்ணிய காரணத்தினுலே யந்தக் கபால மானது பிரமகத்தியாய பாவத்தினு லவர் கரதல கமலத்தை விடாமல் பிடிக்காநின்ற பாதக நீங்கி நின்மலனுப் சுயம்பிரகாச பரம பவித்திரத்தை யடைந்தா ரதன் பின்பு பொன்னின் மங்கையாகிய ஸ்ரீமகா லட்சுமிதேவி யானவள் திருப்பாற் கடலை விட் டூடலினுலே நீங்கி இந்த வராக நதியிலே வந்து தீர்த்த மாடிய பலத்தினுலே கோலாசல கிரியிலே தவ மீமேடறி வரங்க நாயக ரருளினுலே யவரது கௌத்து வாபரண மார்பின் நடுவின் [1]வீத்திருக்கப் பெற்று ளென்று லந் நதியி னுடைய பெருமையை யாவராற் கூறலா மென்று பின்னையுங் கூறுகின்றார் நாரத முனிவ ரென்றவாறு. 18

81. வஞ்சஞ் சூது கொலைகளவு
வரும்பொய் காம மதுவுண்பா
னஞ்சு மத்தி செய்பவரு
மந்த நதியின் மூழ்கவவர்
விஞ்சு பவங்க டொலைந்துலகின்
மேலாங் கங்கை யினுமதிகப்
பஞ்ச கிரிச்சப் பலனடைவ
ரென்னப் படுமப் பகர்வேதம்.

எ - து :—வஞ்சனை யாகிய சூது முயிர்களைச் சரீரத்தி னின்றும் பிரித்தலாகிய கொலையும் பிறர் பொருளை வஞ்சித்துக் கவர்தலாகிய களவும் பொய்மை கூறி யுடலை வளர்க்காநின்ற வபராத வாழ்வாகிய பொய்மையும் பிறர் தாரத்தை மோகித்த துன்பத்தை யின்பமாய்க் கொண்டு மது வுண்டு கருத் தழிதலாகிய காமமு மாகிய பஞ்சமா பாதகமுஞ் செய்கின்ற பாவியர்களு மத்தி செய்த லாகிய வதி பஞ்சமா பாதகமாகிய பசுவின் முலையை யறுத்தலும் அந்தணரை வதைத்தலுங் குருத் துரோகஞ் செய்தலுந் தாயைப் புணர்தலுந் தந்தையைக் கோறலு முதலாகிய பாவங்களு மந்த வராக நதியிலே வந்து தீர்த்த மாடினு லப்பொழுதே பஞ்சு மலையி னிட்ட தீப்பொறியைப் போலத் தகனப்பட்டுப் புனித பாவன மடைந் துலகி னுள்ள புண்ணிய மகா நதிகளுக் கெல்லா மேலதா யுயர்ந்த கங்கா தீர்த்தத்தின் மூழ்கிய பலத்தினு மதிகமாகிய

[1] வீற்றிருக்கப் பெற்றுள்.

பஞ்ச கிரிச்சங்களைச் செய்த தான பலன்களை யடைவார்க ளென்று கூறும் வேதாகம தர்ம சாத்திர புராணங்கள் முதாலன தென்றவாறு. 18

82. இன்னனவாய்ப் பலமொழிக ளியம்பியநா
ரதனிருதா ளிறைஞ்சி யேத்திப்
பின்னுமந்த விந்திரனும் பிரமனையு
முந்தியினிற் பெற்ற தாதை
தன்னுடைய லீலையெல்லாந் தந்துரைத்தீர்
கேட்டவெற்குந் தணிந்த துள்ள
முன்னநதி மலைவரவு மெம்பெருமான்
வரவுமினி மொழிக வென்றான்.

எ - து :—இந்தப் பிரகார மகா மேருவினுடைய சாரலிலே யிந்திர மகாராசனுக்கு நாரத மகாமுனிவர் அருளிச்செய்தா ரென்று சூதபுராணிக ரானவர் நைமிசாரணிய முனிவர்க் குரைக்க வானந்த பரவசனாகி யந்தச் சூதமுனிவரை வணங்கி யுபாசித்துத் தோத்திரஞ் செய்து சதுர்முகனுக்குப் பிதாவாகிய நாராயண மூர்த்தியானவருடைய லீலா விபூதிகளை யெல்லாங் கேட்டுக் கிருதார்த்த ரானேன் ஆகையினாலே யந்த வராகநதி வரலாற்று முறைமையினையுங் கோலாசலம் வந்த கொள்கையையும் அந்தக் கிரியிலே அநந்த விமான சேகரரா யரங்க நாயகர் திருவருளான் [1]வீத்திருந்த பெருமையினையு முமது திருவாய் மலர்ந்து கூறவேண்டு மென்று னிந்திர மகாராசன் நாரத முனிவரை யென்றவாறு. 20

இந்திரனுக்கு நாரத னுபதேசித்த வத்தியாயம் முற்றிற்று.

---

[1] வீற்றிருந்த.

# ஆருவது: சோமுக னுற்பத்தி யத்தியாயம்

83. முன்னமொரு ராசேந்த்ர கற்பமதில் காசிபனன்
முதன்மையிரு புத்தி ரர்களாய்த்
தன்னிகரி லாதவசு ரேசர்களு தித்துமகிழ்
தானவர்ந டுங்க திசையோர்
பொன்னகர்க லங்கபெரு சேனையொடு சென்றுசமர்
நின்றுபுரி போதில் புகழ்சேர்
மன்னவன்வெ குண்டுமகிழ் சம்பரன்மு தற்படைவ
ருந்தவபி ரப்ப டையிறல்.

எ - து :—முற்காலத்தி னெப்பற்ற வரசர்களைப் புகழ்கின்ற ராசேந்திர கற்பத்தின் பிரம்ம புத்திரராகிய மரீசி முனிவர் புத்திரனாகிய காசிப முனிவனது நன்மையனவாகிய முதன்மையைப் பெறுகின்ற புத்திரர்களாய்ச் செனித்தவர்க ளுமதேய மியாதென்றால் தங்களுக் கொப்பாகிய புயவலி யினையுடைய வரக்க ராகிய குலிசன், சம்பர னென்கின்றவர்க ளிப்படி யாகிய விருவர்களு முதித்த தோன்றே யிதற்கு முன்பு பிரதாபசாலிகளா யிராநின்ற தானவர்க ளெல்லாந் தங்கடங்க டலைமை நீங்கி யிவர்களைக் குறித்துத் தேவர் பணிவிடைகளை நடுங்கிச் செய்யவுந் திசையோராகிய விந்திரன் முதலாகிய திக்கு பாலகர்களும் பொன்றுலகி லுள்ள மற்றத் தேவர்களுங் கலங்கத் தக்கதாகவும் [1]ரத கெச துரக பதாதிக ளாகிய நான்கு வகைப்பட்ட பெருஞ் சேனு சமுத்திரமானது தங்களை வளைந்து வரத் தேவலோகத்தை வளைத்துக்கொண் டுத்தசன்னுகம் புரியு மளவிலே புகழ்ச்சியினையுடைய மன்னவனுகிய விந்திர மகாராச னுனவன் கோபக் குரோதத் துடனே கூடினவனுய்ச் சம்பராசுரன் முதலாகிய நான்கு வகைப்பட்ட சேனைகளை வச்சிராயுதத்தினலே யடிக்கத் தக்கதாக வருத்துவித் தரக்கர் கூட்டத்தை யெல்லாந் தகனப்படுத்திப் பலாசனமாய் வெளியாக்கினு னென்றவாறு. 1

84. வாசவன்மடித்திடகளைத்துபுகழ் விரன்மதி
விண்டுமறை யோது முதலா
மீசனொடி ளைத்திடவெ ழுந்தவனு றைந்தத
ளிழிந்தசட நீங்கி யெழில்சேர்
பேசரிய வன்னவுரு வங்கொடுபெ யர்ந்தெமது
பேரினொடி ளைந்து தவமாய்
வாசமது செய்யெனவு ரைத்திடநல்
கோலவரை வந்துமகிழ் கின்றனனரோ.

---

1 ரதகஜதுரகபதாதிகள்.

**எ - து:—இத்தப் பிரகார மிந்திர மகாராச னானவன் வச்சிராயுதத்தினாலே சம்பரன் முதலாகிய நான்கு வகைத் தளத்தினையும் வதை புரிய வதனாலே களைத்து மரண மூர்ச்சை யடைந்து வீழ்கின்ற புகழ்ச்சியினையுடைய சம்பராசுரன் மனம் புத்தி யாங்கார சித்தமாகிய வந்தக் கரண சதுஷ்டயங்களுங் கலங்கி மறை முதல்வனாகிய வீசுவரனாகிய நாராயண மூர்த்தியானவரை நினைக்க வப்பொழுது கெருட வாகனாரூடராய் பஞ்சாயுத மேந்திய சதுர்ப் புயங்களு மவுலி மகர குண்டல ஸ்ரீமகா லட்சுமி தேவி கவுத்துவாபரண பீதாம்பர முதலானதும் பிரகாசிக்க வவனது சரம தசையிலே வந்து தெரிசனங் கொடுத் தருட்கண் பார்த் தருளினா ரப்பொழுதே யந்த மாயா பாச கருவியாகிய வசுர யோனியா லாகிய சடத்தை விட் டவ ரனுக்கிரகத்தினாலே கூறுவதற் கரிதாகிய வதி தீவிர பக்குவ மதினுட்ப மமைந்த வன்னத்தினது ரூபத்தினைப் பெற் றிந்த விடம விட்டுப் பறந் தெமது சஞ்சீவி புரியிலே போய்ச் சேர்ந்து பரமபத வாஞ்சையை மனதி னெண்ணித் தவம் புரியக் கடவா யென்று திருவாய மலர்ந்தருளித் தமது பரம பதத்தி னெழுந் தருளினா ரதன் பின் பந்தச் சம்பரனானவன் பொன்னனு சிறகினையுஞ் செங்காலினையுந் தோலடியையும் பவளத் துண்டம் போன்ற மூக் கலகினையும் வெண்மையாய், பரம [1]பௌத்திரமாகிய வன்ன வுருவத்தைக் கொண் டந்த விந்திர புரியை விட்டு நீங்கிப் பரவாசு தேவன் றிருவுருவாய் மலர்ந்தருளிய வண்ணமாயக் கோலாசல கிரியை வலம் வந் திலக்குமியார் தீர்த்தக் கரையிலே போகங்களைச் செய் தஷ்டாக்ஷரத்தை யுபாசித்துத் தவம் புரிந்தான யூக புத்தியாகிய வன்ன வடிவா யென்றவாறு.** 2

85 முந்திய தவீச னும்பெ ருண்டநல்ச கோதரனைக்
கொன்றபழி முந்தி யவரைத்
தந்திர மெ டுத்தவர்க ளரனிரு ராதிபர்த
மைத்துபுகழ் வெள்ளி யதனை
யெந்தையுல கெய்திபுரி கின்றவர பாலனம
தாலரச னுபலகிரில்
வந்துமறை யோரைவதை கின்றதிறல் கண்டமரர்
தங்களைம டித்து வருவீர்.

எ - து:—இந்திரனால் மடிந் தன்ன ரூபத்தை யடைந்த தனது சகோதரனாகிய சம்பராசுரனுக் கிரங்கித் துக்கித்த குலீச னானவ னந்தப் பழிக்குப் பிரதி பழி வாங்கும் பொருட்டாய்த் தன தசுர சேனாதிபதிகளை நோக்கிக் கூறுகின்றா னியான் சத்திய லோகத்துக்குப் போய்ப் பிரம்ம தேவரை நோக்கி யரிதாகிய தவங்களைச் செய் தவ ருடைய வனுக்கிரகத்தினாலே பூமண்டலங்களிலே வரசனா யுற்பவித்து வேதியரால் செய்கின்ற வேள்விகளைத் தடுத் தவிற்பாகங்கள் கொடாமல்

---

[1] பவித்திரமாகிய.

செய்கின்ற சமயங்களிலே தேவர்களை மடித்துச் செயங் கொள்ளக் கடவீர்க ளென் [1]னுக்கியாபனஞ் செய்ய வவர்களு மகிழ் சிறந்தார்க ளென்றவாறு. 3

86. கண்டகனு ரைத்திடக தித்தமுடி சூரர்கள்க

ளித்தனர்ந டித்த னர்களாய்க்

கொண்டலெனச் சீறினர்கு லீச னும னைவதிய

டைந்துபுகழ் கொண்ட நதியில்

தண்டமது கொண்டுதவ சாலையினி னின்றுதழல்

பொங்கதல மெங்கு மரிதாய்

நின்றமுத லாமயனை யன்றுதுதி கொண்டுநெடு

நாள்மிகுத வம்பு ரியவே.

எ - து :—இந்தப் பிரகாரம் கண்டகனுகிய குலீசனுனைவ [2]னுக்கியாபனஞ் செய்த மாத்திரத்திலே யசுர சேனுதிபதிகள் களிகூர்ந்து நடித்தவர்களாகி மேக சாலத்தைப்போல முழங்கிச் சீறி யார்ப்பரித்தார்க ளப்போது குலீச னுனவன் மனைவதியாகிய பிரம்மபுரியை யடைந்து புகழ்ச்சியினைப் புனித பவித்திரமாய் அடைகின்ற மானத நதிக்கரையிலே . யொரு தவச்சாலையாகிய பன்னகசாலை செய்தமைத் ததி னடுப் பிரதேசத்தி னொரு வக்கினி குண்டஞ் சமைத் தந்த வக்கினி குண்டத்திலே தண்டு கமண்டலங்க ளேந்திய தவ சன்னியாசி உருவங்கொண் டவ் வக்கினி செய்கையான தொளிவிடாநின்ற யூபத் தம்பத்தி னொரு காற் பெரு விரலை யூன்றி யரிதாகிய தவ நிலையிலே நின்று தவத்தினைப் புரிந்து முதல்வ னுகிய பிதாமகனை யன்று முதலாகி யென்றைக்கும் மனதி லுபாசித்துக்கொண்டு நெடு நாளாய்த் தவம் புரிந்தா னென்றவாறு. 4

87. ஆதிமறை யோனுமிகு வன்புடனெ ழுந்துனத

ருந்தவசி றைந்த ததனு

னீதிபுகழ் பூமியினு தித்தரச னுயனது

நிச்சயந டத்தி மகிழ்வா

யோதியுல கெய்தவசு ரேச னும கிழ்ந்துயர

மாமகத தேச வரசன் .

சோதிபுகழ் [3]நீலனிட புத்திரனெ னப்பெருகு

சோமகனெ னத்தி கழவே.

---

[1] ஆக்ஞாபநம். [2] ஆக்ஞாபநம். [3] நீலனுடைய.

எ - து :—ஆதி சிருட்டி கர்த்தாவாகிய நான்முகரானவ ரன்ன வாகன ரூடராய் நாமகள் மனோரஞ்சிதராய், கமண்டல வட்ச மாலிகையை யுடையவரா யவன் றவத்துக் கிரங்கி எழுந்தருளி யவனைப் பார்த்துக் குலீசனே நீ செய்த தவமானது நிறை வெய்தி முடிந்தபடியினாலே யுனக் கென்ன வரம் வேண்டு மென்று திருவாய் மலர்ந்தருளக் கேட்ட குலீச னானவன் கூறுகின்றான் றேவரீர் வர பாலனத்தினாலே மகத தேசாதிபதி புத்திரனா யுதித் தெண்ணிய வெண்ண மெல்லா மொருங் கெய்தச் செய்தருள வேண்டு மென்று கேட்டா னப்படியே யாகக் கடவதென் றருள் கூர்ந்து வர பாலனங் கொடுத்துப் பிரம்மா வானவர் மனோவதியிற் போய்ச் சேர்ந்தா ரப்பொழு தசுர சூடமணி யானவனு மகிழ் சிறந் தந்த மானத நதியை விட்டுப் பெயர்ந் துயர்ந்த வளங்களை யுடைய நீலனென்கிற வரசனுக்குப் புத்திரனாய்ச் செனித்தா னப்போ தரசன் மகிழ்ந்து சோடச மகா தானங்களுஞ் செய்து சோமக னென்று நாமகரணம் பண்ணிவைத்தா னென்றவாறு. 5

88. வந்துபுகழ் சோமகன்வ ளர்ந்திரவி போல்திகழ
வானவர்ந டுங்க மதிசூழ்
சந்திசெப யோகதவ யாகமவி யோமுதல்த
டுத்துடன ழித்து லகெலா
மந்திரமி குந்ததிசை யோதுமறை வேதியரை
மால்வரையி னேத்தி மடியத்
தந்திரமெ டுத்தசுர ரிந்திரன்வ திந்தநகர்
சென்றமர் கொண்டு தணியார்.

எ - து :—அப்படி மகத தேசாதிபதியாகிய நீல மகாராசனுடைய தவ புத்திர னாகிய சோமுக னானவன் வளர்கின்ற காலையி னிரவிலே யிருளை யெல்லா மொதுக்கிப் பிரகாசிப்ப, தேவாதிக ளெல்லா நடுநடுங்கிப் புத்திவான்களால் மதிக்கப்பட்ட சந்தி வந்தனைகள் செபங்க ளியோகங்கள் தவங்கள் யாகங்களிற் கொடுக்காநின்ற வவிற்பாக முதலாகியதை யெல்லாந் தடுத்தா னது யாதினாலே யென்று லசுரன் றவஞ் செய்த பலத்தினாலே [1]யுலகெல்லாத்தையு மழித்தவனாய் மந்திரமாகிய வேதத்தினாலே மிகுதியாய்ச் சொல்கின்ற திசைக ளெல்லாம் புகழ்கின்ற மறை வேதிய ராகிய [2]பிராம்மணாளை யெல்லா மேகஞ் சஞ்சரிக்காநின்ற மலை யுச்சியி [3]னேத்திவித்துத் தாங்கள் மடியாத தந்திர யுக்தியைச் செய் தசுரக் கூட்டங்களுடனே கூடினவனா யிந்திர மகா ராசனானவன் வதியாநின்ற நகரிலே சென் றுத்தங்களைச் செய்து தணியாத கோபத்துடனே கூடினவர்களா யென்றவாறு. 6

[1] உலகெல்லாவற்றையும். [2] பிரம்மணர்களை. [3] ஏற்றுவித்து.

89. நான்முகன ளித்தவர பாலனமி குந்தரச
ஞுடியுல கெங்கு மகிழ்சேர்
வானவர்ந டுங்கதிசை வீரர்கள்வ ணங்கமுடி
மன்னவர்க லங்க வருமோர்
தானவரொ டுங்கதவ மாமுனிவர் வேதியர்த
யங்கஉல கெங்கு மழிய
வீனமுறு வோர்கள்களி யெய்திடம கிழ்ந்தவனி
ருந்தரசு செய்த னனரோ.

எ - து :—நான்முகனாகிய பிரம்மா வானவர் கொடுத்த வர பாலனத்தினாலே மிகுந்த வரச கூட்டங்க ளெல்லாரு சேவிக்க மகிழ்ச்சியை யடைந்தவனாகி யவனது புயவலியினாலே தேவாதிக ளெல்லா நடுங்கவு மற்றத் திக்குப் பாலகராகிய வீராதி வீரரான விந்திர னக்கினி முதலான பேர்க ளெல்லா நடுங்கவு மகுடத்தினையுடைய மன்னவர்க ளாகிய வைம்பத்தாறு தேசத் தரசர்களுங் கலங்கவுந் தனக்கு முன்னே பிரதாப சாலிகளா யிருந்த வசுரக் கூட்டங்க ளெல்லாங் கலங்கவுந் தவத்தை யுடைய திரிதண்ட சந்யாசியர்க ளேகதண்ட சந்யாசியர்கள வேதப் பிராம்மணள் முதலாகிய பேர்க ளெல்லாந் தயங்கிப் [1]பரதவிக்கவு முல கெங்கணு மழியவு மீனவான்க ளாகிய பாவியர்க ளெல்லாந் தலையெடுத்துக் களி கூர்ந்திருக்கவு மரசு செய்து செங்கோ னடாத்திச் சக்கர முருட்டிய தலைவனா யிருந்தா னென்றவாறு. 7

90. யாகமவி யேமுதலி ழந்து புகழ் தேவர்களி
னைத்திடவ டுத்த வசுரர்
வேகமது கொண்டுகடல் வெம்பியிட கொண்டசமர்
கண்டுவெந் துன்ப முளராய்ப்
போகமிகு தானவர்கள் பொன்னுலகி ழந்து புகழ்
கொண்டரச னேடு புகல
மேகமென வேயமரர் சூழதிரு மான்மகனை
மேவி துதி கொண்டு மொழிவார்.

எ - து :—இந்தச் சோமுகன் செய்கின்ற கொடூரத்தினாலே தேவாதிக ளெல்லாருஞ் செய்கின்ற யாகாதிகள் முதலாகிய சுப கர்மங்க ளெல்லாம் இழந்தவர்களாய் அந்தச் சுப கர்மங்கள்தவிர வவிற்பாகங்க ளெல்லா

[1] பரிதபிக்கவும்.

மில்லாமலிளைத்தார்கள் தேவ கூட்டங்க ளந்தச் சமயம் பார்த் தடித்த வசுரக் கூட்டங்க ளானவர்கள் வேகத்துடனே கூடினவர்களா யார்ப்பரித்துக் கடல்க ளெல்லாம் வெதும்பப்பட்டுக் கொதிக்கத் தக்கதாகிய வுத்த சன்னதத்தால் வெகு துன்பப்பட்டவர்களாய்ப் போக பூமியிலே யரம்பையர்களினுடைய சரச சல்லாபத்தை யடையாநின்ற வானவ ராகிய தேவ கூட்டங்க ளானவர்க ளந்தப் பொன்னுலகத்தை யிழந்து புகழ்ச்சியினையுடைய விந்திர மகாராசனுடனே கூற வந்த தேவேந்திர மகாராச னானவன் றேவ கூட்டங்க ளானவர்கள் மேக சாலங்களைப்போலத் தன்னைச் சூழ்ந்து வரத் திருமால் மகனாகிய பிரம்மாவைக் கண்டு தெண்டன் சமர்ப்பித்துத் துதி செய்து மொழிகின்றார்க ளென்றவாறு. 8

91. ஓதியாம றைப்படியு ரைத்துபுகழ் வேள்வியவி
யேமுதல்வி ளங்கு முலகின்
வேதியர்த மக்குநல்வி தித்தபடி யேயடைந்து
வேறு முள தோவ றிகிலோம்
மாதிருவி லோர்கள்திரி கால தவ யோகமுத
லற்றிடம டுத்த வசுர
ரீதிபுகழ் மேதினியி லிந்தன்பு ரிந்தமர
ரேன தன்புத்ர னெனவே.

எ - ற.—தர்மார்த்த காமமோட்சங்களைக் கூறுகின்ற வேத விதிப்படி செய்கின்ற புகழ்ச்சியினையுடைய வேள்வியிற் செய்கின்ற அவிர்ப்பாக முதலாகிய நற் கருமங்க ளெல்லாஞ் செய்யத் தக்கதாகப் பிரம குலத்துக் கெல்லா நீ யனுக்கிரகம் பண்ணியதே யல்லது வேறொருவர் கூற யாங் கண்டிலோ மாகையா லாதி யாகிய முனிக கூட்டங்களுஞ் செய்கின்ற திரிகால சந்தி வந்தனைகளுந் தவங்களு மியோகங்களுந் தவறும்படி யொழிந்திடத் தடிதலைச் செய்த சோமுக னானவ னீதிபதியாகிய தர்ம சாஸ்திரம் புகழுகின்ற விவ் வுலகத்தி னெமது கர்த்தா வாகிய பிதாமகனே உமையைக் குறித்துத் தவஞ் செய்கின்ற காரணத்தினாலே கொடுத்த வரத்தினா லல்லவோ [1]நீலனிட புத்திர னானவ னிந்த வளங்களை யெல்லா மாற்றினா னல்லது வேறில்லை என்று [2]பிரம்மாவினிட பாத தாமரையைத் தெண்டன் சமர்ப்பித்துத் தங்கள் குறைகளை யெல்லாஞ் சொல்லித் தொழுதார்க டேவ கூட்டங்களானவர்கள் மனோவதி நகரி னென்றவாறு. 9

[1] நீலனுடைய. [2] பிரம்மாவினுடைய.

92. அன்றுவய னேடமரர் கண்டுமுறை யோதமிக
வன்புடனெ ழுந்து வருள்சேர்
சென்றுதிகழ் மால்செறிசி றந்தசய னத்திடைதி
கழ்ந்தவர்பு கழ்ந்து ருகியே
கண்டுகளி கொண்டுமிகு வின்பமொடு சென்றுவய
னின்றுகர மென்சி ரமிசைக்
கொண்டுமகிழ் கின்றமுறை யெண்டிசைய கன்றபுகழ்
கொண்டுமுறை கின்ற னர்களால்.

எ - து :—இந்தப் பிரகாரந் தேவேந்திரன் முதலாகிய பேர்களு முனிவர் கூட்டங்களும் [1]பிதாமகனிட சன்னிதானத்தில் தங்களுக் குதவி யாகிய வேத வேள்வி யவ்விய கவ்விய முதலாகிய வைதிக சற் கர்மங்களைச் சோமுகனால் விலக்கப்பட்ட காரணங்களைச் சொல்லி இரங்காநின்றவர்க ளெல்லாந் தன்னைச் சூழ்ந்துவர வன்ன வாகன ரூடரா யெழுந்தருளிச் சென்று தன் பிதாவாகிய திருமாலானவர் சேடசயன விமான சேகரனைச் சிறந்திராநின்ற திருப்பாற் கடலைக் கண்ணுற் றணிமையராய்ச் சேர்ந் தவரது கீர்த்திகளைப் பிதாமகன் முதலாகியர் தமது மணி நாவினாலே புகழ்ந் துருகினவர்களா யவரது திவ்விய கல்யாண சுக சொரூப வரம்பி லின்பத்தைக் கண்டு களி கூர்ந்து மிகுந்த வின்பத்துடனே சென்று யனைவர் தமது கராம்புய மலரை மெல்லிய சிரமேற் கூப்பித் தொழுது மகிழ்ச்சி யடைந்து தனது வரத்தினாலே சோமுக னெனவன் கரவட சோரனைச் செய்கின்ற வபராத முறைகளைத் திக்கு திகாந்தங்களை யெல்லாங் கடந் தாக்கிரமிக்காநின்ற பிரபல புனித பவித்திர மாகிய நாராயண மூர்த்தியினது புகழ்ச்சியினைப் பரம பாகவதத் தன்மையரா யிருந்து கூறத் தொடங்கினார்க ளென்றவாறு. 10

93. பாற்கடலோ முப்பத்தி ரண்டிலக்கம் பரவியதின்
விளங்குகின்ற பரமன் கோயில்
மாற்கவிழ்சூழ் மாமணியின் மண்டபத்தின் மதில்கதிர்போல்
பத்திலக்கம் வானஞ் சூழுந்
தீர்க்கமொரு வேழாகும் பணியென்றுற் றிகழுமதி
னிளம்பிறைபோல் தோன்ற தாகு
மேற்கவிழ்மா ணிக்கமுடி யொன்றரைக்குள் விளங்குகின்ற
விமலனிரண் டரையா மன்றே.

1 பிதாமகனுடைய.

எ - து :—அந்தத் திருமாலாகிய பகவா னியோக நித்திரை செய்கின்ற திருப்பாற் கடலி னளவை முப்பத் திரண் டிலக்க யோசனைப் பரப்பி னடுப் பிரதேசத்திலே விளங்காநின்ற பரந்தாமனுகிய பரமனுடைய மேகந் தவழ்கின்ற சிகரங்களையுடைய திருமா மணி மண்டபத்தின் மதிலின் பரப்பானது பத்திலக்க மியோசனையா முயரமான தேழிலக்கமா மாதிசேட விமான சேகரமானது மூன்றிலக்கமா மவர தாயிரஞ் சிவ ரத்தினங்களையுடைய படப் பரப்பான தொன்றரை லட்ச விலக்கமா மவ் விமான சேகர நடுப் பிரதேசத்தின் விளங்குகின்ற விமலனுகிய புருடோத்தம சார்வ பௌமனது சயன சேவையான திரண்டரை யிலக்க யோசனையா மென்றவாறு. 11

94. சந்திரகாந் தம்மணியைத் தலத்தழுத்தித் தழைத்தொளிரு
மிந்திரநீ லம்மணியி னியற்றியவுண் மண்டபத்தின்
சுந்தரமா மிரதனத்தின் சோதிமிகு கோயிலுள்ளே
யெந்தைதனை யரவணைமே லெழுந்தமர கதமலைபோல்.

எ - து :—சந்திர காந்த மணியினுனுடைய கோயிலினுடைய தலங்களைச் செய்து பிரகாசியாநின்ற விந்திர நீல மணியா லுள் மண்டப மமைத்துச் சுந்தரமாகிய பத்து வித விலக்கணங்களையுடைய சாதாங்கமாகிய மாணிக்கமு மெட்டு நிற விலக்கண மமைந்த குருவிந்தமு மாறு நிறமாகிய சவுகந்த மணியினுலு நான்கு நிறமான கோவரங்கத்தி னுலுஞ் செய்தமைந்த வுட் கோயிலி னுள்ளே யெழுந்தருளிய வென் றந்தை யாகிய நாராயண மூர்த்தி யானவர் மரகத மலைபோ லனந்த சயனத்தின் வீற்றிருந்தருளின ரென்றவாறு. 12

95. ஆயிரங்கோ டிக்கதிரி னடலாழி யொளிர்சங்க
மாயிரங்கோ டிக்கதிரி னலர்ந்ததிங்க ளெனமிளிர
வாயிரங்கோ டிக்கிரண மணிமுடியு மவிர்ந்துமிக
வாயிரங்கோ டிப்பணிக ளலர்ந்தெங்கும் பரந்தொளிர.

எ - து :— அப்படியாக மிகுந்த பெருமையாகிய பாற்கடலிலே யண்டஞ் சூழ்ந்ததுபோல விளங்குகின்ற வாதி சேட சயனத்தி னெழுந்தருளிய மரகத மலைபோன்ற திவ்விய திருமேனிதனி னழகு தங்கிய வலக் கரத்தின் வெற்றி பொருந்திய சக்கராயுதமானது வாயிரங் கோடி சூரியர்க ளொன்ற யுதித்தப பிரகாசிக்காநின்றது போலவு மிடக் கரத்தின் விளங்கிய பிரகாசிக்காநின்ற பாஞ்ச சன்னியமான தாயிரங் கோடி யமுத கிரண சமூகங்களையுடைய சந்திர விம்பம்போலப் பிரகாசிக்கவுந் திருமுடியி னணிநின்ற வழகு தங்கிய மவுலியான தாயிரங் கோடி கிரண பூரணங்களால் விரிந்து பிரகாசத்தைச் சுவாலிககாநின்ற வரதன மய மாகிய மகா மேருவைப் போலவு மாயிரங் கோடிப் பணிகளாகிய முத்து மாலை, மோகன மாலை, மாணிக்க மாலை, பதக்கங்கள் முதலாகிய வாபரணங்களான தகன்ற மார்பகத்தின சுந்தர விலாசமாய்ப் பிரகாசிக்கச் சர்வாபரண பூஷித வலங்கார திவ்விய ரூபங்களா லந்தத் திருமாமணி மண்டப மெங்கணும் பரந்தொளிர்கின்ற தென்றவாறு. 13

96\. மலர்ந்ததா மரைகளென வவையவங்க டிகழ்ந்தொளிர
மணிமார் பெங்கு
மலர்ந்தொளிருந் திருவினொடு மசையுடைமுப் புரிநூலு
மவிர மீது
புலர்ந்தொளிரும் பொன்னுடை யிடைமலிய மின்னுனும்
பொலிந்து தோன்றக்
கலந்தவரை வடமுடனுங் கவின்செய் தொடை
கற்பகம்போல் கறங்கு வானே.

எ - து:—அந்தத் திருப்பாற் கடலி னியோக நித்திரை செய்யா நின்ற வரங்க நாயகருடைய திவ்விய திரு மேனிகளானது மரகதமலை போன்ற சுந்தர விலாசம் பொருந்திய வவையவங்க ளானது வொளிரா நின்ற செந்தாமரைப் புட்பம் போல வடிவழகினையுடைய திருமார் பகத்திலே கோடி சூர்யப் பிரகாசமாய் விளங்குகின்ற கவுத்துவாபரணமும் ஸ்ரீமகாலட்சுமி தேவியும் [1]வீத்திருக்காநின்ற திருத் தோளகளிலே யசையாநின்ற முப்புரி நூலும் பிரகாசிக்கவும் புலரியாகிய விடியற் காலத்திலே உதய மாகின்ற சூரியப் பிரகாசம் போன்ற பீதாம்பர வுடையான திடையி னிடத்திலே யிருந்து பிரதிபலிக்கவு மதுவு மல்லாமல் அந்தப் பீதாம்பரத்தின் மேலே யரை நூன் மாலைப் பட்ட மொளி விடவு மதனருகே பொன் னரைஞாணது கலந்து தோன்றுகின்ற வடிவழகினை யுடைய திருத் தொடையாகிய உபயமுங் கற்பகத் தருவைப் போலப் பிரகாசித்தருளிய நாராயண மூர்த்தியானவர் [2]வீத்திருந் தருளினு ரென்றவாறு. 14

97\. பாற்கடலில் கார்க்கடல்போற் பருமணிச்சூட் டாயிரவாய்ப்
பாம்பின் மீது
நாற்கடலி னெலியவென நான்மறைக ளோதவய
னளினத் தூவி
மேற்புறமும் புட்காப்ப வேத்திரக்கை சேனையர்விண்
ணப்பங் கேட்கக்
காற்புறமு மூவரிரு தாள்வருடக் கண்டுயிலும்
கரிய மாலே.

எ - து:—சோடச கலைகளா லமிழ்த தாரைகளைப் பொழிகின்ற பூரண சந்திர பிம்பம் போன்ற வெண்மையாகிய திருப்பாற் கடலி னடுப் பிரதேசத்தின் கருங் கடலானது [3]வீத்திருந்தா லெத் தன்மைத்தோ

---

[1] வீற்றிருக்காநின்ற [2] வீற்றிருந்தருளினுர். [3] வீற்றிருந்தால்.

வ்த் தன்மையனவாகிய திருமேனியின் காந்திகளானது பிரகாசிக்க வனந்த சயனமான தாயிரம் பணு முடிகளிலு மாயிரஞ் சிரோரத்தினங்க ளாயிரங் கோடி சூரியர் பிரகாசிக்காநின்ற வனந்த சயனத்தின் யோக நித்திரை செய்யாநின்ற வரங்க நாயகர் சன்னிதானத்தி னெழு கடலுங் கூடித் தொனித்தது போல வேத கோஷ்ட முழங்க விரு பக்கங்களு மனந்த கருட விச்வசேனர், சனகன், சனத் குமாரன், சனந்தனன், சனுதனன் முதலாகிய நித்ய சூரியர்களா லிடைவிடாது துதி செய்ய உபய செந்தாமரைக் கமலம் போன்ற திருவடிகளை ஸ்ரீமகாலட்சுமி பூதேவி நீளா தேவியாகிய மூவர்களுங் கால்களை வருடி யுபசாரஞ் செய்ய [1]வீத்திருந் தருளினு ரரங்க நாயக ரென்றவாறு. 15

98. உலகமெலா மளித்தருளு முந்திகமலத்தோனை
யுவந்து பின்ன
ரலகில்லா விளையாட்டா னழித்தளிக்கும் பரம்பொருளை
யமலன் றன்னை
யிலகுபுவி யந்தரமு மினிதுறையும் பரம்பொருளை
யிமையோர் கோவைத்
திலகமென மூவருக்குண் முதலாகி நின்றனைத்
திருமா றன்னை.

எ - து:—உலகங்களை யெல்லா முண்டாக்கி ரக்ஷிக்கும்படியான உந்திக் கமலத்திலே [2]வீத்திருக்காநின்ற பிரம்மாவை யளித்தருளிய கிருபையினுலே யுலகங்களை யெல்லாம் ரக்ஷித்து மழித்தலாகிய லீலா விபூதியில் விளையாடு கின்ற பரம புருடனை மலரகிதமானவனைப் பரிசுத்தராகிய சிதானந்த சொரூபராய்ப் பிரகாசியாநின்றவர் பூமி யந்தரங்களிற் றனின்ப மயராய் வசியாநின்ற பரம் பொருளான வத் தேவ நாயகனைத் திருமூர்த்திகளுக் குள்ளே நடு நாயக மாகிய திலகம் போன்றவனைத் திருமாலினை யென்றவாறு. 16

99. அரனயனைப் புரந்துறையு மரியகேசவன்றன்னை
யகன்று நீண்ட
பெரியதோ ரருள்விழியிற் கடைக்கணித்த முத்தர்கடல்
பிறங்கு வானை
யுரியபொரு ளனைத்தினையு மாயையா லசைத்தாட்டு
மொருவன் றன்னைக்
கரியதிரு மேனியனைத் திருவடியிற் றொழுதேத்திக்
கண்ணிற் கண்டார்.

---

[1] வீற்றிருந்தருளினுர். [2] வீற்றிருக்காநின்ற.

எ - து :—உருத்திர மூர்த்தியையும் பிரமனையுந் தமது [1]விரண்டு விலாப் பக்கங்களிலேயு முடைய கேசவ னென்னுந் திரு நாமதேயத்தை யுடையவன் கருணு சமுத்திரம் போன்ற விசாலம் பொருந்திய செவ்வரி பரந்த வழகிய கருணு நேத்திரத்தின் கிருபா நோக்கத்திலே கடாட்சித் தருளிய நித்ய சூரியர்கள் முமுட்சுக்களாகிய பத்தர்கள் பெரும்புறக் கடல் போலத் தம்மைச் சூழ்ந்திருக்கின்ற வனந்த விமானத்தி னெழுந் தருளிய வரங்க நாயகனை யிந்தத் திரிபுவனத்தி லுண்டாகிய சராசரங்களை யெல்லாந் தமது மாய்கையாகிய வனந்த கல்யாண குண விபூதியால் ஜீவான்மா பரமான்மாவா யசைத் தாட்டாநின்ற ஏக நாயகனைக் காருண்ட மேகம் போன்ற கரிய திரு மேனியின் திருவழகினையுடைய வெம்பெருமா னது திவ்விய சரணாரவிந்தங்களைக் கண்டு துதி செய்தார்கள் பிரம்மா முதலாகிய தேவாதிக ளென்றவாறு. 17

100. சீதர னேபரி பூரண னேநம
தேவரு நான்மறையோர்
ஆதர னேயவ னீதல மோதரு
வற்புத னேஇமையாள்
சோதர னேபெறு தாயுறு தந்தையுஞ்
சுத்தமு மானவப
யோதர னேகுரு தெய்வமு மானவ
வொப்பறு நற்பொருளே.

எ - து :—ஸ்ரீமகாலட்சுமி தேவியைத் திரு மார்பிலே தரித்தருளிய தேவரீ ரெள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கு நிறைந்த பரிபூரணரே யும்மை வந்திக்கின்றோந் தேவ விருடியர் முதலிய வேதங்கட்கு மாதர வாகிய தேவ தேவோத்தமனே சராசர ரூபமான பசு பட்சிகள் சீவ செந்துக்களுடைய விதயப் பிரதேசத்தின்கண் வதித்து மந்த உயிர்களா லனந்த கல்யாண குண பரம [2]பவுத்திர விபூதிகளைச் சொல்லுதற் கரிய வந்தனை யோக்கியனாகிய விமையவளான பார்வதியாரது சகோதரனே [3]வீசப் பிரதாபரான மாதாவும் பிதாவுமா யுடலினைப் பாதுகாத்துங் குருவாகி யான்மாவைப் பரிசுத்தப்படுத்தியுந் தெய்வமாய்ப் பரமபத மளிக்காநின்ற தெய்வ நீரல்லது வேறுண்டோ நமர்களா யிருந்து பாது காக்காநின்ற வொப்பற்ற பொருளே யுமது பாத பங்கயங்களிலே தெண்டன் சமர்ப்பிக்கின்றோ மென்றார்கள் தேவகூட்டங்க ளென்றவாறு. 18

---

[1] இரண்டு. [2] பவித்திர. [3] ஈசப்பிரதாபரான.

101. இன்னன வாய்ப்பல்வி தங்க டுதித்து [1]யி
றைஞ்சிடு வானவர்தஞ்
சென்னிமு கிழ்த்தக ரத்தின ரன்பொடு
சீதர னைப்பணிய
வுன்னிம னத்தினில் பேரருள் கொண்டொரு
வாசக மீமிசையிற்
பன்னியு ரைத்தச ரீரியு மாயொரு
பாவனை செய்தனரே.

எ - து:—இவ் விதமாய்ப் பல விதங்களாகிய வேதச் சுருதியினுடைய வாக்கிய துதிகளாலே துதி செய்து தெண்டன சமர்ப்பித்துச் கராம்புய மலரை உச்சியிற் கூப்பித் தொழு தன்பினாலே சீதரனை யுபாசித்தார்களதை யூக புத்தியி னாலோசித்துப் பேரருளாய்க் கருணை கூர்ந் தசரீரி முகாந்தரமா யறிவிக்க நினைந்தருளினார் கருணைக் கடலாகிய வரங்க நாயக ரென்றவாறு. 19

102. [2]இக்கண மேவுமை செய்தகொ டும்பழி
யேந்திய சோமுகனை
முக்கணன் வந்துத டுத்திடு மாயினு
மாய்ப்பனீர் மூவுலகுங்
கைக்கொள வென்றவ ரைத்தனி யேகவோர்
கடிகையின் [3]விடையீய்ந்து
செய்க்கம லத்திறை யுந்துதி செய்யவோர்
சீரரி யாயினனே.

எ - து:—பின்னு மந்தச் சதுர்முகன முதலாகிய தேவர்களை நோக்கி யரங்க நாயகர் தமது திருவாய் மலர்ந்தருளுகின்றார் நுங்கள் யாக மவ்விய கவ்விய முதலாகிய வைதிகத்தை யெல்லாம் விலக்கா நின்ற வந்தச் சோமுகனை வதைத் துங்கள் வைதிகத்தை நிறுத்துகினறே னவனுக் குதவியாய்க் காளகண்ட திரி நேத்திரனாகிய பிரளய கால ருத்திரன் [4]வந்தெதுத்தாலு மவரையும் விலக்கி ஒரு கணப் போதி லவனுயிரை யுடலினின்றும் பிரிப்பே னீங்க ளியாவருஞ் சுபகர மங்கள விபவமா யுங்க ளுலகிற் போயச் சுகித்திருக்கக் கடவீர்க ளென் றவரவர்களைத் தத்த மிடங்களி னரசு செய்யக் கடவீர்க ளென் றனுக்கிரகஞ் செய்து [5]தம்மிட கிருபா விசேடத்தா லதி சிலாக்கிய மாகிய [6]வெக்கியவராகத் திரு வவதாரஞ் செய்த நளினா ரெனறவாறு. 20

சோமுக னுற்பத்தி யத்தியாயம் முற்றிற்று.

---

[1] இறைஞ்சிடு. [2] இக்கணமேயுமை. [3] விடையீந்து. [4] வந்தெதிர்த்தாலும். [5] தம்முடைய. [6] யக்ஞவராக.

## ஏழாவது: எக்கிய வராகத் திருவவதார வத்தியாயம்

103\. திருமுகமண் டலம் [1]யூகத் தம்ப மாகுந்
திருநாசி [2]இருதுகளாய்த் திகழாநிற்கு
மருராச சூயமச்வ மேதங் கண்ணும்
வருமூன்றெண் ணக்கினியும் வளர்நா வாகுந்
தருமவசோத் தாரைவாய பேயம் ரண்டுந்
தணிந்த[3]துடை வாலாகத் தரியா நிற்கும்
பருமிடுப்புச் சோமமதி ராத்ர மாகும்
பவுண்ட்ரீக மெனுமியாகம் வடிவப் பண்பாம்.

எ - து:—அப்படிப் பிதாமகன் முதலாகிய தேவ கூட்டங்களுக் கனுக்கிரகித்த நாராயண மூர்த்தியானவர் திருப்பாற் கடலி னனந்த சயனத்தை நீங்கினவரா யெக்கிய வராகத் திருவவதார [4]தோத்த மெப்படி யெடுத்தா ரென்றால் திருமுக மண்டல மானது சமஸ்த யாக நடுப் பிரதேசத் தின் விளங்காநின்ற யூகத் தம்ப மாகவும் பெருமை பொருந்திய நாசியானது யாகாதி இருத்துக்கள் பதினெட்டாகவு மிவ் வுலகின்கண் மருவியிரா நின்ற ராச சூய மசுவமேதமாகிய விரண்டுந் திருக் கண்களாகவு மாக வனீயம் காருகபத்தியந் தெக்கிணுக்கினி யென்கின்ற முத்தழலு நாவாகவுந் தருமத்தினையுடைய வசோத்தாரை வாயபேய மிரண்டு மிரண்டு [5]துடைகளும் வாலு மாகிப் பிரகாசிக்கவும் பருத்த விடையானது சோம மதிராத்திர மாகிய விரண்டுமாய்த் தோன்றவும் பவுண்டரீகமானது ரூபத்தினது திருவடி வழகாய்த் தோன்றி [6]விளங்கித் தந்த வெக்கிய வராகமான தென்றவாறு. 1

104\. விச்வசித்து கோமேத மத்த மாகும்
விளங்கியநான் மறைகடிரு வடிக ளாகு
மத்திமுத னரமேதஞ் சத்திர யாகம்
[7]அடிவயத்தி னுருவமுத லாகத் தோன்று
மத்துவரங் கெசமேதஞ் சத்தியோ தீக்கை
யபுத்திரியா மணிமுழங்கா லாகநிற்குஞ்
சத்துவமா யேசுரமோர் நித்திய தீக்கை
சனித்திடுமக் கினிட்டோமங் கண்ட மாகும்.

---

[1] யூபஸ்தம்பம். [2] இரது. [3] தொடை. [4] தோற்றம். [5] தொடைகளும். [6] விளங்கிற்று அந்த. [7] அடிவயிற்றின்.

எ - து :—விச்வசித்துங் கோமேத மாகிய விரண்டுங் கரங்களாகவுந் தர் மார்த்த காம மோக்ஷங்களைக் கூறுகின்ற நான்கு வேதங்களுந் திருவடிக ளாகவு மென்பு முதலாகிய தெல்லாம் புருட மேதமாகவுஞ் சத்திர யாகமான தடிவயிற்றி னுருவமாய்த் தோன்றவு மத்துவரமுங் கெச மேதமுஞ் சத்தியோ தீக்கையு மபுத்திரியாமமுமாகிய வின் னுன்கு மணி முழங்காலாகத் தோன்றவுஞ் சாந்த தத்துவத்தையுடைய மாயேசுரமு நித்ய தீக்கையு மக்னிட்டோமமுமாகிய விம் மூன்றுங் கண்டமாய்ப் பிரகாசிக்கத் தக்கதா யெக்கிய வராகத் திருவவதாரஞ் செய்தருளினு ரென்றவாறு. 2

105. நித்தியமுறு [1]பூரணுங் கிசைவி ளங்க
நிமலைதிருக் கவுத்துவமா மணிது லங்க
முத்திபுகழ் மிருதிகள்மா சடங்கந் தாரை
முன்னிரவி மதிதிருவா பரண மாக
வெத்திசையு மகன்றதிரு வுருவ மாக
வெக்கியவ ராகமென நாமங் கொண்டு
பத்திமல ரடிபணிந்தங் கமரர் [2]போத்தப்
பரமனெழுந் தருளினன்பாற் கடல்விட் டன்றே.

எ - து :—இப்படித் தன திச்சையால் தேவர்க ளிடுக்கண் களையத் திருப்பாற் கடலிலே திரு வவதாரஞ் செய்தருளியதா யெண்ணுகைக் [3]கசக்கியமாகிய வனந்த கல்யாண குணங்களையுடைய நித்தியமாய பரிபூரணுங்கிசை விளங்கத்தக்க வராக மூர்த்தியானவர் நிமலையாகிய ஸ்ரீமகா லட்சுமி தேவியும் பிரகாசத்தினையுடைய கவுத்துவாபரணமுங் கோடி சூரியரது கிரண சமூகம் போற் பிரகாசிக்கவு முத்தியாகிய காரணங்களை யெல்லாம் விளக்கிக் கூறுகின்ற மிருதிகளுஞ் சடங்கமாகிய தர்க்க வியாகரண சோதிட நிருத்த சந்தோபிசித நிகண்டு முதலாகிய வாறு சாத்திரங்களுந் தாரகா கணங்களாகிய நக்ஷத்திரங்களுஞ் சூரிய சந்திராதிகளுந் திரு வாபரண மாகவுந் திக்கு திகாந்தங்க ளெல்லா மகன்ற பரிபூரண சொரூபமாகியவ ரந்தரியாமியா யெள்ளுக்குள் ளெண் ணெயைப்போ லெங்கு நிறைந்தவராகிய வெக்கிய வராகத் திரு நாம தேயத்தைக் கொண்டு பத்தியினுலே மந்தார பாரிசாதங்களைப் பாத தாமரையிற் சொரிந்து தேவாதிக ளானவர்கள் [4]போத்தி வழிபடப் பரம னுனவர் பாற்கடலைவிட் டெழுந்தருளினு ரென்றவாறு. 3

---

[1] பூரணும்சம். [2] போற்ற. [3] அசக்கியம் - அளவில்லாமை. [4] போற்றி.

106. கடல்க டைந்திடு [illegible]லயி லிலக்குமி தோன்ற
வடல்ப யின்றொளிர் முகமென வார்திரை வருணன்
படருந் தேவியோ டாடுபூப் பந்தென வமுதக்
குடம தாமெனக் குணதிசைக் குமுதன்வந் துதித்தான்.

எ - து :—திருப்பாற் கடலினை நாராயண மூர்த்தி யானவர் மந்தர கிரி யென்னும் மத்தினாலே கடைந்த ஞான்று ஞான வலியினது பிரகாசமான தொளிராநின்ற லிலக்குமியார் திரு வவதாரஞ் செய்ய வவ டிருமுக மண்டலம் பிறையைப் போலவு நீணட திரையினையுடைய வருண ராச னனவன றன்னைப் பற்றி வருகின்ற தேவியாருடனே சரச சல்லாபக் கிரீடை விளையாட் டாடும்போது வொருவர்க் கொருவர் எறிகின்ற புட்பப் பந்தினைப் போலவு மமுத கும்பம் போலவுங் குமுதத் துக்கு நாயகனாகிய பூரண சந்திரனைவ னமுதத்தைப் பொழிகின்ற கிரணங்களை விரித்துக் கிழக்குத் திசைக் கடன் முகட்டி னுதயஞ் செய்தா னென்றவாறு. 4

107. மகர வேலையின் முகட்டினின் மறுவில்வெண் கும்பச்
சிகர மீதினிற் கமுகிளம் பாளைகள் சிறந்து
சுகம தாயலர்ந் தாலெனக் களங்கம நுடரப்
புகரி லாக்கடற் பொங்குபுற் புதமெனுந் திங்கள்.

எ - து :—மகர மீன்களை யலைகளினாற் சுருட்டி எறிகின்ற கிழக்குத் திசைச் கடன் முகட்டிலே குற்ற மற்ற வெண் கும்ப சிகரமாகிய வாயி னிடத்திலே யதிக சுகத்தைத் தருகின்ற கமுக மரந் தனது பாளைகளை விரித் தொளிருந் தன்மையினைப்போல களங்கமானது [1]துடர்ந்து விரியவுங் குற்றமற்ற கடலானது தனத மெல்லையினைக் கடந்து மகாசல பிரளயமாய் வடமேரு கிரியு மிறுதலை யடையு ஞான்றக் கடலினது நடுப் பிரதேசத்தி னெழுந்த நீர்க் குமிழைப் போன்று விளங்கின திங்களாகிய பூரண சந்திர னென்றவாறு. 5

108. அலர்தி ரைக்கடன் முகட்டினி னூர்ந்தொளிர் திங்கள்
பலஉ டுக்கணாற் றிசையினும் பரவியே யமர்த
னிலவு மாமகிழ் பூத்தல்போ லொளியினை நிறுவக்
குலவு மாமணப் பொரியெனக் குறுகிய தன்றே.

எ - து :—அலர்ந்த வெண்டிரையினையுடைய கிழக்குத் திசைக்கடன் முகட்டிலே யமுத சமூகங்களி னிறைந் தொளிராநின்ற சந்திரனைப் பலப்பல உடுக்களாகிய தாரகா கணங்க ணாற்றிசை யிடத்தும் பரவிச்

[1] தொடர்ந்து.

சூழ்ந்து விளங்குத லெத் தன்மைத்தெனின் மகிழ விருட்ச நான்கு திக்கினு நின்று புட்பங்களை யலருந் தன்மையினைப் போலவு மொளிகளைப் பரப்பவுஞ் சந்திர பகவானது மணத்திலே தேவாதிகள் சொரிகின்ற பொரியினைப் போலு மாகாயத்திற் பிரகாசித் தொளிர்ந்தன வென்றவாறு. 6

109. குமுத மாமல ரலர்ந்தன குவிந்தன கஞ்ச
மமுத மாமெனத் தேறலை யருந்திய தளிகள்
சுமுக காமர மிசைக்குத லின்றுணைத் தூதாய்ச்
சமுக மாவர லாறினைச் சாற்றல்போ றமைக்கும்.

எ - து:—இத் தன்மையனவாய்க் கடன் முகட்டிலே பூரண சந்திரோதயமான மாத்திரத்தின் செவ்வல்லி மலர்களானது மடுக்களினு மேடைகளினுந் தடாக பந்திகளினு மலர்ந்தன தாமரைக் கமல சமூகங்களெல்லா முகுளிதமாய்க் குவிந்தன குமுதத்தின்கண் ணமுதத்தைப்போல் தேன்களை உண்டு களிக்காநின்ற வண்டினங்கள் திவ்வியமாகிய காம விசைப் பாட்டினைப் பாடுத லெத் தன்மைத் தெனி னினது கணவனுக்கு யான றூத னவ ருன்னைப் பிரிந்த பிரி வாற்றுதவராய்க் கடன் முகட்டினிற் றோன்றினு ரவர் சமுக வரலாற்றினை யுனக் கறிவிக்க வந்தே னென்பதுபோ லந்த மலரின்கட் டமைத்திருக்கு மென்றவாறு. 7

110. வானுறநி மிர்ந்தமக மேருவென நின்றுதிரு
மாமுடிவி ளங்க மறைபோற்
பானுவினு தித்தகதிர் போலொளிவி ளங்கபுகழ்
பாற்கடலெ னப்பெ ருகும்வாய்
சேணிலில்வி ளங்குபிறை போலொளிமி குந்தசெயல்
கோடுசெறி வெண்ப தமுறுங்
கோனினடி யிற்பெருகு வானதியெ னப்புகழ
கோலகடல் விட்ட னனரோ.

எ - து:—ஆகாய மளவு முயர்ந்த மகா மேருவினைப் போன்ற பெரிய வாக்கையினையுடைய வந்த வரத வராக மூர்த்தியானவ ரந்தப் பாற் கடலினை விட்டு நின்று நவரத்தின வபரஞ்சிப் பொன் மயமாயமைந்த திருமா மகுடமானது திரு முடியிலே நான்கு வேதங்களைப் போலப் பிரகாசிக்கச் சூரிய னிடத்து விரியாநின்ற கிரண சமூகங்களைப் போலச் சரீரப் பிரகாசந் திக்கு திகாந்தங்க ளெல்லாம் பிரதிபலிக்கத் திருப்பாற் கடலைப் போன் றகன்றிராநின்ற திருவாயினையு மந்த வாயினிடத்திற் பொருந்திய வக்கிர தந்தங்களான தாகாயக் கிழக்கு

முகட்டி னுதிக்காநின்ற மூன்றாம் பிறையைப் போலப் பிரவேசிக்க வெண்மையனவாகிய குளப்படியினையு நான்கு பாதாரவிந்தத்தினையு முடைய வந்த வராக மூர்த்தியார் பாதத்திற் பிறந்து பெருகாநின்ற தேவ கங்கையினைப் போலப் [1]பவுத்திரமாகிய திருப் பாற்கடலை விட்டு நீங்கினு ரென்றவாறு. 8

111. அந்தரம திர்ந்தபுகழ் துந்துபிமு ழங்கமல
ரன்புடனி றைத்து வழகாஞ்
சுந்தரவ ராகமதைக் கண்டுபனி நீர்சுரர் து
ளிக்கசுரு தித்தொ டரவே
சந்திரகு ளிர்ந்தகிர ணந்தனின்வி ளங்கவழி
கொண்டுவெதிர் சார்ந்து பரவ
வந்துமரு தத்திணைக டந்தனர்பி ரையிரமெ
யிற்றிகழு மான கரின்வாய்.

எ - து:—அந்தரமாகிய வாகாய மார்க்கத்திலே தேவ துந்துபி யாயிர மாயிர முழங்க மந்தார பாரிசாத கற்பக விருட்ச முதலாகிய பஞ்ச தாருவி னலர்ந்து மணங்களைக் கமழாநின்ற புட்பங்களைத் தூவித் தேவாதிகள் வழிபட்டுச் சுந்தர ரூபமாகிய வராகத்தை யணித்தாய்க் கண்டு பனிநீர்களைத் துளித்தார்க ளான்கு வேதங்களுந் தொடர்ந்து வரச் சந்திர குளிர்ந்த கிரணத்தினுடைய விளக்கத்தினாலே வழிகளைக் காட்ட வந்த வழிகளை யெல்லாங் கடந்துவந் தம் மலையினைச் சூழ்ந்த மருதத் திணைகளைக் கடந்து வராக மூர்த்தியானவ ராயிரம் பிரகாரமாய்ச் சூழ்ந்திராநின்ற சொர்ண மதிற் புறமானது விளங்கிய மகா தேசாதிபதி வதிகின்ற நகரத்தைக் [2]கண்ணுத்தா ரென்றவாறு. 9

112. பொன்னகரெ னத்திகழு மன்னுமதில் பொற்கொடிபொ
ருந்தியசை கின்ற புகழ்சேர்
மன்னவர்வ திந்தநவ ரத்னமணி மேடைமக
மேருவென வேதி கழுமால்
வன்னமுலை சொர்ணவிள நீரெனவ திந்தவர்க
ளியாழினொலி முற்ற மகிழா
வன்னநடை மேனகைய ரம்பையர்க ளாரமுத
மென்னவக மாம கிழ்வரால்.

---

[1] பவித்திரமாகிய. [2] கண்ணுற்றார்.

எ - து:—பொன்னகராகிய விந்திர புரியைப்போ லொத்த வெழிலினை யுடைய நிலை பெற்ற மதிலிடத்திற் கட்டிய துவச படங்களாகிய பொற் கொடிகளான தசைந் தாடாநின்ற புகழ்ச்சியினையுடைய மகத தேசத்தின் வாழ்கின்ற ராச ராசாக்கள் வாசம் பண்ணுகின்ற நவரத்தின மணி மாளிகைக ளானது மகா மேரு கிரியைப்போல் வளர்ந் தோங்கிப் பிரகாசிக்க வெவ்வர்ணமாகிய தன பாரங்களானது செவ்விள நீரினை யொத்த ரதி தேவி ஸ்ரீமகாலட்சுமி தேவி யிந்திராணி செகன் மோகினியை யொத்த திவ்விய காந்தியாகிய வழகினையுடைய மங்கையர்க ளானவர்க ளரமியங்களில் பிரதம யாழினை [1]மெட்டிப் பாட வவ்விசை யினைக் கேட் டுருகிய வன்ன நடையினையுடைய மேனகை யரம்பை முதலாகிய தேவ பரத்தையர்க ளமுதத்தின் சுவையே யீதென்று வந் தக மலர்ந்து முக மலர்ந் தற்புதம் பெருகி யிசை மயமா யுருகிக் கரைந்தார்க ளென்றவாறு. 10

113\. யோசனைமி குந்தபதி னுயிரமெ னத்திகழு

மோர்வனம கன்ற கடல்போல்

வாசவன்வ னத்தினுமி குந்ததுரு வாசனிட

வண்மைபெறு சோலை யதினும்

பேசரிய கற்பகம லர்ந்ததெ னவேபெருகு

புன்னையொடு வன்னி புகழ்சேர்

வாசமது வீசிடம கிழ்ந்தரச ரோடிரதி

யென்னமரு வன்ன நடையார்.

எ – து:—பதினுயிர யோசனை பரியந்தம் பரப்பினையுடைய வொரு வனமானது கடலினைப் போல வகன்றதாய் ரமணீயமாகிய சிங்கார வளப்பத்தினையுடைய தவ் வாசவனாகிய விந்திர மகா ராசனுடைய பஞ்ச தாருவின் வளத்தினைப் போலவுந் தூருவாசனிட தன்மையைப் பெறுகின்ற சோலையைப் போ லியாவருஞ் சஞ்சரித்த லரிதா யிருக்கப் பட்டது [2]மத்தந்த வனத்தி னிருக்கின்ற சுரபுன்னை விருட்சம் வன்னி விருட்சம் முதலான தெல்லாஞ் சுகந்தங்களையுடைய மலரான இத ழவிழ்ந்து பிரகாசித்தல் பேசுதற் கரியனவாகிய கற்பக விருட்ச மானது மலர்களை மலர்ந்தா லெத்தன்மையோ வத் தன்மையனவாகிய தந்த வனத்தினது பரிமள சுகந்தத்துக்காக வந் நகரி னுள்ள வரசக் கூட்டங்களு மிரதி தேவியினை யொத்த ராச கன்னியர்களு மன்னத்தைப் போலுஞ் சிங்கத்தைப் போலுஞ் சஞ்சரித் துலாவிய வவ் வுளங் கண் [3]டிறும்பூதுத் தவ்வனத்தினை யெல்லாம் பார்ப்பார்க ளென்றவாறு. 11

---

[1] மீட்டி. [2] மற்றந்த. [3] இறும்பூதுற்று.

114. தளிரிலை முறிகள் சோலை
யிந்திர சாப மாக
வளிதிகழ் மலவற் போது
கனபல மாட்சி யாகத்
துளிமதுத் தாரை மேகஞ்
சொரிந்திடு துளிக ளாகக்
களிமயி னடிக்கு மாரிக்
காலம்போல் வசந்த காலம்.

எ-து:—மாரிக் காலத்தினது குணமாவ தென்ன வென்று லிந்திர தனுசு வில்லை யாகாயத்தின்கண் டோற்றுவித்தலு மாலாங்கட்டியாகிய பெருந் துளிகளைச் சிதறலுஞ் சலதாரைகளைப் பொழிதலு மயினடித்தலு மாகிய தர்மத்தை யுடையதுமாகிய வசந்த காலத்தை மாரிக் காலம் போலச் சிலேடையாற் கூறிய காரணத்தைக் குறித்து விரித்துப் பொருள் கூறுகின்று மந்தச் சோலையின்கண் டளிர்களு மிலைகளும் பழுப்புகளும் விளங்கித் தலைத்துத் தோன்றுத லிந்திர தனுசினைப் போல நானுவித நிறங்களைப் பிரதிவிம்பிக்கவும் வண்டினங்க ளிசைப்பாட்டைப் பாடுகின்ற பெரு மல்லிகைப் புட்பமான தாலாங்கட்டியினைச் சிதறுந் தன்மையைப் போலவு மவ் வனத்தி னலர்ந்த மலர்களின் வார்ந் தொழுகாநின்ற தேன் தாரைகள் மேகஞ் சொரிகின்ற நீர்த் தாரையினைப் போலவு மிருத்தலால் மயிலினங்களான திது மாரிக் காலமென் றெண்ணிக் கலாபியை விரித்து நடிக்கின்றமையால் மாரிக் காலத்தை யொத்தன வசந்த கால மென்றவாறு. 12

115. சண்பகம் பலாச முல்லை
தழைத்திடும் வகுளம் புன்னை
வண்பயில் கதம்பம் பாதி
ரிப்பெயர் வருக்கை வாழை
மண்பயில் சந்த னப்பேர்
மாதவி மாழை யாவு
முண்மல ரலர்ந்து தேன்க
ளுகுத்தன வுயர்ந்த சோலை.

எ-து:—இத் தன்மையனவாய் வேனிற் காலம் வந்து பிரவேசித்த மாத்திரத்தின் சண்பக விருட்சங்களு முருக்கு முல்லைக் கொடிகளுந் தழைத்திராநின்ற வகுளங்களும் புன்னைகங்களு மேன்மையா னுயர்ந்த கதம்பங்களும் பாதிரிகளும் பலா வருக்கங்களும் வாழைக் கானங்களு

மிவ் வுலகின்கண் ணுயர்ந்த சந்தன வடவிகளும் குருக்கத்தி மரங்களும் மா விருட்சங்களு முதலாகிய சோலை யாவும் புட்பங்க ளுள்ளித ழவிழ்ந்து தேன்களைச் சொரியாநின்றன வுயர்ந்த சோலைகளாகிய உத்தியான வனங்க ளென்றவாறு. 13

116. கயங்களின் மடுக்க டன்னிற்
கசிந்திடு தடாகப் பந்தி
வியன்பணை மருத வேலி
விளங்கிய பதுமம் பூப்ப
நயமிகு தேவ லோக
நளினப்பள் ளியிலை நீங்கிப்
பயன்பெறு மன்னஞ் சங்கம்
பரந்தன வவையின் மாதோ.

எ - து:—கயங்களிலேயு மடுக்களிலேயுஞ் சலங்களைக் கசியாநின்ற தடாக பந்திகளிலேயும் பெருமை தங்கிய வயல்களால் சூழ்ந்த மருத வேலிகளிலேயும் விளங்குகின்ற செந்தாமரை வெண்டாமரைக் கமலங்க ளான தலர்ந்து பிரகாசிக்கப் பிரபலமாகிய நயமானது மிகுக்காநின்ற தேவலோகமாகிய சிருஷ்டி கர்த்தாவினது மனோவதியின்கண் வசியா நின்ற மானத நதி தீரத்திலும் பரம பதத்தி னிலகாநின்ற விரசை மா நதியினுங் கயிலைக்கண் ணமராநின்ற சீவ தீர்த்த நதியினு மனோகரமா யலராநின்ற தாமரைக் கோயிலின்கண் வதிந்திராநின்ற வன்னக் கூட்டங்களான தந்த வாதனத்தை விட்டுப் பறந்து வந் திந்தச் சோலையி னடுப் பிரதேசத்தின்கண் ணமர்கின்ற தாமரை மண்டபத்தில் வலம்புரிச் சங்கக் கூட்டங்களுடனே மனோகரமாய் [1]வீத்திருக்கு மென்றவாறு. 14

117. தோன்றறும் வேனில் ராசன்
சரங்களை வில்லிற் றூவத்
தேன்சரந் தாக்க லாற்று
தாகிசோ முகனுந் தேவி
மாண்டகு போகம் வேட்டு
வளர்ந்திகழ் பொதும்பர் நண்ண
வாண்டகை யாருந் தேவி
மார்களு மடைந்தா ரங்ஙன்.

---

[1] வீற்றிருக்கு மென்றவாறு.

எ - து:—இத் தன்மையனவாகிய சோலைகளுந் தடாக பந்திகளும் ரமணீயமாகத் தோன்றின மாத்திரத்திலே வேனில் ராசனுகிய மன்மதனுன புவன சக்ரேச்வரனுனவன் பைங்கிளி நடத்தாநின்ற தென்றற் றேரினை யுடையவன் றனது கரும்பு வில்லை வணக்கி நா ணேறிட்டு வில்லைக் குணத் தொனி செய் தனேகமாகிய சரங்களைக் கரோவேக சரோ வேகமாய்த் தொடுத்தா னந்தத் தேனைச் சொரிகின்ற புட்ப பாண மானது மார்பிலே தாக்கின வளவிலே மெலிந் தாற்ருதவனுகிய ராச சேகரனுகிய சோமுக ராச னுனவன் றனது தேவிமார்களுடனே சரச சல்லாப சுகந் துய்க்க நினைத்து ரதாரூடனு யுத்தியான வனத்தின் கண் மலர் கொய்யும் பொருட்டால் வந்தருளினு னந்தச் சமயத் தந்த நகரின்கண் மருவிய [1]ஸ்ரீபுமான்க ளெல்லா மடைந்து [2]வீத்திருந்தார்க ளென்றவாறு. 15

118. அலர்ந்திடு மகிழைப் பார்த்தங்
காயிழை மாதர் சில்லோர்
பலந்தரு மிதழ்சு வைக்கப்
படர்ந்தன பலவாம் போது
மலர்ந்தமா லிகையர் கூடி
நட்பினைக் கொள்ள மாண்பாய்க்
கலந்தபா லைகளின் போது
களிப்பில கலந்த தன்றே.

எ - து :—இவ் விதமாகிய நந்தன வனத்தின் வந்து நிறைந்த புமான்களுடன் கன்னியர்களு மிரதி மோகினி யிந்திராணி யிலக்குமியாரை யொத் தழகு வாய்ந்தவர்க ணந்தன வனத்தின் மலர்களைக் கொய்யும் பொருட்டாய்ப் பிரவேசித்தார்க ளிதழினை விரித் தலராநின்ற மகிழ விருட்சங்களைப் பார்த் திதழினைச் சுவைக்கு மளவையி னம் மகிழான தலர்ந்து சொரிந்த புட்பங்களாய தவரிடத்திற் பலவாய்க் குவிந்தன மலர்கின்ற மாலையினை யளகத்தி னணிந்த மடந்தையர்கள் பல பேர்க ணட்புக் கொள்ளு மளவின் பெருமை தங்கிய பாலை விருட்சங்களிற் பூத் தலர்ந்து கலக்கா நின்ற புட்பங்களாய தளவிறந் தவரிடத்திற் சொரியக் குவிந்தன வென்றவாறு. 16

---

[1] ஸ்திரீபுமான்கள். [2] வீற்றிருந்தார்கள்.

119. பாடல மதனைப் பல்லோர்
பழிச்சிடச் சொரிந்த பல்பூத்
தேடரு முல்லைப் போது
நகைத்திடச் சொரிந்த தாங்கே
நாடரு நாக மாட
நாண்மலர் சொரிந்த தங்க
ணேடவிழ் குராவ ணைப்ப
வெழின்மலர் சொரிந்த தன்றே.

எ - து :—பாதிரி மரத்தினைப் பல பேர் கன்னியர்கள் கூடி வையு மளவையின் பல மலரினங்க ளலர்ந்து சொரியக் குவிந்தன தேடுதற் கரிய முல்லைக் கொடியினைப் பார்த்து நகைக்கு மளவி னளவிலா தலர்ந் தவரிடத்திற் பிரகாசித்துக் குவிந்தன பார்த்தற் கருமையனவாகிய புன்னை களி னிழலினிருந்து பல மங்கையர்க ளடிக்க வலர்ந்து சொரிந்து குவிந்தன வவரிடத்தி னிதழினை விரிக்காநின்ற குரா விருட்சங்களைப் பல பேர்க ளணைத்த மாத்திரத்தில் பல மல ரவிழ்ந் தழகினை யுடைய மலரினைப் பூத்துச் சொரிந்து குவிந்தன வவரிடத்தி னென்றவாறு. 17

120. பிண்டியை யுதைத்துப் பூத்துப்
பெருந்திரள் மலர்க டூவிக்
கண்டவர் மகிழா சந்திப்
பாடிடப் பலவாம் போது
தண்டலிற் றூவ மாவைப்
பார்த்திட வலர்ந்த தாங்கே
விண்டதிவ் விதமாய்ப் போது
கொய்தனர் விளங்க மாதோ.

எ - து :—பிண்டியாகிய வசோகினைப் பல கன்னியர்க ளுதைத்த மாத்திரத்தி னனேக புட்பங்கள் விண் டலர்ந்து பெரிய திரளாகிய மலர் களைச் சொரிந்து குவிந்தன வவரிடத்தினின் கண்டவர்களெல்லா மகிழ்ச் சியை யடைகின்ற பவழ மல்லிகையாய தம் மங்கைமார்கள் செவ்வா யலர்த் திக் கீதங்களைப் பாட வலர்ந்து பலவாகிய புட்பங்களைத் தடைப்படாமற் சொரிந்து குவிந்தன மா [1]விருக்கமானது பல பேர்கள் பார்த் ததிசயித் தளவிற் பல புட்பங்க ளலர்ந்து சொரிந்து குவிந்தன விவ்விதமா யலர்கின்ற புட்பங்களைப் பறித் தளவிறந்த மகிழ்ச்சியினை யடைந்தார்க ளரசன் றேவியர்கள் முதலாகிய ராச கன்னியர்க ளென்றவாறு.

---

[1] விருட்சம்.

(சுவைக்க நட்புக் கொள்ள சிந்திக்க நகைக்க வாட வணைப்ப வுதைத்திடப் பாடப் பார்க்க வலர்ந்து சொரிந்திடு மென்கின்ற விலக்கண சாம்பிரதாயத்தா லித் தன்மையனவாகிய சிங்கார வளங்களைக் கூறியது.) 18

போது கொய்தல் முற்றும்.

---

121. நந்தன வனத்தை விட்டு
நளினமங் கையினைப் போன்றச்
சுந்தர மடந்தை மார்க
டுலங்கிய தடாகப் பந்தி
விந்தையை நோக்கி நன்னீ
ராட்டிட வியப்பு மெய்தி
வந்தனர் படிந்து மூழ்கி
வன்மையோ டிருந்தா ரன்றே.

எ - து:—இத் தன்மைத்தாய புட்பங்களைக் கொய் தக [1]மகிட்சியடைந்தவர்க ளாந்த நந்தன வனத்தை விட்டு நீங்கிய விலக்குமி தேவியாரினைப் போன்ற சுந்தரமாகிய சுக சொருபத்தினையுடைய மடந்தைமாராகிய ராச கன்னியர்க ளானவர்கள் பிரபலத்தா லுயர்ந்த தடாக பந்தியினது விந்தையினை நோக்கி நலமாகிய தீர்த்தத்தின் சலக்கிரீடை பண்ணத்தக்கதாகிய சந்தோடத்தை யடைந்தவர்களாய் வந்தவர்க ளந் நீரிற் படிந்து மூழ்கினவர்களாய் வளப்பத்தோடுங் கூடினவர்களா யிருந்தார்க ளென்றவாறு. 19

122. பீதக வுடையோ டுற்ற
பெருங்கிளி பிரச நீரிற்
சாதக மாக மூழ்கித்
தயங்குதல் தழைத்த செய்ய
போதலர் கமலம் பூப்பப்
பெருந்திரு விளங்கித் தோன்று
மாதரம் போலத் தோன்றி
யழகினுற் சிறந்தா ளன்றே.

எ - து:—பீதகமாகிய பீதாம்பரத்தை யுடுத்திராநின்ற பெருத்த பஞ்சவர்ணக் கிளியைப் போன்ற தோர் கன்னியானவள் சாதகப் பட்சி போல மூழ்கிப் பிரகாசித்த லெத்தன்மைத் தென்னில் தழைக்காநின்ற வாயிரத்தெட் டிதழினையுடைய செந்தாமரைக் கமலமான தலர வதனது

---

[1] மகிழ்ச்சி.

கடுப்பிரதேசக் கர்ணிகையினது பீடத்தின்கண் பெரிய திருமகளானவள் விளங்கிப் பிரகாசிக்காநின்ற வாதரம் போலத் தோன்றி யழகினுற் சிறந் திருந்தா ளென்றவாறு. 20

123. நுட்பவெண் கலைய ணிந்த
நுடங்கிடை மஞ்ஞை யன்னாள்
திட்பமார் நீரின் மூழ்கிச்
சிறந்திடல் திகழ்வெண் கஞ்ச
முட்படக் கலைநூன் வாணி
யாவரும் வழுத்த மூழ்கிக்
கட்படு தடாகந் தோன்றல்
கடுத்திடல் கலந்த தன்றே.

எ - து :—அதிக (நுண்மையனவாகிய) நுட்பமான வெண்டுகிலாகிய வெள்ளை வத்திரப் பட்டினை யுடுத் தணிந்த துவளுகின்ற விடையினையுடைய மயிலினைப் போன்றவள் சிரேட்டத்தா னிறைந்த நீரிலே மூழ்கிப் பிரகாசிப் பத் தோன்றுத லெத்தன்மைத் தென்று லித முவிழ்ந் தொளிராநின்ற வெண்டாமரைக் கமலத்தின்க ணுள்ளே யிருக்கப்பெற்ற சகல கலையிலும் விளங்குகின்ற வாணியாகிய நாவின்மகளானவள் புட்பங்க டேனைச் சிதறா நின்ற தடாகத்தி னியாவர்களுந் தன்னடி வந்தித்து வழுத்தத் தக்கதாக வெள்ளிய வெண்டாமரையின்கண் டோன்றியதை யொத்துக் கலந்திருந்தா ளென்றவாறு. 21

124. குயில்கிளி மஞ்ஞை யன்னார்
குறைவிற்பொற் குடங்க ளொத்த
பயில்தரு கொங்கை தன்னாற்
பரந்தநீர் பாய்ந்து நீந்தக்
கயிலையி னொளிருங் கீரக்
கடலினைக் கடைந்த ஞான்று
உயிரெலா முவப்ப வந்நீர்
சுலாவுத லொத்த தன்றே.

எ - து :—குயிலினைப் போலவுங் கிளியினைக் கடுப்பவு மஞ்ஞையைப் பொருவவு மாகிய மாதர்கள் பொற்குடத்துக்குச் சமதையாகிய விரண்டு கொங்கையினையுங் கொண்டு பரப்பினையுடைய நீரிடையிலே பாய்ந்து நீந்த வந் நீராயது கயிலையங் கிரிக் கொப்பாகிய பாற்கடலினை மந்தரகிரி

னினாலே நாராயண மூர்த்தியானவர் கடைந்த காலமீ துமிழ்கொள்ளுஞ் சங்
கோடிக்கத் தக்கதாக வந்தப் பாற்கடலினது நீரானது கீழுக் தன்மையினை
யொத்தன வென்றவாறு. 22

125. அலர்ந்தசெவ் வாம்பல் போன்ற
வதரத்தை விழிகள் காட்டப்
பலந்தரு மிதழ்கள் வெண்டா
மரைபயி லிறங்கள் காட்டச்
சலம்பயில் மேகக் கூந்த
றவழ்ந்தளி சாய்ந்தங் கோடக்
குலம்பயில் மடவார் நன்னீர்
குளித்தனர் கரைக்க ணுற்றார்.

எ - து :—இதழினை விரித் தலராநின்ற செவ்வாம்பலினை யொத்த வதரமாகிய விதழினது செவந்த நிறத்தைக் கண்களானது நீர் குடையுந் தன்மையால் காட்டவுஞ் சரச சல்லாப லீலையி லிதழ் சுவைத் ததரபான மாகிய வமுதப் பயன்களை யுதவுகின்ற விதழ்க ளானது வெண்டாமரையி னிடத்திற் பயிலுந் தன்மையனவாகிய நிறத்தினைக் காட்டவுங் கடலினது நீரைப் பருகிய மேகத்தினது நிறத்தினை யளக பந்திக ணிரினைத் துளித்துக் காட்டவுங் கடலினது நீரைப் பருகிய மேகத்தினது நல்ல குலத்திற் பிறந்த ராச கன்னியர்க ணீர்ற குடைந்தாடிக கரையிடத் தணைந்தா ரென்றவாறு. 23

புனல் விளையாடல் முற்றும்.

126. சேடியர் பலர்கள் கூடித்
துகிலினாற் றிவலைமாற
நாடுநன் மேனி யெல்லாந்
துவட்டிப்பின் னளக மாய
பீடுறு நுதலின் மீது
திலதப்பொட் டணிந்து பொட்டி
னேடவிழ் மலர்கள் சாந்தந்
துகிலணி யெழிலாய்ச் சேர்த்தார்.

எ - து :—இவ விதமாயத் திர்த்தமாடிக கரையின்கண ணேறிய ராச கன்னியர்களுக் காதரவாகிய பாங்கிமார்கள முதலாகிய பேர்களெலலாம் பல பேர்கள் கூடி நுண்மையனவாகிய நுட்ப மான சல்லாக்களினாலே துவட்டி யுலர்த்திய பின் பெழி லமைந்த நுதலாகிய நெற்றியினது நடுப் பிரதேசத்திலே திலத மாகிய பொட்டினை யணிந்தபின் பழகிய விதழ்க ளவிழ்ந்த மலர்களினாலுஞ் சாந்தங்களாலும் பட்டுக்களாலு மாபரண வகைகளினாலு மலங்கரித்தார்க ளென்றவாறு. 24

127. அணியிழை மடவார் பல்லோ
ரலங்கரித் ததன்பின் வந்து
மணிகதி ரெறிக்கு முத்தப்
பந்தரு மாணிக் கத்தாற்
றணிவில்பே ரொளிவி ரிக்கும்
பந்தருந் தாழ்வி லாத
குண னுடைப் பூவின் பந்தர்
நிழலி னுங் குறுகி னரால்.

ஏ - து :—ஆபரணங்களாற் குறைவிலாத பாங்கிமார்களானவர்கள் பல பேர்கள் கூடித் தங்கடங்க டலைவிகளை யலங்காரஞ் செய்ததன்பின் பந்த ராச கன்னியர்களானவர்க ளழகிய கிரண சமூகங்களாற் றண்ணொளியினை யிரிக்காநின்ற முத்தப் பந்தரிலே வந்து [1]வீத்திருக்கின்றவர்களும் மாணிக்கத்தாற் செய்வினை நிரம்பிய பந்தரின வந்து [2]வீத்திருக்கின்றவர்களுந் தாழ்விலாத நல்ல குணங்களையுடைய பூவின் பந்தரினது நிழலினுந் திருவினைப் போலவு மிரதியைப் போலவு மிந்திராணியைப் போலவுஞ் செகன் மோகினியைப் போலவு மிருந்தார்கள் ரஞ்சிதமா யென்றவாறு. 25

128. பளிக்குவள் ளத்தின் வார்த்த
நறவினைக் கொழுநர் பாங்க
ரளித்தது நுகர்ந்து மைய
லாடிய வமையந் தன்னிற்
குளிர்த்திடு குழலீர் நும்மை
யிம்மையிற் பிரியக் கூடா
தளித்தியா லெம்மை யென்ன
வாரழல் போல நக்காள்.

ஏ - து :—இத் தன்மையனவாகிய வந்த ரஞ்சித விபவத்தையுடைய நாலுவிதமாகிய பந்தரின்கண் ணாசனத்தின் [3]வீத்திருந்தருளிய ராச கன்னியர்க டங்கள் புமான்களுடனே சேடியர்களாலே பளிங்குக் கிண்ணங்களிலே வார்க்காநின்ற தேனகளை நாயகர் பக்கங்களிலே வைக்க வதை யந்த நாயகிகளுக் கருத்துவித் ததன பின்பு தாமு நுகர்ந்து லாகிரி யடையாநின்ற சமயத்தின் குளிர்ந்த குழலினையுடைய வெம தாவியே யும்மை யிம்மையிலே பிரிந்தா லெமக் கொரு காரியமுங் கை கூடா தாகையா னெம்மைப் பாதுகாப்பீ ரென்ற வளவில் மறுமையின்கண் ணெம்மை நீர் பிரிவீராகி னீரெண்ணிய வெண்ணமெல்லா மொருங் கெய்தப் பெறுவீ ரன்றோ வென் றக்கினியைப் போலக் கொதித்துச் சீறிப் பொங்கி ஓடினார்க ளென்றவாறு. 26

---

[1] வீற்றிருக்கின்றவர்களும். [2] வீற்றிருக்கின்றவர்களும். [3] வீற்றிருந்தருளிய.

129. வயிரபாத் திரத்திற் பெய்த
மாமது நுகர்ந்தோர் மஞ்ஞை
பயில்தரு தலைவ னுண்டு
பருகிடத் தந்த பின்னர்க்
குயின்மொழி யதனுற் கந்த
மென்னென வுனையுங் கொண்டு
புயல்செறி செண்ப கத்தைப்
பறித்ததா தென்றான் பொங்க.

எ - து:—நவரத்தினங்களுக்கெல்லா முதன்மையாகிய வச்சிர பாத்திரத்திலே பாங்கிகளாலே வார்க்கப்பட்ட பெருமை தங்கிய தேனினை யுண்டொரு மயிலினை யொப்பவ டன்னருகே வீற்றிருக்காநின்ற தலைவனானவ னதன்சுவையினை யோர்ந்தபின் றனது கிழத்தியானவ ளுண்ணத்தக்கதாகத் தந்த பின்பு குயிலினைப்போன்ற மொழியினையுடைய தலைவியானவளொரு சங்கையை நினைந்து தனது தலைவனைப் பார்த்து விளுவுகின்றாளுமது திருமேனி முழுவதும் வாசிக்கநின்றமை யாதென்று வினவ விடைகூறுகின்றானுனையுங்கொண்டு மேகமண்டல மளாவிய சண்பக விருக்கத்தினது புட்பத்தினைப் பறித்த ஞான் றந்தப் புட்பஞ் சிதறாநின்ற தாதுப் பொடியினது வாசனை யென்று கூறினனப்போது தலைவியானவளுனையு மென்றமையா லின்னொருத்தியையுங் கொண் டணைத்தனையோ வென்று பொங்கிக் கொதித்தா ளென்றவாறு. 27

130. தண்டுளி நறவ மாந்துந்
தையறன் வள்ளந் தன்னின்
வண்டுபாட் டயருங் கூந்தல்
வதுவையாஞ் சாய றன்னைக்
கண்டுவ கையினைப் பூத்தென்
கனதொழி லினையுங் காட்டி
[1]வொண்டொடி வொளித்தி கொல்லோ
வுரைத்திலா யெம்முன் னென்றாள்.

எ - து:—குளிர்ந்து துளிக்காநின்ற தேன்களை [2]வுண்ணப்பட்ட ஒரு பொற்கொடியானவ ளாகிரியினது குணத்தினாலே தனது கிண்ணத்தின் வண்டுகளான திசைப்பாட்டுக்களைப் பாடாநின்ற கூந்தலினையுடைய பெண் கொடியாகிய தனது [3]சாய்கையினைக் கண் டுவகை யெய்தினவளா யென் கனதையாகிய தொழிலாகி யானசைந்தா னீயசைதலு நான் சந்தோடித்தா

[1] யொண்டொடி யொளித்தி. [2] புண்ணப்பட்ட [3] சாயை.

ளி சங்கோடித்தலு மானுடிஞ் ளி யாடலுமாகிய தொழிலைக் காட்டாநின்ற வெள்ளிய சொர்ண வளையலை யணிந்தவனே நீ இந்த வள்ளத்தின்கண் ணொளித்திருந்தனையோ திருவா யலர்ந் தொரு வார்த்தையினைச் சொல்லத் தக்கதாக விந்த வள்ளத்தினை விட்டு வரக்கடவா யெனது முன்னிலையி னென்று ளென்றவாறு. 28

131. அனிச்சப்பூக் கொம்பு கொய்யா
தணிந்தபி னறவை யுண்ணத்
தனித்தசே டியரெம் மாவி
யாகிய தலைவி கொங்கை
யினத்தினாற் றுவளு கின்ற
விடையிறு மிறுமென் றேங்கி
மனத்துயர் கொண்டோ மென்றார்
மாதுய ருறுவ தானோன்.

எ - து :—ஒரு தலைவ னொருவன் ஒரு தலைவியின தளக பாரத்தின் கண் ணனிச்சப் பூவினைக் காம்பினைக் கிள்ளாதவனு யணிந்தா னதன் பின்பு வள்ளத்தின்கண் ணறவினை யுண்ணத் தனித்த சேடியர்க ளானவர்க ளந்தத் தலைவனைப் பார்த்துக் கூறுகின்றார்க ளெம துயிராகிய தலைவி கொங்கையினது பாரத்தினாலே யிடையானது துவளுகின்ற வனிச்சப் பூவும் தனதுகாம்பினது பாரமுங் கூந்தலின்கண் ணேறுதலா லவ ளிடையான [1]இத்து போகு மென் றெண்ணி மனத்தின்கண் டுயரத்தினைக் கொண்டோ மென்று பாங்கியர் கூறக் கேட்டத் தலைவ னொருவன் [2]காகதாலிய ஞாயம் போலாச்சு தென்று மிகுந்த துயரினைக் கொண்டா னென்றவாறு. 29

132. [3]மல்லிகை மாலை வேய்ந்து
மதுநுகர்ந் திருந்த போது
பல்லியற் பாங்கி மாதர்
பகருவார் மயிலின் பீலி
யெல்லையி னுட்ப மாகி
யிருக்கினு மிகுக்கு மாகின்
செல்லுறு பண்டி யச்சு
சிதைத்தல்போ லிடைதான் சிந்தும்.

[1] இற்றுப்போகும். [2] காகதாலீய நியாயம். [3] இப்பாட்டில், "பீலிபெய் சாகாடும் அச்சிறும்" என்ற குறள் ஆளப்பட்டுள்ளது காண்க.

எ - து :—ஒரு தலைவனானவன் ஒரு தலைவியினது கூந்தலின்கண் மல்லிகையின் மாலையினைச் சூட்டி வள்ளத்தின்கண் ணமர்கின்ற தேனை யுண்டு களித்திருந்த காலையின் பல வியல்பினையுடைய பாங்கிமார்க ளானவர்கள் கூறுகின்றார்கள் தலைவனாகிய புமானே ஒரு வார்த்தை கூறுகின்றோ மதாவது மயிலினது பீலியாகிய விறகான ததிக நுட்ப வடிவா யிருக்கினு மந்த விறகானது வண்டியின்கண் அதிக பாரமாய் மிகுக்குமானால் பூமியின்கண் ணோடாநின்ற வண்டியின· தச்சுச் சிதைந்து பங்கப் படுமாறு போல வெங்கள் தலைவியின திடையானது கொங்கைப் பாரத்தினால் துவளுகின்ற திந்த மல்லிகையினது மாலையைப் புமானே நீ புனைதலா லதிக பாரத்தினாலே யிடையானது சிதைந்து போகு மென்றார்க ளென்றவாறு. 30

133\. சுந்தரக் காவி னின்பந்
துய்த்தபின் குளிர்நீ ராடி
இந்திர னுகரும் வெண்மைச்
சுதைகளி னினிய தேறல்
வந்தவ ரெல்லா முண்டு
மனமகிழ்ந் தரசை வாழ்த்தி
நந்தன வனத்தை விட்டு
நகரத்திற் சார்ந்து ளாரால்.

எ - து :—அனந்த கல்யாண சுந்தர வைபவத்தையுடைய வுத்தியான வனத்தின்கண் ணனேக வின்பங்களை யெல்லாம் [1]ஸ்ரீபூமான்களும் அனுப வித்ததன் பின்பு குளிர்ந்த தடாக நீரின்கண் குடைந் திந்திர மகாராச னைவ னுண்கின்ற வெண்மையாகிய வமுதம் போன்ற வினிய தேனை யுண்டு தம தரசனாகிய சோமுகனை வாழ்த்தி யவ் வந் நந்தன வனத்தை விட் டரசனுடனே நகரியின்கண் யாவர்களுஞ் சார்ந்தார்க ளென்றவாறு. 31

உண்டாட்டு முற்றிற்று.

134\. அன்றுநெடு மால்வனம டைந்திடசு ராதிபன
ரன்பதும பீடி கையிலொன்
சென்றடிப ணிந்துபுகழ் செப்புமுனி வோரமரர்
சென்றுமறை யோத மகிழ்வாய்
நின்றமணி மேடைகளி வந்தமணி ரத்நமதி
ளிகழ்வரையெ னத்தி கழவே
கொண்டடிபி ளந்துமதில் சென்றுமகிழ் கொண்டுபுகழ்
கொண்டவன நின்ற னனரோ.

[1] ஸ்திரீபுமான்களும்.

எ - து :—அப்போ தந்த வராக மூர்த்தியானவ ராரணியத்தில் வந்த மாத்திரத்தி னிந்திரன் சிவன் பதுமமாகிய தாமரைச் சிங்காதனத்தினை யுடைய பிரம்மா முதலாகிய பேர்கள் [1]துடர்ந்து திருவடியிலே தெண்டன் சமர்ப்பித் தவருடைய புகழினைக் கூறிப் பின்றுடர முனிக் கூட்டங்களுந் தேவாதிகளும் வேதாத்தியயனஞ் செய்ய [2]மகிட்சியை யடைந் தங்ஙன நின்ற மணி மேடைகளு நவரத்தின மயமாகிய மதிலுஞ் சக்கரவாள கிரியைப் போலத் தோன்றுதலைக் கண்ட வராக மூர்த்தியானவர் தமது பாதத்தைக் கொண்டு மதிலை யெல்லா முதைத் துருட்டிப் பிளந்தபின் பதிலே புகுந்து பிரவேசித்து மகிழ் சிறந் தவ் வனத்தின் [3]வீத்திருந் தருளினு ரென்றவாறு. 32

135. தென்னவிள நீர்பெரிய கன்னல்வளர் சோகுதிகழ்
தேக்கிலவு மாவ ரசுசூழ்
நன்னயமி குந்தகொடி நாகைகரு நெல்லிமரு
மல்லிஎலு மிச்சை நலதேன்
பொன்னருவி போல்பெருவ ரம்பைவளர் காடதில்பு
குந்தலைக ளோடு பெயரா
மன்னவன்வ னஞ்செறியு மோடைக டடாகநதி
வாரிதியெ னப்பெ ருகவே.

எ - து :—செவ்விள நீரினையுடைய தெங்கும் பெருத்திராநின்ற கரும்பு மசோக விருட்சங்களுந் தேக்கு விருட்சமு மிலவு மா மரங்களு மரச மரங்களு நல்ல நயத்தினை மிகுந் திலகாநின்ற கொடிநாகை விருட்சமுங் கருநெல்லி மருமல்லிக் கொடிகளு மெலுமிச்சை விருட்ச முதலானது மாகாய மளாவிய சோலைகளிலே நின்றும் பெருகாநின்ற தேனுனது பொன்னருவி பிரகாசிக்கின்றது போலப் பெருகிக் கதலி வனத்தில் பிரவேசித் தனேகமாகிய வலைகளுடனே கூடினதா யந்த வனங்க ளெல்லா நிரப்பி யந்த ராசனுடைய சிங்கார வனத் திடை யிடைக ளிராநின்ற வோடைக டடாகங்க ணதி தீரங்களை யெல்லா நிரப்பித் திருப்பாற் கடலைப் போல வளைந்தது வென்றவாறு. 33

136. சோலைகடி கழ்ந்தகமு குப்பனைக டுக்கைமணி
செண்பகம லர்ந்த டலவின்
சாலைகள்மி குந்தவகில் சந்தனம ருத்துமதி
சாருமிகு சோலை களெலாங்
கோலமது கண்டுகளி கொண்டுமிகு தென்றல்கமழ்
கொண்டலென சீறி யவர்போல்
கால்கொடுது வைத்துகதிர் போரடிய டித்து கமழ்
தாருவைம டித்த னனரோ.

---
[1] தொடர்ந்து. [2] மகிழ்ச்சியை. [3] வீற்றிருந்தருளினார்.

எ - து :—அந்தச் சோலைகளிலே பிரகாசிக்காநின்ற திவ்விய பரிமளங்களை யுடைய கமுகு, கூந்தற்பனை, கொன்றை, அழகிய சண்பக வனம், பலா விருட்சச்சாலைகள், மிகுந்த சுகந்தத்தினையுடைய வகில்கள், சந்தன முதலாகிய நந்தன வனத்தில் தென்றலானது சஞ்சரித் துலாவுஞ் சந்திரன் றவழாநின்ற வந்தச் சோலையினுடைய வளத்தினை யெல்லாங் கண்ணுற்ற வராக மூர்த்தியானவர் களிப்பை யடைந்து மேகத்தைப்போலக் [1]கெற்சித்து மலை போன்ற திவ்விய திருவடிகளைக் கொண் டந்த விருட்சங்களை யெல்லா முதைத்துச் சாய்த் துழவர்கள் கதிரினையுடைய போரினை யடித்தது போல வனத்தினை யெல்லா மழித்தா ரென்றவாறு. 34

137. மதித்திடுவ ராகமது கால்கொடுது வைத்துவளர்
சோலைகள ழித்த திறலால்
வதித்திடுமு யிர்த்தொகைகள் வானமதி னெய்தவரு
வோதைபெரு லூழி யெனவே
கொதித்திடுக திர்ச்சுழலு மண்டலமெ லாமறைய
கோகிலம தன்ன முதலாங்
கதித்திடுமி குத்தபற வைத்திரள்க ளோலமிட
கண்டவன பாலர் கனெலாம்.

எ – து :—யாவராலுந் துதித்துக் கூறுதற் கரிதாகிய வராக மூர்த்தி யானவ ரெண்ணுதற் கசக்கியமாகிய விருட்சங்களை யெல்லா முதைத்து முறித்துப் பூமியிலே தள்ளுகின்ற வலுமையினாலே யந்த வனங்களில் வாசஞ் செய்கின்ற வுயிர்த் தொகையாகிய சகல பட்சிசாலங்களும் பயந் தங்iனம்விட் டாகாயத்தி லடைந் திதென்ன வூழி கால மென் றிரங்கித் திக்கு திகாந்தங்க ளெல்லாஞ் சூழ்ந்து சூரிய பிரபை தெரியாம லிருள் மூடிக்கொள்ளப் பின்னையுங் குயில் கூட்டங்க ளன்னங்கள் முதலாகிய பறவைக ளெல்லா மிகுந்த கோட்டத்தினாலே தொனிக்காநின்ற காரணங்களைக் கண்டார்கள் வனபாலர்க ளென்றவாறு. 35

138. நின்றபுகழ் கோலமதைக் கண்டவன காவலர்க
ணீள்சமனெ னச்சி னவிவாள்
கொண்டெறிய சண்டமென வெண்டிசைய கன்றபடை
கோலமுத றிச்சி தறவே
சென்றரச னேடுமது சேனைமது ரம்பெருகு
திகழ்வனமெ லாம்வ ரையின்வாழ்
பன்றிமதில் விண்டிடவி டித்துடன ழித்ததென
பண்பொடுந கைத்து மொழிவான்.

எ - து :—அப்படி நரசிங்கம் போன்று நின்ற புகழினையுடைய வராக மூர்த்தியைக் கண்ட வனத்தினைக் காக்கின்ற காவலாளர்களானவர்க ணீண்ட வெமனைப் போலக் கோபித்து வாளினைப் பிரயோகஞ் செய்தார்கள்

[1] கர்ச்சித்து.

வீராதி வீரர்கள் காண்டீபங்களிற் றொடுக்காநின்ற கணை மாரிகளானது சண்ட மாருதம் போல முழங்கிக்கொண்டு வந்து தாக்க வந்தக் கணைகளை வராக மூர்த்தியானவர் மயிரினைச் சிலிர்த்த மாத்திரத்தி னந்தக் கணை மாரிக ளெல்லாந் தூளாய்ச் சிதறப்பட்டுப் பொடிப் பொடியாய் நொறுங்கி வீழ்ந்தத்தைக் கண்ட தூத ரானவர்கள் வாயுவேக மனவேகமாய்ச் சென் றரசனைக் கண்டு தெண்டன் சமர்ப்பித்துச் சுவாமி யுமது வனங் காப்பாளர்க ளானவர்கள் சிதறிய கணைகளை யுமிபோ லுதிர்த்துத் தேன்களையுடைய கனி வர்க்கங்களும் புட்ப வர்க்கங்களும் பொழியாநின்ற வனங்களை யெல்லா மலைகளிலே வாசஞ் செய்கின்ற வொரு பன்றியானது காவினங்களைச் சூழ்ந்திராநின்ற மதிலினை யிடித்துப் பொடிப் பொடியாக்கிக் காவலரை யெல்லா நீருக்கிச் சிங்கம் போலக் [1]கெற்சித்துச் சாரிகை திரிந்து வெகு வாகிய துன்பஞ் செய்கின்றதென்கின்ற வார்த்தையைச் சோமுக னனவன் கேட்ட பொழுதே கோபத்தா னகைத்துக் கூறுகின்றா னென்றவாறு. 36

139. தேவரறி யாதுமுனி வோர்கணினை யாதுகமழ்
சோலைமதில் தென்றி சைமுதற்
காவலர்ம றிந்துமக மேருவென நின்றிடக
ணத்திடைய ழித்த தெனலால்
மூவர்முத லோர்கடிசை யோர்கள்கண நாதரொடு
முந்தியவெல் வீர ரவரில்
யாவரெதிர் சென்றிடினு மின்றுவதை செய்தவரை
மீள்திரென யாரை யும்விட.

இ - ள் :— அப்போது ராச சூடாமணியாகிய சோமுக னனவன் யூகத் தலைவர், படைத் தலைவர், பட்ட வர்த்தனர், மகுட வர்த்தனர், அதிரதர், மகாரத ரர்த்த ரதர் முதலாகிய பேர்களைப் பார்த்துக் கூறுகின்றா னம துத்தியான வனத்தைத் தேவ கூட்டங்க ளிது பரியந்தம் புகுந்து சஞ்சரித் தறியார்கள் முனிவர் கூட்டங்கணினைந் தறியார்க ளப்படியாகிய திவ்விய மணங்களை வீசாநின்ற சோலையினையு மதை வளைந்த மதிட் காவலினையு மொரு பன்றியானது பிரவேசித்துச் சண்டமாருதம் போலக் கலக்கிக் காவலர்களாகிய வீராதி வீரர்க ளனேகம் பேரைப் பிணக் குன்றம் பட மகா மேருவைப் போலக் குவித் தொரு கணத்தி னழித்த தென்று தூதர்கள் கூறுந் தன்மையினாலே மூவராகிய முதல்வர்களான பிரம்மா விஷ்ணு ருத்திர ராலுந் திக்குக் காவலர்களுங் கண நாதர்களு முதன்மையாகிய வீராதி வீரர்களி னெவர்கள் வந் தெதிர்த்தாலு மவர்களை யெல்லா மிப்பொழுதே செயங்கொண்டு மீளக் கடவீ ரென்று ரத கச துரக பதாதிகளுக்கு [2]வாக்யாபனஞ் செய்தான் ராச கண்டீரவனாகிய சோமுக னென்றவாறு. 37

எக்கிய வராகத் திருவவதார வத்தியாயம் முற்றிற்று.

---

[1] கர்ச்சித்து. [2] ஆக்ஞாபனம்.

140. தேர்கரிப தாதியொடு சென்றதைப்பி டிக்கவென
சேனைகள்மி குந்த கடல்போற்
பார்தனின டுங்கவொடு வாள்கதைக ளம்புகள்ப
டைத்தலைவர் வீரர் களெலாங்
காருலக மென்னகவி மேகமொடு மின்னிடிக
விந்ததென கோல வரைமேற்
சாரசர தாரைதழல் பொங்குவது நுங்கியத
னிப்பெருமை கண்டு புகழ்வார்.

எ - து :—இந்தப் பிரகாரம் ராசசேகரனானவன் நான்கு வகைச் சேனைகளையு மனுப்புவித் தந்தப் பன்றியைக் கொல்ல வாக்கியாபனம் பண்ணின மாத்திரத்தி னந்தச் சேனைக் கடலாகிய ரத கச துரக பதாதிக ளானவர்க ளிடிகளைப்போலக் கோஷ்டித்துப் பிரவேசித்த மாத்திரத்தின் பூமிக ளெல்லா நடுநடுங்கத் தக்கதா யவர்க ளாயுதங்கள் கணைக் கூட்டங்கண் முதலானவைகளைத் தாங்கிய படைத்தலைவர் யூகத் தலைவர் முதலாகிய வீராதி வீரர்கள் பிரவேசித்த தெப்படி யிருந்த தென்று லிருளான துலகத்திலே பரந்து வந்து மூடிக் கவித்தது போலவு மாகாயத்தைச் சூழ்ந்த சத்த மேகங்க ளானது மின்னலையு மிடிகளையு மொரு காலத்திலே மின்னி யிடித்தது போலவும் பேரிகை குடமுழா சல்லரி மல்லரி முதலாகியது முழங்க வந்து வளைத்துக்கொண் டந்த வராக மூர்த்தியைக் கண் டளவிறந்த சீற்றங் கொண்டவர்களாய் வில்லை வளைத்து நாணேற்றிட்டுக் குணத்தொனி பண்ணி யொரு தொடைக் காயிர கோடி யம்புகளைப் புங்கானு புங்கமாகிய மேக மானது பொழி கின்ற மழையைப் போலத் தொடுத்தார்க ளப்போது பிரளய கால ருத்திரனைப் போலச் சீறி யந்த வராக மூர்த்தியானவர் விழுங்கிக் கர்ச்சித்து வீறிட்டவரது வொப்பற்ற புகழினைத் தேவ கூட்ட முனிவ ரீட்டங்கள் முதலாகிய பேர்க ளெல்லாம் புகழ்ந் தாச்சரிய மடைந் தற்புதம் பெருகினார்க ளென்றவாறு. 1

141. வந்திடுவ ராகம்வட வைக்கனலை யுண்டுமகிழ்
கொண்டுவெறி கின்ற விதனைத்
தந்திரமொ டற்றுசர கூடமது கட்டியழல்
தங்கியிடை பொங்கு புகழ்சேர்
எந்தைபடை யோடுமிகு தந்தைபடை யாவும்விட
வெண்டிசைக லங்கி யெழில்சேர்
மந்திரரைக் கண்டுமிகு சுந்தரவ ராகமது
சீறிடம திக்த னர்களால்.

எ - து:—அப்படியாய் வீரத் தன்மையினையுடைய வராகமானது மீட்டு மவர்கள் பொழிகின்ற வடவா முகாக்கினியினது கணைகளை யெல்லாம் விழுங்கி மகிழ்ச்சியாய் [1]விற்நித்திருக்காநின்ற செயலைக் கண்ட தளதந்திரங்களானவர்கள் வளைந்துகொண்டு சரக் கூடங்களைக் கட்டி யழலையும் விடத்தினையும் பிரசண்ட மாருதத்தையு முண்டாக்காநின்ற பிதாமகன் படையாகிய பிரம்மாஸ்திர முதலாகிய பிரபலமான தேவாதிகளுடைய வஸ்திரங்களை யெல்லாம் படைத்தலைவர்கள் விட்டார்க ளதனு லெட்டுத் திக்குங் கலங்கிட வயிராவத முதலாகிய வானைகள் வீறிடக் கடல்களெல்லாம் [2]வத்திப்போக வடவா வனலமானது குளிர்ந்துபோகத் தக்கதாகப் பிரவேசித்து வரும்போ தப்படிப் பிரயோகம் பண்ணிய மந்திரியர்கள் முதலாகிய பேர்களைக் கண்டு சுந்தரத்தோடுங் கூடிய வந்த வெக்கிய வராக மூர்த்தி யானவ ரவர்களைச் சீறிடத் தக்கதாயூகித்து மதித்தருளினு ரென்றவாறு. 2

142\. கண்டனர்க னன்றனர்வி ழுங்கினர்க னற்கணைவி
டுத்திடவி ழுங்க கனியா
வண்டமுக டெண்டிசைய கன்றவரை சூழ்ந்திடவ
ழுந்தியவ ராக மதனைத்
துண்டமிடு வோமெனநெ ருங்கினர்மி குந்தபுகழ்
சேனைக ளெலாங்க டலதாய்
நின்றனர்வ ராகமது தாள்கொடுது வைத்துவரை
நீள்கணையெ லாஞ்சி தறவே.

எ - து:—அந்த மந்திரியர் முதலாகிய பேர்கள் பிரயோகித்த பிரம்மாஸ்திர முதலான தெல்லாங் கோர ரூபமாய் வருகிறதைக் கண்டெக்கிய வராக மூர்த்தி யானவர் கோபித் தந்தக் கணைகளை யெல்லாம் விழுங்கிக் கர்ச்சித்தா ரதைக் கண்ட வீராதி வீரர்க ளானவர்கள் மறுபடியு மக்கினிக் கணைகளை விட்ட திறத்தினுலே [3]வெத்தியாகு மென்றெண்ணினுர்க ளதையு மவர் விழுங்கக் கண்டு யூக புத்தியினு லாலோசித்து மீட்டும் பர்வதாஸ்திரத்தை விட்டவரைச் சூழ மலையினுலே யணை கட்டினுர்க ளதன் பின்பு நடுப் பிரதேசத்திலகப்பட்ட வராகமானது கலங்கி [4]மயங்கித் தென்று கருதினவர்களாயதைக் கண்ட துண்டப் படுத்துவோ மென்று நெருங்கி மிகுந்த புகழினையுடைய சேனைக ளெல்லாங் கடல்போல வளைந்து நின்றுர்க ளப்போதந்த வராகமானது பாதத்தைக் கொண்டு பர்வத காவலை யிடித்துத் தூளியாக்கி நீண்ட பாணங்களை யெல்லாஞ் சிதறச் செய்ததென்றவாறு. 3

---

[1] விர்த்தித்திருக்காநின்ற. [2] வற்றிப்போக. [3] வெற்றி. [4] மயங்கிற்றென்று.

143. கொண்டலெனச் சீறிமழு தண்டமொடு வாள்கதைசெ
றிந்தவயில் சூல முடனே
யண்டமுந டுங்கவழல் கொண்டுகடல் வெம்பியிட
வட்டகெசம் வீற வரிசூழ்
கின்றரத யானைபரி சேனைகளை வாரிபுவி
சிந்திடவி றைத்து ரணபோர்
கன்றிடகு வித்துமகிழ் கொண்டடித்து வைத்துகடல்
சென்றிடவு தித்த வுதிரம்.

எ - து :—இப்படி யெக்கிய வராக மூர்த்தியானவர் மலையினாலே கட்டிய வணைகளை யெல்லா மிடித் துரோமத்தைச் சிலிர்த் துதறின மாத்திரத்திலே சேனைக ளெல்லா மேகத்தைப் போலக் கர்ச்சித்துச் சீறி, கண்ட கோடாலி தண்டு வாள்கள் வச்சிராயுதம் வேலாயுதந் திரிசூலங்கள்விட் டார்ப்பரித்தார்க ளதனாலே யண்ட கடாகங்க ளெல்லா நடுங்கி யக்கினியைச் சுவாலித்ததனாலே கடல்க ளெல்லாம் வெம்பிக் கறகறவென்று கலங்கிச் சுழன்றிட வந்து தாக்கிப் பொடியாச்சு தந்த வராகத்தைச் சூழ்ந்த வனிகங்களாகியதை வாரி நான்கு திக்கினும் வீசி யெறிந்து ரணபோர்களிலே யாவரும் [1]குண்ணிப் போகத் தக்கதாகக் குவித்துப் பல பேர்களை யுதைத் துருட்டும்போ திறந்து குவிந்த பிண மலைகளிற் றோன்றிய வுதிர வெள்ளமானது கடலினை நிறைத்த தென்றவாறு. 4

144. வீரர்கள்ம டிந்தனர்க டேர்கரிப தாதிகள்மி
குந்தவுதி ரத்தின் விரிவால்
பார்தனைபி ளந்துநதி யோடரண முண்டுபல
கூளிகண டம்ப யிலவே
சீர்புகழ்க முக்களதி னேறிவினை யாடியசி
றந்ததிறல் கூறு மளவின்
வார்சிலைத ரித்தமுடி மன்னவன முன்றுமதி
விண்டுமொழி கின்ற னனரோ.

எ - து :—இந்தப் பிரகார மெக்கிய வராக மூர்த்தியினாலே வீராதி வீரர்க ளெல்லா மடிந்துவிட்டார்கள் தேர் பந்தி யானைக் கூட்டம் பதாதி யீட்டங்களுடைய மிகுதியாகிய வெள்ளப் பிரவாகத்தினாலே பூமிகள் பிளக்கப்பட்டுந் தியினைப்போல் பிரவேசித் தந்த இரத்தங்களையு நிணங்களையு முண்டு களித்துப் பல பசாசு கூட்டங்களானது நடனஞ் செய்ய வந்த வராக மூர்த்தியினது கீர்த்தியைக் கூறிப் புகழ்ந்து கழுகு

[1] குன்றிப்போகத் தக்கதாக.

கூட்டங்களான தந்தப் பிண மலைகளி னேறி விளையாடித் திரிந் திந்தச் சேதிகளை யுணர்ந்த வாயுவேக மனவேகமாகிய தூதரானவ ரந்த வராகத்தினது திறலை யெல்லாங் கண்டபடி ராச சூடாமணியாகிய சோமுகனைக் கண்டு தெண்டன் சமர்ப்பித்துக் கூறக் கேட்ட மாத்திரத்திலே யதிக கோபம் பிரவேசித்தவனு யாவரையும் வெறுத் தொரு மொழி கூறுகின்று னென்றவாறு. 5

145. காருலக மேமுதல்க டந்தவுல கத்தரசர்
கண்டமிசை நின்ற வசுரர்
மேருவரை யாமெனவி ளங்கியர தங்களொடு
வீரர்முத லோரெ வர்களுஞ்
சாருமென சாரணர ழைத்தவுல கத்திடைத
னித்தனியு ரைத்த மொழியால்
பாருயிர்ந டுங்ககட லேழுமுடை கின்றனப
டர்ந்தனமி குந்த வனிகம்.

எ - து:—இருள் பரந்த வுலக முதலாகிய லோகத்தை யெல்லாங் கடந் தப்பால் மேனின் றுயர்ந்த வுலகத்தைக் காக்காநின்ற வசுரக் கூட்டங்களையு மகா மேருவினை யொத்தனவாகிய ரத பந்திகளையும் வீராதி வீரர்களையும் வரக் கடவ தென்று தூதரைப் பார்த்துக் கூறினுன் ராச சூடாமணி யானவ னேவற் பணிவிடையின்படி சுக சாரணர்க ளந்தந்த லோகங்களிற் சார்ந்து சகலருக்கு மறிக்கையிட வந்த வாக்யாபனத்தா லுலக மெல்லா நடுங்கக் கடல்க ளேழு மணை புரண்டு மடை திறந்தது போல வந்தார்கள் மிகுதியாகிய நான்கு வகைச் சேனைகளுந் திரண் டென்றவாறு. 6

146. இரதமொடு யானைபரி கால்பலமு மெல்லாந்
துரிதமொ டெழுந்துசர நாளிகளி றுக்கி
விரதமதில் கொண்டபடை யாவையுமுன் வீக்கித்
தரையதனின் மூடவருந் தானைகடல் கண்டார்.

எ - து:—அப்படி யாக்கியாபித்த சோமுகனுடைய உத்தரவு பிறந்த மாத்திரத்தின் ரத கச துரக பதாதிகளாகிய நான்கு வகைச் சேனைகளு மந்திரியர் பிரதானியர் யூகத் தலைவ ரணித்தலைவர் பட்டவர்த்தனர் மகுட வர்த்தனர் மகாரத ரர்த்தரதர் முதலாகிய வீராதி வீரர்க ளெல்லா மஸ்திர சாலைகளிற் பிரவேசித்து வீர லக்ஷ்மியைத் தோத்தரித்து மந்திரத்தை யுச்சரித் தர்ச்சனை யாராதனை முதலாகிய பூசைக ணிரப்பி யாயுதங்களுக்குத் தெண்டன் சமர்ப்பித் தெடுத்தார்கள் வில், வாள், வேல், சூலம், கெதை,

கண்டகோடாலி, இருப்புலக்கை, பிண்டிபாலம், முசுண்டி, கழுமுள் ளாயுத முதலாகியதை யெடுத்தார்க ளம்பறுத் தூணிகளை முதுகி னிறுக்கிக் கட்டி ரதங்களி னுரோகணிதமாய் வெளிப்பட்டார்க ளுலகங்க ளெல்லாம் மூடிக் கொண்டு வரும்படியாகிய சேனையாகிய நான்கு வகைச் சேனைகளையுங் கண்டான் ராச சேகர கண்டீரவனுகிய சோமுக னென்றவாறு. 7

147. தன்னுடைய தேர்தருக விக்கணமெ னத்தன்
பொன்னவிரு மாளிகையுள் புக்குபடை சாலை
மின்னுகவ சம்மொடுவி ளங்கபணி வீக்கி
வுன்னிதமு டிச்சிரசி னுெத்திடவ ணிந்தான்.

எ – து:—இந்தப் பிரகாரம் வருகின்ற சைனியங்களைக் கண்ட ராச சூடாமணியாகிய சோமுகனனவன் றனது தூதர்களை வரவழைத்து ரத சாரதியைத் தனது ரதத்தை நடாத்தி வரும்படியா யாக்ஞாபித்துத் தன தாயுத சாலையிற் பிரவேசித்துக் கிரீட மகர குண்டல மஸ்த கடகம் ரத்ன கபாயிகள் முத்துமாலை மாணிக்கமாலை முதலாகிய சர்வாபரண பூஷிதனுய்த் திருமுடியின்மீது தும்பைமாலையு மணிந்தா னென்றவாறு. 8

148. மந்தரம திற்புனையும் வாசுகியை யொப்பான்
தந்திடுபொற் கச்சையிடை சாத்தியுடை வாளு
முந்தவவிர் கேடையமு முன்னவிரல் தூணி
யந்தமுற வீக்கிபொன ருஞ்சிலையெ டுத்தான்.

எ - து:—அப்படியாகச் சர்வாபரண பூஷித வலங்கார ரூபலாவண்ணிய மாகிய சோமுக ராச கண்டீரவனுனவன் றிருப்பாற் கடலிலே மந்தர கிரியை மத்தா யமைத்து வாசுகியாகிய சர்ப்பத்தைக் கயிறுய்ப் பூண்டு சுற்றின தன்மையைப்போல் மிகுந்த பிரகாசத்தினையுடைய சொர்ண கச்சையை யிடுப்பிலே கட்டினவனு யந்தப் பக்கத்திலே யுடைவாளைத் தொங்கக் கட்டி யீட்டி யெறியீட்டி சூரியவாங்கு முதலாகிய தெல்லாம் விதம் விதமா யணிந்த வந்த வஸ்தங்களில் கேடயம் விளங்கப் பத்து விரல்களுக்கும் விரல் தூணிக ளணிந்து முதுகிலே யம்பறுத் தூணியினைக் கட்டிச் சொர்ண மயமாகிய மகாமேருவுக்குச் சமதையாகிய தனுசைக் கையிலே தாங்கினு னென்றவாறு. 9

149. விண்ணவரு மண்ணவரு மஞ்சவிறல் வீரன்
கண்ணிமையொ டுங்குமுன்ம னைக்கடையின் வந்து
மண்ணதிர வந்தவணி தேரினினி வர்ந்து
திண்ணமுறு நாப்பணிற்றி கழ்ந்திரவி யானுன்.

எ - து :—அப்படி மகா மேருவுக்குச் சமதையாகிய ராச ராசப் பிரபுடீக ராச கண்டீரவனுகிய சோமுக னுனவன் ரத கச துரக பதாதிகளாகிய நான்கு வகைச் சேனைகளையும் தன்னைச் சூழ்ந்து வாயுத பாணிகளாய் நடக்கின்ற பராக்கிரமத்தைக் கண்ட தேவர்க ளெல்லா நடுங்கி யோட்ட மெடுக்கப் பூலோகத்தி னிருக்கின்ற சராசரங்க ளெல்லாந் திடுக்கிட்டு நடுநடுங்கத் தக்கதாய வீர கண்டாமணியினுடைய நாதங்க ளானது பேரிடி முழக்கத்தைப் போலத் தொனிக்காநின்ற வுதயகிரிக்குச் சமதையாகிய தேரின் பேரி லாயிர கிரண சமூகங்களையுடைய சூரியனைப் போலப் பிரகாசித்தான் சோமுக னென்றவாறு. 10

150. யோசனையி ரண்டகல நீளமொரு வெட்டாந்
தூசுகொடி சீரைமிகு சுற்றிளிலு மொய்த்தார்
காசமுறு பொற்குடைக வித்தமதி யென்ன
வாசிபதி னுயிரம்வ ரிக்குமணி தேரே.

எ - து :—அப்படி யாரோகணிதமாகிய ராச சூடாமணி பூமி சூடாமணி யாகிய சோமுக னுனவனது ரதமான தெப்படிப் பிரகாசிக்கு தென்று லிரண்டு யோசனை யகல முள்ளதான ரதமான தெட்டு யோசனை யுன்னதமாய் விளங்குகின்ற வழகு தங்கினது தூச படங்களானது நக்ஷத்திர மண்டலங்களிலே பிரகாசிக்க வாயிரத் தெட்டு மாற்றுச் சொர்ணத்தாற் காம்பினையுடைய தவள சத்திரக் குடையானது சந்திர மண்டலத்திலே பிரகாசிக்கத் தோர்ச்சீலை கொடிச்சீலை வாயுமண்டலத்திலே பிரகாசிக்கப் பதினுயிர மச்வம் பூண்ட மணிமயமான தந்த ரத மென்றவாறு. 11

151. தேரினுறு திக்குகளில் சிம்மமொடு பூதம்
வேரிநெடு பொன்வரைவி சிக்குமது போலாம்
பாரின்மிசை சூதனைப ணித்திரத மூர்ந்து
போரின்மிசை வீரரொடு போயினன்வ னத்தில்

எ - து :—அப்படி ஒரு திக்கிலே பதினுயிரம் புரவி பூட்டி நடக்கின்ற ரதத்திலே பின்னையு மொரு திக்கிலே பதினுயிரம் பூதங்களைப் பூட்டியு மற்றுமொரு திக்கிலே பதினுயிரம் சிங்கங்களைப் பூட்டியும் பின்னையுமொரு திக்கிலே மத யானைகளைப் பூட்டியும் நடத்துகின்ற (நான்கு வகையாகிய வாசலிலே சாரதிக ளிருந்து நடத்துகின்ற) மகாமேருவை யொத் தந்த ரதமானது வாயு வேக மனவேகமாய் நடந்தது உத்தசனுக மாகிய நான்கு வகைப்பட்ட சேனைகளான தந்த ரதத்தைச் சூழ்ந்து வர வென்றவாறு. 12

152. ஆழியது பொன்னுருளு மச்சதுவும் வெள்ளிப்
பாழிபடு பாரதுப ருத்தவயி ரங்கால்
மாழைதரு செம்பவள மாகுமிர தம்மேல்
சூழ்பணம ணிக்குலமுஞ் சுற்றிலுமி ழைத்த.

எ - து:—பின்னையு மந்த ரதமான தெப்படிப் பிரகாசிக்கு தென்று லந்த வண்டில்க ளானது சொர்ணத்தினலே விளங்குகின்றது பின்னையு மத னச்சுகளானது பிரகாசத்தினை யுடைய வெள்ளியினலே விளங்கு கின்றது பின்னும் அச்சுமச்சுக் குத்துக்கால் கொடுங்கை தேவாசன மாகிய சிங்காசன முதலாகிய நவரத்தின மயமாகிய வந்த ரதத்திற் கட்டிய கண்ட நாதங்களா லட்ட திக்குஞ் செவிடுபட்டுப் போகத்தக்கதாய் நடத்தினன் ராச சேகரனுகிய சோமுக னென்றவாறு. 13

153. மேருவினைப் பலவரைகள் மொய்த்ததென வந்து
சூரனெடு கோடிதுணை சூழ்ந்துவர முன்னங்
காரொலியெ னப்பறைக றங்குபலி யங்கள்
வேரினெடு பேரிடிவி ழுந்ததெனப் போனன்.

எ - து:—அப்படிச் சொர்ணப் பிரகாசமாகிய மகா மேருவானது நடக்கின்றதுபோலச் சோமுகராசன் ரதநடக்கச் சரியொத்த மந்திரிபிர தானிகளுடைய ரதங்கள் சூழ்ந்து வருகிற தெத்தன்மைத் தென்றால் மகாமேருகிரியை யட்டகுலாசல பருவதமானது சூழ்ந்து வந்தா லெப்படியோ வப்படிப் போ லிரு புறத்திலுஞ் சூழ்ந்து நடக்கச் சத்த சாகரங்களுந் தத்த மெல்லை கடந்து மடைதிறந் தொழுகின லெத்தன்மைத்தோ வத்தன்மையன வாய்த் தோற்கருவி துளைக்கருவி கஞ்சக்கருவி நரம்புக்கருவி மிடற்றுக்கருவி முதலாகிய பஞ்சநாத தொனிகளு மேக சத்தங்களைப் போல முழங்கிக் கோடைக் காலத் திடிகளைப்போலச் சத்திக்க நடந்தா னென்றவாறு. 14

154. திசைகள்கம் பித்த வெட்டு யானையுஞ்
செவிடு பட்ட
விசையுறு கதிரின் பச்சைப் புரவியும்
வேக மாற
விசையுறு கடலுந் தூளி படலத்தி
னியங்கிச் சோர
வசைவுறு வேந்துஞ் சேனைக் கடலும்போய்
வனத்தைக் கண்டார்.

எ - து:—அப்படியாய் மிகுந்த வேகத்துடனே நடக்கின்ற ரதத்தி னுடைய சிங்காரத் தொனிகளு மியானையினுடைய முழக்கமும் புரவிக ளுடைய கனைப்புகளும் பதாதிகளுடைய வட்டகாசங்களு மட்டதிக்குகளுங் கம்பித்துப் பட்டுப்போகத் தக்கதா யட்டமா நாகங்களுஞ் செவிடு பட்டுப் போகவு மாதித்த னிரதத்திற் கட்டிய பச்சைப் புரவிகளானது வேக மாறி நடவாமற் றயங்கி நிற்க வேழுகடலுங் கலங்கிச் சேருய்க் குழம்பி விட மிகுந்த கீர்த்தி பிரதாபசாலியாகிய ராசப்பிரபுடீகனுகிய சோமுகராச னைவ னல்வகைச் சேனைகள் சூழத்தக்கதா யந்தச் சிங்காரவனத்திலே போய்ப் பிரவேசித்தா னென்றவாறு. 15

சேனதிபதிகள் யுத்த வத்தியாயம் முற்றிற்று.

## ஒன்பதாவது: சோமுகன் சமர்புரிந்த வத்தியாயம்

155\. வந்தபுகழ் சோமுகன்வ னத்தினில்பு குந்திடவ
யிற்றினழல் பொங்கி மதிசேர்
சுந்தரமி குந்தநவ ரத்னமணி மேடைகடு
லங்கியபொற் சோலை களெலாம்
முந்துமுடி வீரரைம டித்தவுதி ரத்திரள்மி
குந்தகட லோவ றிகிலோ
மிந்திரன்வ ராகமென தந்திரமொ டித்திறம
ழித்துவெதிர் நின்ற வரைபோல்.

எ - து :—அப்படித் தனது நந்தன வனமான தொரு பன்றியினுலே யழிந்த தென்கின்ற சேதியைக் கேட்டுக் கோபாக்கிரக சித்தனுய் வந்து பார்த்த சோமுக னென்கிற ராசகண்டீரவ னுனவன் பொலிவு நீங்கி யிருப்பதனைக் கண்டு வயிற்றி னக்கினியானது பொங்கித் ததும்பி வெம்பின வனுய்ச் சந்திரன் றவழ்கின்ற வதிக சிங்கார சவுந்தரிய நிறைந்திராநின்ற நவரத்தின மணிகளாலு மபரஞ்சிப் பொன்னினுலு மிழைத்திராநின்ற வழகிய மேடைகளுக்கு மணங்களைக் கமழாநின்ற சோலைகளுக்குங் காவலா யிராநின்ற முடிகளையுடைய வீரர்களை யெக்கிய வராகமானது மடிக்காநின்ற வுதிரப் பிரவாகம் பரந் தலைகளோடுங் கூடினதாய்ப் பிரவேசித்தது மிகுந்த பெரும்புறக் கடலோ விது மலைபோல வந்து மடித்த திந்திர மகாராசனுனவன் தேவமாய்கை மோகன தந்திரத்தினு லிந்த வுருவ மெடுத்து வந்த வரலாருே வென் றதிசயித்தான் ராசசேகர னென்றவாறு. 1

156\. அணித்தலைவர் தங்களைய ழைத்தனனெ றுத்துநவ
கண்டமும திக்கு நமது
கணிப்பரிய நற்புகழ ழிந்திடவ ராகமது
கான்றசின மூடு ருவியே
தணிப்பரிய காவலர்கள் சாயவமர் செய்துதனி
யாம்பிரம மாகி யுலவி
யணித்தினி றிரிந்திடும தைத்துணிவு பட்டிடவ
டற்படையொ டேகு மெனவே.

**எ-து:**—மறுபடியு மந்த வராகத்தைக் குறித்து ராசசேகரனாகிய சோமுகனானவன் அணித்தலைவர் யூகத்தலைவர் முதலாகிய பேர்களை யழைத்துக் கூறுகின்றான் உங்களை நம்பிக்கையா யிருந்தது மெமது பொருளென் றிருந்ததும் போதுமென், றெறுத்தவனாய் நவ கண்டங்களெல்லா மதிக்கா நின்ற நமது கீர்த்தியான தளவிறந்தன வெல்லா மழிந்துபோய்ப் பழி சுமக்க லாச்சு தந்த வராகமானது பிரளய கால ருத்திரனைப் போலக் கோபத்தைச் செலுத்தி யொருவரால் வெல்லுதற் கரிய காவலர்களை யெல்லாம் பிண மலைகளாய்க் குவியத் தக்கதா யதப் படுத்தி யொப்பற்ற பரப்பிரம்மம் போலப் பயப்படாமல் நமது சமீபத்திலே யுலாவிச் சாரிகை திரிந்துகொண் டிருப்பதைக் கண்டதுண்டப் படுத்துகிற காரணத்தைக் குறித்து நீங்கள் நான்கு வகைச் சேனைகளுடனே போய்ப் பிரவேசித்து யூகம் வகுத்துச் சமர் செய்து செயம் பண்ணி வரக்கடவீர்க ளென் றுத்தாரஞ் செய்தா னென்றவாறு. 2

157. அலர்ந்தபது மத்தின து யூகமது கட்டினர
முற்படைய னற்பொ ரியவே
நிலந்தனி னு யர்ந்திடுகு ணக்குமுத லாகியதி
சைக்களினி றைந்த னர்களாய்ச்
சலந்தணிகி லாதவர்பொ ழிந்தகணை [1]மாரிகட
கைந்திடவி ழுங்கி யவர்தங்
குலங்களைமு டித்திடவெ ரிந்தனக ரிந்தனகு
லக்கிரிகள் போல விழுவார்.

எ-து:—அந்தப் படைத்தலைவர் திரண்ட ரத கச துரக பதாதிகளாகிய நான்கு வகையா யுள்ள சேனைகளை யெல்லா மாயிரத்தெட் டிதழினை யுடைய தாமரைக் கமலத்தினைப் போலப் பதும யூகம் வளைத் தக்கினிப் பொறிகளைப் பொழிகின்ற வக்கினி பாணங்களை யுயர்ந்திரா நின்ற கிழக்கு முதலாகிய திசைக ணிறையத் தக்கதாய்ச் சரங்களைத் தூவினார்கள் யூகத்தினின்றுங் கோபந் தணியாத வீரர்கள் பொழியா நின்ற புங்கானு புங்கமாகிய வக்கினிக் கணைகளாகிய சரங்களை யெல்லா மந்த வெய்ய வராகமானது வாயைத் திறந்து விழுங்கி நரசிங்கம் போலப் பாய்ந்து ரதபந்திகளை யெல்லா முடைத்துங் கச பந்திகளை யெல்லா முறித்துந் துரக பந்திகளை யெல்லாந் தூளாக்கியும் பதாதி பந்திகளை யெல்லாம் நீறாக்கியு நின்ற தென்றவாறு. 3

---

[1] மாரிகள் தகைந்திட.

158. தேர்கொடிய றுந்தனசி தைந்தனப ரித்திரள்சி
தைந்தவல வத்தொ கையெலாம்
பார்தனின்மு டிந்தனப தாதிகள்அ ழிந்தனப
ருக்கைமத மாவி னமெலாங்
கார்நிரையெ னப்புரளு கின்றனக டுந்திறல்கொள்
சோமுகன்வெ குண்டு கனமாம்
வார்சிலையெ டுத்தனன்வ ளைத்தனன்கு ணத்தொனிவ
குத்தனனல் வண்மை களினல்.

எ - து:—அந்த வராகந் தாக்கின பாய்ச்சலினலே தேர்களினுடைய துச படங்க ளெல்லா மறுந்து குத்துக்கால் கொடுங்கை பாவுபலகை சட்டங்கள் குதிரைச் சாரதி முதலாகிய பேர்களெல்லாம் பின்னப்பட்டது யானைக் கூட்டங்களானது மேக சாலங்களைப் போலப் புரண்டது கடிய திறத்தினையுடைய சோமுகனனவன் பிரளயகால ருத்திரனைப் போலக் கோபித்து மேருகிரியைப் போன்ற நீண்ட வில்லினை வணக்கிக் குணத் தொனி செய்தா னந்தத் தொனியினலே யண்டகடாகங்க ளெல்லா நடுங்கிற் றென்றவாறு. 4

159. வாருதிக லங்கிட வாவனல முட்கிடவ
ருஞ்சமனு மஞ்சி வெருவத்
தாருலவு தேவர்கட யங்கிமன நெக்கிடத
ராதிபர்கள் சாய்ந்து தளரப்
பேருலவு திக்கினிரை லத்தகரி வீறியிட
பிரமனுந டுங்க பெயராத்
தேருலவு செங்கதிர வன்முதல கோள்கள்பல
திட்கிடமு ழங்கி யதரோ.

எ - து:—தனது காண்டீபத்தை ராச கண்டீரவனுகிய சோமுகன் வளைத்துக் குணத்தொனி வகுத்த மாத்திரத்தின் சத்த சாகரங்களுங் கரகர வென்று சுழன்று கலங்கித் தந்தக் கடல்கடோறும் வதியாநின்ற வடவா வனலமானது குளிர்ச்சியை யடைந்த துடம்பினின்ற வுயிரினைப் பிரிக்க வருகின்ற வெமனும் பயத்தை யடைந்து திடுக்கிட்டான் மந்தார மாலையினையுடைய தேவ கூட்டங்களெல்லா மனமெலிந் துளைந்தார்க ளவ் வுலகத் தரசர்க ளெல்லாஞ் சாய்ந்து தளர்ந்தார்க ளட்ட திசைகளைத் தாங்காநின்ற யானைக் கூட்டங்களெல்லாம் வீறிட் டலறிடச் சிருட்டி கர்த்தாவாகிய பிரம்மாவு நடுநடுங்கிடச் சூரியன் முதலாகிய நவக்கிரகங்களு நிலைவிட்டுக் கால் தளர்ந்தார்க ளந்தக் காண்டீப முழக்கத்தினு லென்றவாறு. 5

160. அங்கிகணை யேமுதல்வி டுத்திடவி டங்களள
வில்லனது ளித்து மழைபோற்
பொங்கிசுழல் காற்றினையி டித்திரள்கள் சிந்தின பு
யங்ககணை யேமு தலவாந்
தங்கியபெ ரும்படைமு ழுங்கிவரு தன்மையைத
னிப்பிரம மாய பரம
னுங்கினனு திர்த்தனன்க டித்தனனெ றுக்கினனெ
டிப்பொழுதி னுண்டு களதாய்.

எ - து :—அந்தக் காண்டீபத்தில் ராசசேகரனாகிய சோமுகன் பூட்டிப் பிரயோகஞ் செய்த வக்கினிக் கணைக ளழலைப் பொழிகின்ற விடச் சுவாலைகளை யளவில்லாத மழைகளைப்போலப் பொழிந்தன வோரிடத்திற் பொங்காநின்ற சுழல்காற்றினைப் பிரயோகித்தன வோரிடத்தி னிடித் திரள்களைச் சிந்தின வோரிடத்திற் சர்ப்பக் கணைகளை யுண்டாக்கி வருகின்ற தன்மையை யந்த வெக்யவராக மூர்த்தியானவர் சிலதை [1]முழுங்கினார் சிலதைப் பொடியா யுதிர்த்தார் சிலதைக் கடித்தா ரதைக் கண் டாச்சரியப்பட்டான் சோமுக னென்றவாறு. 6

161. கண்களழல் பொங்கமிகு துங்கமயி ரோமமது
காளவிட மங்கி பொழிய
வெண்டரள மாலைகள்பொ ரிந்திடவி ரிந்தவளி
வீசிடக னன்று மிகவாய்ச்
சண்டனெனும் வில்லிடைத ராதிபன முற்கணைச
மர்த்தொழில்பு ரிந்த பொழுதே
விண்டொருமரா மரம தைச்சுழல வீசினன்வி
ரிஞ்ச னும்வி யப்ப முறவே.

எ - து :—அந்தச் சோமுக ராசனது கோபத்தாற் கண்களான தழலைப் பொழியவு மிகுந்த வொழுங்கினையுடைய ரோமமானது காளகூட விடங்களைப் பொழிந் தக்கினியைச் சொலிக்கவும் வெண்மையாகிய முத்த மாலையானது பொரிந்துபோகவும் பிரசண்ட மாருதத்தை மூக்கான துண்டாக்கத் தக்கதாகவு மெமனை யொத்த காண்டீபத்தி னக்கினிக் கணைகளைச் சொரிந்து சமர் செய்த காலத்தி லந்த வராகமூர்த்தியானவ ரொரு மராமரத்தைப் பிடுங்கிக்கொண்டு கரகரவென்று சுழற்றி யந்தக் கணைகளையெல்லா மடித் தொதுக்கினா ரப்பொழுது சிருட்டி கர்த்தா வாகிய பிரம்மாவு மதிசயித் தருளினா ரென்றவாறு. 7

[1] விழுங்கினார்.

162. பந்திபயில் யூகமது நொந்துகரி வெம்பியிடப்
பாரதனி னீண்ட விரதஞ்
சிந்திபரி யுந்தியிட வேவயில்கொள் காலனெனச்
சீறியர சன்சி னவியே
கந்தமலர் முந்தியிடு மெந்தைபடை தன்கரத
லத்தினினெ டுத்த விவனு
முந்துபர மன்முனம்வி டுத்திடவ ழற்கணைபி
றைக்கணைமு ளைத்த தவையின்.

எ - து :—பந்தியாய் நிறுத்திய யூகத்தி னணி வகுத்திருந்த யானைக் கூட்டங்களானது வெதும்பிப் புரளவு மிந்தப் பூமியின்கண் ணீண்ட பரப்பினையுடைய ரதபந்திகளானது வெக்குவேறுய்ச் சிதறிடவுங் குதிரைக் கூட்டங்களான திறந்து பிணக்கூட்டமாய்க் குவியவு மிதுகளையெல்லாங் கண்ட வக்கினியைப் பொழிகின்ற வேலாயுதத்தைத் தாங்கிய குரூரமான வெமனைப்போலச் சீறினவனுய்த் திவ்விய வாசனையைக் கமழ்கின்ற பதும பீடத்தி னெழுந்தருளிய பிரம்மாவினுடைய படையைத் தனது கையினெடுத் தர்ச்சித்துத் தூபதீபங் கொடுத் தவருடைய மந்திரத்தை யுபாசித்து முந்திய பரமனுகிய வந்த வராகமூர்த்தியின்மேற் பிரயோகித்த மாத்திரத்தி னந்தக் கணையினின்று மக்கினி பாணங்களு மர்த்தசந்திர பாணங்களு மனேகமாய் முளைத்துப் புங்காறு புங்கமாய்ப் பிரவேசித் தெழுந்த தென்றவாறு. 8

163. வடவனல்பி றந்ததுவி டத்திளையு மிழ்ந்ததுநல்
வண்மைபெரு கால்வ ளியெலா
மிடமொடுத வழ்ந்தது[1]வி டித்தொகையெ ழுந்தது[2]வி
ருங்கமல வன்ப டையினின்
றிடமதுள தண்டமதெ ழுந்ததிரி சூலதிகி
ரிப்படைக னற்கொ ளுவியே
படலைதிகழ் தூமமதெ ழுந்தது[3]வி ருந்திறல்ப
ரம்பரனு ணர்ந்த னனரோ.

எ - து :—அந்தக் கணையினின்று மொரு பக்கத்திலே வடவாமுகாக்கினி பிறந்தது விடத்துளிகளைப் பொழிந்த தோரிடத்திலே வண்மையாகிய பிரசண்ட மாருதமான தோரிடத்திற் பிரவேசித்த திடிக் கூட்டங்க ளனேகமா யொருசார்பின் முழங்கிற்று தண்டங்களான தனேகமா யெழுந் தக்கினியைச் சொலிக்கின்றனவாய் முழங்கின திரிசூலங்களான தனேகமாய்ப்

---

[1,2,3] குற்றியலுகரத்தின்முன் உடம்படு மெய் காண்க.

பிரவேசித்தது சக்கரங்களான தக்கினிமயமாய்ச் சுழன்று சுவாலித்தது வொரு பக்கங்களிலே புகை மண்டலங்களான தனேகமா யெழுந்து தோற்றஞ் செய்தன விப்படியாய் வருகின்ற கணையினுடைய குரூரத்தைப் பார்த்துப் பரம்பரனுகிய வராக மூர்த்தியானவர் கண்டருளினு ரென்றவாறு. 9

164. வந்தகம லத்தவிசின் வானவனி ரும்படைவ
ணங்கிடவி ழுங்க வவனு
நொந்தன னு [1]யிர்த்தன து கையினைபு டைத்தனனொ
டிப்பொழுதி னீச னுதவுஞ்
சுந்தரபெ ரும்படையெ டுத்தனன்ம தித்துசடை
தாய்பிறையன் மந்தி ரமதைச்
சிந்தையினி னைந்தனன்வி டுத்தனன னற்கொளுவி
சூழ்ந்ததுரி னத்த தவையே.

எ - து:—இதழினை விரித் தொளிராநின்ற தாமரைப் பீடத்தின் எழுந்தருளிய பிதாமகனது பெரும் படையான தக்கினிச் சுவாலையாய் வந்து வராகமூர்த்தியைப் பார்த்தளவில் தனது வலியை யெல்லாங் கிரகித்த மாத்திரத்தி னவரை வலம்வந்து தெண்டன் சமர்ப்பித்தளவி லவ ரதை விழுங்கினு ரந்தச் சேதியை யறிந்த ராசசேகர னுனவ னதிசயப் பட்டு மிகவுந் தன்னை நொந்தா னதன் பின்பு பெருமூச்சுவிட்டா னதன் பின் பிரண்டு கரங்களை யொன்றோ டொன்று தாக்குறப் புடைத்தா னொரு நொடிப்பொழுதிலே மறுபடியுந் தேறித் தெளிந்து சந்திரசேகரனுற் றுன் வரபாலனம் பெற்ற சுந்தரத்தோடு கூடிய பாசுபதமாகிய பெரிய கணையை யெடுத் தர்ச்சித்துப் பஞ்சாட்சரத்தை யுச்சரித்து விட்டா னென்றவாறு. 10

165. பந்தியயில் காளியர்கள் ஞாளியர்கள் கூளியர்கள்
பருதிபடை யேமு தலவா
நிந்தையில்பெ ரும்படைமு ளைத்தது வுருத்திரர்நி
றைந்தனர்கள் சூல முடனே
கொந்தலர்க டுக்கையணி துர்க்கைமுத லோர்கள்கண
நாதர்கள்கு ழுத்தொ கையுடன்
வந்தனர்த னந்தனென வென்றடிந டித்தனர்கள்
வாரிதிக லங்கி சுழல.

[1] உயிர்த்து தனது என்பது உயிர்த்தனது என்று விகாரமாயிற்றென்க. இவ்வாறே மற்ற விடங்களிலும் வருதல் கண்டு கொள்க.

எ - து :—அப்படியாய ராசசேகரனுன சோமுகன் பிரயோகஞ் செய்கின்ற பாசுபதக் கணையினின்றும் பந்தியா யஞ்ஞூறு முகங்களையுடைய காளியர்கள் கோர ரூபமா யொரு பக்கத்தினின்றும் பிரவேசித்தார்கள் சுவான வாகனத்தையுடைய வயிரவக் கூட்டங்கள் திரிசூல முதலாகியதைக் கையிற்பிடித் தொருபக்கத்திற் பிரவேசித்தார்கள் பசாசு கூட்டமொருபக்கத் தெழுந்தது சூரியப்படை முதலாகிய வாயுதங்க ளெல்லா மொருசா ரெழுந்தது உருத்திர கூட்டங்க ளனேகம் பேர் பிரவேசித்தார்கள் மணங்களை வீசாநின்ற கொன்றை மாலையை யணிகின்ற துர்க்கையர்க ளொரு பக்கத்தி னிறைந்தார்கள் பூதகணதிபர்கள் தந்தன தனந்த வென்று சதியினுடைய கீதங்களை வாயினுற் பாடி நடித்துப் பிரவேசித்தார்க ளந்தப் பாசுபதக் கணையி னென்றவாறு. 11

166. திக்கொடுதி காந்தமும திர்ந்தனவொ டுங்கினதி
சைக்கரிக டிங்கள் கதிரு
முக்கனவு திர்ந்தனவு டுத்திரள்க லங்கினர்க
ளும்பரசு ரேசர் களெலா
நக்கனது தன்படையி ஞனுளமெ லிந்தனர்க
ணரணன கைத்து வதனை
யுக்ரமொடு துண்டமது றும்படிக டித்தனனெ
றிந்தசெயல் கண்ட னனரோ.

எ - து :—அந்தப் பாசுபதத்தினின்று மித்தனை யதிசயமெலாந் தோன்றிப் பிரவேசித்து வரும்போது திக்குதிகாந்தங்க ளெல்லா மதிர்ந்து திடுக்கிட்டது வயிராபத முதலாகிய வட்ட கசங்களு மொடுங்கின வடமேருகிரியை வலமாய் வருகின்ற சந்திர சூரியர் முதலாகிய நவக்கிரகங்க ளெல்லா மொளி யிழந்து போச்சுது தாரகா கணங்களெல்லாம் பலபல வென் றுதிர்ந்து போச்சுது தேவ கூட்டங்களு மசுர வீட்டங்களுங் கலங்கி மோகத்தை யடைந்தார்க ளிப்படிப் பிரளய கால ருத்திரனைப் போலச் சீறி வருகின்ற சிவனுடைய பாசுபதத்தை யெக்கிய வராக மூர்த்தி யானவர் கண்டு நகை புரிந்தருளி யுக்கிர ரூபங்கொண் டந்தக் கணைக் கெதிர்ந்து தாக்கித் தமது தந்த பந்தியினுலே கண்ட துண்டப்படும் படியாய்க் கடித்துத் தூளியாக்கினு ரப்படிப் பின்னப்பட்ட பாசுபதச் சேதியை யறிந்தான் ராசசூடாமணியாகிய சோமுக னென்றவாறு. 12

167. பங்கயம லர்ந்ததிரு வட்டவணை மேவியப
ரப்பிரம் மான பிரமத்
துங்கனைவெ றுத்துகயி லைக்கிரியி னுற்றிடுதி
ரற்பரம மான சிவனை
யிங்கிதமி லாதவொரு வாய்மொழியி னுலவனி
கழ்ந்துத னியற்கை யையெலாம்
பங்கமுற வந்ததொரு சிந்தைகொடு நாரணனற்
பகழியைவி டுத்த னனரோ.

எ - து:—பங்கயமாகிய தாமரைப் பூவான திதழை விரித்து ஸ்ரீமகா லட்சுமி தேவிக்கு மனோகரமாகிய வட்ட வணையாகிய கர்ணிகையிலே பொருந்தி வாசம் பண்ணுகின்ற பரப்பிரம்ம சொரூபமாகிய நான்கு திருமுகங்களையுடைய பிதாமகனாகிய விசய முள்ளவரை வெறுத்த பின்பு கயிலையி னெழுந்தருளிய வெற்றி பெற்ற பரமனாகிய சிவனை நயகுண மில்லாத விரோத மொழியினு லவரை வெறுத்தவனாய்த் தன் னியற்கை யாகிய புசபல வுக்கிரமான காண்டீபத்தையுங் கணைகளையுங் கதையினையும் பார்த்து நீங்களும் பங்கப்பட்டது நன்றெனக் கோபித்து நாராயண மூர்த்தியைக் குறித்துத் தான் றவம் பண்ணும்போ தவ ரனுக்கிர கித்துக் கொடுத்த நாரணப் படையைத் தொடுத்தா னென்றவாறு. 13

168. பிரமனது தன்படைபி றந்ததிரி சூலவகை
பெட்பொடுபி றந்த கரவா
டிறமதுபி றந்ததிரு வாழிகரு டப்படைதி
றற்படுமெய் வளிக ணைகளா
முரமதுதி கழ்ந்தவன லப்படைக திர்ப்படையு
வப்புறுக லாதி திபடைத்
தரமதுஉ தித்தகடு வைப்பலது ளித்துகனல்
கான்றனதவ் வாழி யதரோ.

எ - து:—அந்த நாராயணக் கணையினின்றும் பிரம்மாஸ்திரமானது வனேகமாய்ப் பிறந்தது வதுவல்லாமல் திரிசூலங்க ளிடிகளை முழுங்கிக் கொண் டனேகமாய்ப் பிரவேசித்த ததன்பின்பு மந்திர வாள்க ளனேகமா யுதித் ததற்குமேல் சிஞ்சுமார சக்கரமானது வடவா முகாக்கினியைச் சுவாலித்துக்கொண் டிடிகளை முழுங்கிக்கொண்டு கோரரூபமா யுண்டாச்சு ததற்குமேல் காருடப் படைக ளனேகமாய்த் தோன்றித் ததன்பின்பு பிரசண்ட மாருதக் கணையானது குலாலன் சக்கரம்போலச் சுழன்று

வனேகமாய்ப் பிரவேசித்ததன் பின் பக்கினிக் கணைகள் சூரியாஸ்திரங்களர்த்த சந்திர பாணங்க ளிவைக ளெல்லாம் விடவருடங்களைத் துளித்தக்கினியைச் சுவாலித்துக்கொண்டு பிரவேசித்த தென்றவாறு. 14

169. அண்டமுந டுங்கினவொ டுங்கினவு யிர்த்தொகைக
ளியாருமி து வற்பு தமெனச்
சண்டவளி மேகமொடு சென்றுகன லுண்டுவட
வைக்கனல்த ருக்கி யுணவா
யுண்டுதிரு மாலடிவ லஞ்செய் துவ ணங்கவுயர்
சோமுகனு முறாது யருடன்
கண்டுவிரு கண்களனல் சிந்தபுகை மண்டவுயர்
காலனென வேசீ றினான்.

எ - து:—இந்தப் பிரகாரம் நாராயணைப் படையானது திரிமூர்த்திகள் படை முதலாகிய படைகளையும் மற்றத் தேவாஸ்திரங்களையும் உளதாக்கி முழக்கத்தினுற் பெரிய கோஷ்டத்தை யுண்டாக்கிப் பிரவேசித்த மாத்திரத்திலே யண்டகடாகங்க ளெல்லாங் கிடுகிடென்று நடுங்கத் தக்கதாய்ச் சுழன்று திரிபுவனத்தி லுள்ள நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்பு எண்பத்து நான்கு நூறுயிரம் சீவ பேதங்க ளெல்லாஞ் சித்திரம்போ லொடுங்க விதைக் கண்டவர்க ளெல்லா மற்புதத்தை யடையப் பிரசண்ட மாருதக் காற்றானது மேகராசியினுடனே கூடிச்சென்று கடலினது நீரையெல்லா முறிஞ்சி யுண்டதன் பின்பு தருக்குற்று வடவனலை யுணவா யுண்டபின் பெக்கிய வராகத்தை வலஞ்செய்து தெண்டன் சமர்ப்பித்து வவ ரேவிய பணிவிடையி லின்றதைக் கண்ட ராசசேகரனாகிய சோமுக னானவன் துயரத்தை யடைந்து மறுபடியுந் தேறி யிரண்டு கடைக்கண்களிலு மக்கினி சுவாலிக்கப் புகைமண்டலம் கொண்டல்போல் பிரவேசிக்க உயர்ந்த காலனாகிய எமனைப்போலக் கோபித்தா னென்றவாறு. 15

சோமுகன் சமர்புரிந்த வத்தியாயம் முற்றிற்று.

# பத்தாவது: வராகநதி யுற்பத்தி யுரைத்த வத்தியாயம்

170. எண்டிசையின் வீரரைவி ளித்தனனெ ளித்தவர்வி
ரைந்துசெல வேக பதியு
மண்டர்க ணகைக்கதிரி தேவர்படை யுண்டதிது
வாதிபர மாமு தல்வனே
[1]தண்டமிகு தைப்புரித லேநமது வீரமென
சார்ந்தகொடு வீரர் களெலா
மண்டியனல் சிந்திவட வைக்கனலை யொத்தவர்வ
குத்தனர்க ளூக மதனை.

எ - து :—எட்டுத் திக்கினும் கோபத்தோடுங் கூடிய ராசசேகர னவன் பார்த்தா னிந்த வராகத்துக்கு வெதிர்நின்று யுத்தஞ் செய்ய மாட்டாம லோடிப் பயப் பிராந்தியை யடைந்தவர்கள் வீரர்களோ வென் றிகழ்ந்து கூறி யவரைச் சமீபத்தி னழைத்துக் கூறுகின்று னண்டர்க ளாகிய தேவர்களெல்லாம் நகை செய்ய வந்த வராகமானது திரிமூர்த்திகள் படையினையு முண்டு தருக்குற்ற தாதியிலே பரமமா யிருந்த முதல்வனே வப்படியா யிருந்தாலு மிதைத் தண்டஞ் செய்தலே நமது வீரமல்லது வேறில்லை யாகையா லிதை வளைந்துகொண்டு சமர்த்தொழிலை விடாமற் செய்யக் கடவீர்க ளென் றுக்கியாபித்தா னவனுடைய மந்திரிகள் முதலாகிய பேர்களெல்லாந் திரண்டு கண்களிலே வடவனலைப் பொழியக் கோபித் தவர்கள் வியூகம் வகுத்தார்க ளென்றவாறு. 1

171. வில்லினைவ ணக்கினர்க ளற்கணைபொ ழிந்தனர்வி
டுத்தமழை தாரை யெனவே
பல்விதகொ டுங்கணைபொ ழிந்தவர்நெ ருங்குவது
கண்டிடுபு கழ்ப்ப ரமனு
மொல்லையின்மு ழங்கியுயர் சம்பிரம பாதவமெ
டுத்தனனு யர்த்த கரனல்
வல்லியம தென்னவனி கத்திரள்ம டிந்தனர்வ
தைந்தனர்கள் வீரர் களெலாம்.

எ - து:—அணித்தலைவர் யூகத்தலைதர் பட்டவர்த்தனர் மகுட வர்த்தன ரதிரதர் மகாரதர் மந்திரி முதலாகிய பேர்க ளணிவகுத் [2]தூரகம் வளைத்து வில்லை வளைத்து நாணேறிட்டுக் குணத்தொனி செய்து

---

[1] தண்ட மிகைதை. [2] வியூகம்.

சதத மேகங்களு மொன்ருய்க் கூடிச் சல தாரைகளைப் பொழிதல்போ லக்கினி பாணங்களைப் பொழிந்தார்க ளத்தன்மையா யவர் தொடர்ந்து வருதலை யறிந்த வராக மூர்த்தியானவ ரதிக துரிதமாய் மேகத்தைப் போலக் கர்ச்சித்து வங்கே ஓர் உயர்ந்த எலுமிச்ச விருட்ச மிருந்த வதை வேருடன் பிடுங்கி முறித்துக்கொண்டு ஒரு புலியானது மான் கூட்டத்திற் புகுந்ததுபோ லதைச் சுழற்றி யடித்தா ரந்தத் தெப்பையினுலே நான்காகிய தள தந்திரங்களை யெல்லா முறித்துத் தூளாக்கினு ரென்றவாறு. 2

172. கண்டவர சன்னறிச யித்துவொரு செய்கையைக
ருத்தினினை யாத பிரமை
கொண்டனன்வ ராகமது கொண்டல்தவ ழிஞ்சியைகு
றித்தவனி டித்து குறுகத்
தண்டமெடுத் துவிர தத்தினொத ணைந்துவரு
தன்மையையு ணர்ந்த பரமன்
தண்டகவ னந்தனில்பு குந்தசெயல் கண்டதவ
மாமுனிவர் தாழ்ந்த னர்களால்.

எ - து :—வராகத்தினுலே தனது ஞகமானது மீட்டு மழிந்த தன்மையைக் கண்ட மகாராச சத்திர பதியாகிய சோமுகனுனவன் கண்டதிசய மடைந்து செய்யுங் காரியங் தவிருங் காரியந் தோணுதவனுய்ப் பிரமை கொண்டு மயங்கு மளவில் வராக மூர்த்தியானவர் மேக மண்டலத்திற் றவழ்கின்ற வவ் வனத்தைச் சூழ்ந்த மதிலை யெல்லாம் நான்கு திசையினுந் தூளா யிடித்து மீட்டு மவ் வரசனிடத்திற் பயமில்லாதவராய் வருதலைக் குறித்துச் சீற்றங் கொண்டவனுய்த் தேரினைவிட்டுக் கீழே குதித் தொரு தண்டாயுதத்தைத் தாங்கி முன்னடி வைத்துப் பின்னடி வாங்கி வலசாரி யிடசாரியாய்த் திரிந்து குலாலன் சக்கரம்போலச் சுழன்று வருந் தன்மையினைக் கண்ட வராக மூர்த்தியானவ ரந்த விடத்தை விட்டுத் தண்டக வனத்திற் றவஞ் செய்கின்ற முனிவர் கூட்டங்களுக்குத் தமது திவ்ய சொரூபத்தைக் காட்டக் குறித்துப் பயந் தோடுகிறவர் களைப் போ லோடினு ரென்றவாறு. 3

173. நின்றவர சன்குருதி நீள்கடலெ னப்பெருக
நிகழ்ரதப தாதி கவெலாஞ்
சென்றுகடல் தங்கியிட கண்டுபுகை சேரவொரு
தெண்டமொடு தண்ட கமதின்
விண்டுதுயில் கொண்டமணி தங்குமொளி பாணவரை
மேவிமுனி வோர்கள் புகழ
கண்டுசர மாரியினைக் கொண்டல்கள் கலங்கிடக
டுஞ்சரம்வி டுக்க விமலன்.

எ - து :—இப்படியாக வராகமானது சமீபத்தில் வருவதுபோல் வந்து தன்னை யெளிதஞ் செய்து தண்டக வனத்திலே யோடக் கண்ட ராச சேகரனுகிய சோழுக னுனவன் தனியா யிருந்து உதிரப் பிரவாகமானது கடலைப் போலப் பெருக வக் கடலிடைகளிலே பிணக் குவைகள் மலைகளைப் போலத் தோன்றக் கண்டு கோபித்தவனுய் வடவா முகாக்கினியானது கண்களிலே சுவாலிக்கப் புகை மண்டலங்கள் மேக மண்டலங்களைப் போலச் சூழத் தண்டத்தை யெடுத்துக்கொண் டந்த வராகத்தைத் தொடர்ந்து தண்டக வனத்திலே தேடித் திரியும்போ தந்த வராக மூர்த்தியானவ ராயாசத்தா லிளைத்தவரைப் போல நித்திரை செய்கின்ற மணிமயமாகிய பாறையி னொளியினை விரிக்காநின்ற விடமகன்ற பாணுத்திரி சைலத்தின் மேவித் தவஞ் செய்கின்ற முனிவர் கூட்டங்கள் தவ முடிபெய்தும் பொருட்டாய்ப் பரம்பர மூர்த்தியானவர் தமது யோக நித்திரையை நமக்கு எளிதாய் வெளியிட் டருளினு ரென்று புகழ்ந் துருகித் தெண்டன் சமர்ப்பித்தார்க ளதன்பின் பிந்த வராகத்தைத் தொடர்ந்து வருகின்ற ராசசேகர னுனவன் பாறையிலே நித்திரை செய்கின்ற வராகத்தைக் குறித்துத் தனது காண்டீபத்திற் பூட்டிய கணைகளைப் புங்கானு புங்கமாய்ச் சரமாரிகளைப் பொழிந் தார்ப்பரித்தா னென்றவாறு. 4

174\. தென்றல்தவ ழிக்கிரியி ழிந்துவட மேருவில்செ
றித்தமணி கோல வரைமேல்
கொண்டல்தவழ் கின்றநிலை யொன்றநினு யர்ந்தகுகைத்
தொண்டுசெய்ம யன்ற ருதலால்
சென்றனர்ப ணுமுடிபி றந்தசய னத்திடைதி
கழ்ந்தவர்பி றந்த வடியின்
நின்றடிபுகழ் கங்கைமிகு சங்கமொடெ ழுந்துநிலை
நின்றதுவ ராக நதியே.

எ - து :—திவ்ய பரிமளங்களையுங் குளிர்ச்சியினையு மந்த கதியினையு முடைய தென்றற் காற்றுனது வீசாநின்ற வந்தப் பாணுத்திரி சைலத்தை விட்ட வராக மூர்த்தியானவர் வடமேரு கிரியிலே யவதாரஞ் செய்தருளிய மணிமயமாகிய கோலாசல கிரியினது மேகந் தவழ்கின்ற வுச்சியின் றெய்வக் கம்மியன் றவஞ் செய் தமைக்கப்பட்ட சிரேஷ்டமாகிய வொரு சுந்தர சுமங்கல சுரஞ்சித சுயம்பிரகாசமா யொளிராநின்ற வொரு குகையிலே சேடசாயி யானவ ராயிரம் பணுமுடியினை விரித் தாயிரஞ் சூரியரைப்போ லொளியை விரிக்காநின்ற வனந்த விமான சயனத்தின் யோக நித்திரை செய்கின்ற வரங்க நாயகருடைய திருவடித் தாமரைகளி னின்று முன் வரபாலனம் பெற்ற காரணத்தினுலே தேவ கங்கை யானவ ளப்போ தவதரித்தா ளது பெருக்கெடுத்துக் கடல்போல முழங்கி நான்கு வகைச் சங்கங்களு மார்ப்பரிக்கத் தக்கதாய் வராகநதி யென்கின்ற பேரினைப் பெற்றுப் பிரவேசித்தா ளென்றவாறு. 5

175. அண்டர்க டுதிக்கமுனி வோர்கண்மறை யோதவறி
யாதவரி பாத மலரைக்
கண்டடிப ணிந்துகரு ணைக்கடல்சி றந்தகம
லைத்திருவ ராத னைசெயத்
தண்டகவ னத்தினர்ம கிழ்ந்தனர்து தித்தனர்த
னித்தலிந டித்த னர்களாய்க்
கொண்டவமு தச்சுவைய ருந்திமுனி வோர்கடிகழ்
கொண்டுபணி கின்ற னர்களால்.

எ - து:—அப்படிக் கோலாசல கிரியிலே யனந்த விமான ரூடரா யோகநித்திரை செய்த வளவிலே தேவாதிக ளெல்லாந் துதிக்கவு முனிவர் கூட்டங்க ளெல்லா மறை யோதவும் ஞானிகளா லறிதற்கரிய வராக மூர்த்த வரங்க நாயகராகிய கருணைக்கட லானவரது திவ்ய கமலம் போன்ற திருவடிகளை ஸ்ரீமகா லட்சுமிதேவி யாராதனஞ் செய்யவும் தண்டகாரணிய முனிவர்க ளெல்லா மகிழ்ந்து துதித்தவர்களாய் நடனஞ் செய்து தெண்டன் சமர்ப்பித் தவருடைய தேசோமய காந்தியாகிய வரம்பி லின்ப வமுதத்தை யருந்தி யற்புதம் பெருகி யவரது ஊழியப் பணிவிடையைச் சிரத்திற் ருங்கி யிருந்தார்க ளென்றவாறு. 6

176. நின்றநெடு மால்வனம டைந்திடக லங்கிநெடு
நேரியென நீள்க டலெலா
மண்டமுந டுங்கதிசை யானைகுரு திச்சொரிய
வலகினுல கெங்கு மசையச்
சென்றகன லொத்தகளை கொண்டுநதி கண்டுதிரு
வென்றுபுகழ் தென்ற லதனு
லின்றுமகிழ் கொண்டுபுன லுண்டுபெரு கும்பொன்மணி
லின்பமொடு கண்ட னனரோ.

எ - து:—பாணுத்திரி கிரியிலே நின்ற நெடுமாலாகிய வராக மூர்த்தி யானவர் வனங்களிலே யோடி யொளிக்க ராசசேகரனுகிய சோமுக னுனவன் கலங்கி மீட்டுந் தெளிந்து நீண்ட சிஞ்சுமார சக்கரம்போலச் சீற வதனுலே திக்கு திகாந்த முதலானது நடுங்கவும் திசைகளைக் காக்காநின்ற வட்ட கசங் களு மிரத்த வெள்ளங்களைச் சொரியவு மலர்ந்தனவாகிய வுலகங்க ளெல்லா மசையவுங் கனலைப் போலச் சீறிச் சென்றவன் கோலகிரியின்மே லேறிப் பார்த்தா னப்போது தனியா யோடி வந்ததினு லும் யுத்த சன்னுகத்தினு லுங் களைத்து விழுந்து சிலநேரம் போனபின் பந்தக் களை தெளிந்தா னப்போது திருமுக மண்டலத்தில் திவ்ய பரிமளங்களைக் கமழாநின்ற தென்றற்

காற்றுனது வீச வதனுலே களை தீர்ந்து லட்சுமிகரத்தை யடைந் தன்றைய தினம் நாராயண மூர்த்தியினது பாத சம்பந்தமாகிய வராகநதி தீர்த்தத்தை யுண் டுவந்தவனு யந் நதியிற் குவிந்திராநின்ற பொன்மய மாகிய மணலைக் கண் டானந்தப்பட்டா னரச னென்றவாறு. 7

177. சோலைதிக ழுந்தமலர் சூழ்ந்தநதி மேல்பரவ
சூழ்புவன மாகு மதிதோய்
சாலைகள்பு ரிந்துநவ ரத்னமணி யந்நதித
ழைத்தபடி யாய மரவே
காலைபுகழ் மாலைதிகழ் கோலவரை தங்கமய
மாகியொளி நின்றி ரவிபோல்
பாலையரு வித்திரள்சொ ரிந்திடம லர்ச்சயன
பாயல்மிகக் கண்டு ருகியே.

எ-து:—அந்த வராக நதியைக் கண்ணுற் றதிசய மடைந்த ராச சேகரனவ னந்த வனச் சோலையைக் கண் டற்புத மடைந்தவனுய்ச் சோலையினின்று முதிராநின்ற நானவிதமாகிய மலர்த் தொகுதிகளான தனேகமா யந் நதிப் பரப்பெல்லா மழித் தோற்றஞ் செய்ய வடமேரு கிரியை வலமாய் வந் திந்தப் புவனத்திற் றேன்றுகின்ற சந்திரனவன் றவழ்கின்ற சாலைகளாகிய கமுக மரங்களுந் தென்ன விருட்சமும் வாழை விருட்சங்களுமாகிய சாலைக ளனேகமாய்த் தோன்றவு நவரத்னங்களாலே யந் நதி யிருபுறக் கரைகளுங் கட்டிய படிகளாய்த் தோன்றுதலையுங் காலை மாலைப் பொழுதைப் போலத் தோன்றுகின்ற கோல கிரியானது தங்கமயமாய்த் தோன்றுதலையும் பாலினை யந்த மலையான தருவியாய்ச் சொரிதலையும் நந்தன வனத்தி னிலகாநின்ற புட்பக் கூட்டங்கள் மலரினுற் பரப்பிய சயனப் பாயலைப் போலத் தோன்றுதலையுங் கண்ணுற்கண் டுவந்தா னரசர்பிரா னென்றவாறு. 8

178. அண்டர்முனி வோர்கடிகழ் கின்றபுக ழெண்டிசைய
கன்றநதி யாடி யரசன்
கொண்டலெனச் சீறியெழில் கோலவரை யேறிதிகழ்
கின்றவடி கண்டு குகைமேற்
கண்டுவெதிர் சென்றுதுயில் கொண்டவரி யென்றுமனம்
விண்டுமகிழ் கொண்டு கடுகித்
தண்டமழு சூலம்விட கண்டபர மன்னரச
னென்றுருவு கொண்ட னனரோ.

**எ - து:—அத் தன்மையனவாகிய நதி சோலையினது வளங்களைக் கண் டுவப்புற்ற ராச கண்டீரவனுனவன் தேவர்களு முனிவர்களும் வாசம் பண்ணுகின்ற வெட்டுத் திக்கும் புகழாநின்ற வந்த நதியிலே தீர்த்த மாடிய வரசனுனவன் மேகத்தைப் போலச் சீறிக் கர்ச்சித்துக்** கோலாசல பருவதத்தி னுச்சியி னேறிப் பார்த்தா னந்த வேத வடிவாகிய வொரு குகையைக் கண்டா னந்தக் குகையிலே பிரகாசிக்காநின்ற வராகத்தினது நான்கு குளப்படியுந் தங்கி யிருப்பதனைக் கண் டெதிரிலே போய்ப் பார்த்தா னப்போது சேட விமானசாயியா யிலகாநின்ற வரங்க நாயகனைப் பார்த்து நமது முன்பு வராக ரூபமான திந்த வரங்க நாயகனே யல்லது வேறல்ல வென்று தேறினவனும் மகிழ் சிறந் தவ ரணிமைக்கட் சென் றித் தன்மைத்தாகிய பரம புருஷோத்தமனிடத்தி லெதிர்த்து யுத்தம் பண்ணப்பட்ட யாம் பின்னிடுகிறது பழிப்பென் றெண்ணித் தனது கையி லிருக்கின்ற திரிசூலம் கண்டகோடாலி வாளாயுதந் தண்டாயுத முதலாகியதைப் பிரயோகம் பண்ணி யார்ப்பரித்தா னப்பொழு தரங்கனுகிய பரம்பொருளானவ ரரசனு யுருவெடுத்தா ரென்றவாறு. 9

வராகநதி யுற்பத்தி யுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

# பதினேராவது: சோமுகன் சரணுகதி யடைந்த வத்தியாயம்

179. அணிம ணிக்கிரண மகுட குண்டலமு
மழகெ றிப்பபுய கீர்த்தியும்
பணிய ணித்தரள வர்க்க மோடுநுதல்
வீர பட்டமுட னேபகர்
மணியி டைக்குரிய கச்சை மீதுசுரி
கைக்கு முத்தணிவ யங்கவுந்
தணிக முற்கணிகொள் கழல ணிக்குவமை
சாற்று மாறெவரு மொப்பினே.

எ - து:—அழகிய மணிகளானது கிரண சமூகங்களை விரிக்காநின்ற திருமகுடமானது சிரத்தினிற் சிறந்து பிரகாசிக்கவு மிரண்டு திருச்செவி களிலே யிரதனக் குழைகளானது விளங்கிப் பொலியவும் புய கீர்த்தி யானது முத்தினத்தாற் பதித்து விளங்கிப் பிரகாசிக்கவு நெற்றியிலே வீரபட்டமானது துலங்கவு மழகிய விடையில் கட்டிய கச்சையின்மேல் விளங்கிய மந்திர வாளினுக் குரிய முத்தணிகளான தொளி பிரகாசிக்கவும் வலியினையுடைய வீர கண்டாமணி யணிந்த பாத பங்கயத்திற் கொப்பு யாவராலுஞ் சொல்லக்கூடா தென்றவாறு. 1

180. நக்க னேடுமயன் வாச வன்னமரர்
நறும லர்மழை சொரியவுந்
தக்க நல்லறமும் வேள்வி மாமறைத
வம்பு கழ்தலையெ டுக்கவு
துக்க ஞானமுல கந்த ழைக்கதனி
சம்பி ரத்தனிவி ருக்கமாந்
திக்க னைத்துமொளி வீசும் வாளொடுகை
சென்ற னன்கரிய செம்மலே.

எ - து:—சிவனுடனே பிதாமக னிந்திரன் முதலாகிய பேர்கள் கூடித் திவ்விய பரிமளங்களைக் கமழ்கின்ற புட்பங்களான மலர் மாரி சொரியவுந் தகுதியையுடைய தர்மமும் வேள்விகளும் வேதங்களும் புகழ்களுந் தலையெடுக்கவு மிகுதியாகிய ஞானமான துலகத்திலே தழைக்கவு மடியார்க ளுதிக்கவுந் திக்கு திகாந்தங்க ளெல்லா முயர்ந்து பரந்திராநின்ற வெலுமிச்ச விருட்சமா யஞ்ஞானத்தாலே வந்த வரசனை யவண திழிவு தீரத்

தக்கதாய்க் கருணை புரிந்து வேருடனே பிடுங்கி வாளாயுத மாக்கிக் கொண் டதைக் கராம்புய மலரி னேந்தி யருள் வடிவாகிய சுந்தர வரச சூடாமணியாய்க் குலசூடாமணியாய் வந்தருளினார் வராக மூர்த்தியாகிய வரங்க நாயக ரென்றவாறு. 2

181. சென்ற தேவன்மிசை நின்ற சோமுகன்றெ
றித்த னன்பலக டுங்கணை
யொன்று போலளவு மின்றி வந்தவைவை
யொன்று மில்லெனநொ றுக்கினான்
வென்றி கொண்டவனு நின்ற காலளவில்
வேக வெஞ்சரமு டுக்கினான்
நன்று நன்றெனந கைத்து நாயகனு
நாம மில்லெனந றுக்கினான்.

எ - து :—இப்படிச் சுந்தர வரசனை யெதிர்ந்து வந்த நாராயண மூர்த்தியின் பேரில் சோமுகனென்பவன் வில்லினை வளைத்து நாணை றிட்டுக் குணத்தொனி செய்து கரோவேக சரோவேகமா யொரு தொடைக் காயிரம் பதினாயிரங் கோடியாய்ப் பாணங்களைத் தொடுத்தா னது வொன் றனந்தமாய் விரிந் தளவில்லாமல் வந்து சூழ்ந்ததை யெல்லாந் தமது திருக்கரத்திற் றாங்கிய வாளினாலே கண்ட துண்டமாய்த் துண்டித்து வீழ்த்தா ரதைக் கண்ட செய காண்டீப பதியாகிய சோமுகனென்பவன் அளவிறந்தனவாகிய கணைகளைச் சொரிந்தா னவைகளையும் வாளினாலே வெட்டி யுதிர்த்து நகைத்தருளினார் சுந்தர வரச னென்றவாறு. 3

182. தெய்வ வெங்கணையொ டுற்ற சத்திமுத
றேக மூழ்கதிரி சூலமும்
வெய்ய வன்றரபு குந்த வையனவை
வேக சாரிகையில் விட்டிடக்
கையி னுற்றபடை யாவு மோர்கடிகை
யிர்ந்து தோள்வலுமை காட்டினான்
துய்ய வன்னவைது ணித்து வாள்கொடுதி
ரிந்து சாபந்து ணிக்கவே.

எ - து:—இவ்விதமாய்த் தானெய்த கணைகளை யெல்லாந் துணித்த வரசனாகிய நாராயண மூர்த்தியானவர் சரீரத்தி னழுந்திடத் தக்கதா யனேக வக்கினி கணைகளு மீளாவேலுந் திரிசூலங்களும் விட் டார்ப்பரித்தா னது வருகிற கோரத்தைப் பார்த்த வரசனவர் முன்னடி வைத்துப்

பின்னடி வாங்கிச் சாரிகை திரிந்து வாளினுலே யதை யெல்லாங் கண்ட துண்டஞ் செய்தா ரதன்பின்பு தான் தவஞ் செய்து வரபாலனமாய்ப் பெற்ற கணைகளை யெல்லாஞ் சொரிந்தா னதை யெல்லாம் சக்கிராகாரமாய்ச் சுழன்று தூளி படல மாக்கிய பின் பவன் கையிற் பிடித்த காண்டீபத்தை யெதிர்த்துப் பாய்ந்து வாளினுலே கண்ட துண்டப்படுத்தித் தள்ளினு ரரங்க நாயகராகிய சுந்தர வரச னென்றவாறு. 4

183. முறிந்த விற்கையினெ றிந்து நாந்தகமு
கந்து சாரிகைமு டுக்கினு
னறிந்த வையனவ னேடு சாரிகைதி
ரிந்து வாண்முனம றுத்தவன்
பொறிந்த மார்பினில்பு டைக்க வாள்கொடுதி
கைத்து மண்மிசைபு ரண்டிடத்
தறிந்த மேருவின்ம றிந்த சோமுகனை
சார்ந்த னர்மறலி தூதரே.

எ - து :—அத் தன்மையாய் வெட்டுப்பட்டு முறிந்த வில்லினை யெறிந்து விட்டுச் சோமுகனவன் வாளை யுருவிக்கொண் டிடசாரி வலசாரியா யலகு கொண்டு பாய்ந் தமர் செய்தா னப்படி யிருவரு மொருவருக் கொருவ ரிளைக்காதவர்களா யண்டப் பித்திகை பொன்னுலகு மிருநிலகமும் சக்கரவாளகிரி சத்த சாகர தீவாந்தரங்கள் நவகண்டங்க ளெல்லாம் வலசாரி யிடசாரியாய்த் திரிந்து தோலாமல் யுத்தம் பண்ணுங் காலையில் சோமுகனுடைய வாளை வெட்டிக் கீழே தள்ளினு ரரங்க நாயக ரதன் பின் பந்தப் புய வலியையுடைய சோமுகன் மார்பிலே யுருவத் தக்கதாக வாளினுலே குத்தினு ரந்தக் குத்தானது மார்பைத் தடாரித்து முதுகின் வழியிலே யுருவிற் றப்போ திரத்த வெள்ளங்கள் பெருகத் தக்கதாய் வடமேரு கிரியானது வேருடனே பறிந்து வீழ்ந்ததுபோ லுருண்டு வீழ்ந்தா னப்போ தெமதூதர்கள் வந்து சூழ்ந்தார்க ளென்றவாறு. 5

184. பாசம் விட்டுடலி றுக்கி முன்னவர்வ
லிக்க வூழ்வினைப றிந்துநன்
னேச முற்றவச மற்று நல்லறிவு
நேர்ந்த வவ்வயினி கழ்த்துவா
னீசன் மற்றயனும் வாச வன்னமர
ரியன்ம றைக்கிறைவ னீயலாற்
பேச வுற்றபொருள் கேச வாவினியார்
பேணு மென்பிழைபொ றுத்திடாய்.

எ-து:—இவ்விதமா யிறக்காநின்ற ராசசேகரனாகிய சோமுக னுயிரைக் குறித்த வெமதூதர்க ளானவர்கள் தத்தம் பாசங்களாகிய கயிற்றை விட்டுப் பூதனு சரீரத்தி னுயிரை விட் டந்த வுடலினையு முயிரினையு மிறுகக் கட்டி யிழுக்கும்போ தூழ் வினையானது போய் நல்லறிவானது வந்து கலக்க வதனாலே நின்மல ஞான சின்மயத்தினைப் பெற்று மரண மூர்ச்சை தெளிந்து கூறுகின்றான் சிவனும் பிரம்மனு மிந்திரனு முபாசிக்கா நின்ற வேதத் தலைவன் நீ யல்லாமல் வேறொருவரைப் பரமென்று கூறுதாகையால் கேசவா நீ யல்லாமல் சரணாகதி யடைந்தவர்கள் பிழையைப் பொறுத்துப் பாதுகாக்காநின்றவர்கள் வேறில்லை யென்றானென்றவாறு. 6

185. ஆதி நாயகனீ யென்று ணர்ந்திலன
கங்க ரித்துடனு டன்றுபோர்
பேதை புத்தியினி றந்த விப்பிழைபொ
றுத்தெ னக்கருள்செய் புண்ணியா
நீத கற்றுமுனை சரண மாகுமெனை
நீண்ட லாவெமதூ தரோ
வேத வித்தகரு ஞான போதகரு
மேவு முத்தியருள் வீரனே.

எ-து:—மீட்டுங் கூறுகின்றான் ஆதி கர்த்தா நீ என்று அறியாத பேதையானவன் செய்த வபராதமாகிய அகங்காரங் கொண்டு உன்னுடனே எதிர்த்துச் சமரினைச் செய்தே னிப்படி யான் மயங்கிச் செய்த குற்றம் நீங்க வுனது சரணாகதியைத் தஞ்சமென் றடைந்தே னப்பொழுதே புனித பவித்திரமாகிய நித்தியானந்த சுப மங்களத்தைப் பெற்றே னெனைத் தீண்டலாகு மொருவருண்டோ வாகையா லிந்த வெமதூதர்கள் தீண்டலாமோ வேத பாராயண பண்டிதர்களுக்கும் ஞான போதகாசிரியர்களுக்கும் முத்தியாகிய பரமபதத்தில் நித்திய சூரியர்களாய்ச் சேவிக்க வருள்கூர்ந்த கமலக் கண்ணனே யென்னைக் கை நழுவவிடுத லுமக் கழகல்ல வென்றவாறு. 7

186. ஈறி னின்னையொரு கானி னைக்கவவ
றிருவி னைகடிய வீறினற்
பேறு பெற்றசுக வின்ப நின்னுருவை
பேணு மெற்கதென புன்மையோ
வீறு பெற்றபுய நாலு முற்றவொரு
வேத வித்தகவி ளங்குபொன்
னேறு பற்றுமணி நாறு சொற்றுளப
மீடு பட்டுயரு மார்பனே.

ஏ - து :—ஒருவன் சரம தசையாகிய மரணத்திலே ஒரு தரம் நின் னுயிர நாமத்தி லொன்றை நினைவானாகில் நல்வினை தீவினை யொழிந்து சமரச சாத்விக ஞான பரம பாகவதனுவ னத் தன்மையாகிய நித்திய சூரியர்களோ வெண்ணிறந்தவர்க ளப்படி யிருக்க யானுன்னை யிடை விடாது தெரிசனம் பண்ணிய வெனக்கு உனது பரமபதம் பெறுதல் அருமையோ விர்த்தியாகிய சதுர்புசங்களையுடைய வேத வித்தகனே பொன் மயமாகிய கவுத்துவாபரணமும் துளப மாலையினையுமுடைய ஞானசாரியனே யென்னைக் குறித் தஞ்சே லென்று லென்னைப் பிறவித் துன்ப மனுகா தென்றான் சோமுகனாகிய மெய்ஞ்ஞான சூடாமணி யென்றவாறு. 8

187. இன்ன வின்னதுதி செய்த சோமுகனி
ரங்க வன்பொடினி வெருவனீ
யென்ன புன்னகைபு ரிந்த மைத்துகர
மீய வேகியெம தூதரு
மன்னு தென்னகர மெய்தி னரமலன்
மருவி பத்திவலி வெற்றியு
நின்னி லின்னொருவர் நிகர்வ ரோவுலகி
னென்ன முன்னவளி கழ்த்துவான்.

ஏ - து :—இந்தப் பிரகாரம் மெய்ப் பத்தியினாலே சோமுகன் தோத்திரம் பண்ணி யிரங்கியதைக் கண்ட நாராயண மூர்த்தியானவ ரிரக்க முற்றவராய் நீ யிரங்க வேண்டா மென் றவனைப் பார்த் தன்பினாலே சோமுகனே நீ பயப் பிராந்தி யடையாதே யென்று புன்சிரிப்பாகிய இள நகையினைப் புரிந்தருளிய காரணத்தினைக் கண்ட எமதூதர்க ளானவர்கள் வென்று னென்று அவன் கட்டை யவிழ்த்துவிட்டுத் தங்க ளுலகத்தி னோடினார்க ளப்படியாகிய காலத்தி லரங்க மூர்த்தியானவர் கூறுகின்று ரன்பனாகிய வரசனே உனது உறுதியாகிய மெய்ப்பத்தி யாவரிடத்தினுங் கண்டதில்லை யென்று நாயகரானவர் பின்னுங் கூறுகின்று ரென்றவாறு. 9

188. முப்பி றப்பினொரு கற்ப காலமதின்
மொய்த்த மெய்வலிய பிரிதிவும்
விப்ர தீவும்வலி யாகி மேவலர்க
ளாகி வெய்யவனு ருலகெலாஞ்
செப்பு நல்லறமும் வேள்வி யோம்பிமனு
திகிரி போலரசு செய்தநீ
ரெப்பு விக்கிறையு மீச னுகுமெனி
டத்தி னன்புபுரி காலையின்.

எ - து :—மீட்டும் அரங்க நாயகர் அருளிச் செய்கின்றூர் நீங்கள் மூன்றும் பிறப்பிலே ஒரு கற்ப காலத்திலே புயவலியினையுடைய பிரிதி யென்றும் விப்பிரதீ யென்றும் வலியினை யுடையவர்களாய் நல்ல சுபுத்திரர்களாய்ச் சூரியன் சஞ்சரிக்காநின்ற விவ் வுலகமெல்லா மரசாட்சி செய்து நல்ல சுப கர்மங்களை யெல்லா மனுட்டித்து விர்த்திக்கச் செய்து பதினெண் வகையா யுள்ள வேள்வியைப் பாதுகாத்து மனு மாந்தாதிகளைப் போற் செங்கோற் செலுத்திச் சக்கர நடாத்திய தலைவர்களா யிருந்த நீங்க ளிந்தத் திரிபுவனத்துக்கு மீசனுகிய வென்னுடைய பக்தியை நீங்காத வைதிகத்தை யனுட்டித்து வரும்படியாகிய காலங்களி லென்றவாறு. 10

189. நல்ல மாதவமு ஞான மும்பொறையெ
ஞுனும் வாழுமறை வேதமும்
வல்ல மாதவர் து திக்கு நித்யமுள
கண்டன் வந்துமது சூழலி
ஞெல்லை யேகினனல் லடிதொ ழாவகையு
ணர்ந்த வன்னு றுக டுஞ்சின
மெல்லை யூழிகன லென்ன பொங்கியுமை
யிட ழிந்திடச பித்தனன்.

எ - து :—நல்ல தவநிலை யொழுக்கமும் தத்துவ ஞான நிலைமையுஞ் சாந்த தத்துவமும் வைதிக நிலைமையுமுடைய வலிய மாதவர்க ளெல்லாந் துதிக்காநின்ற நித்திய சீவன்முத்தித் தன்மையினையுடைய மார்க்கண்ட விருடியரானவ ருங்க ளரசாட்சியி னெழுந்தருளி வந்தா ரவரை யெதிர்ந் தர்க்கிய பாத்திய வாசமனீயங் கொடுத் தவரைத் தெண்டன் சமர்ப்பிக்காத சீற்றத்தினலே ஊழிகாலத் தக்கினியைப் போலச் சீறி உங்கள் பிரதாபமும் நற்குண நற்செய்கையுந் தத்துவ ஞானமு முங்களை விட்டு நீங்கும்படியாய்ச் சபித்தா ரென்று பின்னுங் கூறுகின்று ரரங்க நாயக ரென்றவாறு. 11

190. அசுர யோனியினி லான தம்பியுட
னவத ரித்திடுக வென்றதான்
மிசிர மாகவிரு வோரு நீவிர்கள்வி
ளங்கு காசிபர்க்கு தித்துநீ
ரசுரு வேதமுத னூலி னன்னெறியி
கழ்ந்து கக்குலிச சம்பர
வசுர ராகுமிகு வலியி னேடொருவ
ரெதிரி லாவரசை யாளுநாள்.

எ - து :—மறுபடியு மார்க்கண்டேயர் கூறுகின்றுருங்கள் சுபகர்ம தான தவ முதலான தெல்லா மழிவான பின்பு நீங்க ளசுர வுற்பவமா யிரண்டு பேரும் பிறக்கக் கடவீர்க ளென்று சபித்த படியினாலே நீங்கள் காசிப முனிவரது புத்திரரா யிரண்டாம் வேதமாகிய விதியை யெல்லா மிகழ்ந் தவைதிகராய்க் குலிசன் சம்பர னென்று கூறுகின்ற பெயர்களை யுடையவர்களாய்ப் பிறந்து ஒரு குடை நீழலிலே சக்கர நடாத்திய தலைவரா யெதிரிக ளில்லாம லண்ட ரண்ட பகிரண்டங்களை யெல்லா மரசாட்சி செய் தசுரக் கூட்டங்களைப் பெருக்கி வாழக்கடவீர்க ளென்றுர் மார்க்கண்டேய ரென்று ரரங்க நாயக ரென்றவாறு. 12

191. இந்தி ரன்றனைசெ யிக்க வெண்ணிமிக
வசுர சேனையுட னேகிமுன்
றந்த போரிலவ னும்பி யாருயிர்த
டிந்த வப்பெரிய கொடுமையாற்
றந்தி ரத்தினையு ருர்பு குத்திவிதி
தனைமு யன்றுதவ மகிமையா
னிந்த நற்புவியின் வந்து மாமகத
தேச நீலனருள் புத்ரனுய்.

எ - து :—திரிலோகாதிபதிகளா யரசாண்ட குலிசன் சம்பர னிரண்டு பேரு மந்திராலோசனை செய் திந்திரனைச் செயிக்க நினைத்துச் சம்பரா சுரனைக் குலிசன் நான்கு வகைச் சேனைகளுடனே யனுப்புவித்தா னவர்கள் பிரவேசித் திந்திர லோகத்தை வளைந்து யுத்தம் செய்யும்போது சயந்த மகாராசனுகிய விந்திர புத்திரனுலே ராக்ஷஸக் கூட்டங்களுடைய ரத கஜ துரக பதாதிக் கூட்டங்க ளெல்லாந் தூளி படலமா யழிந்துபோ யிந்திரனும் சம்பராசுரனு மனேக வண்ட ரண்ட பகிரண்டங்கள் சப்த சாகர தீவாந்தரங்கள் முதலாகிய லோகங்களெல்லாம் யுத்தஞ் செய் திந்திரனுலே கண்டிக்கப்பட்டா னதன் பின்பு தப்பிப் பிழைத்த நான்கு வகைச் சேனைகளு முறிந்து ஊர் வந்து சேர்ந்த விவரத்தைக் கேட்ட குலிசனுனவன் வெகுண்டு பிதாமகனைக் குறித்துத் தவம் செய் தவரது வர பாலனத்தினுலே யிந்த உலகத்தின் மகத தேசாதிபதி புத்திரனுய்ப் பிறந்தா னவன் பிதாவாகிய நீலனுனவன் சோடச மகாதானமும் வழங்கிக் களித்தா னென்றவாறு. 13

192. சோமு கப்பெயர்தொ டுத்து மாமகம
ழித்து தேவரைநெ ருக்கியு
மாம றைத்திறம ழித்த தானுனைய
டர்த்த டித்ததுவு மன்றியு
நீமு னேயெனது தித்த தானுனையு
நெடித்து வந்தனரி னக்குமே
லாம்வ ரத்தினைய ளித்து மென்றவுட
னடிப ணிந்தவனு மறைகுவான்.

எ - து:—அரங்க நாயகரானவர் மீட்டுங் கூறுகின்றார் மகததேசாதி பதியாகிய நீல மகாராசனானவன் தவத்தினாற் பிறந்த புத்திரனுக்கு அனேக தான தர்மங்கள் செய்து சோமுக னென்று பெயரிட்டா னவன் பொன் றொட்டிலிலே செல்வமாய் வளர்ந்தபின் பறுபத்து நான்கு வகையா யுள்ள வித்தைகளைக் கற்பித்த பின்பு மந்திராலோசனை செய்து தனது புத்திரனுக்குச் சுப முகூர்த்தத்திலே பட்டாபிடேகம் செய்தா னதன் பின் பனேக நாளாய்ச் சந்திர வட்டக் குடை நிழலிலே யிருந்து சக்கர நடாத்திய தலைவனைப் ராசரீகம் பண்ணுங் காலத்திலே தேவாதிகள் தன் தம்பியைக் கொன்ற விரோதத்தினாலே தேவேந்திரனையு மவன் புத்திரனாகிய சயந்தன் முதலாகிய பேர்க ளெல்லாரையு மொடுக்கத் தக்கதாக யூகித் தவர்களுக் காதரவாகியது வேத வேள்வி யென் றெண்ணி யந்தப் பதினென் வகையாகிய வேள்விகளை யெல்லாம் விரோதஞ் செய்து மந்த வேத வேள்விகளிலே யவிர்ப்பாகம் கொள்கின்ற தேவரை யெல்லா மொறுத்து மவர்களுக்குக் கியான உபதேசங்களைச் செய்கின்ற முனிவர்களை யெல்லா மலைபி னெற்றித் தொந்தரவு செய்தும் வைதிக விதிகளை யெல்லா மழிவு படுத்திய வபராத காரணத்தைக் குறித் துன்னை யெக்கிய வராகமாய் வந் துன துத்யான வனத்தை யெல்லா மழித்து மதிலினை யிடித்து உனது மந்திரிகள் முதலாகிய பேர்களை யெல்லாந் தண்டித்து உன்னைக் கண்டித்தோம் நீ முன்னே யென்னை யுபாசித்த காரணத்தினாலே மகிழ்ச்சியை யடைந் துனக்கு வேண்டிய மேலாகிய வரத்தினைக் கொடுக்க நினைத்தோ மென்றளவி லானந்த மகிழ்ச்சியை யடைந்து தெண்டன் சமர்ப்பித்து நமது சென்ம மான மரண வாதனை யொழிந் துய்ந்தோ மென் றளவிறந்த மகிழ்ச்சியை யடைந்து கூறுகின்றா னென்றவாறு. 14

193. அயனு மற்றவொரு சிவனு நிற்கபெரு
வகில முற்றுமறை சிரமுறும்
பயனு டைப்பொருளு மெவன வற்கபயம்
பரம வெற்கருள வேண்டுமோ
ருகம ளித்தருளு முலகு ளோர்கடொழு
கடவு ளாகுமுனைப் பெறுமெனக்
கயலில் வேறுமொரு பொருளி லாதுமன
மடிய னெம்பியுன தடிமையே.

எ - து:—இந்தப் பிரகாரம் நாராயண மூர்த்தியானவர் சோமுகனது மூன்று பிறப்பின் வரலாற்றைக் கூறக் கேட் டளவில் கியான மடைந்தவனு யவரைப் பார்த்துச் சில வுபசார வார்த்தை கூறுகின்றான் சுவாமி யயனாகிய பிரம்மாவும் சிவனும் நிற்கப் பெரிய திரிபுவன முழுதும் வேதாந்தத்தினும்

பொருந்திய பரப்பிரம்மப் பொருளவனே வவனுக்கு மற்றத் தேவரை நீக்கித் தெண்டன் சமர்ப்பிக்கின்றேனுகையினுலே சர்வ மங்கள நித்ய கல்யாண சாம்ராஜ்யத்தையுடைய வந்தனே யோக்யனே யென்னைக் குறித்து நீ ரனுக்கிரகிக்க வேண்டியது யுகங்கடோறு மிந்த வுயிர்களை யெல்லா முண்டுமிழ்ந் தளிக்காநின்ற வுனக் கபயமாகிய எங்க ளிருவருக்கு முமது திருவடி யல்லாமல் மற்றப் பொருள்களிற் பற்று நீங்கினேமூழி காலங்க ளெல்லா முமது பொன்னடிக் கமல நிழலிலே வாழக்கடவதாகிய நித்திய வரங்களைக் கொடுத்து ரக்ஷிக்க வேண்டு மனந்தனே முகுந்தனே கோவிந்தா வச்சுதா கேசவா நாராயணு வென்றவருடைய திருநாமதேயங்களை யெடுத்து வேதச் சுருதிகளாலே துதித் தாருகினு னென்றவாறு. 15

194. என்ற போதவனை வென்ற மாயவனி

ரங்க வாசவனி டித்துமுன்

பொன்று காலளவு மண்ட சத்துருவு

கொண்ட சம்பர னும் வந்திவ

ணொன்ற தானருளி நன்ற வர்க்குறுதி

யோதி யாதியுரு வம்முவந்

தென்று நீவிர்கள கன்றி டாதெனையி

ருத்தி ரென்றருள்செய் வேலையே.

எ-து:—இவ் விதமாகிய மாதுரியமாகிய நயகுண சாந்தத்துவ வார்த்தை யைக் கூறுகின்ற சோமுகனைக் கிருபா நோக்கத்தாற் பார்த்து நாராயண மூர்த்தியானவர் கூறுகின்றார் முற்காலத்திலே உன் றம்பியாகிய சம்பரா சுரனைவன் தேவேந்திரன் யுத்தத்திலே வச்சிராயுதத்தினுலே மடிந்த நாள் முத லின்றைய பரியந்த நான்கு வகைத் தோற்றங்களிலே யண்டச ரூப மாகிய பட்சி யுருவமாகிய வன்னமாய்ப் பறந்து வந்து இலக்குமியார் தீர்த்தத்தி னுபாசித்து நம்மைக் குறித்துத் தவம் செய்கின்று னவனை யழைப் பிக்கிறேம் பாரென்று கருணை செய் தருளினு ரப்போ தவனு மன்னவுருவ மாய்ப் பறந்து வந்தா னவனுக்குங் கருணை புரிந்து முன்னுருவமாய திவ்விய வுருவத்தைக் கொடுத் திரண்டு பேரையும் பார்த் தனுக்கிரகஞ் செய்கின்று ருங்களுக்குச் சாந்த தத்துவ ஞான மருளிச்செய்தோ மாகையினுலே மனு குலத்திற் பிறந்த வரசர்களே நீங்க ளிருவரு மிந்தத் திவ்விய உருவத்துடனே நித்ய சூரியர்களாய்ப் பரமபதத்திற் பரவாசுதேவனைச் சேவித் தானந்த வைப வத்தைப் பெறுமாறுபோ லிந்தத் தலத்திலே எனது சேவையைச் சேவித்துக் கொண்டு சீவன் முக்தர்களாய் நித்யரா யிருக்கக் கடவீர்க ளென் றனுக்கிரகஞ் செய்தருளினு ரரங்க நாயக ரென்றவாறு. 16

சோமுகன் சரணுகதி யடைந்த வத்தியாயம் முற்றிற்று.

# பன்னிரண்டாவது: சம்பரன் சரணாகதி யடைந்த வத்தியாயம்

195. வந்தபுகழ் சம்பரன்ம கிழ்ந்துதிரு மாலடிவ
ணங்கிதிசை யெட்டு மடியே
னிந்தபடி யென்றறிகி லேனுமது சிந்தைதனி
னெண்ணிவர மீய்க வெனவே
சுந்தரப ரம்பரன்வி மானமது தந்திடசெ
றிந்தனதி கழ்ந்த கதிர்போ
லிந்திரன்மி குந்தசபை வந்திடவ ணங்கினனி
சைந்தபுகழ் கொண்ட வரசன்.

எ - து:—நாராயண மூர்த்தியினது கிருபையினாலே திவ்யானந்த கல்யாண வுருவங் கொண்டு வராநின்ற புனித பவித்திரப் புகழ்ச்சியினை யுடைய ராச சேகரனாகிய சம்பரனானவன் மகிழ் சிறந்து திருமாலடியாகிய வுபய சரணாரவிந்தங்களை யட்டாங்க முதலாகிய வங்கங்களாலே தெண்டன் சமர்ப்பித்துக் கூறுகின்றான் எட்ட திசையினது வளங்களை யெல்லா மிந்தப்படி யென்று நானறியாத செய்கையினாலே யுமது திருவுளத்தி லெண்ணி யானந்த வதிசயத்தை யெல்லாம் பார்க்கும் பொருட்டாய் வர மீயக் கடவீ ரென்றளவின் சுந்தரத்தோடு கூடிய பரம்பரனாகிய வரங்க நாயக ரானவர் ஒரு தேசோமய காந்தியை யுடைய விமானத்தை யனுக்கிரஹித்தா ரதிலே யாரோகணிதமாய்க் கதிரினை விரித்து விளங்காநின்ற சூரியனைப்போல விந்திர மகாராசன் வீற்றிருக்காநின்ற சபையிலே வந்தா னப்போ தவ் விந்திர மகாராசனானவன் வணங்கி யெதிர்கொண் டழைத்துப் போக வுள்ளே பிரவேசித்தா னிசைவாகிய புகழ்ச்சியினைக் கொண்ட வரசனாகிய சம்பர னென்றவாறு. 1

196. அரம்பையர்கள் சூழ்ந்திடநல் லானினம வன்கருணை
யன்பினின டக்க மணியுந்
தரம்பயினி ரண்டுநிதி சார்ந்தவன தேவல்புரி
தன்மையினி னிற்க தவறு
துரம்பயினு கின்றதரு வேமுதல யாவுமொளி
துன்னுநிழல் செய்ய விமலம்
கரம்பயின்மு னிக்கணம தாசிகள்வ ழங்கிடக
ளித்தனன்வி மான மதனின்.

எ - து :—அந்தத் திவ்விய காந்தியையுடைய சம்பரனது விமானத்தைச் சூழ்ந் தரம்பா ஸ்திரீக ளானவர்கள் பரத விலக்கணப்படி நடிக்கவுங் காமதேனுன தவனது கருணை யன்பின் வழியிலே நிற்கவுஞ் சிந்தாமணி சங்க நிதி பதும நிதி முதலான தெல்லா மவனுடைய வேவற் பணிவிடைகளைச் செய்துகொண்டிருக்கவு மெப்பொழுதுந் தவறு படாத வலியினையுடைய சந்தான மரிசந்தனம் பாரிசாத மந்தாரங் கற்பக விருட்சமாகிய பஞ்ச தாருவும் புட்பங்களாலே திவ்விய பரிமளங்களை வீசி யொளியினைப் பரப்பாநின்ற நிழலினைச் செய்யவும் விமலமாகிய கரதல கமலங்களையுடைய முனிவர் கூட்டங்களானவ ராசிகள் வழங்கவுங் களித்து வீற்றிருந்தான் விமான சேகரனுய சம்பர னென்றவாறு. 2

197. கண்டரச னேடுபுகழ் கொண்டமுனி வோர்திகழ
கந்திருவ ரோடு கடுகி
வன்றிறல கண்டதிசை சென்றுகளி கொண்டுமிகு
வண்மையினி னின்று மெழில்சேர்
தென்றிசைதி கழ்ந்தநகர் கண்டுவரு கின்றவழி
சென்றிடபெ ருங்க னலதாய்
நின்றதொரு பால்வரைநி கழ்ந்ததொரு பால்வசிய
டைந்ததொரு பானி கழுவே.

எ - து :—இந்திர லோக வளங்களை யெல்லாம் கண் டவரால் வழிபாடுகள் செய்யப்பெற்று மன மகிழ்ச்சி யடைந்த வரசனுடனே புகழ்ச்சியினையுடைய வேகதண்ட சந்நியாசி திரிதண்ட சந்நியாசிக ளெல்லா மவனது விமானத்தி னிவர்ந்து வரவுங் கந்திருவர் முதலாகிய பேர்க ளெல்லாம் விமானத்தைச் சூழ்ந்து வரவும் வலிய திறலினுல் கண்டிராநின்ற திசைகளாகிய வக்கினி லோகம் வருண லோகம் வாயு லோகங் குபேர லோக நிருதி லோக மீசானிய லோக முதலாகிய வுலகங்களிற் சென் றவரவர்கள் வழிபாடு செய்யப்பெற் றந்த வளங்களை யெல்லாங் கண்டு மகிழ் சிறந்தவனுய் மிகுத்த வண்மையி னின்று பார்த்தபின் பந்தத் திசைகளை யெல்லாம் விட்டு நீங்கி யெழிலாகிய சிங்கார வளங்களானது செறிந்திராநின்ற தென்றிசை யாகிய தர்மராசன் புரியைக் கண்டு வரும்படியாகிய வழியிலே யக்கினி மயமாய்ச் சொலிக்கா நின்ற தொரு பக்க மலையாகிய வழியிலே பருக்காங் கல்லுகள் முதலானது பரந் திருந்தா லெத் தன்மையோ வப்படிப் போன்ற தொரு பக்கம் வசிகளை யனேகமாய் நட்டிருப்ப தொரு பக்கத்தி னென்றவாறு. 3

198. ஈயமழை பெய்யவனல் காயகழு முள்ளுகளி
முத்துடல்கி ழித்த ருதிரம்
பாயதசை யுண்டநரி கால்களைபி டித்துடல்க
டித்துடனி ழுத்து பலவாய்
சாயதலை கீழுடல்கள் வேறுபட நாய்கள்பல
சாரிகைதி ரிந்து குடர்கள்
வாய்களில்க டித்துபெரு வோலமிட சூலமொடு
தூதர்கள்வ தைக்க வரசன்.

எ - து :—சில விடங்களி னீய மழையினைக் காய்ச்சிப் பெய்யவு மக்கினியைக் காய்கின்ற கழு முள்ளுகளாலே உடலிலே இழுக்க வந்த வுடலங்களானது கிழிந்து உதிரங்களைப் பாய வவரது தசைகளை யுண்டு நரிக்கணங்க ளானது கால்களைப் பிடித் திழுத் துடலைக் கடித் துடனே யிழுக்காநின்ற பிரேதங்களானது பலவானது சாயவுந் தலையானது கீழா யுடலானது வேறுபட்டுப் போக நாய்களானது பல சாரிகையாகத் திரிந் தவரது குடர்களை வாய்களினாலே கவ்விக் கடித்துத் திரியப் பெரிய வோலமிட் டலறத் தூதர்கள் முதலாகிய தண்டத் தலைவர்களானவ ரிப்படியாய்த் தண்டித்துத் திரியக் கண்டா னரச னென்றவாறு. 4

199. கண்டுமிகு துன்பமது கொண்டுவரு காலையில்க
ழித்தமகிழ் சோலை வனமாஞ்
சென்றுகமழ் கின்றபுகழ் தென்றல்கள்க விந்திடசெ
றிந்தபனி நீர்கள் பரவ
வுண்டுமகிழ் வாய்களிகள் கொண்டுவெதிர் சென்றிடவு
வந்திரத யானை மிசைய
சென்றுவரு வோர்சிலர்சி றந்தபரி மேல்சிலர்வி
மானமதில் சென்ற சிலபேர்.

எ - து :—இப்படி யநேகம் பாவிகளான பேர்களை யெமனுடைய தண்டத் தலைவர்கள் வதை புரிகின்ற தன்மையினைக் கண்ட ராச சேகர னாகிய சம்பரனானவன் கண்டு மிகு துன்பத்தை யடைந்தவனா யதைப் பார்க்கச் சகியாம லப்பாற் போகும்போது பாரித்திராநின்ற மகிழமரச் சோலைகளானது வாரணியம் போலத் தழைத்துப் பரிமளங்களோடு நிழலைச் செய்ய வதிலே தென்றற் காற்றானது பிரவேசித்துக் கமழ்ந்து கவிய வந்த வன நடுப் பிரதேசத்தின் சிங்காதனங்களிலே சில புண்யவா னிருந்து பன்னீர்களைத் தூவி யனேகம் பேர் வழிபாடுகள் செய்ய வந்த உபசாரங்களைப் பெற்றுத் தேவ ரமுதத்தை யுண்டு மகிழ்ச்சியினாலே

களிப்பைக் கொண்டவர்களா யிருப்பார்க ளவர்களைக் காணத் தக்கதாக வனேகம் பேர்கள் ரதாரூடராய் வருவார்க ளனேகம் பேர்கள் யானை, பரி, விமானத்தின் பேரில் வருவார்க ளிதை யெல்லாங் கண் டின்புற்றான் சம்பர னென்னு மரசபிரா னென்றவாறு. 5

200. இவ்வகைய றிந்தவசு ரேசன்மதி சூழ்புவன
மேகியம லோக மியல்சே
ரவ்வகைக றுத்தவிரு ளார்ந்தநர கத்திடைய
டைந்தவுயிர் கோடி களெலாம்
பவ்வமத யானைகள்து வைக்கவெம தூதர்கள்ப
தைத்துயிர்வ தைக்க பலபேய்
கவ்வபுழு வவ்வவிரு கண்களனல் பாயவுடல்
கண்டமொடு துண்ட மிடுவார்.

எ – து :—இவ்விதமாகிய புண்ணியர்களை யெல்லாம் பார்த்து மகிழ் சிறந்த வசுர ராசனனவ னப்பாற் போகும்போது சந்திரன் சூழ்ந்து வருகின்ற மற்றொரு புவனத்திலே போ யந்த வெம லோகத்தினுடைய வியல்பானது சேர்ந்த விடத்திலே பார்க்கும்போது கறுத்த விருள் கூட்டச் சமூகங்களுக் கெல்லா மிருப்பிடமா யிருக்கின்றது வந்த நரக லோகத்திலே வாசம் பண்ணுகின்ற வுயிர்த் தொகைகளானது என்ன பாடு படுகிறதென்றால் கருங் கடலினைப் போன்ற கர்ணமதங் கபோல மதம் பீச மதங்களைப் பொழிகின்ற யானையைவிட் டதன் காலினாலே யிடற வனேகம் பெயரை வதை செய்வார்கள் மறுபடியு மந்த வெம தூதர்க ளுடலமானது பதைபதைத் துயிரானது நடுங்கும்படியாய்ப் பல பேய்களை விட்டுச் சதைகளைப் பிடுங்கித் தின்னவும் புழுக்களானது திணங்களைத் தெவிட்ட வுண்டு சொரியவுஞ் செய்தது மல்லாம லிரண்டு கண்களு மக்கினியைச் சொலிக்கக் கோபித்து உடலினை யெல்லாங் கண்ட கோடாலிகளாலே கண்ட துண்டப்படுத்துவார்க ளென்றவாறு. 6

201. சூலமதில் குத்தியுடல் வேகவனல் கொப்பறையில்
சுற்றினுமி தந்த வுயிர்கள்
வேல்கொடுவ தைத்துகழு வாணியினி ருத்திபெரு
வேதனையி யற்ற வவர்கள்
வாலியபு ழுக்கள்சட மீதினில்செ னித்துவழி
கின்றனவ ருங்கு ருதியால்
காலனைநி னைத்துமுறை யோதபெரு வோதைகள்க
டற்கரைபு ரண்ட தெனவே.

எ - து :—மீட்டு மந்த வெம படர்களானவர்கள் பாபிகளை யெல்லாஞ் சூலங்களாலே குத்தி வதையினைப் புரிந்து மக்கினியைப் பொங்காநின்ற கொப்பறையிலே சில பாவிகளைப் போட் டிரும்பினுலே சுற்றிச் சுழன்றிட வதைத்து மிதந்த வுயிர்களை யெல்லா மதிலே வமுக்கியும் வேலாயுதங்களைக் கொண்டு பல பேர்கள் மார்பினைப் பிளந்து வதைபுரிந்துங் கழுவாணிகளிலே பந்தி பந்தியாய் நிறுத்திப் பெருத்த வேதனையாகிய கோர தண்டங்களைப் புரியவும் சில பேர்களினுடைய வுடலான தழிய வதினின்றும் புழுக்களானது சொரியவுஞ் சில பேர்கள் கண்டிக்கப்பட்ட வுடலினின்று மிரத்த வெள்ளங்கள் பெருகச் சகியாதவர்களாய்த் தர்மராசனை நினைத்துத் தங்கள் துன்பத்தினது முறைமையினைக் கூறிக் கடலினைப் போலக் கதறிப் புரண்டார்க ளதையும் கண்டான் சம்பர னென்றவாறு. 7

202. பேய்களொரு கோடிகள்பு ழுக்களொரு கோடிகள்பெ
 ருத்தநர கக்குழி யின்வாய்
 நாய்களொரு கோடிரண பூதமொரு கோடிகனல்
 தூண்களொரு கோடி நணுகுங்
 காயுமழல் கொப்பறையி னீயமதில் கொண்டுகொதி
 யுங்கதிர்கள் மண்ட லமெலாஞ்
 சாயவதை கண்டுருகி மேகமத னுல்கருகி
 சாய்வதொரு பால்ச ருகுபோல்.

எ - து :—அந்த விருண்ட நரகக் குழியிலே பேய்களான தொரு கோடிகளான திருக்கு மதுவன்றியும் புழுக்களான தொரு கோடி செனித் திருக்கும் நாய்களான தொரு கோடிகளானது கோர ரூபத்துடனே விளங்குந் தசைகளைத் தின்று வுடல் பருத்திராநின்ற பூதக் கூட்டங்க ளானது வக்ர தந்த பந்திகளுடன் கூடி யொரு கோடிகளான தட்டகாசம் பண்ணிக்கொண்டிருக்கு மழலைச் சொலிக்காநின்ற வக்கினித் தூண்களான தொரு கோடிகள் பந்தியாய் நிறுத்தி யிருக்குங் காயும்படியாகிய வக்கினியை யுடைய கொப்பறைகளிலே யீயங்களை யுருகச் செய்வார்க ளது கொதிக் கின்ற வக்கினியும் புகையுஞ் சூரிய வுலகத்தைத் தகித்துச் சாய்ந்து போகவு மதைக் கண்ட சப்த மேகங்களும் கண் டுருகியதனுலே கருகித் தாழ்ந் துதிர்ந் தக்கினி பட்ட சருகுபோல் தனது குணமாகிய தீரப் பசுமை குன்றிப் போகு மென்றவாறு. 8

203. வாள்கொடுவ தைத்துவளர் தேள்கொடுக டித்துமணி
மார்பினையு டைத்து வருவோர்
தாள்கொடுது வைத்துபெரு வாலையின ரைத்துதசை
போர்படகு வித்து தணியாக்
கோளகைவெ டிக்கமொழி வார்கள்ளம தூதர்கொடு
பாவிகள்ப தைக்க பலபேர்
நாள்தொறும்வ தைத்தவர்கள் சேதியையு ரைக்கநம
னுரைதுகு றிக்க வருவார்.

எ – து :—மீட்டு மந்த வெம தூதர்களானவர்கள் வாளினைக் கொண்டு சதைகளைக் கழிப்பார்க ளதுவன்றியும் பல பேர்களைத் தேள் முதலிய கொடூர சாதிகளைக் கொண்டு கடிக்க விடுவார்கள் வயிரத்தினை யொத்த மார்புகளை யுடைப்பார்க ளதுவன்றியும் வருகின்ற பாவிக ளுடைய விரண்டு கால்களையும் பிடித்துக் கைகளாலே கரகரவென்று சுழற்றி யெறிவார்கள் பெருத்திராநின்ற செக்கேந்திரங்களி லனேகம் பேரையிட் டாலைக் கரும்பினைப்போ லாட்டுவார்கள் தசைகளைப் பல பேர்களைத் தடிந்து போராய் மலையாய்க் குவிப்பார்க ளதிலேயுங் கோப மாறுதவர்களா யண்ட கோளகை யெல்லாம் படீரென்று வெடிக்கத் தக்கதாய்க் கொடூர மொழியி லார்ப்பரிப்பார்கள் மீட்டு மந்த வெம தூதர்களான கொடும்பாவியர்க ளானவர்கள் கோபாக்கினியைப் பொழிந்து பல பேர்களை நாடோறும் வதைத் தந்தப் பாவியர்களைத் தாங்கள் தண்டித் தவர்கள் சேதியினைச் சொல்ல வெமனுனவன் சித்திரனு முத்திரனுமாகிய விரண்டு பேருடனே யவரவர்கள் நாடோறுஞ் செய்த பாபத்தைக் குறித்துத் தண்டத் தலைவர் செய்த காரியங்களை யெல்லாங் கணக்கின்படி குறிக்க வந்து விசாரணை செய்ய வருவார்க ளென்றவாறு. 9

204. தந்தையொடு தாய்குருவி னிந்தனைசெய் வோர்கள்பர
தாரமதை தன்ம னதினிற்
சிந்தனைசெய் வோர்கொலைக டமைகள்செய் வோர்சிசுவின்
வஞ்சனைசெய் வோர்கள் சிலராஞ்
சந்ததமு வந்தபெரி யோர்களைத லங்களைத
வங்களையி கழ்ந்த சதியோர்
வந்திடுவ ழக்கினைவ ழக்கழிவு கூறிமனம்
வாதைபட வேறு மொழிவோர்.

எ - து :—தன்னைப் பெற்றுச் சரீர சவரட்சணை செய்த தந்தை தாயினையு மான்மாவினைப் புனித பவித்திரமா யருள் கூர்ந்து செய்யா நின்ற வாசாரியனையு நிந்தனை செய்கின்ற கொடிய பாவியர்களும் பரதாரத்தை விரும்பித் தமது மனதி னினைக்கின்றது செய்த செய்கையோ டொத்ததாகலி னந்தப் பாவியர்களுங் கொலை களவுகள் முதலாகியதை விரும்புகின்ற பாவியர்களுங் கருவி னுற்ற சிசுவினை யழித்த கொடிய பாவியர்களு மெப்பொழுதும் வருகின்ற பெரியோர்களாகிய பாகவதர்களை யிகழ்ந்த பாவியர்களு மகா பாதகத்தை யெல்லா நீக்கி யருள் சுரக்கா நின்ற தலங்களை யிகழ்ந்த நீசர்களும் யோகிகளையுந் தவத்தினர்களையு மிகழ்தலாகிய சதி செய்கின்ற விழிஞர்களுந் தங்களை யடுத்துக் கூறுகின்ற கடன் வாங்கல் முதலாகிய பதினெட்டுப் பிரிவினாலே வருகின்ற வழக்குகளை முறை பிறழக் கூறி ஞாய முள்ளவன் மன நொந் துருகித் திகிலிட்டுக் கண்ணீர் பெருகத் தக்கதாகச் செய்த பாவியர்களு மனேகமாகிய தண்டத் தலைவர்களால் தண்டனைக் குட்பட்டுச் சித்திரவதையாக வருந்து வார்க ளென்றவாறு. 10

205. பாசமதில் கட்டிகனல் தூணினிலணைத்துபரி
வின்றிவதைக் கின்ற பலபேர்
தேசமதின் மாறுபடு தீவினைகள் செய்பவர்செ
னித்தவர்த மக்கு தவிலார்
வாசமிகு சோலைகள ழிப்பவர்கொ டுப்பவரை
மாசுதிகழ் நிந்தனைசெய்வோர்
பேசரிய வேதனையில் தண்டனைசெய் வார்களென
கந்திருவர் பேச வரசன்.

எ - து :—எம பாசத்தா லனேகம் பாவியர்களைக் கட்டி யக்கினி மயமாய்ச் சொலிக்காநின்ற தூண்களிலே யணைத்துத் தாட்சண்ணிய மில்லாமல் தண்டத் தலைவரால் வதைக்கின்றவர்களு மிந்தத் தேசத்தி னிருக்கின்ற பல வித வர்ணங்களுக்கு மாறுபட்ட செய்கையைச் செய்கின்ற பேர்களுந் தன் னுடன்பிறந்த பேர்களுக்குக் கொடாம லுண்ணு கின்ற துரோகிகளுந் திவ்விய பரிமளங்களைக் கமழாநின்ற பூசைக் கருக மாகிய நந்தன வனச் சோலைகளை யழிக்காநின்ற துட்டர்களுந் தனக் கிடுக்கணாகிய காலங்களிலே யுதவி செய்கின்ற நன்கினை யறியாது புறம்பிலே யிகழ்ந்து கூறிய கொடியர்களு மிந்த நரகாக்கினியி னாழ்ந்து தண்டத் தலைவர்களால் சொல்லுதற் கரிதாகிய துன்பங்களை யனுபவிக் கின்றார்க ளவர்களி லின்னா ரின்னா ரென்று காந்திருவர் பகுத்துக் கூறக் கேட்டறிந்த ராசசூடாமணியாய் விமானத்தி னுரோகணிதமா யெழுந்தருளிய சம்பர னிரங்கினா னிந்த வேதனையைப் பார்க்கச் சகியாதவனா யென்றவாறு. 11

206. சென்றவுல கத்திடைசெ னித்திடும காரவுர
வாதிமுத லாக சிலர்சூழ்
கின்றநர கத்திடையு தித்திடுபு ழுக்கள்மச
கத்தொடும திற்றி கழவே
நண்டுபெரு வாமையொடு வட்டைகள்க டித்திடந
லிந்தவுயிர் கோடி களெலாங்
கண்டுமனம் விண்டுவரி யென்றுவிரு கண்கள்புனல்
கான்றிடக லங்கி யரசன்.

எ - து :—தான் போகாநின்ற வுலகமாகிய வெம புரியிலே செனித்திராநின்ற மகா ரவுரவாதி முதலாகிய நரகத்திலே சில பேர்கள் சூழ்ந்திருக்காநின்ற புழுக்கள் கொசுக்களு முண்டாக நண்டுகள் பெருத்த வாமைகள் அட்டைக ளிது முதலான தெல்லா மந்தப் பாவிகளையெல்லாங் கடித்திட வதனாலே நலிந்திடும்படியாகிய வுயிர்க்கோடிகளையெல்லாஞ் சம்பர னென்கின்ற வசுர சூடாமணி யானவன் பார்த்த மாத்திரத்திலே யுளங் குலைந்து கண்ணையுங் காதினையு மூடிக்கொண்டரிகரி யென்று கண்ணீர் விட்டுப் பிரலாபித்தா னென்றவாறு. 12

207. நரகமிரு பத்தெட்டு கோடியின்வ தைந்திடந
லிந்துமனம் விண்டு நமனால்
பரவியவு யிர்த்தொகைப தைத்துமுறை யோதவரி
பாதமலர் தன்னை மனதின்
றிரமுடனி னைந்துருகி யேதிகழி லக்குமியின்
றீர்த்தபல மூன்று திவசம்
வரமதுவ ளித்திடம கிழ்ந்தனர்கள் சுவர்க்கவுரு
வந்திடம தித்த வரசன்.

எ - து :—நரகத்தினது தொகையான இருபத்தெட்டுக் கோடியாமதிலே வதைந்து நலிகின்ற வுயிர்க் கோடிகளானது வந்த காரணங்களெல்லாங் கலங்கிட ஒடுங்கித் தத்தங் குறையினது வதையாகிய முறையினை யெல்லா மரசனாகிய சம்பரனுடனே சொல்லி யழ வப்போதரிதாகிய நாராயண மூர்த்தியினது பாத கமலத்தினை மனத்தி னுபாசித்துத் திரமதாய் நினைந் துருகின மாத்திரத்திலே யாண்டவனானவ ரிவ னன்புக்கிரங்கினபடியினாலே ஒரு யூக புத்தியினால் நரக வேதனை படுகின்ற சகல வாத்ம கோடிகளை யெல்லாம் பார்த்துக் கூறுகின்றார் நமர்களே கேட்பீராக நா னன்ன ரூபமாய்க் கோலாசல கிரியிலே புண்ணிய தீர்த்தமாயிலகாநின்ற ஸ்ரீமகா லட்சுமி தீர்த்தத்திலே மூழ்கித் தவம் செய்கின்ற

மூன்று நாளைய பலன்களை நீங்கள் புனித பவித்திர மாகும்பொருட்டு உங்களைக் குறித்துத் தந்தோ மென்று னிந்தப் பிரகாரமா யரசன் கொடுத்த வர பாலனத்தினுலே யந்த நரக வேதனை யெல்லாந் தீர்ந்தவர்களுக்கெல்லாந் தேவ ரூபமானது வந்து வாய்த்ததைக் கண்ட வரசனுனவன் மகிழ்ச்சியை யடைந்தா னென்றவாறு. 13

208. கரந்தனை[1]கு வித்திருவ ரங்கனைது தித்திடர்செய்
காலனைக டந்து கதிசேர்
திரங்கமழ்பெ ரும்புகழ்சி றந்ததிரு நாமமுரை
செய்திடதி ருக்க ருணையால்
சிரந்தனில்வ ணங்கிவதி கின்றவுயிர் கோடிகடி
கழ்ந்தனர்கள் சொர்க்க மதனின்
பரந்தவெம தூதர்கள்சி றந்தரச னேடுமுரை
செய்திடப தைத்து மொழிவான்.

எ - து :—இவ்விதமாய் நரக வேதனைப்பட்ட வுயிர்த் தொகையெலாந் தேவ ரூபத்தினை யடைந்த மாதகிரந்தி னதைக் கண்ட ராசகண்டீரவ னுகிய சம்பரனுனவன் சிரசின்மேலே கராம்புய மலரைக் குவித்துத் திருவரங்க நாயகருடைய சகல திருநாமங்களையும் துதிசெய் தவருடைய வனந்த நித்ய பவித்திரமாகிய கல்யாண குணங்களைப் புகழ்ந்து தேவ ரூபமாகிய வான்ம வர்க்கங்க ளெல்லா மீட்டு மந்தகனுல் கடியப்படாமல் திரமாகிய மோட்சங்களைச் சந்தேக மில்லாமல் அடையத் தக்கதாகக் கருணையினுலே சம்பரனுனவ னந்தக கர்த்தாவின தாயிர நாமங்களையுந் துதித்தா னப்போ தந்த உயிர்க் கோடிக ளெல்லா மிவர் செய் நன்றியை நினைந் தவ் வரசனைச் சிரத்தாற் பணிந்து மனத்தா னுபாசித்தார்க ளப்பொழுதே விமான சேகரராகிச் சுவர்க்க லோகத்திற் சிறந்து வீற்றிருந்தார்க ளிந்தச் சேதியைத் தூதர்களானவர்க ளறிவிக்கக் கேட்ட தர்மராச னம தாக்கினை நன்று யிருந்த தென்று பதைபதைத்தா னென்றவாறு. 14

209. வியாதிகள னைத்தையும்வி ளித்திடந டந்தனவி
யப்பொடும கிழ்ந்த றைகுவான்
றயாநிதிபெ ரும்புகழு ரைத்திடினு மாறுபட
தாக்குவது வீர மெனவே
சராசரம திற்புகழு மெண்டிசைய கண்டவுல
கேழுமெம னுல்த ழலதாய்த்
தராதலம திர்ந்திடவெ ழுந்தனன டந்தமயி
டம்பெருத னித்த வரைபோல்.

[1] குவித்து திரு என்பன குவித்திரு என ஆயின.

எ - து :—இவ் விதமாகக் கோபித் தெழுந்த தர்மராசனனவன் வியாதிக் கூட்டங்களாகிய நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டினையும் வரவழைத்திட நடந்து வந்ததனைப் பார்த்துச் சந்தோஷித்தவனு யொரு வார்த்தை கூறுகின்றான் றயாநிதியாகிய வரங்க நாயகருடைய பெரிய நாமதேயப் புகழினைச் சம்பரனனவன் கூறி நரகான்மாக்களை யெல்லாஞ் சுவர்க்க லோகாதிபதிகளாகிய தேவர்களாய்ச் செய்தாலு மதை யெல்லா மாறுபடச் செய்து நாந் தாக்குவது வீரமே யல்லது ஞாயத்தை விட்டு விடுகிறது தர்ம மல்ல வென்று சராசரங்க ளெல்லாம் புகழும்படியாகிய வெட்டுத் திக்கு மெமனுடைய கோபாக்கினியினாலே யக்கினிப் பிரவேச மாகத் தக்கதாக விந்த வுலகெல்லாங் கிடுகிடென்று நடுங்கத் தக்கதாக வெழுந்தா னப்பொழுது மயிடமானது நீலகிரி பருவதம் போல வந்து நின்ற தென்றவாறு. 15

210. தண்டமழு சூலமரி கண்டமெம பாசமது
கொண்டுதண லாகி வருவோ
ரண்டமுந டுங்கதிசை யானைகுரு திச்சொரிய
வகிலவுல கெங்கு மசைய
நின்றபெரு சேனையொடு சென்றவெம னின்றிடநி
லைத்திலக ளைத்த மயிடங்
கண்டனன்வெ யர்த்தன னு யிர்த்தனன்க ளித்திடுநல்
சம்பரனைக் கண்டு மொழிவான்.

எ - து :—மயிட வாகனமானது வந்து நின்ற மாத்திரத்தி லதன்மே லேறித் தண்டாயுதமுங் கண்ட கோடாலியுஞ் சூலாயுதமு மரிகண்டமு மெமபாசமுந் தாங்கிய கையினை யுடையவனுய்க் கடல்க ளெல்லாம் வெம்பப்பட்டு நீர் சுருங்கவு மண்டரண்ட பகிரண்டங்க ளெல்லா நடுங்கவு மட்ட திக்கினைச் சுமக்காநின்ற யானைகளான திரத்தங்களைக் கக்கவு மிந்த வுலக முதலாகிய வுலக மெல்லா மசையவுந் தன்னருகே நிற்கின்ற பெருஞ் சேனையுடனே வந்து விமான சேகரனுகிய வரசனைக் கண்டா னப்போது மயிட வாகனமானது கால் தளர்ந்து நிலை யழிந்து வலி குன்றிப் போச்சு தனதக் கண்ட தர்மராச னனவ னதிசயப்பட்டு வெயர்வை யரும்பப் பெருமூச்சு விட்டுச் சந்தோடப்பட் டிருக்கின்ற சம்பரனைக் கண்டு கூறுகின்றா னென்றவாறு. 16

211. ஆதிபர னேவலடி யேன்புரித லானுலகி
னன்பொடுவ ரங்க னருள்சேர்
நீதிநெறி யோரையொரு போதுமெம வாதனைநி
கழ்த்திடுவ னேகொ டியராய்
வேதனைசெய் வோர்கள்தமை வாதனைசெய் தேநரகின்
வெம்பிடவ டைத்த வுயிர்கள்
சோதிதிரு நாமமுறை யோதிடவ டைந்தனர்கள்
செய்வதென யான ருளுவீர்.

எ - து :—அந்தச் சம்பர மகாராசனைப் பார்த் தெம தர்ம ராசனானவன் கூறுகின்றான் முத்திக்கு வித்தாகிய சத்தியனே யாதி பரனாகிய வரங்க நாயகருடைய வேவற் பணிவிடைகளே யான் செய்கின்ற தொழிலானதை யடியேன் செய்தலினாலே யவ் வரங்கனது வருள் சுரந்து கருணை புரிகின்ற நீதி நெறியோராகிய பரம பவித்திர நித்ய கல்யாண குணங்களை யுடைய பாகவதர்களைக் கண்டால் தெண்டன் சமர்ப்பித் தவர்களை யொருக்காலு மெம வாதனையிலே தண்டிப்பனோ பாவியர்களைப் போலத் துர்க் கர்மங்களைச் செய்ததனாலே விர்த்திக்கின்ற சண்டாளர்களை யெல்லா நரக வாதனையிலே யனுபவிக்கச் செய்வே னந்த நரகத்திலே வேதனை யடைகின்ற உயிர்களானவைக ளெல்லா நீர் சோதியாகிய நாராயண மூர்த்தியினது திருநாம மந்திரங்களை யிடைவிடா துபாசித்த படியினாலே விமான சேகரராய்ச் சுவர்க்க லோகத்தைத் தேவ ரூபங் கொண் டடைந்தார்க ளாகையினாலே யிந்த வெமபுரியி னிருந் தியா னென் செய்யக் கடவே னெனக் கொரு வாக்கியாபனங் கூற வேண்டுந் தேவரீ ரென்றான் தர்ம னென்றவாறு. 17

212. என்றுபுகழ் கின்றவெம ராச னுரை கேட்டரச
னேகவிரு வோரு மகிழ்வாய்ச்
சென்றுதிகழ் சொர்க்கமதை கண்டவர்கள்
போகமது துய்த்தனர ரங்க னருளால்
அன்றுநெடு மால்கமல வுந்தியினு தித்தவய
னடியிணைப ணிந்து வருள்சேர்
நின்றுதிகழ் கோலவரை சென்றுதிரு மாலடிய
டைந்தனனி கழ்ந்த வருளால்.

எ - து :—இத் தன்மையனவாய்ப் புகழ்ந்து கூறுகின்ற வெம தர்ம ராசனது வார்த்தையைக் கேட் டிதுவு மவ் வரங்க நாயகர் திருவரு ளன்றி யெமது செய்கையா னடந்த காரண மென்று தேவரீர்க்குத்

தெரியாதோ வாகையால் யாவர் செய்ய வேண்டியது நன்கினையே யொழிய வேண்டியது தீவினையே யாகையா லவர்களை யெல்லாம் பார்ப்போர் தர்ம ராசனை யென்னுடனே யெழுந்தருளுவீ ரென் றவனை யொருமைப்படுத்தி யிருவரு மகிழ் சிறந்தவர்களா யனேக வழியினைக் கடந்துபோய்ப் பிரகாசியா நின்ற சொர்க்க லோகத்தின்கண் விமான சேகரரா யரம்பையர்க ளூழிப் பணிவிடைகள் செய்யப் பிரதம யாழினை மீட்டிக் காந்திருவர்க ளானவர்க ளிசை யிலக்கணப்படி மந்தார முதலாகிய புட்பங்களை மாரியாகத் தேவ கூட்டங்கள் சொரிந்து வாழ்த்தத் தக்கதாகிய போகத்தை யரங்க நாயக ரருளினாலே யனுபவிப்பவர்களை யிருவரும் பார்த்து முகமலர்ச்சி யடைந் தந்தப் போகபூமியினைக் கடந்து பூர்வ காலத்திலே கேசவன துந்திக் கமலத்திற் றிருவவதாரஞ் செய்தருளிய பிதாமக னுலகமாகிய மனோவதி நகரிற் புகுந் தவரது பாத பங்கயங்களைப் பணிந் தவர் கிருபையைப் பெற் றெமனுடனே யிவ் வுலகத்தின்கண் பவித்திரமாய் விளங்காநின்ற கோலாசலத்தின் வந்தபின் பவரது திருவடி நிழலிலே கலந் தின்பத்தை யடைந்தா னென்றவாறு. 18

213. திருவுமா மணியு மாரமு மணிந்து
செய்யதா மரைபல பூத்து
மருவிய சங்குந் திகிரியு மணிந்து
மலரடி யினினதி பெருக
வொருவராற் கீர்த்தி யியம்புதற் கரிய
வோங்கிய புகழையா ருரைப்பா
ரரிதிரு நாம முரைத்திட நரகோ
ரடைந்தனர் சுவர்க்கமென் றுரைத்தான்.

எ - து:—ஸ்ரீமகாலக்ஷ்மி தேவியும் கவுத்துவாபரணமு மார்பகத்தின் கண் ணலங்காரமாய்ப் புனைந்து செந்தாமரைக் கமலங்களை யவய வாதிகளாய்த் தாங்கியும் பொருந்துகின்ற சங்கமுஞ் சக்கரத்தினையும் புயவரையிற் றாங்கியுந் திவ்விய சரணார விந்தங்களில் வராகநதி பெருக் கெடுத்துப் புனித பவித்திரமா யோடவு மொருவராலுங் கீர்த்தியினைக் கூறுதற் கரியனவாகிய மேற்பட்ட புகழினை யாவராலுஞ் சொல்லுதற் கரியனவா மித் தன்மைத்தாகிய வரியினது திருநாமத்தைக் கூறின மாத்திரத்தி னரகின்கண் ணிழிவை யடைகின்ற வான்ம வர்க்கங்க ளெல்லாஞ் சுவர்க்காதி லோகத்தை யடைந்தார்க ளென்றார் சூத முனிவ ரென்றவாறு. 19

சம்பரன் சரணகதி யடைந்த வத்தியாயம் முற்றிற்று.

# பதின்மூன்றாவது: மார்க்கண்டேயர் சரணாகதி யடைந்த வத்தியாயம்

214. மலரி னூர்பிரமர் முதல வண்டமும
ளித்த ழிக்குமொரு பரமனா
ருலேவி லாவுதர மூட னைத்தையுமு
வந்து கண்டமார்க் கண்டனார்
விலையி லாதசெப மாலை குண்டிகைவி
ளங்கு நன் னுதலில் புண்டர
மலைவி லாதபிர ணவமு நாவினினு
ரைத்து வந்தவண்ம தித்தனன்.

எ - து:—தாமரை மலரிலே நிறைந்து வாசம் பண்ணுகின்ற பிதாமகன் முதலாகிய வண்டங்களை யுண்டாக்கி ரக்ஷித்து மீட்டுந் தன்னுள்ளொடுக்கிய வொப்பற்ற பரப் பிரம்மமானவருடைய மணி வயிற்றிலே திரிபுவன சராசரங்களுங் கண் டதிசயித்த மார்க்கண்ட விருடியானவர் விலைமதிக்கக் கூடாததாகிய செப மாலிகையுங் குண்டிகையாகிய கமண்டலமும் பிரகாசிக்காநின்ற நெற்றியிற் றரித்த திரிபுண்டரமு மொரு காலத்தும் லயமிலாத மந்திர சாலங்களுக் கெல்லா முயிராகிய பிரணவமாகிய மகா மந்திரத்தை யுச்சரிக்காநின்ற மணி நாவுடனே வந்து மதித்துப் பார்த் தநந்த வைபவத்தை யடைந்தா ரென்றவாறு. 1

215. வந்த மாதவ னு முந்து பேருவகை
யுந்த மாதவன டித்தலஞ்
சொந்த மாமெனவி ழுந்தெ ழுந் துதொழு
தோறு மாவுவகை தாண்டவு
மெந்தை யேயடிய னுய்ந்த நாளிதுவெ
லென்று கண்களினி ரும்புனற்
சிந்த மெய்ப்புளக னந்த மேறவிவை
செப்பி நற்புகழ்ந் திப்பனால்.

எ - து:—இத் தன்மைமத்தாய் வந்தருளிய மகா தவ சிரேட்ட புனித பவித்திரனாகிய மார்க்கண்ட முனிவரானவர் நாராயண மூர்த்தியைத் தெரிசிக்குந்தோறு முதன்மையாகிய சந்தோடமானது பிடரியைப் பிடித்துத் தள்ள மாதவனது பாத கமலங்களைச் சொந்தமாகிய ஞான திரவியமா யடிக்கடி வீழ்ந்து தெண்டன் சமர்ப்பித் தெழுந்து திவ்விய நித்ய கல்யாண

குணி விபூதி விக்ர, சொரூபத்தைத் தொழுந்தோறு நிறைந்த வற்புத வானந்த புளக மரும்பத் தக்கதாகக் கூறுகின்ற ரெந் தந்தையே யடியேனுகிய வுமது வழித் தொண்டனுனவ னுய்ந்து பிழைத்த நா ளிந் நாளாய்த் தெளிந்தே னென்று கண்களிலே யானந்தம் பெருகத் துதிக்கத் தொடங்கின ரென்றவாறு. 2

216. ஆலி லேக்குணடு வேலே யிற்றயி னு
மாறு மாவுலக ளித்துமேல்
நா லு மாமுகனெ டண்ட மியாவுமுயர்
நக்க னேடுமரு மாமறைச்
சால நீடுபரி பால னம்புரிசெய்
தன்மை யாவர்களு ரைப்பவர்
நீல மேகவுயர் பாத மாமலரெ
னக்கு நீடுணைய தாகுமே.

எ - து:—அருளே வடிவாகிய மெய்ஞ்ஞான சாந்ததத்வ சொரூபமாகிய வாலிலையிலே நித்ய மங்கள சொரூபமாகிய திருப்பாற்கட னடுப் பிரதேசத்தி லனந்த விமானத்தில் யோக நித்திரை செய்தது போல வுலகத்தை யளித்ததுவு மன்றி மேலு நான்கு திருமுகத்தினையுடைய பிரம்மாவுடனே யண்ட ரண்ட பகிரண்ட சராசரங்களையு முயர்ந்த சிவனையும் வேதத்தையு முதவிப் பரிபாலனஞ் செய்த தன்மையாகிய லீலா விபூதியை யாவ ரறிந்து கூறுவார்கள் நீருண்ட காளமேகம் போன்ற உருவத்தினையுடைய நாராயண மூர்த்தியே யுனது திருவடிக் கமலமே யெனக்கு நீண்ட துணை யென்றார் மார்க்கண்டேய ரென்றவாறு. 3

217. ஓது மாமறைகள் வேத னேடர னு
முரிய தேவருநின் னேவல்செய்
பாத மாமலர்ப ணிந்து நற்புகழ்து
தித்து பாகவத ராகுவார்
ஆதி யாம்பரமும் வேறு முண்டொவும
தாணை யா னுலகு காவல்செய்
நீதி யாநிமல னேயெ னக்கருள்செய்
நீண்ட பாதமல ரென்றுமே.

எ - து:—பதக் கிரமஞ் சடைகளா லுனது புகழினைக் கூறுகின்ற பிதாமகனுடனே சிவனு மற்றைய தேவர்களு முன தேவற் பணிவிடை களைச் செய் ததன்பின்பு தெண்டன் சமர்ப்பித் துனது பிரதாபத்தைப் புகழ்ந் துருகிப் புனித பரம பவித்திரராகிய பாகவத ராகுவார்களாகை

யினாலே யாதி மூலமாகிய பகவானாகிய பரமனீயே யல்லது வேறொருவ ருண்டோ விவ்வுலகின்கண் ணுன தனுக்கிரகத்தினாலே சக்கரவர்த்திக ளானவர்கள் வெண்கொற்றக் குடையினது நிழலி லிருந்து சக்கர நடாத்திய தலைவரா யரசாட்சி செய்வார்க ளப்படியாகிய நீதியையுடைய பரம புருடோத்தமனே உனது ஞானதையமாகிய உபய சரணாரவிந்தத் தினையே யா னுபாசித் தடிமைப்பட வனுக்கிரகஞ் செய்யவேணு மென்றார் மார்க்கண்டேய ரென்றவாறு. 4

218. பவ்வ மோடுமிடி நீக்க வந்தடிப
ணிந்து மன்பொடுபு கழ்ந்திடத்
தெய்வ வாய்மலர்ம லர்ந்து நீயிவணில்
சேர்ந்தி டக்கரும மென்னென
வுய்வ தற்கடியன் வந்த தென்றவனு
ரைத்த பின்னவனு ரைத்தன
னவ்வி யம்பொருது சிந்தை யானுமித
றைந்து மன்பொடுப ணிந்துமேல்.

எ - து:—மீட்டு மந்தக் கல்யாண குண புனித பவித்திரராகிய மார்க்கண்டேயர் கூறுகின்றார் செனன சாகரமாகிய துன்பமானது நீங்கத் தக்கதாய் வந்தடிபணிந் தன்பினாலே குழைந்து புகழ்ந்திட்ட காலையி னாராயண மூர்த்தியானவர் சர்வ மங்கள புனித பாவன தெய்வீகமாகிய பவழம்போன்ற திருவாய்மலரினைத் திறந் தருளிச்செய்கின்றார் சாத்துவீக ஞானதத்துவ பரிபூரண சுகானந்த நித்ய வைபவமுடைய மார்க்கண்டேயரே வாரீர் நீரிங்கு வரவேண்டிய காரண மென்ன வென்று அருளிச்செய்ய விண்ணப்பம் செய்கின்றா ரதி நுமது நித்ய கல்யாண விபூதி விக்ரக சொருபத்தைக் கண் டானந்த வைபவத்தை யடையும் பொருட் டடியேன் தேவரீரிடத்தில் வந்ததென்று கூறிச் சாந்தஞ் சமம் பிரம்மபாவனை முதலாகிய நற்குண நற்செய்கையுடைய வந்த வந்தணனானவர் தெண்டன் சமர்ப்பித்து மேலுங் கூறுகின்றா ரென்றவாறு. 5

219. விடையி லேறுசிவ னார யன்னமரர்
வெய்ய வன்மதிநல் பூதமுங்
கடல்க ளேழுமுல கேழும் பொன்றவொரு
கால மாருகடை காலமே
லடையு மோர்பெரிய விருளி லியானுமொர
மிழ்ந்தெ முந்திடுமவ் வம்பிபோல்
படர்பெ ரும்புனலி னலைக ளோடுழுழற்
பட்டு நற்புயம யர்ந்ததின்.

எ - து :—நந்தி வாகன ரூடராகிய சிவன் பிரம்மா முதலாகிய தேவாதிகளுஞ் சூரிய சந்திராதிகளு மைம்பெரும் பூதங்களுங் கடல்களான தேஜமகடலிடைத் தோன்றுகின்ற சத்த தீவுகளு மிறந்து போகாநின்ற பெரிய ஊழிக்காலத்தி லெதிர்ந்து வருகின்ற பெரிய விருட் கூட்டங்களினாலே அடியே னிட ருழந்து சாகர சல சமுர்த்தியி லமிழ்ந் தெழுந்திருக்காநின்ற தெப்பத்தைப் போலச் சலத்தினுடைய வலையினாலே யுழலப்பட்ட வெனது இரண்டு தோள்களு மெலிந் தயர்ந்த வென்று பின்னும் விண்ணப்பம் செய்கிறார் மார்க்கண்டேய ரென்றவாறு. 6

220. உதவி யின்றிபெரு வெளியி லன்றடிய
னொன்றி யாகிமிகு காலநின்
பதமு முந்தவென திதயம் வந்திரவு
பகலு மின்றிதவழ் போதிலோ
ரதிக தூரமதி னிரவி கோடியென
வமரு சோதிதனைக் கண்டியா
னிதிய தென்றுமதி னருகி னேகவொரு
நெடிய வாலினையெ திர்ந்தனன்.

எ - து :—பின்னுங் கூறுகின்றார் மார்க்கண்டேயரானவ ரிந்த ஊழிக் காலப் பிரளய வெள்ளத்தி னலைப்புண்ட வெனக் கோ ருறுதி யில்லாமல் பெரிய வகண்டாகாரமாகிய வெளியிலே யடியேன் றமியனாகி வெகுகாலமா யுன்னுடைய பாதபங்கயங்களைக் காணும விரவு பகலின்றிய காலத்தி லதிக தூரத்திலே கோடி சூரியப் பிரகாசமாய்ப் பிரகாசிக்கின்ற சோதியை யான் கண்டு வறியவன் செல்வம் பெற்றது போல மகிழ்ந் துருகி யதின் சமீபத்தில் சேர்ந்து ஒரு நீண்ட வாலிலையைக் கண் டானந்தப்பட்டே னென்று ரென்று பின்னுங் கூறுகின்றார் மார்க்கண்டேய ரென்றவாறு. 7

221. அந்த வாலினிலை யளவை கன்றபதி
னுயி ரத்தினம ரோசனை
சந்த வார்குழலி யொன்று கோடிசுடர்
தங்கு மார்பில்திரு மணியுமோ
டிந்து நேருமுக மண்ட லத்திரவி
யென்ன சுட்டியொளி மின்னவுங்
கந்த நாறுமலர் வாயில் தந்திருக
மூற்சு வைப்பவது கண்டுநான்.

எ - து:—அந்தத் தேசோமய காந்தியையுடைய வந்த வாலினுடைய விலேயான தளவை யெவ்வளவைத் தென்றல் பதினுயிர மியோசனே யளவைத்தா மந்த விலேயிலே சௌந்தரிய ரூபமாகிய குழந்தையானது கோடி சூரியப் பிரகாசமாகிய கௌத்துவாபரணமும் மகாலட்சுமியும் தங்கிய மார்பகமும் பூரண சந்திர விம்ப முகத்திலே இளஞ் சூரியப் பிரகாசம் போன்ற சுட்டியான தொளிகளேப் பிரகாசித்து மின்னவுந் திவ்விய பரிமளங்களேக் கமழாநின்ற திருவாய்மலரானது தனது திருவடித் தாமரையினுடைய விரலேச் சுவைத்து வீற்றிருக்காநின்றவரைக் கண்டேனென்றூர் மார்க்கண்டேய ரென்றவாறு. 8

222. அளவி னன்பினரு கேகி துன்பமற
வடிவ ணங்கிசிறு புல்லுமே
யுளவி லாதபெரு வூழி வாயதனி
னென்றி யாகியிவ னின்றநீர்
துளப மாமுகிலோ வயனே மற்றவொரு
சிவனே வென்றடியன் வினவலு
மிளமை யார்பரம னஎின வாய்மலரி
னினிய தேனமுத மென்னவே.

எ - து:—அப்படியாயித் தோன்றிய தேசோமய காந்தியையுடைய ஞான பவித்திரமாகிய வற்புத வுருவத்தைக் கண்ட மார்க்கண்டேய ரானவர் அளவிறந்த வானந்த வைபவத்தை யடைந் தவரருகே வந்து தமது துன்ப நீங்கத்தெண்டன் சமர்ப்பித்துச் சிறு புல்லுந் தலேயெடுக்காத விந்த ஊழி காலத்திலே தனியே குழந்தையினுருவங்கொண் டற்புதமாய்த் தோன்றி யருள் கொடுக்காநின்ற கருணே வாரிதியே நீ ரியாவர் துளப மாலேயை யணிந்த ஸ்ரீதர மூர்த்தியோ வல்லது பிதாமகனே வவ ரன்றிச் சிவனே வென் றியான் வினவு மளவிலே இளமையாகிய ஞான சூரியனைவர் தமது திருவாய்மலரினே யலர்த்தி யருளிச்செய்கின்றூர் தேனேடு கலந்த தேவாமுதத்தைப்போால வென்றவாறு. 9

223. அண்ட மியாவையுமெ ளித்த ழித்துகடை
யூழி யாலினமர் பரமனும்
விண்டு வென்னருளில் கொண்ட பேருலக
மொன்று மின்றிவிடு மூழியாற்
புண்ட ரீகனர ஸிந்தி ராதிபரும்
பொன்றி யாருெருவ னின்றமார்க்
கண்ட காண்டியென வருள யானுமவர்
கழல்ப ணிந்துலக காரணு.

எ - து :—அப்படி யெண்ணுகைக் கசக்கியமாகிய காம்பீரிய மதுரியமாய்க் கூறுகின்ரு ரிந்த வண்டரண்ட பகிரண்டங்களை ரக்ஷித்து மூழி கடைக்காலத்தில் சாகரங்க ளெல்லா மகாப் பிரளயத்தி லணை கடந்து தோன்றிய காலத்தில் நம தனுக்கிரக விசேடத்தால் வடவால விருக்ஷ விலையிற் றுயிலாநின்ற நாராயண மூர்த்தியானவ ரியா மென தருளினலே யிர்த்தியா யிருக்கின்ற விந்த வகண்ட பூமண்டலங்க ளெல்லா வுலகமான தெல்லா மழிந்து சர்வ சூனியமாகிய காலத்திற் பிரம்மா சிவ னிந்திரன் முதலாகிய தேவாதிக ளெல்லா மெனது மணிவயிற்றி னடங்க யானொருவனே நித்யனு யிருக்கின்றேன் பாராய் மார்க்கண்டனே யென் றருளிச்செய்ய வடியே னனந்தமாகிய தெண்டன் சமர்ப்பித்துத் தோத்திரஞ் செய்கின்றே னென்றவாறு. 10

221. இரவி யோடுமதி புலர வந்தபெரு
விருளி னூழிதனி னெத்தனைப்
பரவு காலமிக வொண்டி யாகியதில்
பயில்வை லீலைபுரி பரமவெங்
குரவ வென்றவுட னகம லர்ந்துசிறு
கூறு காலையெம துந்தியில்
விரவு புண்டரிக மலரி யென்னவெழும்
வேத பூரண னு திப்பனல்.

எ - து :—சந்திராதித்தாள் பிரகாசமின்றி யொடுங்கிய காலத்திற் பெரிய விருளான தண்டரண்ட பகிரண்டங்களை யெல்லா மூடிக்கொளளும படியாகிய தூழியில் மிகவுந் தனியனு யோகநித்திரை செயகின்ற வெம தையனே யென்றளவி லவரது மாதுரிய மொழிக் குவந்து கிருபை கூர்ந்து முக மலர்ச்சியை யடைந்து இனனும சிலகாலம் போந்த பின்பு நம துந்தியிலே மிகுந்த கிரண சமூகத்தினையுடைய சூரிய தேவனைப் போல வாயிரத்தெட் டிதழினையுடைய செந்தாமரைக் கமல முண்டாகு மதிலே வேத சாகைகளெல்லாம் பரிபூரண யூக புத்தியினு லுணர்ந்த பிதாமக னவ நுதிப்பா ரென்று திருவுளம் பற்றினர் நாராயண மூர்த்தி யெனறவாறு. 11

222. அன்ன வர்க்குதவி யாகி வேதமும
ளித்து போதமு மளிக்கவோ
ரன்ன நல்லுருவ மாகி பண்டைகழி
யண்ட மியாவையும ளித்தபின்
மன்னு மெம்பரம பதமு மேகியவ
ணின்று லீலையைவ குப்பன்முன்
சொன்ன வெம்பதம டைந்த பேரெனொடு
துலைவி லாச்சுகமு மடைவரே.

எ - து :—அப்படி யவதரிக்கா நின்ற பிதாமகனுக் கருள் கூர்ந்து வேத பர்வதத்திலே யன்ன ரூபமா யாம் வந்து நான்கு வேதத்தின் ஞானப் பொருள்களை யனுக்கிரகம் பண்ணி முன்னே லயமாகிய வண்டங்களையும் அவன் வகுத்த பின்பு நிலை பெற்ற வெமது பரம பதத்திற் போய்ச் சேர்ந்த பின்பு செக லீலையாகிய விபூதிகளை யெல்லாம் வகுத்திடுவன் முன்னம் யாங் கூறிய வெமது பரமபதத்தி லடைந்த பாகவதர்கள் நித்ய சூரியர்களா யெம்மைச் சேவித் தானந்த வைபவத்தை யடைந்து தொலைவிலாத ஞான சுகத்தினை யடைவார்க ளென்றவாறு. 12

226. என்ற வப்பரம னின்றிவ் வூழியினி
னெய்த்தி ளைத்தவது தீரநீர்
துன்று மம்பவள வாயி னூடுபுகு
வென்று வாய்மலர்தி றந்திடச்
சென்ற யானுமதி லண்ட பிண்டமுதல்
செகம னைத்துமர னயனையும்
பொன்ற வானவரு மேரு குன்றமொடு
பொங்கு மாகடல்க ளேழொடும்.

எ - து :—சிருஷ்டி முதலாகிய காரண கர்த்தா என்னை விட வேறில்லை யென்று கூறி யந்த நாராயண மூர்த்தியானவராகிய பரமனானவ ரின்றை வரைக்கு மிந்த வூழிக் காலத்தினாலே மிகவு மிளைத்துத் துன்பப் பட்ட விளைப்பானது தீர யாங் கருணை புரிகின்றோ முமது களைப்பானது தீரும் பொருட்டா யென் றருள் கூரந்து தமது திருவாய்மலரினை யலர்த்தித் திறந்த மாத்திரத்திலே பிரவேசித்த யானு மந்த மணி வயிற்றைப் புகுந்து பார்க்கும்போது அதிலே யண்ட பிண்ட முதலாகிய சகத்திலுள்ள சராசரங்க ளனைத்தும் சிவனும் பிரம்மாவும் இந்திரன் முதலாகிய தேவர்களும் மகாமேரு முதலாகிய சத்த குலாசலமு மேழு கடல்களு மந்தந்தக் கடலிடத்திற் பிரகாசிக்கா நின்ற தீவாந்தரங்களுங் கண்டே னென்றார் சுக சொரூபியாகிய மார்க்கண்டேய ரென்றவாறு. 13

227. கதிர்கள் சந்திரர்கள் பரவு மாதவர்கள்
ககன தாரைகளு மியாவையும்
பிதிரி டாதபரு வுதரம் வைத்ததொரு
பெருமை கண்டுவியப் புற்றுநா
னதினு மீளும்வகை யுணர்வி லாதுநெடு
நாள லைந்துகடைக் காலையி
னெதிரில் பானுமதி பொருவு மாழிவளை
யிலகு மார்பின்மணி யாரமும்.

எ - து :—மீட்டும் மார்க்கண்டேயர் கூறுகின்றார் பன்னிரண்டு சூரியர்களுஞ் சந்திரர்களும் புனித பாவனமாகிய தவ சிரேஷ்டர்களு மாகாயத்திற் பிரகாசிக்காநின்ற தாரகா கணங்களு மட்ட வசுக்களுஞ் சத்த மருத்துக்களு மொன்பது வகையாகிய சித்தர்களு மகாமேரு முதலாகிய வட்ட குலாசலங்களையுஞ் சத்த சாகரம் முதலிய சேதனுசேதனங்களையு மணிவயிற்றில் கண் டதிசயப்பட்ட நா னதை விட்டு மீண்டும் வரும்படி யுணர்ந்த நா னெடுங்காலம் வழிதெரியா தலைந் தெதிரிலே பிரகாசிக்கா நின்ற திருப்பாற் கடலிலே யனந்த விமான சேகரனு யோக நித்திரை செய்கின்ற நிகரில்லாத சூரிய சந்திரரைப் போன்ற சங்கு சக்கரந் தரித்தருளிய விரண்டு புசங்களுங் கவுத்துவாபரணந் தாங்கிய வழகிய மார்பு மவரது கிருபையினுலே கண்டே னென்று விண்ணப்பஞ் செய்கின்றார் தவ சிரேஷ்டராகிய மார்க்கண்டேய ரென்றவாறு. 14

228. திருவி னேடுமொரு வருளு மாமணிசெ
றிந்த தாமரைம லர்ந்துமே
லிருபு றத்தடிகள் வருடு சந்திரர்க
ளிலக மெய்யொளித மைக்கவான்
பெருகு பாற்கடல்க ருங்க டல்லெனபி
றங்க ராவணை துயின்றநற்
கருணை யங்கடலை கண்டு கைதொழுதி
றைஞ்சி நின்றுமிவை கழறினேன்.

எ - து :—மீட்டு மறிவே சொரூபமாகிய மிகுந்த சிலாக்கியராகிய மார்க்கண்டேயர் கூறுகின்றார் ஸ்ரீமன் நாராயண மூர்த்தியினது திவ்விய மங்கள விக்கிரக சொரூபத்தில் ஸ்ரீ மகா லட்சுமி தேவியும் கவுத்துவா பரணமுந் திவ்விய திருமேனிக ளெங்கு மலர்ந்து பிரகாசிக்காநின்ற திவ்விய திருவடிவத்தின தழகு மிரண்டு திருவடிக் கமலங்களைச் சந்திரக் கூட்டங்க ளுபசரிக்கின்ற திருப்பாற் கடலி னிடத்தில் கருங்கடலானது வீற்றிருந்தா லெத்தன்மைத்தோ வத்தன்மைத்தாக அநந்த விமான சயனத்தில் வீற்றிருந்த தேவரீரைக் கண்டு விண்ணப்பம செய்கின்றே னென்றார் மார்க்கண்டேய ரென்றவாறு. 15

229. அகில முற்றுமழி பெருகு மூழியினி
னமர்ச ராசரம னைத்தையும்
புகழு நல்லுதரம் வைத்த ளித்துமிக
புரியும் லீலைபெரு புதுமையிற்
சகல லோகமும லைந்து தேடிவழி
யறிகிலா துனது சரணமே
மிகபு கழ்ந்தனனெ னக்கு முன்றனிரு
வுருவு காட்டுமென வேண்டினேன்.

எ - து :—வாரீர் மகானுபாவரே அகில சராசரங்களையு மணிவயிற்றி னடக்கும்படியாகிய பெரிதாகிய ஊழி காலத்தில் மறுபடியு மிந்த லீலாவிபூதியைச் சிருட்டித்து ரக்ஷிக்காநின்ற சகல லோகங்களையுங் கண்டு வழி காணு தலைந் துமது சரணாரவிந்தத்தினை மிகவும் புகழ்ந் துருகிய வெமக் குமது திவ்விய மங்கள சொரூபமாகிய விச்வ சொரூபத்தைக் காட்டவேணு மென்றார் மார்க்கண்டேய ரென்றவாறு. 16

230. வேண்டு மெற்குவர மருள்பு ரிந்துமிக
வேண்டி யெம்மையுமு ழன்றநீர்
தூண்டு மன்பினொடு பூமி தன்னின்மிகு
செல்வ மோங்கிவளர் சோர்விலாச்
சேண்ட யங்குபுகழ் கச்சி மாநகரில்
தெற்கில் காவதமோ ரைந்தினி
லாண்டு நின்றதொரு கோல மால்வரையி
னணுகி யேதவமி யற்றுவாய்.

எ - து :—இப்படியாய்ப் பணிந் துருகிய வடியேனைக் குறித் தனுக்கிரகஞ் செய்த தென்ன வென்றால் வாரீர் மார்க்கண்டேயரே நீர் நம்மைக் குறித் திந்த ஊழிகால சலப் பிரளயத்திலே வுழன்று மிகவுஞ் சிரமத்தை யடைந்தீ ராகையா லிந்தப் பூ மண்டலங்களிலே மிகுந்த புண்ணிய விசேஷ தலமாகிய சத்திய விரத மென்று சொல்லப் பட்ட காஞ்சீ மண்டலத்துக்குத் தெற்கிலே யைங்காதத் தளவினை யுடைய கோலாசல மென்று கூறப்பட்ட புண்ணிய பருவதத்திலே சென்று நீர் தவம் புரிந்தா லுமதிஷ்டமான தீடேறு மென் றருளிச்செய்தா ரரங்க நாயக ரென்றவாறு. 17

231. யானு மவ்வயினோர் கார ணத்தின்மிகு
பூர ணுங்கிசமோ டேகுவேன்
போக வென்றவரு ரைக்க யானுமதில்
போந்து மின்றளவு மிம்மலை
ஞான நற்றவமு யன்ற னன்கொலென
நார ணனகம கிழ்ந்துதன்
வான மூடுருவி நீண்ட பேருருவ
மாயி னனவனும் வாழ்த்தவே.

எ - து :—வாராய் மார்க்கண்டேயரே நீ ரிங்ஙனம் தவம் புரிந்தா லொரு காரணத்தினுலே பூரணவதாரமாய்த் திருவவதாரஞ் செய்கிறே மாகையால் நீ ரவ்விடத்தில் வதிந்து தவம் புரிந்தால் நமது திவ்விய ரூபத்தைக் காண்குவீ ரென் றருளிச்செய்த காரணத்தினு லன்று முத லின்றைய வரைக்கு மந்தப் புண்ணிய க்ஷேத்திரமாய கோலாசலத்தில் தவம் புரிகின்றே னென்று விண்ணப்பம் செய்த மார்க்கண்டேயருடைய நயகுண விங்கித வார்த்தையா லானந்த வற்புத மடைந்தவராய்த் தமது விராட் விச்வரூபத்தைக் காட்டினு ரந்தச் சேவையினு லற்புத வைபவத்தை யடைந்து தெண்டன் சமர்ப்பித்துத் துதிசெய்தா ரென்றவாறு. 18

மார்க்கண்டேயர் சரணுகதி யடைந்த வத்தியாயம் முற்றிற்று.

# பதினொன்காவது: விச்வ சொரூப வத்தியாயம்

232. அண்ட மோடுபுக ழெண்டி சாமுகமு
மணியு நன்மயிரொ மூக்கிலே
புண்ட ரீகனர னிந்தி ராதியர்கள்
புனித வானவர்கள் மாதவர்
தெண்டி ரைக்கடல்கள் சந்த்ர சூரியர்க
டிகழ்ச ராசரம னைத்துமே
பண்ட மியாவுமொரு பாலி னின்றிலக
கண்ட னன்கரிய பரமனே.

**எ - து :—** அண்டரண்டங்களும் புகழாநின்ற வெட்டுத் திக்குகளு மழகிய ரோம வொழுங்குகளிலே வாயிர கோடி யண்டங்களு மணி சமூகங்களைப் போலத் தொங்கவுஞ் செந்தாமரைக் கமலத்தின் வீற்றிருக்கா நின்ற பிதாமகனும் சிவனு மிந்திரன் முதலாகிய புனித பவித்திரமாகிய தேவாதிகளும் அரிய தவத்தினைச் செய்கின்ற முனிவர்களு மச்வினி தேவர்க ளிருவரும் நாற்பத்தொன்பது மருத்துக்களும் பிதிர்கணங் களும் கந்திருவர்களு மியக்கருஞ் சித்தர் கணங்களு மசுரர்களும் தெளிந்த திரையினையுடைய சத்த சாகரங்களு மேகாதச ருத்திரர்களுந் துவாதச வாதித்தியர்களும் திரிபுவனத்தின் வதியாநின்ற சராசரங்க ளனைத்து மந்தத் திவ்விய தேசோமயமாகிய விச்வ சொரூபத்தி ஞெர் பாலில் விளங்கித் தோன்றத் தக்கதாகக் கண்டார் மார்க்கண்டேய ரென்றவாறு. 1

233. கால்க ளாயிரங் கைக ளாயிரங்
கனத்த தோர்புயமு மாயிர
மேலு மாமுடிக ளாயி ரங்கனக
மேரு வென்னவும்வி ளங்கிடக்
கோல வாபரண கிரண பானுமிகு
கோடி கோடிகள்வி ரிக்கவுஞ்
சூல மோடுதிகி ரிக்கு லங்கள்வளை
தோம ரங்கள்பல வாயுதம்.

**எ - து:—** அந்தத் திவ்ய மங்கள விச்வ சொரூபத்தின் றிருவடி சமூகங்களான தாயிரமு மஸ்தங்களான தாயிரமும் வடமேருவினை யொத்த திரண்ட புசங்க ளாயிரமு மேன்மையாகிய சிரத்தினிற்

புனைகின்ற நவரத்தின மயமாகிய மவுலிக ளாயிரமுங் கனக மயமாகிய திவ்யாபரணங்க ளானது பல கோடி சூரியருடைய கிரண சமூகங்களை விரிக்கவுஞ் சூலாயுதத்துடனே சக்கரத் தொகுதிகளும் பாஞ்சசன்னியமுந் தோமர முதலாகிய வாயுதங்களுந் தோன்றத் தக்கதாகக் கண்டார் மார்க்கண்டேய ரென்றவாறு. 2

234. வில்லி னோடுகதை வாள்கள் கோடியுறு
விண்ணின் மின்னலைவி ளைக்கவும்
புல்லு மாமுகம னந்த கோடிரவி
புரைய கண்களொரு கோடியாம்
பல்லு மெல்லையொரு கோடி காதவழி
பரவும் வாய்களொரு கோடியாங்
குல்லை மேவுதிரு மார்பின் முத்தணிகு
லாவ வானகம றைக்கவே.

எ - து :—காண்டீபத்துடனே கதைகள் வாளின் கூட்டங்கள் கோடி கோடியாய் விளங்கி மின்னலை விரிக்கவும் பொருந்திய திருமுக மண்டலங்களானது கோடி கோடியாய்ப் பிரகாசிக்கவும் கோடானு கோடி திருக் கண்களானது சூரியனைப்போல விளங்கவுந் தந்த பந்திகளானது கிரண சோடசத்தையுடைய சந்திரனைப் போலத் தவளிக்கவுந் திருப்பவள வாய்களானது பல கோடிகளாய் விளங்கவுந் துளப மாலையானது பொருந்திய திருமார்பகத்திலே முத்த மாலையான திளஞ் சந்திரனைப் போலப் பிரகாசித்து வானகத்தை யெல்லா மறைக்கக் கண்டார் மார்க்கண்டேய ரென்றவாறு. 3

235. உந்தி மாமலரில் பிரம லோகமுத
லொளிர மேருவரை கர்ணிகைச்
சந்த மாவிடைபீ தாம்ப ரந்திசைக
டங்கு பேரொளிய ளிக்கவுந்
தொந்த மாகுதொடை இந்த்ர லோகமுறு
துணைம லர்ப்பெரிய வடிகளு
மந்த மாவதல சுதல மூடுருவி
யப்பு றத்தினும மர்ந்தவால்.

எ-து:—அந்த விச்வ சொரூப வுந்திக் கமலத்தில் பிரமலோக முதலாகியது தோன்றிப் பிரகாசிக்கவு மவ் வுந்திக் கமலத்திற் றோன்றிய கர்ணிகையானது வடமேரு கிரியாகவு மாயிரத் தெட்டு மாற்றுத் தங்க மயமாகிய பீதாம்பர வுடையானது திக்குக ளெல்லால் பரந்த வொளியை

விரிக்கவு மவாது வுபய தொடைகளான திந்திர லோகத்திற் பிரவேசிக்கவுந் திவ்ய மோட்ச ரூபமாகிய திருவடித் தாமரைகளானது வதல சுதல முதலாகிய உலகத்தை யூடுருவி யப்பாலும் போ யமர்ந்த தென்றவாறு. 4

236. வேத மோடுகலை யாவும் வாயினில்வி
ளங்க ஞானமொரு மேனியாம்
வாத நாசிசிறு காலும் வானம்விரற்
சந்து வன்னிசிறு முனிவுமாய்ப்
பேத மற்றுயிர னைத்தை யுமருள்செய்
பெற்றி யேகருணை யப்புமாய்
நீத நற்புவிய னைத்தும் போனகம
தாக வேவொளிர நின்றனன்.

எ - து :—வேத முதலாகிய வறுபத்து நான்கு கலைகளுந் திருப்பவள வாய்களின் விளங்கவும் ஞான மெல்லாந் திரண் டற்புத வுருவமாகியும் பெருங் காற்று நாசி நுனியிலே தோன்றிய சுவாசமாகவு மாகாச மானது திருவடியின் விரற் சந்தாகவு மக்கினியானது தாமத குணமாகவு மெண்ணுகைக் கசக்கியமாகிய சேதனுசேதனங்களுக் கனுக்கிரகஞ் செய்கின்ற சாத்வீகமே சலமாகவுங் கருணாநிதியாகிய நற் புவிமகளை யருந்திக் களிக்கின்ற பிரசாதவைபவமா யருந்தக் கண்டார் மார்க்கண்டேய ரென்றவாறு. 5

237. அண்ட மெண்டிசையு முண்டு பண்டலரு
மலரி யென்னவெழு மறைமணப்
புண்ட ரீகமல ருந்தி மேலுமொரு
பிரம னுருவி லானமார்க்
கண்ட னுரொருவ ரலையின் மீதுதவழ்
கால மாகுமதில் கண்டதோர்
தொண்டை வாய்ப்பவள பால னிலின்மிசை
துயில்வ கண்டதொரு பாலிலே.

எ - து:—அண்டரண்ட பகிரண்டமு மட்டதிக்கினையு முண்டு மீட்டு மனுக் கிரகஞ் செய்யாநின்ற வனந்த கல்யாண சுப குணங்களையுடைய நாராயண மூர்த்தியாகிய ஞான சூரியனது உந்திக் கமலமானது நான்கு வேத மாகிய திவ்ய பரிமளங்களைக் கமழ்ந்து பிரம்மாவை யனுக்கிரகஞ் செய்ய வந்த சந்ததியி னுற்பவித்த மார்க்கண்டேயரானவ ரூழியாகிய கற்ப காலத்தி

னத்தே வடிவமாகிய வாலிலையிற் றவழ்ந்து கோவையின் பழத்தினை யொத்த திருவாய்மலரினை யலர்த்திக் காற்பெரு விரலினைச் சுவைத்துப் பாலனாய்க் கண் டற்புத மடைந்த உருவமான தொரு பக்கத்திலே பிரகாசிக்கத் தக்கதாகிய விச்வரூபத்தைக் கண்டருளினா ரென்றவாறு. 6

238. பாலின் வேலைநடு வரவ ணைத்துயில்கொள்

பரம னுந்திகிரி வளையொடுங்

கோல விற்கதைகள் வாள்கள் சூழவிரு

கோம ளக்கொடிகள் சாமள

நீல மால்வரைப டர்ந்த வென்னமலர்

நிறைய பூத்தடியர் வானவர்

சால வுஞ்சரண பங்க யத்தின்விழு

தன்மை யாவுமொரு பாலிலே.

எ - து :—திருப்பாற் கடலினது நடுப் பிரதேசத்திலே யனந்த விமான சேகரரா யோக நித்திரை செய்தருளிய பரப்பிரம்ம சொரூபமு மவர் திருத் தோள்களிலே தாங்கிய சங்க சக்கரமுங் காண்டீபமுங் கதையும் வாளுந் தோன்றிப் பிரகாசிக்கவு மிரண்டு மங்களாகாரமாகிய கொடிகளானது நீல கிரியிலே படருந் தன்மையினைப் போலப் பிராட்டியாகிய ஸ்ரீமகாலட்சுமி தேவியும் பூமிபிராட்டியுந் தோன்றி மலர்களை நிறையப் பூத்தா லெத் தன்மைத்தோ வத் தன்மைத்தாகிய வவயவங்களை யுடையவர்களாய்த் தோன்றிப் பிரகாசிக்கவு மவர்களைத் தேவகூட்டங்கள் சரணுகதி யடையா நின்ற வந்த யோக நித்திரை செய்கின்ற வற்புத திவ்விய திருமேனியினது வடிவழகினை யொரு பக்கத்திலே கண் டதிசயித்தார் மார்க்கண்டேய ரென்றவாறு. 7

239. நித்தியமார்க் கண்டனய னரன்வா னோர்க

ணீள்தவத்தின் முனிவரர்காந் திருவர் சித்தர்

வித்தியா தரர்வசுக்கள் மருத்து வோர்கள்

விமலனடி முடியளவு விளைவு காணு

ரெத்திசைகள் புவிகள்பதி னான்கு மண்ட

மெழுகடலு மிறைவனடி தனின்வி ளங்க

முத்திதரு பொன்னரங்க னடிப ணிந்து

மோகமுற்றங் கின்பமதின் மூழ்கி நின்றார்.

எ - து :—நித்தியமா யெக்காலு மழிவின்றிய மார்க்கண்டேயருந் தாமரைக் கமலத்தின வீற்றிருக்காநின்ற பிதாமகனு மிடப வாகனருடனாகிய காளகண்ட திரிநேத்திரமுடைய சிவனும் பஞ்ச தாருவின் நீழலின் வீற்றிருக்கின்ற தேவ கூட்டங்களு நீண்ட தவத்தினையுடைய முனிக் கணங்களுங் காந்திருவர்களுஞ் சித்த வித்யாதரர்களும் சூழ்ந்திராநின்ற வசுக்களுஞ் சத்த மருத்துக்களு மித்தன்மைத்தாகிய வனைவர்களும் விமலனாகிய சர்வ மங்கள விக்கிரக வந்தனை யோக்கிய வரங்க நாயகருடைய திவ்விய சரணாரவிந்த முதல் திருமுடியின தளவினையுடைய காணுகைக் கசக்கியமாகிய விச்வ சொரூபத்தைக் காணமாட்டார்க ளந்த வுருவத்தி னெங்கெந்தத் திசைகளும் பதினான் குலகமுஞ சத்த சாகரங்களு மகிலமான சேதனாசேதனங்களு மிறைவனாகிய பொன்னரங்க நாயகருடைய திவ்விய திருவடிகளிலே விளங்கக் கண் டானந்த பரவசராய் மோக முற் றின்ப சாகரத்தின் மூழ்கி நின்றார்கள தேவ கூட்டங்க ளென்றவாறு. 8

240. கண்டுமனங் களிகூர்ந்து கமலக் கண்ணன்
கடல்போன்ற விச்வரூ பத்தைக் காட்டக்
கொண்டுமகிழ்ந் தரனயன்வா னவர்கள் போற்றக்
கொடுந்தவத் துக் கவுசிகன்கை குவித்து வாழ்த்தப்
பண்டுபழ கியதிருநல் லுருவு காட்டப்
படர்ந்தனர்பாற் கடலெனவே பயங்க டீர்ந்து
நின் றுபுகழ் பிருகுமார்க் கண்டன் சம்பரன்
நெடியசோ முகன்வீணை முனிவ திட்டன்.

எ - து :—இப்படி யற்புதமாய்த் தோத்தரித்த மார்க்கண்டேயர் பக்திக்குகந்தவராய்ச் செந்தாமரைக் கண்ணனாகிய திருவரங்க நாயகராகிய கருங்கடல் போன்ற விச்வ சொரூபத்தைக் காட்டக் கண்டு மகிழ் சிறந்தவர்களாயர னய னிந்திராதிபர் பஞ்சாக்கினியினின்றுந் தவம் செய்கின்ற விசுவாமித்திரன் முதலிய விருடியர்க ளெல்லாம் சிரசின்மீது கைகூப்பித் தோத்தரிக்கக் கிருபை கூர்ந்தவராய் மீட்டு மந்த விச்வ சொரூபத்தையுள்ளடக்கிப் பூர்வம் பழகிய உருவத்தில் பிராட்டியாகிய ஸ்ரீமகாலக்ஷ்மி தேவியானவள விளங்கத் திருப்பாற்கடலி னடுப்பிரதேசத்தி னனந்த விமான சேகரரா யோக நித்திரை செய்கின்ற திவ்விய மங்கள விக்ரக சொரூபத்தைக் காட்டித் தேவர்கள பயம் தீர்ந்தவரா யவர் திவ்ய திருவடிகளிலே யனந்தமான தெண்டன் சமர்ப்பித்து வேத வேதாந்தங்களாற் றுதிசெய்து புகழாநின்ற பிருகு மார்க்கண்டேயர் சம்பரன் சோமுக னாரதமுனி வதிட்டரீறாகிய விருடியர்க ளெல்லா நித்யசூரியர்களா யந்த வற்புதமாகிய திவ்விய திருவுருவத்திற் கலந்து நின்றார்க ளென்றவாறு. 9

241. சென்றுதவ முனிவரர்கள் பலரும் போற்றத்
திருவுடனே கவுத்துவஞ்சேர்ந் திலங்க மேலா
யென்றுமிது பரமபதத் தலமா மென்றே
யெழில்வாளை நாட்டிடச்சம் பீர மாகி
நந்தியொடு கோலவரை தனில்த ழைத்து
நறுமலரி னெடுகனிகாய் பெருகித் தோன்ற
வன்றுரைத்த பொன்னரங்க னருளால் வீர
வனந்தவிமா னந்துயின்ற னமரர் போற்ற.

எ - து:—அந்தத் தலத்திலே மற்ற முனிவர் கூட்டங்களெல்லாம் வந்து போற்றத்தக்கதாய் ஸ்ரீ மகாலட்சுமி தேவியுடனே கவுத்துவாபரணம் பிரகாசிக்காநின்றவர் தமது சர்ணுமுதமாகிய செம்பவள வாயை யலர்த்தி யொரு வார்த்தை யருளிச்செய்கின்றார் வாரீர் பிரம்மா முதலாகிய தேவர்களே யிந்தக் கோலாசல பருவதமானது மேன்மையவாகிய பரமபதத் தலமே யீதென் றறிவீர்க ளென் றருளிச்செய்து தமது திருக் கரத்தினிற் றாங்கி வந்த வாளினை யந்தப் பருவதத்தி னாட்ட வெலுமிச்ச விருட்சமாய்த் தோன்றிற்று பின்னு மதைச் சேர்ந்து வந்த நந்தியா வட்ட விருட்சமானதை யதனுடனே சேர நாட்டி யிருந்த விரண்டு விருட்சமு நமது திருக் கரத்தினாலே நாட்டிய பிரயோசனத்தினாலே யென்றைக்கு நமது சந்நிதானத் தெதிரில் விர்த்தி யடைந்து இலைக ளுடனே தழைத்து மலர் காய் கனிகளுடனே பெருகி விருத்தியடைந் திருக்கக் கடவதென் றனுக்கிரகஞ் செய்து தாம் மயனு லமைக்காநின்ற ரத்ன மயமாகிய குகையிலே யனந்த விமான சேகரரா யெழுந்தருளினார் தேவர்கள் முதலாகிய மகரிஷிக ளெல்லாஞ் சூழ்ந்து துதி செய் துபசாரஞ் செய்யப் பொன்னரங்க நாயக ரென்றவாறு. 10

242. உந்திமல ரயன்பொலிய வுயர்ந்தமணிப் பொன்னுடையி
டையி லோங்க
விந்திரநீ லவ்வரையோ ரிமையவரை மிசைக்கிடந்த
தென்ன வோங்கிச்
சுந்தரமா மணிவண்ண னரவணையின் மிசைத்துயின்றான்
சுடருந் தண்ணெனன்
சந்திரனுந் தவளசத்ரக் குடைதாங்க வாலவட்டந்
தழைத்தங் கோங்க.

எ - து :—உந்திக் கமலத்திலே பிரம்மாவானவர் பிரகாசிக்கவு முயர்ந்த வழகினையுடைய பீதாம்பரப் பட்டான திடையிலே சூழ்ந்து பிரகாசிக்கவுஞ் சுந்தரமாகிய நீல மணிவண்ணனை வராவணையாகிய வனந்த விமான சேகரராய்ச் சயனித்த பின்பு சூரிய சந்திர ரிருவருந் தவள சத்திரக் குடையினை இரு புறத்தினுந் தாங்கினார்கள் சில தேவ கூட்டங்க ளாலவட்டங்களை இரு மருங்கும் பிடித்துச் சூழ்ந்தார்க ளென்றவாறு. 11

243. இருமருங்கிற் கருடன்முதற் சேனையர்கோன் பணிகேட்ப
விலங்கு வான
குருமணிபோ லைம்படையும் புடைவயங்கக் குலமறைகள்
கூடி யேத்தப்
பருமணியின் வரைபடரும் பொற்கொடிக ளெனவெண்மர்
பக்கந் தோன்ற
வருமணிகொள் முத்தர்கடல் மலர்ப்பதங்க டுதித்துமருங்
கிருப்பர் மாதோ.

எ - து:—இரண்டு பக்கங்களிலேயுங் கருடன் சேனையர்கோன் முதலாகிய பேர்கள் பணிவிடை கேட் டருளுக்கக் குறிப்பினைப் பார்க்கவுங் குருவிந்த ரத்தினத்தைப் போலப் பிரகாசிக்கின்ற பஞ்சாயுதங்களும் பக்கங்களிலே யொளிவிட்டுத் தழைக்கவு நான்கு வேதங்களும் விதிப்படி துதி பகரவும் பருத்த மணிவரையிலே படரா நின்ற பொற் கொடிகளைப்போ லட்ட மங்கலங்களையு நற்குண நற்செய்கை யினையுமுடைய எட்டுப் பதிவிரதா சிரோமணிகளானவர்கள் பக்கங் களிலே தோன்றிப் பிரகாசிக்கவுங் கிருபையினையுடைய பவித்திரராகிய சீவன் முத்தக் கடலானது துதித் தருகே நிற்ப ரென்றவாறு. 12

244. சங்கரனைங் கரன்குமர னம்பிகையும் புகழ்துதித்துத்
தாள்க ளுேக்கிச்
செங்கரங்கள் குவித்திறைஞ்சி யருளுேக்க மருத்துவட்டத்
திசையு ளோரும்
பொங்குகடற் போலிரைந்து வரிகரியெ னும்மோதைப்
புவன மோங்க
வங்கயலிற் சதிமுறையி னரம்பையர்க ணடமாட
வன்பர் வாழ்த்த.

எ - து :—சிவனும் விக்கின மூர்த்தியும் சுப்பிரமணியரும் பராசத்தியும் புகழ்ந்து துதித்துப் பாதாரவிந்தத்தைத் திக்கு நோக்கித் தெண்டன் சமர்ப்பிக்கவுஞ் சிரத்தினிற் கையினைக் கூப்பி யருளுேக்கத்தினைக் குறித் திருப்பவு மருத்துக்களு மட்ட திக்குப் பாலகரும் பொங்கும்படியாகிய கடலினைப்போல விரைச்சலிட்டு அரிகரி யென்கின்ற தோத்திரத்தாற்

றேத்தரித்த வோசையான இந்தப் புவனங்க ளெல்லா மரம்பையர்க ளானவர்கள் சதி முறையின்படி நடக்கானின்ற விலக்கணமு மடியார்க ளானவர்க ளெல்லாம் வாழ்த்தொலியு மெங்கணுமா மென்றவாறு. 13

245. மணிவிளக்க மிந்திராணி வானவர்தங் குலக்கொடிகள்
மருங்கி னேந்தப்
பணிகொணறுங் கற்பகமா மலர்சூடி வானவர்கந்
திருவர் பாட
வணிநிதியம் பொழிந்துகுபே ரன்முதலோ ரிறைஞ்சிநின்றங்
கினிய வன்பர்
துணிநிதிய மெனக்கருதிப் பெருநிதியைத் தும்புருநா
ரதர்க டூர்ப்ப.

எ - து :—மாணிக்கத் தீபங்களைத் தங்க மயமாகிய தட்டி னிலகத் தக்கதா யிந்திராணி முதலாகிய தேவ கன்னியர்க ளேந்தவு மந்தார பாரிசாத மலர்களைக் கந்திருவர்களானவர்கள் தூவவுந் தெண்டன் சமர்ப்பித்துச் சங்க நிதி பதும நிதிகளைப் பொழிந்துநின்று குபேரன் முதலாகிய பேர்க ளுச்சியிற் கைகூப்பவு மன்பர்களானவர்கள் விருப்பினுற் றுணியப்பட்ட ஞான திரவிய மீதென்று நினைக்கவும் பெரிய திரவியங்களைத் தும்புரு நாரதரானவர்கள் தூவவு மென்றவாறு. 14

246. பரமபதத் திருமணிமண் டபமெனுங்கோ லாசலத்திற்
பரிந்தி ருந்து
மரவிந்த மலரெனுமக் கருணைவிழி யருளுேக்க
மருளி யந்தக்
கரமுகிழ்க்குஞ் சோமுகனைத் தம்பியையமார்க் கண்டனையுங்
கடைக்க ணித்து
வரமளித்து வானவர்க்கும் விடைகொடுத்திவ் வுலகுய்ய
மகிழ்ந்தா னையன்.

எ - து:—பரமபதத்தினது முத்தின் றிருமாமணி மண்டபம் போன்ற கோலாசல கிரியிலே யதினும் விருப்பத்துட னமர்ந்தருளித் தாமரைக் கண் ணருளுேக்காற் சகல தேவர்கட்கு முனிவர்கட்கு மனுக்கிரகஞ் செய்ததன் பின்பு பயங்கரத்துடனே யுச்சியிற் கைகூப்பி நிற்கின்ற சோமுகனையும் அவன் றம்பியினையு மார்க்கண்டேயர் முதலிய பெயரினையுங் கடைக்கணு லருள்கூரப் பார்த்து நித்ய சூரியராய்த் தம்மை யெப்போது மிடைவிட்டு நீங்காத வனுக்கிரகம் புரிந்து தேவாதிகளுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத் தனுப்பியதன் பின் பிவ்வுலக மெல்லா முய்யும் பொருட்டா யந்தப் பரமபதம் போன்ற கோலாசலத்தின் வீற்றிருந்தா ரரங்க நாயகரென்றவாறு. 15

விச்வ சொரூப வத்தியாயம் முற்றிற்று.

## பதினைந்தாவது: சிங்கவர்த்தனன் யுத்த முரைத்த வத்தியாயம்

247. சார்வ பூமனைய டைந்த வர்க்கருளு
தன்மை சொற்றனைய றிந்தனங்
காரி னம்பயி லு கின்ற மாளிகைக
வின்பு ரத்தினது காரணம்
வீர சிங்கபுர மாமெ னும்பெயர்வி
ளங்க விந்தவுல கெங்கணுந்
தீர னவனு ரைத்த நற்புகழ்சி
றப்பு ரைத்தியென முனிவரன்.

எ - து:—சார்வ பௌமனாகிய வரங்க நாயகரது திவ்விய சரணார விந்தத்தை யுபாசித்த குலிசன் சம்பரன் மார்க்கண்டேயர் பிருகு வசிட்டர் விசுவாமித்திரர் முதலாகிய பெயர்களெல்லா நித்திய சூரியர்களா யெம்பெருமான் சேவையைச் செய்து பரமபதம் போன்ற கோலாசலத்திலே வீற்றிருக்கின்ற கதாப் பிரசங்கங்களை யெல்லாங் கூறினீர் யாமுங் கேட் டானந்த பரவச மடைந்தே மிப்போ தும்மாலே யாமறிய வேண்டிய தியாதென்றால் மேகங்கள் சஞ்சரிக்காநின்ற உன்னதத்தோடுங் கூடிய மாட மாளிகையினையுடைய ஸ்ரீ மகா லட்சுமி மனோகரம் பொருந்தி யந்த நகரத்திற்கு வீர லட்சுமியினது பிரதாபத்தை யடைந்த சிங்கபுர மென்கின்ற காரணப் பெயரான திந்த வுலகெங்கணுஞ் சூழ்ந்திருக்காநின்ற தீரராகிய செயசாலிகளாலே கூறுகின்ற நல்ல சிறப்பினையுடைய வந்தத் தலத்தின தருமையைக் கூறவேணு மென்கின்ற விந்திர மகாராசனைப் பார்த்து நாரத முனிவ ருரைத்தா ரென்று நைமிசாரணிய விருடியர்களைப் பார்த்துச் சூதமகா முனிவர் கூறினு ரென்றவாறு. 1

248. பூரு வத்தின்மிகு சூர பன்மனிட
பொருப டைக்கதிப னாகிய
வீர வெற்றிபுகழ் சிங்க வர்த்தனெனும்
வீர னென்னுமதி சூரனுங்
கோர மாய்த்தவசு செய்து றுப்பினைகொ
டுந்த ணற்கிரைகொ டுத்துமா
மேரு வாமெனவி ளங்கு தேகமுமெ
லிந்து நின் றுநெடு நாளுமே.

எ - து:—பூர்வ காலத்திலே யசுர சூடாமணியாகிய சூரபன்மாவினுடைய வனுமதியைப் பெற்ற படைத் தலைவர்கட் கெல்லாஞ் சேனாதிபதியாகிய வீர வெற்றி பொருந்திய செயத்தினையுடைய பிரதாபசாலியாகிய சிங்கவர்த்தன னென்கின்ற வீராதி வீரனானவன் கோரமாகிய பஞ்சாக்கினி நடுப் பிரதேசத்தி லிருந்து பிரம்மாவை நோக்கித் தவம் செய்த காரணத்தினாலே மாமிசங்களை யறுத்துச் சமித்துக்களா யிட்டு மிரத்தங்களை நெய்யாய்த் தூவியுஞ் சரீர வுறுப்புகளை யெல்லா மறுத்தக்கினிக் கிரை கொடுத்துந் தனது மேரு கிரியைப் போன்ற வுடலமானது மிகவு மெலிந்தா னென்றவாறு. 2

249. அயன ளித்தவர பால னத்திற்பல
மதிக ரித்தமரர் தங்களைப்
பயமு றுத்திடவ டித்து பொன் னுலக
ழித்து பாரில்முடி மன்னவர்
நயமு ரைத்தடிப ணிந்து பொற்றிறைகொ
டுக்க நற்புவிக ளியாவினுஞ்
செயம ணித்திகழ வெதிரி லாதரசு
செய்து நின்றுநிகழ் காலையே.

எ - து:—இவ்விதமாய்ச் சிங்கவர்த்தன னானவன் கோரமாய்ச் செய்கின்ற தவத்தினைக் குறித்துப் பிரம்மாவானவ ரன்ன வாகனரூடராய் நாமகளமனோகரரா யவனுக் கிரங்கி யனுக்கிரகஞ் செய்த வர பாலனத்தினாலே திரிபுவனத்துக்கும் சக்ரேச்வரராய் வெண்கொற்றக் குடையினது நிழலினிருந் தரசு செய்கின்ற காலத்தின் தேவாதிகளை யெல்லாந் தண்டித்துப் பயமுறுத்தியும் பொன்னுலகத்தினை யழித்து மிப் பூமியை யரசாட்சி புரிகின்ற வைம்பத்தாறு தேசத் தரசர் முதலாகிய மவுலி புனைந்த பேர்களெல்லா நல்ல நயப்பாகிய வார்த்தையைக் கூறி யவனது பாத தாமரையினைப் பணிந்து பொன் றிறைகளைக் கொடுக்க விந்த வுலக முதலாகிய லோகங்களெல்லாஞ் செய மணியானது முழங்க தனக் கொருவருமெதிரில்லாதவர்களா யரசாட்சி செய்து செயசாலியா யிருக்கின்ற காலத்தி னென்றவாறு. 3

250. எதிர்த்த சூரரைவ தைத்த சேயனைய
ழைத்து விந்திர னுரைத்திட
வுதித்த செங்கதிரெ னத்தி கழ்ந்தமுடி
யோடு குண்டலமி லங்கவே
கதித்த மாமயிலி னேறி வேலிறெடு
கனக பொற்குடைநி ழற்றவே
கொதித்த வானவர்ர தத்தி னேடுமகிழ்
கொண்டு சென்றனர்கள் மருவியே.

எ - து:—நாரத மகா முனிவராலே தனக்கு வந்த இடுக்கத்தைச் சொல்லக் கேட்ட விந்திர மகாராசனானவன் தாருகாசுரன் சூரபன்மன் முதலாகிய போர்களெதிர்த்த காலத்திலே வதை புரிந்து நமக்குத் தேவ பதவியைக் கொடுத்தருளிய தேவசேனாதிபதியாகிய சேயாகிய சுப்பிர மணியரை யழைத்து வவ் விந்திரனானவன் தனக்கு வந்த இடரை யெல்லாஞ் சொல்லக் கேட்ட குமார னானவர் உதய கிரியிலே உதிக்கா நின்ற செங்கதிராகிய சூரியனைப் போலப் பிரகாசிக்காநின்ற வாறு மவுலிகளும் பன்னிரண்டு குண்டலமும் பிரபையினை வீசப் பாரித்த மயில் வாகனரூடராய் வச்சிர வேலானது கரதல கமலங்களிலே பிரகாசிக்கக் கனக மயமாகிய பொற் குடையானது திருமுடியின்மேல் விரிந்து ஒளியினைக் காலப் பிரவேசித்த மாத்திரத்திலே தேவ கூட்டங்க ளானவர்கள் கோபித்துத் தத்த மிரதங்களிலே யாரோகணிதராய்க் காண்டீபத்தைக் கையிற் றாங்கி வச்சிர கவசங்களைப் புனைந்து முதுகிலே யம்பறாத் தூணியை யிறுகக் கட்டிச் சிவசுப்பிரமணியருடைய மயிலினைச் சூழ்ந்து வந்தார்க ளென்றவாறு. 4

251. இரத வெந்துரி யானை சேனைக
ளிலங்க வெண்டிசைக லங்கவே
பரவு கொண்டலென வண்ட மெண்டிசைப
டர்ந்த வானவர்ப ரந்தேர்
வரவு கண்டுமொழி கின்ற சாரணர்கள்
வந்து ரைத்திடம கிழ்ந்தபோர்ச்
சரத வெங்கலை தங்க ளோடுமெதிர்
கொண்டு நின்றுசமர் செய்தனன்.

எ - து:—இவ்விதமாய்த் தேவ கூட்டங்கள் முற்காலத்தைப் போலச் சயங் கொள்ளலா மென்கின்ற மன மகிழ்ச்சியோடுங் கூடினவர்களாய் ரத கெச துரக பதாதிகளாகிய நான்கு வகைச் சேனைகளுடனே தோற் கருவி துளைக்கருவி கஞ்சக் கருவி நரப்புக் கருவி மிடற்றுக் கருவியாகிய பஞ்ச நாதத் தொனிகளு முழங்க வெட்டுத் திக்குங் கறகறவென்று சுழன்று கலங்கிடத் தக்கதாகவு மாகாயத்திற் பரவிய சத்த மேகங்களினது தொனியைப் போலத் தேர்களினுடைய வண்டி சத்தங்களானது முழங்க வருகிற தேவ சைனியங்களைக் கண்டு சுக சாரணர்களாகிய வசுர தூதர்க ளானவர்கள் வாயுவேக மனோ வேகமாய்ப் போ யதிக துரிதமாய்ச் சிங்க வர்த்தனன் பாத கமலங்களின் வீழ்ந் தறிக்கை யிட்ட மாத்திரத்தி னவன் மந்திராலோசனை செய்து தன்னை நம்பி யிருக்கின்ற வெங்கல ரதக் காரரை யனேக கோடி பேர்களை யழைப்பித்து மற்ற மூன்று வகைச் சேனைகளையும் வரவழைத்துக்கொண்டு பதினெண் வாத்திய முழங்கத் தக்கதாய்ச் சமர்க்களத்தின் வந் ததிர்த்தா னென்றவாறு. 5

252. கடல்க ளோடுபெரு கடல்க ளாமெனக
லந்து நின் றுசமர் செய்திட
வடல்மி குந்தசுர ரமரர் தங்களைய
டித்தி டித்துடலம் வேறதாய்க்
குடர்கள் குண்டிகள்ச ரிந்தி டப்பெருகு
குருதி யுண்டுமகிழ் கொண்டபின்
வடவை போலெதிரின் மயிலி னேறுதிகழ்
மதிகள் கோடியென கண்டனன்.

எ-து:—சுப்பிரமணியருடைய சேனைகளானது கருங் கடலினை யொத்தன வசுர சேனைகள் பெரும்புறக் கடலினை யொத்தன விவ் விரு திறத்தனவாகிய சேனைகளுங் கலந் தரிய போரினை விளைத்திட்டபோது வலியினு லுயர்ந்த வசுர சேனைகளினின்ற யூகத்தலைவர் சேனைத்தலைவர் மந்திரியர்கள் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் முதலாகிய பேர்க ளானவர்கள் தேவ சைனியங்களைக் கதைகளாலே யடித்து மிருப்புலக்கை களினுலே யிடித்து மவரவர்கள் வாள்கள் கண்டகோடாலிகளாலே யவயவங் களை வெட்டியு முடல்களைச் சின்னுபின்னப்படுத்தியும் குடர்கள் குண்டிகள் முதலான தெல்லாஞ் சரிந்திடச் செய்தும் ரதங்களை யுடைத்து மியானைப் பந்திகளை யழித்தும் சவக் கூட்டங்களை நீருக்கியும் மகிழ்ச்சியை யடைந்தார்க ளப்படியாகிய காலத்திற் றேவ சேனுதிபதியானவர் கண்டு வடவா முகாக்கினியைப் போலக் கொதித்துச் சீறி மயில் வாகனத்தின் மே லாரோகணிதராய்க் கோடி சந்திரர் கூட்ட மிட்டது போன்ற வாறு திருமுகங்களுடனே வந்தெதிர்த்தா ரென்றவாறு. 6

253. கண்ட சூரனெதிர் கொண்டு காலனென
கடுகி வெஞ்சமர்மு டுக்கியே
யண்ட மூடுருவ நின்ற மாரதம
ழித்து பொற்கொடிய றுத்துபோர்
சென்ற தேவரொடு நின்ற வேலவர்செ
ருக்க ளத்தின்மத யானைபோ
னின்ற பேர்களைய ழித்தி டக்கணைகள்
சிதறி நீள்சமரி யற்றினுன்.

எ-து:—இத் தன்மைத்தாய் முற்காலத்திலே சூரபன்மா முதலாகிய வளவிறந்த சேனை வெள்ளங்களை யழித்துத் தேவர்க ளிடுக்கண் தீர்த் தருளிய சுப்பிரமணிய தேவரானவர் மயில் வாகனுரூடராய் வந் தெதிர்த்த காரணத்தினைக் கண்ட சூரனுகிய சிங்கவர்த்தனனுனவன்

கோடி யெமதர்ம ராசரானவர் ஒன்ருய்க் கூடி யெதிர்த்தா லெத்தன்மைத்தோ வத்தன்மைத்தாய் வாயு வேக மனோவேகமாய்த் தன திரதத்தை நடாத்திக்கொண்டு வந்து குரூரமான காண்டீபத்தை வணக்கி நாணேறிட்டுக் குணத் தொனி செய்து சரமாரிகளாய்ப் பொழிந்தா னதனுலே தேவாதிக ளண்டரண்ட பகிரண்டங்களை யெல்லா மூடுருவி நிற்காநின்ற ரத பந்திகளை யுடைத்துப் பொன்மயமாகிய டெக்கியங்களாகிய கொடிகளை யறுத்துக் கீழே தள்ளிப் போரினைக் குறித்து வந்த வேலவனுடனே வந்த தேவ கூட்டங்களின் மதப்பட்ட யானையைப் போல நின்ற பேர்களை யெல்லா மழித்திடத் தக்கதா யனேகமாகிய சர தாரைகளைக் கரோரவேக சரோர வேகமாய்ப் பொழிந்தான் சிங்கவர்த்தன னென்றவாறு. 7

254. மனத்தினிற் கோப மீறி
வளைந்துசெஞ் சரந்து ரந்து
வனத்தினை யெரிக்குங் காண்டா
வனலென வெரிக்கும் வெய்யோன்
கனத்தினிற் கணைகண் மாறி
யெய்தவன் கடித விக்கச்
சினத்தினுங் கொடிய வைவேற்
றுரந்தவன் சேனை மாய்த்தான்.

எ - து:—சுப்பிரமணியரானவர் தமது ரத கெச துரக பதாதிக ளாகிய நான்கு வகைச் சேனையினையுஞ் சேனுதிபதிகளையுஞ் சிங்கவர்த்தன னைவ னதப்படுத்தின மாத்திரத்தின் தமது ருத்திர காண்டீபத்தினை வளைத் தசுரர் கூட்டத்தின்மீ தக்கினி சந்தானங்களைக் கரோரவேக சரோரவேகமாய்ப் பொழிந்து வனங்களிலே பிரசித்தமாகிய காண்டா வனத்தைத் தகியாநின்ற காடாக்கினியைப் போ லசுர கூட்டங்களை நீருக்கும்போது வெய்யோனுகிய சிங்கவர்த்தனனுனவன் கோபித்துத் தனது நான்கு வகைச் சேனைகளும் பலாசனமாய்த் தொலைந்துபோனது மக்கினியானது தன்னகரத்தைச் சூழ்ந்துகொண் டெரிக்கின்றதுங் கண்டு தனது வில்லினை வளைத்துக் கரோரவேக சரோரவேகமா யனந்த கோடி வருணுஸ்திரத்தைப் பொழிந் தந்த வக்கினியை யெல்லாந் துரிதமா யவித்தா னென்றவாறு. 8

255. வடவரையி னிமையவரை யெனவிருவர் முடுகியடர்
வரிகளென வகில வுலகுங்
கிடுகிடென விரணியனு நரசிமமு மெனகடுகி
கிளர்வரைக ளிலகு பொடியா
யடல்மிகுதி யுடைசிவனு மிடமகல கடைவடவை
யனல்கொளிய தெனமுனிவரு
முடனகல கதிர்மறைய வுலகதிர திசைகளிறு
மொலிகளிட பெருகி யதரோ.

எ-து:—இந்தப் பிரகாரம் சிங்கவர்த்தனனுனவன் றனது நகரத்தை வருணஸ்திரத்தாற் குளிர்ச்சி செய்த பின்பு தேரை நடாத்தித் தேவ சேனாதிபதி முன்பாக வந் ததிர்த்தா னதெப்படி யிருந்த தென்றால் மகாமேரு கிரியு மிமோற் பர்வதமு மொன்றோ டொன் றெதிர்த்தது போலுஞ் சிங்கத்தோடு சிங்க மெதிர்த்ததுபோலு மிரணியாசுரனுடனே நரசிங்க மெதிர்த்ததுபோலு மிருவர் தேரும் வலசாரி யிடசாரியா யட்ட குலாசல பருவத மகாமேருகிரி யெழுகடல்க ளதி னிருக்கின்ற தீவாந் தரங்கள் சக்ரவாளகிரி உதயகிரி பருவத மண்டப் பித்திகை முதலாகிய விடங்க ளெல்லாந் திரிந்து யுத்தஞ் செய்யும் பருவதங்க ளெல்லாந் தூளியாகியும் வெற்றியையுடைய சிவனுங் கயிலாய கிரியைவிட் டோட வூழி காலத் தக்கினி பிரவேசித்த தென்று முனிவர்க ளோடவுஞ் சூரியர் முதலாகிய பேர்கள் மறைந்துபோகவு மட்டதிக்குக் கெசங்கள் வீறிடவு மிப்படியா யுத்தஞ் செய்தார்க ளிருவரு மென்றவாறு. 9

256. கணைகள்பல வசுரெறிய கணைகளறு முகனெறிய
கணைகளினில் பொடிபொ டியதா
யிணைகணைகள் தசகணைகள் சதகணைக ளிவனெறிய
வவனுமுடன் முறிய சிதறத்
துணையொருவ ரிலைகருதி வருவதரி தெனகுயவர்
திகிரியென சுழல விவர்தேர்
பணையொலிகள் வலவரொலி திரணமென வுறுகணைகள்
படபடென விடுக ளெனவே.

எ-து:—பலபல சரமாரிகளை யசுரனுனவன் தனது காண்டீபத்தி னின்றும் விட வத்துணைப் பகழியை யறுமுகவன் றூவிக் கண்டித்துக் கீழே தள்ளின ரதன்பின் பிரண்டு குரூரமான பல்லவங்களையும் பத்துக் கணைகளையு நூறு கணைகளையு மீட்டுந் தூவினன் குமரகுருபர மூர்த்தியு மத்துணைச் சிலீமுகங்களை விட்டுக் கண்டித்துத் தள்ளின ரதன் பின்பு

சிங்கவர்த்தனனுனவன் குரூரக் கணைகளால் குகன் சரீரத்தி னழுத்தினு னப்போது தேவ சேனுதிபதியானவ ராதர வில்லாதவரா யாலோசித் திவனைச் சங்கரிக்க ரதத்தை நடாத்தத் தக்கதாகச் சாரதிக்குக் கட்டளை யிட்டா ரிருவர் தேர்களுங் குலாலன் சக்கரம் போல வலசாரி யிடசாரி யாய்த் திரியப் பதினெண் வாத்யங்களுந் தொனிக்கச் சாரதிகள் கோட்டங்களுங் கணைகளினுடைய படபட வென்கின்ற கோட்டமு மிடிகளைப்போல முழங்க வண்டரண்ட பகிரண்டங்க ளெல்லாந் திரிந்து சமர் செய்தார்க ளிடியினது முழக்கத்தினைப்போ லென்றவாறு. 10

257. தருகவிவ ரிருவரினு மொருவரரி கணைதரவு
மொருவர்மழை கணைத ரவுமற்
றொருவரிருள் கணைதரவு மொருவர்கதிர் கணைதரவு
மொருவரடர் மழைகணைதர
வொருவர்வளி கணைதரவு மொருவரிடி கணைதரவு
மொருவர்கரி கணைத ரவுமா
யொருவரரி கணைதரவு மொருவிருவ ரிகல்மலைய
வொருவரொரு வரைம டிதர.

எ - து:—இவ்விதமாய்ச் சுப்பிரமணியருஞ் சிங்கவர்த்தனனு மொருவ ரக்கினி கணைகளைப் பொழிந்தா லொருவர் வருணப் பல்லவங்களைப் பொழிந் தவிப்பார்க ளொருவ ரிருட்கணைகளைப் பொழிந்தா லொருவர் சூரிய சிலீமுகத்தா லதப்படுத்துவார்க ளொருவர் மேகக் கணைகளை விட்டா லொருவர் பிரசண்ட மாருதக் கணைகளா லதப்படுத்துவார்க ளொருவ ரிடியாகிய சிலீமுகங்களை விடுத்தா லொருவ ரந்தகன் கணையால் விலக்குவார்க ளொருவ ரியானையினது சந்தானங்களைப் பொழிந்தா லொருவர் சிங்கக் கணையினுலே மாற்றுவார்க ளிப்படியாக விரு திறத்தினர்களு மொருவருக் கொருவ ரிளையாதவர்களா யண்டங்கள் மகாமேரு வட்ட குலாசலங்கள் சத்த தீவாந்தரங்களுஞ் சென்று சமர் புரிந்தார்க ளென்றவாறு. 11

258. வரவரவு முதிரசின மடுகணைக ளறகொடிக
ளறகுணமு மறவ ரிசிலை
நெறநெறென முறியவவ ரெறியமறு சிலைகைகொள
நெரியசர மழைய தனிலே
புரவிதலை யறவுருளை பிளவுபட வனகமுடல்
பிளவுபட வலவ னுடலஞ்
சிரமுருள விருவருடல் படபடென கணைநுழைய
வதிகசெய விறலை முருகன்.

எ - து :—இரு திறத்தினரு மொருவருக் கொருவர் மாருத கோபத்தினை யுடையவர்களா யொருவர் சிலீமுகங்களை யொருவர் கண்டித்து மொருவர் துசபடத்தினை யொருவ ரறுத்துங் குணத்தொனியா லண்டத்தைப் பிளவுபடுத்துகின்ற வொருவர் காண்டீபத்தை யொருவர் பளபள வென்று முறியத் தக்கதாகச் செய்து மிமை திறக்கு முன்பு மொருவருக் கொருவர் காண்டீபங்களை வளைத்தும் குணத்தொனி செய்த மாத்திரத்தி னதனையுங் கண்டித்துக் கீழே தள்ளியு மறுபடியு மற்றொரு காண்டீபத்தை வளைத் தனேக சந்தான கணை மாரியினைத் தூவித் தேரிற் பந்தித்த வசுவக் கூட்டங்களைக் கண்டித்துந் தேர்களைச் சின்னபின்னமாகச் சிதைத்து முருளைகளைப் பிளவுபடுத்தியு மரக்க ருடல் பிளவுபடவுஞ் சாரதிகள் பிளவுபட்டுத் தலை யுருளவு மிருவ ருடலங்களுங் கணைகளால் துளைக்கப் பட்டுப் படபடவென் றுடலந் துடித்தாலுங் கோப மாருத சிங்கம்போல் மாருத சமரினை விளைத்தார்க ளென்றவாறு. 12

259. அசுர னுடல் துளைவுபட முறியசிலை வெறியகணை
யனிகமுழு தினும மிழியவோர்
நிசிசரரு முதவியில பரிகரிக ளுதவியில
நிறையவுயிர் கணைம ழையினல்
பசபசென விழிபுரள ரதமறிய தொடையுதற
பகர்கரமு மதிர வுடல்மேல்
விசிகமுற குருதிதிரள் மலையருவி யெனபெருக
விடசமுக மெனவி ரைவிலே.

எ - து :—இத் தன்மையா யிருவரும் சமர் புரியுங் காலத்திலே சுப்பிரமணியருடைய காண்டீப பல்லவங்களாலே சிங்கவர்த்தன னுடல மெல்லாந் துளைபட் டிரத்த வெள்ளம் பெருகக் காண்டீபமும் பிளவுபட்டு ரத கெச துரக பதாதிகளாகிய நான்கு வகைச் சேனைகளுங் கரிந் தெரிந்து நீறாச்சு தப்போ தொரு பரிசனங்களு மில்லாதவனைக் கலங்குங் காலையில் மீட்டுங் குமரகுருபர மூர்த்தியினுடைய குரூரமாகிய கணைக ளானது வந்து தாக்குதலாலே பசபசவென்று விழித்து வவ னிரதமும் பங்கப்பட் டிரண்டு தொடைகளு முதறி நடுக்கமெடுக்கக் கைக ளிரண்டு மசந்துபோ யுடல மெல்லாந் துளைபட்ட வழியிற் குருதிநீர் மலையின தருவியைப் போலப் பெருகப் பல்லவங்களின் விட கூட்ட சமூகங்களாற் கலங்கிப் பரதவித்தான் சிங்கவர்த்தன னென்றவாறு. 13

260. தவசினிலே யதனில்பல கதிரவர்க ளெனவொளிரு
கனகரதம் வரவ தனின்மேல்
கவசமொடு சிலைகணைகள் பலவுமிகு துரிதமொடு
கரவிரைவி லணிய வுலக
மவசமுற சிலைவளைய வடுகணைகள் பலவுதிர
வரிகரியை யடுவ தெனவோர்
துவசமற பரியழிய வலவனுடல் தடியவரி
சிலையழிய தொடைநி றையவே.

எ - து:—இத் தன்மையனு பரிணாத்துக் கணைந்துச் செய்யுங் காரியந் தவிருங் காரியந் தெரியாதவனும் மதி மயங்கும்படியாகிய சிங்கவர்த்தனன் பிரம்மாவைக் குறித்துச் செய்த தபோ பலத்தினாலே பல சூரியப் பிரகாசம் போலக் கனக மயமாகிய வொரு தேரான துதவியாச்சுது வதன்மே லாரோகணித மானபின்பு வந்த ரதத்தி னிருந்த வச்சிர கவசத்தினைப் புனைந்து மகாமேருவினைப் போன்ற காண்டீபத்தைக் கையி னெடுத்துப் பலபல கணை மாரிகளைப் புங்கானு புங்கமாய்க் கரோவேக சரோ வேகமாய்ப் பொழிந்தா னப்போ துலக மெல்லா மரண மூர்ச்சை யடைய வொரு வீர சிங்கத்தினை மதப்பட்ட யானையானது கொல்லத்தொடங்கினது போலச் சுப்பிரமணியருடைய தேரிற் கட்டிய துச படத்தினை யறுத்துக் கீழே தள்ளி யதன்பின் தேரிற் பந்தித்த குதிரைகளைக் கண்டித்து மீட்டுஞ் சாரதி தலை யறுத் ததன்பின் காண்டீபத்தைக் கண்ட துண்டப் படுத்தி யனேக சிலீமுகங்களைத் தொடுத் தார்ப்பரித்தா னென்றவாறு. 14

261. சிரநெரிய வுரமதனி னுதிரநிறை குமரபதி
திறநெரிய சினவி யவனுங்
கரமுதற நுதலின்மிகு கணைபுதைய துணைநெரிய
கவசமற வவச முறமேல்
சரமழைகள் முழுதுநிறை யுடல்பதற விபுதர்குல
சருகெரிய வனல மெனவச்
சுரனுடியி லனிகதொகை பிளவுபட விடிகள்விழ
சுழலரவ மெனவி வனுமேல்.

எ - து:—அந்தச் சிங்கவர்த்தனனவன் குரூரமான கணைகளாலே சிரசானது நெரிந்து போகவு மார்பகத்தி னுதிர மாரி பொழியவுங் குமரகுருபர மூர்த்தியினது வலியான தழியவு மவன் செய்த கொடுமை யினாலே கோபக் குரோதங்களால் கரங்களான துதறவு மவருடைய

நெற்றியிலே சிங்கவர்த்தனன் கணைகளானது தைக்கவுந் துணையாகிய தேவ கூட்டங்க ளொரிந்து போகவும் வச்சிர கவசமானது பிளவுபடவு மாயாசப் பட்டவுடனே மறுபடி கணை மாரிகளானது மூடவு மதனாலே வுடலானது பதறவு மக்கினியாற் சருகெரிந்ததுபோல நான்கு வகைச் சேனைகளு மக்கினிப் பிரவேசமா யிடி விழுந்த சர்ப்பக் கூட்டங்களைப் போலக் கலங்கினர்க ளென்றவாறு. 15

262. மயில்நினைய வரவஃதுவு முதவியில வுடல்சரிய
வவனிமிசை மதித ளர்வுறக்
கயிலயிலு முதவியில கணைகள்பல நிறையவவர்
கவலைமிகு வவச முறுகால்
புயல்வணனை மனமுருகி மிகதொழுது வருளுமென
புனிதமறை யுரைசெய் படியே
மயலொழிய விருகணிலு மருவிவர கரமுகிழ
மனதினிவ னுருநினையவே.

எ - து :—அப்போது குமர குருபர மூர்த்தியானவர் சூரபன்மா வாகிய மயிலினை நினைக்க வதுவும் வந் துதவி யாகாமற்போ யவருடைய சரீரமானது துளைபட்டுத் தளர்ச்சி யடைந்துங் கையினிருக்கின்ற வேலாயுதமாகிய வஸ்திரத் தேவதையுந் துணையாகமற் போய திந்தக் காரணங்களை யெல்லாம் யூக புத்தியினன் மதித் துணர்ந்த வடிவேல ரானவர் நீருண்ட காளமேகம் போன்ற நாராயண மூர்த்தியினுடைய நித்ய வனந்த கல்யாண விபூதி விக்ரக சொரூபத்தை மனதி னுபாசித்து வேத வாக்கிய பதக்கிரம சடைகளாலே தோத்தரித்த மாத்திரத்தின் மூர்ச்சை தெளிந் திரு கண்களினு மானந்தத் துளி துளிக்க வுச்சியிற் கூப்பிய கராம்புயத்தை யுடையவரா யிடைவிடாது நினைந்துருகினா ரென்றவாறு. 16

சிங்கவர்த்தனன் யுத்த முரைத்த வத்தியாயம் முற்றிற்று.

## பதினெருவது : சுப்பிரமணியர் சரணகதி யடைந்த வத்தியாயம்

263\. கோர மிக்கவுயர் நார சிங்கவுரு

கொண்டு தேனலர்கொள் மாலையான்

பார நற்சிலைகொள் வீர பொன்னனுயர்

மார்பி னைப்பிளவு பட்டிட

வீரல் நற்குடல்ச ரிந்து செம்புனல்கள்

விரிய வுண்டுவிய னசுரர்கள்

சார மற்றவர்க டிறல ழித்தசர

ணர விந்தமது சார்ந்தனன்.

எ - து :—இத் தன்மையாய்ச் சிங்கவர்த்தனனாலே கிலேச மடைந்த குமர குருபர மூர்த்தியானவர் கோரத்தினாலே மிகவு முயர்ச்சியை யடையா நின்ற நாரசிங்க மூர்த்தியினது வுருவத்தை யெடுத் தனந்த கல்யாண குண விபூதி லீலைகளைச் செய்தருளிய தேன்களைச் சொரியாநின்ற மலர் மாலையை யுடையவன் பாரமாகிய காண்டீபத்தை வளைக்காநின்ற வீரத்தினா லுயர்ந்த விரணியாசுரனுடைய வுயர்ந்த மார்பகமானது பிளந்து போகத் தக்கதா யவன தீரலையுங் குடலினையுஞ் சரியச்செய்து செம்புனலாகிய குருதி வெள்ளங்களை யெல்லாஞ் சுவறத் தக்கதா யுண் டளவில் பெருகிய நான்குவகைச் சேனைகளும் வந்து வளைய வவர்களினது புச பலங்களை யெல்லா மழித்துக் கர்வ பங்கப்படுத்துகின்ற நாராயண மூர்த்தியினது வுபய சரணரவிந்தங்களைச் சார்ந் துபாசித்தார் சிவ சுப்பிரமணிய ரென்றவாறு. 1

264\. வேத நற்சொருப மாகி மிக்குயர்வி

கங்க நற்புருடன் மீமிசைப்

பாதம் வைத்தொளிப ரப்பி யண்டமுழு

துண்டு மிழ்ந்ததிறல் பரமனைக்

காதல் பெற்றவரி டுக்க ணீக்கியருள்

கமல கண்ணிணைக ருத்தினிற்

போத முற்றதிறல் குமர நற்குருகு

றித்து பொன்னடிபு கழ்ந்தனன்.

எ - து :—அப்படிக் குமர குருபரனானவர் நாராயண மூர்த்தியினது உபய சரணரவிந்தத்தினை யிடைவிடா துபாசித்த செயலை யறிந்து வேதத்தினது காண்டங்க ளட்டகங்க ளாரணங்கள் சாகைகள் பருச்சங்கள்

வர்க்கங்கள் பதக்கிரம சடைகள் முதலானவைகளை யெல்லா மவயவங்களா யுடைய மகா மேருவினைப் போன்ற கருட பகவான் பிடரியி னெழுந் தருளி யவர துபய கராம்புய மலரிற் பாத கமலங்களைத் தரித்துப் பிரகாசித் தண்டரண்ட பகிரண்டங்களை யெல்லா முண்டு மீட்டு முமிழா நின்ற திறலினையுடைய பரமான்மாவை யபேட்சித்து மெய்யன்பைச் செலுத்திய பேர்களிடுக்க ணீக்கி யனுக்கிரகஞ் செய்யாநின்ற செந்தாமரைக் கண்ணிணை யுடையவன தருளைக் குறித்து வேத வேதாந்தங்களாலவரது ஸ்ரீபாத கமலங்களைப் புகழ்ந் துருகினு ரென்றவாறு. 2

265. கள்ள மிக்கதிற லசுரன் வஞ்சனைக
ருத்தி னுளமெ லிந்தியா
னுள்ள நெக்குருகி யுளைய டைந்தனனு
யர்ந்த வெம்படைகொ ளாழியாய்
தள்ள ரும்புகழ்ப டைத்த வித்தகுவர்
தானை வேந்தனைமு டித்திடர்
விள்ள நற்கருணை புரிகு வாயெமது
விமல னேகருணை யமலனே.

எ-து:—இத் தன்மையாய் நாராயண மூர்த்தியினது அனந்த கல்யாண விபூதி மங்கள குணங்களையு முபாசித்துப் புகழ்ந் துருகிய குமரகுருபர மூர்த்தியானவர் கபட சூது புரட்டினுலே திறலமைந்த சிங்கவர்த்தனனு லியா னுள மெலிந்து நெக்குருகி யுனது காருணநிதியாகிய சரணர விந்தத்தை யுமது கிருபாநோக்கத்தா லடைந்தேனெம் படையாகிய சங்கஞ் சக்கரங் கட்கங் கோதண்டம் வாளாகிய வைம்படைகளைத் தரிக்காநின்ற சதுர்ப் புசங்களையுடைய திருப்பாற்கடலி னனந்த சயன விமான சேகரரே தள்ளுதற் கருமையாகிய பெரிய வலியினைப் படைத்த விந்தத் தகுவராகிய வசுர கூட்டங்களினது சதுரங்க தளத்தினுக்கு வேந்தனுகிய சிங்கவர்த்தனனை வதைத் தென திடரானது விட்டு நீங்கக் கருணையைச் செய்து பாதுகாப்பா யெமக்கு விமலனுகியு மமரர்களுக்குத் தலைவனுகியு மிராநின்ற நாராயணனே யென்றுர் சுப்பிரமணிய ரென்றவாறு. 3

266. என்று கூறிகும ரேச னின்பொடுவி
றைஞ்ச வெம்பெரும குருபரன்
சென்று நற்கருட னேடு மாமவுலி
திகழ குண்டலமி லங்கவே
மன்ற லந்துளப மாலை மாமணிம
ருங்கி னிற்கனக வாடையு
நன்ற தாயொளிப ரப்ப நாண்மலர்கொள்
பதுமை தன்னையுந யந்தனன்.

எ - து :—இவ்விதமாய்ச் சரணுகதி யடைந்த குமர குருபர மூர்த்தி யானவர் வந்தனஞ் செய்ய வந்த வந்தனையை மகிழ்விஞ லேற்றருளிய நாராயண மூர்த்தியானவ ரவர்க் கெதிர்ந்து வந்தருளினு ரவ ரெத்தன்மைய ரென்று லெம்பெருமானுகிப் பரப்பிரம்ம மூல காரணரானவர் கருட வாகனுரூடராய்த் திருச்சிரசிலே நவரத்தின மௌலியு மிரண்டு காதிலே கவச குண்டலங்களும் பிரகாசிக்கவுந் திவ்விய பரிமளங்களைக் கமழ்கின்ற துளப மாலையுங் கவுத்துவாபரணமு மார்பினிற் பிரகாசிக்கவுந் திருவரையிற் பீதாம்பர வுடையு நன்கிணையுடைய வொளிகளைப் பரப்பவு மாயிரத் தெட் டிதழினையுடைய பதும பீடிகையின் வீற்றிருக்காநின்ற ஸ்ரீ மகா லட்சுமி தேவியானவள் பிரதாபமாய்த் தோன்றிடத் தக்கதாகவுந் தோன்றினு ரென்றவாறு. 4

267. வணங்கி நின்றுகர முச்சி கூப்பிமகிழ்
கொண்டு ரைக்குமயி லவன்முன
மிணங்கு தேவசிறை செய்த சூரனிளை
யோரை மைந்தரையொ றுத்தயான்
உணங்கு கின்றனனவ் வசுர சேனபதி
யொருவ னுலெளிய னுகியான்
குணங்கள் தங்குபுகழ் குன்றி னன்பரம
குரவ னேயமரர் தலைவனே.

எ - து :—இத் தன்மையனவாகிய சர்வ மங்கள வந்தனை யோக்கிய ரூபமாய்த் தோன்றிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைக் கண் டானந்த மடைந்த குமர குருபர மூர்த்தியானவர் அவர் திவ்ய திருவடிகளிலே அனந்தமான தெண்டன் சமர்ப்பித்துக் கராம்புய மலரை யுச்சியிற் கூப்பினவராய் மகிழ் சிறந்து விண்ணப்பஞ் செய்கின்றுர் தேவரீர் திவ்விய திருவடிகளுக் கடிமைப்பட்ட தேவ கூட்டங்களை யெல்லா மாயிரத் தெட்டண்ட மாண்டு மிந்திர ஞாலத் தேரினையுடைய நூற்றெட்டுச் சதுர் யுகத்தி னளவுஞ் சயந்த மகாராசனுகிய விந்திர புத்திரன் முதலாகிய பேர்களை யெல்லாஞ் சிறை செய்து பருவரல் படுத்துகின்ற சூரபன்மன் சிங்கமுகாசுரன் தாருகாசுரன் முதலாகிய முதல்வர்கள் மூவர்களையு மவரது புத்திரராகிய பானுகோப னிரணியாசுர னக்கினிமுகாசுரன் வச்சிரவாகு மூவாயிரம் பிள்ளைக ளதிசூரன் சுரேந்திர னூற்றுவர்கள் முதலானோர்களையு மந்திரியாகிய தர்மகோபன் துர்க்குணன் காலசித் தென்கின்றோர்களையுஞ் சேனுதிபதிகளாகிய கோர னதிகோரன் கெசமுகன் தசமுக னுயிரவாகுக்க ளின்னங் கூறுகின்ற வனேக கோடி வெள்ளங்களையுந் தேவரீருடைய வனுக்கிரகத்தினுலே செயபதியாய்க் காண்டீபத்தினுல் விசயங் கொண்ட யா னிக்காலத்தி னந்தச் சூரபன்மனது சேனுதிபதியாகிய சிங்கவர்த்தன னொருவனுலே வாட்டமுற் றெளியனுய்த் தருக் கிழந்தே னதனு லெனது செய கீர்த்திக ளெல்லா மணமின்றிய

முருக்கம் பூப் போலப் பயன்படாமற் போச்சு தாகையா லெமது குருவாகியும் தேவாதிகளுக் கெல்லாம் பிதாவாயும் ரட்சிக்கப்பட்ட கர்த்தனே யென்று பணிந்தார் சுப்பிரமணிய ரென்றவாறு. 5

268. இன்ன வாறுதுயர் கூறு நற்கருணை
யிளவல் தன்முகம தித்தபின்
னன்ன வாகனமி வர்ந்த நான்முகன
ளித்த நல்லதொரு வரமதாற்
றன்னை யேபொருவு தான வன்வலித
ணந்தி டாதுயர்வு தங்கினு
னன்ன வன்றனைவ தைக்க வேல்கொடுவ
மர்த்தொ ழிற்புரித லரியதாம்.

எ - து :—இவ்விதமாய்க் கூறுகின்ற தேவ சேனாதிபதியாகிய சிவ சுப்பிரமணியரது திருவாய்மலரக் கேட்டருளிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் தமது திருவுள மகிழ்ந் தருள்செய்கின்றார் வாரீர் சுப்பிரமணியரே யந்த வசுரனே வென்று லன்ன வாகனத்தி னுரோகணிதமான நான்கு திருமுகங்களையுடைய பிரம்மாவானவ ரிந்தச் சிங்கவர்த்தனன் செய்த கோரமான தவத்தினுக் கிரங்கிக் கொடுத்த வெந்த வாயுத வஸ்திரங்களினுலு மழிவில்லாத வரபாலனத்தைப் பெற்றிருக் கின்று னுதலா னந்த வசுரனை வெல்வதற் குனது சக்தி வேலானு மாகா தாகையா னதற்கு வேறே யோ ருபாய மிருக்கு தென்றுர் ஸ்ரீமந் நாராயண மூர்த்தி யென்றவாறு. 6

269. ஆத லானெனது பின்றொ டர்ந்துவரி
னசுரன் மாளவலி கூறுதும்
போத வாவெனபு கன்ற மாதவன்பு
ரிந்த நற்கருணை பொலிவினுற்
சீத ளக்குமர னேக கண்டவசு
ரேசர் காவலன்செ ருக்கினு
னேத மாமெனவு யர்ந்த பேரிகையொ
லித்து பாசறையு யர்ந்தனர்.

எ - து :—ஆகையினுலே யெனது பின் தொடர்ந்து நீ வருவாயாகி னசுரேந்திரனைச் செயித்து வதைக்கத் தக்கதாகிய வலியினை யான் கூறுகின்றேன் ஞான போதத்தினையுடைய குகனே நீ வரக்கடவா யென் றருளிச் செய்கின்ற மாதவனது கருணையாகிய திருவாய்மலரினு

னலர்ந்த திருவாக்கினலே சீதளக் குமரனுகிய சாந்த தத்துவத்தினை யுடைய குமர குருபரனுனவர் பின் தொடர்ந்து மறைந்து போகுதலைக் கண்ட வசுர சேனுதிபதியாகிய சிங்கவர்த்தனனுனவன் மகிழ் சிறந்து செயபேரிகை யடிக்க வாக்யாபித்தா னப்படி யசுரக் கூட்டங்க ளெல்லாம் கூடி யண்டரண்ட பகிரண்டங்க ளெல்லாந் திரிந்து சயபேரிகை யடித்தார்க ளது பெரும்புறக் கடல்போல முழங்கிற் றப்பொழுது சிங்க வர்த்தனன் முதலாகிய சேனைக் கூட்டங்களானது யுத்த பாசறையாகிய கோட்டையிற் பிரவேசித் திருந்தார்க ளென்றவாறு. 7

270. புவன மியாவையு மாழியொன் றுருட்டியே பொருந்துங்
கவன வாம்பரிக் கதிரவ னத்தமாங் காலைத்
தவமி குத்தமற் றரையர்க்குத் தன்கரஞ் சுட்டிக்
குவல யப்பொருள் காட்டல்போற் சிவந்தனன் குடக்கின்.

எ - து :—இந்தப் பூமண்டலங்க ளியாவையு மேக சத்திரபதியாகிய புவன சக்கிரேசுவரனுய்ச் சக்கரத்தை நடாத்திப் பொருந்துகின்ற வேகத்தினை யுடைய வேத சந்தசேழுங் குதிரைத் தொகுதியாயுடைய ஞாயிறுன தத்தமானத்தை யடையும்போது தன தரசு நீங்கித் தவ மிகுதியினலே புவன சக்ரேசுவரனுய் வருகின்ற இதரமாகிய வரசனுகிய சந்திரனுக்குத் தனது விரலினைச் சுட்டி யிந்தப் பூமண்டலத்தின்கண் ணிலகாநின்ற பொருள்களை யெல்லா மவனுக் கொப்பித்துக் காட்டல் போன்று மேற்குத் திசைக்கண் சிவந்திருந்தான் சூரிய பகவா னென்றவாறு. 8

271. சில்ப கல்கழிந் ததற்பினே குடகடல் சேர்ந்து
பல்க திர்த்தொகை நீரிடைப் படர்ந்திடல் பலவா
மல்ல லோங்குபொற் கழையினு னீர்நிலை மதித்தற்
செல்ல லொத்தன கதிரவன் செறிந்திடு மியல்பே.

எ - து:—இவ்விதமாய்ச் சிவந்த கதிரவனுனவன் சிலகாலஞ் சென்ற பின்பு மேற்குத் திசைக் கடலின்கண் சேர்ந்த வளவி னவனது பல கதிர்ச் சமூகங்க ணீரின்கண் பிரதிவிம்பித்த லெத்தன்மைத்தெனில் பலவாய்ப் பெருமை தங்கிய பொன்னுற் செய் தமைத்த மூங்கிலினுலே யக் கடலினது நீரளவையினை மதித்துப் பார்க்குந் தன்மையினை யொத்திருந்தன கதிரவனது கிரண சமூகமான தந்தக் கடலினது நீரிலே தோன்றுத லென்றவாறு. 9

272. கதிர வன்கரந் திடுதலுங் காதலாற் காணச்
சதிய தானவள் சசிநுதல் கறைதில கமதாய்ப்
புதிய தாய்ச்செவந் திடுமங்குல் பூந்துகில் புனைந்து
கதியொ டுற்றுதே டியதுபோன் றதுகதிர் மாலை.

எ - து:—ஞாயிறான தத்தமானத்தை யடைந்த காலத்தி னவனது தேவியானவ ளவனைத் தேடிப் பிரவேசித்தபோது மூன்றாம் பிறைச் சந்திரனாகிய நெற்றியின்கண் ணதற்குத் தகுதியாகிய களங்க மென்கின்ற திலகப் பொட்டினையிட்டுச் செவந்த மேக சாலமாகிய பீதாம்பரத்தினை யுடுத்து அதி வேகமாய்த் தேடி வந்ததுபோன் றிருந்தது கதிரினையுடைய மாலைக்கால மென்றவாறு. 10

273. வான கத்தனி யேட்டினின் வரைந்தவக் கரம்போற்
பானி றத்தொளி தாரகை பரந்தவை பகரு
மூன மின்றிய வேட்டினின் மையினை யூட்ட
லான தாயது விருட்குழா மந்தர மடைதல்.

எ - து:—ஆகாய மென்கின்ற வொப்பற்ற வேட்டின்கண் ணெழுதா நின்ற வெழுத்தினது வருக்கம் போலப் பிரகாசித்தது பாலினது நிற மமைந்த தாரகையாகிய நக்ஷத்திரக் கூட்டங்களானது பரந்து பிரகாசித்தது ஊனமில்லாத அவ் வேட்டினுக்கு மையினை யிட்டா லெத்தன்மைத்தோ வத்தன்மைத்தாய் இருட் கூட்ட சமூகங்களான தந்தரத்திலே தோன்றுந் தன்மைய தென்றவாறு. 11

சுப்பிரமணியர் சரணாகதி யடைந்த வத்தியாயம் முற்றிற்று.

274\. இருதி றத்தினர்க ளேகி யாயிரமி
லங்கு மாமுடியி சைந்தபொன்
னுருவு தங்கியொளிர் மேரு மால்வரையி
னோடை செங்கமல வொள்ளிதழ்
மருவி யன்னம்விளை யாட வால்வளையொ
லித்து நின்றுமகிழ் கூர்தரும்
பெருகு பல்வளை நோக்கி சாரல்செறி
சோலை பெற்றியைமகிழ்ந்தனர்.

எ - து :—இந்தப் பிரகாரம் செயபேரிகை யறைந்த பின்பு ஸ்ரீமந் நாராயண மூர்த்தியுங் குமரகுருபரனுமாகிய விரு திறத்தினர்களு மந்த ரண களத்தினை விட்டு நீங்கி யனேக யோசனைகளைக் கடந் தாயிரத் தெட்டு மாற்றுகிய பொற்சிகரங்களையுடைய வடமேரு கிரியிற் றோன்று கின்ற பல வளங்களை மாதுலனு மருகனுங் கண்ட காட்சியாவது பலபல வோடைகளிலே யாயிரத் திதழினை யலர்ந்து விரிக்காநின்ற செங்கமல பீடத்திலே ராசவன்ன சமூகங்களான தேறி விளையாட் டயரவும் வெண்மையினையுடைய வலம்புரி யிடம்புரி சலஞ்சல முதலாகிய சங்கங்க ளந்தத் தாமரை மலரி னிவர்ந்து தொனித்துக் களிகூரவு மத் தன்மைத் தாகிய சிங்காரங்களை யெல்லாங் கண்ணுற்று மகிழ் சிறந்தார்க ளென்றவாறு. 1

275\. குன்ற கோபுரமு யர்ந்த நல்வளகு
ளங்க ளல்லிமலர் குறைவிலா
மன்றல் வீசிமண நாறு தென்றல்தவழ்
மாவி னந்தளிர ரும்பிட
வண்ட வாணர்கள்வ ளர்த்த வோமதழு
லாகு மீதெனவ றைந்தவர்
சென்ற காலைதிரு மாலி னின்னருள்சி
றப்பி னுனிவைநி னைந்தனன்.

எ - து :—பின்னு மந்த மகாமேருவி னிருவருங் கண்ட வதிசய மாவ தென்னென்றால் கிரியினை யொத்தனவாகிய வபரஞ்சி நவரத்தின கசிதமாகிய கோபுர நிரைகளு முயர்ந்த நல்ல வளங்களாகிய செந்தாமரை

வெண்டாமரை செவ்வல்லி நீலோற்பலம் செங்கழுநீர் முதலாகிய புட்ப சமூகங்களையுடைய தடாக பந்திகளில் செவ்வல்லி புட்பங்கள் பரிமிதமா யலர்ந்து பிரகாசிக்கவு மன்றலாகிய திவ்விய பரிமளங்களை வீசி மண நாறுகின்ற தென்றற் காற்றானது தவழாநின்ற காலையில் மாமரக் காவெல் லாந் தளிரை விரித்துத் தழைத்திருப்பதைக் கண்டார்க ளிது தேவர்கள் கூடிச் செய்யாநின்ற யாகத்தினது சிகையாகிய வாகவனீயங் காருகபத்தியந் தெட்சணாக்கினியினது சொலிக்குங் கொழுந் திதுவென் றெண்ணினார்க ளப்போது திருமா லானவர் தமது கருணையின திச்சா மாத்திரத்தா லாக புத்தியினாலே மதித் திவை நினைந்தருளினா ரென்றவாறு. 2

276. நூடித்த சூரரைவ தைத்த சேவலஞ்சி
றந்த நற்புகழ லர்ந்திடப்
படித்த லத்தினைய ளந்த தாமரைப
தத்த னற்கருணை பண்பினா
ளிடித்தெ ழுந்திருவ ராக நல்லுருவெ
டுத்து லீலைகளி ழைத்திட
வடித்த சுக்கிலமு தித்தெ ழுந்திடம
தித்து ரைத்தனன்ம கிழ்வினால்.

எ - து :—திருமாலானவர் சூரபன்மா முதலாகிய வசுரர்களை வதைக்கா நின்ற சேவலனாகிய சுப்பிரமணியரது செயமாகிய நல்ல புகழான மணங் கமழ்ந் தோங்கி யலர்ச்சியை யடையத்தக்கதா யிந்தப் பூமியை யெல்லா மளந்தருளிய பாத தாமரையினையுடைய பரந்தாமனானவர் தம திச்சா மாத்திரத்தா லிடிகளைப் போலக் கோஷ்டித்து வராநின்ற விரண்டு வராகமானது ஆணும் பெண்ணுமாய்ச் சரச சல்லாப விநோத லீலைகளை யனுபவிக்க வதிலே நின்றுஞ் சுக்கிலமான துண்டாக வதைக் கண்ணாற் கண்டருளிய சார்வ பௌமனானவர் களி கூர்ந்தா ரென்றவாறு. 3

277. பெருகு சுக்கிலம திற்பு குந்துபிரி
யாத மாமலையி னுருவதாய்
வருக வென்றுருக னுக்கு ரைக்கமகிழ்
கொண்டு சென்றதின்வ திந்தன
னுருவு கொண்டுமக மேரு புத்ரனென
வுயர்ந்த நல்லுருவெ டுத்தபின்
றிருவு தங்குசிறை தங்க மாமெனதி
கழ்ந்தெ ளிர்ந்திடசி றந்தனன்.

எ - து :—ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் சுப்பிரமணியரைப் பார்த்துத் திருவாய்மலர்ந்தருளுகின்று ரித் தன்மைத்தாகிய மகாமேருவிலே பெருகாநின்ற சுக்கிலத்தின்கண் ணுன தங்கிசமா யவதரித்து மகாமேருவினது புத்திரனு யுருவெடுத்து வரக்கடவா யென் றருளிச்செய்த மாத்திரத்திலே யவரு மகிழ்ச்சியை யடைந் தந்தச் சார்வபௌமனனுக்கிரக பிரகார மந்தச் சுக்கிலத்திற் றன தங்கிசத்தைச் செலுத்தினு ரதன் பின்பு மகாமேரு புத்திரனுகிய மலையுரு வெடுத்துத் திருவானது தங்கியிராநின்ற சிறையடிகளான தாயிர மாற்றுத் தங்க வுருவாய் விளங்கி யொளி சிறந்திடக் கிரி யுருவமாயினு ரென்றவாறு. 4

278. அந்த மால்வரையி னந்தை யிற்கமுக
லர்ந்த சோலைகட னைந்திட
முந்து நற்சுனைத டாக பந்திகளின்
முளரி மாமலர்கண் மொய்த்திட
விந்தி ரன் னுருவு கேச வன்னிசைவு
பெற்று வச்சிரமி லங்கவே
சுந்த ரக்கிரியின் வந்து தித்தனர்சு
ராதி பன்முனிவர் சூழவே.

எ - து :—அத் தன்மைத்தாகிய மகாமேரு கிரியினது சுபுத்திரனுகிய சுப்பிரமணியரது வங்கிசையாகிய கிரியிலே சுகுணமான கமுகந் தோப்புகளு மனேகமாகிய நந்தன வனங்களிலே யலராநின்ற கற்பகம் செண்பகம் மந்தாரம் பாரிசாதம் முதலாகிய நானு விதமாகிய புட்பங்களையுடைய சோலைக டழைத்தோங்கத் தக்கதாய் முதன்மையாகிய நல்ல சுனைகளுந் தடாக பந்திகளின் னடுப் பிரதேசத்திலே செந்தாமரைக் கமலங்கள் வெண்டாமரைக் கமலங்க ளலர்ந் தளவிறந்தன பிரகாசிக்கவு மத் தன்மைத்தாகிய கிரியின்மீது வச்சிர பாணியாகிய விந்திர மகாராசனுடைய வுருவினை யெடுத்து நாராயண மூர்த்தியாகிய சார்வ பௌமனுனவர் ஆரோகணிதமா யேறி நடத்திவரும்போது தேவ கூட்டங்களு முனிவர் கூட்டங்களுஞ் சூழ்ந்து வந்தார்க ளென்றவாறு. 5

279. மேரு மால்வரைசு புத்ர னுமெனவி
ளங்கி விண்ணிடையெ ழுந்திடச்
சோர்வின் மாமகுட குண்ட லந்திகழ்சி
றந்த விந்திரன டத்திடக்
காரு லாவுகடல் சென்று வெண்டிசைக
டந்து சிங்கபுர மணுகிடத்
தாரு லாவுசிறை வாளி னுற்கடிய
நகரின் வீழ்ந்தவரை சார்ந்ததால்.

எ - து :—மேரு மால்வரையான தனேக தவஞ்செய் தீன்றருளிய நற்குண நற்செய்கையினையுடைய சுபுத்திரனென் றியாவருந் துதிக்கத் தக்கதாகிய வந்தக் கிரியான தாகாயத்தின்கண்ணிலே பறக்கும்போது வதிலே யெழுந்தருளிய நாராயண மூர்த்தியானவ ரணிந்த நவரத்தின கசிதமாகிய கிரீடமு மகர குண்டலங்களு மாயிரந் தாமரை மலர் போன்ற கண்களும் பிரகாசிக்க விந்திர வுருவமா யந்தக் கிரியை நடாத்திக் கருங் கடல் முதலாகிய வேழு கடலினையு மெட்டுத் திக்கினையு நீங்கிச் சிங்க புரத்துக் கணித்தாய் வந்த மாத்திரத்திற் செயங்கொள்ளுந் தன்மையினை யோசித்த சார்வ பௌமனுனவ ரந்த நகரப் பிரதேச நடுவிலே கிரியை நடாத்தி யதுவந்து நடு மையத்தில் வந்தபோ தந்தப் பருவதத்தினது சிறகினை இந்திரனுகிய நாராயண மூர்த்தியானவர் தமது வச்சிர வாளினுலே வெட்டிச் சாய்த்தா ரப்போ தந்தக் கிரியான தந்த நகரத்தின் மேலே வீழ்ந்த தென்றவாறு. 6

280. வீழ்ந்த மாமலையி னுனி டிந்தனவி
ளங்கு மாளிகைசி றந்ததேர்
தாழ்ந்த யானைபரி காவ லாளர்க
டயங்கு மெய்பதைப தைத்திடச்
சூழ்ந்த மந்திரியர் சிங்க வர்த்தனொடு
சிதைவு பட்டுளமெ லிந்தன
ராழ்ந்த நன்னகர மிந்தி டக்குமர
னகம லர்ச்சியின்ம லர்ந்தனன்.

எ - து :—அத் தன்மைத்தா யந்த நகரத்திலே வீழ்ந்த மலையினுலே யிடிந்து வீழ்ந்தன மாடமாளிகைப் பரப்பமைந்த வீதிக ளெல்லாஞ் சிறப் பமைந்த தேர்க் கூட்டங்க ளெல்லாங் கலகலவென் றொடிந்து முறிந்து வீழ்ந்தன வேழமாகிய வானைகளெல்லாம் பூனைகளைப்போல் நசுங்கிப் போச்சுது குதிரைக் கூட்டங்க ளெல்லா நலிந்து வீழ்ந்தது பதாதி பந்திக ளெல்லாந் தூளிபடல மாச்சு திப்படியாகிய நான்கு வகைச் சேனைகளும் பதைபதைத்தார்கள் சிங்க வர்த்தனனைச் சூழ்ந்திராநின்ற வணித்தலைவர் யூகத்தலைவர் பட்டவர்த்தனர் மகுடவர்த்தன ரர்த்தரதர் சமரதர் மகாரதர் மந்திரிமார்கள் புத்திர பௌத்திரர்கள் முதலாகிய பேர்களெல்லாம் ராசேந்திரனுடனே சிதைவுபட் டுள மெலிந்து பதைத்துத் தூளிபடல மாயினுர்க ளந்த நகரமானது பாதாள பரியந்த மாழ்ந்து போச்சு ததைச் சிவசுப்பிரமணிய தேவரானவர் கண்டு மகிழ் சிறந்து களிகூர்ந்தா ரென்றவாறு. 7

281\. கமல கண்ணனிரு சரண பங்கயக
மழ்ந்த தாளிணைவ ணங்கியே
யமல மானகுக னறைகு வானடிய
னனுதி னம்முனைய கன்றிடா
விமல வெற்கருள்பு ரிந்தி டாயெனவி
ளம்பு வானுனது கலையினி
னிமல மானதொரு கலைதி கழ்ந்திடநி
றுத்து வாயெனநி கழ்த்தினன்.

எ - து:—ஆயிர மிதழினையுடைய செங்கமலத்தினை யொத்த தாமரைக் கண்ணனுடைய மணங் கமழாநின்ற வுபய சரணரவிந்தத்தை வணங்கின வரனைச் செயசாலியா யசுர குல காலனாகிய சிவசுப்பிரமணியர் திருவாய் மலர்ந்து கூறுகின்ரு ரடியனுனைவன் சந்ததமு முனைவிட் டகலாம லெப்பொழுது முனது வனந்த கல்யாண குண வைபவ தெரிசனத்தைக் கண் டானந்த வின்பத்தை யா னடையத் தக்கதா யெனக் கருள வேண்டுமென்று வரபாலனங் கேட்ப வந்தச் சிவசுப்பிரமணியரைப் பார்த் தருளிச்செய்கின்ரூர் வாரீர் சுப்பிரமணியரே யுமது தோசோமய மாகிய சோடச கலைகளிலே யொரு கலையினை யிந்தக் கிரியிலே யனுதினமு நிறுத்திடக் கடவீ ரென் ருக்யாபனஞ் செய்தருளினு ரென்றவாறு. 8

282\. தெண்டி ரைக்கடன் முகட்டினிற் கதிரவன் றேரோ
டண்ட வாணர்கண் முதலினர் வழுத்திட வலர்ந்த
புண்ட ரீகத்திற் ருேய்கதிர் விரிந்திடப் பொரிந்து
கண்ட துண்டம தாயது கனவிருட் பிழம்பே.

எ - து:—தெளிந்த வலையினையுடைய கீட்டிசை முகட்டினிற் கதிரவனாகிய ஞாயிறு சத்த புரவியோடுங் கூடி ரதாரூடனா யண்டவாணர்களாகிய தேவகூட்டங்கண் முதலாகிய திரிபுவன சமஸ்த சீவராசிகளுந் தோத்தரிக்க வலர்களை விரித் தொளிராநின்ற தாமரைக் கமலத்தின்கண் பொருந்துகின்ற தனது கிரண மாயிரத்தினையும் விரித்துப் பிரகாசித்த மாத்திரத்தின் கண்டதுண்டப்பட்டுப் பங்கப்பட்டு முறிந்துபோய் விட்ட தண்டங்களை மூடிய விருட் சமூகங்க ளென்றவாறு. 9

283\. பொன்னின் பேரிருே ணுல்கெலா நடுங்கிடப் பொருந்தும்
தன்னை யேபர மாமென ளுட்டதா ரணியி
னென்னை யாளுடை நாரசிங் கத்தவ னெழுந்து
வன்ன வன்றனை யட்டல்போற் கதிரிரு ளட்டல்.

எ - து:—பொன்னின் பெயரினையுடைய விரணியாசுரனனவ னிவ் வுலகத்திற் புவன சக்ரேச்வரனுய்ச் சக்கர முருட்டிய தலைவனுய்த் தன்னைப் பிரம மென் றிவ் வுலகத்தின்க ணுட்ட வஞ்ஞானத்தின்கண் ணின்றெடுத் தென்னையு மொரு பொருளா யாட்கொண் டருளிய நரசிங்க வுருவாய் வந் தெம்பெருமானனவ ரந்த விரணியாசுரனைப் பிளந்தது போ லிருந்தது ஞாயிருனது கிரணங்களா லிருளினை விழுங்க லென்றவாறு. 10

284. கயத்திற் பண்ணையிற் றடாகபந் தியினிடை களித்து
வியத்த காமர மளியின மிழற்றிட விரிந்த
நயத்த தாகிய நளினங்க ளாம்பல்க ணயந்து
பயத்த டைந்தன வளியினம் படர்ந்தன பாங்கர்.

எ - து:—கயங்களிலேயும் பண்ணைகளாகிய வயலிடத்தினுந் தடாக பந்திகளினு மியாவரும் வியக்காநின்ற காம விசைப்பாட்டினை வண்டினங்க ளிசைத்து மூக்கினு லுழுது சிறகினு லடித்துச் சட்பதங்களான் வருட விதழ்களை விரிக்காநின்ற நயப்பினையுடைய நளினங்களாகிய தாமரைச் சமூகங்க ளெல்லா மகிழ்வெய்திட வாம்பல்களாகிய செவ்வல்லிக ளெல்லாம் நலியப்பட்டுப் பயப்பிராந்தியை யடைந்தன வவற்றின்க ணிசைப் பாட்டினை மிழற்றுகின்ற வண்டினங்களானது பாங்கராகிய வக் குளத்துக் கருகான வுத்தியான வனத்தினுந் தாமரைக்கண்ணும் வதிந்தன வென்றவாறு. 11

285. வேத கீதங்க ளெழுந்தன வெழுந்தபுட் கணங்கள்
பாத பங்கயத் தரியினைப் பரவிமா னிடர்க
ளாத ரத்துட னெழுந்தன ரார்த்தன சங்கம்
நாதன் பூசனைக் கருத்தோ டருச்சனை நயப்பார்.

எ - து:—இவ்விதமாய்க் கீழ்த்திசை முகட்டி னருண சாரதியா னடாத்தாநின்ற தேருடனே கதிரவன் ருேன்றியவளவின் வேத கீதங்களான திவ் வுலகின்கண் முழங்கின பட்சி சாலங்களெல்லா மெழுந்தன பாத பங்கயத்தினையுடைய நாராயண மூர்த்தியை யந்தப் பிராதக் காலத்தி னுபாசித்த மானிடர்களெல்லா மாதரத்துடனே திருக்கண் மலர்ந்தார்கள் கோயில்கடோறு சங்கநாதத் தொனியான தார்ப்பரித்தன நாதனுகிய வச்சுத பரந்தாமனது பூசைக் கருகமாகிய சங்கபாத்திர புட்ப முதலியன வெல்லாம் விதி முறையின்படி யமைத்துப் பூத சுத்தி மந்திர சுத்தி யாதன சுத்தி முதலாகிய பஞ்ச சுத்தி செய்து தேவ பூசையினது விதிப்படி காலையிற் செய் தமைப்பார்கள் வைதீக ரென்றவாறு. 12

286. அறுமு கத்திளவ லன்று தொட்டுவரை
யதனில் தன் னுருவ மைத்தனன்
கருணை மாதவன கன்றி டக்கருது
கார ணத்தினைய றிந்தனன்
குமர நாயகனி னைப்பி ரிந்திவணில்
குறுகி டப்பெ றுகி லேனெனுத்
தமர சங்கவொலி செய்யு நாரண னுந்
தயையி னுலிவைகள் சாற்றுமால்.

எ - து:—அப்படி நாராயண மூர்த்தியானவ ரனுக்கிரகித்த மாத்திரத்தி னுறு திருமுகமும் பன்னிரண்டு புயங்களையுமுடைய விளவலாகிய சிவ சுப்பிரமணியரானவ ரன்று தொட் டந்தக் கிரியினிடத்திலே தம தங்கிசத்தி னொரு கலையினை நிறுவி வாசம் பண்ணினு ரதன்பின்பு கருணையோடுங் கூடிய மாதவனுகிய நாராயண மூர்த்தியானவர் தம்மை விட்டுப் பிரிகின்ற காரணத்தினைக் குறிப்பினு னறிந் தளவிலா விண்ணப்பஞ் செய்கின்றார் வாரீர் மகானுபவரே தேவரீரை விட்டுப் பிரியத்தக்கதா யடியேன் சகிக்கமாட்டே னுகையா லென்றும் பிரியாம லும தனந்த கலியாண விபூதி விக்ரக சேவை நிரந்தர மடியேன் சேவிக்கப் பிரார்த்திக்கிறே னென்றளவில் சப்தத்தையுடைய பாஞ்சசன்னிய சங்கத்தினைத் தமது திருப்பவள வாயின் வைத்துத் தொனி செய்கின்ற தயாபர மூர்த்தியானவர் கருணையினுலே ஒரு வார்த்தை யருளிச்செய்கிரு ரென்றவாறு. 13

287. சிலது நாளிவணி ருந்தி டப்பெறுதி
யாயில் சிலபகல்க ழித்தியான்
றலைமை யாகியநல் பூர ணுங்கிசந்த
ரித்து தாயகம தாகிய
நிலைமை காட்டுதுமி ருத்தி யையவென
நீங்கி னுன்குமர பதியவண்
பலன டைந்துசெய சாலி யாகியவர்
பதம லர்த்தொழுதி ருந்தனன்.

எ - து:—பின்னுங் குமரகுருபரனை யவர் கண்ணுலே கிருபையாகப் பார்த்துப் பரவாசுதேவரானவ ரமுத சமூகங்களைப் பொழிகின்ற தமது திருவாய்மலரினை யலர்த்தி யருளிச்செய்கின்றார் வாரீர் சுப்பிரமணியரே யிம் மலையின்கண் சிலநா ளிருக்கக்கடவீர் நானுஞ் சிலநா ளகன்ற பின்பு தலைமையாகிய பூரணுங்கிசையுடனே யெழுந்தருள வேண்டிய காரண மிருக்கையால் நீரிங்கு அகலாநிரந்தரமாய் வாசஞ் செய்யக்கடவீரென் றனுக்கிரகஞ் செய்யத் தேவசேனுபதியானவ ரவர் வரத்தினுலே செயசாலியாகிய வீரதத்துவ விசய மடைந்தவரா யவர் பாத கமலத்தினை யுபாசித் தந்தக் கிரியின்கண் வீற்றிருந்தருளினு ரென்றவாறு. 14

288. என்று நாரதனி சைத்த கோலவரை
யியில்பு கேட்டுமகி ழிந்திரன்
வென்றி யார்ந்ததின மின்று கொல்லெனவி
யம்பி வேதியன்ம லர்ப்பதஞ்
சென்று மாமவுலி யால்வ ணங்கிபுகழ்
தேவ தேவனெநி னைந்தனன்
குன்ற மாசிறக ரிந்த வச்ரபடை
கொண்ட லூர்திமக மேருவின்.

எ - து :—இவ் விதமாகிய கதாப்பிரசங்கத்தை வரன்முறை பிறழாமல் நாரத மகா முனிவரானவர் கோலாசல பருவதத்தைக் குறித்துச் சொல்லக் கர்ணாமிருதமாய்க் கேட் டானந்தத்தினாலே மகிழ்ச்சி பெறுகின்ற விந்திர மகாராசனானவன் காலநேமியினைக் கொன்று விசய மடைந்த தின மின்றைய காலமேயென் றெண்ணி மகிழ்கூர்ந் தின்பத்தை யடைந்தவனாய் நாரத மகாமுனிவர தூய பாத கமலங்களை மவுலி புனைந்த சிரத்தினாற் பல தெண்டன் சமர்ப்பித்துத் தேவராசனாகிய நாராயண மூர்த்தியை யுபாசித் தந்த வடமேரு கிரியின் வீற்றிருந்தா னவனது பிரதாப மெப்படிப் பட்டதென்றால் மலையினது சிறகுகளை யெல்லாந் தனது வச்சிராயுதத்தினாலே கண்டித்து மேக வாகனத்தை நடாத்திய வச்சிரபாணி யென்று கூறி நைமிசாரணிய மகாவிருடிகளைப் பார்த்து மீட்டு மம் மலையினது பெருமையினைக் கூறத் தொடங்கினார் சூதபுராணிக ரென்றவாறு.

289. அவ்வரையின் வரலாறீ தறையக் கேட்டீ
ரதன்பெருமை தனையளந்திங் காதி சேட
னெவ்விதமுஞ் சொல்லவல்லா னல்லன் மேலா
மிறையவனே யவணிருக்க விசைந்தா னென்றால்
செவ்வியுரை யுண்டோசொல் முனிவர் நீரே
செகமறினு மதன்பெருமை சிறந்த தன்றோ
கவ்வையொழி யவ்வரையை யொருகா னீருங்
கண்டவுடன் பலமொழியுங் காண்மின் காண்மின்.

எ - து :—அந்தக் கோலாசலத்தின் பெருமையினை யெல்லாஞ் சிலது யான் கூறக்கேட்ட முனிக்கணங்களே யதனது பெருமையினை யளந்து கூறுதற்கு ஆயிர நாவினைப் படைத்த வாதிசேடனே யாகிலு மெவ்வித மாயினும் வருத்தப்பட்டுக் கூறுவா னென்றாலு மவனாலுங் கூறி முடியாது யாவருக்கு மேனின் றுயர்ந்த விறைவனாகிய பரவாசுதேவனே யம் மலையை விருப்புற்றுப் பூரணங்கிசையுடனே வீற்றிருக்கின்றா ரென்றா

விதற்கு மேலே சிறந்த மொழி யா மென்னே கூறுது மாகையான் முனிக் கணங்களே யிந்தத் திரிபுவனத்தினு மதனது பெருமையானது சிறந்து தோன்று மாகையினுலே பிறவித் துன்பங்களைத் தொலைத் தின்ப வீட்டினைக் கொடுக்காநின்ற வந்தப் புண்ணிய பருவதத்தை யொரு தர மாவது நீங்கள் தெரிசிக்கப்பெற்றீர்க ளாகி லுமது சென்ன சாகரங்களை யெல்லாங் கடந் தின்பமாகிய முத்தி வைபவத்தின் நித்திய சூரியரா யானந்தத்தைப் பெறுவீர்க ளாகையினுலே யந்தத் தலத்தினைக் கண்டு தெரிசிப்பீர்க ளென்றார் முனிவர்களைப் பார்த்துச் சூதபுராணிக ரென்றவாறு. 16

290. ஒருகாலம் மலைவலஞ்சூழ்ந் திட்டவரு மிவ்வுலகுக்
கொருவ னுன
திருவாரு மரசர்பிரா னுகுவர்க ளிருநிறத்தாற்
சிறந்த விந்த்ரப்
பெருவாழ்வைப் பெறுகுவர்கள் முக்காலிற் பிரமனுய்ப்
பெற்றங் கோங்குந்
திருவாரா தனந்தினமுஞ் சேவிப்போர் நாரணனூர்
திருத்தாள் சேர்வர்.

எ - து :—மீட்டுஞ் சூதபுராணிகர் தமது திருவாயினை யலர்த்தி யமுத தாரைகளைப் பொழிகின்றதுபோலக் கூறுகின்ரு ராறு காலத்தி னொருகா லந்த மலையினை வலஞ் சூழ்ந்து வருகின்ற பேர்களுக்குப் பலப் பிரயோசன மியாதென்று விந்தச் சப்த சாகரஞ் சூழ்ந்திருக்கா நின்ற வுலகுக் கெல்லா மொருவனுகிய வட்ட லட்சுமியினது பிரபல மமைந்த ராசாதிராசனுகிய சக்கிரவர்த்திக ளாகுவார்க ளிருதரம் வலம் வருகின்ற பேர்களானவர்கள் சிறப் பமைந்த விந்திரப் பெருவாழ்வாகிய விந்திராணி யயிராவத [1]முச்சுவச்சுருவ மரம்பையர்கள் பஞ்சதாரு சுரபி சிந்தாமணி சங்கநிதி பதுமநிதி யொன்றுடு முதலிய பெரிய வாழ்வினைப் பெற் றயிராவதத்தின்பேரிலே தவளசத்திரக் குடை நிழற்றுந் தக்கதாகிய விந்திரனுய் வீற்றிருப்பார்க ளதல்லாமல் மூன்று வலம் வந்த பேர்கள் பிதாமகனுய் மனேவதி நகரின்கண் வீற்றிருப்பார்க ளதுவன்றியும் திரிகாலமுந் திருவாராதனஞ் செய்யுங் காலத்தி னடைந்து தெரிசனை வைபவத்தைத் தெரிசிக்கப்பெற்றேர்க ளெல்லா மெம்பெருமா னுகிய பரவாசுதேவன் திருவடிக் கமலங்களினது நீழலிலே வீற்றிருக்கப் பெற்று நித்ய சூரியர்களாய் வாழ்வார்க ளென்றவாறு. 17

கோலாசல வரலா றுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

---

[1] உச்சைச்ரவம்.

## பதினெட்டாவது: சம்பீர விருட்ச வரலா றுரைத்த வத்தியாயம்

291. திருவி ளங்குமக மேரு புத்ரனென
திகழு கோலவரை வரவினைப்
பெருகு கின்றவமு தாமெ னத்தெளிவு
பெருக யாமிவைதெ ருட்டினை
தருவெ னப்புகலு கின்ற சம்பிரவி
ருக்கம் வந்ததனி புகழினைக்
குருவெ னப்பரவு கின்ற மாமுனிவ
புகலு வாயெனகு றித்தனன்.

எ - து:—மீட்டும் நைமிசாரணிய விருடிகள் சூதபுராணிகரைப் பார்த்துக் கூறுகின்றார்க ளட்ட லட்சுமியு மனவிலாசமாய் வீற்றிருக்கா நின்ற வடமேரு கிரியினது சுபுத்திரனு யவதரித்து நற்குண நற்செய்கையினை யுடைய பிரதாப மிகுந்த புண்ணிய பருப்பதமாகிய கோலாசலத்தினது வரலாற்று முறைமையினை யெல்லாம் பெருகுகின்ற திருப்பாற்கடலினைக் கடைந்தெடுத்த வமுதினைத் திரட்டிக் கரையிலே வைத்ததுபோலக் கிரியினது பெருமைகளை யெல்லா மியாங்கள் தெளியும்படியாய்த் தெருட்டிவைத்தீ ராகையினாலே பின்னுமொரு கதையைக் கேட்க விரும்பினோ மதாவது பஞ்சதாரு வொரு வெலுமிச்ச விருட்சமாய்த் தோன்றித் தழைத் தோங்காநின்ற வந்த வரலாற்றின தொப்பற்ற புகழினை யருளே வடிவமாகிய குருவாமென் றியாவருந் துதிக்காநின்ற மகத்தாகிய தவத்தினையுடைய சூதமுனிவரே யுமது திருவாய்மலர்ந் தருளவேண்டு மென் றந்த சவுனகாதி மகாமுனிவர்கள் வினவக் கூறுகின்று ரென்றவாறு. 1

292. ஆதி காலமதின் மாள வத்தரச
னை மத்தளனெ னப்புகழ்
சோதி தங்கியலர் சந்தி ரப்பிரபை
சூடு நற்சிவனை தொழுதவன்
வேதி யர்புகழ்சி றந்த நாரணனை
வேண்டி யிவ்வுலகின் விமல்மா
யோதி யுய்ந்தவகை தெளிகி லாதவனெ
றுத்து நொந்துமன மெலிவினுல்.

எ - து :—இவ்விதமாய்க் கூறிய நைமிசாரணியத்து விருடியர்கள் வினவுக்கு விடைகொடுத்துக் கூறுகின்றார் சூதபுராணிகரானவர் பூர்வ காலத்திலே மாளவ தேசாதிபதியாகிய மத்தளனென்று புகழ்கின்ற கீர்த்தியினையுடைய ராசகண்டீரவனானவன் சோடச கலைகளை விரித் தமுத தாரைகளைப் பொழிகின்ற சந்திரனது கிரணத்தைச் சடா பாரத்திலே தாங்காநின்ற பரமசிவார்ச்சனை செய்து தொழுகின்றவ னானவன் வேதவேதியர்களாலே புகழ் சிறந் திலகாநின்ற ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை வேண்டினவர்களாய் இவ் வுலகின்கண் விமல ரானோர்களெல்லாமோதியவரது நாமதேயங்களாலனேகம் பேர்களெல்லாம் பரம பவித்திரராய்ச் சீவன்முக்தர்களாய் வாசம்பண்ணுகிற காரணத்தினைத் தெளியா தந்த வரசனானவ னெறுத்து நொந்து மனமெலிவினாலே பொறுமைப்பட்டா னென்றவாறு. 2

293. கடைத்தலைக்கணினி சைந்த கண்டைகள்க

வின்சி றந்தமனை தன்னிலே

புடைக்க வாயிரமி சைத்து நாரணனல்

புகழ்து திப்பதும வன்செவி

யிடைப்பு காவகைதொ னிக்க தன்னரசி

யற்கை யோடுபுரி காலையெம்

படைத்த ரித்தவரி துரோக சிந்தைபுரி

பயிற்சி யானவனும் வெம்பியே.

எ - து :—தனது அரண்மனையினது கடைவாசலிலே கண்டைகளாகிய வழகிய வாராய்ச்சி மணியினைப்போ லொத்த வாயிரம் மணிகளைக் கட்டி யடிக்க வந்தத்தொனியினாலே ஸ்ரீமந் நாராயணமூர்த்தியினது புகழ்ச்சியினைத் துதிக்காநின்ற வொலிகளானது வவனது செவித் துளையிலே பிரவேசிக்காமற்படி தொனிக்கச்செய்து தனது தவள சத்திர குடையினது நீழலிலே வீற்றிருந்து சக்கர நடாத்திய தலைவனா யரசாட்சி செய்யுங் காலத்திற் பஞ்சாயுதங்களைத் தரிக்காநின்ற வரியினைக் குறித்துச் செய்த விஷ்ணு துரோகத்தினாலே சிந்தையைச் செலுத்திய பாதகத்தினாலே யந்த மத்தள ராசனாகிய மாளவ தேசாதிபதியானவன் வெம்பப்பட்டு வேறு பட்டா னென்றவாறு. 3

294. பித்த னுயரசி ழுந்து பேயெனபெ
ரும்பு விக்கடல லைந்ததால்
சத்தி யோடுறைபி னுக பாணியவன்
றனது கொள்கையைய றிந்தபின்
வெத்தி யாம்விடையி வர்ந்து வந்தவனை
வினவி யொன் றுரைசெய் கின் றனன்
முத்தி தந்தமுத லோனை யென் றுமொழி
யாதொ ழிந்தவிதி முடிவினுல்.

எ - து:—அந்த நாராயண துரோகத்தினுலே யறி விழுந்த பித்தனு யரசாட்சியினை யிழந்துபோய்ச் சப்த சாகரங்களிலு மந்தந்தத் தீவாந்தரங் களிலும் பேயின துருவமா யிளைத்துத் திரிந் தலைந்தவனுய்ப் பருவரலுறுந் தன்மையினை யறிந்தார் சத்தியாகிய பார்வதியை வாமபாகத்தி னிருத்திய கைலாயபதியானவ ரவன் தம்மை நம்பி நாராயண துரோகஞ்செய்து வருந்துகின்ற பான்மையினைத் தெரிந்தவராய் வெற்றியோடுங் கூடிய வதிகார நந்திய துருவாகிய விடபவாகனத்தி னுரோகணிதரா யதிக துரிதத்திலே மாளவ தேசாதிபதியினிடத்தின் வந்தருளி யவன் வருத்தப்பட்ட முறைமையினைக் கேள்விப்பட் டதற்கு விமோசனம் கூறுகின்ருர் மோட்ச கர்த்தாவாகிய நாராயண மூர்த்தியினை நீ யெப்பொழுது முபாசிக்காம லவனது நாமதேயத்தைக் காதினுலுங் கேளாதவனுய்ச் செய்த மகாபாதக விதியினு லுனக் கிவ்வளவு துன்பம் வந்ததென்று பின்னுங் கூறுகின்ருர் கயிலாயபதி யென் றவாறு. 4

295. சிந்தை யானெமைது தித்து பூசைபுரி
செய்கை யானரிசி றப்பினை
நிந்தை செய்தகொடு விழிவி னுனுனைநெ
ருங்கி யிவ்விழிவு சேர்ந்ததாற்
சந்த தம்புகழ்ப டைத்த மாமகத
தேச சோமுகத ராபதி
நிந்தை யில்லதொரு நந்த னத்தினிடை
நிமல சம்பிரவி ருக்கமாய்.

எ - து:—மாளவ தேசாதிபதியாகிய மத்தள னென்கின்ற வரசன் திரு முகத்தைப் பார்த்து மீட்டும் பரமசிவன் கூறுகின்ருர் ருனது மனதினு னென்னை யுபாசித்து வாயினுற் றுதித்துக் கரங்களால் மகாதேவ பூசைக் கருகங்களாகிய சங்கபாத்திர முதலாகிய தெல்லா மமைத்துப் பூதசுத்தி மந்திர சுத்தி திரவியசுத்தி முதலாகியதுஞ் செய்து தேவபூசையினை வேதாகமப் பிரகாரம் விதி தவருது நீ செய்தனை யாயினும் நாராயண மூர்த்தியின்

பரத்துவத்தினை யறியாமல் நிந்தை செய்கின்ற கொடுமையினாலே யிந்த விழிவான துன்னைப் பீடிக்க நீ மதிமயங்கிப் பிசாசத்வத்தை யடைந்தா யாகையா னிது நிவாரணமாய்ப் புனித பவித்திர மடையும்பொருட் டோ ருபாயங் கூறுகின்றோ மந் நிலையி னீ நிற்கக் கடவாய் சந்ததமாகிய திரி காலத்தினும் புகழ்ச்சியானது பெருகிய மகர தேசமென்கின்ற ஒருதேச முண் டந்தத் தேசத்தை யரசாட்சி செய்கின்ற சோமுக னென்று சொல்கின்ற பெயரினையுடைய வொரு ராச கண்டீரசேகரனைவ னுண் டவன் பிரம்மா வினது வர பாலனத்தினாலே யொரு ரமணீயமாகிய நந்தனவனம் வைத் திருக்கின்றா னந்த வனத்திலே நீ போ யெலுமிச்ச விருட்சமாய் முளைக்கக் கடவா யென் றருளிச்செய்தார் சிவ னென்றவாறு. 5

296\. என்று கூறிசிவன் விடையொ டேகிகயி
லாய வெல்லையினி ருந்தபின்
சென்று [1]மாளவர சனவ னத்திடைசெ
றிந்த செம்பிரவி ருக்கமாய்
நன்றி நாரணவ ராக மாகியதைக்
கல்லி வாளுருவ தாக்கியே
வென்றி சோமுகனை வென்று கோலவரை
நாட்டி னுனெவரு மேத்தவே.

எ - து :—இவ்விதமாய் மத்தள ராசனுக் கனுக்கிரகஞ் செய்து சிவனானவர் விடப வாகனத்துடனே கயிலாய கிரியிற் பிரவேசித்து வீற்றிருந்தருளினா ரவரது வுத்திரவின் பிரகார மாளவ தேசாதிபதி யாகிய மத்தள ராசசேகரனைவ னந்த மகத தேசாதிபதியாகிய சோமுக ராச கண்டீரவனுடைய நந்தன வனத்திலே போய்ச் சம்பீர விருக்கமா மெலுமிச்ச விருட்சமாய் முளைத்திருந்தா னதன் பின்பு வெகு கால மாச்சு தப்போது சர்வ மங்கள குணக்கியனாய் மோட்ச கர்த்தாவான சார்வ பௌமனாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் வராக ரூபமா யெழுந்தருளி யவ் வனத்தினைக் கிலப்படுத்தும்போ தந்தச் சம்பீர விருக்கத்தை வேருடனே கல்லிப் பிடுங்கி வாளுருவமாகக் கையிற் கொண்டு வென்றியைப் பொருந்திய சோமுகனாகிய ராசசேகரனை யவ் வாளினாலே வெற்றி பெற் றதன் பின்பு மகா மேருவினது சுபுத்ரனாகிய கோலாசல பர்வதத்தின்கண் ணட்டருளினார் சுவாமியினது திருக்கராம்புய மலரா னட்ட காரணத்தினாலே யவனது துரோகந் தீர்ந்து ஞான சொருபி யானா னக் காலத்தில் தேவர் முனிவர் முதலாகிய பேர்களுந் தொழு தேத்தினார்க ளென்றவாறு. 6

[1] மாளவரசன் அவ்வனத்திடை என்று பிரிக்க.

297. நாட்டு சம்பிரவி ருக்க மாயொளிசி
றந்தி [1]ராசர்கட நாயகன்
பூட்டு விற்கையொளிர் கேச வாவுனைபு
கழ்ந்தி டாவெனது புன்மையான்
வாட்ட முற்றலகை யாகி சோமுகன்வ
னத்தில் சம்பிரவி ருக்கமாய்
வீட்டு வாளுருவ தாகி னேனினது
கருணை யான்விமல னுகினேன்.

எ - து:—இத் தன்மைத்தாய் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியினது கரதல கமலங்களினு னுட்டுகின்ற வெலுமிச்ச விருட்சமா யொளிசிறந்திரா நின்ற ராசசேகரனுனவன் பூட்டுகின்ற நாணினைப் பொருந்திய சாரங்க வில்லினையுடைய கேசவா வுன்னைப் புகழ்ந்திடாத வெனது புத்தி யீனத்தினுலே யனேக வாட்டப்பட்டுப் பிசாசத்வத்தை யடைந்து ராச கண்டீரவனுகிய சோமுகனது உத்தியான வனத்திலே யெலுமிச்ச விருட்சமாகியுந் தேவரீ ரிச்சையினுலே வெட்டுகின்ற வாளின துருவ மாகியு மிருந்த யானுனவ னினது கருணையினுலே மல ரகித னுகினே னென்ருன் மத்தள ராச னென்றவாறு. 7

298. நித்ய னேயுலக ளித்த காரணநி
ராம யத்திருவ ரங்கனே
சுத்த னேபரம தேவ தேவசெக
நாத னேயுமது கருணையான்
இத்த லத்தினிடை யுமது சேவையுமி
சைந்த நற்பரம சிவனையுங்
கர்த்த னேவரம ளித்து பொன்னடியில்
காக்க வேணுமெனக் கழறினுன்.

எ - து:—நித்தியமாகிய வமலனே உலகை யெல்லாம் பாதுகாத் திரட்சித்தருளிய காரணனே நிராமயமாகிய நிருவிகற்பக் கியானத்தை யுடைய திருவரங்க நாயகனே சுத்த பவித்திரமாகிய பரப்பிரம தேவ தேவனுகிய செகந்நாதனே யுமது கருணையினுலே யிந்தத் தலத்திலே யானுனவ னுமது சேவையினையும் பரமசிவனது சேவையினையு மியான் காணும்படியாய் வரபாலன மளித் ததன்பின் புனது பொன்னந் தாமரை நீழலிலே காக்கவேண்டு மென்று கூறினுன் மத்தளராச னென்றவாறு. 8

---

[1] ராசர்கள்தம் நாயகன் என்று பிரிக்க.

299. அரச னிவ்விதம தாய றைந்திடவு
மமர நாயகனு மருளுவான்
விரச மாநதியெ னப்பு கழ்ந்திடவி
ளங்கு கோலநதி யருகதாய்த்
திரம தாயுனது நாம முற்றசிவ
தெரிச னஞ்செயவு மருளினோம்
பரவு வாயெனவு ரைத்து பாறையைபி
ளந்து நற்பரம ரைகினான்.

எ - து :—மத்தள ராசனனவ னிவ் விதமாகிய வர பாலனத்தைக் கேட்ட மாத்திரத்திலே தேவ நாயகனாகிய பரந்தாமனனவ ரருளுகின்றார் பரமபதத் திருநாட்டின்கண் வீற்றிருக்காநின்ற விரசைமா நதியாகிய புண்ணிய தீர்த்தத்தைப் பார்க்கிலும் பவித்திரமாய்ப் புகழாநின்ற விளக்கத்தினையுடைய வராக நதியினுக் கருகாகத் திரமதாகிய உனது நாமதேயத்தைப் பெறுகின்ற மத்தளேச்வரனை நீ தெரிசனஞ் செய்யத் தக்கதாக வரபாலன மளித்தோ மாகையா லங்ஙனம் நீ போய் வழிபா டாற்றி யருச்சனை புரியக்கடவா யென் றுரைத்தபின் பந்த நதிக் கருகாகிய வொரு பெரிய பாறையைப் பிளந்து பரமசிவலிங்கமா யெழுந்தருளினா ரரங்க நாயக ரென்றவாறு. 9

300. அரங்க னாருளி னை டைந்தவனு
மச்சி வன்றனைய ருச்சியா
வரம்பெ றும்புகழ்ம யேச தீர்த்தமும்வ
குத்து மாமகிழ்வு கூர்ந்தவன்
றிரம்பெ றும்படிகு டைந்து நற்செயல்சி
றப்ப மைத்துதிரு மாலடிக்
கரங்கு வித்தவணி னீங்கி கோலவரை
கடுகி பொன்னடிய டைந்தனன்.

எ - து :—அரங்க நாயகர் திருவாய்மலர்ந்தருளிய வரபாலனத்தைப் பெற்ற மத்தள ராசனனவன் றனது பெயரினா னமைந்த மத்தள லிங்கத்தைச் சங்கபாத்திர புட்ப முதலாகிய தமைத்துப் பூதசுத்தி மந்திரசுத்தி திரவியசுத்தி முதலாகியதுஞ் செய்து மகாதேவ பூசை புரிந்த வதன்பின் வரத்தைப் பெறுகின்ற பெரிய புகழினையுடைய மகேச்வர

தீர்த்த மென்ஞெரு தீர்த்த மமைத்துப் பெருமகிழ் சிறந்தவனுய்த் திரமாகிய முத்தியைப் பெறும்பொருட்டா யதிலே நிதமுந் தீர்த்தமாடிப் பதினெண் வகையா யுள்ள தானங்கள் முதலாகிய சற்கருமங்களைச் செய்து கோலாசலத்தி னுச்சியின் வீற்றிருக்காநின்ற வரங்கநாயகனது விமான சேகரத்தைக் குறித்துத் தெண்டன் சமர்ப்பித் திரண்டு கராம்புய மலரையு முச்சியிற் கூப்பி நிதமுந் தொழு தந்த மத்தளேச்வரன் கருணையைப் பெற்றுப் பின் நீங்கிக் கோலாசல பருவதத்தை யதிக துரிதமா யடைந் தவரது பொன்னந் தாமரை நீழலிலே யடைந்தான் மத்தளராச னென்றவாறு. 10

301. வந்த மத்தளவி ராச னும்புகழ்வ
முத்தி பொன்னடிவ ணங்கியே
யெந்தை சம்பிரவி ருக்க மாயுனது
வருளி னுலிசைய வேண்டுமியான்
சுந்த ரம்பெருகு முனது சேவைதிரி
கால முந்தொழுதி ருந்திடத்
தந்தி டாயெனவு ரைத்தி டப்பரம
னல்கி யொன்றுரைசெய் தானரோ.

எ - து :—அத் தன்மைத்தாய வரங்க நாயகரது பாத தாமரை நிழலிலே பிறவி வெப்பந் தீர வீற்றிருக்கப்பெற்ற மத்தள ராசனுனவ னின்பத்தை யடைந் தரங்க நாயகரது புகழினை வழுத்தி மீட்டு மோ ருறுதியாகிய வரபாலனத்தைக் கூறுகின்ரு னெனது தந்தையே இதாப்பிரகார முன தாலயத்தி னெதிரிலே சம்பீர விருட்சமா யுன தருளினுலே கற்ப காலத்தினு மழிவின்றி யெப்பொழுது நிலையா யுனது சேவையினை யிறந்தகால மெதிர்கால நிகழ்காலமாகிய திரி காலத்தினுந் தொழு திருந்திடத் தக்கதாய் வரந் தரவேண்டு மென் றுபசாரஞ் செய்திடப் பரமனுனவ ரந்த வர பாலனத்தினை யந்த வடியவனுக் கனுக்கிரகம் பண்ணி யொரு வார்த்தை கூறுகின்ரு ரென்றவாறு. 11

302. கற்ப கோடிபெறு கால மிவ்வரையில்
கமழு சம்பிரம தாகியே
இப்பு வித்தனின்வ திந்து காய்கனிக
ளிலைகள் மாமலர்த ழைத்திட
வற்பு தன்னருள்கொ டுத்தி டப்பெருகி
யமல மாயவனு தித்தனன்
செப்பு நந்திமல ரோடு வாழ்கவென
சீத ரன்னருகில் மேவினுன்.

எ - து :—மீட்டு நாராயண மூர்த்தி திருவாய்மலர்ந்தருளுகின்றார் வாராய் மத்தள ராசனே நீ கற்ப கோடியாகிய பெருங்காலம் வந்தாலு மிந்த வரையிலே கமழாநின்ற வெலுமிச்ச விருட்சமா யிந்தத் தலத்திலே வாசமா யிருந்து காய்கள் கனிகள் இலைகள் சுகந்தத்தினையுடைய மலர் முதலாகியதுங் தழைத் தோங்கும்படியா யற்புதரான வரங்க நாயகரானவ ரருளிச்செய்திட வவரது கருணையினாலே யமலனாகிய மத்தள ராசனானவ னக் கிரியிலே யந்த வெலுமிச்ச விருட்சமாய் நந்தியாவட்ட மலருடனே வாழக் கடவா யென்று ஸ்ரீதரனானவ ரருளிச்செய்ய வவ ரருகின்கண்ணே வீற்றிருந்தா னென்று நாரத முனிவ ரிந்திரனுக்குக் கூறிய கதையினைச் சவுனகாதி ரிஷிகளுக்குச் சூத புராணிகர் திருவாய்மலர்ந்தருளினா ரென்றவாறு. 12

சம்பீர விருட்ச வரலா றுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

# பத்தொன்பதாவது: வடவரையைத் தணந் திந்திரன் மீண்ட வத்தியாயம்

303. வடவரை யதனின் வதிந்தவிந் திர னும்
வண்மையார் தேவர்கள் குழுவும்
தடமலை தணந்து தென்புற நோக்கிச்
சாரல்க ணதிவனந் தலங்கள்
படர்தரு நாடு முனிவர ரிருக்கும்
பன்னக சாலைகள் பிறவுங்
கடலெனப் புடைசூழ் தேவர்கள் கடந்து
காஞ்சிமா நகரினைக் கண்டார்.

எ - து:— உலகத்துக்கெல்லா மாதாரமா யிருக்கின்ற வடதிசையின் விளங்குகின்ற சொர்ண மயமாகிய மகாமேரு கிரியின்கண் காலநேமி யென்னும் அசுரேந்திரன் செய்கின்ற தண்டத்தினது பயபுத்தியான் வந்து சேர்ந்திராநின்ற விந்திர மகாராசனும் பிரதாபசாலிகளாகிய தேவ கூட்டங்களும் விசாலமாகிய வந்த மகாமேரு கிரியை விட்டு நீங்கித் தென்றிசை மார்க்கத்தைக் குறித்து வரும்போது மலைச்சாரல்களும் புண்ணிய மகாநதிகளு மாரணியமும் புண்ணியத் தலங்களு மாட மாளிகைகள் சூழ்ந்த நாடுகளு முனிவர் கூட்டங்கள் வாசம் பண்ணு நின்ற பன்னக சாலைகளு மற்று முண்டான பிற விடங்களையுங் கடலான திவ் வுலகத்தினைச் சூழ்தல்போலத் தேவகூட்டங்கள் சூழ்ந்துவர விந்திர மகாராசனுனைவனு மத்தேவர்களும் காஞ்சிமா நகரமாகிய தொண்டை மண்டலத்தினைக் கண்டு சுபகர மங்கள சாம்ராஜ்யத்தை யடைந்தார்க ளென்றவாறு. 1

304. தொண்டைநன் னாட்டி னனில வள னுந்
திணைகடா மயங்குறு தொழி லு
மெண்டிசை யிடத்தும் பன்னிரு சமய
மெய்திய விறைவர்தங் கோயிற்
பண்டுளோ ரறுப தாயிர மாகப்
பகருமந் நகர்பரப் பெல்லாங்
கண்டுளோர் மகிழு மாறுக டடாகப்
பந்திகள் கயங்களெண் ணிலவால்.

எ-து :—தொண்டை மண்டலமாகிய காஞ்சிமா நகரத்தினது விநோதமா யிருக்கின்ற நானிலமாகிய குறிஞ்சித்திணையென்னு மலை நிலங்களின் வளப்பங்களு முல்லைத் திணையாகிய காடு சேர்ந்த நிலத்தின் வளப்பங்களு மருதத் திணையாகிய நஞ்சை முதலாகிய நாடுசேர் விளைநிலத்தின் வளப்பமு நெய்தற் றிணையாகிய கழிக்கடலினது வளப்பமு மாகிய விந் நான்கு திணைகளு மிவை யொன்றோடொன்று கூடுந் திறனுகிய திணைவகை மயக்கமுங் கிழக்கு முதலாகிய வெட்டுத் திசையிடத்தும் வாழுகின்ற வுட்சமய மாறு புறச்சமய மாறுமாகிய பன்னிரண்டு சமயங்களுக்கு மதிதேவதைகளாய்ப் பொருந்திய சமய தெய்வங்களானவை மனோரஞ்சித சுபகர விலாசமாய் வாசம் பண்ணுநின்ற வாலயங்களி னளவை யெவ்வளவைத் தென்ருல் வேதமுதலாகிய வறுபத்துநான்கு வித்தைகளையு மாராய்ந்த பெரியவர்கள் கூறிய வறுபதினாயிரஞ் சினகரம் விளங்கு மென்பார்க ளத் தன்மையனவாகிய காஞ்சிமா நகரத்தினது பெருமைகளை யெல்லாங் காணுந்தோறுங் களிகூராநின்ற புண்ணிய மகாநதிகளுந் தடாக பந்திகளு மெண்ணிறந்தனவாகிய கயங்கள் முதலாகிய சிங்கார வளப்பத்தினை யுடையது தொண்டைமண்டல மென்றவாறு. 2

305\. குன்றகோ புரங்க ளரம்பையின் வருக்கக்
குலைகடாம் பழுத்திழி கின்ற
கன்றலிற் றேனு மாவினம் பழுத்த
கனியினின் றொழுகுறு மதுவு
நன்றதாம் பலவி னின்பழச் சாறு
மருதமாக் கரையினி னண்ணும்
வென்றியாங் கமுகந் தேங்கினை வளர்த்து
வேண்டிய பயிரெலாம் விளைக்கும்.

எ-து:—மகாமேருவினை யொத்தனவாகிய கோபுர குன்றங்களும் வாழையினது வருக்கங்களானது பழுத் திழிகின்ற தேன்போன்ற ரசங்களு மா வினங்கள் பழுத்த கனிகளினின் றொழுகாநின்ற மதுவும் நன்மையன வாகிய பலாக்கனி பழுத் திழிகின்ற சாறு மொன்றுபட் டோடி வெள்ளமாய்ப் பரந்து பணைகளின் கரையெல்லா மழகாய்ச் சூழ்ந் திருக்கின்ற கமுகமாகிய தோப்புகளையுந் தென்னஞ் சோலைகளையும் விருத்திக்கச்செய்து வெகு விதங்களாகிய பயிரினங்களை யெல்லாம் விளைவிக்கச் செய்யு மென்றவாறு. 3

306. கலைபயில் வாணர்க் கிதஞ்செயுஞ் சொன்ன
வண்ணஞ்செய் கண்ணனூர் கோயி
னிலையதிற் புகுந்து பேரின்ப வாரி
நீள்சர ணும்புய நினைந்து
தலைமைய தான நிலாத்திங்கட் டுண்டத்
தடிகளைத் தாழ்ந்தின்ப மனுகிப்
புலைமைகூர் பச்சை வண்ணர்தம் பதத்தைப்
புகழ்ந்தனர் கரமலர் குவித்தார்.

எ - து:—வேத முதலாகிய கலைகளை யெல்லாங் கற்றுணர்ந்த கலைவாணர்களாகிய வித்துவ சனங்களுக்கு ரஞ்சித சுபகர மங்களாகர விபவங்களைச் செய் தருள்கூர்ந்த சொன்னவண்ணஞ் செய்தருளிய தாமரைக்கண்ணனூர் மனப்பூர்வ வைபவமாய் வாசம் பண்ணுகின்ற சந்நிதியிற் பிரவேசித்துப் பேரின்பமாகிய கடல் போன்றவருடைய நீண்ட வுபய சரணாரவிந்தங்களை நினைந் துருகினவர்களாய்ப் பிரதம பேரின்ப ஞான சாகர சுந்தர ரஞ்சிதராகிய நிலாத்திங்கட் டுண்டத் தெம்பெருமா னுடைய உபய பாத கமலங்களை வந்தித்துச் சத்திய விரத தத்துவத்தாற் சிறப் பமைந்த பச்சை வண்ணப் பெருமானினது திருப்பாத கமலங்களைக் கண்டு களிகூர்ந் துருகிப் புகழ்ந்து கராம்புய மலர்களா னுச்சியிற் குவித்துத் தெண்டன் சமர்ப்பித்தார்க ளிந்திரன் முதலாகிய தேவ கூட்டங்க ளென்றவாறு. 4

307. பவளவண் ணத்துப் பரம்பரம் பொருளைப்
பாடின ரிருக்கினுற் பரிந்து
குவலய மளந்த குணக்குன் றத் தடிகள்
குரைகழ லெசுர்வினுற் குறைந்தார்
தவளவா ரணமே டியாரும்வை குந்தத்
தடிகளைப் பரவியே தாழ்ந்தா
ருவமையில் கள்ளர் பதாம்புய மலரைச்
சாமத்தா னுச்சியிற் சேர்த்தார்.

எ - து:—பவள வண்ணப் பெருமாளாகிய பரம பரஞ்சோதியாகிய சர்வஞ்ஞரானவர் சர்வதா வானந்தத்தை யுடையவரது கீர்த்தியை யிருக்குவேதத்தினுலே பரிந்து பாடி யுருகினுர்க ளதன்பின் பிவ் வுலகை யெல்லா மோரடியா யளந்தருளிய சகல மங்கள குண சாம்ராஜ்ய வுசித ரஞ்சித ரமணீயக் குன்றம் போன் றுலகளந் தோங்கிய வுத்தமனுடைய வீரகண்டாமணி தங்கிய பாதத்தை யிரண்டா மறை

யாகிய யெசுர்விஞலே துதித்தார்கள் வெண்மையாகிய வயிராவதக் களிற்றினையுடைய விந்திர மகாராசனு மவனைச் சேர்ந்த தேவ கூட்டங்களும் பரமபதச் செல்வ சிரோமணியாகிய வைகுந்தப் பெருமாளினது விலாசமாகிய பாதகமலங்களை வேதாந்தத்தாற் பாடிப் புகழ்ந்தார்க ளெவற்றினு மேனின் றுயர்ந்தவராகிய கள்ள ரென்னுந் திருநாமத்தையுடைய வகண்ட சாம்ராஜ்ய சுதந்தர சிந்தாமணியினது பாத கமலங்களைச் சாம வேத கீதத்தாற் பாடி நைந்துருகி வந்தனை செய் தவருடைய மங்கள குணத்தைப் புகழ்ந்தார்க ளென்றவாறு. 5

308. அட்டபுயத் தமுதபிரா னலரடியை மிகவிரும்பி
யருச்சித் தேத்திச்
சிட்டர்புகழ் திருத்தண்காத் தேவனையு நீரகத்திற்
றிகழு மெங்க
ளிட்டனையும் வேளுக்கை யாளரியா மீசனையு
மிறைஞ்சி வாழ்த்தி
முட்டலிலாப் பாடகத்தின் முதல்வனிரு தாண்மலரு
முந்திக் கண்டார்.

எ - து:—அட்டபுய மென்னுஞ் சந்நிதியி னெழுந்தருளிய ஞான விநோத வமுதமாகிய வெம்பெருமானது காண்டற்கரிய விநோத சுக சொரூபமான கமலம் போன்ற பாதத்தை மிகவும் விரும்பி யருச்சனை செய்தும் வேத வட்டக வத்தியாய வருக்கங்களாற் றேத்திரித்தும் ஞானிகளாலே துதித்து வணங்காநின்ற திருத்தண்கா வென்கின்ற சினகரத்தி னெழுந்தருளிய தெய்வ நாயகனைத் தொழுதேத்தித் தெண்டன் சமர்ப்பித்து மறிவான்மாக்கள் புகழ்ந் துருகாநின்ற நீரக மென்கின்ற சந்நிதியில் வீற்றிருக்காநின்ற வெங்க ளிட்டனுகிய பரந்தாமனை வணங்கி வாழ்த்தியுந் திருவேளுக்கை யாளரியாகிய தேவதேவ சூடாமணியானவ ராலயத்தைக் குறித்துத் தெண்டன் சமர்ப்பித் துருகி வாழ்த்தியுஞ் சகல மங்களாகர சாம்ராஜ்ய மனோகர விபவ சற்குண பரிபூரண ஞான வர்ச்சாவதாரமா யெழுந்தருளிய பாடகமென்னுஞ் சந்நிதியின் வீற்றிராநின்ற முதல்வனுகிய திவ்விய வர்ச்சாவதாரத்தையுங் கண்ணுற் கண் டட்டாங்க முதலியவற்ருல் வந்தித் தேத்தினுர்க ளென்றவாறு. 6

309. மறைபயில் பொன்னஞ் சிறகடிப் பவளத்
துண்டம்வாய் மாசறு தவளத்
திறையதா யோங்கு மெகினப்புள் ளூர்ந்த
வெம்பிரா னுன்முகத் தொருவன்
குறைதவிர் வதற்காய்க் காஞ்சியிற் புகுந்து
குதிரையி னெடுசத்ர சோட
முறையங்கிட் டோமம் வாசபே யமதா
முதலிய யாகத்தை முடித்தான்.

எ - து :—வேதாத்தியயன பதக்கிரம சடையை யாராய்ந் தறிந்த பொன்மயமாய வொளியை விரிக்காநின்ற சிறகினை யுடையதாயும் பவளத் துண்டம் போன்ற மூக்கலகினையுடைய வாயினையுங் களங்க ரகிதமா யழ கெறிக்காநின்ற வெண்மை நிறத்தினுக்கு முதன்மை யோங்கி யொளிராநின்ற வன்ன வாகனத்தி னூரோகணிதமாய் நடாத்திய சுக சொரூப ரஞ்சித மனோகரமாகிய நாவின்மகள் சாவித்திரி காயத்திரி யென்னுங் கற்புத் தன்மையான நற்குண நற்செய்கையையுடைய வருட்சத்திகளுக்கு நாயகரா யெமது கர்த்தாவாய் நான்கு திருமுகங்களை யுடைய யோக சாங்கியரான் வந்திக்காநின்ற பிரம்மாவானவர் தமது குறையானது தீரும்பொருட்டால் காஞ்சிமா நகரமென்னுந் திவ்விய ரமணீய சுந்தர விலாச சுகுணமான ஞாநோதய தலத்தின் வந்து சேர்ந்தவராய் வேதவிதியுஞ் சிற்பி யிலக்கணமும் வழுவின்றிய வொரு யாக குண்ட மமைத்த பின்பு பரிமேத யாகஞ் சத்திரயாகஞ் சோடச யாக மக்கினிட்டோமம் வாசபேய யாக ராசசூய யாக மீறுகியதை யெல்லாம் வேதாகமவிதி வழுவில்லாமற் செய்து முடித்தார் பிதாமக னென்றவாறு. 7

310\. பிரமனார் வேள்வி யுதித்தனன் வரதப்
பெயரினோன் மகுடகுண் டலங்க
டிரம்தா மூர்த்வ புண்டரந் திருக்க
ணம்பண்ட திருந்துமுப் புரிநூ
லுரமதிற் பிராட்டி கவுத்துவந் துளவ
மோங்குபொன் னுடையன் சலசச்
சரணினைத் தாழ்ந்திட் டுபநிட தத்தாற்
சரர்சர மீன்றவன் றுதித்தான்.

எ - து :—விதிவாத மர்த்தவாத மந்திரவாத நாமதேயத்தைக் கூறுகின்ற யாகசாலை நடுப்பிரதேச குண்டத்திலே திருவவதாரஞ் செய்தருளினார் வரதராசப் பெருமாளானவர் நவரத்தின மயமாகிய மவுலியைப் புனையா நின்ற திருச்சிரமும் மகரகுண்டல மசைந்தாடாநின்ற ரஞ்சிதமாகிய விரண்டு திருச்செவியு முசித விலாச சுபலக்கண விலக்கணந் தங்கிய வூர்த்துவ புண்டரம் பிரகாசியாநின்ற நெற்றி முதலாகிய வவயங்களு முப்புரியா யொன்பது விதங்களைக் கொண்டிராநின்ற வைதிக சிறப் பமைந்த பூணநூ லசைந்தாடாநின்ற மார்பகமும் ரஞ்சித ரமணீய வுசித விலாசமாய் விளங்கிய பஞ்சாயுதங்கள் பொருந்திய சதுர்ப் புசங்களுந் திருமகளுங் கவுத்துவாபரணமுந் துளபமாலையு மழகெறிப்பவும் வேத சொரூபமாகிய கருடவான்மு மாயிரத்தெட்டு மாற்றுப் பொன்னூலாகிய பீதாம்பர வுடையு முடையவனது பாத தாமரையினை வந்தித்து வேதாந்த முப்பத்திரண்டினாலும் புகழ்ந் துருகிச் சராசரங்களைச் சிருஷ்டிக்காநின்ற பிதாமகனனவ ரட்டாங்க முதலிய வதனால் தெண்டன் சமர்ப்பித்தா ரென்றவாறு. 8

311. இன்னதன் மையனும் பிரமனைக் கண்டிங்
கிந்திரன் சரணிணை யிறைஞ்ச
வன்னவன் வினவு மரசவைந் தருவின்
வளமையும் வாரணத் தமைவும்
பொன்னக ரின்பப் புணர்ச்சியு மணியும்
பொருந்திய சுரபியு நிதியு
மென்னைநீ நீத்திவ் விடத்தினிற் புகுந்த
காரண மியம்புதி யென்றான்.

எ - து :—இத்தன்மைத்தாகிய பேரானந்த சாகர சிற்குண சின்மய சுக சொரூபியாகிய வரதராசப் பெருமாளானவ ரெழுந்தருளி வந்து பிரம்மாவின் அதிட்ட பலப்பிராப்தியை வர பாலனத்தினாலே யனுக்கிரகிக்க வந்த வானந்த வைபவத்தைப் பெற்ற சிருஷ்டி கர்த்தாவைக் கண்டு இந்திர மகாராசனானவ னவர துபய சரணாரவிந்தத்தினை வந்திக்க விந்திரனைப் பார்த் தருளிச்செய் கின்றார் வாரா யிந்திரனே யுனது வைந்தருவினது வளமையு மயிராவத மிந்திராணி யரம்பையர்கள் காமதேனு சிந்தாமணி சங்கநிதி பதுமநிதியாகிய வைபவச் செல்வத்தைவிட் டென்ன காரணத்தைக் குறித் திவ் வுலகின் கண்ணே வந்த தைக் கூறுவா யென்றார் பிதாமக னென்றவாறு. 9

312. பதுமமே லவ்வா மொழியினைக் கேட்டிங்
கிந்திரன் பகருவா னடிகேள்
புதுமையா நின்று பதாம்புயம் பணியாப்
புந்தியா றீவினைப் புகுந்த
சதுரினாற் கால நேமியாம் வினையாங்
குன்றுபோற் சார்ந்தன னவற்குன்
மதுமலர்த் திருவா யலர்ந்திடும் வரத்தான்
மாய்ந்ததெம் வளனென வகுத்தான்.

எ - து :—ஆயிரத்தெட் டிதழினாற் பிரகாசியாநின்ற பதும பீடிகையின் வீற்றிருக்காநின்ற மேலவராகிய பிரம்மாவானவர் திருவாய்மலரினால் மலர்ந்தருளிய வினாவின் மொழியினாலே விந்திர மகாராசனானவன் றனக்கு விளைந்த வபலாற்றைச் சொல்கின்றான் சிருஷ்டி கர்த்தாவாகிய வென் னையனே சுயம்பிரகாச மமைந்த வுமது பாத தாமரையாகிய திருவடியை யரன் முதலாகிய தேவகூட்டங்கள் வந்திக்காத தீவினைப் பகுப்பினால் காலநேமி யென்னு மசுரேந்திரனானவ னெனது தீவினைக்

குன்றம்போற் ஞேன்றிலு னவன்றனக்கு நினது திருவாய்மலர்ந்தருளிய வமுதசாகர வரத்தினு லெனது மங்களாகர புஞ்சரஞ்சித வரங்களெல்லாம் குறைவுபட்டு வேறுபட்டே னென்று னிந்திர மகாராச னென்றவாறு. 10

313\. இவ்வித மாகக் கரைந்துநைந் துருகி

யிசைத்திடு மரசர்கோன் முகத்தைச்

செவ்விதி னோக்கிப் பதுமமே லுறைவோன்

றெருட்டுவான் றீவினைச் சிமிழ்ப்பை

யெவ்வித மாகக் கடப்பரான் மாக்க

ளியல்பினை நீயறி கிலதோ

நவ்விசேர் தென்பாற் காவத மைந்திற்

கோலமால் வரைநணு கிடுமால்.

எ - து :—இந்திர மகாராசனனைவ னிவ் விதமாய்க் கரைந் துருகி நைந்து மொழிகின்ற வார்த்தையைக் கேள்வி செய்தவரா யவனது முகத்தைக் கருணைகூர்ந்து பங்கய மலரின்கண் வீற்றிருக்காநின்ற மேலவராகிய பிரம்மதேவரானவ ரருளிச்செய்கிறார் வாராய் தேவராசனே யிவ் வுலகத்தி னல்வினை தீவினை யென்னுஞ் சங்கிலித் தொடர்பா லிறுகக் கட்டிய கட்டை யெவ்விதத்திற் றப்பித்துக்கொண்டு பிழைப்பார்க ளான்ம கோடிகளானவர்க ளாகையா லந்த விதிவசமாகிய வூழ்வினை களைக் கடக்கத்தக்க மார்க்கம் நீ யென்ன வறியாதவனோ வாகிலு மான் முதலாகிய மிருகசாதிகள் சஞ்சரிக்காநின்ற வாரணியங்கள் மருவிய தெற்குத் திசையி னிதற் கைந்து காவதமாகிய கோலாசல கிரியென்னு மொரு தெய்வீக தலமொன் றுண் டந்த வதி சிலாக்கியமாகிய கிரியி னுடைய விர்த்தாந்தங்களைச் சொல்லக் கே ளிந்திர மகாராசனே யென்று சொல்லத் தொடங்கினர் பிரம்மதேவ ரென்றவாறு. 11

314\. அம்மலை காணிற் றீவினை மலையு

மழிந்திடு மதனைவந் தித்துச்

செம்மலே துதிக்கி னவரச பேரின்

பத்தினைச் சேர்குவை செல்வக்

கொம்மைவெம் முலையாள் புலோமிசை முதலாங்

கோமள வைபவம் பெற்று

நம்மையா ளுடைய வரங்களு ரடியார்

நயகுண நன்மைநன் குறுவாய்.

**எ - து :—அந்தக் கிரியை யாதாமொருவ ரதி தூரமாயினுஞ் சமீபத்தாயினு மிகுந்த பத்தியோடுஞ் சேவை செய்வார்களாகில் தீவினை** யாகிய பஞ்சுமலையானது தெரிசன வக்கினியாற் றகனமாவது மல்லாமலந்தக் கிரியை யொரு தரமாவது சிரத்தையாய்த் துதிக்கப்பெறி னென்பது வகையாயுள்ள நவரச வைபவ பேரின்பமாய் நம்மையெல்லா மஞ்ஞானத்தினின் றெடுத்துக் காருணியத்தாற் றிருத்திப் பணிகொண் டருளிய ஸ்ரீ வரங்கநாயகருடைய வடியவர்களுடைய நயகுண நன்மையாகிய சாத்வீக ஞானத்தைப் பெற்றுச் சீவன்முக்தர்களாய் வாழ்வார்களென் றருளிச்செய்தார் பிரம்மதேவ ரென்றவாறு[1]. 12

315. வாலகில் லியர்கள் சித்தர்க ளியோக
வன்மையர் ஞானியர் வனசக்
கோலமா முனிவர் குண்டிகைக் கரத்தர்
மரவுரி திரிதெண்டக் கோலர்
மூலமா மேக தண்டத்தர் காவி
யரையினர் முடிவில்வே தாந்தஞ்
சீலமாஞ் சித்தாந் தஞ்சம ரசமாய்த்
தெளிந்தவ ரம்மலை யுறைவார்.

எ - து :—வாராய் தேவராசனே யந்தப் புனித பாவனமாகிய கிரியி னெவ்வகைப்பட்டவர்கள் வாசம்பண்ணுவார்க ளென்றால் வாலகில்லிய ரென்னும் தபோதனர்களு மொன்பது வகையாயுள்ள சித்தக் கூட்டங்களும் பத்தியோக சாங்கியர்களும் ஞானியர்களும் தாமரைக் கர்ணிகை மாலையணிந்த [2]பாகவதப் பராளும் குண்டிகை தாங்கிய கராம்புய மலரை யுடையவரு மரவுரியைத் தரித்த திரிதண்ட ஏகதண்டந் தாங்கிய தபோநிதிகளுங் காவி வஸ்திரத்தைக் கவினுகப் புனைந்தவர்களுஞ் சித்தாந்த வேதாந்தங்களைச் சமரச யூக புத்தி சாத்விக ஞானத்தா லுணர்ந்தவர்களு மந்தக் கிரியில் வாழ்வார்க ளென் றருளிச்செய்தார் பிதாமக னென்றவாறு. 13

316. அவர்தமைக் காணிற் றுறக்கவை பவமே
லாசையு நீங்கிடு மதனுற்
றவமதி னுயர்ந்த தத்துவ ஞானஞ்
சார்குவை யனந்தனுர் பரித்த
குவலய மதிக்கு மாயிர முடியுங்
கவிந்திடக் குறைவில்பூ ரணமாங்
கவலைதீர் கண்ண னியோகநித் திரையைக்
காண்குவை கசடறு மன்றே.

---

[1] இவ்வுரையை இந்திரனை விளியாக்கி உரைத்துக்கொள்க. [2] பாகவத பரர்களும்.

எ-து:—நா மருளிச்செய்த தெவ்வகைப்பட்ட பெரியோர்களையு நீ காண்குவையாகின் மேன்மையாகிய துறக்க வைபவ வாசைக ளுன்னை விட்டு நீங்கிடு மதனால் மெய்யறிதலாகிய தத்துவ ஞானத்தைச் சார்ந்திடப் பெறுவாயாகி யிவ் வுலகெல்லாந் துதித்துச் சரணாகதி யடைகின்ற வனந்த விமான சேகரரா யோக நித்திரை செய்கின்ற செந் தாமரைக் கண்ணனாகிய வரங்கநாயகனைக் காணப்போகிறா யதனால் நீசெய்த துன்பங்க ளெல்லா முன்னை விட்டு நீங்கு மென்றார் பிரம்மதேவ ரென்றவாறு. 14

317. என்றனன் பதும மேலுறை பகவ
னெழிற்சர ணம்புய மலரைக்
குன்றம்போற் பணிந்து வினையெனுங் குன்றைத்
தொலைத்தன னின்மலர் வாயாம்
பொன்றலி லமுத சாகர மதனா
லெனப்புகழ்ந் துருகினன் போந்தான்
மன்றலந் துளவ மாலையான் மருவு
மாதல நோக்கியே நடந்தான்.

எ - து :—அதி சிலாக்கியமாகிய கோலாசலப் பெருமையைக் கூறக் கேட்ட விந்திர மகாராசனானவன் சுபகர மங்கள விலக்கண மமைந்த தாமரை மேலவனுடைய திவ்விய சரணாம்புய மலரை நினைந் துருகிக் கூறு கின்றா னினது மலர்போன்ற திருவாய் மொழியாகிய வமுத சாகரப் பிரதாப வனுக்கிரகத்தினாலே யடியேன் செய்த பாபமாகிய குன்றத்தைக் கடந்தே னென் றவர் திருவடிகளிலே யனந்தமான தெண்டன் சமர்ப்பித்துத் திவ்விய பரிமளங் கமழ்கின்ற துளசிமாலை யணிந்த வரங்கநாயக னியோக நித்திரை செய்கின்ற பரம பவித்திரமாகிய தலத்தினைக் குறித்து நடக்கத் தக்கதா யோசித்துப் பிதாமகனருள் பெற்றவனாய்த் தேவகூட்டங்களுடனே நடந்தா னிந்திர மகாராச னென்றவாறு. 15

வடவரையைத் தணந் திந்திரன் மீண்ட வத்தியாயம் முற்றிற்று.

# இருபதாவது : இந்திரன் நாடு கண்ணுற்ற வத்தியாயம்

318. இந்திரன் முதலோ ரங்கர் நீங்கி
யிருள்செறி சோலையிற் புகுந்து
வந்தனர் கடல்போ லவ்வினிற் கண்ட
வளமையை யார்வகுத் துரைப்பார்
பந்திய தான சையத்தி னின்ற
பாதவக் கிளைகளின் மஞ்ஞை
முந்திய பூவை முனிவர ரியோக
முயற்சியை முடித்திடக் கண்டான்.

எ - து:—இந்திரமகாராசன் முதலாகிய பேர்கள் காஞ்சியாகிய அத்திகிரியை விட்டு நீங்கி யிருளானது மூடியிராநின்ற சோலையின்கண் புகுந்து கடலென வளைந்துவந்தவர்க ளந்த வனத்தினிற் கண்ட வளப்பத்தினை யாவராலே கூறப்படும் பந்தியா யந்த வனத்தின்கண் மருவிய பர்வதத்தினிடத்திற் பொருந்திய செண்பக மந்தார பாரிசாத விருட்சக் கிளைகளில் வாசஞ் செய்கின்ற மயில் குயில் கிளி [1]நாவணத்திப் பக்ஷிகள் முனிவரோதப்பட்ட வேதாத்தியயனங்கள் சொல்லக் கண்டா னிந்திர மகாராசனென்றவாறு. 1

319. வனங்களின் மிகுந்த மயில்குயி லன்ன
சாலங்கள் பெடையொடு மருவி
யினங்களோ டேகி மானத மடுவி
னிலகிய தத்தம தினத்தைக்
கனமதாய்க் கண்டு களித்திடுங் காலை
யரங்கனுர் புகழினைக் காண
மனமெலிந் துருகித் தத்தம திடத்தின்
மருவிய புட்களை மதித்தான்.

எ - து :—அந்த வாரணியங்களின்கண் மிகுந்த மயில் வர்க்கங்கள் குயில் தொகுதிக ளன்ன சமூகங்கண் முதலான வெல்லாந் தத்தம் பெடையினைக் கூட்டிக்கொண்டு வர்க்கங்களுடனே பொருந்தி மானத தீர்த்தத்தின்கண் தத்த மினங்களைக் கண்ணுற் றதிசய மடைந்த காலத்தி னரங்கனுர் புகழினைக் கூறக் கேளாதபடியினுலே மனமெலிந்

[1] நாகணவாய்ப் பறவைகள்

துருகி யங்ஙன மிருக்கச் சகியாத புட்குலங்களானது மீட்டுந் தமதிடஞ் சேர்ந் தரங்கனுர் புகழினைக் கூறுகின்ற பட்சி சாலங்களைப் பார்த்து மகிழ் சிறந்திருத்தலை மதித்தா னென்றவாறு. 2

320. அந்தமா வனத்தி னழகிய சோலை
யருஞ்சுனை பெருகிய தடாகம்
பந்தமா கியபொற் றமரை யல்லி
படர்ந்தநல் லாம்பல்க ளலருஞ்
சந்ததஞ் சுகந்தம் வீசுபுன் னைகஞ்
சண்பகஞ் சார்ந்திடக் கண்ட
விந்திர னுலகை வெறுத்துநற் பரம
பதமென வின்பமுற் றனனே.

எ - து :—அந்த வனத்தின்கண் ணழகிய சோலைகளான தருகே சுனையின்கண் பெருகிய சல சம்ருத்தியாகிய தடாக பந்திகளின்கண் பொன்னந்தாமரைக ளல்லிக ளாம்பல்க ளலர்ந்து பிரகாசிக்கு மதன் கரையின்கண் புன்னைக விருட்சங்களுஞ் சண்பக விருட்சங்களு மலர்ந் தழகாய்த் துலங்குதலைக் கண் டிந்திர மகாராசனனைவன் றனது தேவ லோக பஞ்சதாரு முதலாகிய வளங்களை வெறுத் திசைத்தா னென்றவாறு. 3

321. இரண்டதா மறையி னுதியாம் பருச்ச
மூன்றனு வாகத்தி னிசைந்த
பரவுசெஞ் சொல்லிற் பூருவ பாகப்
பயிற்சியைப் பாரமார்த் திகமாம்
விரவுப நிடத மிசைத்திடும் பரமாம்
வராகநன் முகத்தினின் விளங்கிச்
சரணதி னுதித்த வராகநன் னதியிற்
குடைந்துபி னிந்திரன் றழைத்தான்.

எ - து :—இரண்டாம் வேதமாகிய வெசுர் வேதத்தின் முதற் பருச்சத்தின் மூன்று மனுவாகத்திற் சொல்லுகின்ற பூர்வ பாகத்துக் குத்தர பாகமாகிய பாரமார்த்திக மென்னு முபநிடதமும் பரத்துவமாய்ச் சொல்லுகின்ற வராகப் பெருமா டிருமுகத்தினிற் றோன்றி யதன் பின்பு திருப்பாத கமலத்தி னவதரிக்காநின்ற வராக நதியைக் கண்டு தழைத்த தேவ கூட்டங்களுடனே வந்து நதியிலே மூழ்கிக் களைதெளிந் தின்பமுற் றுனந்தபரவசர்களாய் வீற்றிருந்தார்க ளிந்திரன் முதலாகிய தேவர்க ளென்றவாறு. 4

322. பரவை நீரினை மேகங்க ளுழக்கியே பருகித்
திரம தாகிய கிரியினிற் றங்கியே சென்று
பரவி வானிடைத் தடித்துப்பின் னிடியினைப் பயிற்றிச்
சரம தாமெனக் கான்றன தாரையின் கணங்கள்.

எ - து :—அப்படிப் பிரம்மாவினுடைய வனுக்கிரகம் பெற் றிந்திர மகாராசனானவன் சஞ்சீவி கிரியைக் குறித்து வரும்போ தவனுடைய வாகனமாகிய மேகமான கிரங்கிப் பரந்த கடலினது நீராகியதைச் சேறுடனே கலக்கி யுண்டு நிலைபெறுகின்ற மலை நிலங்களி னிளைப்பாறி மறுபடியு மாகாயத்திற் சென் றிடிகளானது முழக்க இடையிடைகளின் மின்னி யிடிக்கின்ற சப்தங்களானது சுத்த வீரனது காண்டீப வோசை போன்றுஞ் சரமாரியைப்போலச் சொரிந்துநின்றன சலதாரையின் கூட்டத்தை யென்றவாறு. 5

323. குன்றம் வீழரு வித்திரள் கல்லெனக் குறுகி
மன்றல் தங்கிடு முல்லையா கியமரு வியதாய்க்
கன்றி னஞ்செறி பசுவின்பா லருந்தியே கவினுய்ச்
சென்ற கால்கொடு மருதமாந் தாயினைச் சேர்ந்தாள்.

எ-து :—அந்தச் சஞ்சீவி கிரியினின்றும் விழாநின்ற வெள்ளருவியினது பெருக்கானது கல்லென்கின்ற வோசையுடனே யதை விட்டுப் பெயர்ந்து திவ்விய பரிமளங்களைக் கமழுகின்ற காட்டகமென்னு முல்லைத் திணையாகிய விரண்டாந் தாய் வருவிக்கப்போய்க் கன்றுகள் பசுக்கள் முதலானது வாசம் பண்ணுமையா லந்தப் பசுவின் பாலை யிந்தப் பெண்ணுக் கூட்டுவித் தழகாய் வளர்க்க வளர்ந்து பொருந்திய கால் வழியாய் நடக்கும் பருவமாக்கி யனுப்ப முல்லைத் திணையாகிய காட்டினுடைய கால்வாய்களிலே நடந்து சென்று மூன்றாந் தாயாகிய மருதமாகிய வயனிலத்திலே வந்து சேர்ந்தாள் மலைவெள்ளப் பெருக்காகிய பெண் ணென்றவாறு. 6

324. பண்ணை யாகிய பலபல தொட்டில்கள் பரப்பிப்
பெண்ணை பம்பையான் விளித்திடப் பெரிதுவந் தெய்தி
நண்ணி யங்ஙனந் திருவிளை யாட்டினை நயந்து
கண்ண தாமுத லுறுப்பெலாங் கவினுறக் கலந்தாள்.

எ - து :—மலை வெள்ளமாகிய பெண்ணை மூன்றாந் தாயாகிய வயனில மானவள் தன் பெண்ணுக்குப் பெரும் பாத்தியாகிய பலபல தொட்டில்களை யமைத்து வைத்தா ளதன்பின் பந்தப் பெண்ணுனவள் வரப் பம்பையினுலே யழைக்கப் பெரிதாகிய சந்தோஷத்துடன் வந்து சேர்ந் தந்தத் தொட்டிலிலே

யனேகந் திருவிளையாடலைச் செய்து கண் முதலாகிய வுறுப்புக்களெல்லாம் பருவத்துக் கடுத்ததாய்த் தழைக்கப் பாராட்டினுள் மருதமாகிய தாயானவ ளதனாலே பெதும்பைப் பருவத்தைக் கலந்தா ளென்றவாறு. 7

325. குவளை கண்ணதாய்த் தாமரை முகமதாய்க் குணத்த
தவளச் சங்கங்கள் கண்டமாய்த் தழைத்தமாந் தளிர்க
ளுவமை யில்லதோ ருருவமா யூருவா ழைகளாய்க்
கவலை யின்றிய கொடியின மிடையதாய்க் கவின.

எ - து:—மூன்று நிலமான மருதமாகிய தாய் வளர்க்க வளர்ந்து பெதும்பையாகிய பருவ மமைந்த வெள்ளமாகிய பெண்ணுக்குக் குவளை மலர்கள் கண்ணாகவுந் தாமரைக் கமலங்கள் முகமாய் விளங்கவும் நல்ல குணத்தினையுடைய வெண்மையாகிய சங்கங்கள் கண்டமாய் விளங்கவுந் தென்றற்காற்றினால் தழைக்காநின்ற மாந்தளிர்களானது உருவத்தின தழகாய் விளங்கவுஞ் செவ்வாழைக டொடையாய் விளங்கவு மங்கள சுக சொரூபமாகிய கொடியினமாய்ப் படர்கின்ற திடையினது வழகைக் காட்டவும் பெதும்பைப் பருவ நிறைந்த பெண்ணானவள் வளர்ந்தா ளென்றவாறு. 8

326. தெங்கி னிற்சிறந் தருளிய செவ்விள நீர்க
ளிங்கி தக்கொங்கை யெழிலதாய் வேயினந் தோளாய்ப்
பங்க மின்மணி மலரின மாலைகள் பயின்று
தங்கு மோர்பெண்ணை நுரையெனும் போர்வைக டயங்க.

எ - து:—தென்னஞ் சோலைகளிற் சிறப்பா யோங்குகின்ற குலைகளிற் சிறப்புற்ற செவ்விளநீர்கள் ரமணீயமான தனதடக் கொங்கையாய் விளங்கவு மழகிய பச்சை மூங்கிலானது தோளாய் விளங்கவு மிலக்கண மமைந்த மணிகளெல்லா மிரத்தின மாலையா யழகு செய்யவு மலர்க் கூட்டங்கள் பத்திமாலைகளா யழகெறிப்பவு மித் தன்மையா யந்தப் பெண்ணை யலங்காரஞ் செய்து கண்திட்டி நீங்கத்தக்கதாய் நுரை யென்னும் வெண்பட் டுடையைப் போர்வையாகத் தரித்து வளர்த்தாள் மருத நிலமாகிய மூன்றுந் தா யென்றவாறு. 9

327. அலங்க ரித்தபின் னன்கெனுந் தாயதா யடைந்து
பலங்க ளீய்பவள் குமுதவா யினிற்பரந் தோங்கு
குலம்ப யின்றிடு வண்டினத் தோசையாற் கூவ
நலம்ப யின்றவள் வந்தன ளனிலந் தழைக்க.

எ - து :—இத் தன்மையாய் மூன்றாந் தாயாகிய மருதத்தா யலங்கரித்த பின்பு நான்காந் தாயைச் சார்ந்து மங்கைப் பருவப் பலத்தைக் கொடுக்காநின்ற நெய்த னிலமாகிய கழிநிலமென்று சொல்லப் பட்டவள் செவ்வாம்ப லென்னும் வாயைத் திறந்து வண்டி னோசையாகிய தொனியைக் கொண்டு தன் பெண்ணை வரவழைக்க நன்மை யெல்லா மோர் வடிவுகொண்ட வெள்ளமாகிய பெண்ணானவ ளவளிடத்தில் வந்து சேர்ந்தா ளிந்தப் பூமிக ளெல்லாந் தழைத்தோங்க வென்றவாறு. 10

328. வந்த பெண்ணினை மணத்தினுக் குரியன வறிந்து
கந்த மோங்குசந் தனமுதற் கமழ்தரு பொருளை
நிந்தை யில்லவ ளணிந்தபின் வருணனை நினைக்கப்
புந்தி கொள்பவன் புகுந்தனன் கடிமணம் புரிந்தாள்.

எ - து :—நான்காந் தாயாகிய கழிநில மென்று சொல்லப்பட்டவ டிருமணத்துக் குரித்தாகிய செய்கைகளா லலங்கார சம்பிரமஞ் செய்து சந்தன களப முதலான திவ்விய பரிமளங்களைக் கமழ்கின்ற வாசனைத் திரவியத்தைப் பூசிக் குற்றமற்ற தாயானவ டிருமணப் பெண் வடிவ மாக்கி யிவ ளழகுக் கொத்த வழகினையுடைய வருண ராசனை நினைத்தா ளவளுடைய நினைவை யறிந்து மகிழ் சிறந்தவனாய் வந்து சேர்ந்தா னவனுக்குத் தன் பெண்ணை வேத விதிப்பிரகாரங் கல்யாணச் சடங்கினைச் செய்து நிறைவேற்றினா ணான்காந் தா யென்றவாறு. 11

329. கடிம ணஞ்செய்த பின்னரே வரிசைகள் கணக்கிற்
படியி னல்கியே யனுப்பிட விருவரும் படர்ந்து
குடவ ளைக்குலங் குமுறுமோர் கடலிடைக் குறுகித்
தடம லர்ப்பொய்கை யாடினர் மலர்களைத் தரித்தார்.

எ - து :—அப்படித் திருக்கல்யாண முடிப்பித்த பின் வரிசைகளானது கணக்கில்லாததாய்க் கொடுத் திருவரையு மங்களமா யனுப்புவிக்க வழி கொண்டு நடந்த விருவராகிய திருமணக்கோலஞ் செய்து மீண்டு வருமவர்கள் குடத்தைப் போன்ற சங்கக் கூட்டங்க ளார்ப்பரித்துச் சஞ்சரிக்காநின்ற கடலிடத்தே போய்ச் சேர்ந்து விசாலமாகிய தடப் புனலிற் குளித்துக் களிகூர்ந்தும் பூஞ்சோலை மலரை யெடுத் தணிந்துஞ் சுபகர மங்களமாய் விளங்கிக் களிகூர்ந்தும் ஸ்ரீ அரங்கநாதருடைய சரணாரவிந்தங்களைப் பணிந்து மகிழ் சிறந்தார்க ளென்றவாறு. 12

330. நான்க தாகிய திணையினின் முதற்பொரு ளயர்ந்த
பான்மை யாகிய கருப்பொருள் பகர்ந்திடு முரித்தா
மேன்மை யாகிய பொருளெலா மகப்பொருள் விளக்கும்
ஞான மில்லவ னெவ்வணங் கூறுவ னயந்து.

எ - து:—குறிஞ்சி முல்லை மருத நெய்தலென்னு நான்கென்று சொல்லப்பட்ட திணைகளின் முதற்பொருள் கருப்பொரு ளுரிப்பொரு ளென்னு மேன்மைகளை யெல்லாம் விரித் தொவ்வொரு திணைக்கும் பதினுன்கு பொருளாய் விரித்துரைக்கு மகப்பொரு ளென்னு மூன்று மிலக்கணமாய தவ் வாராய்ச்சியாகிய ஞானமில்லாதவ னெவ்விதமா யறிந்து சொல்வ னென்றவாறு. 13

331. கூவ லாறுகால் பெருகிய நீரினுற் குறைவிற்
றூவி லாக்கள மள்ளர்கள் கழனியிற் சாரத்
தேவர் கோமகன் றன்புகழ் தெளிவிசைப் பாட்டாற்
பூவ லர்ந்ததண் கழனியி லுழுகுநர் புகழ்வார்.

எ - து :—கிணறுக ளாறுகள் கால்கள் முதலாகியதும் பெருகிய நீரின் வெள்ளத்தைக் கண்டு வொப்பற்ற களத்தின்கண் வாழ்கின்ற மள்ளர்க ளானவர்கள் கழனியிலே யவ் வெள்ளங்களைப் பாய்ச்சித் தேவராச னுடைய கீர்த்தியைக் கூறுகின்ற தெளிவாகிய விசைப் பாட்டினுலே புட்பங்களை யலர்கின்ற கழனியிலே யுழும்படியானவர்கள் புகழ்வார்க ளென்றவாறு. 14

332. பரம்ப டித்துப்பின் செய்வினைத் தொழிலினைப் பயிற்றி.
நிரம்பு வித்தினைத் தூவுவார் நடவுக ணிறைப்பத்
தரம்ப யின்றிடு சாலியின் கதிர்குலை தழைத்து
வரம்பி லாதன பழுத்தன செந்நெல்பொன் மணிபோல்.

எ - து :—பரம்படித்த பின்பு சேடையாக்கி நிரம்பிய வித்தினைக் கள மள்ளர்க டூவுவார்க ணடவினைப் பிடுங்கி நாற்று நடுவார்க ணல்ல தரமாகிய செஞ்சாலிகளானது குலை தழைந்துக் கணக் கிறந்தனவாய்ப் பழுத்தன செந்நெல்லானது பொன் மணிகளைப்போ லென்றவாறு. 15

333. வாளி னுற்செந்நெ லரிந்தபின் வடவரை யனைய
வாளி மொய்ம்பினர் போர்செய்து வையினை யகற்றி
நீளி ருங்குன்ற மென்னவே தூற்றிப்பின் னிறுவி
காளி யேமுத லாயினர்க் களித்தனர் கடனே.

எ - து :—கள மள்ளர்களானவர் பழுத்த சாலிகளை வாளினு லரிந்த பின்பு மகாமேருவினைப் போலச் சிங்க வலியினையுடையவர் போரினைச் செய்து வைக்கோலினைக் களைந்து நெல்லினை நீண்ட வட்ட குலாசலங்களைப் போலக் குவித்துப் பின்பு பதரினைத் தூற்றிக் காளி யென்கின்ற ஊர் காணித் தெய்வ முதலாகிய பேர்களுக்குக் கடன்களைக் கொடுப்பார்க ளென்றவாறு. 16

334\. ஆறி லொன்றெனுங் கடனரி விரதனுக் களித்துத்
தேறு கின்றவர் பண்டியிற் கொண்டுபோய்த் தேவர்
மாறி லாவதி திகளுக்கு மாண்புடன் பூசை
வீற தாகவே யமைத்தவ ருண்டிட விதிப்பார்.

எ - து :—அப்படிக் கடன்களைப் பகுத்துக் கொடுத்தபின் பளவைபினைக் கண் டரிவிரதமகாராசனுக் காறி லொன்று கடன் கொடுத்த பின்பு தெளிந்த குடிகளானவர்க டங்கள் குடிவாரத்தினைப் பண்டியி னேற்றிக் கொண்டுபோய்த் தேவாதிகள் பிதிரர்க ளதிதிகண் முதலாகிய பேர்களைப் பாதுகாத்துப் பூசனை புரிந்து தங்கள் வர்க்கங்களுடனே விருந்திட்டு மிகுந்ததைத் தாங்க ளுண்பார்க ளென்றவாறு. 17

335\. அளகை மேவிய தனதனைப் போலவே யழகாய்
வளமி குந்தவர் வாழ்க்கையு மானிலத் தரசா
யளவி னல்கிய கடன்களை யரிவிர தப்பேர்
தளவ மாலையான் செய்தன தருமமோ வனந்தம்.

எ - து :—அளகையின்கண் மேவிய குபேரனைப்போல் செல்வ நிறைந்த குடிகளின் வாழ்க்கையினது தர்மங்களு மிவ் வுலகத் தரசனுகிய வரிவிரத மகாராசனுனவ னுறிலொரு கடமை வாங்குந் தன்மையினுல் தேவாலய பிரம்மாலயங்கள் முதலாகிய தர்மஞ் செய்தலே வனந்த மென்றவாறு. 18

336\. மாத ராடவ மன்னவ ரந்தணர் மகிழ்ந்து
நீதி சேர்புகழ் நெறிவழு வார்களா னிறைந்து
மாத மூன்றுநன் மழையுமுப் போகமும் வளர்ந்து
தீதி லாதுநற் சோலைமுக் கனிகளுந் திகழும்.

எ - து :—அழகினையுடைய ராச கன்னியர்கள் அரசர்கள் அந்தணர்கள் மகிழ்ச்சியினை யடைந்தவர்களாய் நல்ல மார்க்க வழியின்கண் ணடப்பார்க ளதனுலே நிறைந்து மாத மும்மாரி பெய்து முப்போகமும் விளைந்து நல்ல சுகுணத்தினையுடைய சோலைகளானது முக்கனிகளையும் பழுக்கு மென்றவாறு. 19

இந்திரன் நாடு கண்ணுற்ற வத்தியாயம் முற்றிற்று.

# இருபத்தோராவது: இந்திரன் நகர் கண்ணுற்ற வத்தியாயம்

337. சக்கர வாள சயிலமிந் நகர்க்குத்
தாழ்விலா வெயிலதாய்ச் சார்ந்து
முக்கிய மாக விளங்கவே வெண்ணிச்
சூழ்ந்தன முடிவிலா தவையின்
பக்கம தெல்லாஞ் சித்திரப் பொறிகள்
பாசம்வேல் கப்பண முலக்கைத்
திக்கெலாம் வீசிக் கணைமழை சிதறிச்
சிந்திடுஞ் செயலெலா மவண.

எ - து :—சக்கரவாள சைலமான திந்த நகரத்திற்குத் தாழ்வில்லாத மதிலினமாய்ச் சூழ்ந்து பிரகாசிக்காநின்ற முக்கியமாகிய முடிவில்லாத வம் மதிற் பக்கமெல்லாஞ் சித்திரப் பொறிகளானது பாசங்களை வீசப் பட்டதாயும் வேல் முதலாகிய திவ்வியாஸ்திரங்களை விடப்பட்டதாயுஞ் சத்தி திரிசூலங் கண்டகோடாலி யிருப்புலக்கைகளைச் சுற்றிவிடுகின்ற தாயுந் திக்கு திகாந்தங்க ளெல்லாங் கணைமாரியைத் தூவிச் சிதறுகின்ற செயல்க ணிறைந்திருக்கின்றன வம் மதிற்புறம்பெல்லா மென்றவாறு. 1

338. திங்க ளுங் கதிரு மொதுங்குபொன் னெயிலிற்
செறிந்தபொற் றுவசமுந் திகழ்ந்த
விங்கித மான சத்தமால் கிரியி
னெழில்பெறு கோட்டைக ளிசைந்த
சங்கரன் கயிலை மலைகொலோ வலது
சார்ங்கபா ணியினுல கிதுவோ
பங்கய னுறையு மனோவதி நகரோ
வென்றனன் பண்ணவர் கோமான்.

எ - து :—சந்திர சூரியர் வடமேரு கிரியைச் சூழ்ந் தாகாயத்தின்கண் விமான ரதாரூடராய்ச் செல்லும்போ திந் நகரியைச் சூழ்ந் துயர்ந்த மதிலினூற் றடைப்பட் டொதுங்கிப் போவார்க ளந்த மதிலி னிடையிடையே பொன்மயமாகிய துசபடங்க ளசைந்தாடாநின்ற விங்கித மமைந்த சத்த குலாசலத்தினைப் போன்ற வேழு விதமான கோட்டையின் பிராகாரங்க ளடுக்குக ளிந்தளங்கள் கோபுரங்கள் குகைகள் முதலாகியது பிரகாசித்த லெத்தன்மைத்தெனில் சங்கரன் வாழ்கின்ற கைலாய கிரியோ வலது

சாரங்க வில்லினைக் கராம்புயத்தினிற் ருங்கிய நாராயண மூர்த்தியினது பரமபதமோ வலது தாமரை மண்டபத்தி னெழுந்தருளிய பிரம்மாவினது மனோவதியோ வென் றிந்திர மகாராச னிவ்னந் ததிசயத்தினை யடைந்தா னென்றவாறு. 2

339. சக்கர கிரியில் தழைத்திடுஞ் சுனைக
டடாகநீ டாமரை வனங்கண்
மிக்கபொற் கொடிக ளசைந்திடக் கதிரோன்
வெப்பது மாறிமெய் குளிர்ந்த
பக்கமேல் மதில்பாற் கடறனிற் றுயின்றேன்
பணியென வமரர்கள் பகருந்
தக்கவெண் மாட மாளிகை பதும
ராகமாய்த் தழைத்திடு மன்றே.

எ - து :—சக்கர கிரியின தருகெல்லாந் தழைத்த சுனைகளுந் தடாக பந்திகளு நீண்ட தாமரைக் காடு பூத் தலர்ந்து பிரகாசிக்கவு மிகுந்த வலங்காரத்தினையுடைய பொன்மயமான துசபடங்க ளசைவினுற் சூரியனது வெப்பந் தீர்ந் தவன துடல மெல்லாங் குளிர்ச்சியை யடைந்தன நான்கு திக்கினும் சூழ்ந்த மேற்றிசை மதிலின் பாங்கர்த் திருப்பாற் கடலி னடுப் பிரதேசத்திலே யனந்த விமான சேகரரா யோக நித்திரை செய்கின்றவரது சேடசாயிதானோ வென் றமர ரியாவருங் கூறுகின்ற மாடமாளிகையானது பதுமராகமாய்த் தழைத் திலகாநின்ற தென்றவாறு. 3

340. இவ்வித மான வெயிலினை வளைந்த
கிடங்குதா னெழுகட லெனலாஞ்
செவ்விசேர் மடுவின் றேவலோ கத்தின்
சிறப்பினை யவ்விடைத் தெரித்துத்
திவ்விய மாகக் காட்டிடு மோர்பாற்
றிரண்டயா னைக்குல முழக்கற்
பவ்வம ததனை மந்தர கிரிதான்
கடைந்திடும் பான்மையைக் கடுப்ப.

எ - து :—சக்கரவாள சயிலத்தினை யொத்த வெயிற் புறமாகிய மதிற் புறத்தை வளைந்த கிடங்கென்னு மகழான தந்தச் சக்கரவாள சயிலத்தைச் சூழ்ந்த வெழு கடலென்று சொல்லத்தக்க வாழமாகிய வொப்பற்ற மடுவில் தேவலோகத்தின் சிறப்பெல்லா மிவ் வண்ண மென் றந்த நகரத்தினது

நிறைந்த வளங்களை யெல்லா மந்த மடுவின் நிழற் சாயையினிற் காட்டு கின்றன வோரிடத்தி லியானைக் கூட்டங்கள் சஞ்சரித்துக் கலங்கித் திரிகின்ற தெத்தன்மைத்தெனின் முற்காலத்திற் றேவர்களென்று மரக்கரென்று மிருவருந் திரண்டு வந்து திருப்பாற்கடலின் மந்தர கிரியால் கடையாநின்ற காலத்தி னந்தச் சாகரமான தெப்படிக் கலங்கிற்றோ வந்த வியல்பாய்க் கலங்கிய தக மென்றவாறு. 4

341. மகர மெண்ணில பாய்ந்துமேல் மருவலர் படையைத்
தகர வேசெய்து செயங்கொளுந் தாழ்விலா நகரி
னிகரில் வீரரும் வேண்டுமோ நேரலர் வெல்லப்
புகரி னிம்மதிற் கிடங்குமே போர்முடித் திடுமால்.

எ - து :—அந்த வகழினின்று மெண் ணிறந்தனவாகிய மகர மச்சங்கள் பாயாநின்றது மேலாகிய சத்திராதிகளுடைய சேனையைத் தகர்த்துச் செயங் கொள்ளுகின்ற தெக் காலத்தும் லயமில்லாத விந் நகரத்தின்மே லிலக்கா யைம்பத்தாறு தேய வரசர்களு மெதிர்த்துச் சமர்செய்யி னவரை வெல்லத்தக்கதாகிய வீராதி வீரர் சூராதிசூரர்களும் வேண்டுமோ விந்த நகர மதிற் புறத்தில் விளங்குகின்ற சித்திரப் பிரதிமைகளு மகழியிலே விளங்குகின்ற மகர மச்சங்களுமே போதும் வீரத்தைச் செலுத்திச் செயங் கொள்வதற் கென்றவாறு. 5

342. சந்தனச் சோலை பந்திசூழ் சாலை
சாளரத் தொகுதிக டளிக
ளிந்துகாந் தத்தின் மாளிகை மன்ற
மெழிற்பெறு வச்சிர வாயி
னிந்தையி லொன்பான் மணிபயில் கதவ
நீள்சுவர் ககனமாய் நிகழப்
பந்திசூழ் மாட மாளிகை பதும
ராகமாய்ப் படர்ந்திடு மன்றே.

எ - து :—சந்தனமாகிய தருக்கள் மிகுந்த சோலைகளு மச் சோலைகளைச் சூழ்ந்திருக்காநின்ற பந்தியாகிய வரிசைக் கிரமமா யிருக்கின்ற கமுகு வாழை மா தெங்கு பலாமரச் சாலைகளு மெத்தை மேடைகளி னிருக்கின்ற சாளர வாயிலினுடைய பத்திகளுங் கோயில்களுஞ் சந்திரகாந்த மாட மாளிகைகளு மிரத்தின மயமாகிய சபையிடங்களு மழகாகிய வச்சிர வாயிலு மவ் வாசலினுக் கொன்பது வகையாகிய மணிகளாற் செய்த கபாடங்களு நீண்ட சுவர்த் தலங்களெல்லா மாயிரத்தெட்டு மாற் றுபரஞ்சி களால் விளங்குகின்ற மாடமாளிகைப் பரப்பெல்லாம் பதுமராக முதலாகிய மாணிக்கமிட் டிழைத்த மாளிகையையுடைய தந்த நான்கு வீதி நகரெல்லா மென்றவாறு. 6

343. கோலமால் வரையின் வீதிக ளதனை
வியாதனுர் கோலச்சே வடியைச்
சாலவே துதித்துச் சாற்றுவன் மறையோர்
வீதியைச் சாந்ததத் துவத்தின்
மூலகா ரணராய் முதன்மையை யுணரு
முனிவரா முளரியின் மணியுஞ்
சாலநீ டுளப மணிபயில் சான்றோர்
சார்ந்திடு மிடங்களைக் கண்டும்.

எ - து :—அந்தச் சஞ்சீவிகிரி யென்னுங் கோலாசலத்தினுடைய வீதிகளின் பெருஞ் சிறப்பை வேதவியாச ரென்னு மறைமுனிவருடைய திவ்விய திருவடிகளை வந்தித்துச் சொல்கின்றேன் சாத்வீக மூலகாரணமான தத்துவத்தினையு முதன்மையாகிய பிரமபாவனையையுமுடைய முனிக் கூட்டங்கள் தாமரைமாலை துளசிமாலைக ளணிந்த பரம பாகவதர்கள் வைபவமா யெழுந்தருளிய பன்னசாலைகள் விளங்குகின்ற வீதிகளின் வளப்பங்களைக் கண்டா னிந்திர மகாராச னென்றவாறு. 7

344. பஞ்சசுத் தியினைப் பயின்றவர் வேள்வி
பயில்பவர் வேதத்தின் பயிற்சி
நெஞ்சினி னிருத்தி விதியினை யோர்ந்து
நெஞ்சகந் திருவினு யகன்பால்
தஞ்சமா யிருத்திச் சரணினைத் தாழ்ந்து
தாழ்விலாப் பிரமசா ரியங்கண்
விஞ்சுமில் லறவா னப்பிரத் தமதாய்
விளங்கிய மறையினே ரொருபால்.

எ- து :—அப்படிச் சொல்கின்ற சஞ்சீவி புரமாகிய நகரத்தின் வாசம் பண்ணுகின்ற மறையவர்க ளெப்படிப்பட்ட கிரியையினை யனுட்டிப் பார்களென்றால் பஞ்ச சுத்தியாகிய பூதசுத்தி மந்திரசுத்தி பாத்திரசுத்தி தல சுத்தி யந்தக்கரண சுத்தியைச் செய்யப்பட்டவர்கள் வேதவேள்வியை விதிப்படி செய்யப்பட்டவர்க ளதுவன்றியும் விதிவாத மர்த்தவாத மந்திர வாத நாமதேய மென்னும் வேதவிதியை நெஞ்சி னழுந்திடக் கற்றவர்க ளந்த நெஞ்சத்தை ஸ்ரீலட்சுமி பதியாகிய வரங்க நாயகனுடைய பாதத்திற் செலுத்தாநின்றவர்கள் பிரமசாரி யில்லறத்தான் வானப்பிரஸ்தன் முதலாகிய வாச்சிரமத்தினின் றொழுகுகின்றவர்கள் வாசம் பண்ணப்பட்ட வீதிக ளொரு பக்கத்தின் விளங்காநின்ற தந்தச் சஞ்சீவிபுர மென்றவாறு. 8

345. அரசர்கள் வீதி யினைவியந் துரைக்கி
னரசர்தா மிந்திர னழகார்
முரசம்போ லொலிக்கு மிலக்கணம் பகர்ந்தா
ருயினு மொழிகுவ தரிதாம்
பரவுறு மடியே னரங்கநா யகன்றன்
பார்வையாம் வாரிச மதனுற்
றிரமதா யுரைப்ப னவன்செய லன்றித்
தேர்ந்ததுஞ் சிலவில வாமால்.

எ - து :—அந்த நகரத்தில் வசியாநின்ற வரச குலத்தில் ராசசூடா மணியானவர்கள் வீதிகளின் பிரதாப சிரேஷ்டத்தைச் சொல்லவேண்டு மாகி லிந்திர மகாராசன் முரசம்போல வொலிக்காநின்ற வைந்திர வியாகரணமாகிய விலக்கணத்தை வகுக்கின்றவனுயினும் அந்த நகர் வளத்தைக் கூற மாட்டா னப்படிப்பட்ட சிங்கார சுபகர சுகுணமாகிய வரச வீதியைச் சிறப்பிக்க வடியேனு லாகாதாயினு மரங்கநாயக னனுக்கிரகப் பார்வையாகிய கிருபாநோக்கத்தால் அறிந்த மாத்திரம் சில கூறுவதல்ல திலக்கண விலக்கிய வராய்ச்சியாற் றெளிந்து சொல்லுவதுஞ் சில வில்லை யென்றவாறு. 9

346. கந்துகப் பந்தி பாற்கட றிரைபோற்
கவின்றிடக் கராசலக் களிறு
விந்தையா யமருங் கந்தமா தனம்போல்
விளங்கிட விரதத்தின் றெருகுதி
மந்தரம் போல வயங்கிடச் சேனைப்
பெரும்புறக் கடலென வழங்குஞ்
சந்திர காந்த வுபரிகை மாணிக்
கத்திறைற் றழைத்தமே டைகளும்.

எ - து :—குதிரைக் கூட்டங்கள் வெண்மையாகிய நிறத்தினை யுடைய வுச்சுவச்சுரவம் போலப் பந்திபந்தியாய்க் கட்டியிருப்பது திருப்பாற்கடலி னலையைப் போல வணியணியாய் வெண்மை நிறத்தால் விளங்கியு மக் கடலி னோசையைப்போலக் கனைத்து மிருந்தன கையினை யுடைய மலைபோன்ற வானைப் பந்திகளா லனேக விநோத சுகுணமாய் விளங்குவது கந்தமாதன மலையை யொத்தன விரதபந்தி வர்க்கமானது மந்தாரசல மலையைப்போல வீற்றிருந்தன சேனைகளாகிய காலாள் கூட்டங்கள் பெரும்புறக் கடலைப்போ லிம்மூன்றினையும் வளைந்து நின்றன வதுவன்றியுஞ் சந்திரகாந்த வுபரிகைகளு மாணிக்கத்தாற் றழைத்த

மாடமாளிகை கூடகோபுரங்க ளடுக்குக ளிந்தளங்கள் மேடைகளு முசித வுல்லாச ரஞ்சித ரமணீய மங்கலமாய் விளங்குகின்றன வரசர்கள் வீதிக ளென்றவாறு. 10

347. அரமிய மதனி னூல்வழி யாடும்
பதுமைபோ லான்றவே சியர்கள்
சிரமதாம் பரத விதியினின் வழுவா
திசைத்திடு மந்தநா டகத்தின்
பரவுறு மிலக்க ணத்தின திசைவு
பார்த்தபார்த் திபர்கள் மகிழ்ந்து
திரமதா மிசை நூற் கேட்டுள மகிழ்வ
ரியலுணர் தெரியல்சூழ் வேந்தர்.

எ - து:—அரமியமாகிய சந்திரகாந்த நிலாமுற்றங்களின் சூத்திர நூலின் வழியிலே யாடுகின்ற பதுமைகளைப்போல் ரஞ்சித சுபகர சுந்தர மாகிய வடிவழகினையுடைய தேவதா ஸ்திரீகள் அரம்பை யூர்வசி திலோத்தமை முதலாகிய ஸ்திரீகளிலுந் தலைமையாய் விளங்குகின்ற பரத நாடக விலக்கணம் வழுவாம னடனஞ் செய்யு மிசைகளைக் கண் களிகூரப் பார்த்தருளிய வரசக்கூட்டங்கள் மகிழ்ச்சியை யடைந்து மதுவு மல்லாம லிசைக் கியான நூல்களைக் கீதங்களினின்று வழுவாத வாயாகிய வாம்பலினைத் திறந் தமுத ரசமாய்ப் பாடுகின்ற வின்ப மொழியைக் கேட்டு மகிழ்ச்சியை யடைவார்க ளிய விலக்கணத்தை யறிந்தனராய்த் திவ்விய சுகந்தங்களைக் கமழுகின்ற மாலையைத் தரிக்காநின்ற வரசக் கூட்டங்க ளென்றவாறு. 11

348. கந்துக நடத்துங் களிறுக ளிவருங்
கனதைதேர்க் கணமதைக் கவினுய்
விந்தையா யியற்றும் விளங்குமா டரங்கின்
மெல்லிய லார்விளைத் திடுமோர்
நிந்தையில் சரச விந்தையி னிகழ்ந்த
காமநா னியதியைக் கண்டு
சந்தத மகிழ்ந்தங் கின்பங்க டுய்க்குஞ்
சால்பினை யுடையவ ரனந்தம்.

எ - து:—சில வரசர்கள் குதிரையைக் கதியின் வரன்முறை தவிராது நடாத்துவார்கள் சில பேர்க ளானையின்மேரி லம்பாரி பிரகாசிக்க வேறி நடாத்துவார்கள் சில பேர்கள் கனதையாகிய தேர்க்கூட்டங்களை யழகாய் ஏறித் திரிவார்கள் சில பேர்கள் பிரகாசியாநின்ற நிலா முற்றங்களிலே

பரத விலக்கணப்படி நடிக்காநின்ற கொக்கோக விலக்கணப்படி தேவதா ஸ்திரீகள் சரச சல்லாப மோகனத்தால் மயங்கி யுநகி நாடோறும் மகிழ்சிறந் தவருடைய வின்ப சுகத்தை மருவி யானந்த பரவசரா யிருக்கப்பட்டவர்க ளனந்தம்பேர்க ளந்த ராச வீதியி னென்றவாறு. 12

349. வணிகர்தம் வீதி வகையினை யுரைக்கிற்

குபேர னும் வெள்கியே வணங்கும்

பணிகளிற் சிறந்த சேடனுர் நாவு

மடங்கிடும் வீதியின் பரப்பின்

மணிகளின் மாலைக் கோவையாய் நிறுத்தி

மாநிதிக் குவையினைக் குவித்து

நணுகுவோர் விலைகள் கேட்கிலோ விம்மி

வழாமலே விலையினை நாட்டும்.

எ - து :—வணிகராகிய வர்த்தகர் வீதி சிங்கார வளப்பத்தைச் சொல்லக் குறித்தால் அளகையின் வாசம் பண்ணாநின்ற குபேரனும் வெட்கப்பட்டு வணங்கித் தொழுவான் சர்ப்பக் கூட்டத்திற் சிறந் திடுகின்ற வனந்த னென்னு மாயிர நாவினையுடைய வாதிசேஷனுஞ் சொல்லிமுடியா தந்த நகரப் பரப்பெல்லா நவமணி மாலைகளைக் கோவையாய்ப் பரப்பி வைத்து திரவியக் குப்பையைக் கடைகளிலே குவித்து ராசிராசிகளாய் விலைகேட்போர்க் கிம்மியளவும் பொய்கூறாது விலையைப் பகர்ந்து விற்பார்க ளென்றவாறு. 13

350. மாணிக்க வம்மி வச்சிரக் குழவி

மருவிய வெள்ளியா னுரல்கள்

காணிய தான பவழத்தா னுலக்கை

கசடறு முத்தின மரிசி

பூணரும் புட்ப ராகத்தி னடுப்புப்

பொன்கட மழலகின் மாட்டி

மாணதாம் பனிநீ ருலைப்பெய்து சிறுர்கண்

மடவரல் சிற்றிலை வகுப்பார்.

எ - து :—அந்த வர்த்தகர் வீதியிலே சிறுவீடு கட்டிக் குழந்தைகள் முதலாகிய பேர்கள் விளையாடுகின்ற தியாதென்றால் மாணிக்கத்தா லம்மி வகுத்து வச்சிரத்தினலே குழவி யமைத்து வெள்ளியா னுரல்கள் செய்து

பவழத்தா லுலக்கை பணித்துக் குற்ற மற்ற முத்தினமாகிய வரிசையைப் புட்பராக வடுப்பிலே வைத்திருக்கின்ற பொற் குடத்திலே பன்னீராகிய வுலைநீரிலே விட்டுத் தங்க நெருப்பை மூட்டி யகில் கட்டைகளாக மாட்டாநின்ற சிறுவீடுகள் கட்டி யாடுகின்ற சிங்கார சுந்தர வளப்பத்தினை யுடைய தவ் வீதிக ளென்றவாறு. 14

351. மூவரைத் தாங்கு முறையினின் றொழுகு
சூத்திரர் வீதியின் முறைமை
நாவலர் கல்விப் பயிற்சியி னடங்கா
தாயினு நலத்தினைச் சிறிது
பூவைபோல் வண்ண ரங்கநா யகன்றாள்
பேணிய புகழினாற் புகல்வேன்
பாவையர் வளமும் பலமறைப் புகழும்
பதியுபொன் னிதியெலாம் பலவால்.

எ - து:—மறையவ ரரசர்கள் வாணிக ரென்னு மூவரையுந் தாங்கா நின்ற முறைமையாகிய சூத்திரர்கள் வீதியினுடைய சிறப்பை வித்துவ சனங்கள் மிகவும் புகழ்ந்து கூறினாலு மடங்கா தாகையா லரங்கநாயக னுடைய வனுக்கிரகத்தால் தெரிந்த மாத்திரஞ் சொல்லுகிறேன் ஸ்திரீ சனங்களிட போகங்களும் சதுர்வேத பாராயணங்களு நகரங்களிட சிறப்புகளும் ராசர்களுக்கு வனேக திரவியங்களைக் கொடுத்து வணங்கு கின்ற வண்மைகளும் பல வென்றவாறு. 15

352. ஏனைய மரபு தங்கிளைக் கூடி
யிருந்திடும் வீதியை யிசைக்கின்
மானனா ரரம்பைப் படிவமாம் புருடர்
மன்மத னெனினவர் வாழ்க்கைப்
பூனத மலரோன் புகன்றிடிற் சிறப்பாம்
புந்தியிற் சிறியனா லாமோ
ஞானமா மந்தச் சிறப்பெலாங் கண்டங்
கிந்திர னயந்துரு கினனால்.

எ - து:—பின்னு மந்த நக ரெப்படிப்பட்டதென்றால் மற்ற விதர சாதிகளினுடைய வர்க்கங்கள் கூடி மகிழ்ந்திருக்கின்ற வீதியினிட சிறப்பைச் சொல்லுமளவில் மானைப்போன்ற கண்ணையுடைய கன்னியர்க ளரம்பையரை வென்றவர்களா யிருப்பார்கள் புருடரோவென்றால் மன்மத னென்று சொல்லப்படு மெனி னவர்களுடைய வில்லறமாகிய மனை

வாழ்க்கையினது பெருமையை யாவராலே சொல்லலா மென்று லாயிரத் தெட்டு மாற்றுப் பொன்மயமாகிய தாமரைக் கமலத்தி னிருக்கின்ற பிரம்மதேவன் சொல்லப்புகின் சிறப்பா யிருக்கும் புத்தி யீனனாகிய சிறியவனாற் சொல்லக்கூடுமோ ஞானயோகியர் வீற்றிருக்கின்ற வீதியின் சிறப்பெல்லா மிந்திரராசன் காணுந்தோறுங் கண்டுருகிக் களித்தா னென்றவாறு. 16

353. அணியெலா மவண வரசெலா மவண
வருந்திறற் பொருளெலா மவண
மணியெலா மவண மனுவெலா மவண
மலரயன் வகுத்தபல் லுயிரின்
கணியெலா மவண கரிபரித் தேருங்
கடலிரைத் தன்னவான் கலையுந்
திணிகொள்மா லுதர மென்னவுந் தோன்றுந்
சிங்கமா புரமெனு நகரே.

எ-து:—நகையினது ரஞ்சித விங்கிதங்க ளெல்லா மந் நகரியி னுண்டாய தருமையவாகிய திரவியங்களு மவ்விடத்தின்க ணுளவாயது நவரத்தின சமூகங்களு மவண மனுவி னூ னடக்கையு மவண மலரயனாலே வகுக்காநின்ற பலவுயிர்த் தொகையினது கணிதமாகிய வரம்புகளு மவண யானைகள் குதிரையினது கூட்டங்களுந் தேர்ப்பந்திகளுங் கடலான திரைத்தா லெத்தன்மைத்தோ வத்தன்மையனவாய்க் கோஷ்டிக்காநின்ற வேத முதலாகிய வறுபத்து நான்கு கலையு நிறைந்திருப்பதனால் நாராயண மூர்த்தியினது வுதர பந்தனம் போன் றிருந்தன சிங்கமா புரமென்கின்ற நகர மென்றவாறு. 17

354. நிலமகட் கினிய முகங்கொலோ வன்றி
நெடியவர் மார்பினி லமர்ந்து
பலமணி பதிந்த பதக்கமோ வன்றிப்
பகரும்பொன் மங்கலந் தானோ
விலகிய வுயிரி னிருப்பிடந் தானோ
விலக்குமி யிருப்பிடந் தானோ
வலகிலெவ் வுயிருந் தொழவும்வீற் றிருக்கு
மங்கண்மா ஞாலத்துக் கரசே.

எ - து :—இவ் வுலகத்துக் கரசாகிய சிங்கபுரமானது பூமிதேவிக் கினிய முக கமலமோ வலது நெடியவனாகிய நாராயண மூர்த்தியினது மார்பினின் வீற்றிருக்கா நின்ற கவுத்துவாபரணத்திற் றங்குகின்ற பதக்கந்தானோ வல தப் பூமிதேவியினது மங்கலமோ வல திவ் வுலகின்கண் நான்கு வகைத் தோற்ற மேழு வகைப் பிறப் பெய்கின்ற வான்மகோடிகளுக் கெல்லா மிருப்பிடமோ வலது ஸ்ரீமகாலட்சுமி தேவியார்க் கிருப்பிடமோ திரிபுவனத் துயிர்களுந் தொழுது வணங்க வீற்றிருப்ப தந் நகர மென்றவாறு. 18

355. பங்கய னுரைப்பா னென்னிலோ வவனப்
பட்டினத் துறையுமா லுந்தி
தங்கிய மலரு ளடங்கினன் சேடன்
றனியனு யாகிப்பின் சார்ந்தான்
சங்கரன் வாணி வெருத்தனர் மதியுந்
தன்கலை குறைந்தன னென்று
லங்கண்மா ஞாலத் தந்நக ரொப்ப
வறைகுவ தெவன்கொலோ வறியோம்.

எ - து :—அந்தச் சிங்கபுரத்தி னனந்த கல்யாண குண சிங்கார வளத்தினைத் தாமரைப் பீடத்தின்கண் வீற்றிருக்காநின்ற சிருஷ்டி கர்த்தா வாகிய பிரம்மாவானவர் கூறிமுடிப்பா ரென்றாலோ வவ ரந்தப் பட்டினத்தின்கண் யோகநித்திரை செய்கின்ற வரங்கநாயக ருந்திக் கமலத்தின்கண் ணடங்குவர் சேடனுனவன் கூறி முடிப்ப னென்கிலோ வவனு மவ் வரங்கநாயகரது நித்திரை சயனப் பாயலா யவரது பின் னடங்கப் பெற்றான் கயிலையங் கிரியின்கண் வீற்றிருக்காநின்ற சிவனுனவரு மதல்லது கலைமகளானவளுங் கூறி முடிப்பரோ வென்று லவர்களு மவர்களுக் கிருப்பிடமாகிய கயிலாயகிரியுந் தாமரைக்கோயிலும் வெருத்துப் போய்விட்ட தென்று லவர்க ளெத் திறங் கூறி முடிப்பார்கள் மதியோ வென்று லவன் தன் கலைகள் குறைந்து நிற்பவ னுதலா லவனு மெத்திறங் கூறி முடிப்ப னென்றவாறு. 19

356. சோலையெலாம் வண்டினங்க டோப்பெல்லாங் குயிலினங்கள்
சோலை சூழ்ந்த
சாலையெலாம் மயிலினங்க டாருவெலாம் பூவையினஞ்
சாற்று மோதை
மாலையெலாங் கடிமணங்கள் மாந்தாதா வனையரம்மா
ளிகையின் மாதர்
பாலையெலாம் பழிப்பிக்கு நவரசமாய் விளம்பியிடும்
பயிற்று மோதை.

எ - து :—அந்தக் கோலாசல கிரியி னருகாகி விளங்குகின்ற நந்தனவனப் பூஞ்சோலை யெல்லாம் வண்டு தேன் சுரும்பு ஞிமிறென்னு நான்கு வகையாகிய வினமுங் காலினால் வருடிச் சிறகினா லடித்து மூக்கினா லுழுது பண்களைப் பாடாநின்ற விசைப் பாட்டுகளுந் தோப்புக ளெல்லாங் குயிலினங்கள் பண்பா யிசைக்கின்ற வோசையு மந்தச் சோலையின தின்ப விபவத்தைக் குறித்த சாலைப் பந்திக ளெல்லா மயிலினங்கள் கலாபியை விரித் தாடாநின்ற வழகுஞ் சண்பக புன்னாக தாருக்களெல்லாம் பூவை யென்னும் நாவணுத்திப் பட்சிகள் சுகுண சுரசொலித துல்லியமாகிய விசைகளை யிசைக்காநின்ற வோசையும் நகரி னுள்ளார் மாலைக ளெல்லாந் திவ்விய மண நாறுகின்ற வாசனை மாந்தா தாவை யொத்த ராசக் கூட்டங்கள் மனையாகிய மாணிக்க வுப்பரிகையின் வாழுகின்ற வரசமங்கையர் பாலைப் பழிக்காநின்ற நவரச வலங்காரமாய்க் கூறுகின்ற மென்மையாகிய மொழி ரம்மிய ரஞ்சித வுசித சுபகரமா யிருந்ததனால் தேவாமிர்தத்தினுஞ் சிறந்தன வென்றவாறு. 20

357. கோகிலம் பாட வண்டினஞ் சுருதி
கூட்டிடக் கோலமா மஞ்ஞை
நாகிளங் கமுகி னீழலி னடன
நவின்றிடு நாகண வாய்ப்புள்
சாகைக டோறுந் தனிப்பெடை யோடுஞ்
சரசசல் லாபத்தைச் சாரு
மீகையே கடுப்பக் கொன்றைபொன் சொரியு
மெழின்மலர்ச் சோலையெண் ணிலவால்.

எ - து :—பூத்த மலர்ச் சமூகத்தினையுடைய பூஞ்சோலைகளிலே குயிலினங்கள் பாடவும் வண்டினஞ் சுதி கூட்டவு மழகிய மயிலினங்க ளானது கமுகஞ் சோலை முதலாகிய தோப்புகளி னிடரங்கமாகச் சத்த சுரங்களையுஞ் சதிகளைத் தழுவி நடிக்கின்ற பரத நாடக விநோதங்களை நடிக்கவும் நாவணுத்திப் பட்சியானது பூஞ்சோலைகளினின்று தமது ஸ்திரீ கூட்டங்களுடனே மகிழ் சிறந்து களிகூர்ந்திருக்கவு மிந்தப் பரத நாடக விலக்கணத்தைப் பார்த்துப் பரிசு கொடுக்குந் தியாகிகளைப்போலச் சரக்கொன்றை தன் புட்பங்களைப் பொன்போற் சொரிந் தந்தக் கோலாசல கிரிக ளெங்கினும் விளங்கிப் பிரகாசித்த தென்றவாறு. 21

358. கமலம தலருந் தடாகசை வலத்திற்
கலந்திடு மரசவன் னங்க
ளமலமாஞ் சிறகிற் சைவலம் படிய
வதுதனைக் குமரியன் னங்க
ளமர்தரு மூட லஃதினைக் கண்டு
சிறகினை யுதறிட வழகா
நிமலமா யொளிரக் கூடியே மகிழு
மியதியைக் கண்டுள மகிழ்ந்தான்.

எ - து:—தாமரைக் கமலங்கள் மலராநின்ற தடாகங்களி னுற்ப வித்துப் பிரகாசிக்கின்ற சைவலமாகிய பாசிக் கொத்திற் கலந்து விளையாடாநின்ற வரச வன்னங்களினுடைய பரிசுத்த வெண்மையான சிறகெங்கினும் பாசிக் கொத்துக்கள் மூடிக்கொண்டிருப்பதனைப் பெட்டை யன்னமானது கண்ணுற்றுக் கோபங்கொண்டு பிணங்குந் தன்மையை யரச வன்னங்கள் கண்டு வச் சிறகினை யுதறிடப் பாசிக் கொத்துக்க ளுதிர்ந்து முன்போல வெண்மையான சுந்தரமாய் விளங்குவதைக் கண்டு களிகூர்ந் திரண்டுங் கூடி மகிழ் சிறப்பதனைக் கண்ணுற்ற னிந்திர மகாராச னென்றவாறு. 22

359. சண்பகக் கிளையிற் பாதிரிக் கொம்பிற்
பலாசத்திற் சார்ந்தசா கையினும்
வண்பயின் மாவி னிடத்தினிற் பயின்ற
குயில்கிளி பூவைகண் மறையோர்
பண்பயில் சந்தை யோதிடக் கேட்டு
நாவினாற் றழைத்திட வோது
முண்மையைக் கேட்டங் குளமகிழ்ந் துருகி
வும்பர்நாட் டினைவெறுத் திசைத்தான்.

எ - து:—அந்தக் கோலாசல கிரியிலே விளங்கிப் பிரகாசிக்கின்ற சிறப்புற்ற சண்பக மரத்தினது கிளைகளினும் பாதிரி மரத்தினது கொம்புகளினு முருக்க மரத்தினுடைய கிளைகளினும் வண்மையான மாமரங்களிலேயுங் களி கூர்ந்து வாசஞ்செய்கின்ற குயில் கூட்டங்கள் கிளிகள் நாவணத்தித் தொகுதிக ளந்தக் கிரியில் வாசம்செய்கின்ற மறையோராகிய முனிவர் கூட்டங்கள் வாலகில்லியர் முதலாகிய மகரிஷிக

ளோதுகின்ற வேதாத்தியயன சந்தையைக் கேட் டந்தப் பறவைக் கூட்டங் ளிசை ரசங்களை யமுத தாரையா யிசைக்காநின்ற வொலியைக் கேட்டுத் துறக்க நாட்டின் வைபவ சுக வின்பத்தை வெறுத்தா னிந்திர மகாராச னென்றவாறு. 23

360. மகரதோ ரணங்க ளுன்குதிக் கெங்கும்
பூப்பந்தர் மருவிட வதன்கண்
டிகழ்மணி யார மிடையிடை வீக்கித்
திகழ்ந்திடு தெரிசனங் கண்டிங்
கிகமதிற் பரம பததெரி சனந்தா
னீந்தன னீர்ங்கம லத்தோன்
சுகமலர் வாயா னறைந்தவின் பம்போற்
றுறக்கத்திற் கண்டில மென்றான்.

எ - து :—அந்தக் கோலாசலத்தின் கிழக்கு முதலாகிய நான்கு திசைகளிலேயும் பூப்பந்தலி னடுப் பிரதேசத்தின் முத்தின் மாலைகளை யிடையிடையாய்த் தூக்கி யிருக்கின்ற வானந்த சிங்கார வளப்பத்தை யாயிரங் கண்ணாலுங் கண்டு களிகூர்ந் துரைக்கின்றா னிந்தச் சஞ்சீவி புரத்திற் கண்ட வகண்ட சாம்ராச்சிய சுக விநோதத்தைப்போல் நமது பொன்னுலகினுங் காணோ மாகையா லிந்தப் பரமபத தெரிசனத்தைக் கொடுத்து ரக்ஷித்த சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மதேவர் சுக சொரூபத் தியான நிறைந்த வாய்மலரா னருளிச்செய்த வின்பத்தை யின் றனுபவித்தோ மென்றா னிந்திர மகாராச னென்றவாறு. 24

361. சந்தனச் சார னந்தன வனங்கள்
சாரளி யிசையினை மிழற்றுங்
கந்தம தகலாக் கமலம திடையின்
வலம்புரி கண்டுயில் தடாக
மந்தமா ருதஞ்சே ரிந்துகாந் தத்தின்
மண்டப மாளிகை வாயிற்
சந்திரன் றவழுங் கோபுரக் குன்ற
மிவையெலாஞ் சார்ந்திடக் கண்டான்.

எ - து :—சந்தனச் சாரல்கள் சூழ்திருக்கின்ற கோலாசலத்தின் நந்தன வனங்களாகிய பூஞ்சோலைகள் வருக்கமாய் நிறைந்து கமழ் கின்றன வளிகளாகிய வண்டினங்கள் சேர்ந் திசைப் பாட்டுக்களைப் பாடுகின்றன வாசனை நீங்காத கமலமலர் நடுப் பிரதேசத்தின் வலம்புரிச்

சங்கினங்களானது நித்திரை செய்யாநின்ற தடாக சமூகங்களுங் கோலமால் வரையி னிருக்கின்ற சந்தனத் தோப்பின் வாசனையைக் கிரகித்து மலையருவியினது குளிர்ச்சியிற் படிந்து மந்த கதியாய்ப் பிரவேசிக்காநின்ற தென்ற னுழைந் துலவாநின்ற சந்திரகாந்தத்தின் மண்டபமு மாட மாளிகையினுடைய வாசலி னழகுஞ் சந்திரன் தவழு கின்ற கோபுரங்கள் முதலாகிய சந்நிதானங்களும் சுபகர சுந்தர விலாசமாய்ப் பிரகாசித்திருப்பதனைக் கண்டா னிந்திர மகாராச னென்றவாறு. 25

362. கோலமால் வரையி னுலய மதனிற்
குறைவிலாக் கோபுரக் குன்றைச்
சாலவா யிரங்கண் களித்திடக் கண்டு
சம்பிர விருக்கத்தைச் சார்ந்து
சீலமாம் பிராட்டி யினைத்தொழு தேத்திச்
சிறந்திடு கருணையின் சிறப்பின்
பாலதாங் கருட துவசனைப் பணிந்து
பாயிர மறையினாற் றுதித்தான்.

எ - து:—அந்தக் கோலமால்வரையான தாயிரத்தெட்டு மாற் றபரஞ்சி சொர்ணமாய் விளங்கிப் பிரகாசிக்கின்ற திசைகளெல்லா மிரத்தின மயமாகிய மகாமண்டபங்களும் கோபுரங்களும் யாக குண்டங்களும் குறைவில்லாமல் நிறைந்திருக்கின்ற விசாலம் பொருந்திய வைபவங்களை யிந்திரனானவன் றன தாயிரங் கண்களுங் களிகூரத் தக்கதாகக் கண் டானந்த பரவசனா யின்ப சாகரத்தின் மூழ்கி யமரக் கூட்டங்க ளுடனே யெழுந்தருளி மிகுந்த சிலாக்கியமாகிய சம்பீர மென்று சொல்கின்ற வெலுமிச்ச விருக்ஷத்தினைக் கண்டு பணிந் திந்த வகில லோக நாயகியாகிய ஸ்ரீமகாலட்சுமியினுடைய திவ்விய திருவடிகளிலே யனந்தமான தெண்டன் சமர்ப்பித் தவளுடைய திவ்விய குணானுபவங்களைத் துதிசெய் தந்த லோக ரக்ஷகியினுடைய சிறந்த கருணா நேத்திர கிருபா நோக்க பரிபூரண விலாசத்தைப் பெற்ற வனந்தன் கருடன் விஷ்வக் சேனன் சனக சனாதன சனந்தன சனத்குமாரராகிய நித்ய சூரியரிட பொற் பாத பங்கயங்களைப் பணிந் தவ ரனுக்கிரக விசேடத்தா னிறைந்த ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி யென்னுந் திவ்விய மகிஷிகளா லிடைவிடா துபாசிக் கின்ற கருடக்கொடியோராகிய ஸ்ரீயரங்கநாயகரிட கமலம் போன்ற உபய சரணாரவிந்தங்களைக் கண் டிந்திரன் முதலாகிய தேவர்கள் வேத வேதாந்தங்களால் துதிசெய்து வணங்கினவர்களாய் வந்தித்தார்க ளென்றவாறு. 26

இந்திரன் நகர் கண்ணுற்ற வத்தியாயம் முற்றிற்று.

# இருபத்திரண்டாவது: இந்திரன் சரணாகதி யடைந்த வத்தியாயம்

363. பாணினி பகர்ந்த விலக்கண மதற்குக்
காண்டிகை விருத்தியாய்ப் பகருங்
காணரும் பொருளாம் பொதுவுரை யென்ற
மூன்றினை விரித்திடுங் கருத்தைச்
சேணுளோர் புகழு மனந்தனா யிரமாந்
சுடிகையி னெழில்விளக் கெடுக்கு
மாணரும் பொருளா யோகநித் திரைசெய்
மால்திக ழரங்கனைக் கண்டான்.

எ - து :—பாணினி யென்கின்ற மகரிஷியானவ ரருளிச்செய்த வியாகரணத்திற்குக் காண்டிகையுரை விருத்தியுரை பொதுவுரையென்று முத்திறமுந் தோன்ற வுரைசெய்தருளிய திறத்தினாற் றேவ கூட்டங்கள் புகழாநின்ற வனந்தனா ரென்னும் திருத்தொண்டில் முதன்மையானவ ராயிரஞ் சிரோ ரத்தினங்களான தமைந்த பணாமுடி விளங்கிப் பிரகாசித் தழகு செய்கின்ற நடுப் பிரதேசத்தி னியோக நித்திரை செய்யாநின்ற ஸ்ரீ யரங்கநாயகனை யாவராலுங் காணுதற் கருமையாகிய கருணையே யுருவமா யெழுந்தருளிய திவ்விய திருமேனி வடிவழகினை யாயிரங் கண்களுங் களிக்கத் தக்கதா யுடம்பெல்லாங் கண்ணா யுருகினான் றேவராச னென்றவாறு. 1

364. மூவுல காளு முதல்வனெம் பொருட்டான்
முன்னிவந் திம்மலை யமர்ந்து
பூவுறை பிராட்டி மார்பினில் விளங்கப்
புடையினிற் கவுத்துவந் துலங்க
நாவுரைப் பரிதா மனந்தனார் விமான
சேகர நாப்பணி னமைந்த
பூவைபோற் பச்சை மரகதம் போலும்
புயல்வணா வென்றடி புகழ்ந்தான்.

எ - து :—திரிலோகமாகிய சராசரங்களுக் கெல்லாங் கர்த்தனாகிய முதல்வனே தேவரீ ரடியேனைத் திருத்திப் பணிகொள்ளும் பொருட்டா லிந்த லீலாவிபூதியி லவதரித்தருளிய வுமது திருமார்பின் செந்தாமரைக் கமலத்தி னுதித்த ஸ்ரீமகாலட்சுமி விளங்கிப் பிரகாசிக்கின்ற விரு

பக்கங்கங்களினுங் கவுத்துவாபரணமான திலங்க நாவினாற் சொல்வதற் கரிதாகிய வனந்த விமான நடுப்பிரதேசத்திற் காயாம்பூவை யொத்த திவ்விய திருமேனிகளானது மரகத மலைபோன்ற வடிவழகினையுடைய கிருபையோடு மியோக நித்திரை செய்கின்ற வரங்க நாயகனைக் கண்டு களிகூர்ந்தவனு யவரிட பொற்பாத கமலங்களி லனந்தமான தெண்டன் சமர்ப்பித்துச் சரணாகதி யடைந்தா னிந்திர மகாராச னென்றவாறு. 2

365. பாற்கடல் கடைந்த ஞான்றசு ரர்களை
மோகினிப் படிவமாய்ப் படுத்து
மாற்கமா ரமரர் தமக்கமு தீய்ந்தா
யுபேந்திர மாயவ னாகி
நாற்கடல் சூழ மசுரர்வே ரறுத்தாய்
நாரசிங் கத்திரு வுருவாய்த்
தாக்குறு பொன்னன் றனைப்பிளந் திட்ட
தந்தைதாய் குருவெனத் தாழ்ந்தான்.

எ - து :—திருப்பாற் கடலைக் கடையத்தக்கதாய் மந்திரகிரி மத்தாகவும் வாசுகி கயிறாகவுங் கடைந் தமுத முண்டாக்கிய காலத்தின் செகன் மோகினி வடிவா யவதரித் தந்த வசுரக் கூட்டங்களை மயக்கி யதமாக்கிய பின்பு நன்மார்க்கங்களையுடைய தேவகூட்டங்களுக் கமுதத்தை யருள் கூர்ந் தளித்த வமுத சாகரமே யது வன்றியு முபேந்திர னென்னும் திருவுரு வமைந் தசுர வெள்ளங்களைக் களைந்து தேவ லோகத்தைப் பாதுகாத்தது மன்றி நாரசிங்கமாகத் திருவுரு வெடுத் துலகத்தைத் திடுக்கிடச் செய்த விரணியாசுரனைப் பிளந் தகிலமான லோகங்களுக் கெல்லாம் பீசப் பிரதான பிதாவு மாதாவுமாக ரக்ஷிக்கின்ற வெமது குருவாகிய தயாநிதியே யடியேன் சரணாகதனை வென்னைக் காப்ப துமது கடனென்று னிந்திர மகாராச னென்றவாறு. 3

366. சோமுக வசுரன் வேதத்தா லமரர்
வேள்விகள் சோர்வற நடாத்துங்
காமிய பலத்தா லசுரர்கள் கிளையைக்
களைந்தன ரம்மறை கவர்ந்து
நேமம தாகக் கடலிடைப் புகுந்த
நெறியறி வுள்ளபின் னெடியோய்
காமர்தங் கியமீ னுருவதாய்ச் செகுத்துக்
கருணைதந் தம்மறை காத்தாய்.

எ - து :—பூர்வகாலத்திலே சோமுகாசுர னென்கின்றவன் தேவாதிகளுக்கு விசயமும் புண்ணியப் பிரயோசனமும் வேத வேள்வியைச் சோர்வில்லாமல் நடத்துங் காரணத்தினலே யிஷ்ட காமிய பலத்தை யடைகின்ரு ரதனுலே யரக்கர் கூட்டங்க ளெல்லா மபவிர்த்தி யடைகின்றூர்க ளென்று மதித்தவனு யந்த நான்கு வேதத்தினையுங் கிரகித்துக் கொள்ளுதலைத் தனக்கு நியமனமாய் நினைந்து கடலிடத்திற் புகுந்தொளிப்ப வக் காலையி லக் கரவட சோர வியல்பை யறிந்து நெடியோராகிய நாராயண மூர்த்தியானவ ரழகு செறிந்த மச்சாவதாரமாய்த் தம் மிச்சா மாத்திரத்தா லெடுத் தவ் வசுரனைப் பிளந்து வேதத்தை மீட்டு வந்து கருணை புரிந்து வேதாசல கிரியில் பிரம்மாவுக்கு வம்ச ரூபமாய்த் திருவாய்மலர்ந்தருளிய பரமனே யுன் னடைக்கல மென்ரு னிந்திர மகாராச னென்றவாறு. 4

367\. வராகமாய்ப் பூமி வவ்விய விரணி
யாக்கனைப் பாதல வரையிற்
கராம்புய மலரால் கடிந்தவ னுடலைப்
பிளந்தபின் கருதியே கடுகித்
தராதல மதனைத் துகளதாய்க் கோட்டிற்
றந்தபின் மறைவிதித் தருளும்
புராதனப் பொருளாய்ப் பொருந்திய பரனே
பொன்னடி யடைந்தனன் புகழால்.

எ - து :—வராகமாகிய பன்றியின துரு வெடுத்துப் பூமியினைப் பாயாய்ச் சுருட்டி யொளிக்கின்ற விரணியாக்கனைப் பாதலத்தின் கண் கராம்புய மலராகிய கரதல கமலங்களா லவ னுடலைப் பிளந்த பின்பு மீட்டு முன திச் சையினலே யந்தப் பூமண்டலத்தினை யுனது கூர்ங்கோட்டி னுண் டுகளா யேந்திவந்து நிறுத்தி ரக்ஷித்தாய் சோமுகாசுரனை மச்சாவதாரமா யெடுத் தவனைப் பிளந் தவனுல் கிரகிக்கின்ற வேதத்தினை மீட்டுவந்து பிரம்மாவுக் கன்ன வுருவமாய் வேதாசலத்தின்கண் திருவாய்மலர்ந்தருளினு யித்தன்மையனவாகிய உனது புகழினை விரும்பி யுனது திருவடிக் கமலங்களுக்குச் சரணுகதி யடைந்தே னென்ரு னென்றவாறு. 5

368\. பங்கய மலர்ந்த விங்கித மடுவிற்
பாய்ந்திடு கராவிறை பயந்து
விங்கித மான கராசல மாதி
முதல்வனை நினைத்திட விசைந்து
பொங்கிய வடவை யாழியை விட்டு
யிடங்கரைப் பிளந்தபின் போற்றி
தங்கிய களிறு தனித்துள மகிழ்ந்து
சரணினை யடைந்திடும் பரனே.

எ - து:—பங்கய சமூகங்களான தலராநின்ற விங்கிதமாகிய சவுந்தரியத் தோடு கூடிய தடாகத்தின்கண் வதியாநின்ற முதலையானது பற்றி யிழுக்கக் கசேந்திர னென்கின்ற யானையானது பயப் பிராந்தியை யடைந் தாதிமூலமே யென்று வீறிட வப்பொழுதே யதனது, சிறுமை யறிந்து வடவா வனலைச் சுவாலிக்காநின்ற சிஞ்சுமார சக்கரத்தை விட் டந்த முதலையைப் பிளந் தியானையைப் பாதுகாத்துத் திருவடி சம்பந்தத்தை விட்டு நீங்காமல் வழித்தொண் டாக்கும்படியாகிய பரமனே யுனது திருவடிக்கண் சரணுகதி யடைந்தே னென்று னென்றவாறு. 6

369. உலகெலா மளிக்க வல்லவ ணுகி
யுயர்ந்தபீ தாம்பர வுடையும்
பலர்புகழ் திருவுங் கௌத்துவ மணியும்
படர்தரும் பஞ்சவா யுதத்தோன்
சலமிலா தமரு மாவலி தன்பா
லிரவலர் போலவே சார்ந்து
நிலமதி னெளிக்கப் பதத்தினு னிறுத்து
நித்திய நின்மல வென்ருன்.

எ - து :—இவ் வுலகத்தை யெல்லாம் ரக்ஷிக்க வல்லவ னென்கின்ற காரணக் கிரிசையினை யாவரு முணர வுயர்வாகிய பீதாம்பரம் தரித்த வரை யும் பலரும் போற்றுகின்ற ஸ்ரீ மகாலட்சுமி தேவியும் கவுத்துவ மணிந்த மார்பகமும் பஞ்சாயுதங்களைத் தரிக்காநின்ற புயங்களு முடையவ ரெப்பொழுது மழிவின்றி விளங்காநின்ற மாபலியாகிய புவனசக்ரேச்வர னிடத்தி னிரவலனைப்போல மூவடி தானமாகிய மண்ணினைத் தானமாய் வாங்கி யாகாய மோரடியாயும் பூமி யோரடியாயு மளந் தவனது சிரத்தின்கண் டிருவடித் தாமரையினைச் சூட்டிப் பாதலவறையி னிறுத்தா நின்ற நின்மலனே யென்ரு னென்றவாறு. 7

370. கலங்கிநைந் துருகிக் காவலன் விமானத்
தமர்தரு கண்ணனைக் கண்டு
தலங்களி னுயர்ந்த கோலமால் வரையிற்
றயாபரத் தலைவனைத் துதிப்ப
நிலவிய வுயர்ந்த வுருவத்தைக் காட்டி
நிறைந்தஞா னக்கண்க ளளித்தான்
குலவுறு வரம்பி லின்பத்திற் குளித்துக்
குறைவிலா மகிழ்ச்சியின் மலர்ந்தான்.

எ - து:—இந்தப் பிரகாரமாக விந்திர மகாராசனுனவன் மனது கலக்கப்பட்டவனு யுருகி யனந்த விமான சேகரரா யோகநித்திரை செய்கின்ற தாமரைக் கண்ணராகிய வரங்கநாயகரிட திவ்விய திருவடிகளிலே யனந்தமான தெண்டன் சமர்ப்பித்து வணங்குகின்ற தேவராசனுக் கிரங்கித் தமது பூரணவதாரமா யிருக்காநின்ற விசுவ ரூபத்தைக் காட்டி நிறை வாகிய ஞானக் கண்களை யனுக்கிரகித்தா ரந்தக் கண்களாற் கண்டு வரம் பில்லாத வின்ப வெள்ளத்திலே குளித் தானந்த பரவசனுய்க் குறை வில்லாத மகிழ்ச்சியினுலே மலர்ந்தான் றேவராச னென்றவாறு. 8

371. அழிவிலா வாற்ற லுடையபே ருருவி
னகிலச ராசர மனைத்து
நிழலதாய்த் தோன்ற வமரர்க ளியாரும்
வலக்கர நீளசு ரேசர்
தழைவுறு மிடக்கை யுருவமாய்த் தோன்றத்
தாணுவும் பிரமனும் விலாவாய்ப்
பழையதோ ரண்ட கோளகை முடியாய்ப்
பாதலம் பாதம தாக.

எ - து:—அத் தன்மைத்தாகிய வென்று மழிவில்லாத நித்தியனுகிய வரங்கநாயகனிட விசுவரூபமான தெப்படிப் பிரகாசிக்கிற தென்று லிந்தப் பூலோகத்தி னிருக்காநின்ற சராசரங்களெல்லா மவ் வடிவிற் பிரதிவிம்பமாய்த் தோன்றவுந் தேவர்களெல்லா மவரது வலக்கராம்புய மலராகவு மசுரக்கூட்டங் ளெல்லா மிடக்கராம்புய மலராகவும் தோன்றவும் பரமசிவனும் பிரம்மாவு மிரண்டு விலாக்களாய்ப் பிரகாசிக்கவும் பழமையாகிய வண்டகோளகையானது முடியாய் விளங்கித் தோற்றஞ் செய்யவும் பாதல முதலாகிய லோகாலோகங்க ளெல்லா மிரண்டு பாதகமலங்களாகவும் தோற்றஞ் செய்ய வென்றவாறு. 9

372. முனிதலி லியக்கர் விஞ்சையர் சித்தர்
திக்கினிற் காவலாய் முந்தி
நினைதரு மேலோர் கருடகந் திருவர்
கின்னரர் நிலைத்தகிம் புருடர்
தனியதாய் விளங்கு நவந்தரு சித்தர்
சாரணத் தலைவர்கள் பூதர்
புனைதரு நூலோர் முதலினோர் ஞான
கருமவிந் தியங்களாய்ப் பொலிய.

**எ-து :**—சாந்தகுண சவுமியராகிய வியக்கக் கூட்டங்களும் **வித்தியாதர ராசர்களும் சித்தர்களு மட்ட திக்கைக் காக்கின்ற திக்குப்பாலகருங் கருட கந்திருவர்களுங்** கின்னர கிம்புருடரு மொப்பற்ற வொன்பது வகையா யுள்ள சித்தக் கூட்டங்களுஞ் சாரணத் தலைவர்களும் பூத கணங்களு நாவலர் முதலாகிய பேர்களெல்லா ஞானேந்திரிய கர்மேந்திரிய வுருவமாய் விளங்கினுர்க ளென்றவாறு. 10

373. *ஆண்டய னங்க ளிருதுமா மதிய*
*மைவகைப் பஞ்சவங் கங்கள்*
*காண்டரு நாழி நிமிடமே முதலாங்*
*காலபே தங்களின் தத்வ*
*நீண்டதோர் கரத்தின் விளங்கிட முனிவர்*
*பேதங்க ளுரத்தினி னிகழ*
*மாண்டதோர் ஞான முகத்தினின் விளங்கு*
*மாயவன் வடிவினை மதித்தான்.*

எ - து :—வருடமு மாறு மதியாகிய வயனங்களு மிரண்டு மாத மாகிய ரிதுக்களு மொரு மாதமாகிய மதிகளும் பஞ்சாங்கமாகிய திதி வார கரண யோக நட்சத்திரங்களாகிய கால தத்துவங்களெல்லா மொரு கரதலகமலங்களிலே தோன்றிப் பிரகாசிக்கவு முனிவர் பேதங்களெல்லா மார்பினின் விளங்கவு மர்க்கட ஞான மார்ச்சால ஞானமாகிய விரண்டுந் திருமுக மண்டலத்தின் விளங்கிப் பிரகாசிக்கவு மெழுந்தருளிய வரங்கநாயக ரென்றவாறு. 11

374. *மறைகள்வே தாந்த வருக்கபாஞ் சாத்திர*
*வகையும்வை கானச விதியு*
*முறையதாந் தரும சாத்திர புராண*
*முபபுரா ணத்தினின் முடிவு*
*மறைதரு மிருதி யறிவுளோ ரறைந்த*
*சங்கிதை யாறங்க மழகாய்*
*நிறைதரு மிசை நூ றரும நூல் பிறவு*
*நிறைந்துளோன் வடிவத்திற் கண்டான்.*

**எ** - து :—இருக்கு முதலாகிய நான்கு வேதமுந் தயித்திரிய முதலாகிய முப்பத்திரண் டுபநிடதங்களு மரங்கநாயகன் றிருவாய்மலர்ந்தருளிய பாஞ்சராத்திர வைகானச முனிவர் கூறுநின்ற வாகமவிதிகளும் வதிட்

முதலாகிய தருமசாத்திரம் பதினெட்டும் பிரம முதலாகிய புராணங்கள் பதினெட்டும் பார்க்கவ முதலாகிய வுபபுராணங்கள் பதினெட்டு முனிவ ரறைந்த மிருதிகளுஞ் சங்கிதைகளுந் தருக்க மிலக்கணஞ் சோதிடஞ் சந்தோபிசிதம் நிருத்தம் நிகண் டென்னு மாறு சாத்திரங்களு மிசை நூலு மரசர் வித்தையாகிய தனுநூலு மிவையெல்லா மெங்கு நிறைந்த பரிபூரண திவ்விய திருமேனிகளின் விளங்கிப் பிரகாசிக்கக் கண்டு களித்தா னிந்திர மகாராச னென்றவாறு. 12

375. மதித்தவ னிருளின் வடிவினை நீங்கி
மருள்வடி வகன்றபின் மாயன்
விதித்தநல் லருளாற் பிரணவ வடிவாய்
விளங்கியே யருள்வடி வினைத்
துதித்தவ னாகி மூவுல காண்டு
பொருளினைத் துகளதாய்ப் பெருக்கிக்
கதித்தவின் பத்தின் மூழ்கிய வெளியேன்
கருணையா னுருகின னெந்தாய்.

எ - து :—அந்த வனந்த கல்யாண குண விபூதி விக்ரக விசுவ சொரூப நிராமயப் பரம்பொருளாகிய ஸ்ரீ யரங்கநாயகரிட கிருபா நேத்திர விசேடத்தினாலே யிருள்வடிவானது நீங்கிப் பிரம பாவனையைச் சுருதி வழியி னறிகின்ற வருள் வடிவாகு னந்த மருள் வடிவ நீங்கி மீட்டும் பிரணவ வடிவமாய்த் தோன்றினு னப்படி யானந்த பரவசனாய்த் தெரிசிக்கும்போ தறிவே சொரூபமாய் விளைந்த வின்பத்தால் துதிக்கின்று னிந்த மூன்றுலகத்தையு மரசாட்சி செய்து மித்தையாகிய திரவியத்தைப் பாவத்துக் கஞ்சாமல் பெருக்கிச் சிற்றின்பமாகிய காமக் கடலிலே மூழ்கித் தடுமாறுகின்ற வபக்குவனாகிய வடியேனை யொரு பொருளாய் மதித்துக் கருணையினாலே தடுத்தாட்கொண்ட காருண்யத்தா லுருகினதை யாவராலுங் கூறுவதற் கரிதா மென்று னருள் வடிவத்தைக் கண்ட விந்திர மகாராச னென்றவாறு. 13

376. நினதருள் வடிவை யகத்தினிற் கண்டு
நிகழ்ந்தபே ரின்பத்தை யருந்து
முனிவரர்க் கன்றி மோகசா கரத்தின்
மூழ்கிய மூர்க்கன்றன் கண்ணுற்
பனிவரு கண்க ளானந்தம் படரக்
காணினு மவர்பெறு பயன்போல்
வினையனேன் பெற்று விளங்குவ தரிதா
லரக்கரெவ் வண்ணம்வீய்ந் திடுவார்.

எ - து :—இந்திர மகாராசன் ஸ்ரீருத்திரஞ் செய்கின்றா னினது திருவடியாகிய பேரின்ப வைபவ வின்பத்தை யறிவினாலே சொரூப சாக்ஷாத்காரமாய்க் கண்டு நிகழாநின்ற பேரின்பமாகிய வமுதத்தை யுண்ணுகின்ற தத்துவ ஞானிகளுக் கன்றி மோக சாகரத்தி னழுந்திய மூர்க்கனுடைய கண்ணினாலே கண் டானந்த வாரி யொழுகத் தக்கதா யான் கண்டு களிகூர்ந்தாலு மந்த முனிவர்கள் கண்ட காட்சியினாலே கண் டுணரா மின்பமாகிய கருப் பிரசம்போ லாகுமோ வினையினேன் புறவிடயத்தாலே கண்டு களித்தாலு மாடு தின்னுகின்ற விலைகளைப் போ லாகுவ தல்லது வேறில்லை யாகவே யரக்க ரெவ்வண்ணம் அழிந்திடுவா ரென்றா னிந்திர மகாராச னென்றவாறு. 14

377. தேவர்கள் குலக்கு வருமருந் தன்னா
யென்னைகொல் தெளிந்தில னடியேன்
பாவகா ரணமாங் காலநே மிப்பேர்
பகர்ந்திடில் பலவுயிர்த் தொகையு
நாவறந் தொழியும் புயமெலிந் திடுமா
னாதனின் பொன்னடிக் கமலச்
சேவக மில்லாச் செய்தியான் விளைந்த
தீவினை தீர்த்தருள் கென்றான்.

எ - து :—தேவ கூட்டங்களுக் கரிய வமுதம் போன்ற வரங்க நாயகனே என்ன காரணத்தினாலோ செய்காரியந் தவிருங் காரிய மறியாதவனாய் மயங்குகின்றே னெனது பாவ காரணமானது காலநேமி யென்னு மசுரனாய்ப் பிறந்திருக்கின்றா னவன் பெயர் கூறினும் பலவுயிர்த் தொகையும் நாவானது வறண்டுபோகும் புயமானது துரும்பாய் மெலியு மெதனா லென்றா லுனது பதுமம் போன்ற பாதத்தைப் பணிந்து யாங்கள் சேவகஞ் செலுத்தாத தீவினைப் பகுப்பால் விளைந்த வினைப்பய னதனைத் தீர்த்தரு ளென்றா னிந்திர மகாராச னென்றவாறு. 15

378. மழலைவாய்க் குதலைச் சிறார்மெலிந் துரைத்த
வார்த்தையைத் தந்தைதாய் மதித்தக்
குழவியிற் குருகி யணைத்துச்சி மோந்து
குறையினை யகற்றுதல் போல
வழகனார் மதித்தங் கிந்திரன் றன்னை
யஞ்சலென் றமைத்தன னதனாற்
பழையதீ வினைபோய் வறியவன் செல்வம்
படைத்ததைக் கடுத்தன னன்றே.

எ - து :—மழலை வாய்க் குதலையினாலே கூறுகின்ற சிறுர் மன மெலிந் துருகிய விரக்க மொழியைக் கேட்கின்ற தந்தைதாய ரவ் விரக்கத்திற் காலோசித் திரங்கி யந்தக் குழந்தையை யெடுத் தணைத் துச்சி மோந்து நல்லின்பத்தை வருவிக்கும் வரலாறுபோல வரங்க நாயகராகிய புருடோத்தமன் மிகுந்த கருணையால் தமது கராம்புய மலரா லாதரவு காட்டின ரதைத் தெரிசித்த விந்திரன் முதலாகிய தேவர்கள் தரித்திரன் செல்வம் பெற்றதுபோலக் களிகூர்ந்து மகிழ் சிறந் தானந்த மடைந்தார்க ளென்றவாறு. 16

379. அந்தமால் வரையி னழகிய முனிவோ
ரருந்தவம் புரிதலோ வளவி
லிந்திரன் சயந்தன் சசிமுத லமர
ரிருந்தனர் பெரும்புக ழடைந்து
சந்ததங் கோல வரைதனை வலமாய்ச்
சார்ந்தனர் சராசர மீன்ற
சுந்தர மிகுந்த விலக்குமி யருளால்
தீவினை போக்கியே சுகித்தார்.

எ - து :—அந்த வழகிய கிரியின்கண் ணழகு பொருந்திய முனிவர் கூட்டங்களு மரிய தவத்தினைப் புரிகின்றன வனந்தமா மிந்திர மகாராசனு மவனது புத்திரனாகிய சயந்தமகாராசன் முதலாகிய பேர்களும் வசித்துப் பெரிய புகழினை யடைந்தார்க ளது வன்றியு மெப்பொழுது மந்தக் கோலாசலத்தினை வலமாய் வந் திருந்தார்க ளதுவன்றியுந் திரிபுவன வான்மகோடிகளாகிய சராசரங்களை யீன்றருளிய சுந்தர ரஞ்சித மனோகரம் பொருந்திய ஸ்ரீ மகாலட்சுமி தேவியினுடைய வனுக்கிரக சுகுணத்தினாலே தீவினைகளெல்லா நீங்கிச் சுகத்தை யடைந்தார்கள் தேவேந்திரன் முதலாகிய தேவ கூட்டங்களு முனிவர் கூட்டங்களு மென்றவாறு. 17

இந்திரன் சரணாகதி யடைந்த வத்தியாயம் முற்றிற்று.

# இருபத்துமூன்றுவது: நாரதர் காலநேமியைக் கண்ணுற்ற வத்தியாயம்

380. அந்தவே லையினிற் காலநே மிப்பே
ரசுரன்றன் றூதரை விளித்தங்
கிந்திரன் முதலோ ரெவ்வழிப் போந்தா
ரவர்தமைக் கண்டிவண் மீண்டு
விந்தைய தான வவர்செய லறிந்து
விளம்பிடின் வெகுமதி யனந்த
நுந்தமக் களிப்ப லென்றலுந் தூதர்
நொடியினிற் றேடுத னுவன்றார்.

எ - து :—இந்தப் பிரகார மிந்திர மகாராசனுனவன் சஞ்சீவி மலையி னிருக்கின்ற பூரணவதாரமா யனந்த கல்யாண குண விபூதி விக்ரக விசேடரான வரங்க நாயகருடைய கிருபா கடாக்ஷ வருளைப் பெற்று மனோரஞ்சித சீலனு யிருக்கும்போ திந்திர புரியை யரசாட்சி செய்கின்ற காலநேமி யென்னு மசுரேந்திர சூடாமணியானவன் வாயுவேக மனோ வேகமாய்ச் சஞ்சரித்துத் திரிகின்ற தூதரை வரவழைத் திந்திரன் சயந்தன் முதலாகிய தேவ கூட்டங்க ளெங்கே திரிகின்றார்களோ வதை நீங்கள் பரிசோதிக்கும்படியாய்த் தீவாந்தரங்களிலேயு நவகண்டங்களிலேயு மவர்க ணிலைமை யறிந்து கூறுவீராகி னுங்கட்கு வெகுமான மனந்தமாகச் செய்வே னென்ற ராசசூடாமணியை வணங்கி நொடிப் பொழுதிற் றேடத் தொடங்கினார்கள் சுக சாரணர்க ளென்றவாறு. 1

381. வடவரை முதலாங் கிரிகளிற் சென்று
ரங்கணுங் காண்கிலா வண்மைப்
புடைபெயர் சத்த சாகரத் துலகப்
புண்ணியத் தலமெலாம் புகுந்தங்
கிடமதிற் காணு மயங்கினர் பொன்னம்
பூமியு மிருவுல கத்துந்
திடமதா மண்டப் பித்திகை யதினுந்
தேடின ருலைந்தனர் சென்றார்.

எ-து :—வடமேருகிரி முதலாகிய வட்ட குலாசல மெல்லாந் தேடினார்க ளதன் பின்பு சத்த சாகர தீவாந்தரங்க ளெல்லாம் புகுந்து சஞ்சரித்துங் காணுதவர்களா யதன்பின்பு புண்ணிய தலங்கள் முதலான விடங்க

ளெல்லாஞ் சோதனை செய்துங் காணுதவர்களாய் மயங்கிப் பொன்னம் பூமியினும் போய்க் காணுமை லிரு ளுலகம் புகுந் தண்டப்பித்திகை முதலாகிய லோகங்களெல்லாந் தேடிக் காணுமல் நலிந்து வாடினுர்கள் சுகசாரணர்க ளென்றவாறு. 2

382. நாவலந் தீவா முதலிய தீவி
னடந்திளைத் தனரதன் பின்னர்ப்
பூவலர் கோலா சலமதிற் புகுந்தப்
புண்ணியன் சந்நிதி யதனின்
காவலன் றனையு மமர்கள் கடல்போற்
கலந்ததைக் கண்ணிணுற் கண்டு
தாவரு மகிழ்வு கூர்ந்தபின் புகுந்தார்
தாழ்விலாத் துறக்கநா டகத்தின்.

எ - து:—நாவலந்தீவு முதலாகிய நவகண்டங்களும் தேடித் திரிந் தலைந்தவர்களாய்ச் சோர்வுபட்டு மனமருண்டு வருகின்ற காலையில் கோலாசல மென்கின்ற சொர்ண பர்வதத்தைக் கண் டதி லெழுந்தருளி யிருக்கின்ற ஸ்ரீ யரங்கநாதனுடைய சந்நிதானத்தி லிந்திரன் முதலாகிய தேவர்களுடனே மிகுந்த வுல்லாச வின்பத்துடனே இருக்கக்கண்டு களி கூர்ந்தவர்களாய்ச் சுக சாரணர்க ளொரு நொடிப் பொழுதிற் றுறக்க நாட்டினை யடைந்தார்க ளென்றவாறு. 3

383. வாயுவே கத்தாற் புகுந்தவர் கால
நேமியின் வண்மையா ரடியிற்
றுயினு மிகுந்த வன்பினுன் வணங்கிச்
சாற்றுவார் தயாபர நிதியே
சேயுய ருலக மெங்கணுந் துருவிக்
காண்கிலந் தேர்ந்தவர் புகழு
நாயக னரங்கக் கருணையங் கடல்வாழ்
கோலமால் வரையினண் ணினரால்.

எ - து:—அந்தச் சுக சாரணர்களான பேர்கள் வாயு வேக மனோ வேகமாய்க்காலநேமியின் சந்நிதானத்தை யடைந்து களிகூர்ந்தவர்களா யந்த விந்திர சபையின் வீற்றிருக்காநின்ற வசுர சூடாமணியாகிய காலநேமியைக் கண்டு மிகுந்த வணக்கத்துடனே யவன் பாதத்திற் றெண்டன் சமர்ப் பித்துச் சொல்லுகின்றுர்கள் வாராய் ராசராசப் பிரபுமுக சத்திரபதியே

யாங்கள் தேவரீரிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு சத்த சாகரங்களுந் திக்கு தீவாந்தரங்களும் பொன்னுலக மிருளுலக மண்டப் பித்திகை முதலாகிய நவகண்டங்களுந் தேடிக் காணும மிந்தப் பூமண்டலத்திலே மிகுந்த சிலாக்கியமாகிய தொண்டை மண்டலத்தில் கோலாசல மென்கின்ற சொர்ண பருவதத்தி னெழுந்தருளிய கருணைக்கடல் போன்ற வரங்க நாயகரிட பரிபூரண வின்பத்திற் களித்தவர்களா யிந்திரன் சயந்தன் சசிதேவி முதலாகியவர்க ளமரக் கூட்டங்களுடனே வாசம் செய்கின்றதைக் கண்டோ மென்றூர்க ளென்றவாறு. 4

384. என்றவர் கூற மகிழ்சிறந் திருந்தா
னிவர்தமக் கேற்றபட் டாடை
குன்றம்போ னிதியங் குறைவிலா தளித்துக்
கோலமா முடிமணி தரித்து
மன்றலங் கமழும் பஞ்சதா ருவினின்
மலர்மணங் கவர்ந்துமா ருதந்தான்
வென்றியா முகத்தின் வீசிடத் தேனு
வேண்டினர் வேண்டியாங் குதவ.

எ-து:—இந்தப் பிரகாரம் சுக சாரணர்கள் கூறக்கேட்டு மனங் களிகூர்ந்தவனு யவர்கட்கு வெகுமதி வேண்டிய பட்டுப் பட்டாடைகளு மலைபோன்ற திரவியங்களுங் கொடுத் தந்த வசுர சூடாமணியானவன் சிரசிலே இரத்தின கிரீடம் மயூர குண்டலம் புசகீர்த்தி முதலாகிய சர்வாபரண பூஷித வலங்கார ரூபலாவணியம் பிரகாசிக்கத் தக்கதாய்த் திவ்விய பரிமளங் கமழாநின்ற சந்தன மரிசந்தன மந்தார பாரிசாத கற்பக விருட்ச மென்னும் பஞ்ச தாருவினுடைய மலர் மணங்களைத் தென்றல் கவர்ந்து வெற்றியாகிய வசுரபிரான் முகத்தின் வீசி நிற்கவுங் காமதேனுவான தெவர்க ளெதை விரும்பிடினு மதை யரச னேவற்படி வழங்கிக்கொண் டிருக்கவு மந்த ராச சபையினிடத் தென்றவாறு. 5

385. இருநிதி கடைக்க ணேவலி னிற்ப
மணிநவ மணியினை யியக்க
வரமன வரம்பைக் கூட்டங்கள் கவரிக்
காலினை முகத்தினி னசைப்பத்
திருமதிக் குடைக ணிழற்றிட வால
வட்டங்க டிசைதொறு மெடுப்பப்
பருமணிச் சிங்க பீடமே லிருந்தா
னரக்கர்தம் பார்த்திபர் சூழ.

எ - து :—சங்கநிதி பதுமநிதி யென்கின்ற விரண்டு வகையாயுள்ள நிதிகளான தசுரன் கடைக்கண் ணேவற்படி வெள்ளி ரசிதத்தைச் சங்க நிதி வழங்கவும் தங்கத்தைப் பதுமநிதி யளிக்கவும் சிந்தாமணி நவரத்தினத்தைக் கொடுக்கவு மசுரக் கூட்டங்கள் சித்தமானது களித்து மோகப்படுத்துகின்ற வரம்பையர்க ளிரு பக்கத்தினுங் கவரித்தொகை யாயிர மாயிரமாகத் திருமுக மண்டலத்தி னிரட்டவு மங்களாகாரமாய்ச் சொர்ணக் காம்பினையுடைய சந்திரவட்டக் குடைக ணிழற்றவும் பருமணி யிரத்தினத்தா னிழைத்த சிங்காதனத்தின் மேலே யெழுந்தருளிய கால நேமியாகிய ராசகண்டீரவனை யசுர ராசாக்கள் சூழ்ந் திருந்தார்க ளென்றவாறு. 6

386. அவ்வேலை பரமபத மணுகியநா ரதமுனிவ
  னறிவா னந்தச்
செவ்வேலை யானதிரு மாலருளா லிந்திரனூற்
  சிறந்த லோகத்
தவ்வாத பேரருளாற் சார்ந்திடவே மதித்தனனூற்
  றழைத்த வேத
மொவ்வாத பேரசுரர் தங்கிடுமோ லக்கமிடை
  யுறுவ தானூன்.

எ - து :—அப்படிக் காலநேமி யென்னு மசுரபிரான் வீற்றிருக்கின்ற கொலுச் சபைக் கெழுந்தருளத் தக்கதாய்ப் பரமபத மென்னும் திருநாட்டில் வாசஞ் செய்கின்ற நாரத முனிவரானவ ரறிவே சுகசொரூப மாகிய வருட்கடலான நாராயண மூர்த்தியினுடைய வனுக்கிரகத்தா லிந்திர மகாராசனுடைய சிறப்பாகிய சபையினிடத்திலே வீற்றிருக்கா நின்ற வசுரக் கூட்டத்தி னோலக்கமாகிய வேதவொழுங்கிற்கு மாறுதலைப் படுகின்ற வரசனை நோக்கி வருகின்றூர் ரிஷிகளுக் கெல்லா மதி சிரேஷ்ட ராகிய நாரத மகாமுனிவ ரென்றவாறு. 7

387. சார்ந்தமறை நாரதனைத் தாழ்தடக்கை யசுரகுலச்
  சழக்கன் கண்டு
வார்ந்தமணி யரியணையை யிழிந்துசென்றங் கடிபணிந்தா
  னவனை நோக்கிச்
சேர்ந்தவவ னசுரனுக்குச் சுபகரமங் கலமொழிந்தான்
  செயங்கொண் மேலோய்
போந்திலைநீ நெடுங்கால நமதரசு பொருந்திடத்திற்
  புகல்தி யென்றூன்.

எ - து :—அப்படி யெழுந்தருளி வருகின்ற நாரத முனிவரைக் கண்டு காலநேமியானவன் ரத்தின சிம்மாசனத்தை விட் டெழுந் தெதிர்கொண் டவருடைய திவ்விய திருவடிகளிலே தீர்க்க தெண்டன் சமர்ப்பித்தா னந்த வசுரனுக்குச் சுபகர மங்கலமா யிருக்கக் கடவதென் றாசீர்வதித் தருளிய மகரிஷியைச் சிம்மாசனத்திலே யெழுந்தருளச்செய்து வர்க்கிய பாத்ய முதலாகிய சோடச வுபசாரங்களும் செய்து கூறுகின்றான் வாரீர் மகானுபாவரே தேவரீ ரிங் கெழுந்தருள யா னென்ன பாக்கியஞ் செய்தே னுகிலு நெடுங்கால மெல்லா மிங்கு வாராம லிருந்த காரணக் குறியை யறிவிக்கவேண்டு மென்று னசுர னென்றவாறு. 8

388\. இவ்வண்ண மசுரகுல மணிதீப னியம்புதலு
மியலார் செஞ்சொற்
செவ்விபெறு நாரதமா முனியறைவா னிந்திரன்முன்
சிறந்த யாக
மிவ்வுலகி னூறியற்றி யமரர்தமக் கிறையவனு
யிசைவு பெற்று
னவ்விகண்போ லொளிபரப்பு நாமகடன் காதலனை
நயந்த நீயும்.

எ - து :—இந்த விதமாக வசுர குலத்து விரத்தினதீபம் போன்றவன் கூறக் கேட்ட வியல்பா னிறைந்த வமிர்த வார்த்தையையுடைய முனி சிரேஷ்டன் கூறுகின்று னிந்திர னிந்த வுலகத்தின்கண் ணுயரிய பரிமேத முதலாகிய நூறு யாகத்தை முடித்த காமிய பலத்தால் தேவலோகத்துக் கரசபிரா னுனு னதுவன்றியு மான்கண்போ லொளி பரப்பாகின்ற கண்ணை யுடைய நாவின் மகளை விரும்புகின்ற பிரம்மாவைக் குறித்துச் செய்கின்ற தவத்தினுலே நீயு மிந்த விந்திர வுலகத்துக் கரச னுனு யாகிலு முன்னைக் குறித்துக் கூறுகின்ற வசன மொன் றுண்டா மென்றார் முனிவ ரென்றவாறு. 9

389\. செய்ததவப் பயத்தாலே யிந்திரனுய்ச் சிறந்தனைநீ
செயமார் சத்த
பொய்மையிலாத் தவத்தோர்கள் சிவிகையினைத் தாங்கிலர்க
ளம்மைதப் புந்தி
நையும்வகை நினைந்துருகி நாடினமியா மதுவன்றி
நளினச் செல்வித்
தையலரிற் சிறந்தமோ கினியிரதி தானென்னுந்
தழைத்த மெய்யாள்.

எ - து :—நீ செய்த பிரயோசனத்தினுலே யிந்திரனைப்போ லிவ் வுலகில் சிறந்திருந்தா யானுலு மிரண்டு குறைவாகிய போக பாக்கியத்தை நீ மதிக் காமற் போனு யாகினு நா னறிவிக்கின்றே னது யா தென்ருல் பொய்ம்மை யில்லாத நிறைந்த தவத்தினையுடைய வகத்தியர் முதலாகிய விருடிகள் தாங்குகின்ற சிவிகைச் செல்வத்தை முதலி னிழந்தா யதைநோக்கி யாலோசிக்குந்தோறு முருகியுருகி யென் னுளமானது கொதிக்கா நின்ற தது வன்றியுங் கன்னியர்களுக்குள்ளே திவ்விய கோமள சவுந்தரிய சுக சொரூபமாகிய விலக்குமி தேவியு மழகிற்குப் பூடணமாயுள்ள மோகினி மாது மிரதி யென்னும் பெண்ணமுதமுந் திரண் டவதரித்தா லெத்தன் மையோ வத்தன்மையவாகிய ஒரு ஸ்திரீ யுண் டென்றவாறு. 10

390. காரளகப் பிறைநுதலாள் கவின்சிலையி ளெளிபுருவக்
கருங்கட் செவ்வாய்
மூரலிள நிலவொழுகக் கபோலமெனுங் கண்ணுடி
முளரி காட்ட
வேரலிளந் தோள்காட்டச் சக்கரவா கத்தைவியன்
முலைகள் காட்டுஞ்
சீரரம்பை தொடைகாட்டுங் கமலபதச் சசிநலத்தைச்
சிறக்கத் துய்க்காய்.

எ - து :—கறுத்த மேகத்தைப்போன்ற வளகபாரமும் பிறையைப் போன்ற நுதலு மெழிலாகிய வில்லைப்போன்ற புருவமுங் கரிய நீலோத் பலம் போன்ற கண்ணிணையுஞ் செவ்வாம்பல் போன்ற சிறந்த வாயினையு மூரலாகிய தந்த பந்தியான திளநிலவின் பிரகாசத்தை யொழுகவும் கபோல மென்கின்ற விரு கண்ணுடியினை முகமாகிய தாமரையானது காட்டவும் பச்சை மூங்கிலினை யிரண்டாகிய தோள்கள் காட்டவுஞ் சக்கரவாகப் பட்சியினைப் பருவ மமைந்த முலைகள் காட்டவுஞ் சிறந்த வரம்பையாகிய செவ்வாழையைத் தொடைகள் காட்டவுங் கமலம்போன்ற பாதாரவிந்தத்தை யுடைய விந்திராணியினது சுக ரஞ்சித சுரத லீலையாகிய சரச சல்லாபத்தினைச் சிறப்பா யனுபவித்தவனு மல்லை யாகையா னீ யிந்திர செல்வம் பெற்றுமிவ் விரண்டு பிரயோசனமும் பிரம்மாவாலே வரபாலனம் பெருத குறைவை நெடுங்காலமாய் நா னுலோசித் திரங்குகின்றே னென்ருர் நாரத முனிவ ரென்றவாறு. 11

391. எனமனதி னினைந்துருகி நினசபையின் வாராது
வேந்த லேயா
னனையதனை நினைந்திருந்தே னுனும் புகரினையா
னவம திக்துச்
சினமதனைப் புரிந்தனன்பின் சீரிதா நின்றனக்குச்
செப்பா நின்றேன்
கனமதனை மதித்துணர்ந்த நின்றனைப்போ லிந்திரனைக்
காண்ப லோயான்.

எ - து :—இந்த விரண்டு காரணங்களையு மனதி னுலோசிக்குந் தோறு முருகிக் கரைந்த காரணத்தா லுனது சபையினிடத்து யான் வாராமற் போன கால மனேகமாய்ப் போச்சு தென்றுலு நின தாசார்யனுகிய சுக்கிராச்சாரியாரை யவமரியாதையா யெண்ணினே னது வென்ன காரணத்தினு லென்றால் முனிவர் தாங்குங் கீர்த்தியு மயிராணி போக சரச சல்லாபமு நீ யறியா திருந்தாலு முன்னைப் பிரேரகப்படுத்தாத விழிவைக் குறித்து மறுபடியு மந்தத் தாமசத்தை விட் டுனக் கறிவிக்க வந்தேன் கனதையாகிய பிரயோசனத்தை மதித் தறிகின்ற வுன்னைக் கண்ட கண்களாலே யந்த விந்திரனைக் காண வெவ்வளவு மென் கண்கள் குறியா தென்றார் நாரத முனிவ ரென்றவாறு. 12

392. மனநெகிழ்ந்து மதிமருண்டு முகம்புலர்ந்த வாறதனுல்
வந்தே னின்றன்
சினமதனைத் துறந்தொழிந்து சேர்க்குவாய் முனிவர்புணர்
சிறப்பை யென்று
கனமகலா நாரதமா முனியிசைப்பக் கமலமலர்
கடவு ளீய்ந்த
வினமதனை யான்காணின் வஞ்சனையா மின்பமாந்
தந்தை தாய்நீ.

எ - து :—இந்தக் காரணங்களெல்லாங் குறித் தாலோசிக்குந்தோறு மென் மனமான திளகி யுருகியது மன்றிப் புத்தியானது ஸ்திர மில்லாமல் மருட்கையை யடைந்து முகமானது வாட்டத்தை யுற்ற வரலாற்று முறைமையினுலே நினது சபையிலே வந்தே னுகையா லென் வார்த்தையை யூக புத்தியால் மதித்துணர்ந் துனது தாமதத்தை நீங்கினவனுய்ச் சாந்த சித்தத்தினுல் மதித் துணர்ந்து சத்த விருடிய

ருனது சிவிகையினைத் தாங்கு முறைமையினையு மேற் கூறுகின்ற விந்திராணியினது சரச சல்லாப போக வைபவத்தினையு நீ பெறக் கருதினை மவைகட்கு நீ முயற்சிசெய் திவ் விரண்டு செல்வத்தையும் பெறக் கடவை யென்று நாரத முனிவரானவர் சொல்லக் கேட்ட வசுரேந்திரன் கூறுகின்றான் கமல மலர் மேலவனாகிய பிரம்ம தேவரானவ ரென்னைக் குறித்துக் கொடுத்த வரபாலனத்தை யா னுக்குந்தோறும் வஞ்சனையாய் முடிந்த தின்பத்தை வருவிக்கின்ற தாயுந் தந்தையு நீயே யாகு யென்றான் காலநேமி யென்னு மசுரபிரா னென்றவாறு. 13

393. குருவைநோக் கிடினவரோ வறமிகவுங் கொடியர்குரு
நீரே யானீ
ரருவுருவாம் பரம்பரநீ யாகையா னின்கழற்கே
யன்பு பூண்டேன்
றிருவுருவத் தாற்சிறந்த நின்மொழியே யென்றனுக்குச்
செயங்கொ டுப்பக்
கருதியுன்றன் வாசகமாங் கருணைசா கரம்படிந்தேன்
கடையே னென்றான்.

எ - து :—ஆசாரியராகிய சுக்கிராசாரியாருடைய கருத்தை யூகித்து யோசிக்குமிடத்தி லவ் வாசாரியரோ வன்பில்லா தடுத்துப் பகை செய்கின்ற கொடியவரா யிருக்கின்றா ரிவையெல்லா மதித் தறியுமிடத்தி லருமையினு மிதஞ் செய்கின்ற வருளாசாரியர் நீரே யானீ ரருவாயு முருவாயு மரு வுருவமாயு மிருகின்ற பரம்பரனே யருள் வடிவுகொண்ட நீராகையா லுமது பாத பதுமங்களுக்கே யன்பு செய்கின்றேன் றிருவுருவத்தினு லிலக்கண மமைந்த நுமது வாய்மொழியாகிய வமுத ரசமே யெனக்குச் செயங்களை யெல்லா மெக் காலத்திலும் வருவிக்கு மென்பதை யறிந் ததை நினைத்துத் துணிந் தறிகின்ற யா னுமது வாய்மொழியாகிய வமுத சாகரத்தில் மூழ்கிக் களிப்புற்றே னிழிவாகிய வசுரப் பிறவியினை யுடையவ னென்று தன்னைக் குறித்துச் சொன்னான் காலநேமி யென்றவாறு. 14

394. இந்தவணஞ் சொன்னவசு ரேசனையே மிகவிரும்பி
யிசைக்கக் கேண்மோ
கந்தமல ரவன்பழிச்சுங் காஞ்சிநகர்க் காவலனாய்க்
கவின்கொண் டோங்கு
விந்தைபுயந் தணவாத சிங்கவர்த்த வினோதனெனு
மேலோன் முன்னாள்
செந்திருவைத் தணவாத மேலவனால் கிலமானன்
சிறந்தோ னென்றும்.

எ - து:—இவ் விதமாய்ச் சொல்கின்ற வசுர புவன சக்ரேசுவர னுடைய வார்த்தையை மிகவும் விருப்புற்றவர் போன்ற நாரதரானவர் யான் மீட்டுஞ் சொல்லத்தக்கதாக வசுரபதியே கேட்பாயாக திவ்விய பரிமளங்களைக் கமழ்கின்ற தாமரைப் பீடத்தி னிருக்கப்பட்ட நான்முகனும் வந்தித்துத் தோத்திரஞ் செய்கின்ற சத்திய விரதமென்னுங் காஞ்சி மண்டலத்துக்கு வரசனு யழகு சிறந்தோங்குகின்ற வீரலட்சுமியைப் புசத்தை விட்டு நீங்காமல் தரிக்கின்ற சிங்கவர்த்த விநோதனெனு மேலாகிய வசுர ராச கண்டீரவனனவன் முற்காலத்தி லழகிய விலக்குமி தேவியை மார்பினிடத்தில் விட்டு நீங்காத சீதரனாலே யதப்பட்டுப் போனு னென்று சொல்லுவார்கள் பெரியோர்க ளென்றுர் நாரத ரென்றவாறு. 15

395. சிங்கனையே வதைத்தருளுங் காரணத்தாற் சிங்கபுரச்
செல்வ மோங்கு
மந்தநகர் வைபவமாங் கோலமால் வரையென்ன
வனுகா நிற்கு
மிந்தமலை தனையடுத்தா னின்றனையு மெளிதாக
விடித்து யீசல்
பந்தமென வசுரர்களைப் படுத்திடவே யிந்திரன்றுன்
படரா நின்றுன்.

எ - து:—சிங்கனென்கிற வசுர புவன சக்ரேசுவரனை வதைசெய்கின்ற காரணத்தினலே சிங்கபுர மென்கின்ற நாமதேயத்தையுடைய தந்த நகரமானது விபவமாய்க் கோலசல பர்வதமென்கின்ற நாமதேயத்தினைப் பெற் றிவ்வுலகத்திற் சிறந்தோங்கி நிற்கு மம் மலையி லிருக்கின்ற வரங்க நாயகனது வருளைக் குறித் தடுத்து வெளியவனைப்போ லிருந்து வலியவனு யிருக்கின்ற புவன சக்கிரேசுவரனே யுன்னையு முனது வசுர சேனை களையும் புற்றி லெழுகின்ற யீசலினது கூட்டங்களை வேடர்கள் பிடித்துக் கொண்டா லெத்தன்மைத்தோ வத்தன்மைத்தாய்ப் புலி பின்வாங்கி முன்பாய்ந்து மான் கூட்டங்களைத் தாக்குமாறு போல வசுரக் கூட்ட மாகிய களைகளை யெல்லாம் பிடுங்கித் தேவ கூட்டமாகிய பயிரை வளர்த்து முயற்சி செய்ய நினைத்திருக்கின்று னம் முயற்சியுங் கைகூடும்போலு மென்றுர் நாரத மகா முனி யென்றவாறு. 16

396. இன்னமொரு காரணந்தா னின்றனக்கே யெளிதாக
வியம்பக் கேட்டி
யன்னநடைச் சசிதேவி யம்மலேமே லருந்தவந்தா
னயரா நின்ருள்
பின்னையருந் தவஞ்செய்தல் வரங்கநா யகனுரத்திற்
பெற்ற பேற்றை
யன்னவளுந் தன்கணவ னசுரர்களை களைந்திடவே
யடைந்து நின்ருள்.

எ - து :—வாரா யரசனே யின்ன மொரு காரண விஷேதத்தைக் குறித்துச் சொல்கின்றே னிந்திராணி தேவியானவ ளரிய தவத்தைச் சஞ்சீவி கிரியிற் செய் திலக்குமிதேவி யரங்கநாயகன் மார்பின் வீற்றிருக்கப் பெற்றது போலத் தனது நாயகனைவ னசுரராகிய களைகளைக் களைந்து தேவராகிய பயிரை வளர்க்கும்பொருட்டா யந்தக் கிரியிலே வீற்றிருந் தரிய தவத்தைச் செய்கின்ரு ளென்றவாறு. 17

397. எனப்புகலு மறைமொழிநா ரதன்பதத்தை யடிக்கடிதாழ்ந்
திறைஞ்சி யேத்தி
மனக்கவலே யில்லாத வசுரபிரா னிந்த்ராணி
மருவு மாறுங்
கனத்தசத்த விருடியர்கள் கவிகையினைத் தாங்குகனச்
செல்வந் தானு
மினத்தினுறு மிந்திரனைச் செயங்கொள்வ தெவ்வணநீ
யிசைத்தி யென்ருன்.

எ - து :—இந்தப் பிரகாரஞ் சொல்லாநின்ற வேதவிதி யமைந்த நாரத மகாமுனிவருடைய பாதத்தை யடிக்கடி திக்குநோக்கித் தெண்டன் சமர்ப்பித் தெக்காலுந் தணியாத சீற்றங் கொள்கின்ற வசுர ராச சேகரனைவ னிந்திராணி சல்லாப விஷேத சம்பிரமத்தை யடைகின்ற விதமும் பெருமை பொருந்திய சத்தவிருடியர் பல்லக்கைத் தாங்குகின்ற செல்வமுந் தேவ கூட்டங்களுடனே போய்ச் சஞ்சீவி கிரியி னிருக்கின்ற வரங்கநாயக ரனுக்கிரகத்தைப் பெற்ற விந்திரனைச் செயிக்கும் வரலாறு மெனக்குச் சொல்லவேண்டு மென்ருன் காலநேமியாகிய வசுர ராச னென்றவாறு. 18

398. அந்தவர லாறதனை யானறைவன் கூர்த்தவறி
வதனுற் கேட்டி
யிந்திரனில் வலியுடையன் சயந்தனு மிவர்தமக்கு
வரங்கத் தீசன்
சிந்தனையால் மிகமகிழ்ந்து வலக்கைகொடுத் திருக்கின்றுன்
சிவன்வ ரத்தா
னெந்திடவே செய்தியெனில் முனிவர்புலோ மிசைநலத்தை
நொய்தாய்த் துய்ப்பாய்.

எ - து:—அந்த வரலாற்று முறைமையினை யான் கூறுகின்றேன் நீயானவன் கூர்த்த புத்தியினுலே யறியக்கடவாய் வலிய பாய்ச்சலைக் குறித்துப் பின்னிடுகின்ற புலியைப்போன்ற விந்திர மகாராசனைப் பார்க்கிலுங் காண்டீபத் தொழிலில் மிகுந்தவ னவன் புத்திரனுகிய சயந்த மகாராச னிருவருக்கு மரங்க நாயக ரென்கின்ற வீசுவரரானவ ரிருவரையும் பாதுகாக்கவேணு மென்கின்ற வன்பு மேற்பட்டு மனமகிழ் சிறந்து தமது வலக்கரந் தந் திந்திரனுக்குப் பூர்வம்போல மகுடாபிஷேகம் பண்ண நினைந்து துணிந்திருக்கின்ரு ராகையா னீ சிவன் கையில் பெற்ற வரபாலனத்தா லிம் முத்திறத்தாரையு நலிந்திடச் செய்வா யாகில் சத்த விருடிகள் சிவிகை தாங்கப்பெறுதலோடு புலோமிசை யின்ப வைபவ போகத்தையுஞ் சிறப்பா யனுபவிப்பாய் காலநேமியாகிய புவன சக்ரேசுவரனே யென்ருர் நாரத மகாமுனிவ ரென்றவாறு. 19

நாரதர் காலநேமியைக் கண்ணுற்ற வத்தியாயம் முற்றிற்று.

## இருபத்துநான்காவது: காலநேமி சமர் குறித்த வத்தியாயம்

399. பந்த மகன்ற நாரதனுர்
பகர்ந்த மொழியைக் கேட்டளவிற்
சிந்தை கலங்கிக் காமவிடந்
தலைக்கொண் டோங்கச் செப்பிடுவான்
விந்தை யான தூதர்தமை
விளித்து நமது விரிவான
சொந்த சேனை தங்கிடத்திற்
றிரிந்து செல்வீ ரெனவிடுத்தான்.

எ - து:—பந்த பாசப் பற்று நீங்கிய நாரத முனிவரானவர் சொன்ன மொழியைக் கேட்ட மாத்திரத்தின் மனதானது கலக்கப்பட்டுக் காமவிடமானது தலைக்கேறக் காமாந்தகனுய்ச் சிம்மத்தைப்போலச் சீறித் திக்கு திசைகள் தீவாந்தரங்கள் பாதாளலோக முதலாகிய விடங்களி னிலைபெற்றிருக்கின்ற நம்முடைய சொந்தமாகிய ரத கச துரக பதாதிகளென்று சொல்லப்பட்ட நால்வகைச் சேனைகளையு மொரு க்ஷணப்போதிலே யழைத்துக்கொண்டு வருவீர்க ளென்று சுக சாரணர்களுக் காக்யாபித்தானசுர ராசேந்திர னென்றவாறு. 1

400. வாயு வேக மனவேக
மதனுற் றூதர் வண்மையதாய்ப்
பாயுந் திரைசேர் கடலிடத்திற்
பயின்ற வசுரர் பனிவானிற்
றேயு மசுரர் பாதலத்திற்
றேன்றும் வெள்ளப் பரப்பெல்லாங்
காயுஞ் சூலங் கணிச்சிமுத
லேந்தி வந்தார் கணிதமிலார்.

எ - து:—அந்தத் தூதராகிய சுக சாரணர்கள் வாயு வேக மனோவேகமா யனேக வண்மைகளுடனே கூடினவர்க ளலைகள் மாறிப் பாய்கின்ற கடற் றீவாந்தரங்களி னிருக்கின்ற சேனை வெள்ளங்களுங் குளிர்ந்த வாகாயத்திற் சஞ்சரிக்காநின்ற சதுரங்க தளங்களும் பாதாள லோகத்தில் வாசம் பண்ணுநின்ற சேனைத் திரள் வெள்ளங்களும்

திரண்டு பரந்து வரத்தக்கதா யரச னுக்கிணையை யறிவித்த மாத்திரத்தி னுத்தசன்னுகங் கிடையாது தோள் தினவு கொள்கின்ற வதி சூரர்களு ளக்கினியைக் கக்காநின்ற திரிசூலங்க ளேந்தியுங் கண்டகோடாலி முதலாகிய வாயுதபாணிகளாய்க் கணக்கிறந்த பேர்கள் வந்தார்க ளென்றவாறு. 2

401. கொடிகள் குடைகள் கவரிகள்செங்
கோலத் தோட்டி முரசமதா
மிடியார் வாத்திய வகையினங்க
ளால வட்ட மியற்சுருட்டிச்
செடிதீர் [1]விராணத் தொகையினங்கள்
செழித்த வீர சின்னங்கள்
படியார் புள்ளாங் குழனுக
சுரங்கள் தொனிக்கப் படர்ந்தனரால்.

எ - து:—அந்த ராக்ஷத சதுரங்க வெள்ளக் கூட்டங்களுங் கடல்போலப் பரந்து முழங்கிக்கொண்டு வரும்போது அனேக கொடிக் கூட்டங்களுந் தவள சத்திரக் குடையின் வருக்கங்களும் கவரிகளும் சிவந்த வக்கினியைக் கக்காநின்ற தோட்டிகளாகிய வங்குசமு முரச முதலாகிய விடிகளைப்போல முழங்காநின்ற வாத்தியக் கூட்டங்களு மாலவட்டத் திட்டங்களு மியல்பாகிய சுருட்டி யினங்களும் வீராணத்தொகை யினங்களும் செழித்த வீர சின்னங்களினுடைய மேம்பாடுகளு முலகத் துயர்ந்தோர் மதிக்காநின்ற புல்லாங்குழல்களு நாகசுரங்களுடைய சமூகங்களுமாய்த் தொனித்துக்கொண்டு பிரவேசித்தார்க ளசுர வெள்ளங்க ளென்றவாறு. 3

402. மந்திரி மார்கள் பிரதானி
சேனு பதிகள் மதித்தவணி
சிந்தா தாகம் பெறவமைந்த
வணியார் தலைவர் சிறப்புற்று
நந்தா தொளிரும் யூகத்தின்
றலைவர் நயமில் படைத்தலைவர்
கொந்தார் பட்ட வர்த்தனர்கள்
மகுட வர்த்தக் கொடியோர்கள்.

[1] விராணம் - வீராணம்—ஒருவகைப் பெரியபறை.

எ - து :—அப்படி வாராநின்ற நான்கு வகைச் சேனைகளாகிய வெள்ளங்களின் வந்த தலைமையானவர்க ளியாரென்றால் மந்திரி மார்களும் பிரதானியர் கூட்டங்களும் சேனாபதியர் வருக்கமு மணி வகுத்த படைக் கூட்டங்கள் சிந்தியோடாமல் வலியைச் செலுத்தி வீரநிலைமையைப் பெற விளங்க வமைக்காநின்ற வணித்தலைவர்க ளீட்டமுஞ் சிறப்புற் றென்றும் வீர நீங்காத யூகத்தலைவர் சமூகங்களுங் குரூரமா யருளிருந்த விடங்களினும் குடியிருந் தறியாத படைத்தலைவர்க ளக்குரோணிகளு மித மூவிழ்ந்து மணம் வீசுகின்ற பட்டவர்த்தன மகுடவர்த்தன ரீட்டங்களும் வெகுவாய்ப் பரந்து நிறைந்து வந்தார்க ளென்றவாறு. 4

403. வென்றி யார்ந்த மகாரதர்கள்
சமமாய் விளங்கும் வியன்ரதர்கள்
கன்று தொளிரு மதிரதர்க
ளர்த்த ரதர்கள் கனமான
குன்று மென்னு நிவாதகவ
சப்பேர்க் கொடியர் கூறரிதாய்
நன்றாய்த் திகழு நான்குபடை
சூழ நகரை நண்ணினரான்.

எ - து :—வெற்றி பொருந்திய மகாரதர்களாகிய சுத்தவீரர்களும் பெருமை பொருந்திய சமரதர்களாகிய சூரர்களு மொரு காலத்திலும் பின்னிடாத செயசாலிகளாகிய வதிரதர்களுங் காம்பீரியமுள்ள வர்த்த ரதர்களாகிய சாகச வல்லபத்தோடுங் கூடினவர்களுங் கனமான மலை போன்ற நிவாதகவச காலகேயர்களும் இப்படிச் சொல்லப்பட்ட வதி சூர வீர படர்களெல்லாஞ் சேனையைக் காவல் செலுத்தி வரப் பிரவேசித்தார்கள் ராட்சத வெள்ளங்க ளென்றவாறு. 5

404. முகபடாங் கரட மதமிழிந் தொழுகு
கவுட்டுளை முறச்செவி முரணுர்
தகதக வென்னுங் கிம்புரிக் கோட்டுச்
சிந்துர மெழுதிய தகைசா
னிகளம தான துதிக்கைக ணிகழும்
படுமணி நீள்கிலாக் கண்கள்
சகமதி னடக்கு முரலடித் தந்தி
சமனெனக் குரூரமாய்ச் சார்ந்த.

ஏ - து :—யானை வெள்ளங்கள் பிரவேசித்த தெத்தன்மைய வென்று விரத்தின மயமாகிய முகபடாங்கள் பிரகாசிக்கவும் கரட மத மிழிந்து தாரைபோ லொழுகாநின்ற கர்ணத் துளைகளையு முறத்தை யொத்தன வாகிய கர்ண சாமரைச் செவிகளையும் வலிமிகுந்து தகத்தகாயமாய் விளங்காநின்ற தங்க மயமாகிய கிம்புரிக் கோட்டினையுஞ் சிந்துரத்தா லழகா யெழுதாநின்ற விசாலமாகிய துதிக்கையையு மாறி யொலிக்கா நின்ற யிணைமணிகளையும் சிறுத்த கண்களையு முரல்போன்ற வடிகளையு முடைய யானைக்கூட்டங்கள் தண்டங்களை வீசி யெமனைப்போலப் பிரவேசித்தன வென்றவாறு. 6

405. திக்கினிற் றிரிவ கடலிடைச் செல்வ
சேணினன் முகட்டினி னடப்ப
முக்கிய மான வண்டகோ ளகையின்
முடுகுவ பாதல முந்துஞ்
செக்கரஞ் சடையான் கயிலையிற் சேரு
மனோவதி நகரத்திற் செறிவ
தக்கமால் பதத்திற் சரிப்பன வசுரர்
நடாத்திய தாழ்விலா விரதம்.

ஏ - து :—யூகத்தலைவர் படைத்தலைவர் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் மந்திரிமார்க ணிவாதகவச காலகேயர்க ளதிரதர்கள் முதலாகிய வீராதி வீரர்க ளேறி நடாத்துகின்ற தேர்கள் வாயுவேக மனோவேகமாய்த் திக்கு திகாந்தங்களிலே திரியுந் தன்மையைப்போல் கடலினிற் காணப்படுங் கடலிற் றோன்றுவதுபோல வண்ட முகட்டிலே காணப்படு மங்கே திரிவதுபோலப் பாதாள லோகத்தி னுலாவித் திரியு மங்கே கண்டது சிவந்த சடையினையுடைய பரமசிவன் வாழுகின்ற கயிலையில் வாசம்பண்ணு மப்படிக் கயிலையில் சாரி திரிந்தது பிரம்மாவி னுலகமாகிய மனோவதியிற் காணு மப்படிக் கண்டது பரமபதத்திற் சஞ்சரிக்கு மென்றவாறு. 7

406. கலியுக முடிவிற் றோன்றிடு கற்கி
யிஃதெனச் சாற்றிடு துரக
நலிதலிற் கவரி யிருபுறம் விளங்கக்
கல்லணை நலமதா யொளிரக்
கலிதரு வெண்ட யங்களின் றொகுதி
கல்லென வொலித்திடக் கதியான்
வலியொடுந் திரியுந் துரகபந் திகளின்
வண்மையை யார்தெரிந் திசைப்பார்.

எ-து :—குதிரைப் பந்திகளின் வெள்ளங்க ளெப்படிப்பட்டன வென்றால் கலியுக முடிவிலே நாராயண மூர்த்தியானவர் குதிரையின் வடிவெடுத்தா லெப்படியோ வப்படியான தொவ்வொரு குதிரை யப்படிப்பட்ட வெள்ளங்க ளிருபுறமுஞ் சாமரைகள் விளங்கவுங் கல்லணை க்கடிவாளங்கள் முதலானவை பிரகாசிக்கவுஞ் சத்திக்கா நின்ற வெண்டை யங்கள் கல்லென் றிரங்கி யாரவாரிக்கவும் சதங்கை தாமணி முதலிய வற்றைக் கண்டத்தினுடைய துரக பதாதிகளானது வலியோடு சுழன்று திரிந்து நடந்துவந்த தென்றவாறு. 8

407\. செவந்தகுஞ் சியினர் முரண்டபார் வையினர்
தெளிவிலா விதயத்தர் சேர்ந்த
வவந்தன மெனச்செ யவலத்தர் பாணி
யமைத்திடு மந்திரப் படையர்
நிவந்தயாக் கையினர் யமனையு மருட்டு
நிலைமையர் நீள்குடைக் கரத்தர்
பவம்புரி காலாள் வெள்ளங்கள் சூழ்ந்து
படர்ந்தனர் நானிலப் பரப்பின்.

எ-து :—அப்படி யுத்த சன்னதமாய் வருகின்ற வீரபடர்க ளெப்படிப்பட்டவர்க ளென்றால் செவந்த செம்பட்டமயிரை யுடையவர்க ளாயு நெறித்த பார்வைகளை யுடையவர்களாயு மஞ்ஞான மயமாகிய மனதினை யுடையவர்களாயும் கேடுகளைச் செய்யும் அவலத் தொழி லுடையவர்களாயும் கைகளில் தாங்கிய மந்திரப் படைகளை யுடையவர்க ளாயும் கம்பீரமான உடம்பை யுடையவர்களாயும் யமதர்மனையுந் திடுக்கிடச் செய்கின்ற நிலைமையை யுடையவர்களாயும் நீண்ட குடைகளைத் தாங்கிய கைகளையுடையவராயும் பாதகத்தை யெல்லாங் குறைவற முடிக்கும்படியாகிய காலாட்க ளென்கின்ற வெள்ளப் பரப்புக ளுலகெல்லா நிறைந்து வந்தன வென்றவாறு. 9

408\. முகங்களைந் ததற்குக் கரம்பல தூள்ளா
ரானன மைம்பது மூர்க்க
ரகங்கைநூ றைந்நூறு முகக்கர மிரட்டு
வாயிர முகக்கர மிரட்டு
ததும்புய மலைக ளழறரு கண்ணர்
காத்திர தேகர்மா மலைபோ
லகன்றமூக் குள்ளா ரலைகள்பாய் நாவோ
ராயிர மியானைகொள் வாயர்.

எ - து :—ஐந்து முகமும் பத்துக் கரமும் ஐம்பது முகமும் நூறு கைகளு மைஞ்ஞூறு முகமு மாயிரங் கைகளு மாயிர முகமு மிரண் டாயிரங் கைகளு மதுவன்றியும் புயமாகிய மலையினையுடையவ ரக்கினி பொழிகின்ற கண்ணையுடையவர் காத்திர வுன்னதமான சரீரத்தை யுடையவர் மகத்தாகிய பிறங்கலை யொத்த வகன்ற மூக்கினையுடையவ ரலைகளைப் பாய்கின்ற நாவினையுடையவ ராயிர மியானையைத் தின்னு கின்ற வாயினை யுடையவர்க ளென்றவாறு. 10

409. இப்பெருஞ் சேனை வந்ததைக் குறித்து
வியலுணர் மந்திரர் விளம்பச்
செப்பரும் புகழான் காலநே மிப்பே
ரசுரன்றான் கோபுரச் செம்பொன்
வைப்பிலி விவர்ந்து கண்ணலிறுற் கண்டு
மகிழ்களி கூர்ந்தனன் மனத்தி
னப்புதம் பெருகி வலவனை விளித்து
வயம்பெறு தேர்தரு கென்றான்.

எ - து :—இத்தன்மைத்தாகிய நான்குவகைச் சேனைகளும் பெரும் புறக்கடலணை புரண்டு வருமாறுபோல் வருகின்ற சேனு சமூக வெள்ளங்களை மந்திரிகள் ராசனுக் கறிவிப்ப வம் மந்திரரோடுங் கூடிய காலநேமியென்று மசுர ராசனானவன் சபாமண்டபக் கொலுக் கோபுர வுச்சியினின்றும் பார்த்து மனங் களிகூர்ந்து புளகித்தவனு யற்புத வானந்தம் பெருகித் தேர்ச்சாரதியை யழைத்து நமது தேரினை யலங்கரித்து நிறுத்துவாயாக வென்று னென்றவாறு. 11

410. வலவனுஞ் சென்று தேரலங் கரித்த
வகையினை வியாதனுர் வகுப்பர்
புலமையிற் சிறியேன் கல்வியி னடங்கா
தாயினு மறிந்ததைப் புகல்கே
னலிதலி லச்சு மச்சுகள் கொடுங்கை
நாட்டிடு முருளைசிங் கவளை
யலர்புகழ் பரப்பான் வளைத்துசா தாங்கக்
குருவிந்த மாலைகள் படர.

எ - து :—அந்த ரத சாரதியானவ னசுரபிரான் கட்டளைப் பிரகாரம் தேரை யலங்காரஞ் செய்த விதியை யாராலே கூறலாமென்றால் வேதாந்த மார்க்கந் தருமசாத்திர புராண முபபுராண விதிகாச முதலியது தோத்திரஞ் செய்கின்ற வியாத மகாமுனிவராகிய வாதராயணன் வல்லவ னல்லது நவரச வலங்கார விலக்கண நற் காவியத்தினது நலத்தினை யறிகின்ற புத்தி நுட்பமில்லாதவ னுனலு மவரது கீர்த்தி வழங்கு மெல்லையில் வசைச் சொல்லாவது வழங்குவ தமையுமென்னு மாசை யென் பிடரினைப் பிடித்துத் தள்ள வதன் வசமா யலங்காரமாய்ச் சில சொல்கின்றே னந்த ரதமான தச்சு மச்சு கொடுங்கை யுருளைப் பரப்பு சிங்கவளை முதலானதினுலே பிரகாசிக்கப்பட்டது சாதாங்க குருவிந்த சௌகாந்திக கோவாங்கமாகிய நான்கு வகையாயுள்ள மாணிக்க மாலைக ளிடையிடையிலே தூக்கி யலங்காரமாய்ச் சிங்காரிக்கப்பட்ட தந்தத் தே ரென்றவாறு. 12

411. சல்லிகள் கவரி தூக்கியே வச்ர
சட்டங்கள் சேர்த்துசோ பானம்
வில்விடு மணியின் கூட்டத்தான் விளங்க
வபரஞ்சி மணிகளான் விரும்பு
நல்லவோ வியத்தின் பதுமைகோ டிகளை
யிடையிடை நாட்டிதேர்ச் சீலை
வில்லிடுங் கொடியாந் துசபட தரள
முதலிய மாலையான் விளங்க.

எ - து :—சல்லிகளையுஞ் சாமரைகளையு மிடையிடையிலே தொங்க விட்டும் வச்சிரத்தினுலே சட்டங்கள் சேர்த்துப் படிகளானது நவ மணியினுலே யிழைத்திருக்க வபரஞ்சித் தங்கத்தினு முருவமைந்த சித்திரப் பதுமைக ளந்த ரதத்திற் சிங்காரஞ் செய்து தேர்ச்சீலையா லைங்கரித்து நான்கு வாசலிலேயுஞ் சிவந்த சிறுகொடிகளைத் தாரையாய் விளங்கக் கட்டிப் பெருங்கொடி யருகெல்லாந் தரளமாலை யசைந்தாடி விளங்கப் பிரகாசித்தன காலநேமியினுடைய ரத மென்றவாறு. 13

412. நிலையதா முகுரகண் ணுடிக ணிறுவி
நான்குவா யிலினிரை தோறும்
பலர்புகழ் சிங்க மோர்புறங் கந்து
கத்திர ளோர்புறங் கரிகள்
சிலைவலோர் துதிக்கும் பூதமா நிரைகள்
பூட்டினர் சிறந்தகா வலர்கள்
பலவித வுருளை தொறுந்தொறுங் காப்ப
மணிநிரை பலபல கறங்க.

ஏ - து :—நான்கு வாயிலி னிரு புறமு நிலைக்கண்ணடிக ளமைத் தொரு வாசலிலே சிங்கநிரைகளைப் பூட்டியு மற்றோர் வாசலில் கந்துக துரகங்களைப் பூட்டியு மற்றோர் வாசலில் யானைநிரைகளைப் பூட்டியு மற்றோர் வாசலில் பூதத் தொகைகளை வகுத்து மிராநின்ற தேர் பண்டில்களின் காவலராகப் பல வசுரக் கூட்டங்கள் காக்க வனேக கண்ட நாத மணிகள் கலகலவென்று சத்திக்கத் தக்கதாய் விளங்கு மந்த ரத மென்றவாறு. 14

413. கலசகும் பத்தை யுச்சியி னிறுவித்
தவளசத் திரக்குடை கவினச்
சலமிலா வலவன் றேரலங் கரித்துத்
தலைவன்முன் னிறுத்திடச் சார்ந்த
குலதில கமதா மசுரன்முன் பூசைத்
திறனெலாங் குறைவிலா தமைத்து
நலமிகு மகுடங் கவித்துகுண் டலங்கள்
காதினி னயந்திட வணிந்து.

ஏ - து :—அப்படி யலங்காரஞ் செய்து பிரகாசிக்கா நின்ற ரதத்தி னுடைய வுச்சியிற் கனக மயமா யிரத்தினத்தா லிழைத்திரா நின்ற கலச கும்பத்தைத் தாபித் ததற்குமேலே தவள சத்திரக் குடையை யழகாய்ப் பொலியத் தேரை யலங்கரித்துத் தேர்ப் பாகன் அசுரத் தலைவன்முன் நிறுத்திட வதன்கண்சார்ந்த குலத்துக்கெல்லாந் திலகனாகிய வசுர ராசன் முன் வழிபடு கடவுளுக்குரிய விதிப் பிரகார மருச்சனை முதலாகிய சோடச வுபசாரஞ் செய்து நன்கமைந்த விலக்கணத்தோடுங் கூடிய ஒன்பது வகையாயுள்ள நவமணியா லிழைத்த மவுலி புனைந்து மகர குண்டலங்களை யிரண்டு காதினும் விளங்க வணிந்தா னென்றவாறு. 15

414. புயத்தினின் வலைய மணிந்துவச் சிரத்தின்
கவசம்பூட் டிட்டபின் புகழார்
நயத்ததோ ரார வகையெலா நண்ணச்
சந்தனப் பெருமண நயக்க
வயத்ததோ ருடைவாள் வயங்கிட வரையின்
வனைந்தபின் வில்லெனு மேரு
புயத்தினின் விளங்க வாவம ததனிற்
புண்ணியக் கணையெலாம் பொலிய.

எ - து :—அந்தக் காலநேமியென்னு மசுர ராச சூடாமணியாய்க் குலசூடாமணியாய் விளங்குகின்றவ னிரண்டு புசத்திலும் வலயங்களை யணிந்து வச்சிர மணியாற் செய்த கவசத்தைப் பூட்டியும் புகழினலே நல மிக்க மாணிக்க முத்து மாலைகளைப் புனைந்து மதின்மேலே சந்தன முதலாகிய திவ்விய பரிமளங்களை நிறையப் பூசியும் விசயம் பொருந்திய உடைவாளை யரைப்பக்கத்திற் றெருங்கவிட்டும் வில்லென்கின்ற மகா மேருவானது புயத்திலே விளங்கவு மம்பறுப்புட்டிலின் புண்ணியமாகிய கணைகளெல்லா முதுகினிடைப் பிரகாசிக்க விளங்கினன் காலநேமி யென்னு மசுர ராச னென்றவாறு. 16

415. சூரபன் மாவி னிந்திர ஞாலத்
தேரிவண் சூழ்ந்தகென் றுரைக்குங்
கோரமா யிரதத் திவர்ந்தனன் சிங்கச்
சரபமாய்க் கொண்டகோ லத்தா
னேரலர் கூற்றுன் தந்திரர் நெருங்க
வமைச்சர் தலைவர்க ணெருங்கப்
பாரினிற் பதாதி முதலினே ரவரை
நெருங்கியே படர்ந்தனர் பரிவான்.

எ - து :—சூரபன்மா வென்னும் ராசசூடாமணி குலசூடாமணியா யண்டர தீசுவரனுய் விளங்குகின்றவ னுகந் தேருநின்ற விந்திர ஞாலத் தேரான திந்த வுலகத்தி னிழிந்தா லெத்தன்மைத்தோ வத்தன்மைத்தாகிய விரதத்தி னுரோகணிதமானுன் சிங்கசரபம்போ லொத்த வலியினை யுடையவன் சத்திராதிகளுக் கெம வுருவமாகிய [illegible]திரத் தலைவர் மந்திரத் தலைவர் முதலாகிய பேர்க ணெருங்க வவர்களை நான்கு வகைச் சேனைகளு நெருங்கப் போனுன் காலநேமி யென்றவாறு. 17

416. பேரிகை பணகந் தவளவா ரணங்க
டிருச்சின்னம் பெரியதா ளங்க
டாரைகள் பூரி விராணமல் லரிகள்
சல்லரி குடமுழாத் தடாரி
காரினி ழெலிக்கும் பம்பைமத் தளங்கள்
மண்டுகம் பயிலுமா தித்தியம்
வாரிபோன் முழங்குஞ் சந்த்ரவாத் தியங்கண்
முதலவைங் கருவிகள் வளர.

எ - து :—அப்படிப்பட்ட காலநேமி யாக்கினையால் பிரவேசித்து வருகின்ற வசுரருடைய வெள்ளத்திலே பேரிகை முதலாகிய பணக வாத்தியங்களு மிடம்புரி வலம்புரி சலஞ்சலம் பாஞ்சசன்னிய மென்னுஞ் சங்கநாதத் தொனிகளும் வீரசின்னமும் பெரிய தாளங்களு மூதுகின்ற திருச்சின்ன முதலாகிய தாரைகளும் பூரியும் வீராணங்களு மல்லரிகளுஞ் சல்லரிகளுங் குடமுழாவுந் தடாரியு மேகம்போன் ஷெலிக்கா நின்ற பம்பைகளும் மத்தளங்களு மண்டூக வாத்தியங்களு மாதித்திய வாத்தியங்களும் சமுத்திரம்போ லொலிக்காநின்ற சந்திர வாத்தியங்களுந் தோற்கருவி துளைக்கருவி கஞ்சக்கருவி நரப்புக்கருவி மிடற்றுக்கருவி யென்னும் பஞ்சநாதத் தொனிகளுட னடந்தார்கள் சேனைவெள்ளங்க ளென்றவாறு. 18

417. வச்சிர முசலந் தோமர மீட்டி
வாருணம் வாயுவின் படையு
நச்செயிற் றுரகங் காருட மிடப
நளினத்தோன் படைகளு மொளிர
முச்சிகை வடிவே லந்தகன் படையு
முதிர்ந்திடு மங்கியின் படையு
முச்சித மான சக்கரம் வீர
பத்திர மிவையெலா மோங்க.

எ - து :—வச்சிராயுதமு முலக்கையுந் தண்டாயுதமு மீட்டிகளு வருணன் படைகளும் வாயுவின் படைகளும் நாகாஸ்திரங்களும் காருடக் கணைகளு மிடபாஸ்திரமும் பிரம்மாவின் கணைகளு மொளிவிட்டுப் பிரகாசிக்கவுந் திரிசூலங்களும் வடித்த வேல்களு மந்தகனுகிய சமன் படைகளு மங்கிதேவன் படைகளுங் கோரமான சக்ராயுதங்களும் வீரபத்திரர் கணைகளு மிவைகளெல்லா மங்கியைக் காலப் புகையை மேன்மேலு முண்டாக்க வந்தார்க ளசுரக் கூட்டங்க ளென்றவாறு. 19

418. அமரர்தம் பதியை விட்டெழுந் தனேக
காவத மகன்றன ரசுரர்
தமரவா ரிதிசூ ழுலகினின் வந்து
தொண்டைநன் னாட்டினிற் சார
நிமலம தான சோழமண் டலத்தை
நீங்கினர் பாண்டியர் நிமலக்
கமலம தலருங் கோலமால் வரையைக்
கண்டனர் களித்தன ரன்றே.

எ - து :—தேவ ருலகத்தை விட் டசுரவெள்ளக் கூட்டங்களான தனைக வழியினை யெல்லாங் கடந்துவந் தலைகளாலே முழங்காநின்ற கடல் சூழ்ந்த விவ் வுலகத்திற் சோழ பாண்டிய தேசங்களைக் கடந்து தொண்டை மண்டலத்தில் காஞ்சிமா நகரத்தின் வந்து சேர்ந்தார்க ளங்கே யிருந்து மறுபடியு மதைவிட்டு நீங்கித் தாமரைக் கமலங்க ளலராநின்ற தடாக பந்திகள் சூழ்ந்த கோலகிரியைக் கண்டு களித்தார்க ளென்றவாறு. 20

419. தூளியின் கூட்ட மெழுந்தண்ட ரண்டத்
தொகையெலாம் பூழியாய்த் தோன்ற
வாழியை யடைத்தவ் வட்டநா கத்தின்
கவுட்டுளை மதத்தினை யடக்கி
நீளிரும் பிரமன் மனோவதி மருவு
மானத நிறைத்ததிவ் வுலகின்
மீளருங் கங்கைக் காசிமா நதிபோ
லறலினுல் நிளிர்ந்திட வன்றே.

எ - து :—அந்த வசுரவெள்ளங்கள் படையெடுத்துப் போகும்போது தூளி படலங்களான தெழுந்து அண்டரண்டத் தொகையெல்லாம் பூழிக் கூட்டங்களாய் நிறைந்திருக்கவுங் கடல்களையெல்லா மேடுபடத் தூர்த் தவ் வட்ட கசமாகிய வயிராவத முதலான யானைகளின் கவுட்டுளை களின் மதத்தினையடக்கி நீண்ட பெருமையை யுடையவராகிய பிரம்மா வாசம்பண்ணுநின்ற மனோவதியாகிய நகரத்தைச் சூழ்ந்திராநின்ற மானத தீர்த்தத்தை யிவ் வுலகத்தில் கலிகாலத்திலே பஞ்சமா பாதக மதி பஞ்சமா பாதகங்களைத் தீர்க்காநின்ற காசி கங்கை தீர்த்தம்போல் மணலினுலே நிறையத்தக்கதாகச் செய்தது தூளிபடல மென்றவாறு. 21

420. ஆனையி னொலிகள் பெரும்புறக் கடல்போல்
முழங்கியே மும்மதத் தமருஞ்
சேனைக ளுவரிக் கடலென முழங்கித்
திகழ்ந்தன் குதிரையின் றொகுதி
சோனைமா ரிகள்வாழ் பாற்கடற் றிரைபோற்
றோன்றியே விலாழிக ளுமிழ்ந்த
நானிலத் திரத மேனைய கடல்போல்
முழங்கிட நரர்சுரர் நடுங்க.

எ - து :—யானைக்கூட்டப் பந்திகளானது பெரும்புறக் கடலைப்போல் முழங்கி மும்மதங்களைப் பொழிந்துநின்றன சேனைக்கூட்டத் தொகுதிகளானது உவர்க் கடலைப்போல் முழங்கி யொலித்து நின்றன குதிரைக் கூட்ட வெள்ளங்களானது சோனைமாரியாகப் பொழிகின்ற மேகக்கூட்டங்கள் வாழப்பட்ட பாற்கடலி னலைகளைப்போலத் தோற்றஞ் செய்து நுரை நீரை யுமிழ்ந்து நின்றன நானிலமாகிய விவ்வுலகிற் றேர்ப் பந்திகளானது மற்றக் கடல்களைப்போல் முழங்கிக்கொண்டு பிரவேசித்த திதுகளைக் கண்ட நரராகிய மனிதருஞ் சுரராகிய தேவாதிகளு நடுங்கினார்களென்றவாறு. 22

421. இந்திரற் குரைப்பக் கேட்டள வவனி
னகட்டினி னெழுந்தன வெரிகள்
கந்தமார் கமல மாயிரத் தலர்க
ளனையசெங் கண்கணீர் கால
நிந்தையிற் றூதர் தமைவிளித் துரைப்பா
னேரல ரெவ்வழி நேர்ந்து
விந்தையா யமர்ந்தார் நோக்கிநீர் மீண்டு
விளம்புதிர் விரைவினென் றுரைத்தான்.

எ - து :—இந்திர மகாராசனுனவன் காலநேமியினுடைய நாலு வகைச் சேனைகளு முத்த சன்னுகமாய்ப் பிரவேசித்து வருகிற சமாசாரத்தைக் கேட்ட மாத்திரத்தி னவனது வயிற்றிலேநின்று மக்கினிக் கொழுந்து பற்றி யெரிந்தன திவ்விய பரிமள நற்சுகந்தத்தைக் கமழுகின்ற தாமரைக் கமலம் போன்ற வாயிரங் கண்களிலேயுஞ் சலங்களைச் சொரிந்து விசனப்பட் டிந்திர மகாராசனுனவன் குற்ற மற்ற தூதரை யழைத்து நமது எதிரி சேனையான தெவ்விடத்தின் வந்து சேர்ந்து விந்தையா யமர்ந்திருக்கின்றார்க ளதை நீங்கள் போய்ப் பார்த்து வந்து சீக்கிரத்தி னறிவிப்பீர்களாக வென்று னென்றவாறு. 22

422. அவர்களு மீண்டு வசுரர்வெள் ளத்தி
னமைதியு மவர்பெருந் தருக்கும்
புவனமீ துயர்ந்த தலைவர்கள் வலியும்
புந்தியார் மந்திரத் தலைவர்
கவலைதீ ருயர்வுங் காலநே மிப்பேர்
கரித்தவன் புயபல வலியு
முவமையிற் றூத ருணர்ந்தபின் வலாரிக்
குணர்த்தினர் வலியெலா முணர்ந்தான்.

எ - து :—அந்தத் தேவ தூதர்களானவர்கள் சஞ்சீவி கிரியை விட்டிரங்கி வந்து வசுர வெள்ளங்க ளணிவகுத் திராநின்ற நான்கு வகைச் சேனைகளைக் கண் டவர்க ளிருக்காநின்ற நிலைகளு மவர்கள் மகிழ்சிறந் திருக்கின்ற தருக்கும் பூலோகத்தி னுயர்ந்திருக்காநின்ற யூகத்தலைவர் படைத்தலைவர் பட்டவர்த்தனர் மகுட வர்த்தனர் நிவாதகவச காலகேயர்கள் மந்திரத்தலைவ ரர்த்தரதர் சமரதர் முதலாகிய பேர்கள் வீரசிங்கம்போலத் தருக்குற் றிருக்கின்ற செயலுங் காலநேமியென்னு மசுர சூடாமணியானவன் கர்வப்பட் டிருக்காநின்ற வல்லமையுங் கண்ட தேவ தூதர்களானவர்க ளிந்திர மகாராசனுக் கவர்கள் வலியினைக் கூறக் கேட்டுத் தெளிந் துணர்ந்து தனது வலியெல்லாந் தொலைந் தெழுந்தா னென்றவாறு. 24

காலநேமி சமர் குறித்த வத்தியாயம் முற்றிற்று.

## இருபத்தைந்தாவது : சயந்தன் சமர் புரிந்த வத்தியாயம்

423. தந்தைதாய் குருவுந் தயாபர நிதியுந்
தானென விளங்கிய தனியாய்
முந்திய பரனே நினதருண் மொழியான்
மூர்க்கனுக் கினிதருள் புரிதி
யெந்தையே யென்னு மிந்திரற் கிரங்கி
யியம்புவ னரங்கனு மீசன்
சிந்தனை கலங்கேல் சயந்தனோ டேகி
யமர்செய்தி சீரியோ யென்றான்.

**எ - து :**—ஞானத்தை வருவிக்காநின்ற பிதாவாகியுந் தேகத்தைக் காப்பாற்றாநின்ற மாதாவாகியும் ஸ்வரூப ஞானத்தை வருவிக்காநின்ற குருவடிவாகிய தயாபர தத்துவமாயும் பேரின்ப வபரஞ்சித் தங்கமாயும் விளங்காநின்ற வொப்பற்ற நுமது மொழியாகிய வனுக்கிரக வார்த்தையி னாலே யிந்த மூர்க்கனாகிய வெனக் கின்பமாகிய வருளைப் புரிவீ ரெந்தையாகிய ரக்ஷகரே யென்று கூறுகின்ற விந்திர மகாராசனுக் கிரங்கிச் சொல்கின்றா ரரங்க நாயகராகிய வீஸ்வரரானவர் சிந்தனையாகிய உன தந்தக்கரண மானது கலங்கிப் பரதவியாதே யரசனே புத்திரனாகிய சயந்தனுடனே கூடினவனாய்ப் போய்க் காலநேமியை வளைந் துத்தஞ் செய்வாயாக வென்று கட்டளையிட்டா ரரங்கநாயக ரென்றவாறு. 1

424. அமுதவாய் மொழியைக் கேட்டம ரேச
னந்தரத் திருந்ததன் கரியைக்
குமுதம தென்னும் வாரண நினைந்தா
னவையறிந் திந்திரற் குறுகச்
சமுகதே வர்களைச் சயந்தனை விளித்துச்
சார்குதிர் போர்க்கெனச் சாற்றச்
சுமுகமாஞ் சயந்தன் குமுதத்தி னிவர்ந்தா
னிந்திரன் றன்கரி குறுக.

**எ - து :**—இவ்விதமாக வரங்கநாயகருடைய திருவார்த்தையாகிய வமுத மொழியைக் கேட்ட விந்திர மகாராசன் றழைத்த வாகாசத்தி னிருக்கின்ற தன் கரியாகிய வயிராவதத்தினையுங் குமுத மென்கின்ற

வானையினையு நினைத்தா னந்த விரண்டு மந் நினைவினை யறிந்து சஞ்சீவி கிரியாகிய கோலாசல பர்வதத்தின் வந்து சேர்ந்ததைக் குறித்துத் தன் சமுகத்தி னனவரதமு நிறைந்திருக்காநின்ற தேவகூட்டங்களையுஞ் சயந்தனாகிய தன் புத்திரனையும் வரவழைத் துத்த சன்னகைத்துக் காரோகணிதமாகக் கட்டளையிட்டா னப்போது தன்புத்திரனாகிய சுபகர, மங்களாகர சுசீலனாகியவன் குமுதமென்னு மியானையி னேறி நடாத்தினா னிந்திர மகாராசனானவ னயிராவதத்தி னேறி நடாத்திடச் சென்றான் போர்க்களத்தைக் குறித் தென்றவாறு. 2

425. அறைந்தன படகம் பேரிகை யனைத்து
மந்தர துந்துபி யார்த்த
நிறைந்தன வமரர் கூட்டத்தி விரத
நிமலமா முச்சுவ நிறைந்த
சிறந்தவா ரணங்கள் சேர்ந்தன குடைகள்
கொடிகளுந் திகழ்ந்தொளி சிறந்த
விறந்தன ரசுர ரீண்டென வெருளும்
விளம்பிடச் சமர்க்களம் புகுந்தார்.

எ - து :—இத் தன்மைத்தாய வசுர வெள்ளங்களுடைய யுத்தத்தைக் குறித்துத் தேவகூட்டங்கள் பிரவேசித்த மாத்திரத்தின் முழங்காநின்ற படக வாத்தியங்கள் சத்திக்காநின்றன பேரிகை வாத்தியங்க ளாகாய வீதியெல்லாம் துந்துபியையப் பார்த்து முழங்கின தேவாதிகளுடைய விரத பந்திகளானதும் நிமலமாகிய உச்சுவச்சுருவ கந்துகங்களானதும் பந்தி பந்தியாய்த் திரண்டு வந்தன சிறப்பாகிய வாரணமான யானைக்கூட்டமானது எமனைப்போலத் தண்டங்களைத் துதிக்கையினாலே வீசிக்கொண்டு பிரவேசித்தது குடை கொடிகள் முதலான தெல்லா மாகாய மார்க்கமே பரந்து மூடின தேவ கூட்டங்க ளரங்கநாயக னனுக்கிரகத்தால் வருகிறதைப் பார்த் தவர்க ளித்துடனே யசுரக்கூட்டங்கள் வேருடனே பறிந்து போய்விட்டு தென்று சொல்லத்தக்கதா யுத்த களத்திலே வந்து நிறைந்தார்க ளென்றவாறு. 3

426. தேர்கரி பதாதி சூழ்ந்திடச் சிறந்து
திக்கினர் புடையினிற் சிறக்கப்
பாரினிற் பம்பை குடமுழாக் காளம்
வீரசின் னங்கள்பண் முழவந்
தாரினின் வண்டின் கணமெலா மருந்தித்
தெவிட்டிடச் சயந்தனுங் காளை
யாரவா ரத்தோ டமர்தரு மசுரர்
களத்திடை யடைந்தன னன்றே.

எ - து :—சயந்த மகாராசனைத் தேர்க் கூட்டங்கள் சூழ்ந்திட வதை யானைக்கூட்டங்கள் சூழ்ந்திட வதை யசுரக்கூட்டங்கள் திக்குப்பாலகர் முதலிய சேனைகள் சூழ்ந்திட விவ் வுலகத்திற் பம்பை வாத்தியங் குடமுழா வாத்திய மெக்காளம் வீரசின்னம் பண்ணையுடைய மத்தள வாத்தியங்கள் முழங்கத்தக்கதாகப் பிரவேசித்தா னவ னெப்படிப் பட்டவனென்றால் மந்தார பாரிசாதமாகிய புட்பங்களை யணிந்த திவ்விய பரிமளங்களைக் குறித்து வண்டு தேன் சுரும்பு ஞிமிறென்னு மிந் நான்கும் மதுக்களையுண் டிசையைப் பாடச் சயந்த மகாராசனுனவ னுரவாரத்துடன் யுத்தகளத்திலே வந்து சேர்ந்தா னென்றவாறு. 4

427. அடைதலு மசுர ரட்டகா சஞ்செய்
தஞ்சிலை யத்திரம் பூட்டிக்
கடைதரு கீர சாகரம் போலக்
கலக்கின ரமரர்தங் குழுவைக்
கொடையயி லமர ரசுரர்தங் கூட்டக்
குழுவினைக் கொல்சர மதனாற்
படையினைப் பிணக்குன் றம்படக் குவித்தார்
படகங்க ரிய மார்ப்ப.

எ - து :—அந்தப் பிரகாரஞ் சயந்த மகாராசன் படை வகுத்துக் கொண்டு களத்திலே யுத்த சன்னைகனுய் வந்ததைக் குறித் தசுரக் கூட்டங்களானவை ரட்டகாசஞ் செய்து மான் கூட்டத்தில் பாய்ந்த வேங்கைப் புலிபோலச் சீறி வில் வளைத்து நாணேறிட்டுக் குணத்தொனி பண்ணிப் புங்காறு புங்கமா யொரு தொடைக் காயிரம் பதினுயிரமாகிய சரமாரிகளைப் பொழிந்து திருப்பாற்கடலை மந்தரகிரி கலக்குந் தன்மையைப் போலப் பிணக்குன்ற மனந்தமாய்க் குவிந்திடக் குவித்தார்க ளிரக்க மாகும்படி யாவரையும் பாதுகாக்காநின்ற வசுர வெள்ளங்களானது பிணக்குன்றமாய்க் குவிந்தன வென்றவாறு. 5

428. இவ்வித மாக விருதிறத் தாரு
மிளைக்கிலா திருஞ்சமர் புரிய
செவ்விசே ரசுர சேனைகா வலர்கள்
சீறியே தேரினைச் செலுத்திப்
பவ்வம்போற் குமிறு நாணினை முழக்கிப்
பயில்சரந் தூர்த்தம ரர்களை
நவ்வியைச் சீறு புலிசிங்கம் போலப்
பிணக்குன்ற நாட்டின ரன்றே.

எ-து :—இந்தப் பிரகாரமா யசுரர்களுந் தேவ கூட்டங்களு மொருவருக் கொருவ ரிளைக்காதவர்களா யுத்த சன்னுகம் பண்ணுமளவில் படைத்தலைவர் யூகத்தலைவர் பட்டவர்த்தனர் முதலாகிய பேர்களுங் கோபித்துத் தங்கள் தங்கள் தேரைச் செலுத்தி ரணகளத்திலே பிரளய கால ருத்திரனைப்போலச் சீறிச் சிலையினை வளைத்து நாணினைப் பூட்டிக் குணத்தொனி செய்து சரமாரிகளைப் பொழிந்து மான் கூட்டங்களைப் பாய்கின்ற சிங்கம் புலிபோற் சீறி யமரக் கூட்டங்களைப் பிணமலையாய்க் குவித்தார்க ளசுரக் கூட்டங்க ளென்றவாறு. 6

429. அமரர்தஞ் சேனை யழிதலுஞ் சயந்த
னுடக மேருபோன் றொளிருந்
தமரம தகலா வில்லினை வணக்கிச்
சரமழை தொடுத்தவர் தம்மைத்
திமிரம தனைத் திவாகரன் றொலைத்த
லனையவா யசுரர்தந் திரளைக்
கமலசெங் கையினுற் றொலைத்தன னசுரர்
பிணக்குன்றங் களத்தினிற் காண.

எ-து :—இந்தப் பிரகாரங் கோர ரூபிகளாகிய வசுர சேனுதிபதிகள் கூட்டத்தாரால் தேவ கூட்டங்கள் சின்னுபின்னமாய்ப் பிணக்குன்றம் படப் பார்த்துக் கோபித்தவனுகி யிந்திர புத்திரனுகிய சயந்த மகாராசனுனவன் தன்னுடைய மகாமேருவை யொத்த வில்லை வளைத்து நாணேறிட்டுக் குணத்தொனி செய்து வம்பினைப் புங்கானு புங்கமா யொரு தொடைக் கைம்பதினுயிரந் தொடையாய்த் தொடுத்துச் சரக் கூடங் கட்டி யிருளினைச் சூரியன் றுரத்துமாறுபோலக் கலக்கி யொரு நிமிடத்திலே வசுர வெள்ளங்களைப் பிணமலையாய்க் காணக் குவித்தனன் சயந்த மகாராச னென்றவாறு. 7

430. மந்திரத் தலைவர் சேனையின் றலைவர்
வளைந்தனர் சயந்தனும் வயமாரி
முந்திய தேவ மாய்கையி னுலே
யனேகராய்க் குமுதமுந் திடவே
விந்தையாற் சமரை விளைத்தனன் களிறு
காலினுற் சிலவர்வீய்ந் திடவே
நிந்தையிற் கொம்பாற் குத்தியே துதிக்கைத்
தண்டத்தா லசுரை யொறுத்த.

எ - து :—அந்த வசுரக் கூட்டங்களிலே முக்கியமான வீராதி வீரர்க ளாகிய மந்திரத் தலைவர்கள் சேனுபதித் தலைவர் முதலாகிய பேர்கள் சயந்த மகாராசனை வந்து வளைத்துக்கொண்டார்க ளவர்கள் கோரத்தைப் பார்த்து மிகவு மதித்துப் பிருகஸ்பதி பகவா னனுக்கிரகித்த தேவமாயா மந்திரத்தை யுச்சரித்தா னப்போது கோடானுகோடி சயந்த மகாராசனுங் கோடானுகோடி. குமுத வானையுமா யுருவெடுத்து வெகுவிதமாய்த் தான் கற்ற தனுசு விலக்கண மெல்லாங் காட்டி யுத்தஞ் செய்தா னது வல்லாமல் குமுதமென்கின்ற யானையானது காலினு லனேக வசுரரைத் தேய்த்து நான்கு கொம்பினுலே பாய்ந் துருட்டிக்கொண்டுந் துதிக்கையாற் றண்டத்தைச் சுழற்றி யடித்து நொறுக்கியுந் திரிந்த தென்றவாறு. 8

431. வாலினுற் சுற்றி யெறிந்திடுஞ் சிலரை
மந்தரங் கடலினை மதித்தற்
போலசு ரர்கடந் தலைவரை யுழக்கப்
புந்திநைந் துருகிமந் திரர்கள்
கோலினை யனந்த கோடியோர் தொடையாய்க்
கோலகாண் டபத்தின் விடுப்ப
மாலினைச் சிறிய தந்தையா யுடையோன்
கணைகளா லவைமறுத் திட்டான்.

எ - து :—அந்தக் குமுதமென்கின்ற யானையானது வாலினுலே சிறி தசுரரைச் சுற்றிக் கடன் முதலாகிய விடங்களிலே வீசுஞ் சிறிதுபேரை மந்தரகிரி மலையானது பாற்கடல் வயிறுளைந் தலறிடக் கலக்கினு லெத்தன்மைத்தோ வப்படிப்போல வசுர வெள்ளங்களைக் கலக்கி யுழக்கி யதுஞ் செய்யும்படியாகிய காலங்களில் யூகத்தலைவர் பட்டவர்த்தனர் நிவாத கவச காலகேயர்கள் முதலாகிய பேர்கள் கோபம் பெருகினவர்களாய் வந்து வளைந்து சரமாரிகளைத் தொடுத்துநிற்குங் காலையில் மாதவனைச் சிறிய தகப்பனுராக வுடையவன் றனது கணைகளாலே யதை யெல்லா மறுத்துத் தூளி படல மாக்கிநின்று னிந்திர புத்திர னென்றவாறு. 9

432. சார்ங்கவில் வணக்கி நாணினை யேற்றிச்
சரங்களை யெய்தனர் மழைபோ
லேந்தலாஞ் சயந்த னவைகளை யறுத்து
மவுலியைத் துகள்பட வெய்து
சாந்தமில் லவர்தம் வில்லினைத் துகளாய்க்
கண்டபின் சாரதி தலையை
நேர்ந்திட வறுத்துப் பரிகளைக் கொன்று
நீசர்தேர் நொறுக்கிநின் றூர்த்தான்.

எ-து:—அப்படிச் சூழ்ந்த விரதத்தை விட்டுக்கொண்டு வந்த கோர ரூபிகளாகிய காலநேமியினுடைய மந்திரிமார்கள் முதலாகிய பேர்கள் காண்டீபத்தை வளைத்துச் சரமழை தூவி யார்ப்பரித்தார்க ளதை யிந்திர புத்திரனுனவன் கண்டு தன் கணைமாரிகளைப் பொழிந்தக் கணைகளை யெல்லா மறுத்துத் தள்ளி யவர்கள் மவுலியி னனேக வக்கினி பாணங்கள் விட்டுப் பங்கப்படுத்தித் தள்ளியு மவர்கள் வில்லினைக் கண்டதுண்டப்படுத்தியு மதன் பின்பு சாரதி தலைகளை யறுத்து மவர் தேரிற் கட்டிய குதிரைக் கூட்டங்களைத் தூளி படலமாக நொறுக்கி வீழ்த்தான் சயந்த மகாராச னென்றவாறு. 10

சயந்தன் சமர் புரிந்த வத்தியாயம் முற்றிற்று.

## இருபத்தாறுவது: இந்திர னமர் புரிந்த வத்தியாயம்

433. இந்தி ரன்றன்னி ருஞ்சிலை கோட்டியே
பந்தி யாகிய சேனைப்ப ரப்பெலாஞ்
சிந்தி நின்றுசி றந்தநாற் றிக்கினும்
வந்த பேரைவ தைத்தனன் வண்மையால்.

எ - து:—தேவராசனுகிய விந்திரனனவன் றனது மகாமேருவுக்குச் சமதையாகிய தனுசை வளைத்து நாணேறிட்டுக் குணத்தொனி செய்து சரமாரிகளைத் தூவிப் பந்திபந்தியாய் வந்து நிறைந்திராநின்ற சேனை வருக்கத்தின் பரப்புக்களை யெல்லா மொரு நொடிப்பொழுதிலே தூளி படலமாய் நூறிச் சுத்த வீரத்துவ விலக்ஷணங்களைக் காட்டி யொரு முகூர்த்தப்பொழுது சமர் செய்து வெற்றிபெற்றுன் மற்ற வக்கினித்தேவன் முதலாகிய பேர்க ளொருதிசைக் கிருவராக விருந்து கணைமழைகளைத் தூவி வெற்றி பெற்றுர்க ளிந்தப் பிரகாரம் பிரவேசித்து வந்த வசுர வெள்ளங்க ளெல்லாந் துளைக்கப்பட்டுக் கை கால் மார்பகம் விலாக்கள் சிரசு முதலானதுந் தகர்ந்து ரத்த வெள்ளம் பெருகிடத் தனது காண்டீப வல்லபத்தைக் காட்டினு னிந்திர மகாராச னென்றவாறு. 1

434. அங்கி மாப்படை காற்றின ரும்படை
பொங்கிச் செல்லும்வ யிரப்பெ ரும்படை
சிங்க மன்னவ சுரர்தஞ் சேனையை
நுங்கித் தூளாய்நொ றுக்கிமு டுகினுர்.

எ - து:—அக்கினிப் பிழம்பினையும் சூருவளிக் காற்றினையும் விடச்சுவாலையையும் பொழிந்து கொடூரமாய்ப் பிரவேசிக்காநின்ற வழற் கணைகளும் பிரசண்ட மாருதக் கணைகளு மெமனைப்போன்ற வச்சிர சிலீமுகங்களுமாகிய பாணங்களை யெல்லாந் தங்கள் காண்டீபத்திற் பூட்டிப் புங்கானு புங்கமாய்த் தூவிச் சிங்கம்போ லிறுமாக்காநின்ற வசுரக் கூட்ட சேனைகளை யெல்லா மழுங்கிடச் செய்து தூளிபடலமாக நொறுக்கினுர்கள் திக்குப் பாலகர்க ளென்றவாறு. 2

435. வருண னந்தகன் வார்சிலை பூட்டியே
கருணை யில்லவர் தேரைக்க ரிகளைப்
பெருகு கின்றது ரங்கப லத்தினைக்
கருது சேனைக ணக்கில மாய்த்தனர்.

எ - து :—ஆவியாகியுஞ் செகமாகியு மண்ட ரண்டமாகியு மன்னை யாகியுந் தெளிந்த வமுதமாகியு மெசுர்வேத வாரணத்திற் கூறுகின்ற வருண மகாராசனு மெமதர்ம ராசனு நீண்ட வில்லினை வளைத் தனேக மாகிய கணைகளைப் புங்கானுபுங்கமாய்க் கரோவேக சரோவேகமாய்த் தூவி யிரக்க மில்லாத வசுர வெள்ளங்களையுந் தேர்ப் பந்திகளையு நீல கிரியைப் போன்ற யானைத் திரட் கூட்டங்களையும் பாற்கட லலை போன்ற குதிரைப் பந்திகளையுங் கணக்கில்லாத வசுர வெள்ளங்களையு மெரிந்து கரிந்து பொரிந்து போகச்செய்து பிணக்குன்றமாய்க் குவித்தார்க ளென்றவாறு. 3

436. நிருதி யீசனி ருவர்நி ருமலம்
பொருது நின்றசி லையிற்பெ ருங்கணை
குருதி கக்கிடக் கூடிய சேனையைப்
பொருது வென்றுபு கழினை நாட்டினர்.

எ - து :—நிருதி யென்னு மசுரனு மீசானிய தேவனுமாகிய இருவருந் தங்கள் கையினேந்திய நின்மலமா யுரைக்காநின்ற வில்லை யொரு திசையிலே வளைத்துப் பெரிய கணைகளைப் புங்கானுபுங்கமாய்த் தூவி நான்கு வகைச் சேனைகளையு முதிர வெள்ளங்களாகிப் பெருகி வீழ்ந் தலறத் தக்கதாகச் செய்து தங்கள் செயத்தினை நாட்டினார்க ளென்றவாறு. 4

437. வண்மைத் தேவர்கள் வாரிசிலை மாட்சியு
முண்மை நீங்குமு ரக்கர்க ளோர்ந்தபின்
மண்ணளின் மாய்கைச்சி றிதும திததுள
வெண்மைப் புந்திவெ றுத்திவை கூறுவார்.

எ - து :—பெருமை பொருந்திய தேவாதிகள் வெற்றி பெற்ற சந்தோடமு மவர் வில் வளைந்து செயங்கொடுக்காநின்ற காலத்தையுங் குறித்த வுண்மைக்கு விரோதமாகிய கொடுரசாலிகளாகிய வசுர மந்திரிகள் முதலாகிய பேர்க ளாலோசித் திந்த விசயத்தி லிறுமாக்கா நின்ற விவரை மோகன மாய்கையால் வெல்வோ மென்று புத்தியினுன் மதித் துணர்ந்தவர்களாய் வெளுத்த வறிவினையுடைய தங்க ளசுரக் கூட்டத்தைப் பார்த்துச் சொல்லுவார்க ளென்றவாறு. 5

438. தேவ ராக்கச்சி றப்பினைத் தேர்ந்திடின்
மூவர் மூலமாய் முந்திய தென்னலாங்
காவ லாமசு ரேசர்க லங்கினர்
நாவு லர்ந்துந டுங்கின மியாமென்றார்.

எ - து:—மந்திரி முதலாகிய பேர்க ளொருவருக் கொருவர் முன்னிலையிற் கூறுகின்றார்க டேவகூட்டஞ் சிம்மவேறுபோல விறுமாக்கா நின்ற மங்களச் சிறப்பினை யாராய்ந் தறியி னன்ன வாகனச் சிறப் பமைந்த சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மாவுங் கருட வாகனத்தையுடைய ரக்ஷக கர்த்தாவாகிய நாராயண மூர்த்தியு மிடப வாகன மூர்ந்த சங்கார கர்த்தா வாகிய உருத்திர மூர்த்தியு மிவர்களுக் காதரவு சொல்லிய காரணத்தா லிந்த வெற்றியைப் பெற்றார்க ளாகையா னமது வெள்ளங்களுக்குத் தலைமையான காதலராகிய நிவாதகவச காலகேயர்கள் பட்டவர்த்தனர்கள் மகுடவர்த்தனர்க ளணிக் தலைவர்க ளுகத் தலைவர்கள் முதலாகிய பேர்களெல்லாங் கலங்கி யிடநுழந்து நைந்தோடினார்கள் நாமெல்லா நாவுலர்ந் தவர்களா யிருக்குந் தன்மையைப் பெற்றோ மென்றார்க ளென்றவாறு. 6

439. என்ற மந்திர ரியாவரு மெய்தியே
குன்றம் போலக்கு றுகிக்கு றைவிலா
மன்றல் தங்கிய வானவ ரியாரையு
நின்று வெற்றிசெய் நேயம்நி னைத்தனர்.

எ - து:—இந்தப் பிரகார மாலோசனை செய்யாநின்ற மந்திரர் முதலாகிய வனைவரு மொருங்கெய்திக் குன்றமாகிய வட்ட குலாசல பர்வதம்போல வந்து ரணகளத்தி னிறைந்து குறைவில்லாத மந்தார பாரிசாத மாலையானது திவ்விய பரிமளங்களைக் கமழாநின்ற வெற்றி மாலையினை யணிந்த சிங்கம்போல விர்த்தி யடைந்த தேவகூட்டங்களை யெல்லா மெதிர்ந்துநின்று வெற்றியைப் பெறுகின்ற யூகயுத்தியை நினைந்தார்கள் மந்திரத்தலைவர் முதலாகிய பேர்க ளென்றவாறு. 7

440. நம்மி னத்தின டாத்திய சூழ்ச்சிதான்
விம்மி தம்பெற வெல்லின்வி றேதுமாந்
தம்மை மாய்கையின் றன்படை தன்னிறுத்
வெம்மை யியந்திடின் வென்றிவி ளைக்குமால்.

எ - து:—இந்தப் பிரகார மாலோசிக்காநின்ற மந்திரர் முதலாகிய வனைவோர்களுஞ் சூழ்ச்சியாகிய உபய தந்திரங்களைச் செய்து நமக்குச் சந்தோட சுபகர மங்கள விபவங்களைப் பெறும் வண்ணமாய்ச் செயங் கொள்ளுதுமாகி னம்முடைய மரபிலே நடக்கையாவது தேவாதிகளைச் செயங்கொள்ளும் வரலாறு மாய்கை செய்து செயங்கொள்ளுவ தல்லது வேறல்லாதபடியினாலே நாம் விர்த்தி யடையும்பொருட் டொரு செய்கை செய்யவேண்டு மது யாதென்றால் விருத்தியாகிய சந்தோட மைபவ சுகுணத்தைப் பெற்றிருக்கின்ற தேவகூட்டத்தின்மீது மாயா கணைகளை விட்டதனாலே வெம்பிப் புழுங்கி நைந்துருகிக் கரையச் செய்தா லதுவே நமக்கு வெற்றியைக் கொடுக்குமென் றாலோசித்தார்கள் மந்திரிமார்கள் முதலாகிய பேர்க ளென்றவாறு. 8

441. ஆசு தீர்ந்தவ னீகம வையெலாந்
தேசு பொங்குநாற் றிக்கினுஞ் சென்றுபோர்
காசு நீங்கிடப் பூசல்செய் காலையின்
மாசின் மாய்கையா மாப்படை யுய்த்துமால்.

எ - து :—மறுபடியும் மந்திரிமார் முதலாகிய பேர்க ளொரு சூழ்ச்சியாகிய வாலோசனை செய்து குற்றந் தீர்ந்த நான்கு வகையாகிய ரத கெச துரக பதாதிகளாகிய சேனைகளை யெல்லா மழகெறிக்காநின்ற நான்கு திக்கினும் நிலைபெறச்செய் தணியாகிய யூகம்வகுத் தவர்க ளுத்தசன்னகம் பண்ணும்படியாய்ச் செய் தந்தக் காலத்திலே நாமு நான்கு பிரிவாய்ப் பிரிந்திருந் தசுர மாய்கையினாலே யவர்களுக்குத் தெரியாமல் மயக்கஞ் செய்து மாய்கையாகிய கணைகளை விட்டுக் கட்டிச் செய்யுங் காரியந் தவிருங் காரியந் தெரியாமல் மயங்கச் செய்வதே நமக்கு வென்றி வருகிறதற்குக் காரண கால மென் றெண்ணினார்க ளென்றவாறு. 9

442. என்றி சைந்தசு ரேசரி யற்பெறு
குன்றம் போன்றவி ரதத்திற் கூடியே
வென்றி யெய்திட நாற்றிசை வேறுபோய்க்
கன்றி விற்கணை தூவிக்க விர்த்தனர்.

எ - து :—இந்தப் பிரகாரம் யாவரு மந்திராலோசனை செய்து யூகயுத்தியினாலே யிசைவுபெற்ற வசுரர்க ளியாவரு மழகினையுடைய பொன்னங் குன்றம் போன்ற ரதத்தி னாரோகணிதராய்க் கூடித் தாங்கள் வென்றி பொருந்தும் பொருட்டாய்க் கிழக்குத் தெற்கு மேற்கு வடக்கென்று நான்கு திசையினும் பிரிந்துபோய் வில்லை வணக்கிப் பிரளயகால வுருத்திரனைப் போலச் சீறிக் கொதித்துக் கொடூர சரமாரிகளைப் புங்கானுபுங்கமாய்ப் பொழிந் தார்ப்பரித்துக் களித்தார்க ளென்றவாறு. 10

443. நாற்றி சைக்கண யந்தவ மரர்கள்
காற்றின் வெம்படை கன்றிய வங்கிதன்
மாற்ற லாற்றன்ம ருவுபெ ரும்படை
கூற்றின் வெம்படை வில்லினிற் கூட்டியே.

எ - து :—இந்தப் பிரகாரமா யசுர வெள்ள யூகத்தி னிராநின்ற சேனாதிபதிக ளணித்தலைவர் யூகத்தலைவர் பட்டவர்த்தனர் மகுட வர்த்தனர் நிவாதகவச காலகேயர்கள் முதலாகிய பேர்கள் விடுகின்ற சரமாரிகள் வந்து தாக்கின மாத்திரத்திலே மன முளைந்து நைந் துருகி யிளைத்துக் களைத்த வமரக்கூட்டங்கள் கலங்கும்போ தட்டதிக்குப்

பாலகர் நான்கு திக்கினும் பிரிந்து தத்தங் காண்டீபங்களை வளைத்து நாணேற்றி வில்லைக் குணத்தொனி செய்து பிரசண்ட மாருதக் கணைக ளனந்தமும் வடவாமுகாக்கினி சிலீமுகங்க ளனந்தமும் கொல்லுந் தன்மையிலே குரூரமாகிய தர்மராசன் பகழிகள் வெகு விதமாகவும் வில்லினிற் பூட்டி யெய் தந்த வசுரப் பிரமுகாளையெல்லா நொறுக்கித் தேவர்க ளிடுக்கத்தைத் தீர்த்தார்க ளென்றவாறு. 11

444. பூமி தன்னினொ ளித்திடும் புங்கவர்
காணிற் றேரைக்க ரங்களிற் கட்டியே
நாணி லாதவர் தம்மைந லிந்திடிற்
காணி யாகிய வென்றிக லக்குமால்.

எ - து :—அசுரக் கூட்டங்களைப் பார்த்துக் காலநேமி யென்னும் ராச சூடாமணியானவன் சொல்கின்ற னதென் னென்றால் நமது சுற்றத்தாரே நீங்கள் பூமி குளிராநின்ற பெருங் குழியிலே உங்கள் சரீரத்தை மறைவு செய் தாகாசத்திலே கையை நீட்டித் தேவாதிகளுடைய தேர்ப்பந்திகளை யிரண்டு கைகளினாலேயுந் தேரசையாமல் வளைத் திறுக்கிப் பிடித்தால் கற்போ லசையாத வப்போது லச்சையில்லாத தேவ கூட்டங்க ளலிவு பட்டுக் கலங்கி மயங்கித் தியங்கிப் போவார்கள் நமது காணியாகிய வென்றி யானது நம்மைக் கலந்து பிரபலிக்கப்பண்ணு மந்தக் காரியத்தைத் தொடங்கிச் செய்யக்கடவீர்க ளென்று கட்டளையிட்டான் காலநேமி யென்றவாறு. 12

445. என்று காலநே மிப்பெய ரேந்தல்தா
னன்று சொல்லசு ரேசர ரும்படை
குன்ற வில்லதோர் பூமிகு றுகியே
வென்றி யாங்கரம் வானின்வி ளங்கவே.

எ - து :—இந்தப் பிரகாரம் காலநேமியாகிய வசுர சூடாமணியானவன் கூறிய வண்ணத்திற் கிசைந்து வசுர கண்டீரவமாகிய பேரெல்லா மனேக விசாலமா யாழ முள்ளதாகிய குழிகளை யவரவர் சரீரத்திற் கேற்றதா யமைக்கத் தகுதியான வாழ மமைத்து வைத்தார்க ளந்தந்தக் குழியிடங்க டோறு மறைந்திருந்த வசுரக் கூட்டங்க ளாசானுபாகுவாகிய கைகளை யாகாசத்தி னீட்டி விளங்கிடச் செய்தார்க ளென்றவாறு. 13

446. அமரர் தேரைவ ளைத்தங்கை தன்னினாற்
கமரின் வீழ்ந்தக டம்புதைத் தன்னவே
விமல மாகிய தேரசை யாவித
மமர்செய் தனர ரங்கவை பற்றினர்.

எ - து:—தேவர்களுடைய தேர் பந்தி சமூகத்தை யெல்லா மாகாயத்தி னிறைந்த கைகளினலே வளைத் திறுக்கி யசையாமற் பந்தித் தார்க ளதனலே தேவாதிகள் தேர்ப்பந்தி சமூகங்களெல்லாம் நின்று போச்சு தடுதெப்படியென்றல் கமரிலே கவிழ்க்கப்பட்ட குடமாகியது புதைந்து போனதுபோ லசைவற்று நின்ற ததனலே சமர்புரிதற்கு மன வெழுச்சி யில்லாதவர்களாய்த் தேவாதிகள் மயங்கினர்க ளென்றவாறு. 14

447. தேர்செ லுத்திடு பாகர்கள் தேர்ந்திது
யார வாரத் தசுரர்தம் மாய்கையாம்
போரி தென்னப்பு யபல வீரர்க்குச்
சீரி தாய்ச்செப்பத் தேர்ந்தனர் திக்கினேர்.

எ - து:—தேரை வாயுவேக மனேவேகமாய் நடாத்துகின்ற சாரதிக ளானவர்கள் ரதத்தைத் திருப்புந்தோறுந் திரும்பாமையாற் றிகைத்தன வரலாற்று முறைமையை யெண்ணி மதித் தூகித்துப் பார்க்குந்தோறு மாரவாரத்தையுடைய வசுரர் செய்த மாய்கையினலே யிந்த ரத மழுந்தி யிருப்பதென்று தெளிந்தவர்களாய்த் தங்கள் தங்கள் தலைவர்களைப் பார்த்துக் கூறுகின்றர் ராக்ஷத மாய்கையினலே பூமியிலே குழி பறித்து வதின் மறைந்திருந்து கைகளினலே தேர்ப்பந்தி யசையாம லிறுக்கிப் பிடித்த காரணத்தினலே யிந்தத் தீங்கு வந்த தென்று சொல்லக் கேட்டார்கள் திக்குப்பாலக ரென்றவாறு. 15

448. இரதம் விட்டுக்கு தித்தபின் னிந்திரன்
சரத மாகிய வங்கிபின் சார்ந்துளோர்
கரத லங்களின் வாள்கள்க ணிச்சிகள்
முரணு றும்வச்ர மேமுதல் தாங்கினர்.

எ - து:—இந்தப் பிரகார மவர்கள் சாரதிக ளவரவர் தலைவர்கட் கசுரர் செய்த மாய்கைத் திறமெல்லா மறிவிக்க வறிந்த மாத்திரத்தி னந்தந்தத் தேர்ப்பந்திகளை விட்டுப் புலிப்போத்துபோற் சிலர் குதித்தார்க ளிடபத்தைப்போல் சிலர் பாய்ந்தார்கள் சிங்கம்போல் சிலர் சீறினர்கள் சரபப் பக்ஷிபோல் சிலர் கொதித்தார்க ளிப்படிப்பட்டவர்கள் வாளை விதிர்த்துங் கண்டகோடாலியைத் தாங்கியும் வச்சிராயுதம் முதலாகியதைச் சுழற்றியு மிந்தப் பிரகாரஞ் சமர்க் களத்திற் சாரி திரிந்து யுத்தஞ்செய்யத் தொடங்கினர்க ளென்றவாறு. 16

449. சாரி வந்து வசுரர்தந் தானைமேல்
போரி யற்றிப்பு யங்கள்சி ரங்களை
வேர றும்படி வீசினர் மந்திரர்
பாரி னேர்களைப் பாசத்திற் கட்டினர்.

எ - து :—இந்திர னக்கினி யமன் நிருதி வருணன் வாயு குபேர னீசானிய னென்கின்ற வட்டதிக்குப் பாலகரானவர்கள் முன்னடி வைத்துப் பின்னடி வாங்கி மண்டலாகாரமாய்ச் சுழன்று சாரிகை திரிந்து வசுரருடைய சேனைகள்மேற் போர் புரிந்து புயங்களைக் கண்ட துண்டப்படுத்தியுஞ் சிரங்களை வெட்டியும் மார்பகத்தைத் துளைத்தும் விலாக்களை நொறுக்கியு மிந்தப் பிரகார மசுரக் கூட்டங்கள் தூளி படல மாகக் கோரத் தொழிலால் போர் புரிந்தார்க ளந்த வார வாரத்தைப் பார்த்த வசுர மந்திரிகளானவ ரதிக கோபம் பிறந்து திக்குப் பாலகரை வந்து வளைத்துக்கொண்டு சர்ப்பக் கணையாகிய நாகபாசத்தி னலவர் புயங்களை யிறுகக் கட்டினார்க ளென்றவாறு. 17

450. உரக பாசமு யர்புயங் கட்டவே
தரையிற் சாய்ந்தனர் தானவன் மந்திரர்
பிரம னார்படை விட்டிடப் பின்பவர்
முரண்டொ லைத்துயி ருண்டுமு டுகிற்றால்.

எ - து :—காலநேமியின் மந்திரிமார்கள் திக்குப்பாலகர்களைச் சர்ப்பக் கணைகளாற் புயங்களை இறுகக் கட்டின மாத்திரத்திலே மூர்ச்சை யடைந்தவர்களா யலையு மார்க்கமில்லாமல் சாய்ந்தார்க ளந்தக் காலங் குறித்திருந்து பார்த்த சயசாலிகளாகிய மந்திரிகளானவர்கள் தயவில்லாத குரூர குணங்களாற் பாவத்துக் கஞ்சாமல் பிரம்மாஸ்திரத்தை விட் டாரவாரித்தார்க ளந்தக் கணையானது தேவ ரமுத மருந்திய வலியைத் தொலைத் தவர்க ளுயிரை யுணவாக வுண்டு மந்திரியர் கையின் மீட்டும் போய்ச் சேர்ந்தது பிரம்மாஸ்திர மென்றவாறு. 18

451. அந்த வேலைய சுரர்தங் காவலன்
சிந்தை யின்மகிழ் கொண்டுசி றந்துளான்
முந்து பேரிகை சங்கமு ழக்கவே
வந்து தோன்றிம கிழ்சிறந் தானரோ.

எ - து :—அப்படித் தேவ கூட்டங்களானவ ருயிர் நீங்கிய பிரேதம் போல் சமர்க்களத்திலே வீழ்ந்திருக்கின்றதை யசுரக்கூட்டங்களுக் கெல்லா மகுட சூடாமணியாகிய காலநேமியானவன் வந்து பார்த்தா னதன் பின்பு மனம் பூரித்துச் சந்தோஷ சாகரத்தில் குளித்தவனாய்ப் பேரிகை முதலாகிய தோற்கருவி துளைக்கருவி கஞ்சக்கருவி நரப்புக்கருவி மிடற்றுக் கருவி முதலாகிய பஞ்சநாதங்களுந் தொனி செய்யத்தக்கதாய் மகிழ்சிறந்து களிப்பாகிய சுபகர மங்களாகர சுந்தரமாய் முகம் விளங்கத் தக்கதாய் விர்த்தி யடைந்தா னென்றவாறு. 19

இந்திர னமர் புரிந்த வத்தியாயம் முற்றிற்று.

## இருபத்தேழாவது: அரங்கநாயகர் மந்திரத் தலைவர் யுத்த வத்தியாயம்

452. சிந்தை யிற்களி கொண்டனன் சீர்பெறு
விந்தை யாகிய கோலவெற் பெய்தியே
சுந்த ரச்சசி போகத்தைத் துய்த்திட
மந்தி ரத்தவர் தம்முடன் வந்துளான்.

எ - து :—இந்தப் பிரகாரமாகிய சுபகர சுந்தர வின்பமாய்ப் பொலிவு பெற்ற காலநேமி யென்னு மதிவீர சத்திர பதியானவ னனேக வைபவ சுகுண மங்களாகாரமாகிய சஞ்சீவிகிரியென்று சொல்லப்பட்ட மலையடிவாரத்திலே மந்திரி சமூகங்கள் மகாமேருகிரியை யட்ட குலாசலங்கள் சூழ்ந்தா லெப்படியோ வப்படிச் சூழ்ந்துவரத்தக்கதாய் வந்து சேர்ந்து அதிக சுந்தர சரச சல்லாப விநோதமாகிய வரம்பை யூர்வசி திலோத்தமை முதலாகிய மடந்தையர்க ளழகெல்லா மொரு வடிவாய் வந்துதித்த விந்திராணியினுடைய சரச சல்லாப விநோத சாம்ராஜ்ய விபவமாகிய போகத்தை யனுபவிக்க நினைந்து வருகின்றா னென்றவாறு. 1

453. இந்த வாசகங் கண்டங்கி யற்பெறு
சுந்த ரக்கனு மப்பெயர்த் தோன்றலு
மந்த ரஞ்சிற கைக்கொடு மாநில
முந்திற் றென்னமு டுகின னென்பவே.

எ - து :—தேவ கூட்டங்க ளிறந்தார்க ளென்று காலநேமி யென்னு மசுரபிரா னிந்திராணியினுடைய காம வின்பமாகிய சரச சல்லாப வின்பத்தை விரும்பிச் சஞ்சீவிகிரி யடிவாரத்திற் றளதந்திரத்துடன் வளைந்துநின்ற வைபவங்களை யெல்லாங் கண்ணுற்று ரதி பராக்கிரம வீரிய காம்பீரிய முதலாகிய நற்குண நற்செய்கையையுடைய கருட பகவானுனவ ரதிவேகமாய் மந்தர கிரியானது சிறகடியைக்கொண் டாகாயத்திற் பறந்துவந்தா லெத்தன்மைத்தோ வத்தன்மைத்தாகிய விவ் வுலகத்தின்கண்ணே யதிக விரைவாய் வந்துசேரத் தொடங்கினு ரென்றவாறு. 2

454. சிறையிற் றோன்றுபெ ருவளிச் சீற்றத்தான்
முறைபி றழத்தி சைக்கடன் முற்றுமே
யறைய ரம்பைக்கு மலின ளிந்திடு
நறைய லங்கனற் றிக்கினு நண்ணுமால்.

எ - து :—அந்தக் கருட பகவானனவர் மகாமேருவைப் போன்ற காத்திர ரூபமாய்ச் சிறகடியாகிய பிரசண்ட மாருதப் பெருங் காற்றின் வலியால் திசைகள் கடல்கள் மகாமேரு முதலாகிய வட்ட குலாசல கிரிகண் முறைபிறழ்ந்து போகத்தக்கதாயும் யாவராலும் விரும்பாநின்ற வரம்பையர்க ளளகபாரத்திலே யணியணியாய்த் தரிக்காநின்ற மந்தார பாரிசாத வரிசந்தன மலர்மாலையானது காற்றினு லெழு திக்குகளிலேயுஞ் சுழன்ற வேகமான கருடபகவான் சீற்றத்தா லென்றவாறு. 3

455. மலையை மூன்றுவ லஞ்செய்து வந்தடி
பரவிச் சென்றங்க ரங்கனைப் பார்த்துளான்
கரவி லாதபே ரன்பைச்செ லுத்தியே
உரவு நீர்க்கட லோங்குமு யற்சியான்.

எ - து :—அந்தக் கருட பகவானனவ ரந்த வனந்த வியோன சேகரராய் யோகநித்திரை செய்கின்ற வரங்கநாயகன்றனது காருண்ய விசேடத்தைக் குறித்து வந்த சஞ்சீவி கிரியை மூன்று வலஞ் செய்து வணங்கி யவ ரருளைப் பெற்றுப் பரப்பிரமமாய் விளங்காநின்ற வவருடைய பாததாமரையைக் கண்டு வணங்கினு ரவ ரெத்தன்மையை ரென்று லெப்பொழுதுந் திருவடித் தாமரையினை நீங்காத மெய்ப் பத்தியைச் செலுத்துகின்ற காரணத்தாற் குணக்குன்று மெனக் கடல்சூழ்ந்த உலகத்தா ரேத்துகின்ற முயற்சியையுடைய கருடபகவானென்றவாறு. 4

456. கால நேமிக்க டியவன் றன்படை
யால காலத்தாற் றேவர யர்ந்தனர்
மூல நோக்கிய சுரமு தல்வன்ருன்
சால வுஞ்சசி தன்னைய டையவே.

எ - து :—காலநேமி யென்னு மசுரனுனவ னிந்திரன் முதலாகிய தேவ கூட்டங்களை யெல்லா மடித்து மிகுந்த சந்தோஷத்தினலே சசிதேவியி னுடைய காமபோகத்தை யிச்சித்தவனு யாலகால விஷம்போ லதிக வேகமாய் ரத கச துரக பதாதிகளுடனே கோலாசலத்தை நோக்கி வருகின்ருனகிலும் தேவரீ ரறியாத காரியங்களுமுண்டோ கிருபைசெய்து தேவர்களை ரக்ஷிக்கவேணு மென்ருர் கருடபகவா னென்றவாறு. 5

457. தாரு கப்பெயர் சார்ந்திடு தாழ்விலாத்
தேர்செ லுத்தும்வ லவன்சென் றெய்திட
நீர மைக்குதி ரென்றநு நேரிலான்
போர்கு றித்தவன் றன்னைப்பு குவென்ருன்.

எ - து :—இவ்விதமாய்க் கருடபகவானானவர் விண்ணப்பஞ் செய்ய வருளிச்செய்கின்றார் நமது ரத சாரதியாகிய தாருகனை யதி துரிதமாய் யழைக்கக் கடவீ ரென் றருக்யாபித்தருள வந்த க்ஷணமே பரமபதத்தின் வசியாநின்ற தாருகனிடத்துக் கெழுந்தருளிக் கூறுகின்றார் வாராய் தாருகனே காலநேமி யுத்தத்தைக் குறித் திரதத்தை யதி துரிதமாய்க் கொண்டு வரும்படி யாக்கியாபித்தருளினார் ஸ்ரீ அரங்கநாதரென்று கூற வந்த க்ஷணத்திலே யிரதத்தை நடாத்திக்கொண்டு வதிக வேகத்துடனே வருகின்றா னென்றவாறு. 6

458. சஞ்சீவி கிரிகோல மால்வரையாய் மேலோர்கள்
சாற்று நாம
மெஞ்சலிலா வரையுச்சி மீதிவரத் தேர்செலுத்தி
யெய்தா நின்றான்
கஞ்சமல ரவன்றானும் படைப்பரிய விரதத்தின்
கவினைச் செப்பத்
தஞ்சமென வடியாருக் கருள்புரியு மனந்தனே
சாற்றுந் தானே.

எ - து :—இந்தப் பிரகாரங் கருடபகவா னுத்திரத்தாற் பரமபத வாசியாகிய நாராயண மூர்த்தியினுடைய சாரதியாகிய தாருகனானவன் தேரை வாயுவேக மனோவேகமாய் நடாத்திக்கொண்டு கோலாசல மென்கின்ற சஞ்சீவி கிரியி னுச்சியிலே நிறுத்தினான் றாமரைக் கமலத்தி னிருக்கின்ற மேலவனுஞ் சிருஷ்டிக்கிறதற் கருமையான தேரின் சிங்கார வளப்பத்தை யாவரால் சொல்லலாமென்றால் வியாகரண உரை நூலாசிரியனாகி யடியாருக் காதரவா யருட்கண் பார்வையா லனுக்கிரகிக்கா நின்ற சேடசாயி யொருவன் கூறத்தகு மென்றவாறு. 7

459. ஞானமெலாம் பொதிந்திடுமோர் கனககும்பஞ் சிகரத்தின்
மருவா நிற்கு
மோனியர்க ளறிவெல்லாந் தவளசத்ரப் பெயர்குடையாய்
முடியி னின்ற
தேனனைய வேதாந்தங் குத்துக்கால் நால்வேதந்
திகழும் வாயில்
மானமுறு முச்சுவத்தின் வருக்கமெலாங் கந்துகத்தின்
வடிவ தாக.

எ - து :—சவிகற்ப நிர்விகற்பமாகிய இருவித ஞானமிர்தம் பூரித் தாயிரத்தெட்டு மாற்றாகிய வபரஞ்சிப்பொன் கனக கும்பமானது சிகர உச்சியிலே பிரகாசிக்கவு மவுன மோன சின்மய பராபர வறிவெல்லா மதற்கு மேலாகிய தவள சத்திரக் குடையாய் நிழலைப் பரப்பவு முபநிடத முப்பத்திரண்டுங் குத்துக்காலாக விளங்கவும் நான்கு வேதமு நான்கு வாயிலாகவுந் திருப்பாற் கடலிலே பிறந்த வுச்சுவச்சுரவ வருக்கங்கள் குதிரைப் பந்தியாகவும் விளங்கிற் றந்தத் தெய்வீகத் தே ரென்றவாறு. 8

460. நவரத்ன சோபான் நான்கிரட்டி கபாடங்க்

ணலத்த பொன்று

னுவமையிலா வச்சிரத்தாற் பாவுபல கையின்பரப்பங்

குயர்ந்து தோன்றப்

புவனமதித் திடுநான்கு பிரிவாய மாணிக்கம்

புரியுஞ் சட்டந்

தவமிகுத்த சிறுகொடிகள் சாதாங்கந் தரளசல்லி

தழைத்தங் கோங்கும்.

எ - து :—அந்த ரதமானது நவரத்தின மயமாகிய படித்துறையுஞ் சொர்ணமாகிய வெட்டுக் கபாடமு மொப்பற்ற பொன்னொடு வச்சிர மணிகளினாலே பாவு பலகையின் பரப்பானது உயர்ந்த சொர்க்க லோக பரியந்த மிகுந்த உன்னதத்துடனே தோன்றிப் பிரகாசிக்கவுந் திரிபுவனங்களு மதிக்காநின்ற நான்கு சாதியாயுள்ள மாணிக்க மணியானது சட்டமாய்ப் பிரகாசிக்கவுந் தவத்தி னுயர்ந்த சிறுகொடிக் கூட்டந் தேர்முகப் பிரதேசத்தி னின்று பிரகாசிக்கவு மாணி முத்தினங்களா லான சல்லி ச்வரிக ளிடை யிடைகளிலே விளங்கிப் பிரகாசிக்கு மென்றவாறு. 9

461. தருமசாத் திரக்கொடுங்கை புராணமுபம் பரப்பாகத்

தழைத்தங் கோங்கு

மருவுமுனி வரரிசைத்த மிருதிசங்கி தைபதுமை

மாட்சி யாகத்

திருமருவு சட்வங்கம் நிலைக்கண்ணா டியைப்போலத்

திகழா நிற்கும்

பொருவரிய தேர்ச்சீலை வேதாந்த சித்தாந்தப்

பொலிவாய்த் தோன்றும்.

எ - து :—அந்த ரதமான தெப்படிப் பிரகாசித்த தென்றால் வாசிட்ட மாரிட முதலாகிய பதினெண் டரும சாத்திரமுங் கொடுங்கைகளாகவும் பதினெண்புராண முபபுராணம் பதினெட்டும் தேர்ப் பரப்பாகத் தோன்றவு

மிவ் வுலகில் வாசம் செய்கின்ற முனிவர் கூட்டந் திருவாய் மலர்ந்தருளிய மிருதிகளுஞ் சங்கிதைகளும் பிரபையாக விளங்கித் தோன்றவு ஞான விலக்குமி மனோகரம் பொருந்திய வாறு சாத்திரமாகிய நியாயநூல் முதலாகியது நிலைக்கண்ணாடியா யிருந்து ரஞ்சிக்கவு மொப்பற்ற தேர்ச் சீலையானது வேதாந்த சித்தாந்த சமரசமாய்ப் பிரகாசித்த தந்தத் திருத்தே ரென்றவாறு. 10

462. வியாதசூத் திரந்திரண்ட பீடத்தி னுருவாகி
விளைவாய் நிற்பத்
தயாபரனா ரருளான புறச்சமயத் தந்திரங்க
டாழ்வி லாத
நியாயமுறு முருளைகளா யச்சாணி பிரணவமாய்
நிகழா நிற்கு
முபாயமுரு மிரதத்தைத் தாருகன்றான் சஞ்சீவி
மலையி னுய்த்தான்.

எ - து :—பின்னையு மந்த ரதமான தெப்படி விளங்கிப் பிரகாசித்த தென்றால் வியாத சூத்திர ரூபமாகிய பூர்வ மீமாம்ஸை யுத்தர மீமாம்ஸை யாகிய விரண்டுந் திருத் தேர் நடுப்பிரதேசத்தின் விளங்காநின்ற திரண்ட பீடத்தினது உருவாகிய விளைவாய்த் தோன்றவுந் தயாபரனாகிய வரங்க நாயக ரனுக்கிரகத்தாற் றிருவாய்மலர்ந்தருளிய புறச்சமய வாகமங்க ளெல்லா மந்த ரதத்திற் பூண்ட வுருளைகளாகிய தேர் வண்டில்களாகவு மச்சாணியானது பிரணவ சொரூப மயமாய்ப் பிரகாசிக்கவு மிப்படி யாகிய சர்வ மங்களாகார புஞ்சமாகிய விரதத்தை வாயுவேக மனோ வேகமாய் நடாத்திச் சஞ்சீவி மலையி னுச்சியி னிறுத்தினான் தாருக னென்றவாறு. 11

463. கருடனார் துசபடமா யமர்ந்தருளிக் களித்தனனார்
கமலக் கண்ணன்
றிருமருவு மவுலிபட்டங் குண்டலங்கள் மணிக்கவசந்
திகழப் பூட்டிக்
குருதிகணை சார்ங்கபுட்டி லவைதாங்கி வீரகண்டை
குலவித் தோன்றப்
பெருகுதிரு விரதத்தி னேறினான் படகவிசை
பெருக வன்றே.

எ - து :—அப்படியாகத் தாருகனனவன் மனோவேகமாய் நடத்தி வந்த விரதத்தினது கருட பகவானனவர் துசபடமாகிய கொடியாய்த் திருத்தேரின்பேரில் வீற்றிருந் தருளினு ரப்பொழுது செந்தாமரைக் கண்ணனாகிய வனந்த கல்யாண குண விபூதி விக்ரக விசேடரான வரங்கநாயகர் திருமுடியினது நவரத்தின கசிதமாகிய மவுலியிணைப் புனைந்து மிரண்டு திருச்செவிகளிலே குண்டலங்களைப் புனைந்து மணி மார்பிலே வச்சிர கவசத்தைப் பூண்டு மரையிலே பீதாம்பர வுடை யணிந்து முதுகினி லம்பருத்தூணி பிரகாசிக்கத்தக்கதாய்ச் சார்ங்க மாகிய வில்லைக் கராம்புய மலரிற் றாங்கியும் பாதத்தின் வீரகண்டா மணி விளங்க வெழுந்தருளினு ரந்தத் திருத்தே ரிரதத்தின் சிம்மா சனத்தி னப்பொழுது படக வாத்திய முதலாகிய தோற்கருவி துளைக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவி நரப்புக்கருவியாகிய பஞ்ச நாதத் தொனிகளு முழங்கிற் றென்றவாறு. 12

464\. மந்தார மலர்மாரி வானவர்கள் சிந்தினர்கள்
மகிழ்ந்து கூடிச்
சிந்தாத விரசின்ன முழக்கினர்கள் வளையொலித்தார்
செயசெ யென்றே
கொந்தாரு மலர்ச்சோலைக் கோலமால் வரையதனைக்
குறுகிச் சேர்ந்து
பைந்தாது கமழ்மலரா லருச்சித்தா ரரங்கனது
கமல பாதம்.

எ - து :—அப்படி யரங்க நாயகராகிய பரவாசுதேவரானவர் திருத்தேரி னுரோகணிதமான மாத்திரத்தில் சந்தனம் அரிசந்தனம் மந்தார பாரிசாதங் கற்பக விருட்ச மென்கின்ற பஞ்சதாருவினுடைய மலர்களைப் புஷ்ப வருஷமாய் வருஷித்தார்கள் தேவதுந்துமி முழக்கினர்க ளதுவு மன்றியும் வலம்புரி யிடம்புரி சலஞ்சல முதலாகிய சங்கநாதத்தொனி செய்தார்கள் செயசெய வென்று தோத்திரித்தார்கள் பின்னையு மந்தக் கமலம்போன்ற திவ்விய திருவடிகளிலே யனந்தமான ரிஷிக் கூட்டங்களானவர்கள் மலர்த் தொகுதிகளா லருச்சித்தார்க ளென்றவாறு. 13

465\. அவர்கள்பெயர் செப்பிடுவாம் வசிட்டன்வான் மீகியுட
னுபத் தம்ப
னுவமையிலாப் பரத்வாசன் வாமதே வன்றெளியார்
கவுட பாதன்
தவமிகுத்த சனகமுனி கவுதமன்கண் ணுவன்பிருகு
புட்ப தந்தன்
கவலையறு மிடபசிங்கன் கலசமுனி புலத்தியனுய்க்
கருது மேலோன்.

எ-து:—அப்படியாக ஸ்ரீலட்சுமி பதியாகிய வரங்கநாயகருடைய கமலம்போன்ற திவ்விய திருவடிகளிலே யர்ச்சித்த முனிவர்க ளியாரென்றால் பக்தி யோக ஞானயோகத்தை யுணர்ந்த வல்லவராகிய வதிட்டமகா முனிவரும் விடயஞான சொரூப ஞானத்தை யுணர்ந்த வான்மீகியுஞ் சவிகற்ப நிர்விகற்பத்தை யுணர்ந்த வாபத்தம்ப விருடியுங் கேட்டல் சிந்தித்தல் தெளித னிட்டையென்னு நான்கின் றிறத்தைத் தெரிகின்ற பரத்துவாச முனிவருங் காண்பான் காண்பன காட்சியாகிய மூன்றையு மேலாலவத்தை கீழாலவத்தையாகிய விருவித வாதனையுங் களைந் தாரகபுத்தியினாற் பிரமக் கியான நிட்டாபரனாகிய வாமதேவனுஞ் சத்துச் சித் தானந்த மயமாகிய கவுடபாத விருடியு மிகுந்த தபோநிட்டராகிய ஞானவினோத சிகாமணி யான சனகமுனியுஞ் சாந்தி விசாரஞ் சந்தோடஞ் சாதுசங்கமாகிய நன்மார்க்கத்தையுடைய கவுதமருஞ் சீவகாருண்ய மீசுரபுத்தி பாச வயிராக்கிய முமுட்சுவாகிய கண்ணுவரும் ஞானயோக நிட்டாபரராகிய பிருகுவும் மர்க்கட ஞான மார்ச்சால ஞான நிறைந்த புட்பதந்தனும் பிறவித் துன்பம் நீங்கிப் பரமவின்ப வைபவ தெரிசனத்தையுடைய இடப சிங்கனும் வடமொழி தென்மொழியாகிய கடலைக் கடைந்து நிச்சயித்த பொருளாகிய வமுதத்தைத் திரட்டிக் கரையில் வைப்பவராகிய வகத்தி யரும் திவ்விய தேசோமயமாகிய பிரம்மபாவனை கூடினவராகிய புலத்திய ரென்னு மகாமுனிவரு மென்றவாறு. 14

466. நாரதனார் செமதக்கினி மார்க்கண்டன் றுருவாச
னயசாண் டில்யன்
கிரகலாச் சகடாயன் கனுசிமுனி சனந்தனன்பின்
மயத்தி ரேனுங்கும்
பேர்பெரிய சனற்குமார் சதானந்தன் குர்ச்சகன்பேர்
பூண்ட மேலா
வீர்மைமிக முராங்கிரன் காசிபனு மிடவினைற்
றவவி யாதன்.

எ-து:—பின்னும் வந் தருச்சித்த முனிவ ரியா ரென்று லிசைநூ லிலக்கணம் வழுவாமற் சங்கீதங்கள் பாடாநின்ற நாரத முனியுந் தவம் வேள்வி யோகங்களிலே கூர்த்த வூக புத்தியையுடைய செம தக்கினியும் நித்தியத்தை யடைந்த மார்க்கண்டேயரும் பதக் கிரம சடை யாகிய முத்திறத்தினையுடைய வேதத்தில் வல்லவராகிய துருவாசரும் வேதாந்தத்தை யுணராநின்ற சாண்டிலியரு மியம நியம முதலாகிய

வட்டாங்க யோகத்தின் வல்லவராகிய சகடாய முனியு மட்டமா சித்திகளையுடைய கனுசி முனியும் நிர்விகற்ப ஞான நிட்டை கூடிய வதிகாரியாகிய சனந்தனனும் சின்மய முத்திரையினு லோங்கிய சனாதனனும் நற்குண நற்செய்கை விதியை அனுஷ்டிக்காநின்ற சதானந்தனும் மனுபவ வைபவ ஞானசாகரத்திற் படிந்த குர்ச்சகரு மப்பியாச வனுபவத்தினையுடைய வாங்கீரனுந் தேவாசுரர்களை யுண்டாக்கிய காசிபரு மகப்பற்று புறப்பற்று முதலியவற்றைக் களைந்து சொரூப ஞான தத்துவத்தை யறிகின்ற வாரிடனும் நீண்ட தவத்தையுடைய வெதிரிகாரண்ய வாசியாகிய வாதராயண ரென்னும் திருநாமதேயத்தை யுடைய வியாதர் முதலாகிய மகாரிஷிக ளெல்லா மென்றவாறு. 15

467\. காத்யாயன் குமுதன்ரோ மேசனே குமுதாக்கன்
கவுசி கப்பேர்
கீர்த்திபெறு தாக்கியனே வைசம்பா யனன்சிறந்த
பயில வன்று
ஞுத்திரிக வுடையவர்க ளருச்சனைசெய் ததன்பின்ன
ரமல மான
பாத்திரமாம் வேதவே தாந்தத்தாற் பாடினர்கள்
பயங்க டேர்ந்தே.

எ - து :—முற்கூறிய முனிவ ரல்லாமல் காத்தியாயன் குமுதன் ரோமேசன் குமுதாக்கன் கவுசிகன் வைசம்பாயனன் பயிலவன் முதலாகிய மகரிஷிக ளெல்லாந் தேவதேவோத்தமனுகிய வரங்கநாயகருடைய கமலம் போன்ற சரணாரவிந்தங்களிலே வைகானச விதியினு லருச்சித்து முப நிடத முப்பத்திரண்டினுலுந் தோத்திரித் துருகி யானந்த பரவசராய்ப் பயங்க டேர்ந்து சமரபூமியை வந்து சேர்ந்தவர்களாய் நடித்தார்க ளென்றவாறு. 16

468\. வலவநந்த தேரதனை யமர்க்களத்தின் விரைவதனின்
வண்மை யாக
நிலவியிடச் செலுத்தென்ன மனோவேக நிலைமையினு
னிறுத்தி னுனல்
பலவிதமா முனிவரெலாந் தேரதன்பின் படர்ந்தனர்கள்
பரிவா னெங்கு
மிலகுபுவி யந்தரமு மிரவியொரு கோடியென
வெழுந்தா ரன்றே.

எ - து :—ஸ்ரீஅரங்கநாயகர் தம்முடைய சாரதியாகிய தாருகனைப் பார்த் தருளிச்செய்கின்றார் வாராய் சாரதியே நமது திருத்தேரைச் சமர பூமியாகிய ரணகளத்தி னதி துரிதமாய் நடாத்துவிப்பா யென் றாக்யாபித்தா ரப்படியே யதி வேகமாய் நடத்துகின்ற சமயங்களிலே பல விதமாகிய முனிவர் கூட்டங்க ளெல்லாந் தேரின் பின்னே வேதாத்தியயனஞ் செய்துவர வகண்ட பூமண்டலங்களு மாகாயமுங் கோடி சூரிய ருதித்ததுபோல வெழுந்தருளினு ரென்றவாறு. 17

469. இரதமுறு மணிகளெலாம் கலகலவென் றிரங்கியிட
வண்டி லோதைச்
சரதமுறு கருடனுடைச் சிறகடியின் பிரசண்டக்
காற்றுத் தாக்கிப்
பரவுறுசெம் பட்டமயி ரசுரர்களைப் பாய்திரையிற்
படுத்த சங்க
திரமொலியான் மூர்ச்சித்தா ரசுரேசன் மந்திரரைத்
திகழ்ந்து கூறும்.

எ - து :—அப்படிக் கோடி சூரியப் பிரகாசமாய் வருகின்ற ரதத்திற் கட்டிய மணிகளானவை கலகல வென்று சப்திக்கவு மந்த வண்டி னுடைய ஙீங்காரத் தொனிகளுங் கருடபகவானுடைய சிறகடியாலாகிய பிரசண்ட மாருதமாகிய வாயுவேகமும் யுத்த சன்னத்தரா யிராநின்ற செம்பட்ட மயிருந் திரண்ட காலும் பிரண்ட வயிறும் சிம்மப் பல்லுகளுமுடைய வசுரக்கூட்டங்களைப் புரட்டிக்கொண்டு போய்க் கடலிலே கவிழ்த்துவிட்டுது பின்னையு மந்தப் பாஞ்சசன்னிய முழக்கத் தினாலே திரிலோகங்களுஞ் செவிடுபடத் தக்கதாக வசுரக்கூட்டங்களு மூர்ச்சை யடைந்தார்க ளந்தச் சமயத்திலே யசுர வீரனாகிய காலநேமி யென்று மகாசூரனானவன் தன்னிட மந்திரிகளாகிய சம்பராசுரன் லவணன் கும்பன் நிகும்ப னென்று சொல்கின்ற சூரரைத் திகழ்ந்து நோக்கிக் கூறு முன்னமே சேனைகளை யெல்லாம் சேர்க்கத் தொடங்கினார்க ளென்றவாறு. 18

470. அண்டரண்டப் பரப்பெல்லா மமர்ந்திடுதன் னசுரர்களை
யழைக்க வந்தார்
சண்டமா ருதம்போலும் வேகத்தார் பலவிதமாய்த்
தழைத்த மெய்யர்
கண்டதுண்டப் பெரும்படையர் மிருகமுகக் கனல்பொழியுங்
கடைக்க ணுள்ளா
ரண்டர்களை வேரறுத்துக் கைப்படிந்த வினைமையின
ரனந்த வெள்ளம்.

எ-து:—காலநேமி யென்னு மசுர பெருமா னேவலினாற் றூத ரானவ ரங்கங் கிருக்கின்ற வசுரக் கூட்டங்களுக் கறிவிக்க வந்தார்க ளண்டரண்டப் பரப்பெல்லாம் வாசம் பண்ணுகின்ற வெள்ளங்களானது சண்டமாருத வேகம் போலும் வேகத்தினை யுடையவர்களா யொற்றைக் கை யொற்றைக்கா லிரண்டு கை யிரண்டு கால் மூன்று முடி யாறு தாள் முதலாகிய பலவிதமாய்த் தழைத்த சரீரத்தை யுடையவர்கள் கண்ட துண்டஞ் செய்கின்ற பெரிய வாயுதங்களை யுடையவர்கள் மிருக முகத்தைப் பலவாகக் கொண்டு அக்கினியைக் கக்காநின்ற குரூரக் கடைக்கண் பார்வையை யுடையவர்க ளமரர் குலங்களை வேரறுத்து நன்றாய்க் கைப்படிந்த சுத்த வீரர்களாகிய வசுர வெள்ளங்களானது வனந்த கோடி யென்றவாறு. 19

471. தேர்மீதும் பரிமீதும் வாரணத்தி னம்பாரிச்
செறிவின் மீதும்
பார்மீதும் கொடிகுடைகள் படர்ந்திடவும் படகமுதற்
பந்தி யார்ப்பத்
தார்மீதும் புலவுமணங் கமழ்ந்திடவே டக்கியத்திற்
றழைத்த கூளி
யேர்திரந்த கொடிக்கணமும் புரண்டுபுரண் டிடரதத்தி
னெய்தா நின்ற.

எ-து:—அந்த வசுரப்படை வெள்ளங்களான தெப்படிப் பிரவேசித்த தென்றால் தேரின்மேல் வந்த வெள்ள மனந்தமாயுங் குதிரையின்மேல் வருகின்ற வெள்ளங்கள் பலபலவாயு நல்ல பட்ட யானைக் கழுத்திற் பிரகாசிக்காநின்ற வம்பாரி நடுப்பிரதேசத்தி னேறி யந்த யானையை நடாத்திவருபவர்க ளனந்த வெள்ளமும் பாதசாரிகளாய் வருகின்ற வசுரக்கூட்டங்க ளெண்ணிறந்தனவாய் நிறைந்து வந்த வெள்ளமுந் துசபடமாகிய கொடிகளுஞ் சத்திரமாகிய வெண்கொற்றக் குடைகளு முலகமெல்லாந் தழைத்த நிழலைப் பரப்பவும் படக முதலாகிய வாத்தியங்கள் தொனிக்கவு மந்த வசுரர் தரிக்காநின்ற மந்தாரமாலை பாரிசாத மாலை புலவுநாற்றங்க ளுறவு மிடக்கியத் தொகுதியெல்லாங் கூளிகூட்டங்களு மழகு நீங்கிய காக்கைக் கூட்டங்களும் புரண்டு புரண்டு தீய சகுனங்களைக் காட்டவு மிந்தச் சகுனங்களைக் காணுதவர்களாய்ப் பிரவேசித்தா ரசுரக் கூட்டங்க ளென்றவாறு. 20

472\. இரவியினை யூர்கோளின் வட்டங்க ளெய்தியிட
விம்பர் தன்னிற்
பரவியசோ ரியின்வாரி யந்தரத்திற் படர்ந்துநிலம்
பாய்தல் செய்யக்
குரவுகமழ் தாரசுர குலதீப வெழில்விளக்கைக்
குறுகி நின்றார்
கரவமைந்த மந்திரியர் கண்களிப்ப வெள்ளசே
னையரைக் கண்டார்.

எ - து:—அந்த வசுரர் பிரவேசிக்கும்போது காணாத துர்ச்சகுன மெல்லாங் கண்டு ஒழிவின் றிறத்தாலே மதோன்மத்தராய் வருகின்ற பேர்க்குச் சூரிய பகவானை நடுப்பிரதேசத்தி னூர்கோள்வட்டங்கள் சூழ்ந்திருக்கக் கண்டார்க ளதல்லாமலுதிர மாரியானது வானகத்தி னின்று விடைவிடாது சொரிகின்றதைக் கண்ட வசுரவெள்ளங்களான திதை யூகை செய்யாத மதோன்மத்தராய்த் தருக்குற்றுத் தங்கள் குலத்துக்கெல்லாம் ராசசூடாமணியாகிய காலநேமியென்னு மசுர பெருமானைக் கண்டு வணங்கிக் களிப்புற்றுநின்றார்க ளிப்படி வந்து வணங்கி நின்ற சேனைகளைக் கண் டளவில்லாத மகிழ் சிறந்தார்கள் மந்திரிமார்க ளென்றவாறு. 21

473\. ஆலவட்ட மேந்தினர்கள் சுருட்டியினைத் தாங்கினர்க
ளலர்ந்த மேலாம்
பாலமுதக் கிரணசமூ கத்தினிறை குடைபரப்பக்
கனன்று வந்தார்
சீலமுறு நாகசுரம் வீரசின்ன முழக்கினர்கள்
சிந்து போல
ஓலமுறு சங்கதனை யொலித்தனர்கள் பம்பையினை
யொலித்து நின்றார்.

எ - து:—அப்படி வந்து நிறைந்த வசுரக்கூட்ட வெள்ளமானவர்க ளாலவட்டங்கள் பொன்மயமான காலாகியது பிரகாசிக்கத்தக்கதா யனேகத்தை வரிசையாய்ப் பந்திபந்தியா யனேக மேந்தினார்க ளனந்த கோடி யசுரர் சுருட்டிகளைக் கையினுற் றுங்கிவந்தார்க ளனந்தகோடி யசுர கிரண சமூகங்களா லமுத மாரியைத் தூவி நிழலைப் பரப்பா நின்ற வெண்கொற்றக் குடையினை யனேகமாய்த் தாங்கி வந்தார்க

ளப்படித் தாங்குகின்ற தவள சத்திரக் குடையினது நிழலிலே யிருந்த போதுங் கோபாக்கினியானது வெப்பத்தைக் காட்டத்தக்கதா யனேகம் படை சூழ்ந்து வந்தார்கள் சிறப்பாகிய நாகசுரம் வீரசின்ன முதலானது முழக்கினார்கள் வலம்புரி முதலாகிய சங்கத் தொனி செய்தார்கள் பம்பை முழக்கிநின்றார்க ளென்றவாறு. 22

474. சிரமனந்தங் கையனந்தங் காலனந்தஞ் சிறந்தனர்கள்
தீங்கின் மேலோர்
வரமுறுமத் திரமேந்தி வில்லினையே வணக்கிநின்று
வன்மை யான
உரமதனின் வச்சிரத்தா வியற்றுகின்ற கவசத்தை
யுண்மை யாகத்
திரமதனிற் றரித்தனர்க டும்பைமா லையைமுடியிற்
றுளக்கி நின்றார்.

எ - து:—அனந்த கோடி வசுர வெள்ளங்களானவர்கள் தலைக ளனந்தம் பேதங்களாயுந் தீங்கெல்லாம் திரண்ட வடிவினராயு நல்ல வரங்களைப் பெற்ற தெய்வப் படைகளிலே சிறந்த கணைகளைத் தாங்கினவர்களாயும் வலியையுடைய காண்டீபத்தை வளைத்துக் கையிலே பிடித்தவர்களாயும் வன்மை சிறந்த மார்பகத்தின் வச்சிரகவசம் புனைந்து சிரசிற் றாங்கிய மவுலியில் தும்பை மாலையை யணிந்துஞ் செய நினைந்த வசுரக் கூட்டங்கள் சமர்க் களத்தைக் குறித்து வந்தார்க ளென்றவாறு. 23

475. சூலமதைத் தாங்கினர்கள் வேலினையே யெடுத்தனர்க
டுய தண்ட
மாலமுறு சக்கரத்தைத் தரித்தனர்கள் கழுமுள்ளா
யுதம்வி ளங்கப்
பாலதனிற் பிடித்தனர்கள் கண்டகோ டாலியினைப்
பரிந்தெ டுத்தார்
கோலமுறு நாந்தகத்தைக் கூற்றம்போல் விதித்தனர்கள்
குறைவி லாதார்.

எ - து :—அப்படியாக வந்த யூகத்தலைவ ரணித்தலைவர் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் முதலாகிய வசுரக் கூட்டங்களானவர்கள் சூலத்தைக் கையிற் றாங்கிவந்தார்கள் பலபேர்கள் வேலினைத் தாங்கி வந்தார்க ளனேகம்பேர்கள் பெரிய தண்டத்தைக் கையிலே தாங்கிவந்தார்கள் கோடானு கோடியர்கள் விடங்களைக் கக்காநின்ற சக்கராயுதத்தைத் தாங்கிவந்தார்க ளனந்தம்பேர்கள் கழுமுள் ளாயுதத்தை யெடுத்து வந்தார்கள் சிலபேர்கள் கண்டகோடாலியினை யனந்தம்பேர் தாங்கி வந்தார்கள் நாந்தகமாகிய வாளை யுருவிப் பிடித் தெமனைப் போலச் சாரிகை திரிந்து சென்றார்க ளசுர வெள்ளங்க ளென்றவாறு. 24

476. அரக்கவெள்ளப் பரப்பதனை யமர்ந்திடுகண் ணானோக்கி
யதிச யித்து
விரக்கமிலா திவரையெலா மோர்கணத்திற் றொலைப்பலென
வெண்ணித் தேர்ந்து
பரத்திடுமோர் தேரதனை யவர்க்கெதிரே தாருகனும்
பயிலச் செய்தான்
றரக்கெனவே சரம்பொழியச் சார்ங்கவில்லை வளைத்தனன்வண்
சங்க மார்த்தான்.

எ - து :—இந்தப் பிரகார மந்த வசுர சேனைகளை யெல்லாந் தாருகனாலே திருப்பிச் சக்கராகாரமாய் நடத்தாநின்ற தேரினேறி யாரோகணிதமான வரங்கநாயகர் குலாலன் றிகிரியைப்போலச் சக்கராகாரமாய்ச் சூழ்ந்து வந்து பாததாமரைக் கண்ணனானவ ரதிசயப்பட்டு இரக்கமில்லாத விந்த வசுரக்கூட்டங்களை யெல்லா மொரு நிமிடத்தி னதம் பண்ணுகின்றே னென்று சபதஞ் செய் தந்தத் தேரை யசுர வெள்ள நடுப் பிரதேசத்திலே நிறுத்தக் கட்டளையிட்டா ரவ்வண்ணமாய்ச் சாரதி நிறுத்தின னவர்களைப் பார்த்த மாத்திரத்திலே மான் கூட்டங்களைக் கண்ட வேங்கைப் புலியைப்போலச் சீறிச் சார்ங்கமாகிய வில்லை வளைத்துப் பாஞ்சசன்னியத்தைப் பவழ வாயின் வைத்தொலித்தா ரரங்கநாயக ரென்றவாறு. 25

477. சிலையினொலித் திடுமணியி னொலிகளுமச் சங்கத்திற்
சிறந்த வோதை
வலியதினு மசுரகுல வெள்ளங்கள் மிகவயர்ந்து
வன்மை குன்றிப்
பொலிவகன்ற மான்கூட்டம் புலிதாக்கிப் பொற்பழிந்த
பொலிவ தென்ன
நிலையழிந்தார் சிலபேர்க ளர்த்தரதர் முதலோர்க
ணெருங்கி வந்தார்.

எ - து :—அரங்கநாயகனுடைய சார்ங்க வில்லி னொலிக்காநின்ற கண்டாமணியினது இடி முழக்கம் போன்ற சப்தமும் பாஞ்சசன்னிய மானது அண்டகோளகை யெல்லாம் வெடிபட்டுப் போகத்தக்கதாக முழங்காநின்ற பெரிய வோசையினாலேயு மசுர கூட்ட வெள்ளங்க ளெல்லாம் கலங்கித் தயங்கி மயங்கிப் பொலிவு நீங்கிய மான் கூட்டங்களானது புலியானது தாக்சுத் தங்கள் வலியான தழிந்தா லெப்படியோ வப்படிப்போல வவர்க ளணிவகுத்த வணியும் யூகங்களும் நிலைதளர்ந்து நின்றார்க ளதை யறிந்த வர்த்தரதர் முதலாகிய பேர்கள் சீறிக் கண்களின் நெருப்புப் பொறி பரக்கத்தக்கதாய்க் கோபித்து வந்து வளைந்துகொண்டார்க ளென்றவாறு. 26

478. காண்டீபம் வளைத்தனர்கள் சங்கவொலி காட்டினர்கள்
கருதி நின்று
தூண்டியிடு பகழியையோர் தொடையதற்குக் கோடியதாய்த்
தொடுத்து நின்று
ராண்டவனுஞ் சரமழையை யறுத்தவர்க ளிரதத்தை
யழித்து நின்று
மீண்டகளந் தனிநின்று நெடும்போதுங் கோபித்தார்
நெறியி லாதார்.

எ - து :—அப்படி யசுரக் கூட்டங்க ளெல்லா மரங்க நாயகர் வில்லினாலுந் தேரிற் கட்டிய கண்டாமணியினது சத்தத்தாலும் பாஞ்ச சன்னிய முழக்கத்தினாலு மூர்ச்சித்ததைக் கண் டெதிர்த்து வந்த வர்த்தரதர் முதலாகிய பேர்கள் தங்கள் தங்கள் காண்டீபத்தை வளைத்தார்கள் சங்கத்தொனி செய்தார்கள் சரோவேக சரோவேகமா யெய்யாநின்ற கணைகளை யோர் தொடைக்குக் கோடிகோடியாய் விடுத் தார்ப்பரித்தார்க ளிப்படி விடப்பட்ட வசுரக் கூட்டங்களுடைய சரமாரிகளை யெல்லா மறுத்துத் தள்ளி யவரேறி நடாத்தாநின்ற சேமத் தேர்ப்பந்திகள் அழிந்தது எண்ணிக்கை யில்லாததைக் கண்ட பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் நிவாதகவச காலகேயர்க ளதிரதர் முதலாகிய பேர்களுஞ் செய்யுங் காரியந் தவிருங் காரியந் தெரியாதவர் களாய் நெடும்போ தெல்லாம் புகைத் தாலோசித்தார்க ளென்றவாறு. 27

479. அவரவர்க டத்தங்தே ரேறிஞர் மவுலிபுட்டி
லழக தான
திவியமுறு கவசத்தைத் தாங்கிஞர் கோலவிலேத்
திடமாய்த் தாங்கி
யுவமையிலா வழற்படைகள் கால்கணைகள் வச்ரவம்பு
வுலேப்பி லாமல்
கவிகைசத்ரக் குடையினேயுங் கண்டித்தார் சாரதியுங்
கலக்கி ஞரால்.

எ-து:—இந்தப் பிரகாரம் நெடும்போதெல்லாம் யூகித் தாலோசித்த பட்டவர்த்தனர் முதலாகிய பேர்கள் மிகவு நொந்து சலித்துத் தங்கள் தேரினேறி நடாத்தி நவமணியாற் செய்த மவுலியைப் புனேந்து வம்பருத் தூணியை முதுகிலே கட்டி வீரகவசத்தை மார்பிற் பூட்டி யழகிய வில்லே வளேத்து வக்கினிக் கணேகள் பிரசண்டமாருதக் கணேகள் வச்சிரக்கணேகள் முதலாகிய விடங்களேக் கக்காநின்றதைப் பொழிந்து சந்திர வட்டக் குடையை யறுத்துக் கீழே தள்ளிஞர்க ளதன் பின்பு சாரதி யாகிய தாருகன் மார்பக முதலாகிய வுறுப்புக்களேச் சல்லடைக் கண்ணுகத் துளேத்தார்க ளசுரவீரர்க ளென்றவாறு. 28

480. அரங்கநா யகனுரத்தும் புயமதினு நெற்றியினு
மளவி லாத
சரங்கள்கோத் தெய்தனர்பின் பவைவிலக்கத் தடைபடா
தாகித் தாக்க
வுரங்களிழி யாவுதிரக் கடற்படிந்தா ரும்பர்கள்தம்
முதவி யெண்ணிக்
கரங்களாற் சார்ங்கவில்லே வளேத்தம்பு சரக்கூடந்
தழையக் கட்ட.

எ-து:—மறுபடியு மந்த வசுரசேனுதிபதிகளாகிய வதிகூர ரானவர்கள் குரூரமான வக்கினி விடங்களேப் பொழிகின்ற பாணசரங்களே யரங்க நாயகருடைய மார்பகத்தினும் புசங்களினும் நெற்றியினு மளவிறந்த கணேமாரிகளேப் பொழிந்தார்க ளதை யரங்கநாயகர் தடைப்படுத்த வந்தத் தடையினி னில்லாம லக் கணேகளே யெல்லாம் விழுங்கிப் பிரசண்ட மாருதம்போல் வந்து வவ ரவயங்களிலே தாக்க வந்த வுவயமெல்லா முதிரப்பெருக்கான தெடுத்தோட வவ் வுதிரப்பெருக்கின் மூழ்கிஞ ரவ ரெத்தன்மையரெனின் றேவாதிகளுக் குபகாரங் குறித்துத் தமது

சார்ங்கவில்லை வளைத் தொரு நொடிப்பொழுதி னக்கினிக் கணையால் சரக்கூடங் கட்ட வக் கணைகளா லசுரவெள்ளங்க ளெரிந்தும் பொரிந்து நெரிந்தும்போக நொறுக்கிப் பொடியாய்ச் செய்தவ ரென்றவாறு. 29

481. சாபத்தை வளைத்தவருங் கருடனையுஞ் சாரதியுங்
கலக்கிச் சார
வாபத்தை விளைத்தனரா லரங்கநா யகனுமவர்
தமைய டுத்துக்
கோபத்தைச் செலுத்திடவாள் தனைவிடுத்தங் கவர்தமையுங்
கொன்றான் மேலோர்
சாபத்தை விலக்கிடவு மனுபவித்துக் காட்டிடவுஞ்
சார்ந்த மேலோன்.

எ-து:—அப்படி யக்கினிச் சரக்கூடத்தா லசுரக் கூட்டங்க ளெல்லாங் கிலப்பட்டுப்போன மாத்திரத்தின் பிரளயகால வுருத்திரனைப் போலச் சீறிக் கொதித்துக் கோபித்துப் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் மகாரதர் நிவாதகவச காலகேயர்கள் யூகத்தலைவர்க ளணித்தலைவர்கள் முதலாகிய பேர்கள் தத்தமது வில்லை வளைத்துக் குரூரமான கணைகளைச் செலுத்திக் கருடபகவானையுஞ் சாரதியாகிய தாருகனையும் பிரம்மாஸ்திரம் முதலாகிய பிரபல கணைகளா னவர்க டுளைப்பட்டுத் துன்பமடைந்து மனமெலிந்து நைந்துருகிப்போகத் துக்கதாகிய வாபத்தினைச் செய்தார்க ளப்படியாகிய வசுர வீரர்முன்பு தேவநாயகனு மவர்மேற் றேரை நடாத்திக் கோபத்தைச் செலுத்தினவரா யவர்மேல் வாளாயுதமாகிய படையைச் செலுத்தினு ரது விடங்களைப் பொழிந் தக்கினியைச் சொரிந்து பிரசண்ட மாருதம்போ லிரைந்துவந்து தாக்கி வச்சிர குன்றம்போன்ற மார்பகத்தைக் கவசத்தை வில்லை யம்பறாத் தூணியைப் பிளந் தவர் சிரசைக் கண்டதுண்டமாக்கி யரங்கநாயகர் கராம்புய மலரிலே வந்து வீற்றிருந்தது அவரெத்தன்மைய ரென்றால் மேலோர்களாகிய விருடிக ளிட்ட சாபத்தைத் தனது மனோரம்மிய மிருந்தா லனுபவித்துக் காட்டவு மனமில்லா திருக்கி னதை நீக்கிப் போடவுமாகிய மேன்மையினை யுடைய தேவ ரென்றவாறு. 30

82. அரங்கனு லசுரர்கடந் தேரழிந்து வில்லழிந்தங்
கழிவி லாத
துரங்கமாப் பந்திகளுந் தூளதாய்த் துகள்பட்டுத்
துலைந்த மேலாங்
கரங்களா னுயர்களிறு கையிழந்த மணியிழந்த
கால்க ளற்ற
உரங்களா லோங்கியகா லாளர்களும் பிணக்குன்றத்
துயர்வா யுற்றார்.

எ - து :—அப்படி யெதிர்த்து யுத்தஞ் செய்கின்ற வதிசூரர்களை யெல்லா மரங்கநாயகருடைய கணைமாரிகளாலே ரதமெல்லா மழிந்து மவர்கள் காண்டீபங்க ளெல்லாங் கண்டதுண்டப்பட்டு மிருக்கவு மழிவில்லாம லிருக்கின்ற குதிரைப்பந்திகளெல்லாங் கரிந்தும் நீண்ட துதிக்கையினையுடைய யானைக்கூட்டங்களானது துதிக்கை யறுந்து மிரண்டு பக்கங்களினு மாறி யொலிக்காநின்ற மணிகளான தறுந்து முரல்போன்ற நான்கு கால்கள் துணிக்கப்பட்டும் வலியினு லுயர்ந்த காலாள் பந்திகளெல்லாந் தூளிபடலமாய்ப் பிணக்குன்றமாய்க் குவிந்தார்க ளென்றவாறு. 31

483. எமதுவலி பாரென்று சினங்கூறி மந்திரிய
ரிருளா யெய்தி
மனமெலியா துலகத்தை விளங்காமல் மாய்கையினுன்
மறைத்தல் செய்தா
ரினமகலா விடியினமாய் முழக்கினுர் மின்னலென
விசைவு கொண்டார்
பனகவணை யரங்கத்தா னவைமதித்து ஞானமாப்
படைவ குத்தான்.

எ - து :—இந்தப் பிரகாரமாக வரங்கநாயகருடைய வக்கினிக் கணை சரக்கூடத்தால் பட்டவர்த்தனர் மகுடவர்த்தன ரதிரதாள் மகாரதாள் முதலாகிய ரத செச துரக பதாதிகளாகிய நால்வகைச் சேனைகளு மடிந்தது கண்டு பிரளயகால ருத்திரனைப்போலக் கோபாக்கிராந்தராய் மந்திரிமார்க ளென்ன சொல்லுகின்றுர்க ளென்று லெங்கள் புசபல பராக்கிரமங்களைப் பாருமென் றவர்களுடைய வசுர மாய்கையினுலே வண்ட ரண்ட பகிரண்டங்களெல்லா மிருளாக வந்து சூழ்ந்துகொண்டு சீவ கோடிகளுடைய மனதுகளெல்லாம் பதைபதைக்க முறைமுறையாய்க் கோடைக் காலத்தில் முழங்கிய மேரிடிகளைப்போலத் தொனித்து மின்னலைப்போலப் பிரகாசித்து மிருக்கின்ற வசுர மாய்கையை யனந்த விமான சேகரராகிய வரங்கநாயக ரதை யுகித்துத் தம்முடைய கராம்புய மலரில் விளங்காநின்ற ஞானஸ்திரத்தைப் பிரயோகித்தா ரென்றவாறு. 32

484. அந்தமாப் படைசென்றங் கவர்மாய்கைத் திறத்தினையு
மழித்து நீண்ட
நிந்தைசே ரவர்தாமும் பூதகணத் தரைவிளித்து
நிற்கச் செய்தா
ரெந்தையார் விடுத்திடுமோர் கணையனைத்து மவர்[1] முழுங்கி
யெய்த்தி டாமல்
விந்தையாய் விளங்குமோர் செயல்கண்டங் கவர்தாமும்
வியந்து நின்றுர்.

---

[1] விழுங்கி.

ஏ- து :—அந்தச் சமர பூமியிலே ஸ்ரீலட்சுமிபதியாகிய வரங்கநாயக ருடைய ஞானஸ்திரமானது கோடி சூரியனுதித்ததுபோலப் பிரவேசித் திருள்படலங்களை யெல்லா நீக்கியதை மந்திரிமார்களாகிய பேர் தங்க ளுடைய மாய்கையினாலே வனேக பூதகணங்களை நிர்மித் தந்தச் சமர பூமிகளெல்லா நிரம்பும்படியாக நிற்கச்செய்தார்க ளந்தச் சமயத்திலே வரங்கநாயகர் காண்டீபத்தை வளைத் தனேக பாணங்களைச் சரவருஷமாய் வருஷித்துவிட்டா ரந்தப் பாணங்க ளெல்லா மவர்கள் படளீகரஞ் செய்து கொண்டிருக்கின்ற பூதகணங்களுடைய பிரதாபங்களை மந்திரிகள் கண்டு புன்னகையுடனே மிகுந்த சந்தோஷத்தை யடைந்தார்க ளென்றவாறு. 33

485. சிந்துகின்ற கணையனைத்து மவர்நுங்க நகைத்தசெய
லதனைத் தேர்ந்து
நிந்தையிலா நின்மலனுந் தண்டத்தா லவையனைத்து
நொறுக்கி நின்றான்
பந்தமுறு மவர்களெலாம் பலபலகோ டியினுருவாய்ப்
படர்ந்து நின்று
சுந்தரமார் வில்லிதனைப் பலமாய்கைத் திறமதனாற்
சூது செய்தார்.

ஏ - து :—அப்படி யரங்கநாயகர் சரோவேகமாய்ப் பொழிகின்ற கணை மாரிகளை விழுங்கிச் சலன மில்லாதவர்களாய் விளங்கக்கண்டு சுவாமியைக் குறித்துப் பரிகாசஞ் செய்கின்ற மந்திரிமார்கள் கெர்வத்தைப் பார்த்து நிந்தனையில்லாத நின்மல சொரூபியாகிய லோகநாயகருந் தமது தண்டத்தைக் கரகரவென்று சுழற்றிப் பூதகணநிபந்தியின் பேரில் விடுத்தா ரந்தத் தண்டமானது பிரசண்டமாருதம்போலே பிரவேசித் தக்கினியையும் விஷங்களையுங் கக்கிக்கொண் டந்தக் கூட்டங்களைத் தூளி படலமாக நொறுக்கிநின்றதைக் கண்டவர்கள் சுக்கிராசாரி மந்திர வலியினா லொவ்வொருவரும் பலகோடி யுருவமா யிரதத்தோடே விளங்கிச் சுவாமி முன்னே நின்று சுந்தர சவுந்தரிய காண்டீப பதியாகுந் தன்மையா னவரைப் பலவிதமாகிய மாயைத் திறத்தினாலே சூது செய்தார்க ளென்றவாறு. 34

486. சூதுசெய்த கும்பனையு நிகும்பனையு மிலனைப்போர்ச்
சூரன் றானும்
வாதுசெய்த திறலதனை மதித்தரங்கன் கமலகணை
வண்மை யாலே
தீதுபுரி வோர்பிரமன் வரமாய்த்தவ் விரதத்தைத்
தூளாய்த் தீய்த்துக்
காதுமவர் தலைதுணித்தான் முனிவரெலாம் பூமாரி
கலந்து விச.

எ-து:—இவ்விதமாகச் சூதாகிய மாய்கையைச் செய்கின்ற கும்ப னிகும்ப னிலவணாசுர ரென்கின்ற மூவரு முத்தஞ் செய்கின்ற பராக்கிரமத்தை யூகித்துப் பார்த்த வரங்கநாயகரானவர் கமலாஸ்திரப் பிரதாபத்தினாலே தீங்காகிய பொல்லாங்குகளைச் செய்கின்ற மந்திரிகள் பிரம்மதேவரால் பெற்ற வரபாலனங்களைத் தொலைத் தவர்களேறிய ரதத்தை நீறுநீறு யக்கினிப்படுத்தின மாத்திரத்தில் கோபித்த வசுரர்களுடைய சிரசுகளைக் கண்டித்துப் பூமியில் தள்ளினா ரதைக் கண்ட ரிஷீசுவரா ளெல்லாம் பஞ்சதாருவின் றிவ்விய மணங்களைப் பொழிந்து சந்தோஷப்பட்டார்க ளென்றவாறு. 35

487. சம்பரப்பேர் தானவனுந் திடுக்கிட்டு மனந்தளர்ந்து
சார்ந்தி டாமற்
பம்பரம்போற் சுழன்றோடிக் கடற்படிந்தா னவையனைத்தும்
பார்த்த மேலா
மும்பரெலாம் நடுங்கியிடக் காலநே மிப்பெயரா
னுறுத்துச் சீறி
செம்பவழ வாயான்றன் றேரினையே கண்ணுற்றுச்
செப்ப லுற்றான்.

எ - து :—இம் முத்திறத்தாரு மிறக்கக் கண்ட சம்பராசுர னென்கின்ற மந்திரியானவன் மிகுந்த பயங்கொண்டவனா யவனுடைய மனது திடுக்கிட்டுச் சமர பூமியைவிட்டு நீங்கிப் பம்பரத்தைப் போலச் சுழலலுற்றவனா யோடிக் கடலிற்போ யொளித்து மூழ்கினா னிவைகளை யெல்லாம் பார்த்துக் களிகூர்ந்த மேலவராகிய தேவர்களையெல்லாம் சீறிய காலநேமியாகிய வசுர சூடாமணியானவன் செம்பவளம் போன்ற வாயினையுடைய ஸ்ரீமந் நாராயண ரிரதத்தையு மவருடைய திருமுக மண்டல விலாசத்தையும் கண்ணாரப் பார்த் துத்த சன்னகத்தில் சிறந்தவனா யிருக்கிறா னென்று தான் மதித் துணர்ந்தா னென்றவாறு. 36

அரங்கநாயகர் மந்திரத் தலைவர் யுத்த வத்தியாயம் முற்றிற்று.

# இருபத்தெட்டாவது: காலநேமி சமர் புரிந்த வத்தியாயம்

488. புவனத்துச் சத்ரபதி யசுரக்கு லக்குரிசில்
புகையச்சி னத்து கரமார்
தவமுற்ற பொற்சிலையைக் கதையைப்பெ ருத்தவிணை
கணையைக்க தித்த புவியைச்
சிவனைக்க றுத்துவல வனைசக்ர திக்கின்மிகு
விரதத்தைச் சித்ர முடனே
பவனப்பெ யர்க்கதியி னடுவிக்கு மக்களம
ததனிற்ப ணித்தி யெனவே.

எ - து :—இவ் வராருக மதித் துணர்ந்த திரிபுவனத்துக்குஞ் சத்திரபதியாயு மசுர குலத்துக்கு ராசசூடாமணியாயு மிருக்கின்ற காலநேமியானவ னிரண்டு கண்களுஞ் செவ்வானம்போலே சிவக்க மீசைகள் படபடவென்று துடிக்க வக்கிர தந்தங்களை நறநறவென்று கடிக்கக் கோபாக்கினியினாலே புகைமண்டலமானது மேன்மேலிடத் தக்கதாய்த் தனது கையில் தவத்தினால் விளங்காநின்ற வில்லையும் கதையினையும் பெரிய விரண்டான கணையாயுதத்தையும் பாரித்த பூமியினையும் பரமசிவனையும் கோபித்தவனாய்த் தன்னுடைய தேர்ச் சாரதியைப் பார்த்தொருவார்த்தை கூறுகின்றா னம்மிட விரதத்தைச் சக்கிராகாரமாய்த் திக்கு திகாந்தங்களெல்லாஞ் சித்திரமுடனே வாயுவேகமாய் நடத்திப் பின்பு யாவரையுங் கொல்லுகின்ற சமரபூமியாகிய ரணகளத்தில் கொண்டு போய் நிறுத்தென்றா னென்றவாறு. 1

489. அவனுய்த்த வப்பெரிய ரதமுற்ற உக்ரபதி
யரியைக்க றுத்து வவனும்
புவனத்தி னற்கணைகள் பொழியக்கு றித்தகெழு
புகல்திப்பு ரக்கு மளியோய்
தவமுற்ற ரக்கரம ரர்களுற்ற வெப்பமொரு
சலுகைத்தி றத்தி னொழியாக்
கவனப்ப ரித்திரளை கரடக்க ளிற்றுமுத
லடலெக்க ணக்க றைதியால்.

ஏ-து:—அந்தப் பிரகாரந் தேர்ச் சாரதியானவன் ராசேந்திர ஞகிய காலநேமி கூறிய வண்ணமாய்த் தேரை நடாத்திய பின்பு சமர பூமியாகிய ரணகளத்தில் லோகநாயகர் தேரின் முன்பாக நிறுத்தின னதன் பின்பு வசுர ராசஞனவ னரங்கநாயகரைக் கண்டு பிரளயகால ருத்திரனைப்போலே சீறி வீராதிவீரரே யிந்தப் பூமியிலே நல்ல கணைகளைப் புங்கானுபுங்கமாய் நீர் விடவேண்டிய காரிய மென்ன புகலுவீர் நீர் யாவரையும் ரக்ஷிக்கும்படியாகிய ரக்ஷக கர்த்தாவா யிருந்து மந்தக் கிருபையைவிட் டொருவர் பக்ஷமா யிருந்து ரக்ஷிக்கிறது ஞாயமோ தவத்தினல் மிகுந்த வசுரக் கூட்டங்களுந் தேவக் கூட்டங்களுங் கொண்ட சலன வெப்பமான தும்முடைய சலுகைத் திறத்தினலே நீங்குவதுண்டோ நீங்கா தாகையா லெங்கள் கவனவேக மாகிய வசுரக் கூட்டங்களையுங் கரட மதங்களைப் பொழிகின்ற யானைகளையு முதலானதுகளுடைய வடலை நீர் சம்மரிக்கக் குறித்த தெந்தக் கணக்கினல் சொல்லுவீராக வென்ரு னென்றவாறு. 2

490\. சினவித்து லைத்துகணை விடுவித்த வித்தகுறி
சிறிதெற்குச் சித்த மதனு
னினைவுற்று சொற்கடவை வலியத்த வத்தைமுன
மிசைவுற்ற வெற்கு றுகியே
கனதைக்கு நற்பிரம பரமுற்ற சத்திசிவ
பசுமைப்பெ யர்க்கு ரியநீ
மனமிக்க நெக்குருகி யுதவுற்ற நற்கருணை
வலியத்தி றத்தை நினையாய்.

ஏ-து:—மேலும் வாரீர் மகானுபாவரே நீர் கோபித்து எனது சதுரங்க தளத்தினையுந் தொலைத் தஸ்திரங்களைத் தூவுகின்ற தகுதி யாகிய ஞாயத்தைச் சில தும்முடைய திருவுள்ளத்தின் மதித்து அருளிச் செய்யக் கடவீர் நான் வலியத் தவத்தை யிசை பெறச் செய்தா லதனைக் குறித்துவந் தக் கனத்துக்கு அதிசிலாக்கியரா யிராநின்ற பிரம்மாவும் பரமனைச் சொல்லுகின்ற சத்தியோடு மருவிய பரமசிவனும் நீருண்ட காளமேகம்போன்ற நாராயணப் பெயர்க் குரித்தாகிய நீரு மடியேனுக் கனுக்கிரகஞ் செய்த வரப்பிரசாதங்களை யோசிக்கவேண்டு மென்றான் மனமான து நெக்குருக வுதவி செய்கின்ற கருணைத் திறத்தினலே வருகிற வலிய வரத்தை யும்மிட நினைவினலே யூகித் தாலோசிப்பீ ரென்ருன் காலநேமி யென்றவாறு. 3

491. உதவித்தி றத்தைமிக நினைவுற்று நிற்கிதனை
யுறுதிப்பெ றக்க ருதியே
பகர்வுற்ற சொற்கொடு நீ பரமப்ப தத்திருெளிர்
படிவுற்ற நற்க டலிடைப்
புகவுற்ற நற்கரும மலதிக்கி ரிக்கணுறை
புகவொட்ட லம்பொ ருதுநீ
கதமிக்க கணைவிடுதி யெனில்சத்ய வமர்புரிதி
கரடக்க ளிற்றி னனையாய்.

எ - து :—யாரீர் மகானுபாவரே நீ ரென்னைக் குறித்துச் செய்த உபகாரத்தைப் பெரிதா யெண்ணி நினைக்குந்தோறு மும்மைக் குறித்துச் சொல்லுவதாவது நீ ருறுதி பெறுவதா யொரு வார்த்தை சொல்லு கின்றேன் பிரயோசன மியாதென்றால் நீர் முதன்மையாய் வாசம் பண்ணுவது பரமபதத்தி லிரண்டாவது வாசம் பண்ணுவ தொளி பரந்த திருப்பாற்கடலிலே யதைவிட் டிந்தச் சமர பூமியிலே ஒருவர் பக்ஷமாய் வருவது ஞாயமல்ல வாகையா னி ரிருக்குமிடம் போய்ச் சேருவதே நடுவுநிலைமையா மாதலா லு மிந்தக் கோலாசல பர்வதத்திலே குடியாய் வாசம் பண்ணுவோ மென்றாலு மிருக்கவொட்டோ மென்று நான் சொல்லுவதை நீர் கேட்டுக் கோபித்துச் சரமாரிகளை யென் பேரில் தூவி யுத்தஞ் செய்வீராகில் சத்தியமாகிய ஞாயமா யமர்புரியுங் கரட மதங்களைப் பொழியப்பட்ட யானைக்குச் சமதையாகிய சுத்த வீரரே யென்று னசுர பெருமா னென்றவாறு. 4

492. எனநக்கு வசுரபதி உரைபற்றி யமரரிறை
உதவிக்கு றித்த வெழிலார்
கனமிக்க உததிநிதி கழறுற்ற சமரினிடை
களிபெற்ற கருணை வருமோ
மனமிக்க வுன துதிறல் புரிதிப்பின் விளைவறிதி
மதியற்ற வசுர பதியே
எனஉக்ர மொடுசினவி கனமுற்ற விரதமதை
யிரவிப்ப தத்தின் விடவே.

எ-து :—இவ் வரலாறாக நகைத்துக் கூறிய வசுரகுல சூடாமணியி னுடைய வார்த்தையைக் கேட் டமரர்களுக் கரசனுகிய விந்திரனுக் குதவி செய்யவேணு மென்பதைக் குறித் தழகா னிறைந்து பிரதாபத்தால் மிகுந்திராநின்ற திருப்பாற்கடலில் வசிக்கப்பட்ட சங்கநிதி பதுமநிதியைப்

போன்ற சீதரனனவர் அருளிச்செய்கின்றார் சொல்லும்படியாகிய வுத்த களத்தில் படுகளத்தி லொப்பாரியாகிய கருணைமொழியைக் கூறுவா ருண்டோ வாகையா லுனது மன உற்சாகத்தினாலே சமர்த்தொழிலின் றிறத்தைக் காட்டுவா யதன் பின்பு விளைகின்ற விளைவை யறிவாய் புத்தி யீனராகிய வசுரர்களுக்கொரு வாதரவா யிராநின்ற வரசனே யென்று மொழிந்த மாத்திரத்தில் காலநேமியானவன் பிரளயகால ருத்திரனைப் போலே சீறிப் பெருமை பொருந்திய ரதத்தைச் சூரிய மண்டலத்தில் வலவ னடாத்தப் போய்ச் சேர்ந்தா னென்றவாறு. 5

493. தாருகன்வி டுத்தனன்மு கட்டுவெளி தன்னின்
மேருவென வேயிரத மேன்மையின டாத்திப்
பாற்கடல்தி வாந்திரப ரப்பிருள்ப ரந்த
காருலக மேமுதல கண்டமதில் சென்றும்.

எ - து :—அசுரேந்திரனாகிய காலநேமியினுடைய ரதமானது சூரிய மண்டலத்திற் பிரகாசிக்கக் கண்ட தாருகனனவன் வாயுவேக மனோ வேகமாய்த் தன்னுடைய ரதத்தை நடத்தி யவன் றேர் முன்பாக நிறுத்த விப்படி இரண்டு பேர்களுடைய ரதங்களு மகாமேருகிரி பர்வதம்போல இடசாரி வலசாரியாய்ச் சுழன்று வாயுமண்டலம் வருணமண்டல மேக மண்டலம் நக்ஷத்திரமண்டல முதலாகிய முகட்டு வெளிகளெல்லாஞ் சுழன்று சப்த சாகரஞ் சூழ்ந்த பூமண்டலங்க ணவ கண்டங்கள் சப்த தீவுகள் காருலக முதலாகிய லோகாலோகங்களெல்லாஞ் சென்று கோர மாகிய யுத்தங்கள் செய்து மொருவருக்கொருவர் பராக்கிரமங்களுடனே யிளையாதவர்களாய் மேகமண்டலத்தில் மேகங்களானது கூடித் தவழ்ந்து மிகுந்த விருள்மூடிய வாகாசங்களிலும் பிரவேசித்து யுத்தங்கள் செய்து மறுபடியும் நவகண்டங்களிலும் ரத வேகங்களினாலே நடத்தி யெதிர்த்து கரவேக சரவேக சர்ப்பவேகமா யுத்தஞ் செய்தார்க ளென்றவாறு. 6

494. தேர்சுழல லுற்றனவி டம்வலம தெய்தி
நீர்மைமிக மும்புகவி றைந்தனக டாகங்
கோரவசு ரேசனுர மேமுதல்கு றித்த
தீரவவ யங்கடுளை செய்தனன ரங்கன்.

எ - து :—இந்தப் பிரகாரமாக விவர்க ளிருவருடைய ரதங்களுந் திக்கு தீவாந்தரங்க ளெங்குங் குலாலன் சுழற்றுகின்ற திகிரியைப்போல இடசாரி வலசாரியாய்ச் சுழன்று சமர்செய்கின்ற பாண சரங்களினாலே யண்டகடா கங்களானது பிளந்ததுபோலச் சப்திக்கும்படியாகிய கோஷங்களுடனே விடுகின்ற பாணங்களான தாகாச வீதிகளெல்லா மூடிக்கொள்ளக் கரிய

மலைபர்வதம் போலக் கறுத்த தேகத்தோடுங் கோரதந்தங்கள் பிரகாசிக்கா நின்ற வசுரேசனாகிய காலநேமியினுடைய சரீரங்களெல்லாஞ் சல்லடைக் கண்களைப்போலத் துளைத்துக் குருதிகள் சொரியத்தக்கதாய்ச் செய்தாரவராரென்றால் இந்த லீலாவிபூதியில் சிருஷ்டியாதி ரூபமான விளையாட்டைப் பிரயோசனமாக வுடைத்தானவராகிய ஸ்ரீவரங்கநாத ரென்றவாறு. 7

495. உதிரமழை காரினமெ னச்சொரித லுற்ற
சதிபெருகு மசுரகுல தந்திரிவெ குண்டு
விதிமுனம ளித்திடுவி யன்கதையெ டுத்துக்
கதியடிய ருக்குதவு காவலன்மே லெய்த்தான்.

எ - து :— அப்படி யிருந்த பராக்கிரமசாலியாகிய காலநேமியினுடைய தேகங்களானது துளைபட்டுச் சொரியாநின்ற உதிரப் பிரவாகமான தெப்படிப் பிரகாசித்ததென்றால் வருஷாகாலங்களிலே சப்த மேகங்களு மொன்றாய்க் கூடி யிடியின்னல்களுடனே உதிரவருஷம் வருஷித்ததுபோல வாகாசம் பூமிகளெங்கு மூடிக்கொள்ளும்படியாகிய சமயங்களிலே யதிக சாமர்த்திய வசுர குலத்திலே வெகு தந்திரீகனான காலநேமியானவன் பிரளயகால ருத்திரனைப்போல வவனிட விரண்டு கண்களுஞ் செவ்வானம் போலச் சிவந்து சீறிக் கோபித்தவனாய்ப் பிரம்மதேவ ரானவர் முன் னளித்தருளிய மிகுந்த வரப்பிரசாதப் பேறு பெற்ற ஒரு கதையை யெடுத்தந் சதுர்முகனைத் தியானித்து மந்திராஹ்வாநதிகள் செய்து சரணாகதரான வடியார்களுக்கு மோக்ஷ சாம்ராச்சியங்களைக் கொடுத்து ரக்ஷித்தருளுநின்ற ஸ்ரீ லக்ஷ்மிபதியாகிய வரங்கநாதரை நோக்கித் தன்னுடைய பராக்கிரமம் பொருந்திய வஸ்தங்களினாலே சுழற்றி யெறிந்தா னந்தக் காலநேமி யென்றவாறு. 8

496. அண்டமுந டுங்கினவ திர்ந்தவகி லங்கள்
சண்டன்வெரு வுற்றனன்த டித்துமுனு தித்துக்
கொண்டல்கள்வ றண்டனகு லக்கிரிபொ டித்த
விண்டனக டாகமும்வி ரிந்தவன லங்கள்.

எ - து :—அந்தக் காலநேமியானவன் பிரயோகித்த கதாயுதமானது பிரவேசித்த மாத்திரத்தி லண்ட கோளகைகளெல்லாங் கிடுகிடுவென்று நடுங்கின பூமண்டலங்க ளெல்லாங் கருகிக் கடகடவென்று மதிரப்பட்டன வெமதர்மராசனு மிதென்ன பிரளயகாலமோ வென்று திடுக்கிட்டுப் பயப் பிராந்தி கொண்டான் மேகங்களெல்லாந் திடுக்கிட்டுது நக்ஷத்திரங்க ளெல்லாம் பூமியிலே பலபலவென்று உதிர்ந் திமயோத்கிரி முதலாகிய

வஷ்ட குலாசல பர்வதங்க ளெல்லாம் பொடிப்பொடியா யுதிர்ந்து விட்டுது வண்டகடாக வெளிமுகடுக ளெல்லாம் வெடிபட்ட தந்த வஸ்திரத்தினின்றும் பிரவேசித்த வக்கினிச் சுவாலையானது வடவாமுகாக்கினியைப் போலத் திரிபுவனங்களையுந் தகித்தது வந்தக் கால நேமியினுடைய கதாயுத மென்றவாறு. 9

497. பெருங்கடல்க லங்கிசுழ லூற்றனபி றழ்ந்தே
மருங்கினில்வி டம்பெருகி வார்ந்தொழுகு கின்ற
தரும்புகைய முற்படலந் தாலநிறை கின்ற
விருங்கரிமு முங்கிடவி ருங்கதையெ ழுந்த.

எ-து:—பின்னையு மந்தக் கதையி னுடைய வடவாமுகாக்கினி வீசுகின்ற வேகத்தினாலே பெரும்புறக்கடல் முதலாகிய கடல்க ளெல்லாங் கொதித்துக் கலங்கிக் கரகர வென்று சுழன்றுகொண்டு நொப்புநுரைக ளுடனே கரை புரண்டு சப்த சாகரங்களு மொன்றாய்ப் பெருக்கெடுக்க வந்தக் கதையினுடைய விரண்டு பக்கங்களிலும் விஷதாரைகளாகிய வெள்ளப் பெருக்கினை வீசுகின்ற வக்கினிச் சுவாலையால் புகைப்படலங்களானது உலகங்க ளெல்லா மூடிக்கொள்ள வட்ட திக்குகளைத் தாங்குகின்ற ஐராவத முதலாகிய வஷ்ட கசங்கள் துதிக்கையைத் தூக்கிக் கொண்டு கதறி உதிரங்களைக் கக்கிக்கொள்ள வாதிசேஷனும் புச மாற்றிக் கொள்ள வதிக கோரரூபமாய்ப் பிரவேசித்தது கதாயுத மென்றவாறு. 10

498. வந்ததுவ ரங்கன்முனம் வார்சிலைவ ணக்கி
முந்தியவ முற்கணைமு தற்பலதொ டுத்தான்
வந்தகணை யாவையும்வ ருந்திடவி முங்குந்
தந்தரம றிந்தபர மன்றனது கையால்.

எ-து:—இந்தப் பிரகாரங் கதையானது கோரரூபமாய் வருகிறதைக் கண்ட வரங்கநாயகரானவர் தமது நீண்ட சார்ங்க வில்லை வளைத்து நாணேறிட்டுக் குணத்தொனி செய்து வடவாமுகாக்கினிக்குச் சமதையாகிய வக்கினி யஸ்திரங்களைப் புங்கானு புங்கமாய்க் கரோவேக சரோவேகத்தோடுந் தொடுத்துவிட்டா ரந்தப் பாணமானது வாயுவேகத்தாற் பிரசண்ட மாருதங்களைப்போல வக்கினிப் பிழம்பால் சுவாலித்து விஷதாரைகளை வருஷித்துக்கொண்டு வருகின்ற கோர சிலீமுகங்களை யெல்லாம் வருத்தப்பட்டு மெலியத்தக்கதா யந்த வக்கினி யஸ்திரத்தை யிந்தக் கதாயுதமானது விழுங்கி வர்த்தித்துக்கொண்டு வருகிற கதையினுடைய பிரபலங்களை யெல்லாந் தெளிந்த வாராய்ந்த பரமமூர்த்தி

யானவர் தமது கராம்புயத்தினில் விளங்குகின்ற கமலாஸ்திரத்தைப் பிரயோகிக்கத் தொடங்கினு ரந்த லோகநாயகராகிய ஸ்ரீஅரங்கநாத ரென்றவாறு. 11

499. பங்கயமெ னும்படையெ டுத்துபயில் வில்லி
னிங்கிதம தாகிவிட வேளழுத லுற்ற
பொங்குமழல் சிந்திபுகை யோங்கபுர மெல்லா
மங்கிடவெ ழுந்தனம லர்ப்பகழி மாதோ.

எ - து:—தாமரைச் சிலீமுக மென்கின்ற பேரை யுடையதைத் தம்முடைய காண்டீபத்திற் பூட்டி இந்தக் கதைக்கு இலக்காகப் பிரயோகித்து விட்டா ரது வாயிரங்கோடி யிடிகளை யிடித்துக்கொண்டு பிரவேசித்து வரும்போது அக்கினிப் பிழம்புகளைச் சிந்திப் புகைப் படலங்களைத் திரிலோகங்களிலும் விரித்த வதனுலே லோகங்களெல்லாங் கிலேசத்தை அடையத்தக்கதாகப் பிரவேசித்த தந்தத் தாமரைச் சிலீமுக மென்றவாறு. 12

500. கதையிதுபெ ருத்தசமர் பண்ணியது கன்ற
வடுதலுறு கின்றதிரு வம்புயம தாகும்
புதியதொரு வம்புபெரி யோன்கரத லத்தின்
விதிவழிய டைந்ததைவெ குண்டுநனி கண்டான்.

எ - து:—கதாயுதமும் பங்கயச் சிலீமுகமு மொன்றோடொன் றெதிர்ந்து பிரபல யுத்தங்களைச் செய்யும்போ தந்தக் கதாயுதத்தை யிரண்டு துண்டாகச் சண்டித்துக் கீழே தள்ளிற் றரங்கநாயகரால் விடுக்கப்பட்ட நான்முகன் கணையானது மறுபடியுந் தன்னை விடுக்கப்பட்ட சர்வ பரிபூரணருடைய கராம்புய கமலத்திலே போய் விதிவழியா யமர்ந்த தைக் கண்ட வசுரேந்திரனுகிய காலநேமியானவன் கோபாக்கிராந்தனுய்ச் சீறினு னென்றவாறு. 13

காலநேமி சமர் புரிந்த வத்தியாயம் முற்றிற்று.

## இருபத்தொன்பதாவது: துர்க்கை வரலா றுரைத்த வத்தியாயம்

501\. சூலமது விட்டிடவ துணித்திடவசு ரித்து
மாலமது பொங்கியனல் மண்டியழல் சிந்தும்
வேலதைவி டுத்திடவெ திர்ந்தடிப ணிந்த
கோலமதைக் கண்டுகனல் கொண்டவசு ரேசன்.

எ - து:—காலநேமியானவன் வரத்திலுற் பெற்ற வக்கினிச் சுவாலை யினையுடைய திரிசூலத்தினை யரங்கநாயகர்பேரில் விட்ட மாத்திரத்திலே யதைத் துணிக்கக் கண்ட வசுர சூடாமணியானவன் கோபித்து மீட்டு மாலகால மாரியினைப் பொழிந் தக்கினிப் பிழம்பைச் சிந்துகின்ற வொரு மீளா வேலினை விடுத்தா னந்த வேலான தரங்கநாயகரை எதிர்ந்த வளவிலே வலம் வந்து பாத தாமரையின்கண் வந்தித்தது வத் தன்மையன வாகிய தெய்வ வராகத்தினைப் பார்த்த கோபத்தினு லக்கினியைப் பொழி கின்ற புவன சக்கிரேசுவரனுகிய வசுரேந்திர னென்றவாறு. 1

502\. ஆலமது வுண்டவர னுதியின ளித்த
வேலதுப ணிந்திடவெ குண்டவசு ரேசன்
காலமது சென்றகடை காலமென நின்ற
மாலமகிழ் சத்தியைவி டுத்திடம தித்தான்.

எ - து:—ஆலகால விடத்தினை யுண் டகில முதலாகிய சராசரங்களை யெல்லாம் பாதுகாத்தருளிய சிவனுனவ ராதிகாலத்தி லனுக்கிரகம் பண்ணுகின்ற வேலான தரங்கனுடைய பாத கமலங்களிலே பணிந்ததைக் கண்டு கோபித்த வசுர சூடாமணியானவன் காலங்க ளெல்லாங் கடக்கா நின்ற ஊழிகால ருத்திரனைப்போலச் சீறிநின்ற மாலாகிய வரங்க நாயக ரானவ ரம் மகிழ்ச்சியை யடையாநின்ற சத்தியைவிட்டுச் செயங் கொள நினைத்தா னென்றவாறு. 2

503\. மதித்தபுகழ் வீணைமுனி கண்டுமன நொந்து
கதித்திரத மேவுகரு ணைக்கடல்க ளுற்றே
வதித்தபுகழ் கொண்டதிரு மாலடிவ ணங்கித்
துதித்தவனி னைந்தசெயல் செப்பிடுவ தானுன்.

எ - து :—திரிபுவனங்களு மதிக்காநின்ற வீணை முனியாகிய சாம கீதத்தைக் கர்ணாமிருதமாய்ப் பொழியாநின்ற நாரத முனிவரானவ ரிதைக் கண்டளவின் மன நொந்துருகிப் பெரிய தேரினை நடாத்தித் திரிகின்ற கருணைக்கடலாகிய வரங்கநாயகரைக் கண்டளவில் பொருந்து கின்ற புகழினையுடைய திருமாலினது திருவடிக் கமலங்களிலே தெண்டன் சமர்ப்பித்துத் துதிசெய்து காலநேமியானவ னிழைத்த கிரியை யெல்லா மறிவிக்கத் தொடங்கினு ரென்றவாறு. 3

504. நின்றுநெடு நாடவமி யற்றிநிகழ் காலை
மன்றல்கமழ் செஞ்சடைவ ராகியெனு மாது
பண்டுதவு சத்திதனைக் கொண்டுபல காலுங்
கண்டுமகிழ் பூசைபுரி கின்றகனல் சூரன்.

எ - து :—மிட்டு நாரதமகாமுனிவர் காலநேமியினது வலியினைக் கூறுகின்றார் பூர்வ காலத்திலே மகசுரேந்திரனானவன் துர்க்கையைக் குறித்து நெடுநாளாக வரிய தவத்தினைச் செய்தலி னவன் றவத்திற்கு மிரங்கித் திவ்விய பரிமளங்களைக் கமழாநின்ற சிவந்த சடையினையுடைய வராகி பராசக்தியானவள் முன்ன மநுக்கிரகஞ் செய்கின்ற சத்தியை வரத்திலு லேற்ற தெய்வத்தைப் பலகாலமா யர்ச்சித் தவ ளுருவத்தை நிசவுருவமாய்க் கண்டு திருவாராதனஞ் செய்து கனலைப் பொழிகின்ற வதிசூரனானவ னென்றவாறு. 4

505. முத்தின்மணி மாலையணி முக்கணிய ளித்த
சத்திதனை யேவவெதிர் சார்ந்துவரு கிற்பான்
[1]பத்திய யெயிர்த்தொகைப தைத்திடவெ ருட்டும்
[2]வெத்திதரு கின்றதிறல் சத்தியினை யென்றான்.

எ - து :—முத்தின முதலாகிய நவரத்தின மாலையினைத் தரித்தருளிய வுத்தமியான பராசத்தியினது உருவமாகிய துர்க்கை யம்மை னநுக்கிரகம் பண்ணிய வந்தக் கோரரூபமாகிய சத்தியினைத் தேவரீர் பேரிலே காலநேமி யானவ னேவத்தக்கதாகச் சார்ந்தும்மிடத்தின் வர வெத்தனப்பட்டிருக் கின்று னந்தத் திரிபுவனத்திலும் பொருந்திய வெண்பத்து நான்கு நூறாயிர சீவபேதமும் பதைபதைக்கத்தக்கதாய் வெருட்டுகின்று னந்தத் திறலாகிய விசயமான தசுரேந்திரன் பெற்றது பராசத்தியின தனுக்கிர கத்தா லிந்த வல்லபம் வந்த தென்றார் நாரத முனிவ ரென்றவாறு. 5

[1] பற்றி. [2] வெற்றி.

506. அண்டமுழு துண்டுமகி லங்களைய ளந்துங்
கொண்டதிரு கோலமது கூறவறி யார்க
ளண்டர்களெ லாந்துதிசெய் யாயிழையை யிங்குக்
கண்டருள்பு ரிந்திடக ளித்திடுவ ளென்முன்.

எ - து :—நாரத முனிவர் மீட்டுங் கூறுகின்றார் சர்வ மங்கள குணக்கியராய் வந்தனை பாத்திரரா யகிலலோக நியாமகராய் முத்தி வீடாகிய பரமபத மளிப்பவராகிய தேவரீ ரிந்த வண்ட ரண்ட பகிரண்டங்களை யெல்லா முண்டு உயிருள்பொரு ளில்லாத பொருள்களை யெல்லா மளிக்கத்தக்கதாக நீர் கொண்ட திருக்கோலமாகியதை யாவ ராலுங் கூறமுடியாத வப்படியாகிய சர்வக்ஞருக் கிந்த வஞ்ஞான வறிக்கை யிடுத லென் னறிவின்மையே யாயினு மழலை வாய்ப் பிள்ளைக் கிரங்கிப் பிதா மகிழுமாறுபோ லெனது தெரியாமையைப் பொறுத்தருள வென்று பின்னுங் கூறுகின்றார் தேவ கூட்டங்கள் துதிக்காநின்ற சத்தியா னவளை நீர் நினைத் தருள்புரியி னிப்பொழுதே களிகூர்ந்து தேவரீர் சமுகத்தைக் குறித் தானந்த வைபவத்துடனே வருவா ளென்று ரென்றவாறு. 6

507. நாரதனு ரைத்திடந கைத்துமொழி கின்முன்
பார்தனினு யிர்த்தொகைப தைத்திடவ ருத்துஞ்
சூரனைம டித்தமரர் சேனைபுடை சூழச்
சார்வனெனத் துர்க்கையெனுஞ் சத்தியைநி னைத்தான்.

எ - து :—இவ்விதமாய் நாரத முனிவரானவ ரொடுங்கிக் கூறும் வார்த்தையைக் கேட்டளவி னற்புதம் பெருக நகைத் தொரு வார்த்தை யரங்கநாயகர் கூறுகின்று ரந்தத் துர்க்கையினது வரத்தினலே யுலகி லுள்ள உயிர்த்தொகையை யெல்லாம் பதைத்திடத் தக்கதாக வருத்து கின்ற காலநேமியாகிய வசுரேந்திரனை யிந்த ஞான்றே மடியச்செய் திறந்த தேவகூட்டங்களை யெல்லா மெழுப்பி யெமது தேரினைத் தத்தம் வாகனங்களுடனே புடை சூழ்ந்துவரச் செய்கின்றே மதைக் காண்பீர் முனிவரே யென் றருள் சுரந்து துர்க்கை யென்கின்ற சத்தியினை நினைத்தா ரந்தரான்மாவா யர்ச்சாவதாரராகிய கருணைக்கட லென்றவாறு. 7

508. சத்தியைநி னைத்திடக ளித்துசலி யாதாள்
வெத்திபுக மூயிரமு டித்திகழ வெங்கும்
பத்திமணி மாலைபல கோடிகள ணிந்து
முத்திமுத லோனடிப ணிந்துமுனு வந்தாள்.

எ - து :—அந்தச் சமயத்தி னரங்கநாயகரானவர் துர்க்கையாகிய சத்தியை நினைந்த வளவி னந் நினைவை யறிந்து களிகூர்ந்தவளா யெஞ் ஞான்றுஞ் சலியாதவள் வெற்றியும் புகழு மமைந்த வாயிர முடிகளானது பிரகாசிக்கத்தக்கதாக வெங்கணும் டத்தியா யொளி விடுகின்ற மாணிக்க மாலைகளானது பல கோடிகள் விளங்கிப் பிரகாசிக்கத்தக்கதாக வதிக துரிதமாய் வந்து முத்திக்கு முதல்வனாகிய பரமனைப் பார்த்த வளவில் வரம்பி லின்பம் பெருகித் தெண்டன் சமர்ப்பித் தானந்த வைபவத்தா லிறும்பூ துற்று ளென்றவாறு. 8

509. வந்திடுவ ராகியைம தித்தருளு கின்றார்
சந்ததமு முந்தனடி சார்ந்தவசு ரேசன்
சுந்தரமி குந்ததிரு சத்திதிரி சூலந்
தந்திடவ தைத்தமரர் தங்களைம டித்தான்.

எ - து :—தெய்வசிகாமணியாருடைய தெரிசன வின்ப மடைந்து நிற்கின்ற வராகியாகிய துர்க்கையம்மனை யருட் கண்ணாற் பார்த்து மதித் தனுக்கிரகஞ் செய்கின்றா ரெப்பொழுது முனது பூசையினது நேயம் விடா தர்ச்சித் துன தடி சார்ந்த பத்தனாகிய வசுரேசனாகிய காலநேமி யானவனுக்கு நீ யனுக்கிரகம் பண்ணிச் சுந்தரமானது மிகுந்திராநின்ற சத்தியாகிய வேலாயுதமுந் திரிசூலமுங் கொடுக்க வாங்கி யதனாலே தேவ கூட்டங்களை யெல்லாந் தூளிபடலமாய் மடித்தா னென்று ரரங்க நாயக ரென்றவாறு. 9

510. வேதமறி பூசுரர்கள் வேள்விநலி வித்தும்
வாதைபட வானவரை வந்தமர்வி ளைத்து
மோதவறி யாதவுல கேழுமறி கின்ற
வேதைதர நீவரமும் வேண்டியத ளித்தாய்.

எ - து :—வேதங்களைப் பதக் கிரம சடை பரியந்த மோதுகின்ற வந்தணரது வேள்விகளை யெல்லா நலியப்படுத்தியுந் தேவ கூட்டங்கள் வாதனையாகிய சித்திரவதையாய்த் துடிக்க வந்து சமரினை விளைத்துஞ் சொல்லுதற் கரிய வள மமைந்த வுலக மேழு மிவனது பெயரைக் கூறக் கேட்டளவின் றாமே திடுக்கிட் டழிகின்றன வித்தன்மையாய்த் திரிபுவனத் துக்கும் வேதனையைத் தரத்தக்கதாக நீ வரமான தவனுக்கு வேண்டியதைக் கொடுத்தா யென்றவாறு. 10

511. கொண்டுனது சத்தியினைக் கோலவரை மீது
சென்றுதிரு மாதருகில் சேர்ந்திடுக வென்று
நின்றுபுரி பூசையைவி ரும்புநின தன்பா
லென்றுமகிழ் வாலுலகைக் கண்டருள்க வென்றார்.

எ - து :—மீட்டுந் துர்க்கையினைப் பார்த் தருளிச் செய்கின்ற ரந்தக் காலநேமியினிடத்தி னதிவேகமாய்ச் சென் றுன்னுற் கொடுக்கப்பட்ட சத்தியினைக் கிரகித்துக்கொண்டு கோலாசல உச்சியிலே நீ சென்று ஸ்ரீமகா லட்சுமி தேவியின தருகிலே சேர்ந்திடுக வெக் காலமும் உன்னை அனேக சீவகோடிகளானது புரியாநின்ற திருவாராதனத்தை யன்பா லெக் காலமும் கைக்கொண்டு அவர்க ளிஷ்ட பலங்களைக் கொடுத்து நமது கிரியி லெழுந்தருளி யேழுலகத்துக்கு மருள்புரிவா யென் றனுக்கிரகித்தார் பரந்தாம னென்றவாறு. 11

512. மாதவனு ரைத்திடம கிழ்ந்துமொழி கின்ற

ளோதவரி தாமெனுமு யர்ந்தவுன தன்பால்

வேதமுறை மாமுனிவர் வேதியர்கள் விண்ணோர்

நீதமுட னேபணிய நீயருள வேண்டும்.

எ - து :—இவ் விதமாய்த் துர்க்கையம்மனைப் பார்த்து மாதவனாகிய வரங்கநாயகர் தம தனுக்கிரகத்தினாற் றிருவாய்மலர்ந்தருளிய வளவிலே மகிழ் சிறந்தவளாய்த் தனது திருவாயாகிய சேதாம்பலாகிய மலரை யலர்த்தித் தேன் றுளியைத் துளித்தா லெத்தன்மையோ வத்தன்மையா ளொரு வரங்கேட்கின்றாள் வாரீர் தேவாதிதேவனே யாவராலுங் கூறுதற்கரிய வுமது தன்பாகிய கிருபையினாலே வேதாத்தியயனத்துக் குறை விரிக்காநின்ற வந்தணர்களாகிய முனிவர்க்கங்களும் பிராம்மணக் கூட்டங்களுந் தேவவீட்டங்களு மென்னை முதன்மையாக வந்திக்கத் தக்கதாய் நீ ரருள் புரியவேண்டு மென்றாள் துர்க்கை யம்ம னென்றவாறு. 12

513. மதித்தவளு ரைக்கதிரு வாயலர்ம லர்ந்து

வதித்தவுல கத்தினிடை வாழுமுயிர் கோடி

துதித்தெனது சேவைபுரி வோருனைது திக்கிற்

கதித்தபுகழ் கொண்டகதி சென்றுகளி கூர்வார்.

எ - து :—இந்தப் பிரகாரந் துர்க்கையம்மனவள் கூறிய வரத்தைக் கேட்ட வரங்கநாயகரானவர் தமது செம்பவழம்போன்ற திருவாய்மலர்ந் தருளுகின்ற ரிவ் வுலகத்திலே வாசம் பண்ணுகின்ற வெண்பத்து நான்கு நூறாயிரஞ் சீவ பேதங்களு மென்னைத் துதித் தாலயத்தினை வலமாய் வந்து தெரிசனம் பண்ணுகின்றவர்க ளெல்லா முனையுந் தெண்டன் சமர்ப்பித்துத் துதித்தா லவர்களெல்லா மெவ் வுலகத்தினு மேனின் றுயர்ந்த புகழினைப் பெற்ற வனந்த கல்யாண குண சாம்ராஜ்ய வைபவ மாகிய பரமபதத்தி னித்தியசூரியர்களா யெந்நாளு மழிவின்றி வாழக் கடவரென் றனுக்கிரகித்தா ரரங்கநாயக ரென்றவாறு. 13

514. ஆதிபர னோதுமொழி யன்புடன றிந்து
சோதிமுடி சூரனையெ திர்ந்துசுளி கின்று
ணீதிநெறி யின்றிநிம லன்றனையெ திர்த்தா
யோதியபெ ரும்புகழொ ழிந்திடவு மன்றோ.

எ - து:—அரங்கநாயகராகிய வாதி பரப்பிரம சொரூபரானவ ரருளிச்செய்த வரத்தினை யன்புடனே கேட்டருளிய துர்க்கையம்மனனவ ளவ ரனுமதிபெற் றந்த விடத்தை விட் டகன்று சோதிமயமாகிய நவரத்தினத்தை யபரஞ்சியின் வைத் திழைக்காநின்ற மகுடாபிடேகபதி யாகிய காலநேமியினது சமூகத்தின்கண் ணெதிர்ந்துவந்து கோபக் குரோதத்தோடுங் கூடினவளா யொரு வார்த்தை கூறுகின்றான் நீதி மார்க்க நிலையினை யுணராத மூர்க்க புத்தியினால் நிமலனாகிய வரங்க நாயகனை யெதிர்த்தா யதனாலே திரிலோகமு மோதித் துதிக்கின்ற உனது பெரிய புகழான தொழிந்துபோகத் தக்கதாக வல்லவோ வென்றாள் துர்க்கையம்ம னென்றவாறு. 14

515. இந்திரனை சேனையொடெ திர்ந்துடன்ம டித்தாய்
தந்தவர பாலனம தாலுலக ழித்தாய்
முந்தியப ரன்றனைமு டித்திடவ டுத்தாய்
தந்ததிகழ் சத்தியினைத் தாவெனவு ரைத்தாள்.

எ - து:—காலநேமியினைப் பார்த்து மீட்டுங் கூறுகின்று ளிந்திர மகாராசனை ரத கெச துரக பதாதிகளாகிய நான்கு வகைப்பட்ட சேனைக ளுடனே யெதிர்ந்து தேவ கூட்டங்களை யெல்லாம் வதைபுரிந்தனை சிவன் பிரம்மா முதலாகிய பேர்கள் கொடுத்த வரத்தினாலே திரிபுவனங்களையு மழிதர வந்தனைபாத்திரனாய்ச் சர்வமங்கல குணக்கியனாகிய வரங்கநாயகனைக் கொல்லத் துடித்துத் துணிந்தா யாதலாலே வுனது துர்க்குண வசங்கி யத்தினாலே யென் மனம் வேறுபட்ட தாகையினாலே யானுனக் கருளிய சத்தியினை யென்னிடத்திற் கொடுப்பா யென் றரு ளெவ்வளவு மில்லா தவளாய்க் கேட்டாள் துர்க்கையம்ம னென்றவாறு. 15

516. கடுத்தவளு ரைப்பகனல் பொங்கவசு ரேசன்
கொடுத்ததிகழ் சத்தியினைக் கொள்பவரு முண்டோ
மடித்திடுவ னென்றுவெதிர் நின்றமது சூதன்
விடுத்திடுவ னோவெனது வீரவலி காண்டி.

எ - து:—துர்க்கை யம்மனனவ ளசுரேந்திரனைப் பார்த்துச் சீறிக் கூறிய வார்த்தையினைக் கேட்ட ராசசூடாமணியானவ னக்கினி சுவாலிக்கும் படியாய்ச் சீறி யொரு வார்த்தை கூறுகின்று னொருவருக் கருள் கூர்ந்து கொடுத்தருளிய சத்தியினை வாய்மை தவறி மீட்டு மிவ்

வுலகத்தின்கண் கொள்பவர்களு முண்டோ நீ பரதேவதையாயிருந் துன் பூசனையை விரும்பிக்கொண்ட நீ கால வித்தியாச மறிந்து கேட்கை யாலியா னதற்கு அச்சப்படுவனோ வென் றந்தச் சத்தியை யொப்பித் தென்னை மடிக்கத்தக்கதாக வெதிர்ந்து நிற்கின்ற மதுசூதன னுயிரைப் பிரியா தனுப்புவனோ வெனது வீர காண்டீபத்தினது வலியினைக் காணக் கடவா யென்று சூள் மொழிந்தா னசுர னென்றவாறு. 16

517. சூலமொரு கையினில்சு ழன்றிடவெ ழுந்து
காலனென நின்றவசு ரேசனையி கழ்ந்து
மாலமகிழ் சத்தியைவ லக்கரம ணைந்து
நீலவிழி மாதுலக மேழுருவி நின்றாள்.

எ - து :—காலநேமியானவ னிவ்விதமாகிய விரோத மொழியினைச் செவி தைக்கக் கூறுமளவில் துர்க்கையம்மனுனவள் திரிசூலமான தொரு கரதல கமலத்திலே கறங்கைப்போலச் சுழன்றிடத்தக்கதாக வெழுந்தவளாய்க் காலனாகிய வெமனைப்போன்ற குரூரசாலியான வசுர சூடாமணியை யகன்றவளாய் நாராயண மூர்த்தியானவர் மகிழ்ச்சியை யடையத்தக்கதாகத் தான் முன் வரமாகக் கொடுத்தருளிய வருட் சத்தியினை மீட்டு மவன் றந்திட வாங்கி வலது கராம்புய மலரினுலே யணைத்தவளாய் நீலோற்பலம் போன்ற கண்ணிணையையுடைய துர்க்கை யம்மனுனவ ளாயிர முடியு மிரண்டாயிரங் கையுந் திரிபுவனங்களும் நிறைந்திருப்ப வேழுலகமுங் கடந்த விஸ்வரூபங் கொண்டருளி நின்று ளென்றவாறு. 17

518. அண்டமுந டுங்கவனல் கொண்டவலர் கையிற்
றண்டமழு சூலமொடு சக்கரமி லங்க
மண்டலமெ லாம்புகழ வானவர்வ ணங்கக்
கொண்டல்தவழ் கோலவரை கோயிலின மர்ந்தாள்.

எ - து :—அண்டரண்ட பகிரண்டங்க ளெல்லா நடுநடுங்க வக்கினி சொரூபமா யொளியினைப் பரப்பி யலர்ந்த கராம்புயத்திலே தண்டாயுதமுங் கண்டகோடாலியுஞ் சூலமுஞ் சக்கரமுந் தாங்கிப் பிரகாசிக்கவு மிந்தப் பூவுலகமெல்லாம் புகழவுந் தேவ கூட்டங்களெல்லாம் வணங்கவுந் தனது விசுவ சொரூபத்துடனே மேகங்கள் தவழ்கின்ற கோலாசல வுச்சியின் மணிமயமாய்ப் பிரகாசிக்காநின்ற மணி யாலயத்தி னமர்ந் திருந்தாள் துர்க்கையம்ம னென்றவாறு. 18

துர்க்கை வரலா றுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

# முப்பதாவது: காலநேமி வதை யத்தியாயம்

519. அந்தவர லாறதைய றிந்தவசு ரேந்திரன
மூன் றுகனல் பொங்கி யிடவே
சிந்தனேக லங்கிடம யங்கினன்ம தித்தனன்றி
றற்ப துமன் முன்ன மருளும்
விந்தைபயி லும்பிரம னற்படையெ டுத்தனன்வி
ரிஞ்சனேவ மூத்தி விடவே
வந்ததுக னற்கணேபி றைக்கணேக திர்க்கணேவ
யங்கிடவி ரிந்த ததுவே.

எ - து :—அந்தப் பிரகாரம் வாளாலே கண்டிக்கப்பட்டு வீழ்ந்த கதையின் வரலாற்று முறைமையை யறிந்த வசுரேந்திரனுகிய காலநேமி யானவ னக்கினிச் சுவாலேகள் மயிர்க்கா லூறுஞ் சொலிக்கவு மீசைகள் படபடவென்று துடிக்கவும் வக்கிர தந்த பந்திகள் நெறநெற வென்று கடிக்குந்தோறும் விஷ தாரைகளைப் பொழியவும் புசங்களானது துடிக்கவுங் கோபித்தவனுய் மறுபடியும் மதிமயங்கிக் கலங்கி யாலோசித் தவனுய்ச் சாகச வல்லமையுடைய பிரம்மாவானவர் முற்காலத்திலே வனுக்கிரகஞ் செய்யாநின்ற வதிகப் பிரபாவத்தோடுங் கூடிய பிரம் மாஸ்திரத்தை யெடுத்துத் தோத்திரித் தவருடைய மந்திரத்தை யாவாகனஞ் செய்து வந்தக் கணேயைப் பிரயோகஞ் செய்தா னதிலிருந்து சாகோபசாகையாய் வந்து விரிந்த தக்கினிக் கணேகளும் பிரசண்ட மாருதக் கணேகளு மர்த்த சந்திர பாணங்களுஞ் சூரியாஸ்திரம் முதலாகிய தெல்லாங் கோடானுகோடியா யுண்டாகத் தக்கதாகக் கோரரூபமாய்ப் பிரவேசித்தது பிரம்மாவின் கணே யென்றவாறு. ।

520. கோளகைவெ டித்தன கடற்நிறைவ றண்டனகொ
டுங்கரிந டுங்கி யயர
வாளதுபி றந்துவட மைக்கனலே நுங்கியிட
வானமது தூளி படவே
தோளதனி னீருலகை தாங்கியவர் மாமதிகு
ளங்கியயர் வோடு துயர
நாளதுவ ளந்துநுக ரந்தக னடுங்கிவெயர்
கொள்வதுவு நண்ணி யதரோ.

எ - து :—பிரவேசித்த கோரமாகிய பிரம்மாவின் கணையினாலே வண்டகோளங்க ளெல்லாம் படீரென்று வெடித்தன பெரும்புறக் கடல் முதலாகிய கடல்களெல்லாம் பசையற்றதாய் வறண்டு போய்விட்டதயிராவத முதலாகிய வஷ்ட கசங்களுந் துதிக்கையை மேலே யெடுத்துக்கொண்டு கதறிக் கலங்க வாயாசப்பட்டு வக் கணையிற் பிறந்த வாளானது வடவாமுகாக்கினியை யெல்லா மெடுத்து [1]முழுங்கித்து சக்கரவாளகிரியானது தூளிபடலமாய்ச்சு[2] தொரு தோளினாலே வில் வுலகைத் தாங்காநின்ற வரசர்களுடைய மதியானது மருண்டு தயங்கிப் பிரமித்து வாயாசத்தை யடைந்து துயரப்பட்டு நாளாகிய வவரவ ராயுசாகிய வம்பாரத்தைச் சூரியனாகிய வளவுகாரனாலே யளந்து உயிரை முடிக்கா நின்ற வருளில்லாத [3]கூத்துவனு மிக் கணையின் கடூரத்தா னடுநடுங்கி வேர்வை யருப்பத்தக்கதாகப் பிரவேசித்தது வசுரகுல சூடாமணியின் கணை யென்றவாறு. 2

521. இப்படிவ ருந்திடவ ரும்பிரம னற்படையி
யன்றதிறல் கண்ட வியமான்
கைப்படியு மப்பிரம னற்படைவி டுத்திடக
னற்கொடுக் னன்று கறுவி
முப்புவனம் வெப்புறமு டித்தது[4]யெ துத்ததுமு
குர்த்தமதி ரென்றின் முடுகி
யெப்புவன மெங்கணுமி யன்றசமர் செய்ததுவி
ளைக்கிலக ளைக்கி லதரோ.

எ - து :—இவ்விதமாய் தன் சேனைக் கிரங்கி வருத்தப்பட்டு வருந்திய காலநேமியாகிய வசுரேந்திரனவன் மறுபடியும் பூமியில் வந்து சேர்ந்து வரங்கநாயகன் பேரில் பிரம்மாவின் மந்திரத்தை யுச்சரித் தவர் வரபாலனமாகக் கொடுத்த பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகம் பண்ணி யார்ப்பரித்தா னந்த வஸ்திரமான தனேகங் குரூரமாகிய கோரரூபமாய் வருந்திறத்தைக் கண்ட எசமானராகிய சர்வக்கியனவர் தமது கராம்புயத்திற் படிந்திருக்காநின்ற பிரம்மாஸ்திரத்தை யெதிராய் விடுத்திட வக்கினிச் சுவாலைகளாலே சுவாலித்துக் கோபித்து விடங்களைக் கக்கிக் கொண்டு பிரவேசித்துத் திரிபுவனங்களும் அழல் தணலாய் வெப்பப்பட முடிவு செய்தது ஒன்றோடொன் றிருவர் திறத்துப் படையு மெதிர்ந்த தொரு முகூர்த்த மளவில் திரிபுவனங்களுஞ் சக்கராகாரமாய்ச் சுழன்று தாக்கிச் சமர்செய்து மொன்றுக்கொன் றிளையாததாயுங் களையாததாயுங் கோரத்தை விளைவித்தன வென்றவாறு. 3

[1] விழுங்கிற்று. [2] ஆயிற்று. [3] கூற்றுவனும். [4] எதிர்த்தது.

522. இவ்வகைய ருஞ்சமரு ளுற்றியசு ரன்விடுமி
ரக்கமிலி யென்ற படைதான்
செவ்விதிகழ் வாரிசம மர்ந்ததிரு நான்முகன்றி
ருக்கரம மர்ந்த செயலாற்
பவ்வமதின் யோகமது ணர்ந்தபர மன்கையில்ப
டர்ந்தனப யின்ற பதுமன்
றிவ்வியநெ டுங்கணைவி றற்செயல றிந்தனன்றி
கழ்ந்தவசு ரேச பதியே

,எ-து:—இந்தப் பிரகாரமா யசுர ராசேந்திரனை காலநேமியால் விடுவிக்கப்பட்ட விரக்கமில்லாத வியல்பையுடைய பிரம்மாஸ்திரமானது சிறப்பமைந்த தாமரைங் கமல பீடத்தி னெழுந்தருளி யிராநின்ற நான்கு திருமுகங்களையுடைய பிரம்மாவின் கரகமலங்களிலே போய்ச் சேர்ந்த செயலினாலே திருப்பாற் கடலிலே யனந்தவிமான சேகரரா யறிதுயி லமர்ந்த பரமன் கையிலே மீட்டும் வந் தடைந்தது திவ்வியமாகிய பிரம்மாஸ்திரமானது தனது கணையின் செய்கையு மரங்கநாதன் கணையின் செய்கையு மறிந்தான் வலியால் மிகுந்த வசுர குல சூடா மணியானவ னென்றவாறு. 4

523. பிரமனைவெ றுத்தனனி னைத்திலன்ம றுத்தனன்பி
றந்தவசு ரேசர் களெலா
நிரந்தரம தித்திவர்வ ரத்தினொடி னைத்தவர்க
ளின்றிலரி றந்த பெயரோ
பரந்தவுல கத்திடைது கட்டொகைக ணக்கிலது
காரணமெ னக்கரு தினன்
சுரந்தருள்செ யீசனொடி னைத்தபின்ம தித்தனனத்
தூயபசு பதிக ணையரோ.

எ-து:—தனக்கு இவ்விதமாகிய வர பாலனத்தைக் கொடுத்த பிரம் மாவை மிகவும் வெறுத்தா னதுவன்றியு மவருடைய மந்திரத்தையும் நினையாதவனாய் மறுத்து விட்டான் முன் பிறந்த வலியையுடைய வசுரேச கூட்டங்களெல்லா நிரந்தரமாகிய நாளு நாளு மழியாத வர பலத்தைக் கொடுக்கப்பட்டவர்க ளிவர்க ளென்று மதித்துத் தவம் செய்கின்ற பேர்க ளந் நிலையி னில்லாம லிறந்தவர்க டொகையைக் கணக்கிடில் பரப்பாகிய விவ் வுலகத்திலே யணுக் கூட்டங்களை யெண்ணக் கூடாத காரணமாய் நம்முடைய வசுரக் கூட்டங்களுடைய வாழ்வெல்லாந்

தொலைந்து போச்சு தென்று மதித்துக் கலங்காத மனம் கலக்கங் கொண்டவனுய் தேவ கூட்டங்களுக்காவது வசுரக் கூட்டங்களுக்காவது முக நட்பில்லாமல் ஞாயவருளைச் சுரக்காநின்ற பரமசிவனை நினைத்தவனுய்ப் பாசுபத மந்திரத்தைப் பலகா லுச்சரித்து மதித் தெடுந்தான் பாசுபதக்கணை யென்றவாறு. 5

524. எடுத்தனன ருச்சனைசெய் தேத்தினன்ப ரத்தினையி

றைஞ்சினனன் மந்தி ரமெலாந்

தொடுத்தபின்வி டுத்திடுமம் மறைகள்சொ லு மப்படைது

ரத்திடது ளித்த வவனு

மடுத்தனக டாகமும்வெ டித்தனபொ ரிந்தனம

யங்கியம றிந்தக டறன்

றுடித்தனஉ யிர்த்தொகைந டுங்கினகு லக்கிரிது

கட்படதி சைக்க ரிறெலாம்.

எ - து :—அந்தப் பாசுபதங் கணையை யெடுத்தான் மந்திராவாகனஞ் செய் தர்ச்சித்தான் தாம்பூலங் கொடுத்தான் பாசுபத மந்திரத்தினுலே பலகாலும் வழுத்தினுன் பரமசிவனை இறைஞ்சினுன் பாசுபத மொழிந்த மற்றச் சப்த கோடி மகா மந்திரங்களெல்லா முச்சரித்தா னதன்பின் பக் கணையை விடுத்தான் வேத வாக்கியங்களாலே முக்கியமா யெடுத்துச் சொல்கின்ற வந்த வர பஞ்சரமாகிய சிலீமுகமானது திரிபுவனத்தையு மக்கினிச் சுவாலையாய் விழுங்கினதா மண்டகடாகங்க ளெல்லாம் படீ ரென்று வெடிக்கத்தக்கதாய்ச் சல சமுத்திரமாகிய பெரும் புறக்கடல் முதலாகிய கடலை யெல்லாம் வறளச்செய்வதாய்த் திரிபுவனத் துயிர்களெல் லாம் துடிப்பச் செய்வதாய் மகாமேரு முதலாகிய கிரிகளெல்லாங் கிடுகி டென்று நடுங்கத் தக்கதாய் ஐராதவம் முதலாகிய வஷ்ட கசங்க ளெல்லாம் தூளி படலம் படத்தக்கதாய்ப் பிரவேசித்தது பாசுபதக்கணை யென்றவாறு. 6

525. ஆதவ னுட்கிட மாமதி நெக்கிட

வாரிருள் பக்கமெலாம்

போதவ னற்படை யாழிகள் கக்கிட

போதன்மு தற்படைகள்

சீதர னுக்கிர வாளதை சித்திர

சேமநி திப்படைகள்

கோதறு முத்தலை வேல்கள்கொ தித்தெழ

கோளகை நெக்கிடவே.

எ - து :—அசுரேந்திரனாகிய காலநேமி யென்கின்ற வசுரசூடாமணி யானவன் விட்ட பாசுபதக்கணையானது பிரவேசித்த மாத்திரத்தில் சூரியனுடைய கிரண சமூக வக்கினிகளெல்லாம் வெதும்பப்பட்டுப் போகவும் சந்திரன் நெக்குண்டுபோகவு நிறைந்த விருள் பரந்த தீவாந்தரங்களெல்லாம் அனேக வக்கினிக் கணைகளானது பிரவேசிக்கவும் சக்கராயுதங்க ளனேகங்களை யுண்டாக்கியும் பிரம்மாஸ்திரம் முதலாகிய வஸ்திரங்களையுஞ் சீதரனை சாத்வீக குணத்தினையுடைய நாராயணனது உக்கிர வாள்களுஞ் சித்திர விசித்திரமாகிய பழமையாயிருந்தும் பிரகாச மழுங்காத சப்தகோடி மந்திரங்களால் பிரயோகிக்காநின்ற கணைகளுங் குற்றமற் றிராநின்ற மூன்று சிரசினையுடைய திரிசூலங்களான தக்கினிக் கணைகளைக் கொப்புளித்துக்கொண்டு வுண்டாகவு மித்யாதிய வஸ்திரங் களுக்கும் காரணமாகிய பாசுபதத்தா லண்டகோளகை வெடித்தன வென்றவாறு. 7

526. காளிகள் பக்கமெ லாமதில் சுற்றிட
காமரு சக்கரமும்
வாளிதொ டுத்திட நேரல ருட்கிட
வாயுவெ மூச்சிபெறத்
தோளிணை கொட்டிக ளுதிபர் மிக்கவர்
தோமற தித்திமியென்
றாளிமு கத்தின ராடினர் சக்கர
மாமென சுற்றியரோ.

எ - து :—காளிக் கூட்டங்க ளானவர்கள் கோடானு கோடியர்கள் சக்கரங்கள் திரிசூலங்கள் தண்டங்கள் முதலாகிய வாயுதங்களைத் தாங்கிப் பிரவேசித்துச் சூழ்ந்து கூத்தாடி மீட்டும் வில்லில் கணை பூட்டி யெய்யவும் சத்திராதிகளெல்லாந் திடுக்கிட்டுப் பயந்து நடுநடுங்கவும் பிரசண்ட மாருதக் காற்றுன துண்டாகவு மிரண்டு புசங்களையுங் கொட்டிக் கணுதிபதிகளில் மிகுந்த வலியினை யுடையவர்கள் குற்றமற்ற தித்திமி யென்று சதியோடுங் கூடி நடிக்கவு மாளி முகத்தையுடைய பல திரண்ட கூட்டங்கள் குலாலன் சக்கராகாரமா யாடித் திரிந்தன பூத கணங்க ளென்றவாறு. 8

527. காளிம ணந்தவர் ஞாளியி லேறிய
வயிரவர் தம்கணையு
மீளிக ளாகிய வீரர்வி ளங்கிய
விஞ்சைவி யன்புதுமைத்
தோளியர் வீரமெ லாமது கொண்டிடு
துங்கவ ரங்கர்தெரிந்
தாளிகள் கோடிபி றந்திடு மக்கணை
யரியும்வி டுத்தனரே.

ஏ - து :—அனேகமாகிய காளியர் கூட்டங்களுக்கு நாயகராகிய வீரபத்திரக் கூட்டங்கள் ஞமலி வாகனத்திலேறிய வயிரவக் கூட்டங்கள் வில்லிற் றொடுக்காநின்ற குரூரமாகிய கோர வம்புகளையும் நல்ல பருவத்தோடுங் கூடிய வீராதி வீரர்கள் சூராதி சூரர்கள் முதலாகிய பேர்கள் கதாயுதத்தைச் சுழற்றுகின்ற வித்தையினையுஞ் சக்கரங்களை யுருட்டுகின்ற வலியினையும் வேலாயுதத்தைப் பிரயோகிக்காநின்ற புதுமை யினையு முள்வேலினை வீசுகின்ற வதிசயத்தினையும் வாளை விதிர்க்கா நின்ற செயத்தினையு மெறிவலயத்தை யெறிகின்ற கோரத்தினையுந் திரிசூலங் கண்டகோடாலிகளைப் பிரயோகிக்காநின்ற வல்லபத்தினையுங் கண்டா ரவ ராரென்றால் புசபல பராக்கிரமத்தையுடைய வசுர வீரர்களை யெல்லாந் திரிகாலத்திலும் பிளந்து செயத்தினை யுடைத்தாகிய வரங்க நாயகரானவ ராயிரங் கோடி சிங்கங்கள் முதலாகிய தெல்லாந் தாம் தொடுக்காநின்ற பாசுபதத்திலே பிறந்திடத் தக்கதாய்ப் புண்டரீக புருடோத்தமராகிய வரியானவர் கோரமாய் வருகின்ற பாசுபதக் கணைக் கெதிராய் விடுத்தா ரென்றவாறு. 9

528. கடல்சக்கர கிரிதிக்கினுஞ் சலியாதமர் கலந்து
வடல்மிக்குள புவனத்தினு மடைந்தேயமரா ராற்றித்
திடமிக்குள படையானவை திரிதேவர்க ளுலகுந்
தடையற்றிட சென்றேசமர் செய்தேதளர் கிலதாய்.

ஏ - து :—இருவர்கள் விட்ட பாசுபதக் கணைகளு மொன்றோ டொன் றெதிர்ந்து சப்தசாகரங்களினுஞ் சக்கரவாள கிரியினுந் திக்குதிகாந்தங் களிலு மொன்றுக்கொன்று சலியாமல் சக்கரங்களோடு சக்கரங்கள் மலைந்துந் தண்டங்களோடு தண்டங்கள தாக்கியுஞ் சூலங்களோடு சூலங்கள் தாக்கியும் வேல்களோடு வேல்கள் தாக்கியும் பிரசண்ட மாருதத்தோடு பிரசண்ட மாருதந் தாக்கியு மக்கினிக் கணைகளோடு மக்கினிக் கணைகள் தாக்கியு மிவ் விதமாகச் சலியாததா யுத்தங்களைக் கலந்து செய்து வலியையுடைய திரிபுவனங்களிலேயுஞ் சென்று சமர் செய்து மிப்படிப்பட்ட திடமிகுதியான விரண்டு திறத்தார படையு மனோவதியாகிய பிரம்மலோகத்தினும் பரமபத முதலாகிய திரிலோகங்களிலுஞ் சென்று தடைப்படாததா யொன்றோடொன்று கோரமாய்ச் சமர்செய்து மிளைப்புக் களைப்புத் தளர்ச்சி யில்லாததா யிருந்த திரு திறத்தார் விட்ட கணையு மென்றவாறு. 10

529. சடையான்கையி னொருமாகணை தணந்தேயவ் வடைந்த
படையாழியன் கையின்மற்றோர் கணையும்படர்ந் தனவால்
தடையாவையு மிலதாங்கணை தணந்தேதகர்ந் திடுதல்
உடையானசு ரேசனதைக் கண்டேயுறங் குற்றான்.

எ-து:—ஆயிரத் தெட்டு மாற்றுச் சொர்ணமயமாகிய சடாபார வட்டத்தினையுடைய பரமசிவன் கையில் அசுரேந்திரன் விட்ட பாசுபதக் கணையானது போய்ச் சேர்ந்தது திருவாழிப் படையாகிய சக்கரத்தை யுடைய வரங்கநாயகனது கராம்புயத்தில் மற்றொரு கணை போய்ச் சேர்ந்தது இப்படித் தடைப்படாத வீரத்தைச் செலுத்துகின்ற பாசுபதக் கணையானது தன்னை விட்டு நீங்கிச் சிவன்கையில் போ யொளித்ததைக் கண்ட வசுரேந்திரனாகிய காலநேமியானவன் யூகித்துப் பார்த்து நன்மையமாகிய வெதிர் நிற்கிற வரங்கநாதர் வீரத்துக் கிரங்கி விதியை நினைந் துறக்கம்பட்டுக் கலங்கி மெலிந்தா னென்றவாறு. 11

530. படையானவையும் வெறுத்தான்பினும்
பரமன்றனை வெறுத்தான்
தடையானதை வெறுத்தான்செய்த
தவந்தன்னையும் வெறுத்தான்
கொடையானவையும் வெறுத்தான்கொடுங்
கொடுவாளினை வெறுத்தான்
தொடையானதும் வெறுத்தான்வினை
தொகைதன்னையும் வெறுத்தான்.

எ-து:—இப்படித் தன்னைச் சதிசெய்த பாசுபதக் கணையின் மாறு பாட்டினாலே புழுங்கிக் கோபித்து வசுரேந்திரனானவ னெல்லா வஸ்திரங் களையு மந்தந்த மந்திரங்களையும் வெறுத்துக் கூறினான் பின்பு பரம சிவனையு மவர் கொடுத்த வரத்தையும் வெறுத்துக் கூறினான் பின்பு பாசுபதந் தடைப்பட்டதைக் குறித்து மிகவும் வெறுத்துக்கூறினான் தான் செய்த தவத்தையும் தானபலத்தையும் வெறுத்துக் கூறினான் பின்பு மந்திர வாளினை வெறுத்துக் கூறினான் பின்பு பாணங்களை வெறுத்துக்கூறினான் வினையின் தொகையையும் வெறுத்துக்கூறினா னசுரேந்திரனாகிய காலநேமி யென்றவாறு. 12

531. கனமுற்ற ரக்கர்பதி கவினுற்ற கணைகள்பல
கதமிக்க வலவன் மருமம்
மனனெக்க வுதிரமொடு புழைபட்டி டப்பெருக
வரியைத்து திப்ப மதியா
பனகத்தி றத்தவணை பகையைப்ப டுக்கவொரு
பருதித்தி றத்த பகழி
நினைவுற்றெ டுத்துநர கரியைத்து தித்ததனை
நிமிடத்தின் விட்ட னனரோ.

எ - து :—கனதை பொருந்திய வசுரகுல சூடாமணியாகிய காலநேமி யானவ னழகிய பல கணைகளை வில்லிற் பூட்டிக் கோபக்குரோத மிகுந்தவனு யரங்கநாயகருடைய ரதத்தை நடத்துந் தன்மையனை தாருக னென்கின்ற தேர்ச் சாரதியினுடைய மார்பகத்தைப் பல துவாரப்படத்தக்கதாக விட்டுத் துளைத்தா னதனாலே மனம் நெக்குண் டுருகினவனு யரியாகிய நாராயண மூர்த்தியைக் குறித் தென்னையனே யிவ்விதமாக வசுர னென் மார்பகத்தைத் துளைக்க வதனு லுதிர வெள்ளம் பெருகவும் பார்த்தும் பாராதவரைப்போ லவனைச் சம்மாரஞ் செய்யாம லிருப்ப துமக்குத் திருவிளையாடலோ வென்கின்ற மொழியைக் கேட்ட வசுரேந்திரனுனவன் மறுபடியுஞ் சீறிக் கொதித் தாக புத்தியால் மதித் தாதிசேட வணையை உடைத்தாகிய வரங்க நாயகரைச் சம்மரிக்க நினைத் தனேக வீராதிவீரருடைய உயிரினை யுண்டு கைபடிந்த திறமுள்ள நாரசிம்ம மூர்த்தியைத் துதித்துச் சிஞ்சுமார சக்கரத்தை யொரு நிமிடத்திலே விட் டார்ப்பரித்தா னென்றவாறு. 13

532. கரியைத்து ரத்திகட லதனைச்சு வற்றிபல
கனலைத்த ருக்கி கவினு
மரியைத்து ரத்தியடல் மலையைப்பொ டித்துநிக
முகிலத்தை யட்ட பொழுதே
பருதிப்பெ யர்க்கடவுள் மதியுற்ற நற்கதிர்கள்
பசுபுத்ர பக்க மதெலா
நெரியத்த கர்த்துவட வனலைப்பொ டித்துநிகழ்
நெடுவுக்ர சக்ர மெனவே.

எ - து :—அந்தச் சிஞ்சுமார சக்கரம் பிரவேசித்த மாத்திரத்தி லஷ்ட திக்கிலுள்ள வயிராவத முதலாகிய வானைகளை ஓடத்தக்கதாகச் செய்தும் பெரும் புறக்கடல் முதலாகிய சாகரங்களைச் சுவறச் செய்தும் பல வக்கினி சமூகங்களைக் கக்கியு மழகாகிய சிம்மக் கூட்டங்களை யெல்லாந் துரத்தியு மகாமேருவையு மதைச் சூழ்ந்த வஷ்ட குலாசல கிரியையும் பொடிப்பொடியாய்த் தகர்த்தும் பூமியையெல்லாம் பிளவுபடச் செய்துஞ் சந்திராதித்த ரமுத தாரைகளைச் சொரிகின்ற கிரண சமூகங் களையும் பசுபுத்திராள் முதலாகிய வனைவரையு நெரித்துப் பொடியாக்கியும் வடவா முகாக்கினி கூட்டங்களை யெல்லாம் பொடிப் பொடியாய் நொறுக்கியுங் கோரரூபமாய்ப் பிரவேசித்தது நீண்ட உக்கிராகாரமாகிய சிஞ்சுமார சக்கர மென்றவாறு. 14

533\. வருமட்ட பதிசிவனு நினைவுற்ற வரிகணைக
ளதிரச்செ றுத்து வடிவேல்
பருதிக்க ணைக்குருதி வருணப்ப டைப்பகரு
நிருதிக்க ணைப்ப வனனூர்
சுருதிச்சொ லக்கணைகள் பிரமப்ப டைக்கணைகள்
சுலவுற்ற சக்க ரமெலாம்
பெருகுற்று உக்ரமொடு நடைபெற்று பெட்பினொடு
பெயர்வுற்ற மிக்க விடமே.

எ-து:—பிருதிவி முதலாகிய பஞ்சபூதங்களுஞ் சந்திர சூரிய ரான்மாவாகிய வேண்டிய வடிவாய் வருகின்ற சிவனு மதிக்காநின்ற சிஞ்சுமார சக்கரத்தி லனேக நாராயணாஸ்திரம் பிறந்ததன் பின்பு வண்டங்க ளெல்லா மதிரத்தக்கதாகிய கோபத்தோடுங் கூடிய வேலாயுதங்கள் பிறந்த ததன் பின்பு சூரியாஸ்திரங்க ளுதிரங்களைக் கக்காநின்ற வருணாஸ்திரங்கள் நிருதியாஸ்திரங்கள் பிரசண்ட மாருதாஸ்திரங்க ளதர்வண வேதங்களில் சொல்லாநின்ற பல வஸ்திரக் கூட்டங்களும் பிரம்மாஸ்திரங்களும் சுழலும்படியாகிய சிஞ்சுமார சக்கரங்களு மனந்த கோடிகளா யதினின்றும் பெருகி உக்கிராகாரமாகிய நடையைப் பெற்றுப் பெருமிதம் பொருந்தி மிகுந்த விடங்களைக் கக்கிக்கொண்டு பிரவேசித்த தென்றவாறு.

534\. அரிசக்ர வுக்ரமொடு வருதற்கு றித்தபர
னதனைத்து ரக்க வதுவுஞ்
சரியுற்று மற்சமர்செய் கிரியைத்து ளைத்துவெழு
கடலுற்ற நற்பு ரியெலாம்
பொரியத்தி ரிப்புவன மதினுற்ற உத்தமர்கள்
புகழுத்தி சைப்ப தியரு
மிரியத்து ரத்திசவு மியமிக்க வப்படைகள்
மினலைத்த டித்து மிகவே.

எ-து:—இந்தப் பிரகாரம் பிரளய கால ருத்திரனைப் போலச் சீறி வருகின்ற சிஞ்சுமார சக்கரத்தைக் கண்ட பரமனுன வரங்கநாயகரானவ ரதற் கிணையான சிஞ்சுமார சக்கரத்தை யெடுத்துப் பிரயோகித்தாரிந்த விரண்டு படைகளுஞ் சம பலமா யுலகிலுள்ள பர்வதங்களை யெல்லாம் பொடிப்பொடியாய்ச் செய்துஞ் சப்த சாகரங்களைச் சூழ்ந்த

தீவாந்தரங்க ளெலலாம் பொரிந்து போகத்தக்கதாகச் செய்துந் திரி புவனத்திலுள்ள சன்மார்க்கரை யெல்லாந் தகிக்காமல் குளிர்ந்த வமிர்த தாரைகளைப் பொழிந்து குளிரச் செய்ததா லவ் வுத்தமர்க ளெல்லா மந்தப் படைகளைப் புகழ்ந் துருகிக் கைகூப்பி வந்தனை செய்தார்கள் திக்கு திகாந்தங்களைக் காவல் செய்யாநின்ற விந்திரன் முதலாகிய வெண்மரு மோடத்தக்கதாகத் துரத்திச் சவுமிய குண மங்கள சுபகர ரஞ்சிதமாகிய சோதிப் பிரகாசத்தோடு கூடிச் சமர் செய்த வப் படைக ளென்றவாறு. 16

535. சனகற்க ருட்பரமன் பதவர்ச்ச னைச்செய்தவண்
படருற்ற சத்தி பயனும்
வினையைத்தெ ரித்தநய கரடக்க தக்களிறின்
விறிபெற்ற வுக்ர பதியுஞ்
சினவிச்சி வத்தையரி பிரமற்கு றித்ததவ
சிறுமைக்கி ரங்கி சிலதாய்
மனமிக்க நெக்குருகி மதியைத்தி ருப்பிசமர்
மனமுற்று மத்த னெனவே.

எ-து:—அப்படிச் சமர் செய் திளையாத விரண்டு சிஞ்சுமாரச் சக்கரமும் சனகன் சனந்தனன் சனற்குமாரன் சனந்தன னெனனும் பிரம்ம புத்திரர் களாய் ஞான ரஞ்சித சுபலக்ஷண விலக்ஷணங்களோடுங் கூடிய பேர்களுக் கனுக்கிரகஞ் செய்யும்படியாகிய புருஷோத்தமருடைய பாத தாமரையிலே வந் தவ்விரண்டு கணைகளு மாராதனஞ் செய்கின்ற வலியினையுடைய பிரயோசனத் தொழிலைக் கண்டான் மிகுந்த மும் மதங்களைப் பொழி கின்ற யானைக்குச் சமதையாகிய கோபக்குரோதங்களைச் செலுத்துகின்ற உக்ர பதியான ராக்ஷச சூடாமணியாகிய காலநேமியானவன் கோபித்துக் கூறுகின்றான் சிவனையும் நாராயண மூர்த்தியையும் பிரம்மதேவனையுங் குறித்துத் தான் தவஞ்செய்த சிறுமையினு லிவர்கள் கொடுத்த பாசுபதக் கணைகளையுஞ் சிஞ்சுமார சக்கரமும பிரம்மாஸ்திரமும தன்னுடைய வுத்த சனுகத்துக் குதவாமல் போனதற்காக விரங்கினவனுய் மன மெலிந்து நெக்குருகி இம மூவரு மொன்றுயிருந்தும் பிரிவாய வரங்களைக் கொடுத்து மீட்டு மவ் வரங்க ளுதவாம லரங்கநாயகராய் வந்து தடுத்தா லிவரை யெவ்விதத்திலேயும் விடலாகாதென்று மனதைத் திடச் சித்தப்படுத்தி னவனுய்ச் சமர் செய்யக் குறித்துப் பிரமித்தா னென்றவாறு. 17

536. கடகக்க ரத்தவனு மினல்சுற்றி வட்டணைகொள்
கவினைத்த ருக்கி சுழலா
வடல்பெற்ற வுக்ரபதி சினவித்த ருக்கிவரு
மனைதைக்கு றித்த பொழுதே
நினைவுற்ற சக்ரதர கரமுற்ற சற்பரம
னிலைபெற்ற நித்ய வியமான்
சுடர்பெற்ற சக்ரமதை விடவுற்ற வப்பொழுதில்
சுருதிக்க திர்ச்சு ழலல்போல்.

எ - து:—இவ்விதமாகிய மோகத்தைத் தீர்ந்த காலநேமியானவன் கடகமாகிய வாளையுருவிச் சிறகோடுந் திரிகின்ற சிம்மவேறுபோல ரதத்தை விட்டு நிலத்திற் பாய்ந்து முன்னடி வைத்துப் பின்னடி வாங்கிக் குலாலன் சக்கரத்தைப்போலச் சாரிகை சுழன்று அவ் வாளாயுதத்தினுடைய மின்னற் பிரகாசத்தினுல் மேகசாலங்களுடைய மின்னலையெல்லாங் கருகச்செய்துந் திரிகாலத்தி லுண்டாகிய வரக்கருடைய வலிகளையெல்லாந் தானொருவனுய்க் கிரகித்த சாமர்த்தியத்தோடுங் கூடிய உக்கிரபதியாகிய வசுரேந்திரனைவன் கோபித்துத் தருக்குற்று வருகின்ற காரணத்தைக் கண்ட காலத்தி லிதை நினைந்த சாத்வீக குண' ரஞ்சித சுகுண ஞான பரிபூர்ணமாய்ச் சக்கரத்தைக் கராம்புய மலரின்கண்ணேந்தி யென்று மழியாத நிலைபெற்ற நித்தியத்தோடுங் கூடிய வேத சொரூப புருஷோத்தம வியமானனுகிய் வரங்கநாயக ரானவர் ஆயிரங் கோடி சூரியப் பிரகாசமாகிய சிஞ்சுமார சக்கரத்தை யெடுத் தவன் பேரில் பிரயோகித்தா ரந்தச் சக்கரமானது வேத சொரூபமாகிய சூரியனைப் போலச் சுழன்று பிரவேசித்த தென்றவாறு. 18

537. கனமிக்க வுக்ரகணை பலவைப்பெ ருக்கிவட
வனலைக்க ருக்கி யொளிரா
மினலைத்த ருக்கியிடி யவையைக்கு றுக்கிகுல
கிரியைக்க லக்கி மிளிரா
கனலுற்ற வக்கடுவை சினவிக்கொ ழித்துபுகை
கருவைக்கு றித்து கணியா
ரினமுற்ற ரக்கர்களை களைவிக்க வுற்றதுநல்
லிரவிப்பெ யர்ப்ப டையரோ.

எ - து:—அப்படி வரங்கநாயகரானவர் பிரயோகித்த சிஞ்சுமார சக்கரமானது கனத்தை பொருந்திய பல கணைகளைப் பெருக உண்டாக்கின தாய் வடவா முகாக்கினி சமூகங்களை யெல்லாங் கருக்கினதாயும் பிரகாசித்தும் மேகசாலங்களி லிருக்கின்ற மின்னற் கூட்டங்களை ஒளி மழுங்கச்செய்துந் தருக்குற்று மிடியினது கூட்டங்களை யெல்லாங் குறுகச் செய்து மஷ்ட குலாசல பர்வதங்களை யெல்லாங் கலங்கச் செய்து சுவாலித்து மக்கினியைக் கக்காநின்ற முற்காலத்திற் பிறந்த ஆலகால விஷத்தைக் கோபித்துச் சீறி வேறுபடுத்தியு முக்கிரத்தினால் புகைமண்டலங்களை உண்டாக்காநின்ற தாமத குணத்தினா லரங்கநாயகரை மதியாத விராக்கத ரென்கின்ற தேவப்பயிருக்குக் களையாகிய களைகளை விளைவிக்கத் தக்கதாயும் பிரவேசித்தது சிஞ்சுமார சக்கர மென்றவாறு. 19

538\. கடகத்தின் வெட்டியதை துணியப்ப டுத்தகர
கரடக்க ளிற்றி னிணையாத்
தடமுற்ற சக்ரமதை துணியப்ப டுத்தவொரு
கரமுற்ற கடக மதனால்
திடமுற்ற வக்குருசில் புடையப்ப டுத்ததிறல்
புனிதத்தி றற்ப டையுமே
நடையுற்ற ரக்கர்பதி கடகத்தை வெட்டிசிர
மதனைத்து ணித்த ததுவே.

எ - து:—அப்படிப் பிரவேசித்து வருகின்ற சிஞ்சுமார சக்கரத்தைக் கண்ட வசுரேந்திரனாகிய மும்மதங்களைச் சொரிகின்ற யானை போன்றவனாலோசனையினால் யூகித்து மதித்துத் தன்னுடைய வாளினாலே யந்தச் சிஞ்சுமார சக்கரத்தை யிரு பிளவாய்க் கண்டித்துக் கீழே தள்ளுவோமென் றவ் வாளினாலே திடம் பொருந்திய வசுரபதியானவ னெதிர்த்துப் புடைத்துத் தாக்கி வெட்டின மாத்திரத்தில் புனிதமாகிய வெற்றி மிகுந்த வச் சிஞ்சுமார சக்கரமானது நல்ல நடையைப் பொருந்தி அவ் வரக்க ராசன் வாளை யிரு பிளவாகக் கண்டித்துக் கீழே தள்ளித் தன்னை வெட்டத்தக்கதாகப் புடைத்த காலநேமியினுடைய சிரத்தைக் கண்டித்துக் கீழேதள்ளிற் றென்றவாறு. 20

539\. கிரியுற்ற ரக்கர்கிளை வனமுற்ற வப்படையை
குறுகிக்க னற்கொ ளுவியே
கருகுற்ற வப்பொழுதி னடலைப்பெ ருக்கிகன
கதிருற்ற சக்ர படையு
முருவிக்கி ரிப்பிளவு படவட்டு நற்புனலின்
முழுகிக்கி ரிக்கண் வரவே
பெருகித்தி ரைக்கடலின் வரவுற்ற சக்ரபெயர்
குளமுற்று பெட்பின் முழுகி.

எ - து :—காலநேமியாகிய வசுரேந்திரன் சிரசைக் கண்டித்துக் கீழே தள்ளின பின்பு சிஞ்சுமார சக்கரமானது பர்வதங்களி லொளித்தவர்களையும் வனங்களி லொளித்தவர்களையுந் தீவாந்தரக் கடல்களி லொளித்தவர்களையு மண்டரண்ட பகிரண்டங்களில் மூலபலமா யிருந்த வசுரக் கூட்டங்களையு முடுகி வக்கினிப் பிரவேசமாய்க் கருக்கின பின்பு நீருகிய சாம்பலாய்ப் பர்வதமாய்க் குவித்த பின்பு கோடி சூரியப் பிரகாசமாய்க் கனதை பொருந்திய கிரண சமூகங்களை விரிக்காநின்ற சிஞ்சுமார சக்கரமுஞ் சக்கர கிரியைப் பிளந் துருவிப்போய்ப் பாதாள கங்கையில் மூழ்கி யதைக் கிரகித்து வந் தம் மலையில் பெருகி வரத் தக்கதாய்ச் சக்கர தீர்த்தமா யரங்கநாயகருடைய கடாக்ஷ வீக்ஷண்ய பரிபூரணத்தினுல் தான் மூழ்கிப் பிரகாசஞ் செய்த தென்றவாறு. 21

540. அறிவுற்ற வப்படையு மரியைத்து தித்துவவ
னலர்பத்ம சுத்த வடியைக்
குறியிட்டு சுற்றிவர வதனைக்கு றித்தபர
குணமிக்க சக்ர படையைப்
பரிவுற்று நற்கருணை பெருகத்த ரித்துகர
பதுமத்தி ருக்க வெவையுந்
தெரியுற்ற நற்பரம பதமுற்ற வப்பரம
செயலைக்கு றித்த தருவே.

எ - து :—அதி தீவிர பக்குவமாகிய வறிவினையுடைய வந்தச் சிஞ்சுமார சக்கரமு மாயிர நாமதேயத்தினுலே நாராயணருடைய கீர்த்தியைத் துதிசெய் தவருடைய வலர்ந்த செந்தாமரைக் கமலம் போன்ற பாத பத்மங்களை மூன்று தரம் வலம் வந்த வரலாற்றை யறிந்த பரமபத நாயகரானவர் குணரஞ்சித விகசித சுந்தரமாகிய வந்தச் சிஞ்சுமார சக்கரத்தைப் பார்க்குந்தோறுங் கருணை கூர்ந்து பெருகினவராய்த் தமது கராம்புயத்தில் முன்னைபோலத் தரித்தா ரந்தச் சிஞ்சுமார சக்கரமானது பரவாசுதேவனுடைய கிருபாநோக்க வீக்ஷண்ய பரிபூரணத்தை நோக்கி நோக்கி மகிழ் சிறந்திருந்த தென்றவாறு. 22

541. பிளந்த மாவினம் பிளந்தன குஞ்சரம் பெருகும்
பிளந்த தேரினம் பிளந்தன கவசத்தின் பெற்றி
பிளந்த வஞ்சர்கள் முடியினம் பிளந்தன புட்டில்
பிளந்த பாகர்கள் மார்பினம் பிளந்தன பெரும்பேய்.

எ - து:—அப்படி யரங்கநாயகருடைய சார்ங்க வில்லிற் பூட்டி யெய்கின்ற கணைமாரியினாலே பிளக்கப்பட்டது குதிரைக் கூட்டங்களானது வன்றியும் யானைக் கூட்டங்க ளெல்லாம் பிளந்துநின்றன பெரிய ரதங்க ளானது குத்துக்கால் வேறு கொடுங்கை வேறு பாவுபலகை வேறு சட்டங்கள் வேறு யழிந்துநின்றன வச்சிர கவசத்தின் பெருமிதமானது பிளந்துபோயிற்று வஞ்சகர்களாகிய வசுரர்கள் மவுலிகள் பிளக்கா நின்றன அம்பறுத் தூணிகள் பிளந்தன பாகர்களாகிய தேர்ச் சாரதிகளான வர்கள் பிளந்துநின்றனர் மார்பகங்க ளெல்லாம் பிளந்துநின்றன பெரும்பேய்களெல்லாம் பிளந்துநின்றன வென்றவாறு. 23

542. கரந்த தேரினங் கரந்தன வரக்கர்தங் கணங்கள்
கரந்த மன்னர்கள் கரந்தன சேனையின் கணத்தோர்
கரந்த வாரணங் கரந்தன கனவட்டத் தொகுதி
கரந்த வில்லினங் கரந்தன கணைகளின் கனைப்பு.

எ - து:—தூளி படலமாய்ப் போ யொளித்துப் போச்சுது தேர்ப் பந்திக ளெல்லா மரக்கர் கூட்டங்களெல்லா மொளித்து ராசராசாதிக ளெல்லா மோடி யொளித்தார்கள் சேனாதிபதிக ளெல்லா மோடிப் போனார்கள் யானைப் பந்திகளெல்லாம் வெகு தூரத்திலே ஓடிப்போய் விட்டது பிரசண்ட மாருதக் காற்றிலே பூளைப்பஞ்சுபோ லொளித்து நின்றன குதிரைப் பந்திகளானது ஒளித்துப் பதுங்கிப்போச்சு தசுர காண்டீபங்க ளெல்லாம் வெகு தூரங்களிலே ஒளித்துப் பதுங்கிநின்றன தெய்வதப் படையினுடைய சப்தங்களெல்லா மடங்கி ஒளித்தன வென்றவாறு. 24

543. தலைமி தந்தன தாள்களு மிதந்தன சலியா
நிலைமை யாகிய வாரண மிதந்தன நீசர்
குலைவு றும்பரி மிதந்தன குடைமிதந் தனவால்
சிலைமி தந்தன வசுரர்தங் குருதியிற் செறிந்தே.

எ - து:—பிணக் குன்றமாய்க் குவிந்த நாற்படையினுடைய விரத்த வெள்ளங்களிலே யென்னென்ன மிதந்தன வென்று லசுரர்கள் சிரங்கள் மிதந்துநின்றன வவர்களுடைய கால்களெல்லாங் கண்டதுண்டமாய் மிதந்துநின்றன வொரு காலத்திலு மசைவில்லாம னிலையா யிருக்கின்ற வானைக் கூட்டங்களெல்லா மிதந்துநின்றன நீசர்களாகிய வசுரக் கூட்டங்க ளேறி நடாத்துகின்ற குதிரைப் பந்திகளெல்லா மிதந்துநின்றன தவள சத்திரக் குடைக ளெல்லாங் காம்புகள் கண்டிக்கப்பட்டு மிதந்துநின்றன வீராதிவீரர்கள் சூராதி சூரர்களுடைய வில்லுகளுங் கண்டதுண்டப்பட்டு மிதந்துநின்றன வென்றவாறு. 25

544. பரந்த பாரிடம் பரந்ததாற் கழுகினப் பந்தி
பரந்த கூளிகள் பரந்ததா லிடாகினிப் பரப்புப்
பரந்த நாயினம் பரந்ததா னரிகளின் பரப்புப்
பரந்த மோகினி பரந்ததாற் காளியின் பந்தி.

எ-து:—அந்த ரணக் களத்திலே நிறைந்து கூடிநின்றது பிசாசுக் கூட்டங்களானது நிறைந்துநின்றது கழுகின் கூட்டப் பந்திகளானது நிறைந்துநின்றது கூளிக் கூட்டங்க ளிடாகினிக் கூட்டங்களானது பரந்து நின்றது சுவானக் கூட்டங்கள் பரவியிருந்தது நரிப் பரப்புகளானது பரந்து நின்றது மோகினிக் கூட்டங்களானது நிறைந்துநின்றது காளிகளின் பந்தி யென்றவாறு. 26

545. நெரிந்த தேரினம் நெரிந்தன குதிரைகல் லணைகள்
நெரிந்த யானைக ணெரிந்தன கிம்புரி நீளம்
நெரிந்த மாமணி நெரிந்தன துதிக்கைகால் நெற்றி
நெரிந்த பட்டங்க ணெரிந்தன வீரர்நீண் முடிகள்.

எ-து:—அந்தச் சமரபூமி யிரத்த வெள்ளத்தி னெரிந்துபோச்சுது தேர்ப்பந்திகளெல்லாங் குதிரையின் கல்லணைக ளெல்லாம் நெரிந்து போச்சுது யானைகளெல்லாம் நெரிந்துபோச்சுது கிம்புரிக் கோடெல்லாம் நெரிந்துபோச்சுது மாறி ஒலிக்காநின்ற யிணைமணிக ளெல்லாம் நெரிந்து போச்சுது துதிக்கை கால் மத்தகம் வீரபட்டங்க ளிவையெல்லாம் நெரிந்து போச்சு தென்றவாறு. 27

546. காளிக் கூட்டங்க ழுகினங் காரியர்
மூரி வெள்ளநி ணந்தின் றுமுந்திய
சோரி தன்னைக்கு டித்துச்செ ருசதாய்ப்
பாரி சென்றுந டனம்ப யிலுமால்.

எ-து:—காளியர் கூட்டங்களுங் கழுகின் றெருகுதிகளும் வயிரவரது வாகனமாகிய வலியினையுடைய வெள்ளங்களு மச் செங்களத்தின்கண் ணிணங்களைத் தின்று தெவிட்டின மாத்திரத்தி னிரத்தப் பெருக்கினைக் குடித்து லாகிரி யேறி பாரியா யோடி நடனங்கள் புரியு மென்றவாறு. 28

547. கவந்த பந்திக ளாடக்க ணக்கிலா
தவந்த னைச்செய்ய சுரப்பி ணக்குவை
சிவந்த பூமியைச் சூழ்ந்தன சீறியே
நிவந்த டாகினிப் பேய்கணி றைந்தவால்.

எ - து :--தலை யறுந்த வுடற் குறையானது பந்திபந்தியாய் நின்று நடிக்கவும் பாவங்களைச் செய்கின்ற வசுரப் பிணக் கூட்டங்களானது சிவந்த பூமியாகிய ரணகளத்தின யணையைக் கட்டினதுபோலச் சூழ்ந்தன கோபித்து நிமிர்ந்த டாகினி கணங்கள் மோகினி கணங்கள் பிசாசுகூட்ட முதலானது மக் களமெல்லா நிறைந்தன வென்றவாறு. 29

548. பந்தித் தென்னப்ப யிலசு ரத்தலை
சிந்து கின்றதைச் சீறியெ டுத்தபின்
விந்தை யாகவம் மானைவி னோதத்தால்
பந்தி யாய்க்காளி யாடல்ப யிலுமால்.

எ - து :—கயிற்றிலே வரிசைபெறக் கட்டினதுபோன்ற வசுரர்க டலையானது சிந்திக்கிடத்தலைப் பார்த்துக் கோபித் தெடுத்த பின்பு விந்தை பெறத்தக்கதாக விநோதத்தா லம்மானையாடிப் பந்திபந்தியாய்நின்று காளிக் கூட்டங்களான தாடலைப் பயிலு மென்றவாறு. 30

549. செங்க ளத்திற்கு டர்பின்னற் சேரலை
யங்கண் மேவுகொ டிக்கழு வான்றதோர்
துங்க மாம்பருந் துக்குலந் தூண்டில்சேர்
மங்கி டும்வலை யென்னம யங்குமால்.

எ - து :—அந்தச் சிவந்த ரணகளத்திலே குடரானது பின்னலாய்ச் சேர்ந்திருப்பதனை யவயவங்களாற் குறைவின்றிக் கொடியாகிய காகங் களுங் கழுக்களும் பெரிய வுருவத்தோடுங் கூடி விசயத்தினையுடைய பருந்துக் கூட்டங்களும் பார்த் திது தூண்டிலோ வலது வலையோ வென் றையுற்று மயங்கித் திரியு மென்றவாறு. 31

550. அசுரரெலாம் வீந்ததற்பி னரங்கநா யகனுமவர்க்
கருள்கூர்ந் தன்பாய்ப்
பசுவனைய வமரரெலா மெவ்வண்ணம் படர்ந்தனர்கள்
வலவ பார்த்து
யெசுமறைபோல் வருதியென்று ரவன்றானு மமர்க்களத்தி
லிசைவாய்ச் சென்று
திசையினர்கள் புகழ்மருத்து விருவர்கடா முயிருடனே
திகழக் கண்டான்.

எ - து :—இவ்விதமா யசுரக் கூட்டங்களெல்லா மிறந்துபோனவுடனே யரங்கநாயகரானவ ரருள்கூர்ந்து கருணைக்கடலாய பரமன் றனது காருணிய வன்பினாலே பசுவினுக்குச் சமதையாகிய புண்ணிய சரீரிகளாகிய தேவ கூட்டங்க ளெல்லாங் காலநேமியினா லதப்பட் டெங்ஙன் மூர்ச்சித்திருக் கின்றார்க ளதைச் சோதித்துப் பார்த்துத் தாருகனே நீ வந்து சேதி சொல்லக்கடவ தென்றளவி லந்தச் சாரதியானவன் யெசுர் வேதம்போ லங்ஙனம் விட்டு நீங்கி யுத்தகளத்திற் சென்று சோதிச்சுப் பார்க்கு மளவி லுறுப்புக ளெல்லாங் குறைவுபட் டிந்திரன் சயந்தன் முதலாகிய பேர்க ளெல்லாம் வெக்குவேறுபட்டு மரணமூர்ச்சை யடைந்தார்க ளந்தத் தேவ கூட்டங்களிலே திசைத் தேவர்களால் புகழப்படும் இரண் டச்சுவினி தேவர்கள் மாத்திர முயிர் தப்பிக் கிடப்பதனைக் கண்டா னென்றவாறு. 32

551. மகிழ்சிறந்தான் களிகூர்ந்தா னவர்தம்மை யழைத்துடனே
மால்முன் னின்றான்
முகில்கண்ட மஞ்ஞையெனக் களித்தவரா யவரடியில்
வீழ்ந்தார் முன்னோன்
பகிரதிதங் கியபாத மடைந்தனர்கட் கருளளித்துப்
பரமன் றானு
நெகிழ்மனத்தால் சஞ்சீவி யுளதாக்கி மருத்துவரை
நோக்கிச் சொல்வார்.

எ - து :—அப்படியாய்த் தாருகனாகிய தேர்ச் சாரதியானவ னந்த விரண்டு மருத்துக்களைப் பார்த்த மாத்திரத்தின் மகிழ்வினாலே சிறந் தோங்கினான் களிப்படைந்தா னதன் பின் பந்த விருவர்களையு மழைத்துக் கொண்டுபோ யரங்கநாயகர் முன்னே நின்றா னப்போ தந்த மருத்துக்க ளிருவரும் மேக சாலத்தைக் கண்ட மயிலினைப்போலக் களிப்பை யடைந்தவர்களா யந்த வரங்கநாயகர் பாதத்திலே தெண்டன் சமர்ப் பித்தார்க ளப்போது முன்னவராகிய நாராயண மூர்த்தியானவர் பாகிரதியாகிய தேவகங்கையானது தங்கியிராநின்ற பாதத்துக் கன்பு பூண்ட மருத்துவர்க் கருளளித்துப் பரமனானவர் மரண மூர்ச்சையடைந்த தேவ கூட்டங்களுக்காக உருகிய மனதினாலே யந்தக் கோலாசலத்திலே சஞ்சீவியை யுண்டாக்கி யந்தத் தேவமருத்துக்களைப் பார்த்துக் கூறுகின்றா ரென்றவாறு. 33

552. துதிபெறக்கொண் டேகிநீர் தேவரையெ லாமெழுப்பி
யென்முன் னுய்க்கக்
கதுமெனவே போகிரென்ற ரவர்தாமுங் கருணையுடன்
களத்திற் சென்று
சதுமுகன்றா தையைநினைக்கச் சஞ்சீவி யதனாலே
தழைத்த தேவர்
புதுமைபெற வெழுந்திடவே யரங்கநா யகனருளைப்
புகழ்ந்து நின்றார்.

எ - து :—அரங்கநாயகரானவர் தமது திருவாய்மலர்ந்தருளுகின்றா ரிந்தச் சஞ்சீவியாகிய சந்தானகரணி சல்லியகரணியைக் கொண்டுபோய்ப் பிளவுபட்டுத் துளைபட்டு உறுப்புச் சிதைந்த வுடலினை யெழுப்பி யெமது சந்நிதானத்தின் கொண்டுவரக் கடவீ ரென் றவர்களை யதிக துரிதமா யனுப்ப வந்தத்தேவ மருத்துக்களானவர்கள் கருணையுடனே ஒருகணத்திலே போ யந்தத் தேவ கூட்டங்கள் மரணமூர்ச்சை யடைந்த ரணக்களத்திலே சதுர்முகனுக்குப் பிதாவாகிய வரங்கநாயகரை நினைத்த மாத்திரத்திலே யந்தச் சஞ்சீவிக் காற்றானது பிரவேசித்த வளவில் தழைத் தெழுந்த தேவாதிகளெல்லா மரங்கநாயகரைத் தெண்டன் சமர்ப்பித்துப் புகழ்ந்து நின்றார்க ளென்றவாறு. 34

553. ஆடினர்கள் பாடினரவ் வரங்கநா யகன்புகழை
யமர ரெல்லாந்
தேடினர்கள் மறைத்துதியைத் தெளிந்தனர்க டேவாதி
தேவன் றன்னை
நீடியதம் மனமுருக நிகழ்த்தினர்கண் ணாயிர னு
நிமலன் றன்னைக்
கூடினர்க ளிருகமல பதமடைந்தா னந்தத்தால்
குறைவு தீர்ந்தார்.

எ - து :—தெய்வ மருத்துக்கள் கொண்டுவந்த சல்லியகரணி சந்தானகரணியினாலே எழுந்த தேவ கூட்டங்களானவர்க ளாடினார்கள் பாடினார்க ளந்த வரங்கநாயகனது புகழினைக் கூறுகின்ற வடியார்களைத் தேடித் திரிந்தார்கள் வேத வாக்கியங்களை யெல்லாந் தெளிந்தார்கள் தேவாதி தேவனை நீடிய தமது மனமானது உருகத்தக்கதாக வேதாந்தங் களாற் றுதித்தார்கள் கண்ணாயிரமுடைய விந்திரனு மிதர தேவதைகளுங் கூடினவர்களா யிரண் டுபய சரணாரவிந்தத்திலே தெண்டன் சமர்ப்பித் தானந்த வெள்ளத்தின்கண் குளித்தார்க ளென்றவாறு. 35

554. இந்திரனே முதலானோர் செய்திருவா ராதனத்தை
யெழிலாய்க் கொண்டு
சிந்தைமகிழ்ந் தரங்கனு ரருளாலே திருவருளைத்
திகழச் செய்து
சந்ததமு மிந்தநகர் சஞ்சீவி புரமென்றே
தழைத்திங் கோங்கிச்
சுந்தரமா யிலகவென வுரைத்திடலு மமரரெலாந்
துதித்து நின்றார்.

எ - து:—இந்திரன் முதலாகிய தேவ கூட்டங்கள் செய்கின்ற திருவாராதனத்தை யழகாய்க் கைக்கொண்டருளிச் சிந்தை களிகூர்ந்த வரங்கநாயகர் தம்முடைய வருளாலே திருவருளைச் செய்தோ ரனுக்கிரக வார்த்தை கூறுகின்றா ரெப்பொழுது மிந்த நகரானது சஞ்சீவிபுர மென் றிவ்வுலகெல்லாங் கூறத் தழைத் திவ்விடத்தி லோங்கிச் சுந்தரமாய்ப் பிரகாசிக்கக் கடவ தென்று திருவாய்மலர்ந்த மாத்திரத்தின் தேவர்க ளெல்லாந் துதித்தார்க ளென்றவாறு. 36

காலநேமி வதை யத்தியாயம் முற்றிற்று.

## முப்பத்தொன்றுவது: தீர்த்த விசேட முரைத்த வத்தியாயம்

555. சந்திரனு ரமுதகிர ணங்கடுளிப் பெருகியதைச்
சமைந்து நின்ற
சுந்திரனுர் சடைக்கங்கை வதிதலெனப் பெருகியநீர்
தூய்மை குன்று
மந்திரமாம் வேதத்தின் சாகையா ரணந்துதிப்ப
மகிழ்ந்த ரங்க
னிந்திரனுர் தீர்த்தத்தின் திருவாரா தனஞ்செய்ய
விசைந்தா னையன்.

எ - து:—இந்திர மகாராசனது தீர்த்தத்தி னெழுந்தருளினு ரத்தீர்த்த மெத்தன்மைத்தென்றால் சோடச கலையினை விரித்தமுத கிரண சமூகங்களாற் சந்திர பகவானுனவன் அமுத தாரையினைப் பொழிதல் போலவும் சுந்தரனுராகிய சிவனது சடையிற் றங்கிய புனித பவித்திர மாகிய கங்கையானவள் வதிதல் போலவுஞ் சம்ருத்தியாய் நிறைந்த தூய்மை மிகுந் தோங்காநின்ற விந்திர தீர்த்தத்தி னெழுந்தருளினு ரப்பொழுது முனிவர் கூட்டங்களானவர்கள் மந்திரமாகிய வேதத்தினது சாகையினுலேயு மாரணத்தினுலேயுந் துதிக்கத் தக்கதாக மகிழ்ச்சியை யடைந்தரங்கநாயகரானவர் இந்திரனுனவன் றனது தீர்த்தத்தின் திருவாராதனஞ் சோடச உபசாரத்துடனே செய்ய விசைந்திருந்தா ரையனுனவ ரென்றவாறு. 1

556. பொங்குகட லிவ்வுலகை யழியாமல் வடவனலம்
பொதிந்த நாப்ப
ணிங்கிதமா யமர்ந்தருளி நீர்சுவற்றிக் கர்ணியினி
லிலகச் செய்யு
மங்கிதன தீர்த்தத்தி னரங்கநா யகனடியை
யருச்சித் தேத்தச்
சங்கிதசாம் ராச்யத்தி னிசைமாந்திப் பரதவிலக்
கணமுங் கண்டான்.

எ - து:—கடலானது பொங்கி இவ் வுலகத்தினை யழிக்காம லிருக்க வடவாவனலமா யக் கடலினது நடுப்பிரதேசத்தின் வதிந்து பெருகா நின்ற நீரினைச் சுவறச்செய் ததன் கர்ணிகையிலே யமரத் தக்கதாகச் செய்கின்ற வங்கிதேவனுனவன் றனது தீர்த்தத்தின்கண் மருவாநின்ற

நீராழி மண்டபத்தி னரங்கநாயகரை யெழுந்தருளச்செய் தவருடைய பாததாமரையினைத் துளப முதலிய சுகந்த மலர்களாலே யருச்சனை செய்து தோத்திரஞ் செய்ய வங்ஙனஞ் சங்கீத சாம்ராஜ்யமாகிய விசைக் கியானத்தைத் திருச்செவியி னுண்டு களித்த பின்பு பரத விலக்கணப்படி யரம்பையர்க ளடிக்கும்படியாகிய பரதநாடகத்தையுங் கண்டருளினு ரென்றவாறு. 2

557. தண்டமது பாவியரைப் புரிந்தொறுக்கு நடுவன்றுட்

கன்பு பூண்டங்

கண்டமது புகழ்ந்தேத்து மருச்சனைகள் மிகப்புரிந்தங்

கரங்கன் றன்னைக்

கண்டமதாற் றொனித்தேத்தி யவன்றிருவா ராதனத்தைக்

கவினுய்க் கொண்டு

சண்டன்மகிழ் தீர்த்தத்தின் சினகரத்தின் மகிழ்ந்திருந்தான்

றரணி போற்ற.

எ - து:—தண்டஞ் செய்து பாவிகளை யெல்லாங் கண்டிக்கா நின்ற தர்மராசனுனவ னரங்கநாயகரது பாததாமரையினுக் கன்பு பூண்டவனு யண்டங்களெல்லாம் புகழ்ந் தேத்துகின்ற வருச்சனை முதலாகிய சோட சோபசாரங்கள் செய்து கண்டமானது தொனிக்கத்தக்கதாகிய தோத்தி ரங்களாற் றுதித் தவரது திருவாராதனத்தை யுகப்பாகிய வழகாய்க் கொண்டவனுய்ச் சண்டனுகிய தர்மராசனுனவன் மகிழ் சிறந்தருளிய தீர்த்தத்தினது சினகரமாகிய நீராழி மண்டபத்தின் வீற்றிருந்தருளினு ரிவ் வுலகங்களெல்லாம் போற்றத்தக்கதாக வென்றவாறு. 3

558. பருதியென வொளிவிடுக்குங் கனகதண் டிகையேறும்

பருமத் தோளான்

குருதிகவிழ் முத்தலைவேல் சத்திவே லேந்திகுறை

யாத சீர்த்தி

நிருதியரங் கனைவழுத்தி யேத்தியிட னின்மலனு

நீண்ட தான

சுருதிமுழங் கிடமகிழ்ந்தான் றுரியங்க ளமரர்துவைத்

திருந்தா ரங்ஙன்.

எ - து :—ஆயிர கிரணங்களை விரித் தொளியினை விரிக்காநின்ற சூரியனைப்போலக் கனகமாகிய தண்டிகையினை நடாத்துகின்ற பருத்த தோளினையுடைவன் குருதியாகிய விரத்தங்களைச் கவிழ்க்காநின்ற முத்தலை வேலாகிய திரிசூலத்தையுஞ் சத்திவேலினையுந் தாங்கிக் குறைவுபடாத சீர்த்தியினையுடைய நிருதியானவ னரங்கநாயகரைத் தோத்திரித்து வந்திக்க நீண்டிருக்காநின்ற வேதபாராயண முழங்க மகிழ் சிறந்தவராய் வீற்றிருந்தருளினார் தேவதுந்துமி முழங்கத்தக்கதாக வென்றவாறு. 4

559. தருணமுலைக் கன்னியர்கண் மிகக்குடைந்து மஞ்ஞையெனக்
களிகூர்ந் தாடு
மருணவுத யம்போன்ற நீராழி மண்டபத்தி
னரங்கன் றன்னை
வருணனருச் சனைபுரிய மகிழ்ந்திருந்து வருள்புரிந்தான்
வண்மை யான
வருண்மடைக டிறந்தாற்றுப் பெருக்கெடுத்த வாரமுத
மனைய மேகம்.

எ - து :—எவ்வனமாகிய கொங்கையினையுடைய கன்னியர்களானவர்கள் தீர்த்தமாடி மயிலினைப்போலக் களிகூர்ந் தாடாநின்ற நீராழி மண்டபத்தி னெழுந்தருளச்செய்து வரங்கநாயகரது பாத தாமரையின்கண் வருணராசனானவ னர்ச்சனைசெய்து பூதாராதனை புரிய மகிழ்ச்சியை யடைந்திருந்தார் வண்மையான வருளாகிய நீரானது மடை திறந் தாற்றுப்பெருக் கெடுக்காநின்ற வமுதமேகம் போன்றவ ரென்றவாறு. 5

560. குருத்துபா தவம்பொழியுந் தண்மலர்க டாமரையிற்
றுவக்குண் டாங்குத்
திருத்துசீர் நீரினிடை யலைப்புண்டு கிடந்தொளிருந்
தெய்வ வாவி
மருத்துதன்பேர் பெறச்செய்தங் கரங்கனையவ் விடத்திருத்தி
மகிழ்வா லர்ச்சித்
திருத்துவதை வேதாந்த மெண்ணுன்கு மிகத்துதித்தங்
கிருக்கு மாதோ.

எ - து :—குருந்தமரமானது பொழிகின்ற குளிர்ந்த மாமலரானது தடாகபங்திகளிலே யலராநின்ற தாமரை மலரிலே கட்டுப்பட்டு மீட்டுந் திருத்தமாகிய நீரிலே யலைப்புண்டு கிடந் தொளிராநின்ற தெய்வீகத் தன்மையாகிய வாவியை மருத்தாகிய வாயுபகவானுனவர் தமது பெயரினைப் பெறும்படியாய்ச் செய் தமைத்து வரங்கநாயகரை யந்தத் தீர்த்தத்தி னெழுந்தருளச்செய்து மகிழ்ச்சியினுலே திருவாராதனஞ் செய்தருளிய கீர்த்தியினை முப்பத்திரண்டு உபநிடதமுந் துதித் தங்கு வசியாநிற்கு மென்றவாறு. 6

561. கற்பகத்தான் வளமதினு மிகுந்தோங்கு செல்வமுள
கவின்பொற் ரேளா
னற்பகத்தா னரங்கனிரு தாடொழுதங் கருச்சிக்க
வளவி லாத
நட்பகத்தான் மகிழ்ந்தருளி யவர்க்கருள்கூர்ந் தருளளித்த
நளினக் கண்ணன்
புட்பகத்தான் றடாகமதை விட்டகன்று முனிவர்புகழ்ந்
தேத்தப் புக்கான்.

எ - து :—கற்பகத் தாருவி னீழலிலே வீற்றிருந்து சுரபி சிந்தாமணி சங்கநிதி பதுமநிதி முதலாகிய செல்வத்தினுலே யழகுநிறைந் தோங்காநின்ற தோளினையுடையவ னன்பு பொருந்திய வந்தக் காரணத்தினுலே யரங்கநாயகரது பெரிய சரணத்தினைத் தெண்டன் சமர்ப்பித்துத் திருவாராதனை செய்ய வதை யுகந்தருளினவரா யருளைச் சுரந்தார் தாமரைக் கண்ணையுடைய கர்த்தாவானவர் புட்பக விமானத்தையுடைய குபேரனது தடாகத்தைவிட் டகன்று முனிவர்களெல்லாம் புகழ்ந் தேத்தத்தக்கதாக வப்பா லெழுந்தருளினு ரென்றவாறு. 7

562. அசுபதிக ளிரதபதி யவர்களெலா மிகமகிழ்ந்தங்
கதிச யிக்குங்
கெசபதிகள் காலாள ரவர்களெலாம் வந்திக்குந்
தேசு மிக்க
பசுபதியா மீசானன் மிகமகிழ்ந்து பரந்தாமன்
பயின்றங் கோங்க
வெசுபதியென் றேதுதித்தங் கிறுமாந்து வீற்றிருந்தா
னிமையோர் சூழ.

எ - து :—குதிரைத் தலைவர்கள் ரதத்தலைவர்கள் முதலாகிய பேர்க ளெல்லா மதிசயிக்காநின்ற யானைத் தலைவர் படைத்தலைவர்களெல்லாம் வந்தனை செய்தற்குரிய ஒளிபொருந்திய திரிசூலத்தை யேந்திய வழகினை யுடைய பசுபதியாகிய ஈசானமூர்த்தியானவர் எழுந்தருளச்செய் தெசுர் வேதத்துக் கதிக விருப்பமா யுகந்த கர்த்தாவே யென் றம் மறையாற் போற்றிய வின்பத்தினாலே நிமிர்ந்து சந்தோடத்தை யடைந்திருந்தா ரரங்கநாயக ரென்றவாறு. 8

563. புலரியிடைத் தாமரையின் வண்டினங்க ளிசைபாடிப்
புதுத்தேன் மாந்தி
யலரியிடைப் புகுந்துழக்கி வாரணம்வாய் வைத்தூத
லனைய வூதிப்
பலரிதமா மமுதமென வுண்டுதேக் கிடக்குறிஞ்சிப்
பண்ணைப் பாடு
மலரிதன தீர்த்தத்தி னரங்கனடி யருச்சிக்க
வமர்ந்தா ரங்கன்.

எ - து :—விடியற்காலத்திலே தாமரைக் கமலங்களிலே வண்டு தேன் ஞிமிறு சுரும் பென்கின்ற நான்கு வகையினையுடைய வண் டினங்களான திசையினைப் பாடிப் புதிய நறவினை யுண் டுவந்து வலரிப் புட்பத்திலே புகுந்து சஞ்சரித் துழன்று வாரணமாகிய சங்கத்தினை வாயிலேவைத் தூதினா லெத்தன்மைத்தோ வத்தன்மைத்தா யூதிப் பல பேர்களும் ரஞ்சிக்கத்தக்கதாகிய வமுதத்தைப்போலக் கர்ணாமிருதமாய் உண் டானந்தப்படத் தக்கதாகக் குறிஞ்சி யென்கின்ற பண்ணினைப் பாடாநின்ற வலரியாகிய சூரியபகவானானவர் தமது பெயரினைத் தரித் திலகாநின்ற தீர்த்தத்திலே யரங்கநாயகனை யெழுந்தருளச்செய் தவர் திருவாராதனஞ் செய்ய வங்ஙனம் வீற்றிருந்தருளினா ரென்றவாறு. 9

564. சுரந்தருள்கூர் மகேசதீர்த் தக்கரையி னெழுந்தருளித்
திங்கள் கங்கை
பரந்தசடை மத்தளலிங் கத்தினுறை பண்ணவனைப்
பாது காத்து
நிரந்தரமு மழிவில்லாச் சஞ்சீவி கிரியினுச்சி
நிமலன் றானும்
புரந்தருள்கூர்ந் தருள்வடிவாய் முன்புபோ லெழுந்தருளப்
புந்தி கொண்டான்.

எ - து :—அருளைப் பெருக்கிச் சுரக்காநின்ற மகேச தீர்த்தக் கரையிலே மகேசரானவ ரெழுந்தருளப்பண்ண வங்ஙன மெழுந்தருளி யிருந்து சந்திரிகையுங் கங்கையும் பரந்திராநின்ற சடாபாரத்தினையுடைய மத்தள லிங்கத்திலே வாசம் பண்ணாநின்ற தேவரைப் பாதுகாத்தருளி நிரந்தர காலமு மழி வின்றிய சஞ்சீவி கிரியின துச்சியின்கண் பூர்வம் போலப் பூரணங்கிசையாகிய வனந்த கல்யாண விக்ரக சொரூபரா யவதரிக்கத் தக்கதாக உத்தேசித்து முன்புபோ லருள்வடிவங் கொள்ள விதயத்தின்கண் ணினைந்தருளினா ரென்றவாறு. 10

565. அரம்பையர்க ளிசைபரத நாடகப்பா விலக்கணங்க
ளமர்ந்து தோன்றத்
தரம்பயிலு மபரஞ்சித் தட்டதனிற் சாதாங்க
விளக்கந் தாங்கி
நிரம்பியதோர் பந்திகளா யிருபாலு நடித்தேக
நிமலன் றானுஞ்
சுரந்தருள்கூர் முனிவர்கடஞ் சித்திர தீர்த் தங்காணத்
துரிதிற் சென்றான்.

எ - து :—அரம்பா ஸ்திரீக ளிசையினைப் பாடிப் பரத நாடக விலக்கணமாய தமைவாய்த் தோன்ற மென்மையினது தரமானது தோன்றுகின்ற வாயிரத்தெட்டு மாற்றாகிய வபரஞ்சித் தட்டகத்தின்கண் சாதாங்கமென்கிற வரதனத்தினாலே விளக்கத்தைக் கையிற் றாங்கினவர் களாய் நிரம்புகின்ற பந்திபந்திகளாய் நிறைந்து விருபாலினு நடனஞ் செய்துகொண்டு போகத்தக்கதாக நிமலராகிய வரங்கநாயகரு மருளினைச் சுரந்து பெருகாநின்ற முனிவரது சித்திரங்களானது பெருகிய தீர்த்தங்களைக் காணத்தக்கதாகத் துரிதமாய்ச் சென்றா ரென்றவாறு. 11

566. கோசிகனா ரதன்வசிட்ட குணத்தின் மிக்கான்
குமுதாக்கன் வான்மீகி கும்ப சாதன்
றேசிகனுங் கௌதமனற் பரத்து வாசன்
றெளிவாரும் பராசமுனி செஞ்சொற் றேர்ந்த
காசிபனே காத்யாயன் கலைமார்க் கண்டன்
புலகபுலத் தியன்கவுட பாதன் ஞான
வாசிபனாள் பயின்றெளிரும் வாம தேவன்
வாதரா யணன்பிருகு மதங்கன் மாதோ.

எ-து :—அப்படி யரங்கநாயகரானவர் முனிவர்க டத்தந் தீர்த்தத்தைக் காண வந்த வளவிலே விச்வாமித்ரன் நாரதன் குணமிகுதியான வசிட்டன் குமுதாக்கன் வான்மீகி கும்பசாதன் றேசிகனுகிய கௌதமன் பரத்துவாசன் பராசன் சொல்லி னிலக்கணத்தை யாராய்ந்த காசிபன் காத்தியாயன் வேதாந்த முடிவினை யுணர்ந்த மார்க்கண்டேயன் புலகன் புலத்தியன் கௌடபாதன் ஞானத்துக் குரித்தாகிய வாசியோகஞ் செய்கின்ற வாமதேவன் வாதராயணன் பிருகு மதங்கன் முதலாகிய பேர்களெல்லாம் வழிபாடுசெய் தர்ச்சிக்க மகிழ்சிறந்தா ரரங்கநாயக ரென்றவாறு. 12

567. நாரணனுர் சுபசோப கல்யாண மங்களமாய்
நாவ லாள
ராரணநன் முழக்குடைய ராசரியம் வழுவாத
வமல ராகிப்
பூரணமா முனிவர்தத்த மாச்சிரமந் தனிற்பூசை
புரியத் தெய்வ
வாரணமார் செம்பவள் வாயினுன் வலம்வந்தம்
மலையிற் சேர்ந்தான்.

எ-து :—அந்த நாராயண மூர்த்தியானவர் சுப சோபன கல்யாண மங்களாகரமாய்த் தீர்த்தத்தின்கண் ணவரவர்க ளுற்சவஞ் செய்ய வந்தத் திருவாராதனங்களைக் கொண்டருள வந்த முனிக்கூட்டங்கள் வேத முழக்கத்திஞல் முழங்கப் பிரமசரிய முதலாகிய வாச்சிரமத்தின் வழுவாதவம் முனிவர்களுக் கருள்கொடுத்துத் தெய்வீகத் தன்மை பொருந்திய வாரணமாகிய பாஞ்சசன்னியத்தைச் செம்பவள வாயில் வைத் தூதாநின்ற வரங்கநாயகரானவ ரந்த மலையை வலம்வந் துச்சியி னெழுந் தருளினு ரென்றவாறு. 13

568. கலக்குபுகழ் பொன்னந்தா மரைமலரின் மஞ்ஞைகுயில்
கவின்சே ரன்னம்
விலக்குவிதி யில்லாத மடமகளாய்க் கோமளமாய்
விமல மான
விலக்குமியார் தீர்த்தத்தி னெழுந்தருளி மகிழ்ந்தரங்க
னிருந்தா னியாரு
நிலக்குவியிற் பணிந்தேத்த மந்தார மலர்மாரி
நிறைத்தா ரன்றே.

எ - து :—புகழ் சிறந்திராநின்ற பொன்மயமாய் விளங்குகின்ற தாமரை மலரிலே வீற்றிருக்காநின்ற மயில் குயி லழகு நிறைந்த வன்னத்தை யொத்தவராய்த் திரிலோக கன்னிய ரழகுக்கெல்லா மிருப்பிடமாகிய சுந்தரமாய் விமலமா யழகிலக்கணத்துக் கிலக்கியமாய் நிறைந்திராநின்ற விலக்குமியார் தீர்த்தத்தி னெழுந்தருளி மகிழ்ச்சி யடைந்தவரா யரங்கநாயகர் வீற்றிருந்தருளினு ரப்போ திந்தப் பூமண்டலத்தி னியாரும் தெண்டன் சமர்ப்பிக்காநின்ற தேவ கூட்டங்க ளானவர்கள் மந்தார பாரிசாதத்தை மாரியாய்ப் பொழிந்தார்க ளென்றவாறு. 14

569. இந்திரனே முதலானோர் செய்திருவா ராதனையை
யின்ப முற்றுத்
துந்துமிகள் முழங்கிடநற் றிருவோண மதிற்றீர்த்தந்
தேவர்க் கீந்து
கந்திருவ ரிசைபாடக் கானநா ரதன்வீணை
கலிழுயச் செப்பச்
சந்திரபுஷ் கரணியிடைக் களித்திருந்தான் சாரணர்பல்
லாண்டு சாற்ற.

எ - து :—இவ்விதமா யிந்திரன் முதலாகிய தேவ கூட்டங்க ளன்பினுல் செய்கின்ற புனித பவித்திரமாகிய திருவாராதனையின் வைபவங்களை யங்கீகரித்தருளத் தேவதுந்துமிகள் சமுத்திரக் கோஷம்போல் முழங்கவு நல்ல சுபகர மங்களாகரமாகிய திருவோண நக்ஷத்திரத்தில் தமது ஸ்ரீபாத தீர்த்தத்தைத் தேவர்கள் பரம பவித்திர மடையும் பொருட்டா யனுக்கிரகம் செய் தாயிரம் நரம்பு பூண்ட பிரதம யாழைக் கராம்புய மலரி னேந்திக் காந்தருவர்கள் பேரானந்த விசைக் கியானங்களைப் பாடவும் ரிஷிகளுக்கெல்லா மதிசிரேஷ்டராகிய நாரத மகாமுனிவ ரானவர் தெய்வ ஞான இசைப்பாட்டுக்களை வீணையில் மீட்டித் திருவாய் மலர்ந் தமுத தாரைகளை யழகாய்ப் பொழியவும் சந்திர புஷ்கரணியை யென்னும் மகாதீர்த்த நடுப்பிரதேசத்திலே மனோரஞ்சிதராய் வீற்றிருந் தருளினுர் சாரணரானவர்கள் பல்லாண்டு கூற வென்றவாறு. 15

570. வந்திரவி சூழ்கிரிபோல் நீராழி மண்டபத்தின்
மகிழ்ந்த ரங்கன்
தந்திரத்தின் விதிப்படியா ராதனங்கள் தவமுனிவர்
தவத்தாற் செய்ய
விந்திரனே முதலானோ ரேத்தெடுக்கத் தூரியங்கண்
முழக்க விண்ணோர்
சந்திரபுட் கரணியிடை களித்திருந்தான் சாரணர்பல்
லாண்டு சாற்ற.

எ - து :—சப்த புரவியோடுங் கூடிய சூரிய பகவானுனவன் வலமாய் வருகின்ற மகாமேருவினை யொத்த பிரகாசத்தினையுடைய ஸ்ரீராமு மண்டபத்திலே மகிழ்ச்சியா யரங்கனுனவர் வைகானச பாஞ்சராத்திர மாகிய விஷ்ணுவாகம விதிப்படி யர்ச்சிக்காநின்ற தவத்தினையுடைய முனிவர் கூட்டங்க ளிந்திரன் முதலாகிய பேர்களெல்லாந் துதிசெய்யப் பல தேவ கூட்டங்களானவர்கள் தேவதுந்துமி முழங்கச் சந்திர புட்கரணி யென்கின்ற தீர்த்தத்திலே தழைத்துக் களிகூர்ந் தெழுந் தருளினுர் சாரணர்களானவர்கள் பல்லாண்டு கூறினுர்களென்றவாறு. 16

571. இருமருங்குந் திலோத்தமையு மிரதியுமா யிணைக்கவரி
யிரட்ட வோங்கும்
பருமணியா யிரம்விரித்த வனந்தவிம னத்தெழுந்த
பகவன் றன்னைக்
குருமணிமா லிகைபுனைந்த குவலயத்தி னரசரெலாங்
கூடி நின்று
பெருகுநிதி மணிபுனைந்த பூவிசிறி கொடுவசைத்துப்
புகழ்ந்து நின்ருர்.

எ - து :—இரண்டு பக்கங்களிலுந் திலோத்தமையு மிரதிதேவியு முபய சாமரைகளை வீசத்தக்கதாக வோங்கி யிராநின்ற பருத்த சிவ ரத்தினங்க ளாயிரத்தினையும் விரித்துக் கவியாநின்ற வனந்த விமான சேகரராய் யோகநித்திரை செய்கின்ற பகவானைக் குருவிந்த ரத்தின மாலையை யணிந்து குவலயத்தின்கண் சக்கர நடாத்து மரசர்க ளெல்லாங் கூடிநின்று பெருகாநின்ற பொன்னுலு மணியாலு மிழைத் திராநின்ற புட்ப விசிறியைக்கொண் டிரு பக்கத்திலு மசைத்துத் துதித்து நின்ருர்க ளென்றவாறு. 17

572. முன்னநான் மறைகள் மொழிந்திடுஞ் சூத
முனிவனைப் பணிந்துள மகிழ்ந்து
கன்னல்சே ரமுத மளித்திடுங் கருணைக்
கடலென விளங்கிய கமலப்
பொன்னடி யரங்கன் புகழினை விளம்பப்
பிறவிசா கரமதைக் கடந்தோ
மென்னவ ருரைக்கத் திருவுள மகிழ்ந்தங்
கேகியே பொன்வரை யடைந்தார்.

எ - து :—உரை வெளிப்படை. 18

573. சவுன்கர் முதலோ ரத்தல நீங்கிச்
சார்ந்தனர் கோலமால் வரையில்
குவலயம் புகழும் வராகநன் னதியில்
கூடியே குடைந்தனர் முனிவோர்
திவசமுப் பதுமோர் கிரிவலம் வந்து
திருவினை யன்புடன் பணிந்து
கவலைதீ ரரங்க னடியினைத் தொழுது
கருதியே மகிழ்ந்தனர் கடல்போல்.

எ - து :—உரை வெளிப்படை. 19

574. அரங்கனு ரருளா லமுதசா கரம்போ
லற்புத ஞானவை பவத்தை
நிரந்தர மடைந்து நித்யசூ ரியராய்
நிற்சல தத்துவ நிறைந்த
திரம்பெறு வைகா னசவிதி யதனுல்
சேர்ந்துவா ராதனம் புரிந்து
வரஞ்சிறந் தோங்கிக் கோலமால் வரையின்
வதிந்தனர் சவுனக முனிவோர்.

எ - து :—உரை வெளிப்படை. 20

575. ஆதலினு லித்தலம்போற் சிறந்த திந்த
வகிலவுல கங்களிலு மரிதாம் வானோர்
நீதகலச் சோமுகனைத் தடுத்தாட் கொண்ட
திருக்கரத்தா னுட்டியசம் பீர மென்றுங்
காதலினுல் ராசேந்த்ர கற்ப கோடி
காலமிந்தக் கோலவரை கமழா நின்று
மாதவன்றன் னருளாலே தழைத்திங் கோங்கு
மதுபோல மாநிலத்தோர் மகிழ்ந்து வாழ்வார்.

எ - து :—உரை வெளிப்படை. 21

576. அக்கிரியி னுன்குதிக்கும் பூப்பந்த ரமர்ந்திருப்ப
வருகெங் கெங்கு
முக்கியமா கியமகர தோரணத்தின் முத்தினமா
லைகடா முந்தப்
பக்கமெலாங் கோபுரமும் வேள்வியயில் குண்டங்க
டவள மாடந்
திக்கினர்கள் பணியாலே தேவதச்ச னமைத்தனன்பின்
சிறந்தங் குற்றுன்.

எ - து :—அந்தக் கிரியினுடைய நான்கு திக்கினும் பூப்பந்தரானது பீதாம்பரமாய்ப் பிரகாசித் தொளிரவு மம் மலைப்பக்க மெல்லா முக்கியமாய்ச் சொல்கின்ற மகர தோரணங்களிலே முத்தின் மாலைகளான திடையிலே சரஞ்சரங்களாய் மாலைகளின் வருக்கமாய்த் தவளிக்கவு மந்தக் கிரி பக்கமெல்லாங் கோபுரங்களும் வேள்வி செய்கின்ற சாலைகளுஞ் சந்திரகாந்த மாளிகையு மமைப்பித்தார்க டேவகம்மியனுலே இந்திரன் முதலாகிய பேர்க ளென்றவாறு. 22

577. ஆகமத்தின் விதிப்படியே முக்காலந் தனிலடைந்தங்
கரங்கன் றன்னைத்
தாகமுடன் வந்தித்துச் சரணு ரமலர்புனைந்து
தலைவி தன்னை
யேகுமனம் வந்தித்தங் கெதிற்பதுமை திருவருளை
யிசையப் பெற்றுப்
பாகமுறு பாகவதப் படிவமாய்ப் பரமபதம்
படரா நிற்பர்.

எ - து :—வைகானச பாஞ்சராத்திர வாகமத்திலே விதித்த விதிப் படியாய் முக்காலங்களாகிய காலை யுச்சி மாலை யென்னுங் காலங்கடோறு மரங்க நாயகர் சினகரத்திற் புகுந்து பிராட்டி சந்நிதியைக் குருவனுக் கிரகத்தான் வணங்கி வந்தித் ததன் பின்பு வரங்கநாயகருடைய சரணு விந்தத்தைப் பிராட்டி யனுக்கிரகத்தான் வணங்கித் தலைக்கு மாலையா யணிந்தவர்க ளிங்கேயும் பரமபாகவத வுருமையிருந்து இகமுடிவான சரமதசையில் நித்ய சூரியராய்ப் பரமபதத்தின் வீற்றிருப்பார்க ளென்றவாறு. 23

578. ஆலயங்கள் சமைத்தவர்க டிருமதில்க ளமைத்தவர்க
ளழகாய் நீண்ட
கோலமுறு கோபுரங்கள் மிகவமைத்தோர் யாகருண்ட
கோலஞ் செய்தார்
மாலடியார் மிகவிரும்பத் திருப்பணிகள் சமைத்திடுவோர்
தான மாண்டை
மூலமா யியற்றிடுவோர் மலர்ச்சோலை மிகவிரும்பி
முடித்த பேர்கள்.

எ - து :—மேலு மந்தத் தலத்திலே யரங்கநாயகர்க் காலயங்கள் கட்டிவைத்தவருந் திருமதிற் கட்டின பேர்களு மழகாய் நீண்டிருக்கின்ற பிரதிமைகள் விளங்கிப் பிரகாசிக்காநின்ற கோபுரங்கள் செய்தவர்களும் யாகசாலை மண்டபங்க ளமைத்த பேர்களும் பரமபாகவத ரெழுந்தருளித் தேவ பூசை செய்யத் திருப்பணிகள் சமைப்பித்தவர்களுஞ் சோடச மகாதானமாகிய வெள்ளு நெய் யன்னங் கன்னிகை குதிரை தேர் யானை யில்லம் வெள்ளி பசு பொன் பூமி வத்திரம் அடிமை சத்திர சாமர மென்னும் தானங்கள் கொடுத்தலே தன்ம மூலமென வந்தத் தலத்திலே கொடுப்பவரு மலர்ச் சோலையாகிய நந்தன வனங்க ளமைப்பவரு மென்றவாறு. 24

579. புனுகுசட்டந் தரிப்பவர்க ளீருய புனிதரெலாம்
புகழான் வீறு
மனுகுலரா யரங்கநா யகனருளா னரசரெலாம்
வழுத்தி நிற்பத்
தனுவதனுற் பரம்பரையாய்ச் சயங்கொண்டிங் கெப்பொழுதுந்
தளரா நிற்ப
ரனுகுலமா யுத்தரத்திற் பரவாசு தேவனடி
யடைந்து வாழ்வார்.

எ - து :—அரங்கநாயகர் திவ்விய சுந்தர வடிவத்திற்குப் புனுகு சட்டஞ் சாத்திக் கண்ணுற் கண்டுருகிக் களித் திறும்பூதுற் றென்பு நெக்குருக வானந்த பரவசராய்த் தெரிசித்த பேர்க ளெந்தக் காலத்தினும் புகழ்மணங் கமழக் குலசூடாமணியாகிய சக்கரவர்த்தி சார்வ பௌமராய்ப் புருடோத்தம னருளாலே யங்கதேச முதலாகிய

வைம்பத்தாறு தேசத்து ராசாக்களெல்லாம் வந்தனை செய்து கை கூப்பி வழுத்திநிற்கத் தமது காண்டீபத்திலே பரம்பரையாய் விசய மடைந்தவர்களா யிவ் வுலகத்தில் தளராது வாழ்வார்கள் மறுமையிலே பரவாசுதேவ ரனுகூல நன்மையால் பரமபதத்தி னித்திய சூரியர்களாய் வந்தித் தவரது தெரிசன வைபவ வின்பத்தை யிடைவிடாது மடுத் தானந்தமயமாய் வாழ்வார்க ளென்றவாறு. 25

580. வேதமுனி வரனுரைத்த புராண மூவா
றுகியதிற் சிறந்துநின்ற விமலன் சீர்த்தி
காதலினு னுரைப்பவர்கேட் பவர்ப டிப்போர்
கருதியபொய் கொலைகளவு காம நீங்கிச்
சீதரனார் பொன்னரங்க னுரத்தில் வாழுந்
திருவினரு ளான்மிகுந்த செல்வ மோங்கிப்
பூதலத்திற் புத்திரரும் பவுத்ரர் தாமும்
புகழ்பாரம் பரியமதாயப் பெருகி வாழ்வார்.

எ - து :—உரை வெளிப்படை. 26

581. இந்திர னுஞ் சயந்தனுமா யிருமருங்குந் தவளசத்ர
மிசைவாய்த் தாங்கச்
சந்திர னு மாதவ னுஞ் சாந்தாற்றி யிருமருங்குந்
தழைத்தங் கேந்தக்
கந்திருவ ரிசைபாடக் கானநா ரதன்வீணை
கவினுய்த் தாங்கிச்
செந்திருவா முரங்கனு ரிசைபாடிச் சேவடியைத்
தொழுதங் கேத்த.

எ - து :—இந்திர மகாராசனு மவனது புத்திரனாகிய சயந்தமகா ராசனு மிரண்டு பக்கத்திலும் தவள சத்திரக் குடையினை யிசைவாய் நின்று தாங்கவுஞ் சந்திரனுஞ் சூரியனுஞ் சாந்தாற்றியாகிய வால வட்டங்களை யிரண்டு பக்கத்திலுந் தழைத்தவர்களா யேந்திநிற்பவுங் கந்திருவர்களானவர்க ளாயிர நரம்பு பூண்ட யாழினை யேந்தி யிசைக் கியானங்களைப் பாடவுஞ் சாம கானங்களா லரங்கனார் புகழினை மீட்டி நாரத முனிவரானவர் ஸ்ரீமகாலட்சுமிப்ரியாகிய வரங்கநாயகர் துதிகளைப் பாடி வந்திக்க வீற்றிருந்தருளினு ரென்றவாறு. 27

582. அரம்பையர்கள் சதிமுறையி னடித்தனர்கள் முழவதனுக்

கழக தாகத்

தரம்பயிலு மாணிக்க விளக்கமுறு மாலத்தி

தாங்கி நின்று

சிரம்பயிலும் வணக்கத்தா னரங்கநா யகன்புகழைச்

செப்பி நின்று

கரம்பயிலும் பூமாரி தூவினர்க டரணியெங்குங்

கருணை கூர்ந்து.

எ - து:—அரம்பையராகிய வமுதத்தி னுதித்த தேவகன்னியர்க ளானவர்கள் சதிகளைத் தழுவிப் பரத விலக்கணப்படி நடனஞ்செய்து மத்தள வோசைக் கழகாகும்படியாய்த் தரத்தினையுடைய மாணிக்க விளக்கம் பொருந்துகின்ற வயிரஞ்சி மயமாகிய தட்டினைத் தாங்கிநின்று சிரத்தினாற் றெண்டன் சமர்ப்பித் தரங்கநாயகரது புகழினைத் தங்கள் செவ்வாம்பலாகிய வாயினிற் றுதித்துக் கரகமலத்தாற் றூங்கிய மந்தாரமலர் மாரியினைத் தூவி யுலகங்களை யெல்லா நிறைத்தார்க ளென்றவாறு. 28

583. திருமலையை வலம்வந்து திருவினரு ளாலுதித்த

தீர்த்த மூழ்கி

யருமையுடன் திருவரங்கப் பெருமானை யருச்சித்தங்

களவில் கால

மருவியிருந் தாரதன்பின் னிந்திரர்க்கு மவுலிபுனை

வாகை சூட்டிப்

பெருமைதிகழ் பொன்னகரின் விடுத்தனன்பின் னிந்திர னும்

பெருகி வாழ்ந்தான்.

எ - து:—அந்தத் திருமலையாகிய கோலாசலத்தினை வலமாக வந்து ஸ்ரீமகாலக்ஷ்மிதேவியின தனுக்கிரகத்தா னம் மலையின் வீற்றிருக்காநின்ற விலக்குமியார் தீர்த்தத்தின் மூழ்கி யருமையுடனே திருவரங்கப் பெருமானை யருச்சனை செய் தளவிறந்த காலமா யந்தத் தலத்தின்கண் வீற்றிருந்தார்க ளதன்பின் னரங்கநாயகர் தம தருளினாலே யிந்திர மகாராசனுக்கு மகுடாபிஷேகஞ் செய் தந்தக் கிரீடத்தின் வெற்றி மாலை யணியத்தக்கதாய்ப் பெருமையினையுடைய பொன்னுலகத்தின் வீற்றிருந் தரசாட்சி செய்ய வனுக்கிரகித்ததினாலே யிந்திரமகாராசனும் பெருகி வாழ்ந்தா னென்றவாறு. 29

584. ஆதலினு லம்மலையை வலம்வந்து திருவடியி
னூர்ந்து தித்த
போதமுறு மந்நதியின் மூழ்கினோர் பகையகலும்
பொதுமை நீங்கி
நீதமுறு கடலாடைப் புவியளைத்து மொருகுடையி
னிழற்றி மேலாஞ்
சீதரனூர் பதமடைந்து நித்தியசூ ரியராகத்
திகழா நிற்பர்.

எ - து:—ஆகையினாலே முனிவர் கூட்டங்களே யந்தக் கோலாசலத்தைத் திருவலம்வந் தவரது பாத தாமரையி னுற்பவித்த நிறைந்த ஞானரூபமாகிய வராக தீர்த்தத்தி லாடினோர்களது பகையான வருத்துகின்ற பருவர னீங்கி யிவ் வுலகத் தரசருக்கெல்லாம் பொதுமையாகிய துடக்கு நீங்கி நீதத்தைப் பெறுகின்ற கடலினை யாடையாக வுடுத்த விப் பூமண்டல மெல்லா மொரு தவளசத்திரக் குடைநிழலி னாண்டு போக போக்கியத்தை யிம்மையிற் குறைவற வனுபவித்து மறுமைக்கண் ணாராயண மூர்த்தியினது பரமபதத்தி னடைந்து நித்திய சூரியராய் வீற்றிருப்பார்க ளென்றவாறு.

தீர்த்த விசேட முரைத்த வத்தியாயம் முற்றிற்று.

## முப்பத்திரண்டாவது: திருக்கலியாண தீர்த்த வத்தியாயம்

585. சூதர் சொல்லிய மாதவன் பெருமையைத் தெரிந்து
வேத பாரகர் பரவச ராகிமெய் விளம்பும்
பூத நாயகி யிலக்குமி தீர்த்தமுன் புகன்றீர்
தீத கற்றதின் பெருமையைத் தெரித்திட வென்றார்.

**எ - து:**—சூதபுராணிகர் கூறிய மாதவனாகிய நாராயண மூர்த்தியி னுடைய பெருமையாகிய பரத்துவ விலக்கணமு மவ ரடிமையானவர் விதிப்படி யணியவேண்டியது முண்ணவேண்டியது முதலாகியதை யறிந்த வேதபாராயண பண்டிதராகிய முனிக்கூட்டங்களானவர்க ளானந்த பரவசராகித் தத்துவஞான மெய்ம்மையானது கூறுகின்ற பெரும் புகழுடைய வைம்பூதத்துக்கு நாயகியாகிய ஸ்ரீமகா லட்சுமிதேவியார் தீர்த்தத்தை முன்னே தேவரீர் திருவாய்மலர்ந்தருளினீ ரெங்கள் தீங்காகிய பாதகம் நீங்கிப் புனிதமாகும் பொருட்டா யந்தத் தீர்த்தத்தின் பெருமை சொல்வீராக வென்றார்க ளென்றவாறு. 1

586. என்ற போதவ ரானந்தம் பெருகிட விமைப்பி
லொன்று நல்லுடற் பரவச மாகியே யுமையாள்
மன்ற லந்தொடை மருவியா ரிலக்குமி மலர்த்தா
ளென்று தன்மன நினைந்ததன் பெருமையு மறைவான்.

எ - து:—இத் தன்மையாய் முனிவர் கூறச் சூதபுராணிகரானவ ரானந்தக் கண்ணீர் பொழிந் தொரு நிமிடத்திலே தமது சரீரமானது பரவசமடைந்து கூறுகின்ற ருமையவளுடைய வளகபாரத்தி னணிந்த மாலையான இலக்குமிதேவி மலர்ப் பதத்தி னணியாநின்ற தென் றெண்ணி யதின் பெருமையினையுஞ் சொல்லத் தொடங்கினார் சூதபுராணிக ரென்றவாறு. 2

587. முன்ன மொருகாற் பரமன்மனை
முளரித் திருவை யடிவணங்கிச்
சென்னி மிசைபொன் னருள்பெற்ற
தொடைய லணிந்து கந்திருவ
மின்னும் வருமவ் வழிதன்னில்
விளங்கு நாரு வாசனவள்
தன்னைப் பணிந்து செந்திருவின்
மாலை யணிந்து தணிந்ததற்பின்.

எ - து :—பூர்வ காலத்தி லொரு கற்பகத்தில் பரமனுகிய கேசவனது மனையாளாகிய பொன்னந் தாமரைப்பீடத்தி னெழுந்தருளிய ஸ்ரீமகா லட்சுமியார் பாதத்தை வணங்கி யுபாசித்தா ளொரு கந்தர்வ ஸ்திரீயானவள் வழிபட்ட காரணத்தைக் குறித் திரங்கி ஸ்ரீதேவி யானவள் தனது திருவடியிற் சாத்தியிருந்த மாலையை யவளுக்குப் பரிசா யளித்தா ளந்த மாலையைக் காந்தர்வ ஸ்திரீயானவள் சிரசி லானந்த வைபவமா யணிந் தவள் வரும்போ தந்த வழியில் துருவாசர் கண் டவளை வணங்கிட வவளு மகிழ்ந் துமக்கு என்னுலாகிய காரிய மென்ன வென்றாளவில் ஸ்ரீமகாலட்சுமியா ருமக் களித்த திருவடி சம்பந்த மாலையை யெனக் கநுக்கிரகம் பண்ண வென்றளவி லவளுங் கொடுத்தா ளதைப் புனைந்து மகிழ்ந்தா ரென்றவாறு. 3

588. உம்பருல கெய்தியயி ராவதமு மூர்ந்து
யம்பமர ரோடுபவ னிக்கொழுகு மிந்த்ரன்
சம்பரமு ணர்ந்துமது தாரதனை நல்கக்
கம்பமத யானைபிடர் மீதினில்க வித்தான்.

எ - து :—அந்த மாலையைத் திருமுடியிற் சூட்டிய துருவாசரானவ ரிந்திர னுலகத்தின்கண் வந்தக்காலையி லிந்திர மகாராசனுனவன் வெள்ளானையின்மேல் வெள்ளி வெண்குடை நிழற்றப் பதினெண் வாத்தியங்களு முழங்கச் சாமரை யிரண்டு பக்கங்களிலு மிரட்ட வரம்பையர்க ளுடனஞ் செய்யக் கற்பகத் தருவி னிழலிலே பவனியாக வந்தா னிப்படியாகிய விந்திர போக செல்வத்தைக் கண்ட துருவாச ரானவர் மனங் களிகூர்ந்து தாம் காந்தருவ ஸ்திரீயை வந்தித் தருமையாய்க் கொடுக்கப்பெற்ற மாலையை யிந்திரன் கையிற் கொடுத்தா ரதை வாங்கி இந்திரனுனவன் யானை மத்தகத்தி னணிந்தா னென்றவாறு. 4

589. யானையதை வாங்கிதன டிக்கொடுது வைக்கப்
போனமுனி வன்மனது பொங்கிவிழி சேப்ப
வானகமு மண்ணகமு மதிமுதல்சு மூன்ற
வீனமுற வாசவனு மெய்தின னகன்றே.

எ - து :—இந்திர மகாராசனுனவ னிலக்குமியார் பாத கமலத்தி னிருந்த மாலையினை வெள்ளானை மத்தகத்தில் போட்டதை யந்த யானை யானது துதிக்கையினு லிழுத்துத் தன துரல்போன்ற பாதத்தினுலே தேய்த்த மாத்திரத்திலே யதைக் கொடுத்த துருவாச முனிவரானவர் மனது பொங்கிக் கண்களான தக்கினி கக்கத்தக்கதாகக் கோபித்

தளவி லாகாயமும் பூமியுஞ் சந்திரசூரியருஞ் சுழல வுலகமெல்லாந் திடுக்கிட் டழியவு மிப்படிப்பட்ட வீனத்தைச் செய்கின்ற விந்திர மகாராசனு மந்த யானையை விட்டு வோடத் தொடங்கினு னென்றவாறு. 5

590. அரசொழிய செல்வமும கன்றுவுறு மையனுய்
விரசுதிருப் பாற்கடலை மேவிமிக விந்த்ரன்
பரசுவது கண்டருள்ப ரம்பொருளி ரங்கி
வரையினைசு மந்தமுத மாகெனம தித்தான்.

எ - து:—அப்படி யானையைவிட் டோடுகின்ற விந்திர ராசனைப் பார்த்துத் துருவாசரானவர் கோபித்துச் சொல்லுகின்ரு ருனது ராச ரீகமான துன்னைவிட்டு நீங்கி யுனது செல்வம் பலவுங் குறைந்துபோகக் கடவதென்று சபித்தா ரந்தச் சாபகாரணத்திஞ லிந்திரனுனைவன் விரைந்து சென்று திருப்பாற்கடலிலே போய் நாராயண மூர்த்தியைத் தோத்திரம் பண்ணுகிறதைக் கண்ட பரம்பொருளாகிய புருடோத்தமரானவ ரிரங்கின வராய் மந்தர கிரியைப் பிடுங்கித் திருப்பாற் கடலிலே நட் டதைக் கடையத் தொடங்கினு ரென்றவாறு. 6

591. வாசுகியைச் சுற்றுகயி ருகமதி தூணுய்
மூசமரர் தானவர்கண் முந்திகடை யுங்கா
லீசனெடு வாசவனு நான்முகனு மேத்தப்
பேசுமமு தச்சுவைபி றந்ததுதி னூடே.

எ-து:—அந்த மந்தர கிரியிலே வாசுகி யென்னும் பாம்பைச் சுற்று கயிருக்கிச் சந்திரனுனவன் கம்பமா யிருக்கச் செய்து மொய்த்திராநின்ற தேவாதிகளு மரக்கராகிய ராக்ஷதர்களு நெருங்கிக் கடைந்த ஞான் றீசனுகிய பரமசிவனுந் தேவேந்திரனும் பிரம்மாவுந் துதிக்கத்தக்கதாய்க் கடையாநின்ற காலத்தில் யாவராலு மேற்றமாய்த் துதிக்காநின்ற வமுத ரசனையானது கும்பத்திலே பிறந்த தென்றவாறு. 7

592. பதுமநிதி சங்கநிதி வெண்பரிக ரித்தார்
மதுவொழுகு கற்பகமு மானுமயல் சூழத்
துதிபெருமை வாணியமர் மாதர்துதி செய்ய
நிதிபெருகு கோமளநி கழ்த்திருவு தித்தாள்.

எ - து:—பதுமநிதியாகிய பொன்னைத் தருகின்றதுஞ் சங்கநிதியாகிய வெள்ளியைத் தருகின்றதும் வெளுத்த வுச்சுவச்சுருவக் குதிரையு மயிராவதமுந் தேனைச் சொரிந்து திவ்விய பரிமளங்களைக் கமழாநின்ற

கற்பக விருட்சமுங் காமதேனுவாகிய பசுவும் பக்கங்களில் சூழவு மியாவருந் துதிக்காநின்ற உமையவளும் வெண்டாமரைக் கமல பீடத்தி னெழுந்தருளிய நாவின்மகள் சாவித்ரி காயத்ரி முதலாகிய தேவ மாதர்கள் துதி செய்யத் தக்கதாய்ச் சகலகுண மங்கள சாம்ராஜ்ய குணவதியாய் நற்குண நற்செய்கையோடுங் கூடிய பதிவிரதா சிரோமணி யாகிய ஸ்ரீமகாலட்சுமிதேவி யவதரித்தா ளென்றவாறு. 8

593. வந்ததொரு செந்திருவ முங்கருளி னாலே
யிந்திர னுஞ் செல்வமதை யெய்தினன்முன் போல
வெந்தையவ டன்மணமி சைந்தவுட னன்னே
சுந்தர னு ரத்திடையி லங்கதுணி வுற்றாள்.

எ - து :—அப்படி யவதாரஞ் செய்தருளி ஸ்ரீமகா லட்சுமி யனுக் கிரகத்தினா லிந்திரமகாராசனுஞ் செல்வ சாம்ராஜ்யத்தை யடைந்து பட்டாபிஷேக பதியாய்க் குறைவற்று வாழ்ந்தா னதன்பின் பெருந்தையாகிய நாராயண மூர்த்தியானவர் அந்த ஸ்ரீமகாலக்ஷ்மியைச் சுபகர மங்களமாய்ப் பாணிக்கிரகணம் பண்ணவேணு மென்று மனதிலே யுத்தேசித்தா ரதை யறிந்த ஸ்ரீதேவியானவள் சுந்தரனாகிய சீதரனுடைய மார்பகத்தி லெப்போதும் பிரியாதவளா யிருக்கத் துணிந்து நினைத்தா ளென்றவாறு. 9

594. என்னையரு ளையனையி ருங்கமல வாச
வன்னையுல கங்களைய ளித்தருளு மெந்தாய்
தன்னைதன கத்திடைத ரித்தருள்க வென்றே
பன்னபர மன்முனைப ராமுகம தானான்.

எ - து :—இந்தப் பிரகார நினைந்த பிராட்டியானவ ளென்னை யபக்குவியென்று நினையாது சிருட்டித்து ரக்ஷிக்காநின்ற வருளே யுருவமாகிய வையனைப் பெரிய பொன்னந் தாமரைப் பீடத்தி னெழுந் தருளி யுலகங்களை யெல்லாம் பெற்ற தாயாகிய ஸ்ரீமகாலக்ஷ்மிதேவி யானவள் ரக்ஷகனுடைய பொன்னந் தாமரைக் கமலத்திலே தெண்டன் சமர்ப்பித்துச் சுவாமி யுமது திருமார்பகத்தி லென்னை யிடைவிடாது தரித்தருளக் கடவீரென்று கூறும் வார்த்தையைக் கேட்டுங் கேளாத வரைப்போ லந்த வுத்தரத்தில் வாஞ்சனை யில்லாதவராய்ப் பராமுகம் பண்ணினா ரென்றவாறு. 10

595. மனதின்மிகக் கோபமெழ மாதவனை நோக்கிப்
புனமணியு மார்பிலிட முப்பெறுவ னென்றே
யுனைதவசு செய்யவொர ருந்துயரு ழந்தோர்
தனையருள்செய் கோலவரை சாரமன துற்றாள்.

எ - து:—இந்தப் பிரகாரந் தனது வார்த்தையைப் பராமுகஞ் செய்தருளிய சீதரனைப் பார்த்த ஸ்ரீமகாலட்சுமி தேவியானவள் மனதிலே கோபம் பெருகத்தக்கதாகத் தன் றலைவனைப் பார்த்து உமது கவுத்துவ மாலையை யணிந்த வழகிய மார்பிடத்தை யான் றவஞ் செய்தாவது பெறுவேனே யல்லது என் விரதத்தை விடுவே னல்லே னென்று சபதஞ் செய் தும்மைக் குறித் தரிய தவசு செய்து யான் றுயரப்பட்டா லடையப்படாத வரத்தையு மடைவே னென்று சொல்லிச் சுவாமியி னுடைய திருப்பாற்கடலை விட்டுப் பிரிந்து கோலாசல பர்வதத்தைக் காணத் தக்கதாக மனத்திலே உத்தேசித்தா ளிலக்குமிதேவி யென்றவாறு. 11

596. கலைமக ளு மலைமக ளுங் ககனசுரர் மாதர்
சிலைநுதலி சசியருகு தாதியர்கள் சூழ்ந்து
கலைதருமை கண்மணியில் கழறுவென செய்யத்
தலைமைபெறு வெண்டரள தண்டிகைய மர்ந்தாள்.

எ - து:—வேத முதலாகிய வறுபத்து நான்கு கலைகளினு நிறைந் திரா நின்ற நாவின்மகளும் பர்வதராச புத்திரியாகிய பார்வதியாரு மிந்தி ராணி முதலாகிய தேவகன்னியர்களுமாகிய தாதியர்கள் பக்கங்களிற் சூழ்ந்துவர ஸ்ரீமகாலக்ஷ்மிதேவியாருடைய மாறேக்கம்போன்ற கண் ணிணையிற் பிறந்த கிருபா நோக்கக் குறிப்பறிந்து தாங்கடாங்கள் செய்யத் தகும் பணிவிடையைச் செய்யத் தக்கதாய்ப் பிரதமமாய்ச் சொல்கின்ற முத்தினத்தா லமைந்திராநின்ற தண்டிகையாகிய பல்லக்கின்மேற் செல்லத் தொடங்கி யாரோகணித் மாறு ளம தன்னை யென்றவாறு. 12

597. கவுரிதிரு கவரியுமி ரட்ட வருகங்கை
சிவிகைகலை மகளருகி னிற்சிலசி றந்தாள்
கவிகைகள ரம்பையர்க ளிக்க சசிதானும்
புவியின்மல ரணிகொடுபு கழ்ந்தினிது போனாள்.

எ - து:—அப்படி முத்தின் சிவிகையின் ஸ்ரீமகாலக்ஷ்மி யெழுந் தருளிய மாத்திரத்தின் சாமரையைப் பார்வதிதேவியாருந் தேவகங்கையு மிருபுறத்தினும் வீசினார்கள் சிவிகையாகிய பல்லக்கி னருகிலே நாவின் மகளும் வேத பதக்கிரமஞ் சடையினாற் றொழுது போயினாள் தவள சத்திரக் குடை யனேகத்தை யரம்பையர்கள் தாங்கினார்க ளிந்திராணி யானவள் பூமியிலே மந்தார பாரிஜாத மலர்மாரியைப் பொழிந்துபோனா ளென்றவாறு. 13

598. அட்டதிசை மாதர்சிவி கைக்கலை யணைக்க
விட்டமொடு கந்திருவர் வீணையிசை பாட
வட்டமதி தாரகையி னடுவண்வரு வதுபோல்
மட்டின்மணி யாரநிறை நெய்தறிணை வந்தாள்.

எ - து:—எட்டுத் திக்கினு மிருக்காநின்ற ரமணீயமான வழகினை யுடைய கன்னியர்களானவர்க ளந்தப் பல்லக்கின் கணையைத் தாங்கினுர்க ளிட்டத்திறு லாயிரம் நரம்பு பூண்ட வீணைகளைக் கையி னேந்திக் கந்திருவ ரிசைப்பாட்டினைப் பாட வாகாயத்தினிருந்து பிரகாசிக்கா நின்ற தாரகாகண நடுப்பிரதேசத்திற் சோடச கலையோடு விளங்கிய விருத்தமான வடிவினை யுடைய சந்திரன் பிரவேசித்ததுபோலச் சகல கன்னியர்களும் சூழக் கணக்கிறந்தனவான மணியினங்களு நிறைந் திராநின்ற கடற்கரை யோரத்திலே வந்தருளினு ளென்றவாறு. 14

599. நிலங்கலம ரும்பொருணி றைந்தவரு கேகிப்
புலன்கொடுணை போல்கணவன் பொற்பணில மென்னக்
கலன்கொடணி தன்களமே காட்டுவன போலூர்
சலஞ்சலமே கண்டுமிகு சஞ்சலமொ ழிந்தாள்.

எ - து:—அந்த நிலத்திலே யிராநின்ற கப்பலான தரிய பாரமாகிய பொருள் மணிகளைச் சொரிந்து குவிந்திராநின்ற வந்தப் பக்கங்க ளெல்லாம் பார்த்துத் தனது பஞ்சேந்திரியத்துக்குந் துணையாகிய நாயகனுகிய நாராயண மூர்த்தியின தழகு பொருந்திய சங்கத்தைப் போன்ற வாபரணத்தை யணிகின்ற தனது கண்டத்துக்குச் சரியான சலஞ்சலமென்கின்ற சங்கத்தை யந்தக் கடலிடத்திற் கண்டு தனது சஞ்சலமாகிய விசனத்தை யொழிந்தாள் ஸ்ரீமகா லட்சுமிதேவி யென்றவாறு. 15

600. கடற்கணடர் செம்பவள காடுபட ரக்கண்
மடற்கமல கண்ணன்மணி வாயிதழு மாய்த்தன்
றடக்கஞெளிர் செவ்வரியு மொத்ததுத யங்கக்
கடற்கனுறு வீறுபுள காங்கிதமு முற்றுள்.

எ - து:—அப்படியா யெழுந்தருளிய ஸ்ரீ மகாலட்சுமிதேவியானவ ளந்தக் கடலினிடத்திலே அடர்ந்து படர்ந்திராநின்ற செம்பவளக் காடான திருப்பதைக் கண்டு தனது நாயகராகிய சீதர மூர்த்தியினுடைய செம்பவள விதழோ வல்லது நமது கண்ணிற் படர்ந்த செவ்வரிதானே வென்று மதித் தற்புதம் பெருகிப் புளகாங்கித முற்று ளென்றவாறு. 16

601. கரையிலகு கிரணமணி குன் றுகள்க வின்செய்
யுரையளவி லாதபொ னுடன் றிகழ்தல் கண்டு
வரைபுரைதன் னுயகனன் மால்புயமு மேரு
புரைதனமு மாகுமென வெண்ணியயல் போனாள்.

எ - து :—அந்த நெய்தற்றிணைக் கரையிலே கிரண சமூகங்களை விரித் தொளிராநின்ற நவரத்தினங்கள் குவிந் தமுகெரிக்கச் சிறந்த பொன்குவிய லுடனே தோன்றுதலைக் கண்ணுற்ற ஸ்ரீமகாலட்சுமி தேவியானவ டனது நாயகனாகிய ஸ்ரீதர மூர்த்தியினது நவரத்தினமயமாகிய புசமே யிந்த ரத்தினக் குவிய லென்றுஞ் சொர்ணக் குவியலே தனது தனபாரமென்று மதித்தவளா யதின் பக்கங்களிலே சென்றருளினா ளென்றவாறு. 17

602. தோடுபொரு கண்ணிணைது ணைக்கருவி யென்ன
மாடுவரு தோழியர்ம கிழ்ந்தினிய முல்லை
யூடுறுவி லங்குபுளி னங்களொடு ணர்த்தக்
காடுபடு திரவியமுங் கண்டதுவ கன்றாள்.

எ - து :—காதி னணிகின்ற தோட்டினை யெதிர்த்துப் பாய்கின்ற தனது கண்ணிணையைப் போன்ற தோழியர்கள் முதலாகிய பேர்கள் தன்னைச் சூழ்ந்துவர நெய்தற் றிணையைக் கடந்து தனது தோழியருடனே முல்லைத் திணையாகிய காட்டகத்திற் றோன்றுகின்ற மிருக சாதிகளும் பக்ஷிசாலங்களும் வழிகாட்டக் காட்டிற் படுகின்ற திரவியங்களை யெல்லாங் கண்டு களிகூர்ந்தாள் ஸ்ரீ மகாலக்ஷ்மிதேவி யென்றவாறு. 18

603. சென்னெலொடு செவ்விளநீர் சேர்புனல்த டங்கள்
கன்னல்கமு குக்கதலி காரளவு சோலை
மன் னுபல மும்பலவ ளங்களுமகிழ்ந்தவ்
வன்னமணி கோலவரை மீதினில ணைந்தாள்.

எ - து :—அந்த நெய்தல் திணையைக் கண் டுவகை யுற்ற ஸ்ரீமகா லக்ஷ்மியானவள் முத்தின் சிவிகையினை யூர்ந்து தனது சேடியர் பாங்கிய ருடனே மருதத் திணையி னெழுந்தருளும்போது செந்நெற் குலைகளுஞ் செவ்விளநீர்க் கூட்டங்களுந் தாமரைமுதலாகிய நிறைந்த தடாக பந்திகளுங் கன்னலாகிய கரும்பின் காடுகளும் கமுகினங்களினது தோப்புகளும் மேக

மளாவிய பூஞ்சோலைகளிலே நிலைபெறுகின்ற பழ வருக்கங்களும் பார்த்து மகிழ் சிறந்தவளாய் நானாவிதமாகிய மணிமயமான கோலாசலத் துச்சியிலே தோழியர்களுடனே யடைந்தா ளென்றவாறு. 19

604. வந்துமலை மீதுகலை வரைமகள்கை தாங்க
விந்துநுத லார்சசிய ரம்பையர்க ளேக
முந்துநறு பூவனைய மொய்மலர்கை யேத்திப்
பந்தியின டித்துணைப ணிந்தனர்க ளன்றே.

எ - து :—அப்படிக் கோலாசலத்தில் முத்தின் தண்டிகை விட்டிழிந்து பாதசாரியாய் ஸ்ரீ மகாலட்சுமி யடிபெயர்த் தெழுந்தருளும்போது நாமகளு மலைமகளாகிய பார்வதியாரு மிரண்டு கைகளையுந் தாங்கி யருகே சூழ்ந்துவர வவர்களை யிந்திராணி முதலாகிய தேவகன்னியர் சூழ்ந்துவரத் திவ்விய மண நாறுகின்ற காந்தட் புட்ப மலர்ந்ததுபோன்ற கையிணைகளைச் சிரசிலே முகிழ்த்துத் தொழுது பின்பு பந்திபந்தியா யந்தத் தேவகன்னிய ரெல்லாந் தெண்டன் சமர்ப்பித்தார்க டிருவடித் தாமரையி னென்றவாறு. 20

605. அன்னையெம தாருயிரி றைமுத மேயெம்
சென்னியில்கு வித்திருகை சேர்க்கவுமை யாளும்
பொன்னினருள் மங்கலைபொ ருந்துதிரு வென்றே
முன்னர்கமுல் சேர்க்கதிரு முற்றமதி னுற்றாள்.

எ - து :—உமையவளாகிய பார்வதியாரும் நாமகளாகிய சரஸ்வதி தேவியாருஞ் சிரத்திலே கைகூப்பித் தொழுது கூறுகின்றார்க ளெமது தாயே சிறந்த வாருயிரே திருப்பாற்கடலிற் பிறந்த திரண்ட வமுத கும்பமே பொன்மயமாகிய மங்களாகர மங்கலையே யருள் வடிவாகிய திருவே யருளே பொருளே யென்று துதிசெய் தம் மலைப் புறத்திலே முன்னே யவர்க ளிருபக்கத்தினும் பதம் பெயர்த்து நடக்க நடுப் பிரதேசத்திலே யன்ன நடையைப் போலத் தனது பாதத்தைப் பெயர்த்து வைத்துத் திருமுற்றமாகிய கோயிலின் வாயில் சமீபமாய் வந்தருளினா ளென்றவாறு. 21

606. பத்துயர்வு யோசனைய கன்றபரு பந்தர்
[1]சுத்திவர வாழைகமு குக்குலைதொ டுத்து
முத்துமணி மாலையினை பாளைமுறை சேர்த்தங்
கத்தனைதொ ழற்குரிய சாலையும மைத்தார்.

[1] சுற்றிவர.

எ - து:—இந்தப் பிரகாரம் ஸ்ரீமகாலட்சுமிதேவியானவ டனது பாங்கியருடனே திருமுற்றத்திலே வந்தெழுந்தருளின மாத்திரத்தின் றேவாதிகளானவர்கள் பதின்காத வழியளவு நீளமுமா யொரு கல்யாணப் பந்த ரமைத்தார்க ளதைச் சுற்றி வாழைகளுங் கமுகுகளுங் குலைகளுடனே பிரகாசிக்கக் கட்டி முத்தமாலையினை யந்தக் குலையிற் றொங்கவிட் டரங்க நாயகரைத் தொழுதற் குரித்தாகிய தவச்சாலை களையு மனேகமா யமைப்பித்தார்க ளென்றவாறு. 22

607. எட்டுதிசை மாதர்பல திக்குமுறை காப்பப்
பட்டணிமெய் சூழ்கவுரி வாணிபகர் மாத
ரிட்டமுட னேவலதி யற்றவிறை வியுமோர்
வட்டசிலை கானகமு றுத்தநதி வந்தாள்.

எ - து:—இந்தப் பிரகாரம் ஸ்ரீமகாலட்சுமி தேவியானவள் தவ நிலையைத் தொடங்க நினைத்தவளா யட்டதிக்குப் பாலகர் மனைவியர்க ளவரவர்தங் கணவரிருக்குந் திசைகளைக் காக்கவும் பீதாம்பரத்தை யணியாநின்ற பார்வதியாரு நாவின்மகளு மேவுற் பணிவிடைகள் செய்யவு மிறைவியானவ ளந்த மலையி னிருக்காநின்ற வட்டச் சிலைக் கல்லிலே தனது காற்பெரு விர லகத்தை யூன்றினு ளப்போ தந்த வட்டப் பாறைச் சிலையினின்று மொரு மகாதீர்த்தமாகிய நதியாய்ப் பிரவேசித் தனேக வலைகளுடனே கூடிப் பலமுகமா யந்தத் தீர்த்த முண்டாய தென்றவாறு. 23

608. மூவுலகு கங்கையுமு டன்முனமு நித்தாங்
கேவருகு மந்நதியி றிந்துரியல் சங்கத்
தாபரமி கக்குளிர தண்புனல்ப டிந்து
பூபுரைபொன் றுடைநிகர் மரவுரிபு னைந்தாள்.

எ - து:— ஸ்ரீமகாலட்சுமி யனுக்கிரகத்தினுற் பிறந்து வந்த நதியைச் சேவித் திருபுறமுந் திரிபுவன கங்கைகளும் பிரவேசிக்க வாய்ந்த நதியானது தோன்றி வரும்போ தனேகமாகிய விடம்புரி வலம்புரி முதலாகிய சங்கக் கூட்டங்களை யலையி னேந்தி யம் மலைப்புற மெல்லாங் குளிர்ச்சியடைய வந்த நதியிலே தீர்த்தமாடிய பின்பு முன்னுடுத்த பீதாம்பரத்தை நீக்கி மரவுரியைப் புனைந்தாள் ஸ்ரீமகாலட்சுமி தேவி யென்றவாறு. 24

609. அணிகலன கற்றிதிரு மணிதுளவ ணிந்து
பணிதனில்ப டுக்குமரி துணையடிப ணிந்து
மணிவிழியி ரண்டுநுத லொன்றிமைத விர்ந்து
தணிமனதி னன்புமிக தவமதனில் வந்தாள்.

எ - து:—தான் பூண்ட வணிகலனாகிய வாபரணத்தை நீக்கித் தத்துவத்துக் குரிய சிரேட்டமாகிய துளபமாலையைச் சிர முதலாகிய வுறுப்பிற் றாங்கி யனந்த சயனசாயியாகிய வரங்கநாயகருடைய பாத தாமரையைத் தன திதய பீடத்தி லுபாசித்துக் கண்மணிகள் விளங்காநின்ற கண்ணை நுதலாகிய நெற்றியிற் செலுத்தி யிமையாதவளாய்ச் சாந்த தத்துவ ஞானத்தினைத் தருகின்ற தவவொழுக்க வுருவத்தைக் கொண் டெழுந்தருளியிருந்தா ளுலக மாதாவாகிய ஸ்ரீமகா லட்சுமிதேவி யென்றவாறு. 25

610. முடியினில்கு முற்சடைமு டித்துமணி யுச்சிப்
படிவமறை பேதையும ணிந்துபர மன்றன்
வடிவகமு றுத்திமலர்ப் பதநிலநி றுத்திக்
கடிபொறியை வித்திருகை சிரமிசைகு வித்தாள்.

எ - து:—முடியிலே யிராநின்ற உச்சிமயிரினைச் சடாபாரமாய்த் தாங்கியுந் திருவரையிலே மானுரியைத் தாங்கியும் பரமனுடைய பாத தாமரையை யிதய பீடத் திருத்தியு மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் வாயிலை யுடைய வைந்தவாயிற் செல்லு மிந்திரியங்களை யடக்கி யிரண்டு கையாகிய காந்தட் புட்பத்தைச் சிரசின் பேரில் கூப்பித் தொழுதா ளென்றவாறு. 26

611. பிரணவம னத்திடைபெ ருக்கியுள டக்கிக்
கரணமிகு ஞானநிறை கண்ணிலமு தூறச்
சரணமது தாரையென தாயுணர்வு சாரக்
கிரணமதி யெனமலையின் மீதினில்வி ளர்ந்தாள்

எ - து:—சத்தகோடி மகாமந்திர சாலத்துக் குயிராகிய பிரணவத்தை மனத்தின் பீடத்தின்மேலே பெருக்கி யுள்ளே யடக்கியுங் காரணத்தைக் கடந்த மிகுந்த ஞானமாகிய கண்ணிலே யமுதமான தூறவுந் தன் றலைவன் சரண பங்கயமான தமுத தாரையெனத் தாயினுடைய வுணர்வானது சாரவு மூன்றாம் பிறையினின்று வளர்கின்ற சந்திரனைப்போலந்த மலையிலே வளர்ந்தாங்கிரு ளென்றவாறு. 27

612. தவசிலனை நிற்கமெய்த ளர்ந்தவர்கு ழைந்தங்
கவசமுற பார்வதியவ் வாணியமர் மாதர்
திவசமொரு முப்பதுவு நிற்கவன முஞ்சேர்
நவவனமு மரையினமு நற்றவமி யற்ற.

எ - து:—தவசிலை ஸ்ரீமகாலட்சுமி நின்றமாத்திரத்திலே யங்ஙன மிருந்த பேர்கள் முதலாகியவ ரெல்லாஞ் சரீரந் தளர்ந்துதுவு மல்லாமல் பார்வதி சரஸ்வதி முதலாகிய பேர்களுஞ் சித்திரப் பிரதிமை போலக் குழைந்துருக முப்பதுநாள் தவம்பண்ணின மாத்திரத்திலே வனங்களு மரையினங்களுங் கல்லும் புல்லுகளுந் தவம் செய்த தென்று லியாவர் தாம் தவம் செய்யாதவர்க ளென்றவாறு. 28

613. கொன்றைச்சடை காட்டித்தவ நின்றப்பனை கூந்த
லன்றுத்தவ நின்றப்பரி யாலுந்தவ நின்ற
மன்றற்பொழி செந்தாமரை ளர்தாளினி னின்று
வொன்றுத்தவஞ் செய்தா லென வுற்றூர்ந்தது மலையே.

எ - து:—சரக் கொன்றை யென்னுஞ் சடைகளை யொளிபெற நான்கு திசைக்கண்ணும் விரித்துத் தவம் செய்தலை யொத்தன கூந்தற் பனை யானது விளங்கிய தப்பொழுதில் ஸ்ரீமகாலட்சுமி தேவியானவ டவநிலைக் கரிய பருவ மமைந்தவளா யோக தவங்களைச் செய்து முடித்தமையால் திரிபுவனத்திலுந் தவங்க ணிலைம்ப றடைந்தன திவ்விய பரிமளங்களை யிதழினை விரித்து வீசாநின்ற செந்தாமரைக் கமலங்க ளொரு தாளினின்று தவங்களைச் செய்தலை யொத்த தம் மலையி லென்றவாறு. 29

614. உலகெங்குறு மசைவற்றிட வொழியாதவ முயல்கா
லிலகும்பொரு ளியாவுமிசை யாவுமசை வற்ற
சொலவுந்தர மன்றேயய னரனுந்துய ருற்றுர்
பலவுமரு டன்னைத்தனை யன்றிப்புக லுண்டோ.

எ-து:—உலக மெல்லா மசை வற்றிட வொழியாத தவத்தைச் செய்யுங் காலத்தி னிந்த லோகத்தையும் மேலுலகத்தையும் சேர்ந்திசைந்த பொரு ளியாவு மசைவற்றுநின்றன சொல்லுதற் கரியதாகிய சங்கரனும் பிரம்மாவும் துயரினை யடைந்தார்கள் பல பேதாபேதங்களாகிய உயிர்களுக்குஞ் சமயங்களுக்கும் ஸ்ரீமகாலட்சுமி யல்லது வேறே துணை யுண்டோ வாகையா லென்றவாறு. 30

615. அண்ட மெண்டிசை யாருயிர் வானவர்
புண்ட ரீகன் புராரிபு ரந்தரன்
றெண்டி ரைத்திருப் பாற்கடற் செல்வனை
மண்ட லமளந் தப்பத மன்னினுர்.

எ - து :—அண்டரண்டராகிய வெட்டுத் திக்குப்பாலகர் முதலான பேர்களு நிறைந்த வுயிர் வர்க்கமுங் கின்னரர் முதலாகிய வானவர் கூட்டங்களும் பிரம்மாவுஞ் சிவனு மிந்திரனுந் தெளிந்த திரையினை யுடைய திருப்பாற்கடலிலே பிறந்த செல்வராகிய நாராயண மூர்த்தியி னுடைய திரிலோகத்தையு மளந்த பாத கமலத்திலே சரணுகதி யடைந்தார்க ளென்றவாறு. 31

616. முனிவர் மாதவர் மொய்த்தம ரர்தொழ
வினிய மாமறை யேத்தவி டைவிடாத்
தனிய னந்தன்சு னந்தனுந் தாங்குறக்
கனியு நல்லடி யார்கள்க ழற்றொழ.

எ - து :—முனிக் கூட்டங்கள் மகா தவசிக் கூட்டங்கள் மொய்த்து நெருங்கிய தேவ கூட்டங்க டொழத்தக்கதாகவு மினிதாகிய வேதங்க ளேத்தெடுக்கவு மிடைவிடாது தனியாகிய வனந்தன் சுனந்தனுந் தாங்கத் தக்கதாகக் கனிந் துருகாகின்ற நல்ல வடியார் கூட்டங்கள் பாத தாமரையைத் தொழத்தக்கதாய் வீற்றிருந்தா ரென்றவாறு. 32

617. வந்த னன்பொன்ம ணிகோல மால்வரை
யந்த மாமல ராளன்பு கொண்டுடன்
சிந்தை யுங்களி கொண்டுதொ ழுதடி
முந்தப் பூசைமு றையிற்பு ரிந்தனள்.

எ - து :—ஸ்ரீமகாலட்சுமி தவம் பண்ணியதைக் குறித்து வந்தார் கோல பர்வதத்திலே தவம் செய்கின்ற பிராட்டி யன்பைக் குறித்தபடி வந்தவரைச் சிந்தை யுவந்து களிகூரத் தொழுது திருவடியிலே பூசை விதி வரன்முறை பிறழாது வைதிகப் பிரகாரம் பூசனை புரிந்தா ளென்றவாறு.

618. திங்க ளொன்றினிற் செய்தவஞ் செய்திடும்
பங்க யத்துறை யும்பது மைமுன
மெங்க ளையனி ருசர ணைத்திப்பின்
செங்கை யாற்றிரு வாராத னஞ்செய்தாள்.

எ-து:—ஒருமாத பரியந்தம் பிராட்டியானவ ளரிய தவத்தைச் செய்திடச் செவந்த பங்கயத்திலே யிராநின்ற ஸ்ரீமகாலட்சுமிதேவி யானவள் முற்காலத்தி லெங்க ளையனாகிய சீதரனுடைய விரண்டு சரணாரவிந்தத்தையுந் தொழுதேத்திய பின்பு சிவந்த காந்தள் மலர் போன்ற கையினாற் றிருவாராதனஞ் செய் தற்புதம் பெருகினா ளென்றவாறு. 34

619. ஞான நாயக னற்கரு ணைக்கட
லானு வந்துத வநிலை மெச்சினே
நீநி னைந்தபொ ருளைநி கழ்த்தென
வான மாதர்க்க ரசிவ ழங்குவாள்.

எ-து:—ஞானநாயகனுயு நற்கருணைக் கடலாயு மிராநின்ற வரங்க நாயகரானவர் சொல்லுகின்றார் நானுன் றவசினுடைய நிலைமையை மெச்சினே னாகையினாலே நீ நினைத்த பொருளைச் சொல்லுவாயாக வென்றா ரப்போது தேவகன்னியர்க் கெல்லாம் ராச நாயகமாகியவள் கூறுகின்றா ளென்றவாறு. 35

620. யானு நும்மணி மார்பைய கன்றிடாத்
தேனும் பாலினைப் போலுஞ்சி றந்திடு
மூனி னின்றவு யிரினு றைந்திடத்
தானு வந்துத ருகவ ரமென்றாள்.

எ-து:—அப்போது ஸ்ரீமகாலட்சுமி தேவியானவள் நாராயண மூர்த்தியைப் பார்த் தொரு வரங் கேட்கின்றா ளதென்னென்றால் கர்த்தனே யும்மைக் குறித்து யான் றவஞ், செய்த காரண மேதென்று லும தழகிய மார்பைவிட்டு நீங்காம லெந்நாளுந் தேனும் பாலும் போலவுஞ் சத்த தாதுக்களாற் பொருந்திய பஞ்சபூத காரியமாகிய உடம்பைவிட் டகன்றிடாத உயிரினைப்போல வும்மைவிட் டெந்நாளு நீங்காத வரத்தைத் தரவேணு மென்றாள் பிராட்டி யென்றவாறு. 36

621. அய்ய னங்கது வந்தங் கணிமணிச்
செய்ய பங்கயத் தும்முறை செல்வியைக்
கய்யி னுற்றமு விக்கலந் தும்மணஞ்
செய்ய வுன்னினன் வையஞ்செ ழிக்கவே.

எ - து:—இப்படி ஸ்ரீ மகாலட்சுமிதேவியானவள் கூறக் கேட்ட வையனுனவர் சந்தோஷத்தை யடைந் தழகாகிய மணிகளையுடைய சிவந்த தாமரைக் கமலத்தின் வீற்றிருக்காநின்ற பிராட்டியைத் தன திரண்டு கையினு லெடுத்துத் தழுவித் திருக்கலியாணம் பண்ண நினைத்தருளினு ரீந்த வுலகமெல்லாஞ் செழிக்கத் தக்கதா மென்றவாறு. 37

622. பின்னு மன்னையென் பேர்பெறு மிந்நதி
மன்னி மூழ்கினர் வாழ்வு மன்னவ
முன்ன மீகவ ரமென வேதனைப்
பன்னு முந்தியிற் றந்த பரமனும்.

எ - து:—மறுபடியும் பிராட்டியானவள் பின்னுஞ் சில வரங்கேட் கின்றுள் சுவாமி யென்னை யொரு பொருளா யாண்டவனே யெனது பெயரைப் பெறுகின்ற இந்த விலக்குமி தீர்த்தத்திலே மூழ்கின பேர்க ளெல்லா முமது பரமபதத்திலே நித்ய சூரியராய் வாழவு மெனக் கநுக் கிரகம் பண்ணவேணு மென்ற மாத்திரத்திற் றன துந்தியிற் சிருட்டி கர்த்தாவை யுண்டுபண்ணிய பரமாத்மாவாகிய நாராயண னுலோசிக்கின்று ரென்றவாறு. 38

623. அக்க ணத்தினி லார்ந்திட நன்னகர்
பக்க மாரப்ப லனுமுண் டாகவுந்
திக்கி னுள்ளன செல்வங்க ளோங்கிடத்
தொக்கி லாவர மீந்தனன் றுெல்லையோன்.

எ - து:—நாராயண மூர்த்தியானவ ரனுக்கிரகம் பண்ணுகிறு ரிலக்குமிதேவியே யுனது பேரினு லோங்கிய விந்த விலக்குமி தீர்த்தத்திலே மூழ்கின வந்த க்ஷணத்திலே நல்ல கதியை யடையக்கடவ தவர் பக்ஷத்திலே சகல செல்வமு மோங்கித் திக்கு திகாந்தத்தார் செல்வங்களும் பெற்றோங்கிச் சகல சுப சந்தோஷத்துடனே யென் னடியாராய் வாழக் கடவரென் றனுக்கிரகஞ் செய்தருளினுர் கேசவமூர்த்தி யென்றவாறு. 39

624. மனமகிழ்ந்து விந்நதியின் மூழ்கு வோர்கள்
வல்வினையைக் கடிந்துமிக வாழ்வு மெய்திக்
கனைகடல்சூ ழுலகினுள்ள தீர்த்த மியாவுங்
கலந்தபல னுண்டாயுன் கருணை யாலே
நினைந்தபொரு ளத்தனையு நிகழ்ந்தந் தத்தி
னிலையான பரமபத மடைவ தன்றி
யனையாரிரு மரபுமோ ராயிரங்கால்
வரமுத்தி யடைவரென வறைந்த வையன்.

எ - து:—பின்னுங் கூறுகின்றார் நாராயண மூர்த்தியானவர் மன மகிழ்ச்சியா யிந்த லட்சுமி தீர்த்தத்திலே மூழ்கின பேர்க ளெல்லாம் வலிய வினைகளைக் கடிந்து மேலாகிய வாழ்வினைப் பெற்றுச் சத்தக்கா நின்ற சத்தசாகர முதலாகிய திரிபுவனத்தினு முண்டாகிய தீர்த்தத்தின் மூழ்கிய பலனு முண்டாகக் கடவ தல்லாம லுனது கிருபையைப் பெற்று நினைந்த பொருள்க ளத்தனையுங் குறைவறப் பெற்றுச் சரம தசையாகிய மரணமானபின்பு பரமபதத்தில் வீற்றிருந் தவன் கால்வழி யாகிய மரபுளோ ராயிரக் கால்வழி பரியந்த முத்தியிலே வாழ வரங் கொடுத்தோ மென்றார் புருடோத்தம னென்றவாறு. 10

625. உலகெலாம் பேர்பெறுமி ராம தீர்த்த
மூழ்வினையைக் கடிந்துமிக வாழ்வு நல்கு
மலகிலாப் புகழ்பெறுமவ் விராமன் முன்னு
ளதிற்படிந்தவ் வரக்கர்குலம் வேர றுத்துங்
கிலகுபுவி தனைப்பன்னு ளாண்டான் கண்டா
யித்தீர்த்த மெவர்கள்படிந் தாலு மின்பந்
தொலைவிலா தருளும்பண் டிழந்த செல்வந்
தொண்டாக வந்தெய்துஞ் சுகமுண் டாமே.

எ - து:—உலகங்க ளெல்லாம் பிரசித்தமாய்ப் பேர் பெறுகின்ற விராம தீர்த்தமென்று கூறுகின்ற தீர்த்தமொன் றுண் டதிலே மூழ்கினு லூழ்வினையாகிய பாதசங்களை யெல்லாங் கடிந்து மிகுந்த வாழ்வு முண்டாக்கு மென்னிறந்தனவாகிய புகழைப் பெறுகின்ற ராமமூர்த்தி யானவர் முன்னுளிலே யதிலே மூழ்கி யரக்கர் குலமேவர்களை யெல்லாங் களைந் திந்த வுலகத்தைப் பதினுயிரம் வருட மரசாட்சி செய்தா ராகையினுலே யிந்தத் தீர்த்தத்திலே யெவர்கள் மூழ்கினுலு மின்பத்தைக் கொடுக்கு மதல்லாமற் செல்வர்களானவர்கள் கால பேதத்தினுலே செல்வத்தை யிழந்தவர்கள் வந்து மூழ்கினுல் மறுபடியு மந்தச் செல்வ மெல்லாங் கைகூடி வாழ்வார்க ளென்றார் நாராயண மூர்த்தி யென்றவாறு. 41

திருக்கலியாண தீர்த்த வத்தியாயம் முற்றிற்று.

# முப்பத்து மூன்ருவது : திருக்கலியாண வத்தியாயம்

626. மணம்புரிந்தெம் மனைக்கிதம்கொ டுக்க வாங்கே
மனமகிழ்ந்து மயனைநினைந் தளவி லாங்கோர்
கணமதனி லவனும்வந்து கழற்ப ணிந்து
கைகூப்பக் கடைக்கணித்துக் கமலத் தோனும்
வணங்கமணி மண்டபமொன் றியற்று கென்ன
வாய்புதைத்து மதியுன்னி வருத்தா னென்றை
யிணங்கவதற் கிணையாக வேறென் றேனு
மிசைப்பரிய வழகுடைத்தா யிலங்கிற் றம்மா.

எ - து :—இந்தப் பிரகாரம் கூறிய நாராயண மூர்த்தியானவர் பாணிக்கிரகணம் பண்ணிக்கொண் டெங் தாயாகிய பிராட்டிக் கிதங் கொடுக்கும் பொருட்டு மன மகிழ்ந்தவராய் மயனுகிய தேவகம்மியனை நினைத்த மாத்திரத்தி லந்தத் தற்காலத்தி லவன் வந்து தெண்டன் சமர்ப்பித் தெனக்குப் பணிவிடை யென்ன வென்று கேட்டமாத்திரத்திலே யவனுக் கனுக்கிரகஞ் செய்கின்ற ரிந்த உலகத்தைப் படைக்கானின்ற பிரம்மாவு மதிசயித்து வணங்கத் தக்கதாகிய கல்யாண மண்டப மொன் றமைக்கவேணு மென்றளவி லவனுஞ் சிரத்திற் கைகூப்பித் தொழுது மனோசிருட்டியினலே ஒரு மண்டபத்தை வருத்தப்பட்டுச் செய்தா னந்த மண்டபத்துக் கிந்த உலகத்தி லிணையில்லை யென் றியாவருந் துதிக்கத் தக்கதாகச் சுந்தர ரஞ்சித சிங்காரமாய்ச் செய்தான் தேவகம்மிய னென்றவாறு. 1

627. பொன்னுநவ மணிகளையு மிசைத்துவொன்றாய்ப்
பொருந்திமணி மேருவெனப் பொலியத் தோன்றி
மின்னுமணி முடியாக முகமாய்ப் பார்க்குள்
விளங்குமணி மண்டபத்தை விளம்பக் கேண்மோ
மன்னுகதிர் மதிபோலும் வயிரக் காலில்
மணிப்பாவை யழகெறிப்ப வாய்த்த சிங்கந்
தன்னுடைய கைவாயிற் காலின் முத்துத்
தாமமணிக் குச்சுகளுந் தழைத்த கோடி.

எ - து:—அப்படியாகிய கலியாண மண்டபமான தெத்தன்மையாய்ப் பிரகாசிக்கிறதென்றாலபரஞ்சிப் பொன்னையு மொன்பது வகையாயுள்ள ரத்தினத்தையு மொன்று விசைத்துப் பொருந்துகின்ற வழகிய மேரு கிரியைப் போலத் தோன்றிய தல்லாமல் பிரகாசத்தினையுடைய மணி மயமாகிய திருமுடியும் விளங்கிச் சகல வுறுப்புக்களிலேயுஞ் சிரேஷ்டமாய் முகம் விளங்கினது போன் றந்த மண்டபத்தைச் சொல்லக் கேட்பீராக சோடச கலையா னிறைந்த சந்திரனை யொத்த வச்சிரக் கால்களு மதிலே செய்கின்ற நவரத்தினச் சித்திரப் பிரதிமைகளுஞ் சிங்கங்களு மச் சிங்கத்தின் கை வாய் கால்களிலே தொங்கவிட்ட முத்த மாலைகளை யுடையது கோடானு கோடி யென்றவாறு. 2

628. தாரகையின் வயிரமணிச் சரங்க டொங்கத்
தழைந்தநடுச் சந்திரகாந் தக்கற் கீழும்
பாரகத்தி னடுவணைய நீலக் கால்கள்
பதித்துநாற் றிசைக்கணினும் பதுமை யேற்றிக்
கோரகம்பொன் கொடுமணிச்சித் திரங்களிட்டுக்
குவிந்தபோ திகையாளி முகங்கள் வைத்து
ஆரகம்பொன் மணிபுழுவை வாயின் மான்க
ளணியணியாய்த் தொங்கவிட்ட தனேகங் கோடி.

எ - து:—நக்ஷத்திரக் கூட்டம்போல வச்சிர சரங்களை யிடை யிடையிலே தொங்கவிட்டுத் தழைக்கிராநின்ற சந்திரகாந்தக்கல்லி னடுப் பிரதேசத்திலே யிந்திர நீலக் கால்க ளனேகம் வைத்து நான்கு திக்கினும் பதுமைகளை யேற்றியு மதி னுரத்திலே பல சித்திரங்க ளமைத்துக் குவிந்திராநின்ற போதிகையிலே யாளி முகங்க ளனேக மமைத் தாரச் சுவரிலே பொன்னாற் செய்த புலியு மணியினாற் செய்த மான்களுஞ் செய் ததன் வாயிலே முத்த மாலை தொங்கவிட்ட தனேகங் கோடி யென்றவாறு. 3

629. வாழைகள்பொன் மடல்விரிந்து குலைக ளுற்றி
வண்பூவி னினங்களின்மா ணிக்கஞ் சேர்த்துத்
தாழைகள்பொற் காய்மடல்க டழையத் தூக்கித்
தனிமணங்கள் சார்ந்தமலர்ப் பூப்போ லெங்குஞ்
சூழுகமு குகள்போலுந் தெங்கு போலுஞ்
சொற்பாளை விரியநலை தொங்க நாற்றி
நீழலிடு முயர்மணிபா லிகைகள் சேர்த்து
நிழற்றியநற் றூண்களொரு கோடி கோடி.

எ - து:—வாழையைப் பச்சை ரத்தினங்களாற் செய்தும் பொன்மயமான குலைகளைத் தொங்கச்செய்து மந்தப் பூவிலே மாணிக்கங்களைச் சேர்த்துந் தாழையினுடைய பொற்காய்களை மடலிலே தழைக்கத் தக்கதாகத் தூக்கியு மொப்பற்ற திவ்விய பரிமளங்கள் கமழ்கின்ற மலர்கள் போலவுஞ் சூழ்ந்த கமுக விருக்ஷம்போலவும் தென்னஞ்சோலை போலவும் பாளைகள் விரியக் குலைகளைத் தொங்கச் செய்துங் கிரணங்களொளிவிடுகின்ற நவரத்தினக் கும்ப பாலிகைக ளநந்தமா யமைத்துவைத்த தூண்களானது கோடானு கோடிக ளென்றவாறு. 4

630\. இவ்வகையாந் தூண்களிடைச் சூத்தி ரத்தி
லியைந்தநவ மணிப்பதுமை யிசைத்துப் பூக்கட்
செவ்விதரும் சுண்ணங்கள் கலவைச் சேறு
செறிந்தபனி நீர்வாச வெண்ணெய் தூவ
வெவ்வேறு கவரிக்கால் விசிறி வீச
விரைமலருங் கற்பகநாண் மாலை சூட
வெவ்விதழ மாயிரங்கண் படைத்தோ னுக்கு
மிமைத்திடா தழகுவாய்ந் தியைந்த தன்றே.

எ - து:—இப்படிப்பட்ட தூணிடையிடைகளிலே சூத்திரத்தினு லிசைவித்த நவரத்தின பதுமைகளை பிசைவித்துப் பூவினுலுஞ் சிறந்த சுண்ணங்களாலும் பரிமளக் கலவைச் சேற்றாலுந் தரையை மெழுகிப் பட்டத்தைத் தூவிப் பனிநீர் வெண்ணெய்களைத் தூவியும் அனேக சித்திரங்கள் சாமரைகள் விசிறிகளாலே வீசவுந் திவ்விய பரிமளங்களைக் கமழ்கின்ற புட்பமாரியுங் கற்பகமாலையுஞ் சில சித்திரந் தூவவு மிந்த வழகை யாயிரங் கண்ணையுடைய விந்திர மகாராசனுனவ னிமையாத கண்களைக்கொண்டு பார்த்தாலு மடங்கா தந்த வழ கென்றவாறு. 5

631\. சித்திரத்தி ரத்தினக்காற் சிறந்தொளிரும் போதிகைமேற் செறிந்த பச்சை
யுத்திரத்திற் பவழக்கால் மேதகங்கோ மேதகத்தி லொளிருங் கைகள்
வைத்துமணித் தசும்பியற்றி வளைந்தமா ணிக்கசுவர் வளர வெங்கு
முத்துமணித் தாமங்கள் முதுவயிரக் கான்மணிகள் முகப்பி னிட்டு.

எ - து:—சித்திரத்திறற் செய்த ரத்தினத்தினது காலிலே சிறப்பாகப் பிரகாசிக்காநின்ற போதிகைமேலே பச்சை ரத்தின வுத்திரத்திலே பவழக் காலின் மேதகஞ் சேர்த்துக் கோமேதகத்தினாலே பெரிய கைக ளமைத் ததற்குமேலே மணிக்குடங்க டாபித்து மாணிக்கச் சுவர் சூழவைத் திடை யிடைகளிலே முத்தமாலையைத் தொங்கவிட்டு முதுமையாகிய வயிரத்தா லமைத்த முத்த மாலைகளையுந் தொங்க வணிந்தா னென்றவாறு. 6

632. கொத்தலருங் கற்பகம்போ லிடையிடையி னவமணிகள்
கோத்த சித்ரப்
பத்திகளுங் காய்பழம்போற் பருமணிக டொங்கவதிற்
பக்ஷிக் கூட்ட
முத்தணியு மணிமாலை கொத்தியபோற் பொற்குச்சு
முகப்பிற் சேர்த்து
மெத்தனைபோ லலங்கார மியற்றியிடு தரைக்குமிந்த்ர
நீலஞ் சேர்த்தான்.

எ - து:—இத முகிழ்ந்த கற்பகமலர் போல மிடையிடைகளிலே நவ மணி மாலையை யிட்டுச் சித்திரப் பந்தர் விளங்கவு மணியாற் செய்த காய்களும் பழங்களும் குலைகளிலே தொங்கச்செய்து மதிலே பக்ஷிக் கூட்டங்கள் விளங்குவது போலச் செய்து முத்துங்களை யணியு மணி மாலைகளை யந்தப் பக்ஷிக் கூட்டங்கள் கொத்தினது போலப் பொற் குச்சுகளை முகப்பிலே சேர்த்து மிப்படியாகிய பலவகை சித்திரங்களை யெல்லா மலங்காரமாய்ச் செய்த பின்பு தரையிடத்திலே இந்திரநீல ரத்தினத்தைச் சேர்த்தான் றேவகம்மிய னென்றவாறு. 7

633. பாற்கடல்போ லொருபக்கம் பளிங்கதனி லியற்றிபச்சை
பரம்பொ ருட்போன்
மேற்கவியும் பருமணிச்சூட் டாயிரவாய்ப் பாம்பணையில்
விளங்கச் செய்து
காற்குநதிப் பெருக்கெடுப்ப போற்கமுறு நீரோட்டங்
காட்டி ரத்ன
மாற்குமுயர் மண்டபத்துள் ளிடையிடையி லறைதடுத்து
வயங்கு மாதோ.

எ - து :—திருப்பாற்கடலைப்போ லொரு பக்கத்திலே பளிங்கினாலே செய்தமைத்த பின்பு பச்சை மணியினாலே யனைந்த விமானமு மந்த விமானத்தி னடுப் பிரதேசத்திலே பரம்பொரு ளுருவம் யோகநித்திரை செய்தல்போலச் செய் தவரது திருமுடியிலே வனந்தனுடைய வாயிரம் படமுஞ் சிவரத்தினங்களுடனே குடைபோலக் கவிக்கச் செய்துங் கார் காலத்திலே நதிப்பெருக் கெடுத்தா லெத்தன்மையனவோ வத்தன்மை யனவாய் மணிகளாலே நீரோட்டம் பெருகச் செய்து மந்த வுயர்ந்த மணிமயமாகிய மண்டப விடையிடைகளிலே மாணிக்கத்தா லறைச்சுவ ரிட்டுத் தடுத்தா னென்றவாறு. 8

634. நதிபெருக்கஞ் சாகரத்திற் சாருவபோ லொருபக்க
நளிர்சு னைக்கால்
மதிநிழலி லொருபக்கம் வனசமலர்த் தடங்கள்போல்
வகுத்து முள்ளே
விதிமுறையி னுகமணிக் கானிறுவி யாகாய
முட்ட விட்டுப்
பதியிருக்கு மாசனமும் பருமணிமா ணிக்கமதிற்
படுத்துச் சுற்றி.

எ - து :—அறுபதுகோடி புண்ணிய மகாநதிகள் பெருக்கெடுத்துக் கடலிற் பிரவேசித்தா லெப்படியோ வப்படிப்போல ஒருபக்கத்தில் குளிர்ந்த சுனைகளிலே வெள்ளம் பாய்தல்போலப் பளிங்கினாற் செய்து மற்றொரு பக்கத்திலே தாமரைத் தடாக நீலோற்பல வோடைகள் செவ்வாம்ப லலருந் தடாகங்கள் பூஞ்சோலைகள் சூழத்தக்கதா யமைப்பித்தும் விதிமுறை தவறாம னுக ரத்தினக் கால்களை யுள்ளே வரிசையாய் நிறுத்தியு மாகாய மளாவிய வந்த மண்டப நடுப்பிரதேசத்திலே பதியாகிய நாராயண மூர்த்தியானவ ரிருக்கத் தக்கதாகிய சிம்மாதனத்தைச் சாதாங்க முதலாகிய நான்கு சாதியாகிய மாணிக்கத்தா லமைத்தான் றேவகம்மிய னென்றவாறு. 9

635. விளிம்புக்குச் சாம்புநதம் பொன்னழுத்தி மாணிக்க
விளக்க மிட்டுக்
களிம்பருந்தப் பச்சையினி லாரங்கட் டிரணையிட்டுக்
கவின்செய் முத்தம்
பளிங்கறையில் சேர்ந்தரும்பு பொன்மிளிர விருபக்கம்
பதுமை நாற்றிக்
களங்கமின்றி யொளிர்கிரண வாயிரஞ்செங் கதிர்போன்ற
காம பீடம்.

எ - து:—அந்தச் சிங்காதனத் தருகிலே சாம்புநதப் பொன்னை யழுத்திய மாணிக்க விளக்கங்க ளனேகத்தினை யிட்டு முயர்ந்த பச்சை மணியாலு முத்தாலுந் திரணைக ளமைத்து முத்தமாலைகளைப் பளிக்கறை யிடையிடையிலே தொங்கவிட்டும் பொன்னாற் பிரகாசிக்காநின்ற பதுமைகளை யந்தப் பளிக்கறை யிரு பக்கங்களிலு மிசைத்துவைத்துங் களங்க மில்லாம லாயிரங் கிரணங்களையும் விரித் துலக விருளை யெல்லாம் பருகாநின்ற சூரியனைப்போல வொளிவிட்டுப் பிரகாசிக்காநின்ற வழகிய பீடமானது பிரகாசித் திருந்த தென்றவாறு. 10

636. வானோங்கு சிகரமணி விண்மணியி லொளிரமதி
வழகு தோற்க
மீனோங்கு கிரணம்போ லிடையிடையி னவமணிகள்
விளங்க வெங்குந்
தானோங்கி யிருளகற்றி யிரவுபக லாய்க்கதிர்க
டழைக்குஞ் சோதி
மானோங்கு சசிதழுவு மாயிரங்க ணிந்த்ரனென
வழங்க லாமே.

எ - து:—ஆகாசத்தை யளாவிய சிகரமானது சிந்தாமணியைப்போ லொளியை விரித்தலினாலே சந்திரகிரண மழுங்கவு மந்த வாகாசத்திற் றாரகாகணங்கள் பிரகாசித்தா லெப்படியோ வப்படிப்போல நவரத்தின மணி மாலிகைக டொங்கவும் பிரகாசிக்காநின்ற சிகரத்தினுடைய காந்தி யானது பகலையு மிராத்திரியையுந் தழைக்கப் பிரகாசித்து மானைப் போன்ற கண்ணையுடைய விந்திராணியைச் சரச சல்லாபத்தினாற் றழுவா நின்ற விந்திர மகாராசனைப் போலு மிருந்த தந்த மண்டபச் சிகர மென்றவாறு. 11

637. பிரணவத்தி னடுவணையட் டாக்ஷரத்திற் பிறங்குபடி
பிறழுங் கால்கட்
டிரணைகா யத்திரியு மாசனமுண் மண்டபஞ்செங்
கதிர்தே ரொக்குங்
கிரணமணி சுற்றிலும்விண் மீனொக்கக் கிளர்ந்தொளிரக்
கிடந்த தந்தக்
கரணமதைக் கடந்தந்த மயன்கடவுட் கடிவணங்கிக்
காட்டி னானே.

எ-து:—பிரணவாகாரமாகிய நடுவணையை யிட்டு மட்டாக்ஷரமாகிய படிகளை யமைத்து மதற் கமைத்த கால்களுந் திரணைகளுங் காயத்திரி யாகவு மப்படியாகிய வாசனத்தையுடைய மண்டபமுஞ் செங்கதிரை விரிக்காநின்ற சூரியன் றேறரைப்போன் றிருக்குங் கிரணங்களையுடைய மணிக்கூட்டங்களானது சுற்றிலும் பதித்திருப்ப தாகாசத்திற் றேன்று கின்ற தாரகையை யொத்தன பார்க்காநின்ற பேர்களுடைய வந்தக் கரணமாகிய மனம் புத்தி யகங்கார சித்தங்களை யாக்ரமித்துத் தாங்கா நின்ற வந்த மண்டபத்தின் வளங்களையு மயனுனவ னரங்கநாதன் பாத தாமரையிற் பணிந்து காட்டினு னென்றவாறு. 12

638. காட்டுமணி மண்டபத்தைக் கடவுளக மலர்ந்தொளிரக்
கண்ணிற் கண்டு
வேட்டல்புரிந் திடற்குரிய விடமிதுவே நன்மையென
விபுதர் கோவி
னுட்டவரை நினைந்தளவி லவரவர்தம் மனைவியொடு
நாடி வந்தா
ரீட்டமொடு மரனயனு மெந்தையடி யமரரொடு
மிறைஞ்சி நின்ருர்.

எ-து:—இப்படித் தேவ கம்மியனுனவ னமைத்த கல்யாண மண்டபத்தின் வளங்களை மயனுனவன் பரம்பொருளுக்குக் காட்ட வந்த வளங்களை யெல்லா முகமலர்ந்து மகமலர்ந்துந் தனது கண்ணினுலே கண்டு பாணிக்கிரகணம் பண்ணற் குரித்தாகிய புனிதமான விடமிதுவே பவித்திரமென்று நினைத்துப் புருடோத்தமனுனவ ரிந்திரன் முதலாகிய தேவர்களைத் தமது பாணிக்கிரகணத்துக்கு வரக் குறித்தா ரப்படிக் குறித்த மாத்திரத்தி னந்தந்தத் தேவ கூட்டங்களானவர்கள் தத்த மனைவிய ருடனே வந்து சேர்ந்தார்க ளதன்பின்பு சிவனும் பிரம்மாவும் வந்து புருடோத்தமன் பாத தாமரையிலே தெண்டன் சமர்ப்பித்து நின்ருர்க ளென்றவாறு. 13

639. இந்திரனுஞ் சந்திரனு மிரவிபன்னி ருவர்சித்தர்
சாத்த ரோடுங்
கந்திருவர் வீணையுறு நாரதர்தும் புருவரிசை
கானத் தோடும்
வந்தனர்க ளரம்பையர்கள் மங்களசு பங்கள்சொல
மறையோர் வாழ்த்தி
யந்தணர்க ளாசியொடும் வந்தனர்கள் வசுக்கள்மருத்
துக்கள் வந்தார்.

எ - து :—இந்திரன் முதலாகிய தேவ கூட்டங்களுஞ் சந்திரன் முதலாகிய நவக்கிரகங்களு மந்த நவக்கிரகங்களி னொரு வகையாகிய பன்னிரண்டு சூரிய பேதங்களு மொன்பது வகையாகிய சித்தகூட்டங் களுஞ் சாத்தாவாகிய வரிகரபுத்திரனுங் கந்திருவ கூட்டங்களும் வீணைகளை மீட்டிப் பாடாநின்ற தும்புரு நாரதர் கூட்டங்களும் ரம்பா ஸ்திரீகளும் வந்து மங்கள சுபகரங்களைச் சோபனம் பாடினார்கள் வேதப் பிராம்மணர்க ளாசீர்வாதம் பண்ணிக்கொண்டு வந்தார்க ளட்ட வசுக்களுந் தெய்வ வயித்திய கூட்டங்களாகிய மருத்துவர் கூட்டங்களும் வந்து நிறைந்தார்க ளென்றவாறு. 14

640. அத்திரிகௌ தமன்வசிட்டன் விசுவா மித்ர
னங்கிரச னகத்தியன்கா சியன்மார்க் கண்டன்
பத்திசெயும் வான்மீகன் பரத்து வாசன்
பாங்கான கலைக்கோட்டன் புலத்தி யன்பார்
நித்தியமாம் வியாசன்பாற் கரனு ரோம
நீதிபிரு குச்சனகன் சனத்கு மார
னுத்தமமா முனிக்கணங்க ளோடு மற்று
முள்ளமுனிக் கணங்களும்வந் துற்று ரங்கன்.

எ - து :—அத்திரி கௌதமன் வசிட்டன் விசுவாமித்திர னங்கிரசன் அகத்தியன் காசிபன் மார்க்கண்டேயர் வான்மீகி பரத்துவாசன் கலைக்கோட்டார் புலத்தியன் வியாதமுனியாகிய வாதராயணன் பாற்கரன் ரோமசன் பிருகு சனகன் சனத்குமாரன் முதலாகிய வுத்தம குணங்களா லுயர்ந்த ஞான சாந்த தத்துவத்தால் மெய்ம்மை யுணர்ந்த முனிக்கூட்டங்க ளெல்லாந் தண்டு கமண்டலங்களுடனே திரிதண்ட மேக தண்டத்திலே முருக்கிலைச் சுருக்கினைச் சொருகிய கையராய் சமித்துக்களை யொரு கரத்திற் றாங்கிவந்தார்க ளென்றவாறு. 15

641. வந்தவர்கண் மணியணிமண் டபத்துநிறைந் தின்படமிக
வளர வாங்குக்
கந்திருவர் வாத்தியங்கள் கறங்கதுந்து மிமுழங்கக்
கானம் பாடச்
சுந்தரகோ லங்களுடன் றோரணமும் வார்கொடியுந்
தொங்க நாற்றிப்
பந்திபந்தி யாய்க்கனச் கும்பநிறைத் தின்பமுறப்
பனிநீர் தூவி.

எ - து :—இப்படி வந்து நிறைந்த தேவகூட்ட முனிவர்கூட்ட மழகிய வந்த மணிமயமாகிய மண்டபத்தினுடைய வின்ப வளங்களை யெல்லாம் பார்த்துக் களிகூர்ந்தார்கள் கந்திருவ கூட்டங்கள் பணவ வாத்தியம் கோமுக வாத்தியம் மண்டூகவாத்தியஞ் சல்லரி மல்லரி முதலாகிய வாத்திய முழக்கினார்கள் துந்துமிக ளனேகம் பேர் முழங்கவுங் கான விசைகளை யனேகர் பாடவு மனேகமாகிய சுந்தர மங்களாகாரமாகிய வனேக சித்திர விசித்திர கோலத்துடனே தோரணங்களு நீண்ட துசபடங்களுந் தொங்கக் கட்டியும் பந்திபந்தியாய்க் கனக கும்பங்களைத் தாபித்தும் பனிநீர்களைத் தூவி நிலங்களை யெல்லாங் கமழச் செய்தார்க ளென்றவாறு. 16

642. சந்தனமும் பன்னீராற் றரைமெழுகிக் கர்ப்பூரக்
கோலஞ் சாத்தி
யிந்துநிகர் பொற்கலவை யியைந்தசுண்ணங் குங்குமங்க
ளிறைத்து மிக்க
கந்தமலர் தூவியெங்குங் கடிமணச்சால் வேதிகையின்
கவின தீபஞ்
சுந்தரமார் பாலிகையுந் தொகுத்துமர சாணிக்காற்
றொகுத்த பின்னர்.

எ - து :—சந்தனத்தைச் சாணியாக்கி யதிலே பன்னீரைச் சலமாய் வார்த்துத் தரையினை மெழுக்கிட் டதன்மேலே கர்ப்பூரத்தினாற் கோல மிட்டுச் சந்திர காந்தியாயும் பொன்மயமாயு மிராநின்ற வாசனைத் திரவியமாகிய சுண்ணங்களையுங் குங்குமங்களையு மிறைத்ததன் மேலே நல்ல சுகந்தத்தையுடைய மலர்களைப் பரப்பி யெங்கணு மணச்சால் கரகங்களை வேதிகையி னமைத்துச் சுடர்ப்பிரகாசத்தினை யுடைய மாணிக்கத் தீபமுஞ் சுந்தரமாகிய பாலிகையு மரசாணிக்காலும் வகுத்துச் சிங்காரமாய்ச் செய்தார்க ளென்றவாறு. 17

643. ஏகிமணி மண்டபத்து ணின்முன் றேவ
ரிறைஞ்சிகங்கை முதநீர்த்த மிழிவென் றுன்னிப்
போகமுறு மிலக்குமிதன் றீர்த்தங் கொண்டு
புகழ்திருமஞ் சனமாட்டிப் பன்னீ ராட்டித்
தேகமதிற் பொன்னுடை சாத்திச் சாந்தந்
திகழ்நிலவு மணிவரைமேற் செறிந்த தென்ன
வாகமுற வணிந்துமணிக் கவசம் வீக்கி
யரைமின்மணி வடம்பூட்டி யழகிற் பொன்னூல்.

எ - து :—அந்தக் கல்யாண மண்டபத்தின் வந் தெழுந்தருளி யிருந்தார் நாராயண மூர்த்தியானவ ரப்போது தேவர்கள் தெண்டன் சமர்ப்பித்துக் கங்கை முதலாகிய தீர்த்தத்தா லாட்டிவைத்த லருகமாகா தென் றெண்ணி யனேகமாகிய போக்கியத்தைத் தருகின்ற விலக்குமியார் தீர்த்தங்களைக் கொண்டு புனித பாவனமாகிய திருமஞ்சன மாட்டி வைத்துப் பன்னீரை யதன்பின் பாட்டித் தேகத்தை நுண் டுகிலாற் றுடைத்த பின்பு பீதாம்பரத்தைப் புனைந்து சந்தன களப கஸ்தூரி யானது நீலவரையிலே பிரகாசித்தல்போலச் சரீரத்தி னணிந்து மணிமய மாகிய வச்சிர கவசம் பூண் டரையிலே மணிவடத்தை யணிந்து முப்புரி நூலாகச் செய்த பொன்னூலை யென்றவாறு. 18

614. மணிமார்பில் மின்னலென வணிந்து நீல
வரைப்புயத்தின் வாகுவல யங்கள் சேர்த்து
வணியார்செங் கதிர்மதிய மென்னத் தோடு
மழகாரு மிருசெவியி னணிந்து பல்விண்
மணியாரு மேருவென மகுடஞ் சூட்டி
மலர்க்கரத்தின் மணிக்கடகம் பூட்டி யாழித்
தணிவாக விரற்பத்துஞ் சேர்த்து முத்துத்
தாமமணிப் பதக்கங்க டழையச் சாத்தி.

எ - து :—அந்தப் பொன்மயமாகிய பூணூலை மின்னலைப்போல் மார்பி னணிந்து நீலமால்வரை போன்ற புயத்திலே வாகு வலயங்களை யணிந் தழகிய சூரிய சந்திரரைப்போ லிரண்டு குண்டலங்களைச் செவியி னணிந்து பல கிரணங்களையுடைய மணிகளானது நிறைந்த மேருகிரியைப் போன்ற திருமகுடத்தைச் சிரத்திற் சூட்டித் தாமரைக் கமலம் போன்ற கையிலே நவமணிக் கடகம் புனைந்து மணிமயமா யரஞ்சி மயமாயு மிருக்காநின்ற மோதிரத்தைப் பத்து விரலுக்கு மணிந்து முத்தமாலையிற் சேர்த்த பதக்கங்களை வகைவகையா யணிந் தலங்கார மாபரணத்துக்குச் செய்தார்க ளென்றவாறு. 19

645. நவமணிக ளிழைத்தரித்த மாலை சேர்த்து
நல்லுதர பந்தனமு நடுவிற் சேர்த்து
பவமொழிக்கும் பெருநிதிய மென்னுங் காற்குப்
பணிகள்பல சூட்டமணக் கோலஞ் செய்து
தவமுயலுங் கற்பகநாண் மாலை சேர்த்துத்
தனித்துளவ மணிந்துமண வறையிற் சேர்த்துப்
பவனனொரு கோடியென விருந்தா னையன்
பாற்கடலிற் பிறந்தவளைப் பகர லுற்றும்.

எ - து :—நவமணியா லிழைத்த சித்திர மாலைகளைச் சேர்த்தும் நல்ல உதர பந்தனமாகியதை மணிவயிற்றிற் சேர்த்துஞ் செனன சாகரத்தை நீக்காநின்ற பாததாமரையிலே பொன் மோதிரங்கள் சேர்த் தணிந்து மணக்கோலஞ் செய்துந் தவ முயற்சியையுடைய கற்பகமாகிய திவ்விய மண நாறுகின்ற மாலைகளை யணிந்து மொப்பற்ற துளப மாலையை யணிந்து மணவறையிலே சேர்த்துங் கீட்டிசைக் கடன் முகட்டிலே சத்த புரவியோடு கூடிய சூரியரோடு கோடி பேர்க ளொரு காலத்தி லுதய மானதுபோல வீற்றிருந்தருளினு ரதன்பின்பு பாற் கடலி னற்புதமா யவதாரஞ் செய்தருளிய ஸ்ரீமகாலட்சுமிக் கலங்காரஞ் செய்ததைச் சொல்கின்ரு ரென்றவாறு. 20

646. கலைமகளோ டுமையவளிந் திராணி தானுங்
கழற்பணிந்து நலங்குறுமஞ் சனமு மாட்டி
விலையிலா மணியாடை யிடையிற் சேர்த்து
விக்குமணி யொட்டியமே கலையுஞ் சேர்த்துத்
தொலைவிலாக் கிரணமணிக் கச்சை யிட்டுத்
தொடுமுழு மதிபோலுந் தொங்க லிட்டு
வலைவிலாச் செங்கதிர்சில் லோதி யிட்டு
வரியநறுங் கற்பகநன் மாலை சூட்டி.

எ - து :—சகல கலைக் குணநிதியாகிய நாமகளு முமையவளாகிய பார்வதியாரு மிந்திராணி தேவியும் பாததாமரையிலே தெண்டன் சமர்ப்பித்துக் களப கதம்ப கஸ்தூரிகளாலே நலங்கணிந்து திருமஞ்சன மாட்டி விலையில்லாத மணிவிளிம்பையுடைய பீதாம்பர வுடையை யிடையி லணிந்தும் பிகுவாய்க் கட்டுகின்ற மணிமயமான வொட்டியாண மேகலையு மணிந்தும் தொலைவிலாத கிரணத்தையுடைய மணிக்கச்சையை யிட்டும் வாசனை கமழ்கின்ற பூரண சந்திரனை யொத்த வெண்டாமரை மாலையினைப் புனைந்துங் கெடுத லில்லாத சூரியப்பிறையை யளகத்தி னலங்கரித் ததற்கு மேலே மந்தார பாரிசாத மலர்மாலையானது திவ்விய சுகந்த பரிமளங்களைக் கமழத்தக்கதாக வலங்கரித்தார்க ளென்றவாறு. 21

647. மேகத்தின் மதிக்கதிர்போல் பிறைகள் சாத்தி
விளங்குசுட்டி யரசிலையுந் தொங்க நாற்றி
நாகத்தின் சடைப்பணிக ளணிந்து நீண்ட
நற்சம்பு கொப்புமுரு கொடும்பு னைந்து
பூகத்தின் கண்டத்தா பரண மிட்டும்
பொங்குகதிர் போன்றமூக் குத்தி யிட்டு
மாகத்திற் பிறைபோலுங் கதிர்க்கள் போலு
மாபரண நிறையவிட்டங் கழகு வாய்ப்ப.

எ - து :—மேகத்திலே யிராநின்ற மூன்றும் பிறையைப் போன்ற சந்திரப் பிறையைச் சாத்தியும் விளங்கும்படியாகிய சுட்டியான வரசிலைச் சுட்டியைத் தொங்கவிட்டும் நாகரத்தினத்தா லிழைத்த மணிமயமாயும் பொன்மயமாயு மிராநின்ற சடையில்லே யணிந்துந் திருச்செவிக்குச் சம்பு கொப்பு முருகு மணிந்துங் கமுகம் போன்ற கண்டத்திற் றரிக்காநின்ற வாபரண வகைகளை யெல்லாந் தரித்துஞ் சந்திரப் பிரகாசமாகிய நத்து மூக்குத்தியை மூக்கினிற் றொங்கவிட்டு மாகாயத்திற் பிரகாசிக்காநின்ற சந்திர சூரியப் பிரகாசம் போன்ற வாபரணங்க ளெல்லாம் பிரதாபத்தை யடையத் தக்கதாய் இறைய வணிந் தாபரண வகைகளுக் கெல்லா மழகு செய்தார்க ளென்றவாறு. 22

648. தோளணிகைக் கடகமோ திரங்க ளிட்டுச்
சுடர்விளக்க மென்னநெற்றித் திலக மிட்டு
வாள்பொருவு மிருகருணை விழிக்கு மையும்
வளர்புருவ மையுமொய்ய வனைந்து தொய்யி
லிளமுலைசேர் கொங்கைகுட மணிந்து செய்ய
நீரசடித் தண்டைநூ புரங்க ளிட்டுக்
கோளகல வுலகங்கை குவிக்க நின்ற
கோமளத்தை மணக்கோலக் கோலங் கண்டார்.

எ - து :—தோள்களிலே யணியாநின்ற கைக் கடகங்களு மோதிரங்களு மிட்டுச் சுடர் விளக்கம்போன்ற நெற்றியிலே திலகங்களை யிட்டு வாளைப் போன்ற விரு கண்களுங் கருணையைப் பொழிய வவற்றிற்குத் தகுதியாகிய மையினை யிட்டு சந்தன களப கஸ்தூரியினாலே தன தடத்துக்குச் சித்திர மெழுதிப் புருவங்களுக்கும் மையினையிட்டுச் சிவந்த தாமரைக் கமலம்போன்ற பாதத்துக்குத் தண்டை பாதசரங்களிட் டான்மாக்கள் குற்றங்க ளெல்லா நீங்கத் திருவவதாரஞ் செய்தருளிய பிராட்டியாரை யாவருங் கை குவிக்கத் தக்கதாய் மணக்கோலஞ் செய்தருளினார்க ளென்றவாறு. 23

649. கண்டமர ரியாவருங்கை குவிக்க வாங்கோர்
கனகமணி யாசனத்திற் கவின்செய் தோங்கப்
புண்டரீகன் முனிவர்குழாஞ் சூழ வாங்கோர்
புனிதமணி யாசனத்திற் பொருந்தி முத்துத்
தண்டுலமும் விரித்துருநற் றருப்பை சாத்திச்
சதுர்மறையின் விதிமுறைதண் மலர்கள் தூவி
மண்டலமும் பொற்கும்பம் விதியின் வைத்து
வழங்குறுமட் சதைதூப தீப மிட்டு.

எ - து :—இப்படியாகிய ஸ்ரீமகாலட்சுமி தேவியாருடைய மணக் கோலத்தைக் கண்ட அமரர் யாவரு மற்புதம் பெருகிக் கையைச் சிரத்திற் கூப்பித் தொழுதிட வவ்விடத்தில் கனக மயமாகிய மணியாசனத்திலே யழகாய்ப் பொலிந்தருளினு ளப்போது பிரம்மா முதலாகிய முனிவர் கூட்டங்களெல்லாஞ் சூழப் புனித பவித்திரமாகிய வாசனத்திற் சூழ்ந் திருந்து முத்தங்களு மரிசிகளும் விரிவாய்ப் பரப்பிவைத்துத் தருப்பை களை யெட்டுத் திக்கினும் விதிப்படி வைத்து வேதவிதிப்படி மலர்களைத் தூவியு மண்டலாகாரமாய்ப் பொற்கும்பத்தை விதிப்படியாய் வைத்து வழங்காநின்ற வட்சதை தீப தூப முதலானது மிட்டார்க ளென்றவாறு. 24

650. விச்சுவச்சே னனையுமுன மடியர்ச் சித்து
விளங்குதழ லோமநெய்யா குதிசொ ரிந்து
வச்சுதனு மம்மன்மணத் தவிசி லேறி
யாருயிர்மெய் மதிக்கதிர்போ லமர்ந்தி ருக்க
யிச்சையினுற் றேவகண மிறைஞ்சி யேத்தி
யேவற்பணி விடைசெய்ய வீசன் ருனு
நச்சியபொற் பொரிசிதறிக் கழற்று திக்க
நாரணன்புன் னகைபுரிந்து விதிந வின்ருன்.

எ - து :—அப்படியாய்ப் பாணிக்கிரகண விதியைச் செய்ய வாரம் பித்த மாத்திரத்தின் விச்வசேனரை முதன்மையா யர்ச்சித்து விளங்கும் படியாகிய முத்தீயினி லோமநெய் யாகுதியைச் சொரிந் தச்சுதனும் ஸ்ரீமகா லட்சுமிதேவியு மந்தக் கல்யாண மணத் தவிசினி லேறி யுயிருக் குயிராகிய வுலக மாதாபிதாவாகிய விருவருஞ் சந்திர சூரியரைப்போல வமர்ந்திருக்க விச்சையினுலே தேவகூட்டங்கள் தெண்டன் சமர்ப்பித் தேவற் பணிவிடைகளைச் செய்துகொண்டிருப்ப வீசுவரனுகிய பரமசிவனு மிரண்டு பேர் சிரசிலும் பொரிகளைத் தூவிப் பாத தாமரைகளைத் துதிக்க நாராயண மூர்த்தியானவர் . புன்னகை புரிந்து பிரம்மா சொல்லிய வேத மந்திரங்களைக் கூறி யழற் கருமஞ் செய்தா ரென்றவாறு. 25

651. நான்முகனு மறைவிதியி னேமஞ் செய்து
நன்மலர்க டூவியடி வணங்கி நண்ண
வானவர்கந் திருவர்வாத் தியங்கள் செய்ய
மலர்தூவி முனிக்கணங்கள் மறைகள் வாழ்த்த
மூனனைய வுமையவள்மங் களமும் பாட
வாசவனிந் திராணிமலர் மாலை சூட்ட
வேணையர்பொன் முத்துநவ மணிக டூவி
யிறைஞ்சிதொழ நாரதர்தும் புருவ ரேத்த.

எ - து :—நான்முகனுகிய பிரம்மாவானவர் வேத விதிப்பிரகார மோமஞ்செய்து மலர்மாரி சொரிந் தடி வணங்கி நிற்பத் தேவாதிகளுங் காந்தருவரும் பதினெண் வாத்திய முழங்க மலர்மாரியை முனிக்கூட்டங்க ளெல்லாந் தூவி யாசீர்வதித்து வேதாத்தியயனம் பண்ண மானைப் போன்ற மருண்ட பார்வையினையுடைய பார்வதியானவள் மங்கள சுமங்கள சுபகரங்களைப் பாடவும் வாசவ னிந்திராணி முதலாகிய பேர்கள் மலர் மாலையைச் சூட்டவும் மற்றப் பேர்களாகிய கின்னரர் கிம்புருடர் கருட காந்தருவர்கள் முத்த முதலாகிய நவமணியைத் தூவி யேத்தவும் நாரதர் தும்புருவ ராகிய விரண்டு பேருந் தேவ கானஞ் செய்தார்க ளென்றவாறு. 26

652. நிதிக்கிறைவ னவநிதிகள் பொழியத் தான
நிருதிவரு ணன்பனிநீர் நிறையத் தூவ
மதிக்கும்வா யுவுங்குளிர்ந்த தென்றல் வீசி
மலர்ந்தகற்ப கம்வாச மலர்க டூவ
விதிக்கிறைவி பகல்விளக்கங் காட்ட வாங்கு
விண்ணவர்மண் ணவர்முனிவர் விருப்ப மெய்த
மதிக்குலையன் றிருக்கோலங் காட்ட வேட்டு
மகிழ்ந்தின்ப சாகரத்தில் வாழ்வ தானுர்.

எ - து :—நிதிக் கிறைவனுகிய குபேரனுனவ னென்பது வகையா யுள்ள ரத்தினங்களைத் தானமாய்ப் பொழியவும் நிருதியும் வருணனும் பன்னீரை நிறையத்தக்கதாகத் தூவவு மியாவராலு மதிக்காநின்ற வாயு பகவானுங் குளிர்ந்த தென்றற் காற்றை வீசி மலர்ந்து சுகந்தங்களைக் கமழாநின்ற மந்தார பாரிசாத கற்பக மலர்களைத் தூவவும் விதிக்கிறை யாகிய கலைமகளானவள் விளக்கத்தைக் காட்டின மாத்திரத்திலே தேவாதிகளு முனிவர் கூட்டங்களும் விருப்பத்தை யடையவும் மதியினுலே மிகுந்தவராகிய பிரம்மாவானவர் மணக்கோல சுபகரங்களைக் காட்டச் சந்தோஷித் தின்ப சாகரத்தி னிலைபெற்று வாழ்ந்தார்க ளியாவரு மென்றவாறு. 27

653. ஆடிகளி லையனுருக் கோலங் காட்ட
வவரவர்கள் கண்டவுட னடிவ ணங்கச்
சேடியர்செந் திருவருகு சூழ வாங்குத்
திசைமுகத்தோன் விதிமுறைக ளியற்றப் பின்னர்
மூடியவா னவர்குழுவு மியாவு முற்ற
மூதண்ட மெனுஞ்சொன்மண் டபநி றைந்து
கூடியநான் மறைக்குழுவுங் கூட்டங் கூடிக்
கோலமணச் சாலையெங்குங் குவிய லானுர்.

எ - து :—ஆடியாகிய கண்ணுடியி லேயனுடைய திவ்விய மங்கள சொரூப விக்ரக சுந்தரத் திருமணக்கோலத்தைக் காட்டக் கண்ட வவ்வவர்க ளற்புதம் பெருகிச் சரணுகதி யடையச் சேடியராகிய பார்வதியாரு நாமகளுஞ் சூழ்ந்திட வந்த விடத்திலே பிரம்மாவானவர் கல்யாணச் சடங்குகளைச் செய்துமுடிக்க வதன்பின்பு சூழ்ந்திராநின்ற தேவர்கள் யாவர்க ளிதயமுங் களிகூர வண்ட கோளகை யளாவிய மண்டபத்தி னிறைந்து கூடிய நான்மறையாளர்க ணிறைந்து கூட்டங்கூடி மண்டப மெங்கு நிறைந் தாசீர்வாதம் பண்ணிச் சுபகர சோபனங் கூறி வாழ்த்தினர்க ளென்றவாறு. 28

654. சேனையர்கோன் பொற்பிரம்பு சுழல முன்னஞ்
சிறைக்கருடன் விசிறிக்கா றுவச் சேடன்
றுனுமணிக் குடைகவிப்ப மறைக ளேத்தச்
சாமரைகள் வீசசங்கு பம்பை யோதை
யேனைமுத்தர் நித்தர்பத்த ரிறைஞ்சி யேத்த
விருமருங்கு மாலவட்ட மிசைய வெங்கும்
வானவர்கள் ஞானமணித் தெரிச னத்தின்
மலர்க்கரங்கள் குவித்துகண்கள் மலர நின்றுர்.

எ - து :—அந்தக் கல்யாண மண்டபத்தி னெருங்கிய பேர்களைச் சேனையர் கோனுனவர் பொற் பிரம்பைக் கரதல கமலத்திற் றாங்கி யொதுக்கவு மரங்கநாயகர் திருமுக மண்டலத்திற் சிறுகாற் றரும்பக் கருடபகவான் சிறகினு லசைப்பவு மனந்தசாயியானவர் திருக் குடை தனது பணுமகுடத்தாற் கவிப்பவும் வேத வாக்கியங்களான் முனிவர் கூட்டந் துதிக்கவு மனேக தேவ கூட்டங்க ளிரு பக்கங்களினு மனந்த சாமரைகளை வீசவுஞ் சங்கம் பம்பை முதலாகிய வாத்திய முழங்கவு முத்தர் பத்தர் நித்தர் சித்தர்க ளிறைஞ்சி யேத்தவு மிரு பக்கங்களினு மாலவட்டங்க ளனேகர் தாங்கவுந் தேவ கூட்டங்கள் ஞான மயமாகிய சேவையினுடைய வைபவத்தா லானந்த பரவசராய் மலர் போன்ற கையைச் சிரத்திற் குவித்துத் திருக்கண் மலரத்தங்கதாய்க் கண் டுவகை பூத்து வரம்பி லின்பத்தின் மலர்ந்தார்க ளென்றவாறு. 29

655. செய்யும்விதி முறையியற்றிப் பின்னர் வேதன்
செழுங்கமல வையன்கை நீரைச் சேர்த்து
வையமெலாந் தழைத்தோங்க வறங்க ளோங்க
மன் னுதிருப் பாற்கடலி னுதித்த மாது
மெய்யுமுயி ரென்னமன மகிழ்ந்து வாழ்க
வென்றுன்மங் கலந்தரித்து விமல னன்னை
செய்யமலர்க் கரம்பிடித்தான் வானேர் வாழ்த்தித்
தேவதுந்து மிமுழக்கிச் சுடங்கள் சொன்னுர்.

எ - து :—உரை வெளிப்படை. 30

656. வேதியர்நல் லாசிசொல முனிவ ரேத்தி
விளங்குமட் சதைதூவ விமல ஞான
நீதிதரு நித்தரும்பல் லாண்டு கூற
நிறைந்தமங் கலசங்க நிறைக்க வோதைப்
பாதிமதி யணிந்தோனு மேனை யோரும்
பங்கயத்தாள் பரவிநறும் பொற்பூத் தூவச்
சோதிமிகு மனல்வலமாய்ச் சூழ்ந்தா ரம்மி
துவைத்தருந்த தியுங்கண்டு சுகமுற் றார்.

எ - து:—வேதப்பிராம்மண ராசீர்வாதஞ் சொல்லவும் முனிவர் கூட்டங்கள் போற்றிசெய்து வட்சதை தூவவும் விமலமான ஞான நீதியைத் தருகின்றவர் பல்லாண்டுகள் கூறவு மங்கல வாத்திய நிறைந்து முழங்கவு மிடம்புரி வலம்புரி சலஞ்சலம் பாஞ்சசன்னியமாகியவை சங்கநாதத்தொனி செய்யவு மர்த்தசந்திரனைச் சடையி லணிந்த சிவனு மற்றப் பேர்களும் பிரம்மாவு மங்ஙனம் பரவித் திவ்விய பரிமளங்களைக் கமழாநின்ற புட்பமும் பொன்னம் பூவுந் திருமுடியிற் றூவவுங் கொழுந்து படர்ந்தோங்கா நின்ற வனலை வலஞ்செய் தம்மியின்மேல் பிராட்டி திருவடியைக் கையி னெடுத்துப் பரம புருஷரானவர் வைத்தபின் னருந்ததியைக் காட்டச் சுபகர மங்களாகரத்தை யடைந்தார்க ளியாவரு மென்றவாறு. 31

657. முறைமுறையி லையன்றிரு வடியில் வீழ்ந்து
முளரிச்செந் திருவினையும் வணங்கி நின்று
நறையொழுகு மலர்ப்பனிநீர் சுண்ணந் தூவி
நவிர்கடல்போன் மறைமொழிநான் முகனுந் தேவர்
குறைவில்திரு மணக்கோல மியற்றிச் செங்கை
குவித்துப்பின் மங்களசோ பனங்கள் பாடி
நிறையுமணித் திருவந்திக் காப்புமிட்டு
நிகழ்த்துமெச்ச ரிக்கையொடுங் கோயிற் புக்கார்.

எ - து:—முறைமுறையா யாவரு மையன் றிருவடியிலே தெண்டன் சமர்ப்பித்தார்க ளதன்பின்பு தாமரைக் கமல பீடத்தி லெழுந்தருளிய திருவையுந் தொழுது வணங்கினார்கள் தேன்களைப் பிலிற்றுகின்ற மலர் களும் பன்னீருஞ் சுண்ணமுந் தூவிக் கடல்போல வேத கோஷஞ் செய்து பிரம்மாவு மற்ற முனிக் கூட்டங்களு மணக்கோல வோம குண்டத்திற் பூரணாகுதி செய்து சகல தேவர்களுக்கு மவிர்பாகங் கொடுத்துக் கைகளைச் சிரத்திற் கூப்பி மங்கள சோபனஞ் சொல்லிப் பாடி நிறைந்திராநின்ற திருவந்திக் காப்பிட் டெச்சரிக்கை யனேகம் பேர் கூற மணவறைக் கோயிலிலே பிரவேசித் திருந்தார்கள் ஸ்ரீமகாலட்சுமியு மரங்கநாயகரு மென்றவாறு. 32

658. மஞ்சணீர் கந்தசுண்ணங் கலவைச் சேறு
வசந்தங்க ளாடிமிக மனம கிழ்ந்து
செஞ்சொன்மட மாதரா டவருஞ் சேர்ந்து
செறிந்தமஞ்ச ளாடையுடன் றிகழ நின்றார்
கொஞ்சுகிளி செந்திருவின் வதுவை வேட்டுக்
கூடியவ ரவர்மனைவி யோடு மீசன்
கஞ்சமல ரயன்முதன்மற் றவர்க ளியாருங்
கழறுமறு மணக்கோலங் காட்டி னாரே.

எ - து:—மஞ்சணீரும் பரிமள கந்தங்களுஞ் சுண்ணங்களு நானுவித மாகிய கலவைச் சேறுகளுஞ் சந்தனக் குழம்புகளு மொருவருக்கொருவ ராடி மகிழ்ந்தவராய்ச் சிறந்த கன்னியர்களும் புருடர்களுங் கூடிச் செறிந்து பிரகாசிக்காநின்ற மஞ்சளாடைகளாய்த் தோன்றவும் பிரகாசித்தார்கள் கொஞ்சாநின்ற கிளிபோன்ற ஸ்ரீமகாலட்சுமிதேவியார் கலியாணத்தை மகிழ் சிறந்தருளிய கூட்டங் கூட்டமாகிய ஸ்திரீ புருடர்களும் பரம சிவனும் பிரம்மா முதலாகிய பேர்களானவர்களும் மணக் கோலங்களை யாவருங் காணக் காட்டினார்க ளென்றவாறு. 33

659. ஆடினவம் மஞ்சணீர் பனிநீ ரோடு
மரியபரி மளமலரி னோடு மேகிக்
கூடியநாற் றிசைக்கனினும் பரவி யெங்குங்
குவலயத்தை மணக்கோலங் காட்டி வெள்ளம்
நீடியபே ரலைகடலம் மஞ்ச ணீரா
னிறமாற்றிப் பொன்னிறமு மணமுங் கொள்ள
நாடியெவ ருங்காண வருண னுக்கு
நலங்குறுமஞ் சனமாட்டி நலங்காட் டிற்றே.

எ - து:—யாவரு மாடிய திருமஞ்சணீர் பன்னீருடனு மரிதாகிய பரிமள மலர்களோடுங் கூடி நாற்றிசைகளினும் பரவி யெங்கணும் பூமியை யெல்லாந் திருமணக் கோலங் காட்டி யந்த வெள்ளமானது நீண்ட வலைகளோடுங் கூடி யமைக முகமாய்ப் பெருகிப்போய்ப் பாய்ந் தலையினையுடைய கடலை மஞ்சணீராகிய நதிப் பெருக்கம் பாய்தலா லக் கடலினுடைய நிறத்தை மாற்றிப் பொன்மயமாகிய நிறமுந் திவ்விய பரிமளங்களாகிய மணமுங் கொள்ளத்தக்கதாகச் செய்யப் பார்க்கும்படி யாகிய யாவருங்கண்டு களிக்காநின்ற வருண மகாராசனை மஞ்சனத்தா னூட்டுவித்த மணக்கோல நலத்தைக் காட்டிநின்ற தவ் வெள்ளப் பெருக்கான தென்றவாறு. 34

660. நான்முகனு மரன்றேவர் முனிவர் தாமு
நனுகியிலக் குமிதீர்த்தம் நாடி யாடி
வானகமு மண்ணகமென் றுருங் கொள்ள
மலைநிறைய வமரர்குழு வயங்கி மாதர்
மேனகையூர் வசியரம்பை முனிவர் மாதர்
விளங்கிநீ ராடுபெரு வெள்ள மோங்கிக்
கானகமும் நிறைந்துமலை யருவி போலுங்
கனகமணி வராகநதி கலந்த தன்றே.

எ - து:—நான்கு திருமுகங்களையுடைய பிரம்மாவுஞ் சிவனு முனிவர் கூட்டங்களுங் கூடிக்கொண்டுபோய் ஸ்ரீமகாலட்சுமியார் தீர்த்தத்திலே புகுந்தாடி வானகத்தி லிருக்கின்ற வளங்களெல்லாம் மண்ணகத்தில் வந்து நிறைந்ததென்று கூறும்படியாக அந்த மலைப் பக்கங்க ளெல்லாம் கடல்போல நிறைந்தார்க ளவர்கள் கன்னியர்களு மேனகை யூர்வசி யரம்பையர்கள் முனிவர் பத்தினிக ளிவர்களெல்லாங் கூடி யிலக்குமியார் தீர்த்தத்தி னீராட வந்த நீர்ப் பெருக்காகிய வெள்ளமான தோங்கிக் காடெல்லா நிறைந்து மலையருவிபோலப் பிரவேசித்துக் கனகமயமாகிய வராகநதியிலே புகுந்த தென்றவாறு. 35

661. திருமஞ்ச னங்களொடு தேவர் வந்து
திருவாரா தனைசெய்யச் செகந்நா தற்கு
மருவியயன் றேவருப சாரஞ் செய்ய
மணிபுனையா சனத்திருத்தி மலர்க டூவி
யருமறைக ளானமுனி வரர்க ளாங்கே
யந்தரதுந் துமிமுழங்க வரம்பை மாதர்
பெருகியணி மணிதீப மேந்த விந்த்ரன்
பெருநிதிக்கு பேரன்வெண்சா மரைகள் போட.

எ - து:—தேவகூட்டங்களானவர்க ணிறைந்து கனககும்பத்திலே தேவகங்கையைக் கொணர்ந்து வந்து செகந்நாதராகிய ரக்ஷகருக்குத் திருவாராதனஞ் செய் துபசாரஞ் செய்தபின்பு மணியினா லலங்கரித்த சிங்காதனத்தி லவரை யெழுந்தருளச்செய்து நறுமலர்களை மாரியாய்த் தூவியு மரிய மறைகளைப் பாராயணஞ் செய்கின்ற முனிவர்க ளங்ஙனந் தேவதுந்துமி யனேகமாய் முழங்கவு மரம்பை மாதர்க ளானவர்கள் ரத்தினத்தீப மனேக மேந்தி முன்னிற்கவு மிந்திர மகாராசனுஞ் செல்வத்தா லோங்கிய குபேரனும் வெண்சாமரைகள் வீசவும் வீற்றிருந்தார் வந்தனை யோக்கியராய்ச் சர்வமங்களமாகிய குணமுடைய பரவாசுதேவ ரென்றவாறு. 36

662. முத்தணியுங் கவிகையக்ஷர் கவிக்க வாங்கு
முடியொடுகுண் டலம்பணிகள் முறையிற் சேர்த்துக்
கொத்தலருங் கற்பகநன் மாலை யோடுங்
குல்லைபுனைந் தேயாரா தனமுஞ் செய்து
வெத்திசையும் புகழ்தேவ வமுதங் கூட்டி
யிசையமிசை செய்தரங்க னுண்ட சேடம்
பத்தருடன் முனிவர்கணந் தேவர் யாரும்
பகிர்ந்துண்டா னந்தபர வசர்க ளாகி.

எ - து :—முத்துக்களா லலங்கரிக்காநின்ற தவள சத்திரக் குடையை யியக்க ராசாக்க ளிருபுறத்தினுந் தாங்கத் திருமுக மண்டலத்தில் ரத்தின முடி கவசகுண்டல வாபரண முதலான வெல்லா முறைமையா யந்தந்த வவயவத்தி னணிந் தித முவிழ்ந்து மணங்களைக் கமழாநின்ற கற்பக மந்தார மாலையுடனே துளசி மாலையும் புனைந் தாராதனக் கிரமங்கள் செய் தெந்தத் திசைகளும் புகழாநின்ற தேவாமுதத்தை யமிசை செய்ய வரங்க நாயகருக்கு அமிசையான வமுதத்தைப் பாகவதாள் முனிக்கூட்டங்கள் தேவகூட்டங்கள் முதலாகிய பேர்களெல்லாம் புசித்த பின் பானந்த பரவச மடைந்தார்க ளென்றவாறு. 37

663. வலப்புறத்திற் றிருப்பதும மலர்மேவு வடிவழகார்
பிராட்டி தானுங்
குலக்கொடியாய்ச் சாத்வீக வுருவாய கோலமே
கொண்டு நின்ற
நலத்தபுகழ் பிருதிவியாம் பிராட்டியா மகளிடத்தி
னண்ணு நிற்பக்
கலத்தபுக ழனந்தவிமா னந்துயின்று னருள்கூர்ந்த
கமலக் கண்ணன்.

எ - து :—அரங்க நாயகரானவர் சகல தேவர்களும் பிழைத் தெழுந்து நம் மலையாகிய சக்கர கிரியிலே வந்து சேர்ந்த மருத்துக் களின் வாய்மொழியாகிய வமிழ்த ரசத்தைக் கர்ணாமிர்தமா யுண்டு களித்தருளிய தேவ தேவனைத் தெண்டன் சமர்ப்பிக்காநின்ற காலத்திலே யனந்த விமான சேகரரா யோகநித்திரை செய்தருளினு ரப்போது வலப்புறத்திலே பொன்மயமாகிய தாமரை மண்டபத்தின் மனோரஞ்சிதமாய் வீற்றிருக்கின்ற வழகினு னிறைந்த பிராட்டியாகிய லக்ஷ்மி தேவியானவள் வீற்றிருக்கவு நல்ல குலமாகிய வலம்புரிச் சங்கத்தில் தரள முதித்தல் போன்ற சாந்த சொரூபமாய் நன்மையாகிய

புகழினையுடையவளாகிப் பூமிபிராட்டியாய மண்மகளென்னும் ஞானேதய முரகிய நற்குண நற்செய்கை யுருவத்தாளுடன் கூடி யிடப்புறத்திற் ரேற்றஞ்செய்து பிரகாசிக்கவு மிப்படியாய்க் கலந்த புகழினையுடைய வரங்கநாயகர் திருக்கண் வளர்ந்தருளினர் கோலாசலகிரியி னுச்சியி னென்றவாறு. 38

664. ஆயிரமா மணிபுனைந்த படமதனைக் கவித்தனந்த
னழகன் றன்னைப்
பாயிரமா மறைவிதியிற் றொழுதேத்தி யரங்கனுடன்
பரவி யோங்குந்
தாயினுமும் மடியாகி யடியாருக் கருளுதவு
கருடன் றனு
மாயிரும்பேர் படைத்தருளும் விச்சுவசே னர்முதலோர்
வந்தித் தேத்த.

எ - து:—அனந்த விமான சேகரரா யந்தக் கோலாசலக் குகையி னரங்கநாயக ரியோக நித்திரை செய்தருளிய காலையி னனந்தனைவர் சிவரத்தினந் தங்கிய வாயிரம் படத்தினையும் விரித்து மாணிக்க விளக்கைத் திறையிட்டுப் பாயிரமாகிய பொதுவிதி சிறப்புவிதியினையுடைய வேத விதிப்படி தொழுது வந்தனைசெய் தரங்கனுடன் மருவிப் பிரபலமாய சிவபரம்போல் விளங்கவுந் தாயையப் பார்க்கினு மூன்று பங் கதிகமா யடியாரைப் பாதுகாக்காநின்ற கருடபகவானு மதிதீவிர பக்குவ மாகிய புகழினையுடைய விசுவசேனர் முதலாகிய நித்திய சூரியரானவர்கள் வந்தனைசெய்து பரவாசுதேவனுடைய புகழினைத் துதிக்க வதிக சுந்தர மங்களகுண சுபசோபன ரமணீய விக்ரக வர்ச்சாவதாரமாய் விளங்கின ரனந்த கலியாணகுண வந்தராத்மாவாகிய வரங்கநாயக ரென்றவாறு. 39

665. மருத்துவர்பீ தாம்பரத்தை யணிந்தனர்கள் திருமுகத்தை
மகிழ்ந்து நோக்கிக்
கருத்துருகிக் கண்களித்துச் சரணமலர் தாழ்ந்துநிற்பக்
கவின்கு பேர
னருத்தியின லாபரண மணிந்தவனு மிகமகிழ்ந்தங்
கருகி னிற்ப
விருத்தியுடை யடியரெலாம் பிறப்பறுப்பா யெனவிளம்பி
விரும்பி நிற்ப.

எ - து :—மருத்துக்களானவர்க ளரங்கநாயகர்க்குப் பீதாம்பரத்தை யணிந்து மகரக் குழையையுடைய திருமுகமண்டலத்தை மகிழ்ச்சி பெருகத் தக்கதாகப் பார்த்துக் கருத்தானது நைந்துருகிக் கண்களானவை களிகூரத் தக்கதாய்ச் சரணாரவிந்தத்தை வந்தித்து நிற்கவு மழகை யுடைய குபேரனானவன் மகிழ்ச்சியினா லாபரண வகைகளை யெல்லாம் பூட்டி மகிழ் சிறந்து நோக்கி யவ ரருகிருந்து கிருபா நோக்கத்தைப் பார்க்கவும் ஞானவிருத்தியினை யுடைய வடியா ரெல்லா மினிவரும் பிறப்பை யறுத்துப் பாதுகாப்பா யென்று வந்திக்க வீற்றிருந்தருளினா ரரங்கநாயக ரென்றவாறு. 40

666. இந்திரனார் மகன்சயந்த னிருமருங்குந் தவளசத்ர
மிணையாய்த் தாங்கச்
சந்திரனு மாதவனுஞ் சாந்தாற்றி யிருமருங்குந்
தழைத்தங் கேந்தக்
கந்திருவ ரிசைபாடக் கானநா ரதன்வீணை
கவினாய்த் தாங்கிச்
செந்திருவா ழரங்கனா ரிசைபாடிச் சேவடியைத்
தொழுதங் கேத்த.

எ - து :—அனந்த கல்யாண குணபரிபூரண விபூதி விக்ரக சொரூபரா யனந்த விமான சேகரராய்க் கோலாசலக் குகையி னரங்கநாயகர் வீற்றிருந்தளவி லிந்திர மகாராசனு மவன் புத்திரனாகிய சயந்தனுந் தவள வெண்கொற்றக் குடையினை யிருபுறத்தினிற் றாங்கிநிற்பவுஞ் சந்திர சூரியர்க ளிருவர்களு மால வட்டங்களை யிரண்டு பக்கங்களி னேந்திநிற்பவுங் கந்திருவர்கள் யாழை யிசை வழுவா திலக்கணத்துடனே பாடவும் நாரதரா னவர் வீணையை மீட்டி யிலக்குமிதேவி கூடாகர சந்தோஷமாய் விளங்கா நின்ற அரங்கநாதரது சரச சாம்ராச்சிய வைபவ வின்பத்தைப் பாட லிசைநூன்மயமாய் விளங்கினா ரரங்கநாயக ரென்றவாறு. 41

667. இருமருங்குந் திலோத்தமையு மிரதியுமா யிணைக்கவரி
யிரட்ட வோங்கும்
பருமணியா யிரம்விரித்த வனந்தவிமா னத்திருந்த
பகவன் றன்னைக்
குருமணியா மணிபுனைந்த குவலயத்தி னரசரெலாங்
கூடி நின்று
பெருநிதி மணிபுனைந்த பூவிசிறி கொடுவசைத்துப்
புகழ்ந்து நின்றார்.

எ - து :—அரங்கநாயக ரிருபக்கத்தினுந் திலோத்தமையு மிரதிதேவியு முபய சாமரைகளாற் சிறுகாற் றரும்ப வீசிநிற்கின்ற சிறந்த பருமணிக ளாகிய வாதிசேஷனுடைய சிரோ ரத்தினங்களானவை விளங்குகின்ற படத்தினை விரித் தொளிராநின்ற வனந்த விமான சேகரராகிய பரவாசு தேவனைக் குருவிந்த முதலாகிய மணிகளா னிழைத்த கிரீடத்தைத் தரிக்காநின்ற விவ் வுலகத்தரசராகிய சக்கரவர்த்திக ளென்னுமைம்பத்தாறு தேசத் தரசர்க ளெல்லாம் பிரதாபமாகிய வாயிரத்தெட்டு மாற்றாகிய சுவர்ணத்தாலு மணிகளாலு மிழைத்த காம்பினையுடைய பூவிசிறிகளா லிரு பக்கத்தினு மசைத்துப் புகழ்ந்து நின்றார்க ளென்றவாறு. 42

668. கந்திருவர் கின்னரர்கள் கானவீணை யிற்றந்தி
கரத்தான் மீட்டி
விந்தையதா மமுதமொழி மாரியினைத் திருச்செவியின்
விளங்கி யோங்கத்
தந்துமது வாயலராந் தேன்மாரி பொழிந்தனர்சாந்
தாற்றி தாங்கி
நிந்தையிலா வியக்கர்களு நிருமலனைக் கண்ணுற்றே
நிறைந்து நின்றார்.

எ - து :—இந்தப் பிரகாரமாக முனிவர் கூட்டங்கள் வேதவேதாந்தங் களாற் றுதிக்கக் கந்திருவ கூட்டங்களுங் கின்னரத் தொகுதியுங் கான மயமாகிய வீணையை மீட்டிக் கையினு னரம்பை யுளர்த்தி வமுத தாரை யாகிய மொழிமாரியைச் சருக்கரைக் குன்றிற் றேன்மாரி பொழிந்தா லெத்தன்மைத்தோ வத்தன்மைத்தா யரங்கநாயகருடைய திருச்செவியி னமுத தாரைகளைப் பொழிந்து பிரகாசிக்கவுஞ் சாந்தாற்றியாகிய வால வட்டங்களை யனேக வியக்க கூட்டங்கள் தாங்கி நிருமலன் றெரிசனத்தைக் கண் டின்பமுற்று வானந்த பரவசரானார்க ளென்றவாறு. 43

669. அரம்பையர்கள் சதிமுறையி னடித்தனர்கள் முழுவதனுக்
கழக தாகத்
தரம்பயிலு மாணிக்க விளக்கமுறு மாலத்தி
தாங்கி நின்று
சிரம்பயிலும் வணக்கத்தா லரங்கநா யகன்புகழைச்
செப்பி நின்று
கரம்பயிலும் பூமாரி தூவினர்க டரணியெங்குங்
கருணை கூர்ந்து.

எ - து :—இப் பிரகார முனிவர் கூட்டங்களுங் கந்திருவர் முதலாகிய வர்களு மிசைப்பாட்டி னிலக்கணம் வழுவாம லரங்கநாயகரைச் சூழ்ந்து வவ

ரனந்த கலியாண குணங்களையும் புகழ்கின்ற சமயத்திலே யரம்பையர் களானவர்கள் சதிமுறை தவறாது பரத விலக்கண வழுவில்லாம லொட்டமாக வரிசை வரிசையாய் நடித்தார்கள் பின்னையு மத்தளத்தி னமைதிக் கேற்ப மாணிக்க மயமாகிய மணிவிளக்கை யரம்பையர்க ளனேகம்பேர் தாங்கி னார்க ளந்த வரங்கநாயகர்க்குச் செண்பக பாரிசாத மலர்களைத் தூவி களிகூர்ந்தார்க ளென்றவாறு. 44

670. மாமணியின் விளக்கேந்திச் சத்தமா தர்களவண்
மருவி நிற்பப்
பூமணியா ரந்தாங்கிப் புலோமிசையே முதலானோர்
புகழ்ந்தங் கேத்தச்
சேமநிதி யெமக்கெனவே சித்தரெலா மிகவழுத்தித்
தெளிந்து சூழப்
பூமடந்தை யாகியநா மகள்புகழ்ந்து மிகவணக்கம்
புரியா நிற்ப.

எ - து:—சாதாங்க குருவிந்த முதலாகிய மாணிக்க விளக்கஞ் செய் துதைக் கராப்புய மலர்களி னேந்தினவர்களாய்ச் சத்த மாதர்களும் வரிசையாய் நிற்பவுந் தனது நாயக னிடுக்க ணீங்கிய காரணத்தை யறிந்த விந்திராணி தேவியானவள் பூர்வம்போலத் தனது வுறுப் பெல்லா மாபரணந் தாங்கிப் புகழ்ந்தேத்தவுஞ் சங்கநிதி பதுமநிதி போ லெமைக் காக்காநின்ற கருணாநிதியே யென்று சித்தக் கூட்டங்க ளெல்லா மிகவுந் தோத்திரித்துத் தெளிவாய்ச் சூழ்ந்திடவும் பூவில் வாசஞ் செய்கின்ற கலைமகளானவள் தெண்டன் சமர்ப்பித்து வரங்கநாதன் கீர்த்தியைப் புகழ்ந்துருகிக் கரைந்தா ளென்றவாறு. 45

671. அரம்பையர்கள் சதிமுறையின் வழுவாமற் பரதநா
டகத்தை யார்ப்பத்
தரம்பயிலு முனிவரெலாஞ் சாமவிசை முதலியநான்
மறைகள் சாற்றக்
கரம்பயில்மந் தாரமலர் தமைத்தூவி யியக்கரெலாங்
கண்க ளிப்ப
நிரம்பியதும் புருகருட ரிருபாலு மிணையடிநின்
றேத்தெ டுப்ப.

எ - து:—திருப்பாற்கட லமுதத்தி னுதித்த வறுபது கோடி யரம்பை யர்களுஞ் சுத்த சுர வழுவில்லாற் சதியைத் தழுவிப் பரதவிலக்கண சுப லக்ஷணங்களுடனே பரத நாடகத்தி னியல்பு பொருந்த நடிக்கவுஞ்

சாத்வீக ஞான சம்பந்தங்களையுடைய முனிவர் கூட்டங்களெல்லாஞ் சாமகீத முதலாகிய நான்குமறை வழுவாமற் றுதிக்கவு மியக்கரெலாம் மந்தார பாரிசாத மலர்க டூவிக் கண் களிக்கவும் கருட தும்புரு காந்திருவ ரிருபாத கமலங்களை யிரண்டு பக்கத்தினுஞ் சேவிப்பவும் விளங்கினு ரமுதகுண ரஞ்சித சாத்வீக கிருபா பரிபூரண தூயசொரூபரா யியற்கை யுணர்வா லான்மாக்க ளிருவினை யறிந் தளந்துகொண்டு முடிக்காநின்ற வரம்பி லின்பமுடைய வரங்கநாயக ரென்றவாறு. 46

672. வந்தனையோக் கியன்சர்வ மங்கலமா கியகுணத்தான்
வாசு தேவன்
செங்கமல மதிற்பிறந்த பிரட்டியார் சிறந்தருளுந்
திவ்ய மார்பி
னிங்தையிலாக் கவுத்துவமுந் திருமுடியிற் றுளபமணி
நேமி யான்றன்
சந்ததமும் புகழ்பரவிச் சாரணர்கள் பல்லாண்டு
சாற்றி னரால்.

எ - து :—சாரணக் கூட்டங்க ளனேகம் பேர்களானவர்கள் துதிக்கின்றார்கள் வந்தனை யோக்கிய பாத்திரனே சர்வமங்கள குண சாந்தனாகிய புருடோத்தமனே பரமபதத்தைப்போ லிந்த மலையிலே யோக நித்திரை செய்கின்ற வந்தரான்மனாகிய வாசுதேவனே பொன்மய மாகிய தாமரை மண்டபத்தின் வாசஞ் செய்கின்ற விலக்குமிதேவியார் பிரகாசிக்காநின்ற திவ்விய நீல மணிமார்பனாகிய கேசவனே திருமுடியாகிய மவுலியிற் றுளபமாலையை யணியாநின்ற வருளாழி... யுடையவனே யென்று வவரது புகழைத் துதித்துச் சாரணர்களானவர்கள் பல்லாண்டு கூறித் துதித்தார்க ளென்றவாறு. 47

673. திருவடி பணிந்து பவவினை யொழித்துச்
சேதனர் தமையுமீ டேற்றக்
கருணையைப் புரிந்துன் னருள்புரிந் திடுவாய்
கமலையை மணம்புரி விமலா
திரணமா மடியோஞ் செய்பபட சாரஞ்
சிறிதுபுன் மைகளிருந் தாலு
மருவினை யறுத்துத் திருவருள் புரிவா
யமலனே யரங்கநா யகனே.

எ - து :—முத்தி வடிவாகிய பாததாமரையினைப் பணிந்து பிறவி வெப்பத்தினைத் தீர்ந்து பாத தாமரை நிழலின்கண் ணனந்த வைபவமா யமாக்கக்ககாய்க் கருணையை யடியேம் பொருட்டாய்ப் புரிந்தருள்

செய்குவாய் கமலையாகிய ஸ்ரீமகாலட்சுமிதேவியாரை வேத விதிப்படி பாணிக்கிரகணம் பண்ணிய தலைவனே திரணவளவா யடியோங்கள் செய்கின்ற உபசாரத்திற் சிறிது விதிவிலக்கா யிருந்தாலு மதனாலே விளைகின்ற பாவத்தொடர்ச்சியினை நீக்கித் திருவருளினைப் புரிகுவாய் நிர்மலனாகிய வரங்க நாயகனே யென்றார்கள் தேவ கூட்டங்க ளென்றவாறு. 48

674. அடைந்தன ரமர ரசுரர்கள் முனிவ
ராயுரியா நீடுபாற் கடலைக்
கடைந்தன ரமுதக் கடலதி னுதித்த
கருணைசெந் திருவெனப் புகழுற
யடைந்தற வுலகு மளந்தபொன் னரங்க
ரடியிணை விரும்பிய வமுதே
மடந்தைசூழ் கோலா சலமதி னுதித்த
மதுரமே யரங்கநா யகியே.

எ - து:—பூர்வ காலத்திலே தேவகூட்டங்களு மசுரக்கூட்டங்களுந் தேசவ மூர்த்தியின தநுக்கிரகத்தினால் மந்தர பருவதத்தினால் பாற் கடலைக் கடைந்த ஞான் றமுதத்துடனே திருவவதாரஞ் செய்தருளிய கருணை ரூபமாகிய செந்திருவெனப் புகழினாற் சிறந்த திரிபுவனமு மளக்கின்ற பொன்னரங்கேசரது பாததாமரையினை முத்தியாகிய பரம பதமாய் விரும்புகின்ற ஞானாமிருதமே சிங்கார ரூபலாவண்ய மாகிய மங்கையர்களாலே சூழப்பட்ட கோலாசலத்தின் வீற்றிருக்கின்ற மது ரசம்போன்ற வரங்கநாயகியே யென்றவாறு. 49

675. இவ்வகையிற் றுதித்தவர் விடைகொண் டேக
விறையவன்செந் திருவைமணி மார்பில் வைத்துச்
செவ்விபெறும் பதுமமே லனைவு ருந்தி
திகழ்ந்திருப்ப நாரதர்கந் திருவைச் செப்பக்
கொவ்வையித ழருந்ததியார் கேள்வ னிபோகக்
கொள்கைபெறு கோசிகனார் பிருகுங் கேத்தத்
திவ்வியமார்க் கண்டன்சோ மகனே சம்ப்ரன்
சேர்ந்தாரிரு தித்தியராய்த் திகழ்ந்தா ரன்றே.

எ - து:—உரை வெளிப்படை. 50

திருக்கல்யாணம் முற்றிற்று.

**கோலாசல ஸ்தலபுராணம் முற்றிற்று.**

# செய்யுள் முதற் குறிப்பகராதி

எண்—பாட்டெண்

## அ


அக்க ணத்தினி ... 623
அக்கிரியி னுன்குதிக்கும் ... 576
அகில முற்றுமழி ... 229
அங்கிகணே யேமுதல்வி ... 160
அங்கி மாப்படை ... 434
அசுபதிக ளிரதபதி ... 562
அசுர யோனியினி ... 190
அசுரரெலாம் ... 550
அசுரனுடல் துளேவுபட ... 259
அட்டதிசை மாதர்சிவி ... 598
அட்டபுயத் தமுதபிரா ... 308
அடைதலு மசுர ... 427
அடைந்தன ரமர ... 674
அண்ட மளிக்கு ... 26
அண்ட மியாவையும ... 223
அண்டமூந டுங்கவனல் ... 518
அண்டமூந டுங்கினவ ... 496
அண்டமூந டுங்கினவெர ... 169
அண்டமுமு துண்டுமகி ... 506
அண்ட மெண்டிசை யா ... 615
அண்ட மெண்டிசையு ... 237
அண்ட மோடுபுக ... 232
அண்டர்க டுதிக்கமுனி ... 175
அண்டர்க டுயர ... xvi
அண்டர்முனி ... 178
அண்டரண்டப் ... 470
அணிகலன கற்றிதிரு ... 609
அணித்தலேவர் ... 156
அணிம ணிக்கிரண ... 179
அணியிழை மடவார் ... 127
அணியெலா மணை ... 353
அத்தலப் பெருமை ... 17
அத்திரிகௌ தமன் ... 640
அதிபெரும் புகழோ ... 3
அந்தமாப் படைசென்றங் ... 484
அந்த மால்வரையி ளந்தை... 278
அந்தமால் வரையினமுகிய... 379
அந்தமா னத்தி ... 320
அந்தரம திர்ந்தபுகழ் ... 111
அந்தவர லாறதனே ... 398
அந்தவர லாறதைய ... 519
அந்த வானினிலே ... 221
அந்த வேலேய ... 451
அந்தவே லேயினி ... 380
அம்மலே காணிற் ... 314
அமரர்குஞ் சேனே ... 429
அமரர்தம் பதியை ... 418
அமரர் தேறைவ ... 446
அமுதவாய் மொழியைக் ... 424
அய்ய ணங்கது ... 6[illegible]1
அயற்கு மிரண்டா ... 27
அயன ளித்தவர ... 249
அயறு மற்றவொரு ... 193
அரக்கவெள்ளப் ... 476
அரங்கநா யகனுரத்தும் ... 480
அரங்கனு ரருளா ... 574
அரங்க னுரருளி ... 300
அரங்கனு லசுரர்கடந் ... 482
அரசர்கள் வீதி ... 345
அரச னிவ்விதம ... 299
அரசொழிய செல்வமும ... 590
அரம்பை...சதிமுறையின் ... 671
அரம்பை...சதிமுறையின ... 582
அரம்பை...சதிமுறையின ... 669
அரம்பை...சூழ்ந்திடநல் ... 196
அரம்பை...ளிசைபரத ... 565
அரமிய மதனி ... 347
அரனயனேப் ... 99
அரிசக்ர வுக்ரமொடு ... 534
அலங்க ரித்தபின் ... 327
அலர்தி ரைக்கடன் ... 108
அலர்ந்தசெவ் வாம்பல் ... 125
அலர்ந்தபது மத்தினது ... 157
அலர்ந்திடு மகிழைப் ... 118
அவ்வரையின் வரலாறு ... 289
அவ்வேலே பரமபத ... 386
அவர்கள்பெயர் ... 465
அவர்களு மீண்டு ... 422
அவர்தமைக் காணிற் ... 316
அவாவர்க டத்தந்தே ... 479

அவனங் கறிந்து ... 58
அவனுய்த்த வப்பெரிய ... 489
அழிவிலா வாற்ற ... 371
அளகை மேவிய ... 335
அளவி னன்பினரு ... 222
அறிவுற்ற வப்படையு ... 540
அறுமு கத்திளவ ... 286
அறைந்தன படகம் ... 425
அன்றுநெடு மால்வனம ... 134
அன்றுவய னோடமரர் ... 92
அன்ன வர்க்குதவி ... 225
அன்னொடொட் ... 79
அன்னையெம தாருயிரி ... 605
அனிச்சப்பூக் கொம்பு ... 131

## ஆ

ஆகமத்தின் விதிப்படியே ... 577
ஆகையா லான்மாக்க ... 11
ஆசு தீர்ந்தவ ... 441
ஆடிகளி லையனுருக் ... 653
ஆடினவம் மஞ்சனீர் ... 659
ஆடினர்கள் பாடினரவ் ... 553
ஆண்டய னங்க ... 373
ஆத லானெனது ... 269
ஆதலினு லம்மலையை ... 584
ஆதலினு லித்தலம்போற் ... 575
ஆதவ னுட்கிட ... 525
ஆதி காலமதின் ... 292
ஆதி நாயகனீ ... 185
ஆதிபர னேவலடி ... 211
ஆதிபர னோதுமொழி ... 514
ஆதிமறை யோனுமிகு ... 87
ஆதி மூலமென் ... xi
ஆதியிற் சிறந்த ... 1
ஆதியின் முனிவோ ... xiii
ஆதியின் வராக ... xv
ஆதியின் வியாத ... xii
ஆதியி னிந்திர ... 40
ஆதியினிற் பூமிதனைப் ... 76
ஆயிரங்கோ டிக்கதிரி ... 95
ஆயிரத்தெண் சிகரமுள ... 11
ஆயிரமா மணிபுனைந்த ... 664
ஆரணம் பொருக ... 16
ஆரணனை யகிலபுவ ... 75
ஆலமது வுண்டவர ... 502
ஆலயங்கள் ... 578
ஆலவட்ட மேந்தினர்கள் ... 473
ஆலி லைக்குணடு ... 216
ஆழிகடைந் தமுதெடுத்த ... 69
ஆழியது பொன்னுருளு ... 152
ஆறி லொன்றெனுங் ... 334
ஆனைமுத லானவனை ... i
ஆனையி னெலிகள் ... 420

## இ

இக்கண மேவுமை ... 102
இடராழி தனக்கோடம் ... 73
இந்தவண்ணஞ் சொன்னவசு... 394
இந்த வாசகங் ... 453
இந்திரற் குரைப்பக் ... 421
இந்திரன் குகையை ... 63
இந்திரன் சயந்த ... 62
இந்திரன் முதலோ ... 318
இந்தி ரன்றன்னி ... 433
இந்தி ரன்றனைசெ ... 191
இந்திரனுர் மகன்சயந்த ... 666
இந்திரனுஞ் சந்திரனு ... 639
இந்திரனுஞ் சயந்தனுமாய்... 581
இந்திரனே...ராதனத்தை ... 554
இந்திரனே...ராதனையை ... 569
இந்திரனை சேனையொடெ... 515
இப்படிவ ருந்திடவ ... 521
இப்பெருஞ் சேனை ... 409
இரண்ட தாமறை யாதி ... 34
இரண்டதா மறையி ... 321
இரதம் விட்டுக்கு ... 448
இரதமுறு மணிகளெலாம்... 469
இரதமொடு யானைபரி ... 146
இரத மோடுபரி ... 251
இரவியினை யூர்கோளின் ... 472
இரவி யோடுமதி ... 224
இருக்குவே தத்தி ... 33
இருதா ளயனைத் ... 59
இருதி றத்தினர்க ... 274
இருநிதி கடைக்க ... 385
இருமருங்கிற் ... 243
இருமருங்குங் ... 42
இருமருங்குந் ... 667
இருமருங்குந் ... 571
இலிங்கமா புராணத் ... 12
இவ்வகைய ருஞ்சமரு ... 522
இவ்வகைய றிந்தவசு ... 200
இவ்வகையாம் ... 630
இவ்வகையிற் றுதிதேவர் ... 675
இவ்வண்ண மசுரகுல ... 388
இவ்வண்ண மிவனேக ... 46
இவ்வித மாகக் ... 313
இவ்வித மாகவிரு ... 428

இவ்வித மான ... 340
இன்னதன் மையனும் ... 311
இன்னமொரு ... 396
இன்னவாய்ப் ... 82
இன்ன வாறுதுயர் ... 268
இன்ன வின்னதுதி ... 187
இன்னன வாய்ப்பல்வி ... 101

ஈ

ஈயமழை பெய்யவனல் ... 198
ஈறி னின்னையொரு ... 186

உ

உதவித்தி றத்தைதமிக ... 491
உதவி யின்றிபெரு ... 220
உதிரமழை காரினமெ ... 495
உந்திமலர்ப் பிரமனையும் ... 74
உந்திமல ரயன்பொலிய ... 242
உந்தி மாமலரில் ... 235
உம்பருல கெயதியயி ... 588
உரக பாசமு ... 450
உலக மியாவையும் ... 35
உலகமெலா மளித்தருளு ... 98
உலகிற் சிலரப் ... 24
உலகுதந் தானும் ... 25
உலகெங்கனு ... 614
உலகெலாம் ... 625
உலகெலா மளிக்க ... 369

எ

எட்டுதிசை மாதர்பல ... 607
எடுத்தனன ருச்சனைசெய் ... 524
எண்டிசையின் வீரரைவி ... 170
எதிர்த்த சூரரைவ ... 250
எமதுவலி பாரென்று ... 483
என்ற போதமு ... 68
என்றபோ தருந்தவ ... 39
என்ற போதவ ரா ... 586
என்ற போதவனை ... 194
என்ற மந்திர ... 439
என்ற வப்பரம ... 226
என்றவர் கூற ... 384
என்றளவில் கருணை ... 78
என்றனன் பதும ... 317
என்றி சைந்தசு ... 442
என்று காலமே ... 445
என்று கூறிகும ... 266
என்று கூறிசிவன் ... 296
என்று நாரதனி ... 288
என்றுபுகழ் கின்றவெம ... 212
என்னையரு ளையனையி ... 594
எனப்புகலு மறைமொழி ... 397
எனமனதி னினைந்துருகி ... 391
எனநக்கு வசுபதி ... 492

ஏ

ஏகிமணி மண்டபத்து ... 643
ஏனைய மரபு ... 352

ஐ

ஐவகைப் பொருளு ... 10

ஒ

ஒருகாலம் ... 290

ஓ

ஓதியம றைப்படியு ... 91
ஓது மாமறைகள் ... 217

க

கங்கைமுடி வைத்தசடை ... 45
கடகக்க ரத்தவனு ... 536
கடகத்தின் வெட்டியதை ... 538
கடல்க டைந்திடு ... 106
கடல்க ளோடுபெரு ... 252
கடல்சங்கு கிரிநிக்கினுஞ் ... 528
கடல்பருகு குகைபகுவாய் ... 55
கடற்கணடர் செம்பவள ... 600
கடிம ணஞ்செய்த ... 329
கடுத்தவளு ரைப்பகனல் ... 516
கடைத்த லைக்கணினி ... 293
கண்களமுல் பொங்கமிகு ... 161
கண்டகனு ரைத்திடக ... 86
கண்ட சூரனெதிர் ... 253
கண்டமர ரியாவருங்கை ... 649
கண்டரச னேடுபுகழ் ... 197
கண்டவர சன்னதிச ... 172
கண்டனர்க னன்றனர்வி ... 142
கண்டுமனங் களிகூர்ந்து ... 240
கண்டுமிகு துன்பமது ... 199
கணைகள்பல வகைெறிய ... 256
கதிர்கள் சந்திரர்கள் ... 227
கதிர்கள் பிறழக் ... 60

கதிர வன்கரங் ... 272
கதையிதுபெ ருத்தசமர் ... 500
கந்திருவர் கின்னரர்கள் ... 668
கந்துக நடத்துங் ... 348
கந்துகப் பந்தி ... 346
கமல கண்ணனிரு ... 281
கமலம தலருந் ... 358
கயங்களின் மடுக்க ... 116
கயத்திற் பண்ணையிற் ... 284
கரந்த தேரினங் ... 542
கரந்தனைகு வித்திருவ ... 208
கரியைத்து ரத்திகட ... 532
கருடனுர் துசபடமா ... 463
கரும்புயலிற் ... v
கரையிலகு கிரணமணி ... 601
கல்வியுஞ் செல்வ ... iii
கலக்குபுகழ் பொன்னந்தா... 558
கலங்கினை ந் துருகிக் ... 370
கலசகும் பத்தை ... 413
கலியுக முடிவிற் ... 406
கலை யயில் வாணர்க் ... 306
கலைமகளு மலைமகளுங் ... 596
கலைமகளோ டுமையவளிர் ... 646
கவந்த பந்திக ... 547
கவுரிதிரு கவரியுமி ... 597
கள்ள மிக்கதிற ... 265
கற்பகத்தான் வளமதினு ... 561
கற்ப கோடிபெறு ... 302
கனமிக்க வுக்ரகணை ... 537
கனமுற்ற ரக்கர்பதி ... 531

கா

காட்டுமணி ... 638
காண்டபம் ... 478
காத்யாயன் குமுதன்ரோ ... 467
காரளகப் பிறைநுதலாள் ... 390
காருலக மேமுதல்க ... 145
கால்க ளாயிரங் ... 233
கால நேமிக்க ... 456
கால நேமிப் ... 61
காளிக் கூட்டங்க ... 546
காளிகள் பக்கமெ ... 526
காளிம ணந்தவர் ... 527

கி

கிரியுற்ற ரக்கர்கிளை ... 539
கின்னரர்கிம் ... 43

கு

குமுத மாமல ... 109
குயில்கிளி மஞ்ஞை ... 124
குருசரணந் தொழுதேத்தி... 56
குருத்துபா ... 560
குருவைநோக் கிடினவரோ.. 393
குவளை கண்ணதாய்த் ... 325
குன்றகோ புரங்க ... 305
குன்ற கோபுரமு ... 275
குன்றம் வீழரு ... 323

கூ

கூவ லாறுகால் ... 331

கே

கேசவ னணிந்த ... 31

கொ

கொடிகள் குடைகள் ... 401
கொண்டலெனச் ... 143
கொண்டுனது சக்தியினைக்... 511
கொத்தலருங் கற்பகம்போ... 632
கொன்றைச்சடை ... 613

கோ

கோகிலம் பாட ... 357
கோசிகனு ரதன்வசிட்ட ... 566
கோர மிக்கவுயர் ... 263
கோலமால் வரையின்வீ ... 343
கோலமால் வரையினு ... 362
கோளகைபொ டித்தன ... 520

ச

சக்கர கிரியில் ... 339
சக்கர வாள ... 337
சகல மங்கல ... 36
சங்கரனைங் கரன்குமர ... 244
சஞ்சீவி கிரிகோல ... 458
சடைமுடியு ... 65
சடையான் கையி ... 529
சண்பகக் கிளையிற் ... 359
சண்பகம் பலாச ... 115
சத்திய வுலகிற் ... 2
சத்தியைவி னைத்திடக ... 508
சந்தனச் சார ... 361
சந்தனச்சோலை ... 342
சந்தனமும் பன்னீராற் ... 642

சந்திரகாந் தம்மணியைத் ... 94
சந்திர சேகரன் ... 38
சந்திரனு ரமுதகிர ... 555
சம்பரப்பேர் தானவனுஞ் ... 487
சல்லிகள் கவரி ... 411
சவுனகர் முதலோர் ... 573
சறுவ தந்திர ... ix
சனகற்க ருட்பரமன் ... 535

சா

சாபத்தை வளைத்தவருங் ... 481
சார்ங்கவில் வணக்கி ... 432
சார்ந்தமறை நாரதனைத் ... 387
சார்வ பூமனைய ... 247
சாரி வந்து ... 449

சி

சிங்கனையே ... 395
சித்திரத்தி ரத்தினக்காற் ... 631
சிந்துகின்ற ... 485
சிந்தை யானெனமது ... 295
சிந்தை யிற்களி ... 452
சிரநெரிய வுரமதனி ... 261
சிரமனந்தங் ... 474
சிலது நாளிவணி ... 287
சிலப கல்கழிந் ... 271
சிலையினொலித் திடுமணியி... 477
சிறையிற் றேன்றுபெ ... 454
சினவித்து லைத்துகணை ... 490

சீ

சீதர னடியார் ... x
சீதர னேபரி ... 100

சு

சுந்தரக் காவி ... 133
சுரந்தருள்கூர் மகேசதீர்த் ... 564

சூ

சூதர் சொல்லிய ... 585
சூதுசெய்த கும்பனையு ... 486
சூரபன் மாவி ... 415
சூரன்பின் செங்கோற் ... 64
சூலமதில் குத்தியுடல் ... 201
சூலமது விட்டிடது ... 501
சூலமதைத் தாங்கினர்கள்... 475
சூலமொரு கையினில்சு ... 517

செ

செங்கமலத் திருவடியிற் ... 80
செங்க ளத்திற்கு ... 549
செய்ததவப் பயத்தாலே ... 389
செய்யும்விதி ... 655
செவந்தகுஞ் சியினர் ... 407
சென்ற தேவன்மிசை ... 181
சென்றவுல கத்திடைசெ ... 206
சென்றுதவ முனிவரர்கள்... 241
சென்னெலொடு ... 603

சே

சேடியர் பலர்கள் ... 126
சேனையர்கோன் ... 654

சொ

சொல்லு மயற்கு ... 28

சோ

சோதிமகு டந்தகர்ந்து ... 49
சோமு கப்பெயர்தொ ... 192
சோமுக வசுரன் ... 366
சோலைகடி கமழ்ந்திகமு ... 136
சோலைதிக ழுந்தமலர் ... 177
சோலையெலாம் ... 356

ஞா

ஞான நாயக ... 619

த

தண்டமது பாவியரைப் ... 557
தண்டமழு சூலமரி ... 210
தண்டுளி நறவ ... 130
தந்தைதாய் குருவின் ... 20
தந்தைதாய் குருவுங் ... 423
தந்தையொடு தாய்குருவி ... 204
தராதலம் புகழுங் ... 22
தருகவிவ ரிருவரிலு ... 257
தருணமுலைக் ... 559
தருமசாத் ... 461
தருமயோ கங்க ... 5
தலைமி தந்தன ... 543
தவசிலனை நிற்கமெய்த ... 612
தவசிற் சூரன் ... 57
தவசினிலை யதனில்பல ... 260
தளிரிலை முறிகள் ... 114
தன்னுடைய தேர்தருக ... 147

### தா

தாரகையின் வயிரமணிச் ... 628
தாருகப்பெயர் ... 457
தாருகன்வி டுத்தனன்மு ... 493

### தி

திக்கினிற் றிரிவ ... 405
திக்கொடு திகாந்தமும ... 166
திங்களுங் கதிரு ... 338
திங்க ளொன்றினிற் ... 618
திசைகள்கம் மித்த ... 154
திருநன் மகுட ... iv
திருமஞ்ச னங்களொடு ... 661
திருமலையை வலம்வந்து ... 583
திருமுகமண் டலம்யூகத் ... 103
திருவடி பணிந்து ... 673
திருவி ளங்குமக ... 291
திருவி னேடுமொரு ... 228
திருவுமா மணியு ... 213

### து

துடித்த சூரரைவ ... 276
துதிபெறக்கொண் ... 552
துவாபரத்திற் புவிபாரம் ... 53

### தூ

தூளியின் கூட்ட ... 419

### தெ

தெங்கி னிற்சிறந் ... 326
தெண்டி ரைக்கடன் ... 28[illegible]
தெய்வ வெங்கணையொ ... 182
தென்றல்தவ ழிக்கிரியி ... 174
தென்னவிள நீர்பெரிய ... 135

### தே

தேர்கரி பதாதி சூ ... 426
தேர்கரிப தாதியொடு ... 140
தேர்கொடிய றுந்தனசி ... 158
தேர்சுழல லுற்றனவி ... 494
தேர்செ லுத்திடு ... 447
தேர்மீதும் பரிமீதும் ... 471
தேரினுறு திக்குகளில் ... 151
தேவர்கள் குலக்கு ... 377
தேவரறி யாதமுனி ... 139
தேவ ராக்கச்சி ... 438

### தொ

தொண்டைநன் ஞட்டி ... 304

### தோ

தோடுபொரு கண்ணிணைது 602
தோளணிகைக் கடகமோ 648
தோன்றலும் வேனில் ... 117

### ந

நக்க னேடுமயன் ... 180
நதிபெருக்கஞ் ... 634
நந்தன வனத்தை ... 121
நம்பி னத்தின ... 440
நரகமிரு பத்தெட்டு ... 207
நல்ல மாதவமு ... 189
நவமணிக ளிழைத்தசித்ர ... 645
நவரத்ன சோபான ... 460

### நா

நாட்டு சம்பிரவி ... 297
நாரண னருளான் ... 6
நாரணனுர் சுபசோப ... 567
நாரதனுர் செமதக்கினி ... 466
நாரதனு ரைத்திடந ... 507
நாவலந் தீவா ... 382
நாற்றி சைக்கண ... 443
நான்க தாகிய ... 330
நான்முகன ளித்தவர ... 89
நான்முகனு மரன்றேவர் ... 660
நான்முகனு மறைவிதியி ... 651
நான்முகனு மைமுகனு ... 19

### நி

நிகழ்ந்த தெல்லாநெ ... 67
நித்தியமாய்த் திருவாரா ... 32
நித்தியமார்க் கண்டனய ... 239
நித்தியமுறு பூரணங் ... 105
நித்ய னேயுலக ... 298
நிதிக்கிறைவ னவநிதிகள் ... 652
நிருதி யீசனி ... 436
நிலங்கலம ரும்பொருணி ... 599
நிலமகட் கினிய ... 354
நிலையதா முகுரகண் ... 412
நின்றநெடு மால்வனம ... 176
நின்றபுகழ் கோலமதைக் ... 138
நின்றவர சன்குருதி ... 173
நின்றுநெடு நாடவமி ... 504
நினதருள் வடிவை ... 37

நு

நுட்பவெண் கலைய ... 123

நெ

நெரிந்த தேரினம் ... 545

ப

பங்கய மலர்ந்த ... 368
பங்கயம லர்ந்ததிரு ... 167
பங்கயமெ னும்படையெ ... 499
பங்கய னுரைப்பா ... 355
பஞ்சசுத் தியினைப் ... 344
படையாவையும் ... 550
பண்ணை யாகிய ... 324
பத்துயர்வு யோசனைய ... 606
பதுமநிதி சங்கநிதி ... 592
பதுமமே லவனுர் ... 312
பந்த மகன்ற ... 399
பந்தித் தென்னடப ... 548
பந்திபயில் காளியர்கள் ... 165
பந்திபயில் யூகமது ... 162
பரத்தி னவதா ... 29
பரந்த பாரிடம் ... 544
பரம்ப டித்துப்பின் ... 332
பரமபதத் திருமணிமண் ... 246
பரவை நீரினை ... 322
பருதியென வொளிவிடுக்கும் 558
பவ்வ மோடுமிடி ... 218
பவளவண் ணத்துப் ... 307
பளிக்குவள ளத்தின் ... 128

பா

பாசம் விட்டுடலி ... 184
பாசமதில் கட்டிகனல் ... 205
பாடல மதனைப் ... 119
பாணினி பகர்ந்த ... 363
பாதிமதி கங்கையணி ... 48
பார்த்திருந்த மடக்கொடியை 77
பாலின் வேலைநடு ... 238
பாற்கடல் கடைந்த ... 365
பாற்கடல்போ ... 633
பாற்கடலில் ... 97
பாற்கடலோ முப்பத்தி ... 93

பி

பிண்டியை யுதைத்துப் ... 120
பித்த னையரசி ... 294
பிரணவத்தி னடுவணையட்... 637
பிரணவம னத்திடைபெ ... 611
பிரதோட காலத்தி ... 52
பிரமனது தன்படைபி ... 168
பிரமனர் வேள்வி ... 310
பிரமனைவெ றுத்தனனி ... 523
பிரயாகை ... 18
பிளந்த மாவினம் ... 541
பின்னுநய வசனங்க ... 54

பீ

பீதக வுடையோ ... 122

பு

புண்ணிய நதியின் ... 8
புயத்தினின் வலைய ... 414
புலரியிடைத் தாமரையின்... 563
புவனத்துச் சத்ரபதி ... 488
புவன மியாவையு ... 270
புனுகுசட்டங் ... 579

பூ

பூதலத்தி லுண்டான ... 15
பூமி தன்னினெ ... 444
பூருவங் கால ... xiv
பூரு வத்தின்மிகு ... 248

பெ

பெருகு சுக்கிலம ... 277
பெருங்கடல்க லங்கிசுழ ... 497

பே

பேய்களொரு கோடிகள்பு 202
பேரிகை பணகங் ... 416

பொ

பொங்குகட லிவ்வுலகை ... 556
பொய்கைபேய் ... vii
பொன்னகரெ னத்திகழு ... 112
பொன்னையு மண்ணையு 71
பொன்னின் பேரினு ... 283
பொன்னுநவ மணிகளையு ... 627

ம

மகரதோ ரணங்க ... 360
மகர மெண்ணில ... 341
மகர வேலையின் ... 107

மகிழ்சிறந்தான் ... 551
மங்கையர்க் கரசி ... 21
மஞ்சனீர் கந்தசுண்ணங் 658
மணம்புரிந்தெதம் ... 626
மணிமார்பில் 644
மணிவிளக்க மிந்திராணி ... 245
மதித்தபுகழ் வீணைமுனி ... 503
மதித்தவளு ரைக்கதிரு ... 513
மதித்தவ னிருளின் ... 375
மதித்திடுவ ராகமது ... 137
மதியாது வொதுங்காது ... 47
மந்திரி மார்கள் ... 402
மந்தரம திற்புணையும் ... 148
மந்தார மலர்மாரி ... 464
மந்திரத் தலைவர் ... 430
மயில்சினைய வரவதுவு ... 262
மருக்கமழுங் ... vi
மருத்துவர்பீ தாம்பரத்தை 665
மல்லிகை மாலை ... 132
மலர்ந்ததா மரைகளென ... 96
மலரி ஞர்பிரமர் ... 214
மலையை மூன றுவ ... 455
மழலைவாய்க் குதலைச் ... 378
மறைகள்வே தாந்த ... 374
மறையயில் பொன்னஞ் ... 309
மனத்தினிற் கோப ... 254
மனதின்மிகக் கோபமெழு ... 595
மனநெகிழ்ந்து மதிமருண்டு .. 392
மனநெகிழ்ந்து விந்தியின் ... 624

## மா

மாணிக்க வம்மி .. 350
மாத ராடவ ... 336
மாதவனு ரைத்திடம ... 512
மாமணியின் ... 670

## மு

முகங்களைந் ததற்குக் ... 408
முடியினில்கு மற்சடைமு ... 610
முத்தணியுங் ... 66?
முத்தின்மணி மாலையணி ... 505
முந்தியகு லீசனும்வெ ... 85
முப்பி றப்பினைரு ... 188
முறிந்த விற்கையினெ ... 183
முறைமுறையி லையன்றிரு ... 657
முன்ன மொருகாற் ... 587
முன்னமொரு ரர்சேந்த்ர ... 83
முனிதலை வியக்கர் ... 372
முனிவர் மாதவர் ... 616
முனிவரன் பாத ... 4

## மூ

மூவரவள் விழிக்கடையி ... 70
மூவரைத் தாங்கு ... 351
மூவுல காளு ... 364
மூவுலகு கங்கையுமு ... 608

## மெ

மெய்முழுதும் பூசைமல ... 50

## மே

மேகத்தின் மதிககதிர்போல் 647
மேரு மால்வரைசு .. 279
மேருவினைப் பலவரைகள் .. 153

## யா

யாகமலி யேமுதலி ... 90
யானு நம்மணி .. 620
யானு மவ்வயிலுனர் .. 231
யானையாதை வாங்கிதன ... 589

## யோ

யோசனைமி குந்தபதி ... 113
யோசனையி ரண்டகல ... 150

## வ

வஞ்சஞ் சூது ... 81
வடவரை முதலாங் ... 381
வடவரையி னிமையவரை ... 255
வடவனல்பி றந்ததுவி ... 163
வண்மைத் தேவர்கள் .. 437
வணங்கி நின்றுகர .. 267
வணிகர்தம் வீதி ... 349
வதிரிகாச் சிரமம் ... 9
வந்தகம லத்தவிசின் ... 164
வந்ததுவ ரஙகன்முனம் ... 498
வந்ததொரு செந்திருவ ... 593
வந்ததோர் முனிவன் ... 66
வந்தபுகழ் சம்பரன்ம ... 195
வந்தபுகழ் சோ...வள ... 88
வந்தபுகழ் சோ...வன ... 155
வந்த பெண்ணினை ... 328
வந்த மத்தளவி ... 301
வந்த மாதவனு ... 215
வந்தவர்கண் மணி ... 641
வந்த னன்பொன்ப ... 617

வந்தனையோக் கியென்சர்வ ... 672
வந்திடுவ ராகம்வட ... 141
வந்திடுவ ராகியையம ... 509
வந்திரவி சூழ்கிரிபோல் ... 570
வந்துமலை மீதுகலை ... 604
வயிரபாத் திரத்திற் ... 129
வரவரவு முதிரசின ... 258
வராக மாகி ... 30
வராகமாய்ப் பூமி ... 367
வருணா னந்தகன் ... 435
வருமட்ட பதிசிவனு ... 533
வலப்புறத்திற் றிருப்பதும... 663
வலவநந்த தேரதனை ... 468
வலவனுஞ் சென்று ... 410
வறியவன் செல்வம் ... 7
வனங்களின் மிருந்த ... 319
வனவேட்டை தனிலெனக்கு 51

வா

வாசவன்ம டித்திடக ... 84
வாசுகியை சுற்றுகயி ... 591
வாயுவே கத்தாற் ... 383
வாயு வேக மனவேக ... 400
வாரணவா சியையடைந்து... 13
வாரீர் முனிவ ... 23
வாருதிக லங்கிவட ... 159
வாலகில் லியர்கள் ... 315
வாழைகள்பொன் ... 629
வாள்கொடுவ தைத்துவளர் 203
வாளி ஞற்செந்நெ ... 333
வான கத்தனி ... 273
வானுறநி மிர்ந்தமக ... 110
வானோங்கு சிகரமணி ... 636
வானோர் கோவு ... 37

வி

விச்சுவச்சே னனையமுன ... 650
விச்வசித்து கோமேத ... 104
விடையி லேறுசிவ ... 219
விண்ணவர்க்கு ... 72
விண்ணவர்கோ ... ii
விண்ணவரு மண்ணவரு ... 149
விண்ணவரு மறுப்பரிய ... 41
வியாதருக் கிரந்திரண்ட ... 462
வியாதிகளை னைத்தையும்வி... 209
விரிந்தபுய மிரண்டிநெடும் 44
வில்லினை வணக்கினர்க ... 171
வில்லி னேடுகதை ... 234
விவிம்புக்குச் சாம்புநதம் ... 635

வீ

வீரர்கள்மடிந்தனர்க ... 144
வீழ்ந்த பாமலையி ... 280

வெ

வென்றி யார்ந்த ... 403

வே

வேண்டு மெற்குவர ... 230
வேத கீதங்க ... 285
வேதஞ் சிலைகுணம் ... viii
வேத நற்சொரு ... 264
வேதமறி பூசுரர்கள் ... 510
வேதமுனி வரனுரைத்த ... 580
வேத மோடுகலை ... 236
வேதியர்நல் லரிசொல ... 656

PRINTED AT
THE JAMALIAH PRESS
2-87, Dr. Besant Road
Madras-14